**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், சென்னை, தமிழ்நாடு மாநில சட்ட எண்:43/1997-ன்கீழ் தோற்றுவிக்கப்பட்டது. சட்டக்கல்விக்கு பெயர்பெற்ற இந்தப் பல்கலைக்கழகம், பதினொன்று சட்டக்கல்லூரிகளை தன்னகத்தே கொண்டு செயல்பட்டுவருகிறது. அத்தோடு, இந்தப் பல்கலைக்கழகம், சீர்மிகு சட்டப்பள்ளியை, பல்கலைக்கழக வளாகத்தில் நடத்திவருகிறது.

**நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை**

நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சரவையின் கீழ் இந்த நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை 01.07.2014-ல் இருந்து செயல்பட்டு வருகிறது. இந்த நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கையின் நோக்கங்கள் பின்வருமாறு: (1) சட்டக்கல்வி அளிப்பதன் மூலம் தரத்தை மேம்படுத்துதல் (2) சட்டக்கல்வியை உயர்த்துவதன் மூலம் சமுதாய நலனை பேணுதல் (3) அனைவருக்கும் சட்டக்கல்வி கிடைக்கப்பெறச் செய்தல், அதிலும் குறிப்பாக நலிவடைந்த மக்களுக்கு.

**நூலைப்பற்றி**

இந்த நூல், ஜனவரி 2011 முதல் ஏப்ரல் 2017 வரை, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன்கீழ், நுகர்வோர் பிரச்சனைகள் தொடர்பாக பல்வேறுபட்ட வழக்குகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின் சுருக்கத் தொகுப்பாகும். நுகர்வோர் வழக்கு தொடர்பாக ஏற்கனவே உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புகளை மேற்கோள்காட்டி, கீழ் நீதிமன்றங்களில் நுகர்வோர் தாமே வாதிடுவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நூல், வழக்கறிஞர்களுக்கும், நுகர்வோர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் நுகர்வோர் சம்பந்தமான வழக்குகளை முறையே வாதிடுவதற்கும், தீர்மானிப்பதற்கும் ஒரு வழிகாட்டு நூலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.


**வெளியிடுவோர்**

**நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உணவு வழங்கல் துறை (நுகர்வோர் பாதுகாப்பு துறை),**
**இந்திய அரசு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை,**
**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், சென்னை.**


**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986- உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் சுருக்கத் தொகுப்பு**

**2018**

சட்டம் மேலானது
LEX SUPREMUS

सत्यमेव जयते

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 - உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் சுருக்கத் தொகுப்பு

[ஜனவரி 2011 முதல் ஏப்ரல் 2017 வரை தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள்]

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 – உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் சுருக்கத் தொகுப்பு

[ஜனவரி 2011 முதல் ஏப்ரல் 2017 வரை தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள்]

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 – உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் சுருக்கத் தொகுப்பு

## [ஜனவரி 2011 முதல் ஏப்ரல் 2017 வரை தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள்]


**புரவலர்**

**பேரா.முனைவர்.த.சூ.நா.சாஸ்திரி**
துணைவேந்தர்,
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம்,
சென்னை.

**ஆசிரியர்**

**திரு.ஆர்.சந்தானம்,**
கௌரவ இயக்குநர்.

**இணை ஆசிரியர்**

**திரு.இரா.கருப்பசாமி,**
ஆராய்ச்சி அலுவலர்.



**வெளியிடுவோர்**

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உணவு வழங்கல் துறை
(நுகர்வோர் பாதுகாப்பு துறை), இந்திய அரசு
மற்றும்
திரு.அ.கு.வெங்கட சுப்ரமணியம்,
நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை,
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம்,
சென்னை.

**முதற்பதிப்பு :** 2018

**தட்டச்சு மற்றும் வடிவமைப்பு:**

**அ.கோமதி**

இளநிலை உதவியாளர்,

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை,

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம், சென்னை.

**அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை**

**(© All Rights Reserved)**

இந்த பதிப்பின் எந்தவொரு பகுதியும், ஆசிரியரின் அனுமதி இல்லாமலோ அல்லது பதிப்பாளரின் அனுமதி இல்லாமலோ, மீட்புமுறையில் சேமிக்கவோ அல்லது மின்னனு மூலமாகவோ, இயந்திரம் மூலமாகவோ, நகலாயுதமாகவோ அல்லது பதிவு செய்வதற்கோ கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மிகுதியான கவனத்துடன் இப்புத்தகம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த பதிப்பினை பெற அல்லது தங்களது மேலான கருத்துகளை பதிவு செய்ய, **consumerchair@gmail.com** என்ற மின்னஞ்சல் வாயிலாக எங்களை தொடர்பு கொள்ளவும்.

# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்



"பூம்பொழில்", எண்.5, டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை-600 028

முனைவர். த.சூ.நா. சாஸ்திரி
*துணை வேந்தர்*


டிசம்பர் 20, 2018



## முன்னுரை

"நுகர்வோர்" என்பவர் ஒரு சந்தையின் வியாபாரத்தை நிர்ணயம் செய்யும் அரசனாக திகழ்கிறார் என்று கூறிய காலம் மாறி நுகர்வோரின் உரிமையை எவ்வாறு பாதுகாப்பது என்ற நிலைமையில் இன்று இந்த சமூகம் உள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 நடைமுறைக்கு வந்து முப்பத்தி இரண்டு ஆண்டுகள் ஆகியும் இந்த நிலைமை தொடர்வது கவலையை அளிக்கிறது. இத்தகைய நிலைமைக்கு நுகர்வோரின் அறியாமையும், அவர்களுக்கு சட்ட அறிவு குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாததுமே காரணம் ஆகும். அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் நுகர்வோர் விழிப்புணர்வை மேம்படுத்துவதில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் நுகர்வோரின் விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது. புதிய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கும் என்ற நம்பிக்கை அனைத்து மக்களிடமும் உள்ளது.

நுகர்வோர் விழிப்புணர்வு மிகவும் குறைவாக உள்ள இந்த சூழ்நிலையில், நுகர்வோரின் உரிமைகள் அதிக அளவில் பாதிக்கப்படும் போது, அதற்காக நுகர்வோர் நீதிமன்றத்தை நாடுவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இதற்கான முதல் காரணம் வழக்குத் தொடர வரும் ஏழை நுகர்வோருக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படுவதில்லை. வழக்கு பதிவு செய்யும் நுகர்வோருக்கு விரைவான நீதி கிடைப்பதில்லை என்பதோடு நுகர்வோர் நீதிமன்றங்களில் போதுமான அளவு நீதிபதிகள் இல்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான காரணங்களாகும்.

மேலும் நுகர்வோருக்கு தன்னுடைய வழக்கை தானே வாதாடும் அளவுக்கு சட்ட அறிவு குறித்த விழிப்புணர்வும் இல்லை. எனவே, நுகர்வோரே அவரது வழக்கை வாதாடும் அளவிற்கு வழிவகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை, 2014 முதல் 2018 ஏப்ரல் வரை, உச்ச நீதிமன்றம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் வழங்கிய தீர்ப்புகளை படித்து, ஆராய்ந்து, இந்த நுகர்வோர் தீர்ப்பு திரட்டை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வடிவமைத்திருக்கிறது. இந்த நூலின் ஆங்கில பதிப்பு சென்ற ஆண்டு வெளியிடப்பட்டது. எளிய முறையில் அறிந்துகொள்ளும் வகையில் தமிழில் வெளியிடப்படவிருக்கும் இந்த நூலில், நுகர்வோர் என்பவர் யார், விபத்து இழப்பீடு கோரிக்கை, சேவையில் குறைபாடு, வீட்டுவசதி (மோசடியான ஒதுக்கீடு), காப்பீட்டு நஷ்டயீடு கோருதல், மருத்துவ சிகிச்சையில் அலட்சியம், ஓய்வூதியம், வாகன காப்பீடு, நியாயமற்ற வியாபார நடைமுறைகள் போன்ற முக்கியமான தலைப்புகளிலும் மற்றும் இதர தலைப்புகளிலும் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் மிகவும் அழகாக திரட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி கீழ் நீதிமன்றங்களில் நுகர்வோர் தம் வழக்கு தொடர்பாக தானே வாதிடுவதற்கு ஏதுவாக இந்த நூல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நூல், வழக்கறிஞர்களுக்கும், நுகர்வோர் மன்ற நீதிபதிகளுக்கும் ஒரு வழிகாட்டு நூலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலை தமிழில் வெளிக்கொணர அரும்பாடுபட்ட நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கையின் இயக்குநர், திரு.ஆர்.சந்தானம் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய திரு.கருப்பசாமி, செல்வி கோமதி ஆகியோருக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(த.சூ.நா. சாஸ்திரி)
துணைவேந்தர்


தொலைபேசி: 044-2461 1364 தொலைநகலி: 044-2462 122 5 மின்னஞ்சல்: vc@tndalu.ac.in இணையதளம்: www.tndalu.ac.in

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம்**
"பூம்பொழில்", எண்:5, டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 0028.

**திரு.ஆர். சந்தானம்,**
கௌரவ இயக்குநர்
நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை.

தேதி : 18.12.2018

## முகவுரை

1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஒரு முற்போக்கு சிந்தனை கொண்ட மற்றும் தனித்தன்மை வாய்ந்த சட்டம் என்று அனைவராலும் போற்றப்படுகிறது. பாதிக்கப்பட்ட நுகர்வோர்களது குறைகள் விரைவாகவும் குறைந்த செலவிலும் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு தேவைப்பட்டால் இழப்பீடு வழங்கவும் இச்சட்டம் வழிவகுக்கிறது. நுகர்வோருக்கு இன்றியமையாத பாதுகாப்பு உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, முறையிடும் உரிமை, குறைதீர்க்கும் உரிமை, நுகர்வோர் கல்விக்கான உரிமை, அடிப்படை தேவைகளுக்கான உரிமை போன்ற உரிமைகளை பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் இச்சட்டம் வகைசெய்கிறது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டு 32 ஆண்டுகள் ஆனபோதிலும், நுகர்வோர்களில் பலர் இச்சட்டத்தைப் பற்றியும் இச்சட்டம் அளித்துள்ள உரிமைகள் பற்றியும் அறியாமல் இருக்கிறார்கள் என்பது ஒரு கசப்பான உண்மையாகும். இன்றைய சூழ்நிலையில் நுகர்வோர்களிடையே இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது நம் அனைவரது கடமையாகும்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நயநேர்த்தி இருக்கை "சட்டக்கல்வியின் முன்னேற்றத்தையும் நாட்டின் சமூக நலனையும்" தலையாய நோக்கமாக கொண்டதாகும். நாட்டிலுள்ள பெருவாரியான மக்களுக்கும் கடைகோடியிலுள்ள ஏழை எளிய மக்களுக்கும் தமது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதனுள் அடங்கும். அக்கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் வழங்கிய பல்வேறு வழக்குகளின் தீர்ப்புகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் எளிய மொழியில் வெளியிட முடிவுசெய்தது. அதன் விளைவாக 2014 ஆம் ஆண்டு தேசிய நுகர்வோர் ஆணையம் வழங்கிய 1300-க்கும் மேற்பட்ட தீர்ப்புகளை பொருள் வாரியாக பிரித்தெடுத்து அவற்றின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் மூன்று தொகுப்புகளாக வெளியிட்டது. அடுத்த படியாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஜனவரி 2011 முதல் ஏப்ரல் 2017 வரை நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து வழங்கிய தீர்ப்புகளையும் சுருக்கத்தொகுப்பாக சென்ற ஆண்டு ஆங்கிலத்தில் வெளியிட்டது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின் சுருக்கத்தொகுப்பை தமிழில் மொழிபெயர்த்தால் அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட சுருக்கத்தொகுப்பு தமிழாக்கம் செய்யப்பட்டு தற்போது வெளியிடப்படுகின்றது. இந்த தொகுப்பானது நூற்றுக்கு மேற்பட்ட வழக்குகள், அவற்றின் எண், எந்தத் தீர்ப்பிலிருந்து மேல்முறையீடு செய்யப்பட்டது, வழக்கின் பொருண்மை, அவற்றின் எழுவினாக்கள், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் தீர்ப்பு சம்பந்தப்பட்ட ஆவணச் சான்றுகள் என பல்வேறு விவரங்களைக் கொண்டுள்ளது. மேலும், இப்பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணச் சான்றுகள், வாசிப்பவர்கள் எளிதாக வழக்குகளைப்பற்றி அறிந்துகொள்ள உதவும். அதுமட்டுமல்லாது நுகர்வவோர் நீதிமன்றங்கள் பல்வேறு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் குழுக்கள், சட்டக் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் என பல்வேறு பிரிவினருக்கும் இத்தொகுப்பு பயன்படும் என நம்புகின்றேன்.

முன்னாள் மைய அரசு செயலரும் மற்றும் நுகர்வோர் ஆர்வலருமான மறைந்த திரு.அ.கு.வெங்கட சுப்ரமணியம் அவர்களது பெயரில் நுகர்வோர் இருக்கையை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்திய மத்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உணவு வழங்கல் துறைக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்த பதிப்பினை வெளியிட எங்களுக்கு ஆதரவாக இருந்து பேருதவி புரிந்த தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் (முனைவர்) த.சூ.நா.சாஸ்திரி அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடன் பணிபுரிந்து இந்த பதிப்பினை தமிழாக்கம் செய்து வெளிக்கொணர பாடுபட்ட முன்னாள் திட்ட இயக்குநர், பேராசிரியர் வே.பாலாஜி அவர்களுக்கும் ஆராய்ச்சி அலுவலர் திரு.ஆர்.கருப்பசாமி அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இப்பதிப்பினை வெளிக்கொணர பெரும் ஒத்துழைப்பு நல்கிய தற்போதைய திட்ட இயக்குநர் முனைவர் ரஞ்சித் ஓமன் ஆப்ரஹாம் அவர்களுக்கும் ஆராய்ச்சி அலுவலர் திரு.வ.ஆனந்தகுமார் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த பதிப்பினை முழுமையாக்கவும் தட்டச்சு மற்றும் வடிவமைப்பு செய்யவும் அரும்பாடுபட்ட இந்த அமைப்பின் இளநிலை உதவியாளர் செல்வி அ.கோமதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த தொகுப்பு அனைத்து தரப்பினராலும் வரவேற்கப்படும் என்று நம்புகின்றேன். இதை மேலும் சிறப்பாக வெளியிடுவதற்கு ஆலோசனைகள் அளித்தால் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆர். சந்தானம்

சென்னை-28. (ஆர்.சந்தானம்) 18 12 2018

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் மற்றும் வழக்கின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| I. | **விபத்து இழப்பீடு கோரிக்கை**<br>(ACCIDENT CLAIM/COMPENSATION) | |
| 1. | லஷ்மண் & லஷ்மண் மௌரியா *(எதிர்)*<br>கோட்ட மேலாளர், ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்.<br>(Laxman @ Laxman Mourya v. Divisional Manager, Oriental Insurance Co. Ltd. & Anr.) | 1 |
| 2. | சந்தோஷ் தேவி *(எதிர்)* நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர்<br>(Santosh Devi v. National Insurance Co. Ltd. & Ors.) | 4 |
| 3. | நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* யோகேஷ் தேவி மற்றும் பலர்<br>(New India Assurance Co. Ltd. v. Yogesh Devi & Ors.) | 6 |
| 4. | வதோதரா மாநகராட்சி *(எதிர்)* புருஷோத்தம் V.முர்ஜானி மற்றும் பலர்<br>(Vadodara Municipal Corporation v. Purshottam V.Murjani & Ors.) | 9 |
| II. | **நுகர்வோர் மன்றங்களில் பணியமர்த்துதல் தொடர்பாக**<br>(APPOINTMENTS TO CONSUMER FORA) | |
| 1. | பிரேம் லதா *(எதிர்)* அரசாங்கம் (தேசிய தலைநகர் டில்லி) மற்றும் பலர்<br>(Prem Lata v. Government (NCT of Delhi) & Ors.) | 13 |
| III. | **நடுவர் தீர்ப்பு**<br>(ARBITRATION) | |
| 1. | நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)*<br>ஜீனஸ் சக்தித்துறை கட்டமைப்பு நிறுவனம்<br>(New India Assurance Co. Ltd. v. Genus Power Infrastructure Ltd.) | 16 |
| IV. | **தாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொள்ளுதல்**<br>(CONDONATION OF DELAY) | |
| 1. | அன்சுல் அகர்வால் *(எதிர்)* புதிய ஒக்லா தொழில் வளர்ச்சிக் குழுமம்<br>(Anshul Aggarwal v. New Okhla Industrial Development Authority) | 19 |

| | | |
|---|---|---|
| **V.** | **நுகர்வோர் என்பவர் யார்? – வரையறை மற்றும் காரணிகள் (நோக்கம்)**<br>(CONSUMER - DEFINITION AND SCOPE) | |
| 1. | வீரேந்தர் ஜெயின் *(எதிர்)* அலக்நந்தா கூட்டுறவு குழு வீட்டுவசதி சங்கம் மற்றும் பலர்<br>(Virender Jain v. Alaknanda Cooperative Group Housing Society Ltd. & Ors.) | 21 |
| 2. | பஞ்சாப் பல்கலைக்கழகம் *(எதிர்)* இந்திய யூனிட் டிரஸ்ட் மற்றும் பலர்<br>(Punjab University v. Unit Trust of India & Ors.) | 24 |
| 3. | சஞ்சய் குமார் ஜோஷி *(எதிர்)* லக்ஷ்மண்கர் நகராட்சி வாரியம் மற்றும் ஒருவர்<br>(Sanjay Kumar Joshi v. Municipal Board Laxmangarh & Anr.) | 27 |
| 4. | பங்கா டேனியல் பாபு *(எதிர்)* திருவாளர்கள் ஸ்ரீ வாசுதேவா கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் பலர்<br>(Bunga Daniel Babu v. M/s. Sri Vasudeva Constructions & Ors.) | 29 |
| 5. | லூர்தஸ் சொஸைட்டி சிநேஹாஞ்சலி பெண்கள் விடுதி மற்றும் ஒருவர் *(எதிர்)*<br>H&R ஜான்சன் இந்தியா லிமிடெட் மற்றும் பலர்<br>(Lourdes Society Snehanjali Girls Hostel & Anr. v. H&R Johnson (India) Ltd. & Ors.) | 32 |
| 6. | பிரதீபா பிரதிஸ்தான் மற்றும் பலர் *(எதிர்)* மேலாளர் கனரா வங்கி மற்றும் பலர்<br>(Pratibha Pratisthan & Ors. v. Manager, Canara Bank & Ors.) | 35 |
| **VI.** | **சேவையில் குறைபாடு**<br>(DEFICIENCY IN SERVICE) | |
| **(a)** | **விமான மார்க்கம்**<br>(AIRLINES) | |
| 1. | இண்டர் குளோப் அவியேஷன் லிமிடெட் *(எதிர்)* என்.சச்சிதானந்த்<br>(Interglobe Aviation Ltd. v. N. Satchidanand) | 37 |
| **(b)** | **வீட்டு மனைகள் / குடியிருப்பு மனைகள் / மனை / பெட்டிக்கடை / தொழில் மனைகள்**<br>(ALLOTMENT OF HOUSE SITES/PLOT/KIOSK/INDUSTRIAL SITES) | |
| 1. | கர்நாடகா தொழிற் பகுதிகள் வளர்ச்சி வாரியம் மற்றும் ஒருவர் *(எதிர்)*<br>பிரகாஷ் பருப்பு அரவை ஆலை மற்றும் பலர்<br>(Karnataka Industrial Areas Development Board & Anr. v. Prakash Dal Mill & Ors.) | 41 |

| | | |
|---|---|---|
| 2. | அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் *(எதிர்)* சுசீலா தேவி சர்மா<br>(Haryana Urban Development Authority v. Shushila Devi Sharma) | 44 |
| 3. | அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் *(எதிர்)* விரேஷ் சங்வான் மற்றும் ஒருவர்<br>(Haryana Urban Development Authority v. Viresh Sangwan & Anr.) | 46 |
| 4. | மீரட் மேம்பாட்டுக் குழுமம் *(எதிர்)* முகேஷ் குமார் குப்தா<br>(Meerut Development Authority v. Mukesh Kumar Gupta) | 48 |
| 5. | பஞ்சாப் நகர்ப்புற திட்டம் மற்றும் மேம்பாட்டுக் குழுமம் மற்றும் பலர் *(எதிர்)*<br>ரகுநாத் குப்தாமற்றும் பலர்<br>(Punjab Urban Planning & Dev. Authority & Ors. v. Raghu Nath Gupta & Ors.) | 50 |
| 6. | எஸ்.சீனிவாச மூர்த்தி *(எதிர்)* கர்நாடகா வீட்டு வசதி வாரியம்<br>(S. Srinivasa Murthy v. Karnataka Housing Board) | 53 |
| 7. | பிரதீப் ஷர்மா *(எதிர்)*<br>தலைமை நிர்வாகி, அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் மற்றும் ஒருவர்<br>(Pradeep Sharma v. Chief Administrator, Haryana Urban Development Authority & Anr.) | 56 |
| **(c)** | **வங்கிகள்**<br>(BANKING) | |
| 1. | குர்காவ்ன் கிராமிய வங்கி *(எதிர்)* ஸ்ரீமதி கசனி மற்றும் ஒருவர்<br>(Gurgaon Gramin Bank v. Smt. Khazani & Anr.) | 59 |
| 2. | சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா *(எதிர்)* ஜக்பீர் சிங்<br>(Central Bank of India v. Jagbir Singh) | 61 |
| **(d)** | **சரக்குகளை ஏற்றிச் செல்லுதல்**<br>(CARRIAGE OF GOODS) | |
| 1. | நாக்பூர் கோல்டன் ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி (பதிவு) *(எதிர்)* நாத் ட்ரேடர்ஸ் மற்றும் பலர்<br>(M/s. Nagpur Golden Transport Company (Registered) v. Nath Traders and Ors.) | 63 |
| 2. | ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் *(எதிர்)*<br>கணேஷ் பாலிடெக்ஸ் லிமிடெட்<br>(Transport Corporation of India Ltd. v. Ganesh Polytex Limited) | 66 |
| 3. | வீரேந்தர் குல்லர் *(எதிர்)* அமெரிக்கன் கன்சாலிடெஷன் சர்வீசஸ் லிமிடெட் மற்றும் பலர்<br>(Virender Khullar v. American Consolidation Services Ltd. & Ors.) | 68 |

| | | |
|---|---|---|
| (e) | **கல்வி சேவைகள்**<br>(EDUCATIONAL SERVICES) | |
| 1. | ராஞ்சி பல்கலைக்கழகம் *(எதிர்)* ஸ்நேஹ் குமார்<br>(Ranchi University v. Sneh Kumar) | 72 |
| 2. | அப்யுத்யா சான்ஸ்தா *(எதிர்)* யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர்<br>(Abhyudya Sanstha v. Union of India & Ors.) | 73 |
| (f) | **தவணைமுறையில் வாங்குதல்**<br>(HIRE PURCHASE) | |
| 1. | சிட்டிகார்ப் மாருதி நிதி நிறுவனம் *(எதிர்)* எஸ்.விஜயலட்சுமி<br>(Citicorp Maruti Finance Ltd. v. S. Vijayalaxmi) | 76 |
| (g) | **வீட்டுவசதி**<br>(HOUSING) | |
| 1. | நார்னே கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் *(எதிர்)*<br>யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பலர்<br>(Narne Construction Private Limited & Ors. v. Union of India & Ors.) | 79 |
| (h) | **வீட்டுவசதி (மோசடியான ஒதுக்கீடு)**<br>(HOUSING (FRAUDULENT ALLOTMENT)) | |
| 1. | பிரதாப் சிங் யாதவ் *(எதிர்)* அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் மற்றும் ஒருவர்<br>(Pratap Singh Yadav v. Haryana Urban Development Authority & Anr.) | 82 |
| (i) | **வீட்டுவசதி (ஒப்படைக்காமல் இருத்தல்)**<br>(HOUSING (NON-DELIVERY OF POSSESSION)) | |
| 1. | ஷிவாலிக் விஹார் சைட்ஸ் (பி) லிமிடெட் மற்றும் பலர் *(எதிர்)* தர்ஷன் சிங்<br>(Shivalik Vihar Sites P. Ltd & Ors. v. Darshan Singh) | 85 |
| (j) | **காப்பீட்டு நஷ்டஈடு கோருதல்**<br>(INSURANCE CLAIM) | |
| 1. | ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் ஒருவர் *(எதிர்)* ஹீரா லால்<br>(LIC of India & Anr. v. Hira Lal) | 88 |
| 2. | கோயல் நகை மாளிகை *(எதிர்)* நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்<br>(Goel Jewellers v. National Insurance Co. Ltd.) | 90 |
| 3. | இந்திய ஏற்றுமதி கடன் உறுதியளிப்பு கழகம் *(எதிர்)* M/s. கர்க் சன்ஸ் இண்டர்நேஷனல்<br>(Export Credit Guarantee Corporation of India Ltd. v. M/s. Garg Sons International) | 91 |

| | | |
|---|---|---|
| 4. | சந்தீப் குமார் சௌராசியா *(எதிர்)*<br>கோட்ட மேலாளர், நியூ இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்<br>(Sandeep Kumar Chourasia v. Divisional Manager, The New India Insurance Co. Ltd. & Anr.) | 94 |
| 5. | மெட்டல் பவுடர் கம்பெனி லிமிடெட் *(எதிர்)*<br>ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்<br>(Metal Powder Company Ltd. v. Oriental Insurance Company Ltd.) | 97 |
| 6. | கோகிலகட்டா சுப்பாராவ் *(எதிர்)*<br>யுனைட்டெட் இந்தியா அன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர்<br>(Kokkilagadda Subba Rao v. Divisional Manager, United India Assurance Co. Ltd. & Ors.) | 99 |
| 7. | BHS தொழிற்சாலை *(எதிர்)* ஏற்றுமதி கடன் உத்திரவாத கழகம் மற்றும் ஒருவர்<br>(BHS Industries v. Export Credit Guarantee Corp. & Anr.) | 101 |
| 8. | யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)*<br>ஓரியண்ட் டிரெஷர்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>(United India Insurance Co. Ltd. v. Orient Treasures Pvt. Ltd.) | 105 |
| 9. | ஹெவன் டைமண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் *(எதிர்)*<br>ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ்கம்பெனி லிமிடெட்<br>(Heaven Diamonds Pvt. Ltd. v. Oriental Insurance Co. Ltd.) | 109 |
| 10. | யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)*<br>லீஷர் வேர் எக்ஸ்போர்ட் லிமிடெட் ETC, ETC.,<br>(United India Insurance Co. Ltd. v. Leisure Wear Export Ltd. ETC, ETC.,) | 111 |
| 11. | கலாடா மின் மற்றும் தொலைதொடர்பு நிறுவனம் *(எதிர்)*<br>யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்<br>(Galada Power and Telecommunication Ltd. v. United India Insurance Co. Ltd. & Anr.) | 113 |
| 12. | ஒரிசா தொழில் ஊக்குவிப்பு மற்றும் மூலதன கழகம் *(எதிர்)*<br>நியூ இந்தியா அஷ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்<br>(Industrial Promotion & Investment Corporation of Orissa Ltd. v. New India Assurance Co. Ltd. & Anr.) | 116 |
| 13. | நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)*<br>இந்துஸ்தான் சேஃப்டி கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட்<br>(National Insurance Co. Ltd. v. Hindustan Safety Glass Works Ltd.) | 119 |

| | | |
|---|---|---|
| **(k)** | **சட்ட சேவைகள்**<br>(LEGAL SERVICES) | |
| 1. | மத்திய புலனாய்வுத்துறை ஹைதராபாத் *(எதிர்)* K.நாராயணராவ்<br>(Central Bureau of Investigation, Hyderabad v. K. Narayana Rao) | 123 |
| **(l)** | **நஷ்டஈட்டினை வழங்கும் பொறுப்பினை ஏற்பது**<br>(LIABILITY TO PAY COMPENSATION) | |
| 1. | வினோத்குமார் தரேஜா *(எதிர்)* ஆல்பா கட்டுமானம் மற்றும் பலர்<br>(Vinod Kumar Thareja v. M/s. Alpha Construction & Ors.) | 126 |
| **(m)** | **ஆயுள் காப்பீடு**<br>(LIFE INSURANCE) | |
| 1. | இந்திராவதி சிங் சாந்து *(எதிர்)* இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம்<br>(Indirawati Singh Sandhu v. Life Insurance Corporation of India) | 129 |
| 2. | P.வெங்கட் நாயுடு *(எதிர்)* இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் ஒருவர்<br>(P. Vankat Naidu v. Life Insurance Corporation of India & Anr.) | 130 |
| **(n)** | **கடல்சார்ந்த காப்பீடு**<br>(MARINE INSURANCE) | |
| 1. | நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)*<br>பிரியா புளூ இன்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்<br>(The New India Assurance Co. Ltd. v. Priya Blue Industries (P) Ltd.) | 132 |
| 2. | சில்வர்சன்ஸ் *(எதிர்)* ஓரியண்டல் காப்பீட்டு நிறுவனம் மற்றும் ஒருவர்<br>(Silversons v. Oriental Insurance Co. Ltd. & Anr.) | 134 |
| **(o)** | **மருத்துவ சிகிச்சையில் அலட்சியம்**<br>(MEDICAL NEGLIGENCE) | |
| 1. | டாக்டர் P.B.தேசாய் *(எதிர்)* மஹாராஷ்ட்டிர அரசு மற்றும் ஒருவர்<br>(P.B. Desai (Dr.) v. State of Maharashtra & Anr.) | 137 |
| 2. | பல்ராம் பிரசாத் *(எதிர்)* குணால் சாஹா மற்றும் பலர்<br>(Balram Prasad v. Kunal Saha and Ors.) | 140 |
| 3. | திருமதி காந்தா *(எதிர்)*<br>தாகூர் இருதய சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஒருவர்<br>(Mrs. Kanta v. Tagore Heart Care & Research Centre Pvt. Ltd. & Anr.) | 152 |

| | | |
|---|---|---|
| 4. | ஆல்ஃபிரடு பென்டிக்ட் மற்றும் ஒருவர் *(எதிர்)*<br>மணிபால் மருத்துவமனை, பெங்களூரு மற்றும் பலர்<br>(Alfred Benddict & Anr. v. Manipal Hospital, Bangalore & Ors.) | 155 |
| 5. | V. கிருஷ்ணகுமார் *(எதிர்)* தமிழக அரசு மற்றும் பலர்<br>(V. Krishnakumar v. State of Tamil Nadu & Ors.) | 158 |
| 6. | ஷீலா ஹிர்பா நாயக் கௌனேக்கர் *(எதிர்)* அப்போலோ மருத்துவமனைகள் குழுமம்<br>(Sheela Hirba Naik Gaunekar v. Apollo Hospitals Ltd.) | 162 |
| **(p)** | **மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் / *res ipsa loquitur***<br>(MEDICAL NEGLIGENCE / *res ipsa loquitur)* | |
| 1. | அஷிஷ் குமார் மசூம்தார் *(எதிர்)*<br>அய்ஷி ராம் பத்ரா சாரிடபிள் ஆஸ்பிடல் டிரஸ்ட் மற்றும் பலர்<br>(Ashish Kumar Mazumdar v. Aishi Ram Batra Charitable Hospital Trust & Ors.) | 165 |
| **(q)** | **கலால் வரி கட்டணம்**<br>(PAYMENT OF EXCISE DUTY) | |
| 1. | ரவீந்தர் ராஜ் *(எதிர்)* காம்பிடென்ட் மோட்டார்ஸ் கம்பெனி (பி) லிமிடெட் மற்றும் ஒருவர்<br>(Ravinder Raj v. Competent Motors Co. Pvt. Ltd. & Anr.) | 168 |
| **(r)** | **வட்டி செலுத்துதல்**<br>(PAYMENT OF INTEREST) | |
| 1. | கேரள மாநில வீட்டுவசதி வாரியம் மற்றும் பலர் *(எதிர்)*<br>கேரள மாநில வீட்டுவசதி வாரியம், நெல்லிக்கோட் குடியிருப்பு ஒதுக்கீட்டாளர்கள் சங்கம் மற்றும் பலர்<br>(Kerala State Housing Board & Ors. v. Kerala State Housing Board, Nellikode Housing Colony Allottees Association & Ors.) | 171 |
| 2. | K.A. நாகமணி *(எதிர்)* வீட்டுவசதி ஆணையாளர், கர்நாடக வீட்டுவசதி வாரியம்<br>(K.A. Nagamani v. Housing Commissioner, Karnataka Housing Board) | 174 |
| **(s)** | **ஓய்வூதியம்**<br>(PENSION) | |
| 1. | அனைத்து இந்திய ஓரியண்டல் வர்த்தக வங்கி ஊழியர்கள் நலச் சங்கம் *(எதிர்)*<br>J.S. ரேகி மற்றும் பலர்<br>(All India Oriental Bank of Commerce Employees' Welfare Society v. J.S.Rekhi & Ors.) | 176 |

| | | |
|---|---|---|
| (t) | **தொலைபேசி கண்காணிப்பு**<br>(PHONE MONITORING) | |
| 1. | அமர் சிங் *(எதிர்)* யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர்<br>(Amar Singh v. Union of India & Ors.) | 179 |
| (u) | **அஞ்சல் சேவைகள்**<br>(POSTAL SERVICES) | |
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, தமிழ்நாடு (இணை ஆணையர் மூலமாக) *(எதிர்)* அஞ்சல் அலுவலகங்களின் தலைவர், அஞ்சல் அலுவலகத்துறை மற்றும் பலர்<br>(Arulmighu Dhandayudhapaniswamy Thirukoil, Palani, Tamil Nadu through its Joint Commissioner v. Director General of Post Offices, Dept. of Posts & Ors.) | 183 |
| 2. | திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் *(எதிர்)* அஞ்சல் அலுவலகங்களின் முதுநிலை கண்காணிப்பாளர், மீரட்<br>(M/s. Bhagwati Vanaspati Traders v. Senior Superintendent of Post Offices, Meerut) | 185 |
| (v) | **விதைகள் வழங்கல்**<br>**(SUPPLY OF SEEDS)** | |
| 1. | தேசிய விதைகள் கழகம் *(எதிர்)* மதுசூதன் ரெட்டி மற்றும் ஒருவர்<br>(M/s. National Seeds Corporation v. Madhusudhan Reddy & Anr.) | 188 |
| (w) | **வாகன காப்பீடு**<br>(VEHICLE INSURANCE) | |
| 1. | நரேந்தர் சிங் *(எதிர்)* நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர்<br>(Narinder Singh v. New India Assurance Co. Ltd. & Ors.) | 192 |
| 2. | லக்மி சந்த் *(எதிர்)* ரிலையன்ஸ் பொதுகாப்பீட்டு நிறுவனம்<br>(Lakhmi Chand v. Reliance General Insurance) | 195 |
| VII. | **சட்டம் மற்றும் அதிகார நடைமுறைகளை பகுத்துக்கொடுத்தல்**<br>(DELEGATION OF LEGISLATIVE FUNCTION / POWER) | |
| 1. | பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் *(எதிர்)* இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனம் மற்றம் பலர்<br>(Petroleum and Natural Gas Regulatory Board v. Indraprastha Gas Limited & Ors.) | 198 |

| | | |
|---|---|---|
| **VIII.** | **ஒருதலையான ஆணை**<br>(EX-PARTE ORDER) | |
| 1. | கான்பூர் வளர்ச்சிக் குழுமம் *(எதிர்)* ஷியோ பிரகாஷ் குப்தா மற்றும் ஒருவர்<br>(Kanpur Development Authority v. Sheo Prakash Gupta & Anr.) | 203 |
| **IX.** | **நுகர்வோர் மன்றங்களின் நடைமுறைகள்**<br>(FUNCTIONING OF CONSUMER FORA) | |
| 1. | உத்திர பிரதேச மாநிலம் மற்றும் பலர் *(எதிர்)*<br>அனைத்து உத்திரபிரதேச நுகர்வோர் பாதுகாப்பு வழக்கறிஞர்களின் கூட்டமைப்பு<br>(State of U.P & Ors. v. All UP Consumer Protection Bar Association) | 206 |
| **X.** | **நுகர்வோர் மன்றத்தின் அதிகார வரம்பு**<br>(JURISDICTION OF CONSUMER FORA) | |
| 1. | கண்காணிப்பாளர், வெளிநாட்டு தபால் நிலையம் *(எதிர்)* இண்டோ லாசா கியூரியஸ்<br>(Superintendent, Foreign Post Office v. Indo Lhasa Curious) | 209 |
| 2. | ட்ரான்ஸ் மத்திய தரைக்கடல் ஆகாயமார்க்கம் *(எதிர்)*<br>யூனிவர்சல் ஏற்றுமதி மற்றும் ஒருவர்<br>(Trans Mediterranean Airways v. Universal Exports & Anr.) | 210 |
| 3. | தன்பீர் சிங் *(எதிர்)* அரியானா நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம்<br>(Dhanbir Singh v. Haryana Urban Development Authority) | 215 |
| 4. | சுனில் ஜே. வர்மா மற்றும் பலர் *(எதிர்)*<br>நகர்புறம் மற்றும் தொழில் அபிவிருத்தி கழகம் மற்றும் ஒருவர்<br>(Sunil J. Verma & Ors. v. City & Industrial Development Corporation Ltd. & Anr.) | 218 |
| 5. | Dr. ஜக்மித்தர் செயின் பகத் *(எதிர்)*<br>இயக்குநர் மருத்துவ சேவைகள், அரியானா மற்றும் பலர்<br>(Dr. Jagmittar Sain Bhagat v. Director Health Services, Haryana & Ors.) | 219 |
| 6. | அரியானா மாநில விவசாய வர்த்தக வாரியம் *(எதிர்)*<br>பிஷாம்பர் தயாள் கோயல் மற்றும் பலர்<br>(Haryana State Agricultural Marketing Board v. Bishamber Dayal Goyal and Ors.) | 223 |
| **XI.** | **நுகர்வோர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு – மின்சாரம் விநியோகம்**<br>(JURISDICTION OF THE CONSUMER FORA – ELECTRICITY SUPPLY) | |
| 1. | உத்திரபிரதேச மின் சக்திக் கழகம் மற்றும் பலர் *(எதிர்)* அனீஸ் அகமது<br>(U.P. Power Corporation Ltd. & Ors. v. Anis Ahmad) | 227 |

| | | |
|---|---|---|
| **XII.** | **வரையறைகள்**<br>(LIMITATION) | |
| 1. | மத்திய தலைமை தபால்துறை தலைவர் அவர்கள் அலுவலகம் மற்றும் பலர் *(எதிர்)* லிவ்விங் மீடியா இந்தியா லிமிடெட் மற்றும் ஒருவர்<br>(Office of the Chief Post Master General & Ors. v. Living Media India Ltd. & Anr.) | 231 |
| 2. | முனிஷ் தேவி *(எதிர்)* உத்திரபிரதேச மின்சார கழகம் மற்றும் பலர்<br>(Muneesh Devi v. Uttar Pradesh Power Corporation Ltd. & Ors.) | 235 |
| **XIII.** | **ஒரே வழக்கிலுள்ள சாரங்களை இரண்டாவது புகாரில் ஏற்கலாமா என்பதனைக் குறித்த வரையறை**<br>(MAINTAINABILITY OF A SECOND COMPLAINT ON THE SAME ISSUE) | |
| 1. | இந்திய இயந்திர கம்பெனி *(எதிர்)* அன்சால் குடியிருப்பு மற்றும் கட்டுமான கழகம்<br>(Indian Machinery Company v. M/s. Ansal Housing & Construction Ltd.) | 238 |
| **XIV.** | **மன்றங்கள் பின்பற்றிய / பயன்படுத்திய செயல்முறைகள்**<br>(PROCEDURE ADOPTED/FOLLOWED BY THE FORA) | |
| 1. | A. ஸ்ரீமன்நாராயணா *(எதிர்)* தாசரி சாந்தகுமாரி மற்றும் ஒருவர்<br>(A. Srimannarayana v. Dasari Santakumari & Anr.) | 241 |
| 2. | ஜெனரல் மோட்டார்ஸ் (இந்தியா) தனியார் நிறுவனம் *(எதிர்)* அசோக் ராம்நிக் லால் டோலட் மற்றும் ஒருவர்<br>(General Motors (India) Pvt. Ltd. v. Ashok Ramnik Lal Tolat and Anr.) | 243 |
| 3. | கமலேஷ் அகர்வால் *(எதிர்)* நாராயன் சிங் தபாஸ் மற்றும் ஒருவர்<br>(Kamlesh Aggarwal v. Narain Singh Dabbas & Anr.) | 247 |
| 4. | நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் *(எதிர்)* ஹில்லி பல்வகை செயற்பாட்டிற்கான குளிர்பதன தனியார் நிறுவனம்<br>(New India Assurance Co. Ltd. v. Hilli Multipurpose Cold Storage Pvt. Ltd.) | 251 |
| 5. | தலைமை நிர்வாகி, நகர்புற குடியிருப்பு முன்னேற்ற அமைப்பு மற்றும் ஒருவர் *(எதிர்)* சகுந்தலா தேவி<br>(Chief Administrator, HUDA & Anr. v. Shakuntla Devi) | 253 |
| **XV.** | **சீராய்வு, மறு ஆய்வு மீண்டும் அழைப்பு மற்றும் /மீட்டுக்கொள்ளுதல் ஆகிய அதிகாரங்கள்**<br>(POWER OF REVISION/REVIEW/RECALL/RESTORATION) | |
| 1. | திருமதி.ரூபி (சந்திரா) தத்தா *(எதிர்)* யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம்<br>(Mrs. Rubi (Chandra) Dutta v. M/s. United India Insurance Co. Ltd.) | 257 |

| | | |
|---|---|---|
| 2. | ராஜீவ் ஹித்தேந்திர பதக் மற்றும் பலர் *(எதிர்)* அச்யுத் காசிநாத் கரேகர் மற்றும் ஒருவர்<br>(Rajeev Hitendra Pathak and Ors. v. Achyut Kashinath Karekar and Anr.) | 260 |
| 3. | லக்னோ முன்னேற்ற அதிகாரத்துவம் *(எதிர்)* ஷ்யாம் கபூர்<br>(Lucknow Development Authority v. Shyam Kapoor) | 263 |
| 4. | சுரேந்திர மோகன் அரோரா *(எதிர்)* எச்.டி.எப்.சி வங்கி மற்றும் பலர்<br>(Surendra Mohan Arora v. HDFC Bank Ltd. and Others) | 266 |
| **XVI.** | **நுகர்வோர் மன்றத்தில் அனுமதிக்கப்பட்ட முகவர்களின் செயல்முறைகள்**<br>(ROLE OF AUTHORIZED AGENTS IN CONSUMER FORA) | |
| 1. | C. வெங்கடாசலம் *(எதிர்)* அஜீத்குமார் சி ஷா மற்றும் பலர்<br>(C. Venkatachalam v. Ajitkumar C Shah & Ors.) | 269 |
| **XVII.** | **நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 19 இரண்டாவது நிபந்தனையின் நோக்கம்**<br>(SCOPE OF SECTION 19 SECOND PROVISO OF CONSUMER PROTECTION ACT) | |
| 1. | ஸ்ரீநாத் கார்ப்பரேஷன் மற்றும் பலர் *(எதிர்)* நுகர்வோர் படிப்பும் மற்றும் ஆராய்ச்சி சங்கம் மற்றும் பலர்<br>(Shreenath Corporation and Others v. Consumer Education and Research Society and Others) | 273 |
| **XVIII** | **நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 21–ன் நோக்கமும், தேசிய ஆணையத்தின் அதிகார வரம்புகளும்**<br>(SCOPE OF SECTION 21 OF CONSUMER PROTECTION ACT AND JURISDICTION OF NATIONAL COMMISSION) | |
| 1. | மோம்னா கௌரி *(எதிர்)* மண்டல மேலாளர் மற்றும் பலர்<br>(Momna Gauri v. Regional Manager & Ors.) | 276 |
| **XIX.** | **நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்–பிரிவு 27A–ன் நோக்கம்**<br>(SCOPE OF SECTION 27A CONSUMER PROTECTION ACT) | |
| 1. | சிசிலி கல்லாரக்கல் *(எதிர்)* வாகன தொழிற்சாலை<br>(Cicily Kallarackal v. Vehicle Factory) | 279 |
| **XX.** | **அனுமதியில்லாத கட்டிடங்கள்**<br>(UNAUTHORIZED CONSTRUCTION) | |
| 1. | தீபக் குமார் முகர்ஜி *(எதிர்)* கொல்கத்தா மாநகராட்சி மற்றும் பலர்<br>(Dipak Kumar Mukherjee v. Kolkata Municipal Corporation & Ors.) | 282 |

| | | |
|---|---|---|
| 2. | ஈஷா ஏக்தா அடுக்குமாடிகள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மற்றும் பலர் *(எதிர்)* மும்பை மாநகராட்சி மற்றும் பலர்<br>(Esha Ekta Apartments Cooperative Housing Society Ltd. & Ors. v. Municipal Corporation of Mumbai & Ors.) | 286 |
| **XXI.** | **நியாயமற்ற வியாபாரம்**<br>(UNFAIR TRADE PRACTICE) | |
| 1. | கிரிஷ் சந்தர குப்தா *(எதிர்)* உத்திரபிரதேச தொழில் முன்னேற்ற கழகம் மற்றும் பலர்<br>(Girish Chandra Gupta v. U.P. Industrial Development Corporation Ltd. & Ors.) | 292 |
| 2. | பன்வர் கன்வர் *(எதிர்)* R.K.குப்தா மற்றும் ஒருவர்<br>(Bhanwar Kanwar v. R.K. Gupta & Anr.) | 295 |
| 3. | டாட்டா இன்ஜினியரிங் மற்றும் லோகோமோட்டிவ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* தீபக் கன்னா மற்றும் பலர் சார்பாக இயக்குநர் (ஆராய்ச்சி)<br>(Tata Engineering and Locomotive Co. Ltd. v. Director (Research) for on and behalf of Deepak Khanna and Ors.) | 298 |
| **XXII.** | **நுகர்வோர் மன்றத்தின்முன்பான செயல்முறைகள் வழக்குகளா?**<br>(WHETHER PROCEEDINGS BEFORE CONSUMER FORA ARE SUITS) | |
| 1. | எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் *(எதிர்)* கணேஷ் நாராயன் ஷாபூ<br>(Ethiopian Airlines v. Ganesh Narain Saboo) | 302 |

# 1. விபத்து இழப்பீடு கோரிக்கை

**1. லஷ்மண் & லஷ்மண் மௌரியா** *(எதிர்)* **கோட்ட மேலாளர், ஓரியண்டல் இன்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்.**

(Laxman @ Laxman Mourya v. Divisional Manager, Oriental Insurance Co. Ltd. & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

கர்நாடக உயர் நீதிமன்றம், பெங்களூரு, வழக்கு எண்: MFA எண்:5485/2006 (MV)-ல் வழங்கப்பட்ட 04.12.2009 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிராக.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

லஷ்மண் & லஷ்மண் மௌரியா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கோட்ட மேலாளர்,
ஓரியண்டல் இன்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர். – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:9676/2011 (சிறப்பு விடுப்பு) (சி) எண்:14560/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 08.11.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இரண்டாம் பதில் மனுதாரருக்குச் சொந்தமான பேருந்து 08.09.2003 அன்று ஒரு சாலை விபத்தில் மேல்முறையீட்டாளர் மீது மோதியதால் அவருக்கு உடலின் பல பகுதிகளில் மிக மோசமான காயங்கள் ஏற்பட்டன. அவர் உடனடியாக பெங்களூரில் உள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைக்குப் பின் 22.09.2003-ல் திருப்பியனுப்பப்பட்டார். மேல்முறையீட்டாளர் மோட்டார் வாகனச் சட்டம் 1988-ன் பிரிவு எண்: 166-ன் கீழ் மோட்டார் விபத்து தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்து ரூ.5 இலட்சம் இழப்பீடு கோரினார். வழக்கை விசாரித்த மன்றம், வழக்கு தொடர்ந்த தேதியிலிருந்து டெபாசிட் செய்யவேண்டிய தேதி வரை 8 சதவிகித வட்டியோடு ரூ.45 ஆயிரம் செலுத்த ஆணைப் பிறப்பித்தது. மேல்முறையீட்டாளர் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 173-ன்கீழ் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்ததை அடுத்து உயர் நீதிமன்றம் கூடுதலாக ரூ.31 ஆயிரம் மனு செய்த நாளிலிருந்து 6 சதவிகித வட்டியுடன் வழங்க உத்தரவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மனு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 பிரிவு 14; மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவுகள் 166, 168, 173; தொழிலாளர் இழப்பீடு சட்டம் (Workmen Compensation Act) 1923-ன் பிரிவு 4.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Raj Kumar v. Ajay Kumar,* (2011) 1 SCC 343: (2011) 1 SCC (Civ) 164:(2011) 1 SCC (Cri) 1161. [Para 14]
2. *Arvind Kumar Mishra v. New India Assurance Co. Ltd.,* (2010) 10 SCC 254:(2010) 4 SCC (Civ) 153: (2010) 3 SCC (Cri) 1258. [Para 13]
3. *Reshma Kumar v. Madan Mohan,* (2009) 13 SCC 422: (2009) 5 SCC (Civ) 143:(2010) 1 SCC (Cri) 1044. [Para 12]
4. *Oriental Insurance Co. Ltd. v. Jashuben,* (2008) 4 SCC 162:(2008) 2 SCC (Cri) 752. [Para 12]
5. *Nagappa v. Gurudayal Singh,* (2003) 2 SCC 274:2003 SCC (Cri) 523. [Para 24]
6. *R.D. Hattangadi v. Pest Control (I) (P) Ltd.,* (1995) 1 SCC 551:1995 SCC (Cri) 250. [Para 10]
7. *Ward v. James,* (1966) 1 QB 273:(1965) 2 WLR 455:(1965) 1 All ER (CA). [Para 10]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும்**

(அ) மேலே எடுத்துக்காட்டப்பட்ட தீர்ப்புகளிலிருந்து மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட இழப்பீடு போதுமானதா அல்லது இழப்பீட்டை உயர்த்திக் கொடுக்கலாமா என்பதை கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் யோசனை செய்யலாம் என உச்ச நீதிமன்றம் கருதியது.

(1) விபத்தினால் ஏற்பட்ட வருமான இழப்பும் அசல் விவரங்களும்.

(2) இயலாமையால் ஏற்படும் (on account of disability) எதிர்கால வருமான இழப்பு.

(3) எதிர்கால மருத்துவ செலவு.

(4) விபத்தினால் ஏற்பட்ட வலி, துன்பங்கள் மற்றும் அதிர்ச்சி (trauma).

(5) திருமணத்திற்கான வாய்ப்பு இழந்தமை உட்பட நேர்ந்த இழப்புகள்.

(6) எஞ்சிய வாழ்நாளில் ஏற்படக்கூடிய இழப்புகள்.

(ஆ) விபத்து நடந்தபோது மேல்முறையீட்டாளருக்கு 24 வயதே நிறைவடைந்தது என்பதையும் தச்சுத் தொழில் செய்து மாதம் ரூ.5,000/- வருமானம் ஈட்டி வந்தார் என்பதையும்

விபத்தின் நிகழ்வால் மருத்துவமனைகளில் பலமுறை சிகிச்சைப் பெற நேர்ந்தது என்பதையும் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டதை பதில் மனுதாரர் மறுக்கவில்லை என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. விபத்தில் பாதிக்கப்பட்டவர் அக நோயளியாக ஒருமாத காலம் இருந்ததினால் அவரது வருமானத்தை இழக்க நேர்ந்ததால் ரூ.5,000/- இழப்பீடு பெற தகுதி பெருகிறார் என நீதிமன்றம் கருதியது.

(இ) விபத்தின் காரணமாக மேல்முறையீட்டாளர் 26% கீழ் மூட்டு ஊனமும், 25% சிறுநீரக காயங்கள் ஊனமும், 38% உடல் முழுமையில் ஊனமும் உள்ளதாக நீதிமன்றம் கணித்தது. மேல்முறையீட்டாளர் 100% ஊனமடையாவிட்டாலும் அவர் வேலை செய்யும் வாய்ப்பு குறைந்து பூஜ்ஜியம் என்ற நிலைக்கு வந்ததை நீதிமன்றம் உறுதி செய்தது. 38% ஊனத்தை கருத்தில் கொண்டு ரூ.3,32,640/- (38% of Rs.5,000=1540x12x18) எதிர்கால வருமான இழப்பு என கணக்கிட்டு அத்தொகைக்கு மேல்முறையீட்டாளர் தகுதியுடையவர் என்று நீதிமன்றம் நிர்ணயித்தது.

(ஈ) சமுதாயத்தில் குறைந்த வருவாய் பிரிவின் கீழ் விபத்துக்குள்ளானவர் இருப்பதால் எதிர்கால மருத்துவ செலவுகளை கணக்கிடுவது கடினம் என்றும் வாழ்நாள் முழுவதும் அவர் சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருப்பதால் ரூ.1,50,000/- இழப்பீடு வழங்குவது அவசியம் என நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) விபத்தினால் ஏற்பட்ட வலி, துன்பம் மற்றும் அதிர்ச்சிக்காக ரூ.1,50,000/- இழப்பீடு பெற மேல்முறையீட்டாளர் தகுதியுடையவராகின்றார் என நீதிமன்றம் நிர்ணயித்தது.

(ஊ) திருமணம் செய்யும் வாய்ப்பு உட்பட பல சுகங்களை இழந்ததால் ரூ.2,00,000/- இழப்பீடாக அளிப்பது சரியாக இருக்குமென தீர்ப்பளிக்கப்பட்டது.

(எ) மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166-ன் கீழ் மேல்முறையீட்டாளர் ரூ.5,00,000/- மட்டுமே இழப்பீடு கோரியிருந்தாலும் *நாகப்பா v. குருதயாள் சிங்* வழக்கை மேற்கோள் காட்டி தீர்ப்பாயமோ அல்லது சம்பந்தப்பட்ட நீதிமன்றமோ அதிக நஷ்ட ஈடு வழங்க உரிமை உள்ளது என்பதை கருத்தில் கொண்டு அதிக இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்தது.

இறுதியாக மேல்முறையீடு ஏற்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்தும் மேல்முறையீட்டாளருக்கு ரூ.8,37,640/- இழப்பீடு வழங்கியும் அதை 8% வட்டியுடன் வழக்கு தொடர்ந்த தேதியிலிருந்து இறுதியாக தொகையைப் பெறும் நாள் வரை செலுத்தவேண்டும் என்றும் நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 10 SCC 756.

***

**2. சந்தோஷ் தேவி** *(எதிர்)* **நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர்**
(Santosh Devi v. National Insurance Co. Ltd. & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

பஞ்சாப், அரியானா, உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கும் ஆணைக்கும் எதிராக.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சந்தோஷ் தேவி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3723/2012 (சிறப்பு விடுப்பு) (சி) எண்: 24489/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 23.04.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளரின் கணவர் திரு.சுவரண் சிங், 2–ம் பதில் அளிப்பவரின் கணவர் திரு.வரேந்தர் சிங்குடனும் (3–ம், 4–ம் பதில் அளிப்பவர்களுக்கு தந்தையுமாவார்) மாருதி காரில் பயணித்தபோது கட்டுபாட்டை இழந்து கார் விபத்துக்குள்ளானதில் சுவரன் சிங் இறந்துபோனார். வாகனத்தை ஓட்டிவந்த வரேந்தர் சிங்கும் விபத்தில் இறந்துபோனார்.

மேல்முறையீட்டாளர் மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 166–ன் கீழ் ரூபாய் 4 இலட்சம் இழப்பீடு கோரினார். வாகனத்தை ஓட்டிச்சென்ற திரு.வரேந்தர் சிங் அபாயகரமாகவும், அலட்சியமாகவும் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என அவர் கூறியதை அவர்களது வாரிசுதாரர்கள் மறுத்தனர்.

1–ஆம் பதில் அளிப்பவர் வாகனத்தினுள் பயணம் செய்தவர் 3–ம் நபர் என்று நிர்ணயிக்க இயலாது எனவும் வாகனத்தை ஓட்டியபோது ஓட்டியவருக்கு அந்த வாகனத்தை ஓட்டும் உரிமம் (Licence) இல்லை என்பதால் இந்த வழக்கு நிலைப்பாட்டில் (Maintanability) வைக்க இயலாது எனவும் வாதிட்டார். இதனை விசாரித்த தீர்ப்பாயம், பல ஆதாரங்களை பரிசீலித்து பார்த்ததில் வரேந்தர் சிங் அபாயகரமாகவும் அலட்சியமாகவும் வாகனத்தை ஓட்டியுள்ளார் என முடிவு செய்தது.

தீர்ப்பாயம் இறந்தவரின் வருமானத்தை கணக்கிடுகையில் அவர் ரூ.1,500/– மாதம் ஈட்டியதாகவும் அதில் சொந்த செலவிற்கு ரூ.500/– போக ரூ.1,000/– குடும்பத்தில் மற்ற நபர்களுக்காக செலவிட்டார் எனவும் கணக்கிட்டது.

மேலும் இறந்தவரின் வாரிசுதாரரான 2 மகன்களும் 26, 23 வயதை அடைந்ததால், இவர்கள் இறந்தவரின் வருமானத்தில் வாழ்பவரல்ல என தீர்ப்பாயம் முடிவு செய்தது.

தீர்ப்பாயம் 11 புள்ளிகள் பெருக்கலை வைத்து இழப்பீடு கோருபவர் ரூ.1,32,000/-ம் 12% வட்டியும் பெற தகுதி உடையவர் என தீர்ப்பளித்தது.

உயர் நீதிமன்றம் *சரளா வர்மா v. DTC* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மேற்கோள்காட்டி 14 புள்ளிகள் பெருக்கலில் எடுத்து ரூ.1,77,500/- 7% வட்டியுடன் பெற தகுதியுடையவராகிறார் என்றும் உயர்த்தப்பட்ட தொகையை மேல்முறையீடு செய்த தேதியிலிருந்து வழங்க உத்தரவு பிறப்பித்தது. இதனால் பாதிக்கப்பட்ட மனுதாரர் செய்த மேல்முறையீட்டு மனு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) & (o); மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 166.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *R.K. Malik v. Kiran Pal,* (2009) 14 SCC 1. [Para 11]
2. *M.S. Grewal v. Deep Chand Sood,* (2001) 8 SCC 151. [Para 11]
3. *Lata Wadhwa v. State of Bihar,* (2001) 8 SCC 197. [Para 11]
4. *Kerala SRTC v. Susamma Thomas,* (1994) 2 SCC 176. [Para 11]
5. *Sarla Dixit v. Balwant Yadav,* (1996) 3 SCC 179. [Para 11]
6. *U.P. SRTC v. Trilok Chandra,* (1996) 4 SCC 362. [Para 13]
7. *Nance v. British Columbia Electric Railway Co. Ltd.,* 1951 AC 601. [Para 13]
8. *Davies v. Powell Duffryn Associated Collieries Ltd.,* 1942 AC 601. [Para 13]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இறந்தவர் உயிரோடு இருந்திருந்தால் அவரது மாத வருமானம் 25 ஆண்டு காலத்தில் 30% கூடியிருக்கும் என்பதை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பாயமும் உயர் நீதிமன்றமும் கணக்கிட்டது தவறு என்ற வாதம் உச்ச நீதிமன்றத்தின் முன்வைக்கப்பட்டது.

குடும்பத்தில் உள்ளவர்கள் எண்ணிக்கையைக் கணக்கிடாமல் இறந்தவர் தனது சொந்த செலவிற்கு மாதம் ரூ.500/- எடுத்துக் கொண்டார் என முடிவு செய்து ரூ.1,500/-ல் இருந்து கழித்தது சீரற்றதாகும் (சமமற்றதாக) என்றும் வாதிக்கப்பட்டது. இந்த வாதத்தை ஏற்ற நீதிமன்றம் சுயவேலை வாய்ப்பில் செயல்படும் ஒரு தனிமனிதன் தன் வாழ்நாள் காலம் முழுதும் ஒரே அளவு சம்பாதிப்பார் என முடிவெடுத்தது தவறு என

சுட்டிக்காட்டியுள்ளது. அதிகபடியான முயற்சியை எடுக்கும்போதுதான் குடும்பத்திற்கு அவன் மீண்டும் உயர்வான வருவாயை ஈட்டுகிறான். *சரளா வர்மா* வழக்கை இவ்வழக்கிற்கு ஒப்பிடுவது சரியல்ல என நீதிமன்றம் கருதியது. மொத்த சம்பாதனையில் 30% உயர்வு அளித்து கணக்கிடுவது சுயவேலை செய்பவருக்கு அளிக்கப்படும் நியாயமான கணக்கீடாகும். இழப்பீட்டை வழங்க 30% உயர்வை அளித்து கணக்கிடுவதே சரியானதாகும் என நீதிமன்றம் கருதியது.

(ஆ) இறந்தவர் 1/3 பகுதி தன் சுய தேவைக்காக செலவழித்தார் என்ற தீர்ப்பாயம் மற்றும் உயர் நீதிமன்ற முடிவுகளை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. 5 நபர் உள்ள குடும்பத்தில் ஒருவர் 1/10 பாகம் மட்டுமே சுயதேவைக்கு செலவிடுவார் என நீதிமன்றம் கூறியது.

(இ) தீர்ப்பாயம் மேல்முறையீட்டாளரின் இரண்டு மகன்களும் வயதுக்கு வந்தவர்களாக இருந்ததால் இவரது வருமானத்தை சார்ந்துதான் இருந்தார்கள் என்ற வாதத்தை ஏற்கவில்லை. இரு மகன்களும் எந்த வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப்படாததால் இந்த விஷயத்தில் தீர்ப்பாயம் சரியான முடிவை எடுக்கவில்லை என நீதிமன்றம் கருதியது.

(ஈ) முடிவில் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயர் நீதிமன்றமும், தீப்பாயமும் வழங்கிய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டாளர் ரூ.2,94,840/- இழப்பீடு பெற தகுதியுள்ளவராகிறார் (ரூ.1500+30%=1950 இதிலிருந்து 10% சொந்த செலவு போக மீதி ரூ.1755) என்றும் இத்துடன் இறந்தவரின் உடலை ஏற்றுசெல்ல ரூ.5,000/-ம், இறுதி சடங்குகளுக்கு ரூ.10,000/-ம் (கூட்டமைப்பு இழப்பிற்க்காக) வழங்கிட வேண்டுமென்றும் ஆக மொத்தம் இறுதியாக மேல்முறையீட்டாளர் ரூ.3,19,840/- பெற தகுதியுடையவராகிறார் எனவும் இதில் கூடுதலாக வழங்க உத்தரவிடப்பட்ட ரூ.1,42,340/- (ரூ.3,19,840 - 1,77,500) வழங்கவும் அதற்கு 7% வட்டி வழங்கவும் மனு செய்த நாளிலிருந்து அவர் தொகையைத் திரும்பபெரும் நாள்வரையும் அளிக்கவும் உத்திரவிடப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2014(1) CPR 293 (SC).

***

**3. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** *(எதிர்)* **யோகேஷ் தேவி மற்றும் பலர்**

(New India Assurance Co. Ltd. v. Yogesh Devi & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

ராஜஸ்தான் உயர் நீதிமன்ற SB சிவில் misc மேல்முறையீட்டு எண்:1222/2006-ல் 30.01.2009 நாளில் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை மீது மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யோகேஷ் தேவி மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1987/2012 (சிறப்பு விடுப்பு) (சி) எண்:17186/2009 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 02.10.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

10.12.2002–அன்று விஜேந்திர சிங், பகவான் தாஸ், மனிஷ் ஆகிய மூவரும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தனர். ஒரு ட்ரக் ஒன்று இந்த வாகனத்தின் மீது மோதியதில் விஜேந்திர சிங் மற்றும் பகவான் தாஸ் ஆகிய இருவரும் மரணமடைந்தனர். பதில் அளிப்பவர் எண்.1 விஜேந்திர சிங்கின் மனைவியாவார். பதில் அளிப்பவர்கள் 2 முதல் 5 வரை அடங்கியவர்கள், அவரது பிள்ளைகள். 6–ம் பதில் அளிப்பவர் அவரது தாயார் ஆவார். மேலே சொல்லப்பட்ட மேல்முறையீட்டாளருக்கு எதிராக ரூ.1,86.30,000/– கோரி அவர்கள் மனுவை சமர்ப்பித்தனர். விபத்தை ஏற்படுத்திய ட்ரக் (Truck) காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விஜேந்திர சிங் மாதம் ரூ.35,000/–க்கு மேல் ஊதியம் பெற்று வந்ததாக அவர்கள் மனுவில் தெரிவித்தனர். மனுவை விசாரித்த தீர்ப்பாயம் ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்குமாறும் ஏற்கனவே வழங்கிய தொகையை பிடித்தம் செய்து மீதியை வழங்க ஆணையிட்டது.

மேல்முறையீட்டாளரும், பதில் அளிப்பவர்களும் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். மேல்முறையீட்டாளரின் முறையீடு நிராகரிக்கப்பட்டது. இழப்பீடு கோரியவர்கள் ரூ.30,72,000/– இழப்பீடு பெற தகுதியுள்ளவர் என உயர் நீதிமன்றம் கூறியது. இந்த ஆணையினால் திருப்தியடையாத மனுதாரர் இந்த மேல்முறையீட்டை செய்தார். உயர் நீதிமன்றத்தின் ஆணையை திருத்தியமைத்து ரூ.26,68,800/– வழங்க உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

Nil.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*State of Haryana & Anr. v. Jasbir Kaur & Ors.* (2003) 7 SCC 484. [Para 5]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

அ) தீர்ப்பாயம் தனது ஆணையில் இறந்த நபர் இரண்டு பேருந்துகளுக்கு சொந்தக்காரராக இருந்தார் என்பதையும், ஒன்றை ஒப்பந்தத்திற்கு அளித்தார் என்பதையும் விவசாய

நிலம் வைத்திருந்தார் என்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது ஒரு பேருந்து ஓட்டுநராக மாதம் ரூ.3,900/- சம்பாதித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மற்றொரு பேருந்து மற்றும் விவசாய நிலம் ஆகியவற்றிலிருந்து அவருக்கு மாதம் ரூ.7,380/- கிடைத்திருக்கும். ஏனெனில் இதைவிடக் கூடுதலாக வருமானம் கிடைத்திருந்தால் அவர் வருமான வரி செலுத்தியிருக்க வேண்டும். அவரது மொத்த வருமானத்தில் 1/3 தனக்காக செலவழித்திருப்பார் என்று எடுத்துக்கொண்டால் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்காக மாதம் ரூ.5,000/- செலவழித்ததாகக் கருதலாம் என்று கூறியது.

(ஆ) தீர்ப்பாயம் கீழ்க்கண்ட அடிப்படையில் கோரிக்கையாளர்களுக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடாக வழங்கலாம் எனத் தீர்மானித்தது.

| | | |
|---|---|---|
| (1) விபத்தில் உயிரிழந்தவர் மறைவினால் ஏற்பட்ட இழப்பு (Loss of dependency) (Rs.5000x12x16=Rs.9,60,000) | = | ரூ.9,60,000.00 |
| (2) இழப்பீடாக முதல் மனுதாரருக்கு (Consortium) | = | ரூ. 10,000.00 |
| (3) அன்பும் தோழமையின் இழப்பாக மனுதாரர் 2-முதல் 6-வரை | = | ரூ. 25,000.00 |
| (4) இறுதி சடங்குகளுக்காக | = | ரூ. 5,000.00 |
| மொத்தம் | = | ரூ.10,00,000.00 |

(இ) ஓட்டுநரின் சம்பளம் ரூ.3,900/-மாக கணக்கெடுத்தால் அந்த தொகையை அவர் ஒவ்வொரு மாதமும் சம்பாதித்து இருப்பார். இரண்டு பஸ்களின் உரிமையாளர் என்ற அடிப்படையில் குறைந்தபட்சம் ரூ.10,000/- ஒரு பஸ்சிற்கு சம்பாதித்திருப்பவர் எனவும் உயர் நீதிமன்றம் கருதியது. எனவே உயர் நீதிமன்றம் விஜேந்திர சிங்கின் மாத வருமானம் ரூ.23,900/- அல்லது ரூ.24,000/- என நிர்ணயித்து அதில் 1/3 பங்கை இறந்தவர் தன் சொந்த செலவிற்காக செலவழித்திருப்பார் என்றும் மீதிதொகை கோரிக்கையாளர்களுக்கு உரித்தாகும். இவ்வடிப்படையில் உயர் நீதிமன்றம் ரூ.30,72,000/- உரிமம் கோருபவருக்கு வழங்க முடிவு செய்தது. நீதிமன்றம் இத்துடன் வருடத்திற்கு 6 சதவீத வட்டியையும் மனுதாக்கல் செய்த நாளான 24.03.2003-முதல் பணம் முழுமையாக செலுத்தும் நாள்வரை வழங்க உத்திரவிட்டது.

(ஈ) உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படை வாதத்தை உச்ச நீதிமன்றம் ஒப்புக்கொண்டாலும் வருமானத்தை கணக்கிடும்போது அது பல நிலைகளை கவனத்தில் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தியது. ஒப்பந்த ஊர்தி பஸ்சின் நிலை, உட்காரும் கொள்ளளவு, எந்த தடத்தில் ஓடுகிறது, பராமரிப்பிற்காகும் செலவு, இத்தொழிலுக்காக செலுத்தும்

வரிகள் இவைகள் கணக்கெடுக்கப்பட வேண்டும். உரிமையாளரின் வருமானம் செலவினங்கள் கழிக்கப்பட்டு நிகர இலாபம் எவ்வளவு என கணக்கிடப்பட்டதா என நீதிமன்றம் வினாவியது. இவ்வித கணக்கெடுப்பு சட்டபூர்வமாக இழப்பீடு வழங்க எடுத்துக்கொள்ளமாட்டாது எனவும் கூறியது. விவசாயத்திலிருந்து வரும் வருமானமும், மூன்று பஸ்களிலிருந்து வரும் வருமானமும் குடும்பத்திற்குதொடர்ந்து கிடைக்கும் என்பதை கணக்கில் எடுக்கவேண்டும் என நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. இறந்தவர் இந்த மூன்று பஸ்களையும் தானே பராமரித்து அவற்றில் ஒன்றை தானே ஓட்டியும் வந்ததால் அவரது இழப்பிற்கு பின் ஒரு மேலாளரை பணியமர்த்தி அவருக்கு ரூ.10,000/- சம்பளம் வழங்க நேரிடும். மேலாளரை பணியமர்த்த மாதம் ரூ.10,000/- செலவாகும் என்பதையும் ஓட்டுநரின் மாதச் சம்பளம் ரூ.3,900/- என்பதைக் கருத்தில்கொண்டு ரூ.13,900/- அந்த குடும்பத்திற்கு வருவாய் குறைந்தது என அறிந்து, இழப்பீடு கீழ்காணும் வகையில் அளிக்க பிறப்பித்தது. ரூ.13900x12x16 (16 என்பது பெருக்கீட்டு குறியாககொண்டு ரூ.26,68,800/- உயர் நீதிமன்ற ஆணையை திருத்தியமைத்து ரூ.26,68,800/- வழங்க உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2014(1) CPR 282 (SC).

***

**4. வதோதரா மாநகராட்சி** *(எதிர்)* **புருஷோத்தம் V.முர்ஜானி மற்றும் பலர்**

(Vadodara Municipal Corporation v. Purshottam V.Murjani & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மனு எண்:464/2002-ம், 61-77/2004-ல் 02.11.2006-ல் ஆணையிட்ட தீர்ப்பின் மீது.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

வதோதரா மாநகராட்சி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

புருஷோத்தம் V.முர்ஜானி மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:3594–3611 உடன் 3630, 3647, 3631, 3632, 3633/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 10.09.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

வதோதராவில் உள்ள சுர்சாகர் ஏரியில் மாநகராட்சியின் ஆளுகையின் கீழ் உல்லாச வலத்திற்காக படகுகள் இயக்கப்படுகின்றன. 26.09.1992-ல் முதல் ஒப்பந்தமாக படகு குழுமம் 'ரிப்பிள் அக்வா ஸ்போர்ட்ஸ்' நிறுவனத்திற்கு பொதுமக்களின் சந்தோஷத்திற்காக சவாரி செய்ய அளிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் கண்டிப்பாக விபத்தினால் ஏற்படும் நிகழ்வுகளுக்கும் படகை பயன்படுத்தும் அனைத்து தரப்பினருக்கும் காப்பீடு எடுக்கவேண்டும். இந்த நிபந்தனையின்படி 20 நபர் கொள்ளளவு உள்ளவர்களுக்கு ஒப்பந்ததாரரால் 01.11.1992 முதல் காப்பீடு எடுக்கப்பட்டது. 11.08.1993 அன்று 20 நபர்களுக்கு பதிலாக 38 நபர்கள் படகில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதன் விளைவாக படகு கவிழ்ந்து படகில் பயணித்தவர்களில் 22 நபர்கள் இறந்துபோயினர்.

இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்கள் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை அணுகி ஒப்பந்ததாரர் மற்றும் மாநகராட்சி நிர்வாகம் ஆகியோரின் கவனக் குறைவினால் ஏற்பட்ட நிகழ்விற்கு நஷ்டஈடு கோரி விண்ணப்பித்தனர். இந்த காப்பீடு ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் என்ற அளவிற்கும் ஒரு வருடத்திற்கு ஏற்படும் இழப்பிற்கு அதிகபட்சமாக ரூ.80 இலட்சம் என்ற அளவிற்குமாக ஈடுசெய்ய வழங்கப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டு பாலிசியின் படி ரூ.1 இலட்சம் 1 நபருக்கு என வழங்குவதாக கூறியது. மாநகராட்சி நிர்வாகமும், ஒப்பந்ததாரரும் ஒருவர் மீது ஒருவர் பழியை சொல்லி நிகழ்வுக்கு காரணம் காட்டினார்கள்.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஒப்பந்ததாரரும், மாநகராட்சி நிர்வாகமும் சேர்ந்து ரூ.30,18,900/- இழப்பீடும், 10 சதவீத வட்டியும் விபத்து நடந்த தேதியிலிருந்து இறுதி பணம் செலுத்தும் நாள் வரையும் வழங்க உத்தரவிட்டது. இறந்த 22 நபர்களுக்கு முறையே ரூ.50,000/-த்திலிருந்து ரூ.10,76,000/-வரையிலும் வழங்க ஆணை பிறப்பித்தது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முடிவை பரிசீலனை செய்த தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மோட்டார் வாகனச் சட்டம் 1988-ல் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் மனுதாரர் சிலர் ரூ.1 இலட்சமும், சிலர் ரூ.1,25,000/-மும் எஞ்சிய சிலர் ரூ.1,50,000/-மும் பெறத் தகுதியுடைவர் எனத் தீர்மானித்து மாநில நுகர்வோர் ஆணையத்தின் தீர்ப்பின் ஏனைய பகுதிகளை உறுதி செய்தது. ஒப்பந்ததாரர், மாநகராட்சி மற்றும் இன்சூரன்ஸ் கம்பெனி செய்த மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) & 23; பம்பாய் பிராந்திய முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1949, இந்தியன் வெசல் சட்டம் 1917, பொதுப் பொறுப்பு காப்பீடு சட்டம் 1991 (Public Liability Insurance Act, 1991); IRDA Act 1999 மற்றும் 2002-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகள்.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Rajasthan State Road Transport Corporation v. Kailash Nath Kothari,* (199) 7 SCC 481 : (AIR 1997 SC 3444). [Para 5]
2. *Motor Owner's Insurance Co. Ltd. v. Jadavji Keshavji Modi,* (1981) 4 SCC 660 : (AIR 1981 SC 2059). [Para 6]
3. *Ravneet Singh Bagga v. KLM Royal Dutch Airlines & Anr.,* (2000) 1 SCC 66 : (1999 AIR SCW 4223). [Para 6]
4. *Rajkot Municipal Corporation v. Manjuben Jayantilal Nakum,* (1997) 9 SCC 552. [Para 9]
5. *United India Insurance Co. Ltd. v. Pushpalaya Printers,* (2004) 3 SCC 694 : (AIR 2004 SC 1700). [Para 9]
6. *Life Insurance Corporation of India & Ors. v. Smt. Asha Goel & Anr.,* (2001) 2 SCC 160 : (AIR 2001 SC 549). [Para 9]
7. *Municipal Corporation of Delhi v. Uphaar Tragedy Victims Association and Ors.,* (2011) 14 SCC 481 : (AIR 2012 SC 100) [Para 18]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) 'ரிப்பிள் அகுவா ஸ்போர்ட்ஸ்' நிறுவனமும், மாநகராட்சியும் சேர்ந்து நஷ்டயீட்டை முறையே ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.1.50 இலட்சம் வரை ஒவ்வொரு இழப்பீட்டாளருக்கும் வழங்க தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அளித்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் பதிவு செய்தது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மீதமுள்ள இழப்பீட்டை வதோதரா மாநகராட்சி இழப்பீட்டாளர்களுக்கு கொடுத்து, பின் ரிப்பிள் அகுவா ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திடம் இதை வசூலிக்க கூறிற்று. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், காப்பீட்டு நிறுவனம் ரூ.20 இலட்சம் ஒரு இறப்பிற்கு அளிக்க பாலிசியில் உள்ளதாலும் மொத்தம் ரூ.80 இலட்சம் வழங்க காப்பீடு உள்ளதால் காப்பீட்டு நிறுவனம் முனிசிபல் கார்பரேஷனுக்கு ரூ.80 இலட்சம் கொடுக்கும்படி ஆணையிட்டது.

(ஆ)ஒப்பந்ததாரர் பயணிகளுக்கு உயிர்காப்பு ஜாக்கெட்டுகளை கொடுக்காமலும், பாதுகாப்பிற்கு சேவகர்களை பணியமர்த்தாததும் அன்னாரது சேவைகுறைபாடு என மாநில ஆணையமும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையமும் முடிவு செய்ததை உச்ச நீதிமன்றம் பதிவு செய்தது. பாதிக்கப்பட்டவர்கள் நுகர்வோர் என்றும் சேவை அளிக்க வேண்டியவர் ஒப்பந்ததாரர் எனவும் இழப்பீட்டை வழங்க அவருக்கே முதன்மை பொறுப்பு என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(இ 01.11.1992 அன்று காப்பீட்டு நிறுவனம் வழங்கிய பாலிசியில் ஒரு விபத்திற்கு ரூ.20 இலட்சமும், ஒரு ஆண்டிற்கு அதிகபட்சமாக ரூ.80 இலட்சமும் என குறிப்பிட்டிருந்ததால்

மாநில, தேசிய ஆணையம் தீர்ப்பளித்தது போல் காப்பீட்டு நிறுவனம் தனது பொறுப்பை தட்டிகழிக்க இயலாது என நீதிமன்றம் கருதியது. 1991–ம் ஆண்டு பொதுப் பொறுப்பு காப்பீடு சட்டத்தின் படியும் காப்பீட்டு நிறுவனம் IRDA விதிகளுக்கு உட்பட்டு செயல்படவேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

(ஈ) பாம்பே புரொவின்ஷியல் முனிசிபல் சட்டம் 1949 பிரிவு 62, 63 மற்றும் 66–ன்படி பொதுமக்களின் நன்மையை கருத்தில் கொண்டு பாதுகாப்பு அளிப்பது மாநகராட்சியின் கடமையாகும். படகை செலுத்தும்போது உயிர்காப்பு உடைகளை பயணிகளுக்கு அளிப்பது அவசியம் என்பதையும் விபத்துக்களை முன்கூட்டியே யூகித்திருந்திருக்க வேண்டும் என கருத்து தெரிவித்து பாதுகாப்பு அளிக்கத்தவறிய மாநகராட்சியை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்க எந்த முகாந்திரமும் இல்லை என நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) ஆபத்தான நிலைகளில் அதிகபட்ச பொறுப்பினை ஒப்பந்ததாரரும், மாநகராட்சியும் கடைபிடித்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யத் தவறினால் நடவடிக்கைக்கு உட்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் பதிவு செய்தது.

(ஊ)எனவே மேல்முறையீட்டில் எந்தவித தார்மீக ஏற்பு இல்லை என கருதி இந்த மேல்முறையீட்டை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2014(4) CPR 1 (SC); AIR 2015 SC 321.

***

## 2. நுகர்வோர் மன்றங்களில் பணியமர்த்துதல் தொடர்பாக

**1. பிரேம் லதா** *(எதிர்)* **அரசாங்கம் (தேசிய தலைநகர் டில்லி) மற்றும் பலர்**
(Prem Lata v. Government (NCT of Delhi) & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

டில்லி உயர் நீதிமன்ற காப்புரிமை விண்ணப்பம் [Patent Application] மனு எண்:518/2011-ன் கீழ் 16.08.2011-ல் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பிரேம் லதா - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அரசாங்கம் (தேசிய தலைநகர் டில்லி) மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்பு (சி) எண்:29967/2011.

தீர்ப்பு தேதி : 11.09.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

மனுதாரர் தில்லி மாநகரில் உள்ள மாவட்ட நுகர்வோர் மன்றம் ஒன்றின் உறுப்பினராவார். மாநகரிலுள்ள 5 மாவட்ட மன்றங்களுக்கு தலைவர் பதவிக்காக கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் பேரில் தலைவர் பதவிக்கு மனுசெய்து இருந்தார். 63 பேர் நேர்காணல் வரிசையில், தெரிவு குழு தயார் செய்த முடிவில் ஷாலிமார்பாக் மாவட்ட மன்றத் தலைவர் பதவிக்கு Mr.MC.மெஹரா என்பவர் தெரிவு செய்யப்பட்டார். மனுதாரர் காத்திருப்போர் பட்டியலில் முதலாவதாக இருந்தார். பதிலாளர்கள் 4 முதல் 6 வரை உள்ளவர்கள் மற்ற 3 மாவட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் 1 வருடம் வரை செல்லும். விதிகளின்படி தெரிவு செய்யப்பட்டவர்கள் 45 நாட்களுக்குள் சேரவில்லை எனில் அடுத்த இரண்டாம், மூன்றாம் நிலையில் இருப்பவர்களுக்கு பணியமர்வு ஆணை வழங்கப்படும். திரு.மெஹரா பணியமர்வு கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் பணியில் சேர்ந்ததால் மனுதாரருக்கு தலைவராக பணியமர்வு பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பதிலாளர்கள் 4 முதல் 6 வரை உள்ளவர்கள் பணியமர்வு கடிதத்தை பெற்ற 45 நாட்களுக்குள் பணியில் சேரவில்லை. அவர்களுக்காக விதி தளர்த்தப்பட்டு 45 நாட்கள் கடந்த பின்னரே பணியில் சேர்ந்தனர். ஆனால் இந்த ஆணை தளர்த்தப்பட்டு இருப்பதால் இது சட்டத்திற்கு புறம்பானது என்றும் இந்த பணியமர்வு ஆணை திரும்பபெற்று தனக்கு ஏதாவது ஒரு மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் தலைவர் பதவியை வழங்கவேண்டும் எனவும் மனுதாரர்/முறையீட்டாளர் கோரினார். இந்த பணியமர்வில் விதி தளர்த்தப்பட்ட செய்கை தவறானது என

உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இதனை விசாரித்த தனி நீதிபதி பதிலாளர்கள் நேரத்தை நீட்டிக்க அந்தந்த உயர் நீதிமன்றத்திற்கு மனு சமர்ப்பித்திருந்தார்கள் எனவும் அவர்களது பரிந்துரையை தேசிய தலைநகரில் உள்ள அரசாங்கம் ஏற்றுள்ளது எனவும் குறிப்பிட்டு இம்மனுவை நிராகரித்தார். மனுதாரரின் காப்புரிமை மேல்முறையீட்டு எண்:518/2011-ஐ உயர் நீதிமன்றத்தின் (2 நீதிபதிகளால் கேட்கப்பட்டு) பிரிவு பெஞ்ச் 16.08.2011-ல் நிராகரிக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மனுதாரர் சிறப்பு விடுப்பு மனுவை (SLP) பதிவு செய்தார். இதுவும் நிராகரிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவு 10 (1-A).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Prem Lata v. Govt. (NCT of Delhi),* (2011) 180 DLT 191.
2. *Prem Lata v. Govt. (NCT of Delhi),*
   LPA No.518, decided on 16.08.2011 (Del).

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இவ்வழக்கில் மனுதாரரின் கருத்து என்னவென்றால், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 10 (1-A)-ன்படி 3 நபர்கொண்ட அமர்வு குழு மேற்கண்ட பணிக்கு தகுந்த நபரை தெரிவு செய்யவேண்டும். குழுவின் பரிந்துரையை செயல்முறைபடுத்தும் அதிகாரிகள் விதிமுறைகளை மீறுவது தவறு எனவும் குறிக்கப்பட்ட காலவரையரைக்குள் பதில் மனுதாரர்கள் பணியில் சேராததால் அவர்கள் தகுதியை இழக்கின்றனர் எனவும் மனுதாரர் வாதாடினார். மாநில அரசாங்கம் அவர்களது எல்லையை மீறி காலதாமதத்திற்கு விலக்கு அளித்தது தவறு எனவும் பதில் மனுதாரர் 4 முதல் 6 வரை உள்ளவர்கள் தகுதியை இழந்ததால் ஏதாகினும் ஒரு மாவட்டத் தலைவர் பதவிக்கு தானே தகுதி பெறுகிறார் எனவும் வாதிட்டார்.

(ஆ) மனுதாரர் தனது வாதத்தில் தெரிவு குழு தேர்ந்தெடுப்பவரை மாவட்ட எல்லைக்குள் தெரிவு செய்திருப்பது நியாயமானதல்ல எனவும் ஷாலிமார்பாக் மாவட்டத்தில் Mr.MC.மெஹறாவை பணியமர்த்தியதால் தனக்கு வேறு ஏதாவது மாவட்டத் தலைவர் பதவி வழங்கியிருக்கவேண்டும் என்ற தர்க்கரீதியான நியாய விவாதத்தை முன்வைத்தார். தலைவரை தெரிவு செய்ததில் தன்னிச்சையாக (Arbitrary) செய்யப்பட்டுள்ளதால் இந்த தெரிவு முறையை ரத்து செய்து தன்னை தலைவராக பணியமர்த்த ஆணை பிறப்பிக்க கோரினார்.

(இ) அரசு தரப்பில் கூறியதாவது: 3 பதில் மனுதாரர்களும் அவரவர் தங்களது வேண்டுதல்களை உயர் நீதிமன்றங்களில் கால நீட்டிப்பு கேட்டு

விண்ணப்பித்துள்ளதாலும் மேலும் அவர்கள் மாவட்ட நீதித்துறையில் பணியில் உள்ளதால் உயர் நீதிமன்றங்கள் அவர்களை விடுவித்த பின்னரே அவர்கள் பணியில் சேரமுடியும் என வாதிட்டனர். டில்லி உயர் நீதிமன்றத்தின் சார்பாக லெப்டினன்ட் கவர்னருக்கு நேர ஒத்திவைப்பு கேட்டு விண்ணப்பித்ததையும் அதன் பின்னரே மாநில மன்றத்தில் சேரமுடியும் என்பதனையும் எடுத்துக்காட்டினர். காலதாமதம் பதில் மனுதாரர்களால் அல்ல என்பதும் சூழ்நிலை காரணமாகவே அவர்கள் பணியில் சேர இயலவில்லை எனவும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. காலவரையரையை நிர்ணயம் செய்பவருக்கு காலவரையரையை நீட்டிக்கவும் அதிகாரமுண்டு என்பதையும் சுட்டிக்காட்டினர்.

(ஈ) இருதரப்பினரின் வாதங்களையும் கேட்டறிந்த நீதிமன்றம் நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டே தலைவர் பதவிக்கான நபர்களை தெரிவு செய்துள்ளது எனவும் ஒவ்வொரு நபரின் தரத்தை நிர்ணயித்தே தெரிவு செய்யப்பட்டது எனவும் கூறியது. முதல் 5 தெரிவு செய்யப்பட்ட நபர்கள் அவர்களது விருப்பத்தை தெரிவித்ததின் அடிப்படையில் பணியமர்வு செய்ய ஆணையளிக்கப்பட்டது. பணி நியமன கோரிக்கை வைப்பது சரியல்ல என்றும் தெரிவித்தது. அரசாங்கமே நேரத்தை நீட்டித்தது என்பதை நீதிமன்றம் கணித்தது என்பதால் பதில் மனுதாரர்கள் 4 முதல் 6 வரை உள்ளவர்களுக்கு எந்த வினாவும் எழுப்பமுடியாது.

(உ) எனவே நீதிமன்றம் இந்த சிறப்பு விடுப்பு மனுவை தகுதியற்றவை என தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2012) 9 SCC 490; IV (2012) CPJ 9 (SC); 2012(4) CPR 236 (SC).

***

## 3. நடுவர் தீர்ப்பு (Arbitration)

### 1. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* ஜீனஸ் சக்திதுறை கட்டமைப்பு நிறுவனம்

(New India Assurance Co. Ltd. v. Genus Power Infrastructure Ltd.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

டெல்லி உயர் நீதிமன்ற நடுவர் மனு எண்:212/2011-ல் 30.05.2013 அன்று வழங்கப்பட்ட உத்தரவின் பேரில்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஜீனஸ் சக்திதுறை கட்டமைப்பு நிறுவனம்
(Genus Power Infrastructure Ltd.) – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:10784/2014-ல் சிறப்பு விடுப்பு மனு (சி) எண்:24652/2013 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 04.12.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலளிப்பவர் மேல்முறையீட்டாளரிடம் 17.04.2009-ல் (Standard) தரநிலை தீ மற்றும் சிறப்பு ஆபத்துக்களுக்கான காப்பீட்டை ரூ.91 கோடியே 10 இலட்சத்திற்கு ஓராண்டிற்கு செய்திருந்தார். 29.10.2009 அன்று இந்திய எண்ணெய் கூட்டு ஸ்தாபனத்தின் முனையத்திலிருந்து (Terminal) தீ மற்றும் வெடிப்பின் காரணமாக பதிலளிப்பவரின் உற்பத்தி யூனிட் கடும் சேதமடைந்தது. பதிலளிப்பவரின் தகவலின் பேரில் மேல்முறையீட்டாளர் காப்பீட்டு சர்வேயர் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளரை காப்பீடு சட்டம் 1938 பிரிவு 64 UM-ன் படி இழப்பை மதிப்பீடு செய்ய அமர்த்தினர். பதிலளிப்பவரின் மதிப்பீட்டின்படி விபத்தினால் ஏற்பட்ட நஷ்டம் ரூ.28.79 கோடி. ஆனால் காப்பீட்டு இழப்பு மதிப்பீட்டாளர் இழப்பை ரூ.6,09,77,406/- என மதிப்பிட்டார். பதிலளிப்பவர் 11.03.2011–அன்று ரூ.5,96,08,179/-ஐ முழுமையான கடைசி பரிவர்த்தணையாக ஏற்பதாகவும் உடன்படிக்கை ஒப்பந்தத்தில் (letter of subrogation) கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டார். 3 வாரங்களுக்கு பின் 31.03.2011–அன்று பதிலாளர் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். அதன்படி தாம் வற்புறுத்தலின் பேரிலும், கட்டாய அணுகுமுறையாலும் கையொப்பமிட்டதாகவும் மேல்முறையீட்டாளர்

பதிலளிப்பவரின் கடும் நிதிநெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டதாகவும் தெரிவித்தார். மேல்முறையீட்டாளர் பதிலுரைப்பவர் தம் முழுமனதுடன் ஒப்புதலளித்து கையொப்பமிட்டார் என வாதிட்டனர். 05.04.2011-அன்று பதிலளிப்பவர் நடுவர் மற்றும் இணைக்கப்படுதல் சட்டம் 1996 பிரிவு 11-ன் கீழ் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தாம் கட்டாயத்தாலும், வற்புறுத்தலின் பேரிலும் பணப்பட்டுவாடாவை ஏற்றதாக வாதிட்டார். உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை பதிவு செய்து தனி நடுவர் ஒருவரை அமர்த்த 13.05.2013-ல் ஆணையிட்டது. இந்த ஆணையை எதிர்த்து முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் நடப்பு மனுவை தாக்கல் செய்தார். முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவு 23; காப்பீட்டு சட்டம் 1938-ன் பிரிவு 64 UM நடுவர் மற்றும் சமரசச் சட்டம் 1996 அதன் பிரிவு 11. (Arbitration and Conciliation Act, 1996)

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *National Insurance Co. Ltd. v. Boghara Polyfab (P) Ltd.,* 2010 CTJ 121(Supreme Court) (CP). [Para 5]
2. *Union of India v. Master Construction Co.,* AIR 2004 SC 904. [Para 7]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

இந்த வழக்கில் நஷ்டஈடு பரிவர்த்தனை செய்வதில் எதிர் மனுதாரரின் உடன்படிக்கை ஒப்பந்தத்தில் கட்டாயத்தின் பேரிலோ அல்லது வற்புறுத்தலினாலோ அவரது கையொப்பம் பெறப்பட்டதா அல்லது தன் முழு சம்மதத்துடன் அவர் கையொப்பம் இட்டாரா என்பதே உச்ச நீதிமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாவாகும். *நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் v. போகரா பாலிபெப் பிரைவேட் லிமிடெட்* மற்றும் *இந்திய யூனியன் v. மாஸ்டர் கட்டுமான நிறுவனம்* ஆகிய வழக்குகளில் கூறியதுபோல் கட்டாயத்தின் பேரிலோ அல்லது வற்புறுத்தலின் பேரிலோ கையெழுத்து பெறப்பட்டது என்று ஆதாரமற்ற வகையில் கூறப்படும் வாதம் எடுபடாது என்றும் நம்பகமான ஆதாரங்களுடன் (*prima facie*) இந்திய தலைமை நீதிபதிக்கோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்க்கோ சமர்ப்பிப்பதுதான் ஏற்புடையதாகும் என்றும் தெளிவு செய்யப்பட்டது. பதில் மனுதாரர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த வாதங்களை ஆராய்ந்த நீதிமன்றம் இது ஒரு ஆதாரமற்ற வலியுறுத்தல் (bald assertion) என்றும் உடன்படிக்கை ஒப்பந்தத்தில் (letter of subrogation) கையொப்பமிடும்போது எந்தவித எதிர்ப்பையோ மறுப்பையோ பதில் மனுதாரர் தெரிவிக்கவில்லை என்றும் 31.03.2011-ல் கொடுக்கப்பட்ட தகவல் பரிமாற்றம் மூன்றுவார கால இடைவெளிக்குப்பின் அனுப்பப்பட்டது என்றும் பதிலுரையாளர் தன் பணகஷ்டத்தால் வேறுவழியின்றி கையொப்பமிட்டார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லையென்றும்

கண்டறிந்தது. ஆகவே நீதிமன்றம் உடன்படிக்கை ஆவணத்தில் கையொப்பமிட்டு கொடுத்தது எந்தவித நிர்ப்பந்தத்தினாலுமல்ல என கூறிற்று. பதிலுரையாளர் தன் சொந்த விருப்பத்தின்படியே கையொப்பமிட்டுள்ளார் என்றும் எந்தவித கட்டாயத்தினாலோ அல்லது வற்புறுத்தலினாலோ அல்ல என்றும் ஒருவர் சட்டம் பிரிவு 11–ன் படி இவ்வழக்கில் எவ்வித சர்ச்சைக்குரிய காரணங்கள் இல்லை எனவும் உயர் நீதிமன்றம் பிரிவு 11 நடுவர் சட்டத்தை சரிவர பயன்படுத்தவில்லை எனவும் கூறி உயர் நீதிமன்ற ஆணையை ஒதுக்கி வைத்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2015(2) CPR 907 (SC).

***

## 4. தாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொள்ளுதல்

### 1. அன்சுல் அகர்வால் *(எதிர்)* புதிய ஒக்லா தொழில் வளர்ச்சிக் குழுமம்

(Anshul Aggarwal v. New Okhla Industrial Development Authority)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:1327/2010-ல் 23.08.2010 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பும் அதன் ஆணையும்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அன்சுல் அகர்வால் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

புதிய ஒக்லா தொழில் வளர்ச்சிக் குழுமம் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்பிலிருந்து மேல்முறையீடு (சிவில்)/2011 புகார் மனு எண்:12439/2011 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 09.08.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் ஆணைக்கு எதிராக தற்போதைய மேல்முறையீட்டு மனுவையும் இதனுடன் 233 நாட்கள் காலதாமதத்தை அனுமதிக்க விண்ணப்பத்தையும் முறையீட்டாளர் சமர்ப்பித்தார். முறையீட்டாளர் தன் கணவர் மற்றும் பள்ளி செல்லும் நிலையில் உள்ள குழந்தைகளோடு தான் குவைத்தில் இருந்தாலும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 23.08.2010 தேதியிட்ட ஆணை 15 நாட்களுக்குள் தனக்கு அறிவிக்கப்பட்டு இருந்தாலும், தன் வழக்கறிஞருக்கு 20.11.2010-ல் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வரைவு (Draft) தயார் செய்யும்படி அறிவுறுத்தியதாகவும் பிறகு தன் வழக்கறிஞருடன் நேரடியாக ஆலோசனை செய்ய வேண்டியிருந்ததாலும், தான் ஜுலை 2011-ல் திரும்பவரும்போதுதான் செய்யமுடியும் என்பதால் இம்மனுவை சமர்ப்பிக்க காலதாமதம் ஏற்பட்டது என்றும் விளக்கியிருந்தார். ஆனால் நீதிமன்றம் சிறப்பு விடுப்பு மனுவையும், காலதாமதத்தைப் பொறுத்தருளவேண்டி சமர்ப்பித்த விடுப்பு மனுவையும், நேரம் வரம்பு மீறல் சட்டத்தின்கீழ் தாமதத்தை ஏற்க முடியாது என தள்ளுபடி செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 23, 24-A; வரம்பு சட்டம் 1963 பிரிவு 5.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மனுதாரர் சிறப்பு விடுப்பு மனுவில் குறிப்பிட்ட நாட்களுக்குள் தனது மனுவை சமர்ப்பிக்காததற்கான காரணங்கள் திருப்திகரமாக இல்லை என்று நீதிமன்றம் கருதியது. மனுதாரர் தேசிய ஆணையத்தின் உத்தரவை 15 நாட்களுக்குள் அறிந்திருந்தும், மனுவின் வரைவை (Draft) தயார் செய்யும்படி தனது வழக்கறிஞருக்கு அறிவுறுத்தியிருந்தும் நீதிமன்றத்தில் அதை சமர்ப்பிக்க தவறிவிட்டார். மனுதாரர் ஏப்ரல் 2011–ல் இந்தியாவிற்கு வந்தபோதும் தன் வழக்கறிஞரை காண எம்முயற்சியும் எடுக்கவில்லை என்றும் தான் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதற்கு எந்தவித ஆவணங்களையும் சமர்ப்பித்து நிரூபிக்கவில்லை என்றும் அறிந்தது. நேரம், வரம்பு மீரல் சட்டம் பிரிவு 5–ன் கீழ் இம்மனுவை ஏற்க எந்த முகாந்திரமும் இல்லை என நீதிமன்றம் கருதியது.

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தக்க முகாந்திரத்தோடு காலதாமதத்தை ஏற்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் நீண்ட காலதாமதத்தை ஏற்பது நுகர்வோர் ஆணையத்தின் செயல்களை பாதிக்கும் எனவும் அவற்றை ஏற்க இயலாது எனவும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

(இ நீண்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் காரணங்கள் சரிவர நீதிமன்றத்துக்கு அளிக்கப்படவில்லை என்றும் கூறி நீதிமன்றம் காலதாமத விடுப்பு மனுவையும், சிறப்பு விடுப்பு மனுவையும் நிராகரித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 63 (SC); 2017(1) CPR 304 (SC).

***

# 5. நுகர்வோர் என்பவர் யார்? - வரையறை மற்றும் காரணிகள் (நோக்கம்)

**1. வீரேந்தர் ஜெயின்** *(எதிர்)* **அலக்நந்தா கூட்டுறவு குழு வீட்டுவசதி சங்கம் மற்றும் பலர்**
(Virender Jain v. Alaknanda Cooperative Group Housing Society Ltd. & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:4209/2008-ல் 11.02.2009-அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் ஆணை மீது.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

வீரேந்தர் ஜெயின் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அலக்நந்தா கூட்டுறவு குழு வீட்டுவசதி சங்கம் மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:64/2010 உடன் எண்:65-68/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 23.04.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் பதிலளிப்பாளரின் எண்.1, சங்கத்தில் உறுப்பினராகி, பதிலாளர் கட்டும் குடியிருப்பில் குடியிருப்பு வேண்டுமென மனு அளித்திருந்தார். 10.12.1995 முதல் 15.12.2003 வரை தவணை முறையில் இந்த குடியிருப்பை வாங்க பணம் செலுத்தி வந்தார். மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகையை அலக்நந்தா கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் தனது 09.02.2004 தேதியிட்ட கடிதத்தில் திருப்பி அனுப்பியது. மேலும் அரியானா நகர்புற மேம்பாட்டு ஆணையம் ஒதுக்கியிருந்த நிலத்திற்கு, சரியாக தவணையை செலுத்தவில்லை எனவும் காரணம் கூறி மறைமுகமாக உறுப்பினர் என்ற தகுதியிலிருந்து விலக்கிவிட்டது.

மேல்முறையீட்டாளர் பதிலளிப்பவரது செயலை கண்டித்து நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 12-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். பதிலுரையாளர், மேல்முறையீட்டாளர் நுகர்வோர் அல்லவென்றும் அவர் அரியானா கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1984-ன் கீழ் நியாயம் கோரி மனு செய்யவேண்டும் என வாதிட்டார். இதனை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஏற்க மறுத்தது. மேல்முறையீட்டாளர் இதற்கான தீர்வைக்கோரி நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகலாம் என கூறிற்று. இருந்தபொழுதிலும் மேல்முறையீட்டாளர் தமது மனுவில் கூறிய காரணங்கள் ஏற்கத் தக்கதல்ல எனக் கூறி மனுவை நிராகரித்தது. மேல்முறையீட்டாளர் மாநில நுகர்வோர் குறைதீர்

ஆணையத்தில் மேல்முறையீட்டையும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மறு ஆய்வு மனு (Revision Petition) பிரிவு 17 மற்றும் 21-ன் கீழ் தாக்கல் செய்தார். நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 2 (1) (d)-யின்படி நுகர்வோர் அல்ல என இரண்டு ஆணையங்களும் மனுவை நிராகரித்தன. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (d), (o), 3, 11 to 15, 17, 19, 21 மற்றும் 23; அரியானா கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1984 (22/1994) இந்திய உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 9.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *National Seeds Corporation Ltd. v. M. Madhusudhan Reddy,* (2012) 2 SCC 506 : (2012) 1 SCC (Civ) 908. [Para 14]
2. *Trans Mediterranean Airways v. Universal Exports,* (2011) 10 SCC 316 : (2012) 1 SCC (Civ) 148. [Para 15]
3. *Chandigarh Housing Board v. Avtar Singh,* (2010) 10 SCC 194 : (2010) 4 SCC (Civ) 113. [Para 11]
4. *Virender Jain v. Alaknanda Cooperative Group Housing Society Ltd. & Ors.,* Revision Petition No.4209 of 2008, order dated 11.02.2009 (NC). (Reversed) [Para 6]
5. *Kishore Lal v. ESI Corpn.,* (2007) 4 SCC 579 : (2007) 2 SCC (L&S) 1. [Para 14]
6. *GDA v. Balbir Singh,* (2004) 5 SCC 65.
7. *Thirumurugan Coop. Agricultural Credit Society v. M. Lalitha,* (2004) 1 SCC 305. [Para 6, 14]
8. *B.K. Prabha v. Kendriya Upadyarasanga,* (2004) 1 CPJ 127 : (2004) 2 CLT 304 (NC). (Overruled) [Para 6]
9. *Skypak Couriers Ltd. v. Tata Chemicals Ltd.,* (2000) 5 SCC 294. [Para 15]
10. *Fair Air Engineers (P) Ltd. v. N.K. Modi,* (1996) 6 SCC 385. [Para 15]
11. *LDA v. M.K. Gupta,* (1994) 1 SCC 243. [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) "நுகர்வோர்" என்பதன் வரைவிலக்கணம் *லக்னோ மேம்பாட்டு ஆணையம் v. எம்.கே.குப்தா* மற்றும் *சண்டிகர் வீட்டுவசதி வாரியம் v. அவ்தார் சிங்* ஆகிய வழக்குகளில் ஆய்வு செய்யப்பட்டது. சண்டிகர் வீட்டுவசதி வாரிய வழக்கில் சண்டிகர் நிர்வாகத்தால் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட கூட்டுறவு வீட்டமைப்பு கட்டிட சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதி 2(1)(d)(ii)-யின்கீழ் அவர்கள் நுகர்வோர் எனவும் முன்தொகையாக அவர்கள் செலுத்திய பிணை உறுதிப் பணத்தை (earnest money) திருப்பித் தராததும் அதற்கான வட்டியை இழக்கவேண்டும் என்றும் கூறுவது சட்டத்திற்கு புறம்பானதாகவும் கட்டாயப்படுத்துவதாகவும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அவ்விதமாகவே முதலாவது பதிலுரைப்பாளர் கட்டுகின்ற குடியிருப்புகளில் ஒன்றிற்காக மேல்முறையீட்டாளர் தவணை முறையில் செலுத்திய பணத்தை திரும்ப கோருவதும் நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதி 2(1)(d)(ii)-யின்படி அவர் நுகர்வோர் என்ற காரணத்தால் நியாயமனதே என்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் *பி.கே.பிரபு v. கேந்திரிய உபாத்தியர் சங்க* வழக்கை காட்டி தீர்ப்பளித்திருப்பது சரியல்ல எனவும் நீதிமன்றம் கூறியது.

(ஆ) மாவட்ட நுகர்வோர் மன்றம் இந்த மனுவை ஏற்காமல் கூட்டுறவு சங்கங்களின் சட்டப்படி மேல்முறையீட்டாளர் அதற்குண்டான குறைதீர் மன்றத்தை அணுகி இருக்கவேண்டும் என தீர்ப்பளித்தது சரியா என மற்றொரு வினா எழுப்பப்பட்டது. முதலாவது பதிலளிப்பவர் மேல்முறையீட்டாளர் செலுத்திய பிணை உறுத்த தொகையை அனுப்பியதன் மூலம் அவரைத் தகுதியற்றவராக ஆக்கியதை மேல்முறையீட்டாளர் ஆட்சேபித்து இருந்தார் என நீதிமன்றம் கண்டது. மேலும் முதலாவது பதிலளிப்பவர் கூட்டுறவு சங்கங்களின் உதவிப் பதிவாளர் மற்றும் உயர் அலுவலர்களின் அனுமதியை பெற்று செயல்பட்ட ஒரே காரணத்திற்காக மேல்முறையீட்டாளர் தன் உரிமையை இந்த சட்டத்தின் கீழ் கோருவதை மறுக்க முடியாது என்றும் நீதிமன்றம் கூறியது. மேலும் *திருமுருகன் கூட்டுறவு விவசாய கடன் சங்கம் v. எம்.லலிதா* மற்றும் *கிஷோர்லால் v. ESI கார்ப்பரேஷன்* மற்றும் *தேசிய விதை மேம்பாட்டு கழகம் v. எம்.மதுசூதனரெட்டி* ஆகிய வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தனது நிலைப்பாட்டை தெரிவித்து சட்டத்தை உறுதி செய்ததை நீதிமன்றம் எடுத்துக்காட்டியது.

(இ) மேலும் நீதிமன்றம், *தேசிய விதை மேம்பாட்டு கழகம் v. எம்.மதுசூதனரெட்டி* வழக்கில் அதற்குமுன் வந்த வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மற்ற சட்டங்களின் கீழ் நிவாரணம் கோருவதோடு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் நிவாரணம் கோரலாம் எனவும் வேறு சட்டங்களில் தீர்வு கிடைக்கும் என்ற காரணத்திற்காக நுகர்வோர் சட்டத்தில் நிவாரணம் கோருவதை தடைசெய்ய முடியாது எனவும் நீதிமன்றம் தெரிவித்தது.

(ஈ) முடிவில் மேல்முறையீடு ஏற்கப்பட்டது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அளித்த தீர்ப்பை தள்ளிவைத்து மீண்டும் மாநில ஆணையத்திற்கே திருப்பியனுப்பி தகுதியின் அடிப்படையில் இருதரப்பினரையும் மீண்டும் விசாரித்த பின் (on merit) தீர்ப்பு வழங்கவும் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 9 SCC 383.

***

**2. பஞ்சாப் பல்கலைக்கழகம்** *(எதிர்)* **இந்திய யூனிட் டிரஸ்ட் மற்றும் பலர்**

(Punjab University v. Unit Trust of India & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

அ) **சிவில் மேல்முறையீட்டு எண்:400/2007 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்:503/2008**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் அசல் மனு எண்:97/2004-ல் 17.10.2006–அன்று வழங்கப்பட்ட ஆணை.

அ) **சிவில் மேல்முறையீட்டு எண்:4664/2009**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:2509/2002-ல் *பஞ்சாப் விவசாய பல்கலைக்கழகம் v. தேசிய யூனிட் டிரஸ்ட்* வழக்கில் 17.04.2009-ல் வழங்கப்பட்ட ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பஞ்சாப் பல்கலைக்கழகம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இந்திய யூனிட் டிரஸ்ட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:400/2007 உடன் எண்:503/2008 மற்றும் 4664/2009 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 09.07.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

பஞ்சாப் பல்கலைக்கழகம் பங்களிப்பு சேமநல நிதியை தன் பணியாளர்களுக்கென ஏற்படுத்தி அதை நிர்வகித்தும் வந்தது. 1993-ம் ஆண்டு பல்கலைக்கழகம் ரூ.9.6 கோடியை தேசிய யூனிட் டிரஸ்டின் "நிறுவன முதலீட்டாளர் சிறப்பு திட்டம்-93" என்ற திட்டத்தில் நிதி யூனிட்

வகைகளில் முதலீடு செய்தது. இது பரஸ்பர நிதிகளின் (open-ended scheme) வகையைச் சார்ந்தது. இந்த முதலீடு திரும்ப முதலீடு செய்யும் திட்டத்தின் கீழ் முதிர்வடையும் நாளில் அதாவது 31.03.1998-ல் ரூ.19.78 கோடியாக இருந்தது. 1998-ஆம் ஆண்டு UTI நிறுவனம் மற்றுமொரு முதலீடு திட்டத்தை, IISFUS-98, அறிமுகப்படுத்தியது. இதில் பஞ்சாப் பல்கலைக்கழகம் ரூ.19 கோடியை முதலீடு செய்து ஒவ்வொரு ஆண்டும் தரவேண்டிய ஈவுத் தொகையை மறு முதலீடு செய்யவேண்டும் என்றும் ஆண்டுக்கு 13.5% வட்டியும் தரும்படி ஒழுங்கு செய்திருந்தது. பல்கலைக்கழகம் மேலும் ரூ.4.5 கோடி முதலீடு செய்தது. ஜுன் 2003-ல் UTI நிறுவனம் ரூ.30,45,23,910.23-ம், ரூ.7,13,81,520.00 ஆகிய தொகைகளுக்கான இரண்டு காசோலைகள் முதிர்வுகால பயனாக அனுப்பியிருந்தது. ஆனால் பல்கலைக்கழகம் IISFUS-98-ல் ஒப்பந்த விதிமுறைகள் / நிபந்தனைகளின்படி அதிகபடியான முதிர்வுதொகை வழங்கப்படவேண்டும் என கூறியது. மனுதாரர் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் மனு எண்:97/2004-ல் சேவை குறைபாடு உள்ளதாக எதிர் மனுதாரரின் மீது புகார் அளித்தது. இதனை விசாரித்த தேசிய ஆணையம் தகுதியின் அடிப்படையில் மனுவை நிராகரித்தது. இருந்தபோதிலும் மனுதாரராகிய பல்கலைக்கழகம் சேவை குறைபாட்டை குறித்து பதிலுரையாளரிடம் கேட்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது என ஆணையம் தெரிவித்தது. ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து பல்கலைக்கழகம் தன் சிவில் மேல்முறையீட்டு எண்:400/2007-ல் பதிவு செய்தது. பதிலுரையாளரும் சிவில் மேல்முறையீட்டு எண்:503/2008 மூலம் மேல்முறையீட்டாளராக பல்கலைக்கழகத்திற்கு தகுதி (*locus standi*) இருக்கிறதா என வழக்கு பதிவு செய்தார். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டு வழக்கு எண்:400/2007-ஐ தள்ளுபடி செய்து தேசிய ஆணையத்தின் தீர்ப்பை உறுதி செய்தது. 503/2008 மற்றும் 4664/2009 ஆகியவற்றைப் பொறுத்தவரை மேல்முறையீட்டாளர் எந்த வியாபார நோக்கத்தோடும் செயல்படவில்லை என்றும் தன்னிடம் பணிபுரிபவரின் நன்மைக்கென்றே முதலீடு செய்தார் எனவும் இதில் எந்தவித வியாபார நோக்கமும் இல்லை என தீர்ப்பளித்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Punjab University v. Unit Trust of India,* 2006 SCC OnLine NCDRC 68.
2. *Punjab Agriculture University v. UTI of India,* 2009 SCC OnLine NCDRC 57.
3. *Laxmi Engineering Works v. P.S.G Industrial Institute,* (1995) 3 SCC 583.
4. *Morgan Stanley Mutual Fund v. Kirtick Das,* (1994) 4 SCC 225.
5. *LDA v. M.K. Gupta,* (1994) 1 SCC 243.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) நீதிமன்றத்தில் எழுப்பப்பட்ட இரண்டு வினாக்கள் பின்வருமாறு:

(1) வழக்கு தொடுத்த பல்கலைக்கழகம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 2(1)(d)-யின் கீழ் "நுகர்வோர்" எனும் எல்லைக்குள் வருகிறாரா?

(2) அவர்கள் பெறும் சேவை வியாபார நோக்கத்திற்குட்பட்டதா?

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் பிரிவு 2(1)(d)-ன்கீழ் விளக்கத்தில் 15.03.2003 முதல் 'உட்கூறு' என்பதற்கு பதிலாக 'கூறு' என்று மாற்றியமைக்கப்பட்டு இப்பிரிவு விரிவாக்கப்பட்டது. மேலும் பிரிவு 2(1)(d)-ன்கீழ் உட்பிரிவு (i) மற்றும் (ii) இவை இணக்கமான விளக்கத்தை அளிப்பதாய் இருக்கவேண்டும் என நீதிமன்றம் கருதியது. மேலும் நீதிமன்றம் பிரிவு 2(1)(d)(ii)-ல் உள்ள விளக்கத்தின் அடிப்படையில் வியாபார நோக்கம் என்பதனை சூழலுக்கு ஏற்ப கருதவேண்டும் என்றும் இது சம்பந்தமாக *லஷ்மி என்ஜினீயரிங் ஒர்க்ஸ்* வழக்கில் அளித்த தீர்ப்பை கவனத்தில் கொள்ளவேண்டுமென்பதை விளக்கிற்று. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் பதிலளிப்பாளரிடம் சேவையை பெற்றது அவர்களது பணியாளர்களின் நலனுக்கேயன்றி, இலாபம் பெறும் நோக்கோடு அல்ல என்றும் அவர்களது முதலீட்டில் எவ்வித வியாபார நோக்கமும் இல்லை என்றும் உறுதி செய்தது. மேலும் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் "நுகர்வோர்" எனும் வரையறைக்குள் உள்ளார் எனவும் எனவே இந்த மேல்முறையீடு நுகர்வோர் மன்றத்தில் ஏற்றுக்கொள்ள தகுதி பெற்றுள்ளது எனவும் கூறிற்று.

(இ) ஆனால் தகுதியின் அடிப்படையில் பதிலளிப்பவரது திட்டக் கூறுகளை ஆராய்ந்து பார்க்கையில் மேல்முறையீட்டாளர் வாதத்தில் நியாயமில்லை என்றும் இவ்வழக்கில் சேவை குறைபாடு என்பது இல்லை எனவும் நீதிமன்றம் கருதியது. பரிமாற்ற வர்த்தக நிதியில் நிகர சொத்து மதிப்பை (NAV) கொண்டே முடிவுகாலபயன் நிர்ணயம் செய்யப்படுகிறது. உத்திரவாதம் செய்யப்பட்ட எதிர்கால மதிப்பு ஒரு யூனிட்டுக்கு ரூ.10-க்கும் குறையாமல் இருக்கவேண்டும் என்பதாகும். எல்லா முதலீடுகளும் சந்தை நிலவரப்படியும், ஏற்றத்தாழ்வுடனும் இயங்கும் இதில் முதலீட்டாளரின் கவனம் மிகவும் தேவை. தன் எதிர்பார்ப்புக்கு கீழ் முதிர்ச்சியின் அளவு குறைந்துள்ளதால் சேவை அளிப்பவரை நீதிமன்றத்திற்கு அழைப்பது நியாயமற்றது என்றும் நீதிமன்றம் கருதியது.

(ஈ) தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் பல்கலைக்கழகம் நுகர்வோர் வரையறையின் கீழ்வரும் என்றும் இது பிரிவு 2(1)(d) (நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்) வரும் என தீர்ப்பளித்து வழக்கை தள்ளுபடி செய்தது சரியானதே என உச்ச நீதிமன்றம் கூறிற்று.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2014 SC 3670; (2015) 1 SCC 669; I (2015) CPJ 1 (SC).

***

**3. சஞ்சய் குமார் ஜோஷி** *(எதிர்)* **லக்ஷ்மண்கர் நகராட்சி வாரியம் மற்றும் ஒருவர்**
(Sanjay Kumar Joshi v. Municipal Board Laxmangarh & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு (Revision Petition) மனு எண்:2855/2011-ல் 22.01.2013 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் பேரில் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சஞ்சய் குமார் ஜோஷி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

லக்ஷ்மண்கர் நகராட்சி வாரியம் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:9290/2014-ல் சிறப்பு விடுப்பு (சி) மனு எண்:14172/2013 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 26.09.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர், பதிலுரையாளர் பிளாட் எண்:7-ஐ பொது ஏலம் விட்டதில் அதிக விலைக்கு ஏலம் கேட்டவர். விற்பனை விலையில் 25%-ஐ 22.01.2010-ல் செலுத்தினார். 19.03.2010-ல் பதிலுரையாளர், மேல்முறையீட்டாளரை மீதமிருந்த 75% தொகையை குத்தகை தொகையோடு சேர்த்து அளிக்கும்படி கூறினார். மேல்முறையீட்டாளர், பதிலுரையாளரை 22.03.2010 அன்று பிளாட் எண்:7-னின் மீது சிவில் வழக்கு, சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை அறிந்ததால் தாம் செலுத்திய தொகையினை திருப்பித்தரும்படி கேட்டார். பதிலுரையாளர் எந்தவித மறுமொழியும் கூறாததால் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வழக்கு பதிவு செய்தார். இவ்வழக்கினை விசாரித்த மாவட்ட மன்றம் பதிலுரையாளரை ரூ.25,000/- பாதுகாப்பு வைப்புத் தொகையையும் விற்பனைத் தொகையில் 25% ரூ.3,69,500/-மும் ஆக மொத்தம் ரூ.3,94,500/-ஐ 22.01.2010 முதல் 9% வட்டியுடன் செலுத்த ஆணை பிறப்பித்தது. பதிலுரையாளர் தொடுத்த மேல்முறையீடு மாநில ஆணையத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் தேசிய ஆணையம் *U.T. சண்டிகர் நிர்வாகம் மற்றும் ஒருவர் v. அமர்ஜீத் சிங் மற்றும் பலர்* என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை சுட்டிக்காட்டி மேல்முறையீட்டாளர் வணிக நிலத்தை வணிகத்திற்காக மேல்முறையீட்டாளர் வாங்கியதால் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986-ன் பிரிவு 2(1)(d)-யின் படி இவர் நுகர்வோர் வரையறையின் கீழ் வரவில்லை எனவும் மாவட்ட, மாநில நுகர்வோர் மன்றங்களின் தீர்ப்பை

ஒதுக்கி வைக்கவும் (set aside the order) உத்திரவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட இவர் மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), (d), 12, 21 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *U.T. Chandigarh Administration & Anr. v. Amarjeet Singh & Ors.,* (2009) 4 SCC 660. [Para 6]
2. *Laxmi Engineering Works v. PSG Industrial Institute,* (1995) 3 SCC 583. [Para 7]
3. *Madan Kumar Singh v. District Magistrate & Ors.,* (2009) 9 SCC 179. [Para 8]
4. *National Seeds Corporation Ltd. v. M.Madhusudan Reddy,* (2012) 2 SCC 506. [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நிலம் சிவில் வழக்கில் உள்ளபோது பதிலுரையாளர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி மேல்முறையீட்டாளரிடம் விற்பனை பத்திரத்தை பெற்று விற்பனையை உறுதி செய்திருக்க இயலாது என்பதைக் கண்டறிந்து 25% பாதுகாப்பு வைப்பு பணத்தை மொத்த விற்பனை தொகையிலிருந்து பிடித்துக்கொண்டது சட்டத்திற்கு புறம்பானது என முடிவு செய்தது.

மேலும், உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையும் *சண்டிகர் நிர்வாக* வழக்கினை எடுத்துக்காட்டி மாவட்ட, மாநில நுகர்வோர் மன்றங்களின் ஆணைகளை ஒதுக்கி வைத்தது தவறு எனவும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 2(1)(d)-யின்படி முறையீட்டாளர் நுகர்வோர் ஆவார் என்றும் மேல்முறையீட்டாளர் தன் சுய ஜீவனத்துக்காக இந்த நிலத்தை வாங்கினதால் இது வியாபார நோக்கல்ல எனவும் உறுதி செய்தது.

மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் *மதன் குமார் சிங் v. மாவட்ட நீதிபதி* மற்றும் *தேசிய விதை குழுமம் v. மதுசூதனரெட்டி* ஆகிய வழக்குகளில் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டியதிலிருந்து இவ்வழக்கில் வியாபார நோக்கத்தோடு மேல்முறையீட்டாளர் நிலத்தை வாங்கவில்லை என்றும், இது தன் சுய தேவைக்காகவே வாங்கினார் எனவும் நிர்ணயித்தது.

(ஆ) எனவே உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையம் வழங்கிய தீர்ப்பை ஒதுக்கிவைத்து மாநில ஆணையத்தால் உறுதி செய்யப்பட்ட மாவட்ட நீதிமன்றத்தின் ஆணையை

நிலைநிறுத்தியது. மேலும், பதிலுரையாளர்கள் தாம் பெற்ற பணத்தை ஆணையின் நகலை பெற்ற 6 வாரத்திற்குள் மாவட்ட மன்றத்தின் ஆணைப்படி முறையீட்டாளருக்கு அளிக்க உத்திரவிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2014(4) CPR 563 (SC).

***

### 4. பங்கா டேனியல் பாபு *(எதிர்)* திருவாளர்கள் ஸ்ரீ வாசுதேவா கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் பலர்

(Bunga Daniel Babu v. M/s. Sri Vasudeva Constructions & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:258/2013-ல் வழங்கப்பட்ட ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பங்கா டேனியல் பாபு - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

திருவாளர்கள் ஸ்ரீ வாசுதேவா கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:944/2016 அதில் (சிறப்பு விடுப்பு (சி) மனு எண்:1633/2015) மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 22.07.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான 1347 சதுர கஜ நிலத்தில் பலமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு 18.07.2004-ல் பதிலுரையாளருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்தார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தப்படி அடுக்குமாடி அலகுகளை கொண்ட வீட்டுதொகுதியை (Apartments) மேல்முறையீட்டாளரும் பதிலுரையாளரும் 40% மற்றும் 60% என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ள சம்மதம் அளித்திருந்தனர். இந்த கட்டிடத்தை நகராட்சியின் முன் அனுமதி பெற்ற 19 மாத காலத்திற்குள் கட்டிமுடிக்க வேண்டும். அப்படி முடிக்காத தருவாயில் பதிலுரையாளர் மாதம் ஒன்றுக்கு ஒரு அலகுக்கு (Flat) ரூ.2,000/-ம் வீதம் மேல்முறையீட்டாளருக்கு தரவேண்டும் என்றும் ஒப்புக் கொண்டனர். 29.04.2005-ல் கையெழுத்திட பின்னிணைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மேல்முறையீட்டாளர் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் முன்பு 18 அலகுகளில் (Flat) 14 அலகுகளை பதிலீட்டாளரிடம் வாங்குபவர்க்கு

பதிவு செய்து தரவேண்டும் என குறிக்கப்பட்டிருந்தது. கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி 18.05.2004-ல் வழங்கப்பட்டிருந்தது. 18.12.2005-க்குள் கட்டி முடிக்கப்படவில்லை. குடியிருப்பு சான்றிதழ்12 அலகு உரிமையாளருக்கு (Flats) 30.03.2009-அன்றுதான் வழங்கப்பட்டது. இதன் விளைவாக 3 வருடம், 3 மாதம் காலதாமதமாகியது. இது தவிர, அனுமதியளிக்கப்பட்ட திட்டவரைவிலிருந்து விலக்கல் (Deviation) அளித்து கட்டிடம் கட்டப்பட்டதாயும் சிலபகுதிகள் முடிவு பெறாமலும், வேறு சில குறைகளும் இருந்ததால் மேல்முறையீட்டாளர் அவற்றை சுட்டிக்காட்டி அவற்றின் மதிப்பாக ரூ.19,33,193/- ஈடுசெய்ய கோரினார். பதிலுரையாளர்கள் இந்த கோரிக்கைகளை ஏற்க மறுத்தனர். மாவட்ட மன்றம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டவிதிகள் பிரிவு 2(1)(d)(ii)-ன்படி இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது என்றும் புகார்தாரர் நுகர்வோர் என்ற வரையறையில் அடங்குவார் எனவும் கருதி சேவை குறைபாட்டில் ரூ.15,96,000/- வழங்க ஆணையிட்டது. காலதாமத கட்டுமான பணியினால் கொடுக்கவேண்டிய வாடகை மற்றும் இதர செலவினங்களுக்கும் சேர்த்து மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்க இது நிர்ணயிக்கப்பட்டது. பதிலுரையாளர் பதித்த மேல்முறையீட்டை ஏற்று மாநில ஆணையம் மேல்முறையீட்டாளர் "நுகர்வோர்" எனும் வரையறைக்குள் வரவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு ஏற்க தகுந்ததல்ல எனவும் தீர்ப்பளித்தது. தேசிய ஆணையமும் இந்த தீர்ப்பை ஏற்று மேல்முறையீட்டாளர் நுகர்வோர் வரையறையில் வரவில்லை என மாநில ஆணையத்தின் முடிவை அங்கீகரித்தது. மாநில, தேசிய ஆணையங்களின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் தன் முறையீட்டை தாக்கல் செய்தார். அவரது முறையீட்டு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. தேசிய, மாநில ஆணையங்களின் தீர்ப்பை ஒதுக்கி வைக்கவும் மேல்முறையீட்டாளர் நுகர்வோர்தான் என்ற அடிப்படையில் மீண்டும் விசாரித்து தீர்ப்பளிக்கவும் மாநில ஆணையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Faqir Chand Gulati v. Uppal Agencies Pvt. Ltd. and anr.,* (2008) 10 SCC 345. (Relied) [Para 1]
2. *Morgan Stanly Mutual Fund v. Kartick Das,* (1994) 4 SCC 225. (Referred) [Para 8]
3. *Lucknow Development Authority v. M.K. Gupta,* (1994) 1 SCC 243. (Referred) [Para 9]
4. *Laxmi Engineering Works v. P.S.G. Industrial Institute,* (1995) 3 SCC 583. (Relied) [Para 12]
5. *Kalpavruksha Charitable Trust v. Toshniwal Brothers (Bombay) Pvt. Ltd. and another,* (2000) 1 SCC 512. [Para 14]

6. *CIT v. Surat Art Silk Cloth Manufacturers' Association,* (1980) 2 SCC 31. [Para 14]

7. *CIT v. Federation of Indian Chambers of Commerce and Industries,* (1981) 3 SCC 156. [Para 14]

8. *Punjab University v. Unit Trust of India and others,* (2015) 2 SCC 669. [Para 19]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

கீழ்கண்டவற்றை இந்த நீதிமன்றம் பதிவு செய்தது.

(அ) மாவட்ட மன்றம் *ஃபகிர்சந்த் குலாட்டி* வழக்கின் முடிவை சார்ந்து தீர்ப்பு அளித்ததை நீதிமன்றம் பதிவு செய்தது. அவ்வழக்கில் நில உரிமையாளர் நுகர்வோர்தானா, கட்டுமான சேவை புரிபவரா என்ற வினா பரிசீலிக்கப்பட்டது. ஒரு உண்மையான கூட்டு ஒப்பந்தத்தில் (joint venture agreement) நில உரிமையாளரும் பதிவு பெற்ற கட்டுமானதாரரோ அல்லது பணமுதலீட்டாளரோ சேர்ந்து செயல்படும்போது, நில உரிமையாளர் உண்மையான கூட்டாளராக இருந்து கட்டுமான பணியிலும் நிர்வாகத்திலும் பங்கு பெறுவததோடு அல்லாமல் இந்த செயலில் ஏற்படும் இலாப நஷ்டங்களிலும் பங்கு கொள்கிறார். இந்நிலையில் நில உரிமையாளர் நுகர்வோராகவோ அல்லது கட்டுமானம் செய்பவர் சேவை புரிபவராகவோ இருக்க இயலாது. நில உரிமையாளர் முழுபொறுப்பையும் ஏற்று இந்த செயலில் பொறுப்புடையவராகிறார். ஆனால் நடைமுறையில் இம்மாதிரி கூட்டு சாதனையில் நில உரிமையாளர் இருப்பது மிகவும் கடினம். இவ்வழக்கில் இருப்பதுபோல் புதிய வீடுகள் விற்பனைக்கான அலப்பின ஒப்பந்தங்களாகும். இவ்வொப்பந்தகள் போலி தோற்றத்தை தருவதாகும் (pseudo).

(ஆ)மேலும், மேற்குறிப்பிட்ட *ஃபகிர்சந்த் குலாட்டி* வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது: முக்கியமாக, கருத்தில்கொள்ள வேண்டியது யாதெனில், நில உரிமையாளர் வீடுகட்டும் சேவையை அதற்குண்டான தொகையை (சேவைக்கு) கட்டிப் பெறும்போது கட்டுமான நிறுவனர் சேவையை அளிப்பதால், சேவையில் குறைபாடு நிகழும்போது நில உரிமையாளர் நுகர்வோராக செயல்படுவார். ஒத்துழைப்பு ஒப்பந்தப்படி (collaboration agreement) கட்டிடத்தை கட்டிக்கொடுக்கும் போதிலோ அல்லது ஒரு மாடியாகவோ அல்லது பல அடுக்குகளை கொண்டதாகவோ எப்படியிருந்தாலும் உரிமையாளரிடம் கொடுக்கும்போது ஒப்பந்தப்படி இவர் கிரையம் கொடுத்தே வாங்குகிறார்.

(இ நடப்பு வழக்கில், இவ்வொப்பந்தம் புரிந்துணர்வு ஒப்பந்தமாய் சட்டபூர்வமான ஆவணமாக இருந்தாலும் எங்கும் இது கூட்டுமுயற்சி என்பதை வெளிப்படுத்தவில்லை. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சாரங்களை படித்து பார்த்ததில் இந்த

மேல்முறையீட்டாளர் கூட்டாளராகவோ அல்லது சகாவாகவோ இல்லை. இவருக்கு கட்டுமான பணியில் எந்தவித அதிகாரமோ கிடையாது. இவருக்கு எவ்விதமாகவும் இந்த வியாபாரத்தில் பங்களிப்பு இல்லை. புரிந்துணர்வு ஒப்பந்தபடி இவருக்கு கட்டப்பட்ட இடத்தில் பங்குபெற உரிமையுண்டு. *ஃபகிர்சந்த் குலாட்டி* வழக்கின்படி எவ்வளவு இடத்திற்கு உரிமை என்பது முக்கியமல்ல. எனவே நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை நுகர்வோர் என உறுதி செய்தது.

(ஈ) இவ்வழக்கில், மேல்முறையீட்டாளர் கோரிக்கையை மாவட்ட மன்றம் ஏற்றது. ஆனால் மாநில ஆணையம் அதை தள்ளுபடி செய்தது, தேசிய ஆணையமும் இதை உறுதி செய்திருந்தது. உச்ச நீதிமன்றம், மாநில, தேசிய ஆணையங்களின் தீர்ப்பை ஒதுக்கி வைத்து மேல்முறையீட்டாளர் நுகர்வோர்தான் என்ற அடிப்படையில் வழக்கை மீண்டும் விசாரிக்குமாறு மாநில ஆணையத்திற்கு உத்தரவிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 3488; (2016) 8 SCC 429; III (2016) CPJ 1 (SC).

***

## 5. லூர்தஸ் சொஸைட்டி சிநேஹாஞ்சலி பெண்கள் விடுதி மற்றும் ஒருவர் *(எதிர்)* H&R ஜான்சன் இந்தியா லிமிடெட் மற்றும் பலர்

(Lourdes Society Snehanjali Girls Hostel & Anr. v. H&R Johnson (India) Ltd. & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:4047/2006-ல் 23.09.2013-அன்று வழங்கப்பட்ட ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

லூர்தஸ் சொஸைட்டி
சிநேஹாஞ்சலி பெண்கள் விடுதி மற்றும் ஒருவர் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

H&R ஜான்சன் இந்தியா லிமிடெட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7223/2016.

தீர்ப்பு தேதி : 02.08.2016.

### 4. வழக்கின் சுருக்கம் :

ஒரு தொண்டு அறக்கட்டளை நிறுவனமான மேல்முறையீட்டாளர் எண்:1, லூர்தஸ் சொஸைட்டி சிநேஹாஞ்சலி பெண்கள் விடுதியை, சூரத் நகரத்தில், ஆதிவாசி குழந்தைகளின் நலனுக்காக நடத்திவந்தார். 02.02.2000-அன்று முதலாம் பதிலுரையாளரின் உள்ளூர் முகவரான 5-வது பதிலுரையாளரிடம் ரூ.4,69,579/-க்கு பளபளப்பாக்கப்பட்ட, கண்ணாடி போன்ற டைல்ஸ்-ஐ வாங்கினார். விடுதி வளாகத்தில் இந்த டைல்ஸ் பதியபெற்றபின் இதில் கருப்பு வெள்ளை திட்டுகள் காலம் செல்ல செல்ல எழலாயின. மேல்முறையீட்டாளர், பதிலுரையாளர் 1-ஆம் நபரின் விற்பனை அதிகாரியான பதிலுரையாளர் 4-ஆம் நபருக்கு பலமுறை தரம் குறைந்த குறைபாடுகளுள்ள டைல்ஸ் கொடுக்கப்பட்டதை கடிதம் மூலம் தெரிவித்தார். ஆனால் அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேல்முறையீட்டாளர் J.M.விமவாலா எனும் கட்டிட கலைஞரை தரக்குறைவற்ற டைல்ஸ் கொடுக்கப்பட்டதால் ஏற்பட்ட நஷ்டத்தைக் கணக்கிட பணியமர்த்தியது. இவர் டைல்ஸின் விலை, கூலி, நகர சுங்கவரி மற்றும் போக்குவரத்துச் செலவு உட்பட ரூ,4,27,712.37 நஷ்டம் ஏற்பட்டுள்ளது என மதிப்பீடு செய்தார். சட்டபூர்வ அறிக்கையை மேல்முறையீட்டாளரான சொஸைட்டி பதிலுரையாளருக்கு அனுப்பியதில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. எனவே நுகர்வோரான மேல்முறையீட்டாளர், மாவட்ட மன்றத்தில் வழக்கை தொடுத்தார். மாவட்ட மன்றம், நீதிமன்ற ஆணையரை நியமித்தது. அவரது அறிக்கையில் உற்பத்தி குறைபாடு உள்ளதால் பதிலுரையாளர் அனைவருக்கும் பொறுப்புள்ளது என கூறியிருந்தார். இதனை அறிந்த மாவட்ட மன்றம் பதிலுரையாளர்கள் ரூ.2 இலட்சமும் மனுசெய்த நாளிலிருந்து பணம் திரும்பபெறும் நாள்வரை 9% வட்டியும் வழங்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தது. பதிலுரையாளர்கள் மாநில ஆணையத்தில் மேல்முறையீடு செய்து அது தவறியதால் தேசிய ஆணையத்தில் மறு சீராய்வு மனுவை சமர்ப்பித்தனர். மேல்முறையீட்டாளரான சொஸைட்டி ஒரு IA.No.1847 of 2013-ல் மறு சீராய்வு மனு எண்:4047/2006 ஒன்றை பிரிவு 14(1)(d), 14(1)(hb) நுகர்வோர் பாதுகாப்பு சட்டவிதிகளின்படி தாக்கல் செய்து மேலே கொடுக்கப்பட்ட தீர்ப்பில் நஷ்டஈட்டை உயர்த்தி தரும்படி கேட்டுக்கொண்டது. தேசிய ஆணையம் பிரிவு 2(1) (d)-யின்படி மேல்முறையீட்டாளர் சொஸைட்டி நுகர்வோர் என்ற வரையறைகுட்பட்டவர் என்பதை உறுதி செய்யவில்லை எனக் கூறி கீழ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை மாற்றி உத்தரவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், உச்ச நீதிமன்றத்தில் தன் மேல்முறையீட்டை சமர்ப்பித்தார். நீதிமன்றம் இதனை ஏற்றுக்கொண்டது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (d), 14(1)(d), 14(1)(hb) மற்றும் 23.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

1. *Kusumam Hotels (P) Ltd. v. Neycer India Ltd.,*
   (1993) 3 CPJ 333 (NC). (Distinguished)

2. *H&R Johnson (India) Ltd. & Ors. v. Lourdes Society Snehanjali Girls Hostel & Anr.*, 2013 SCC OnLine NCDRC 876. (Reversed)
3. *Lourdes Society Snehanjali Girls Hostel & Anr. v. H&R Johnson (India) Ltd.*, IA.No.1 of 2015 in SLP (C) No.36918 of 2013, order dated 01.04.2015 (SC). (Referred to)

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மாவட்ட மன்றமோ அல்லது மாநில ஆணையமோ அவர்களது வரம்பை / எல்லையை தவறவிட்டிருந்தாலோ அல்லது வரம்பை மீறி செயல்படுத்தி இருந்தாலோ அல்லது சட்டத்திற்கு புறம்பாகவோ அல்லது பொருள் சார்ந்து தவறுகள் செய்திருந்தாலோ அதை தேசிய ஆணையம் சரிசெய்யவேண்டும் என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது.

இந்த வழக்கில், தேசிய ஆணையம் தனது வரம்பை மீறியுள்ளதாகவும், மாவட்ட மன்றத்தின் ஆணையை நியாயமான, கோர்வையான காரணங்களுக்காக ஏற்ற மாநில ஆணையத்தின் ஆணையை தகுந்த காரணங்களின்றி ஒதுக்கி வைத்ததாகவும் (set aside) நீதிமன்றம் கருதியது.

(ஆ) தேசிய ஆணையம், இவ்வழக்கின் தீர்ப்பினை அளிக்கும்போது சில உண்மைகளை அதாவது பதிலுரையாளரின் பொறுப்பற்ற தன்மையை கருத்தில் கொள்ளவில்லை என நீதிமன்றம் கருதியது. பதிலுரையாளருக்கு பல கடிதங்கள் அனுப்பியும், பதிலுரையாளர் 1–ஆம் நபரை அமர்த்திய கட்டிட வல்லுநரின் நேர்பார்வையில் விடுதியில் பதித்த டைல்ஸ் பழுதடைந்தவை என்றும் தரக்குறைவான பொருளை கொடுத்துள்ளனர் என்றும் அவர் உறுதிபட எழுத்தின் மூலம் கூறிய பின்னும் பதிலுரையாளர் எந்தவித பொறுப்பினையும் ஏற்காது இருந்தார். கட்டிட கலைஞரும், உள் அழகுபடுத்தும் (interior designer) வல்லுநருமான J.M.விமவாலா மேல்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்ட டைல்ஸ் தரமற்றதும், பழுதடைந்ததுமாயிருந்தது என்றும், சேத மதிப்பு ரூ.4,72,712.37 என அறிவித்தும் பதிலுரையாமல் இருந்தார் என்பதை நீதிமன்றம் கண்டறிந்தது.

(இ) தேசிய ஆணையம், *குசுமம் ஓட்டல்ஸ் (பி) லிமிடெட்* வழக்கை இவ்வழக்கிற்கு சான்றாக வைத்து தவறான முடிவை எடுத்திருக்கிறது என நீதிமன்றம் கூறியது. உணவகம் என்பது வியாபார நோக்கோடு செயல்படுவதால் அது நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986, பிரிவு 2(1)(d)–க்கு பொருந்தாது. ஆனால், மேல்முறையீட்டாளரான சொஸைட்டி வியாபாரத்திற்கு செயல்படும் நிறுவனம் அல்ல. இது ஆதிவாசி மாணவர்கள் தங்கி படிப்பதற்கான சேவை விடுதி எந்தவித பயனையும் இலாபத்தையும் எதிர்பார்த்து செயல்படவில்லை. எனவே மேல்முறையீட்டாளரான இந்த சொஸைட்டி நுகர்வோர் பாதுகாப்பு சட்டவிதி 2(1)(d)–யின் கீழ் “நுகர்வோர்” எனும் அந்தஸ்தை பெறுகிறது. பதில் மனுதாரர் 1–ஆம் நபர் தன் முகவர் மூலம் தரகுறைவான டைல்ஸ் கொடுத்தது எனும் முடிவை தவறுதலாக தேசிய ஆணையம் புரிந்துகொண்டது என நீதிமன்றம் கூறியது.

(ஈ) எனவே மேல்முறையீட்டு மனுவை ஏற்று தேசிய ஆணையம் அளித்த தீர்ப்பை ஒதுக்கி வைத்து, மாவட்ட மன்றமும், மாநில ஆணையமும் அளித்த தீர்ப்பினை மீண்டும் ஏற்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மாவட்ட மன்றம் அளித்த தீர்ப்பின் தொகையுடன் 9% வட்டியுடன் சேர்த்து ஆறுவார காலத்திற்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்கவும் இவ்வழக்கிற்கான செலவிற்காக ரூ.50,000/- மேல்முறையீட்டாளரான சொஸைட்டிக்கு மனு பதிலீட்டாளர் வழங்கவேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2016) 8 SCC 286; AIR 2016 SC 3572;
III (2016) CPJ 27 (SC); 2016(3) CPR 333 (SC)

***

**6. பிரதீபா பிரதிஸ்தான் மற்றும் பலர்** *(எதிர்)* **மேலாளர் கனரா வங்கி மற்றும் பலர்**
(Pratibha Pratisthan & Ors. v. Manager, Canara Bank & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பிற்கும் உத்தரவிற்கும் எதிராக மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பிரதீபா பிரதிஸ்தான் மற்றும் பலர் - மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

மேலாளர் கனரா வங்கி மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3560 உடன் 3561/2008.

தீர்ப்பு தேதி : 07.03.2017.

**4. வழக்கின் சுருக்கம் :**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளரான அறக்கட்டளை தாக்கல் செய்த மனு ஏற்புடையதாகுமா எனும் வினாவினை நீதிமன்றம் எழுப்பியது. தேசிய ஆணையமானது இவ்வழக்கில் மேல்முறையீட்டை செய்த அறக்கட்டளை தனி நபர் அல்ல எனவும் நுகர்வோர் சட்டத்தில் நுகர்வோர் வரையறைக்குள் வரமாட்டார் எனவும் கூறியது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தை அணுகி இந்த சிவில் மேல்முறையீட்டை தாக்கல் செய்ததில், இவர் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(b) (c), (d), (m) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) முறையீடு, முறையீட்டாளர் மற்றும் நுகர்வோர் என்பதற்கான பொருளினை நோக்கும்போது ஒரு அறக்கட்டளைக்கு அவை பொருந்தாது எனவும் எந்தவிதமான வழக்கையும் இச்சட்டப்படி பதிவு செய்ய இயலாது எனவும் நீதிமன்றம் கூறியது. இதனை உறுதி செய்யும் வண்ணமாக "நபர்" என்பதின் பொருள் இலக்கணம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 2(m)–கீழ் தெளிவாக பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது என தெரிவித்தது.

**நபர் என்பது:**

(i) பதிவு செய்தோ, பதிவு செய்யாமலோ உள்ள நிறுவனம் (firm)

(ii) கூட்டு இந்து குடும்பம்

(iii) கூட்டுறவு சங்கம்

(iv) சங்கங்களின் பதிவு சட்டம் 1860, பிரிவு 21–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத ஒரு கூட்டமைப்பு.

மேலேழுந்தவாரியாக பார்த்தாலே ஒரு அறக்கட்டளை (Trust) என்பது நுகர்வோர் பாதுகாப்பு சட்ட பிரிவு 2(b) (c), (d), (m) இது எந்த ஒரு நபரையும் குறிக்கவில்லை. ஆகவே "அறக்கட்டளை" நுகர்வோர் ஆகமாட்டார் என்றும் தெளிவாகிறது.

(ஆ) எனவே இந்த மனுவை நுகர்வோர் குறைதீர் தலைப்பின் கீழ் நுகர்வோர் சட்டரீதிகளின் கீழ் கொண்டுவர இயலாது எனவும் நீதிமன்றம் கூறியது. எனவே தேசிய ஆணையத்தின் தீர்ப்பை ஏற்று நீதிமன்றம் மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2017 SC 1303; 2017(2) CPR 5 (SC).

***

# 6. சேவையில் குறைபாடு

## (a) விமான மார்க்கம்:

### 1. இண்டர் குளோப் அவியேஷன் லிமிடெட் *(எதிர்)* N. சச்சிதானந்த்

(Interglobe Aviation Ltd. v. N. Satchidanand)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

ஹைதராபாத் நகரிலுள்ள ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் W.P.எண்:27754/2009-ல் 31.12.2009 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

இண்டர் குளோப் அவியேஷன் லிமிடெட் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

N. சச்சிதானந்த் - பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4925/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:21108/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 04.07.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

14.12.2007 அன்று காலை 6.15-க்கு தில்லியிலிருந்து ஹைதராபாத் செல்ல வேண்டிய இண்டிகோ விமானம் எண்:6E-301 பயணம் செய்ய பதில் அளிப்பவரும் மேலும் 8 நபர்களும் பதிவு செய்திருந்தனர். தில்லி விமான நிலையத்தில் கடுமையான பனி மூட்டம், மோசமான வானிலை மற்றும் தெளிவான பார்வையின்மை காரணமாக விமானம் கிளம்பிச் செல்வதில் மிகவும் தாமதம் ஏற்பட்டது. அவ்வாறே பல விமானங்களும் குறித்த நேரத்தில் கிளம்ப முடியவில்லை. பிற்பகல் 4.20-க்குதான் விமானம் கிளம்புவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது. விமானம் பிற்பகல் 4.37-க்கு புறப்பட்டு மாலை 7 மணிக்கு ஹைதராபாத் சென்றடைந்தது. விமானம் ஹைதராபாத் விமான நிலையத்தை அடைந்த பின்னரும் பதில் அளிப்பவரும் வேறு சில பயணிகளும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக விமான நிலையத்திலேயே தங்க வைக்கப்பட்டனர். விமானம் கிளம்ப காலதாமதம் ஏற்பட்டபோது அவர்கள் விமானப் பணிப் பெண்களை மிரட்டியதாகவும் முறையில்லாமல் நடந்து கொண்டதாகவும் விமானத்தில் இருந்த பணியாளர்கள் சிலர் புகார் செய்ததால் அது சம்பந்தமாக விசாரணைக்காக அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். பொதுமக்கள் பயன்பாட்டு சேவைகளுக்கான நிரந்தர லோக் அதாலத் (Permanent Lok Adalat for Public Utility Services) முன்பு பதில் அளிப்பவர் பின்வரும்

காரணங்களை சுட்டிக்காட்டி புகார் செய்ததோடு தமக்கு நேர்ந்த உடல் அசௌகரியம், மன உளைச்சல், சிரமம் ஆகியவற்றிற்கு ஈடாக ரூபாய் ஐந்து இலட்சம் இழப்பீடும் கோரினார்: (a) விமானத்திற்குள்ளேயே காலை 5.45 முதல் பிற்பகல் 4.37 வரை சுமார் 11 மணி நேரம் உட்கார வைத்ததால் கால்கள் செயலிழக்கும் தன்மை ஏற்பட்டது; (b) 11 மணி நேரம் விமானத்திற்குள் இருந்தாலும் காலை சிற்றுண்டி, பகல் உணவு மற்றும் தேநீர் ஆகியவை வழங்கப்படவில்லை; (c) பதில் அளிப்பவர் சர்க்கரை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவராயிருந்தும் அவருக்குத் தேவையான மருத்துவ வசதிகள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை; (d) விமானத்தில் பணி புரிவோர் அளித்த பொய்யான புகாரின் காரணமாக மாலை 7 மணியிலிருந்து 8.30 மணிவரை தங்க வைத்தது; (e) 14.12.2007 அன்று நீதிமன்றம் செல்ல முடியாமல் செய்ததோடு 15.12.2007 அன்று மன உளைச்சல் காரணமாக தனது பிறந்த நாளைக் கொண்டாட முடியாமல் போனதற்குக் காரணமாக இருந்தது. நிரந்தர லோக் அதாலத்துக்கு இந்த வழக்கை விசாரிக்கும் எல்லை அதிகாரம் இல்லை என மேல்முறையீட்டாளர் வாதிட்டார். இருப்பினும் அதாலத் மேல்முறையீட்டாளர் மெத்தனமாக இருந்தார் எனவும் அன்னாரது சேவையில் குறைபாடு இருந்தது எனவும் முடிவு செய்து பதிலளிப்பவருக்கு ரூபாய் பத்தாயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு வழக்காடும் செலவாக வழங்க வேண்டும் என்றும் மேல்முறையீட்டாளருக்கு ஆணையிட்டது. இதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு பதிவு செய்தார். அவரது மனு கலம் 1–ல் குறிப்பிடப்பட்ட ஆணையின் படி நிராகரிக்கப்பட்டது. அதை எதிர்த்து இந்த மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o), 11, 14, 17 மற்றும் 23; ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லுதல் சட்டம் 1972 பிரிவு 4 மற்றும் அட்டவனை II விதி 19 (Carriage by Air Act, 1972); வழக்கு சேவைகள் பற்றிய அதிகாரமுடையோர் சட்டம், 1987 பிரிவு 19 மற்றும் 22-B(1) (Legal Services Authorities Act, 1987); உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–ன் பிரிவுகள் 19 மற்றம் 20 (Civil Procedure Code, 1908).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *LIC v. Suresh Kumar*, (2011) 7 SCC 491.
2. *Ravneet Singh Bagga v. KLM Royal Dutch Airlines*, (2000) 1 SCC 66.
3. *A.B.C. Laminart (P) Ltd. v. A.P. Agencies*, (1989) 2 SCC 163.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) நீதிமன்றத்தில் பின்வரும் வினாக்கள் எழுப்பப்பட்டன:

1. ஹைதராபாத்தில் உள்ள நிரந்தர லோக் அதாலத்துக்கு எல்லையின் அடிப்படையில் விசாரிக்கும் உரிமை உள்ளதா?

2. பயணிகள் அனைவரும் விமானத்தில் ஏறிய பிறகு மோசமான வானிலை காரணமாக ஒரு விமானத்தில் பயணம் தாமதப்படும் போது, பயணிகள் சௌகரியத்திற்கு விமான சேவை செய்பவர்கள், குறிப்பாக குறைந்த செலவில் செய்பவர்கள், செய்து கொடுக்க வேண்டிய குறைந்த பட்ச வசதிகள் என்னென்ன?

3. தவிர்க்க முடியாத காரணங்களால் விமானம் தாமதப்படும் போது, குறித்த நேரத்தில் மதிய உணவு / இரவு நேர உணவு வழங்காமை அல்லது பயணிகளை விமான நிலையத்திற்கு உள்ளே உள்ள அமருமிடத்திற்கு அழைத்து செல்லாதது ஆகியவை அக்கறையின்மையையோ, சேவை குறைபாட்டையோ குறிக்குமா?

4. அதாலத் வழங்கிய ரூ.10,000/- இழப்பீட்டு ஆணையை மாற்றியமைக்க காரணங்கள் உள்ளனவா?

(ஆ) முதல் வினாவைப் பொறுத்த வரை இண்டிகோ விமானப் பயண நிபந்தனைகளில் ஒன்றான அனைத்து புகார்கள்/சச்சரவுகள் தில்லியில் உள்ள நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குட்பட்டவை என்ற கூற்று ஏற்கத் தக்கதல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதிகாரமுள்ள நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இல்லை என்றோ அதிகாரமற்ற நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்றோ சொல்லுகின்ற எந்த ஷரத்தும் ஏற்கத் தக்கதல்ல என்றும் நீதிமன்றம் கூறியது. மேலும் நிரந்தர லோக் அதாலத் ‘நீதிமன்றம்’ என்ற வரையறைக்குள் அடங்காததால் ஒப்பந்தப்படி தில்லியிலுள்ள நீதிமன்றங்களுக்குத்தான் புகார்களை விசாரிக்கும் உரிமை உள்ளது என்ற கூற்று அதற்குப் பொருந்தாது. மேலும் விமானப் பயணச்சீட்டு ஹைதராபாத்தில் வாங்கியதாலும் விமானப் பயணத்திற்கான ஒப்பந்தம் ஹைதராபாத்தில் மேற்கொள்ளப்பட்டதாலும், நிரந்தர லோக் அதாலத் உட்பட ஹைதராபாத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும், தீர்ப்பாயங்களுக்கும் மேல் முறையீட்டாளருக்கு எதிரான புகாரை விசாரிக்கும் அதிகாரம் உண்டு என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(இ) இரண்டாவது வினாவைப் பொறுத்த வரை, குறைந்த செலவில் நடத்தப்படுகின்ற சேவை என்ற காரணத்துக்காக பயணிகளின் நலன், பாதுகாப்பு மற்றும் விமானத்தின் பராமரிப்பு ஆகியவற்றில் குறைபாடு இருக்கலாம் என்று எடுத்துக் கொள்ள முடியாது என்றும் சிவில் விமான போக்குவரத்துத் தலைமை இயக்குநர் அறிவித்துள்ள தரம் மற்றும் சேவையில் எதையும் குறைக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் கூறியது. குறைந்த செலவில் நடத்தப்படும் விமானம் என்ற காரணத்துக்காக கவனமின்மையோ, சேவை குறைபாடோ ஏற்கத் தக்கதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. அதே நேரத்தில் பயணிகளுக்கு எம்மாதிரி உணவு தேவை என்ற விவரம் தெரியாத நிலையில் அவர்களுக்கு பிடித்த

உணவு வகைகளை வழங்கவில்லை என்பதால் அவர்களுக்கு உணவு தராமல் புறக்கணிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. பதில் அளிப்பவர் தனக்கு மருத்துவ வசதி வேண்டுமென்றோ குறிப்பிட்ட மருந்துகள் தேவை என்றோ கூறியதற்கான ஆதாரம் ஏதும் இல்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. மேலும் அவர் முன்கூட்டியே விமான சேவை நடத்துபவர்களுக்கு தனது நோய் பற்றியோ தேவை பற்றியோ எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. ஆகவே பதில் அளிப்பவர் எந்த விசேஷ கவனமும் எதிர் பார்க்க முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

(ஈ) மூன்றாவது வினாவைப் பொறுத்த வரை, முழு சேவையையும் தரும் விமானங்களில் இலவச உணவு மற்றும் பான வகைகள் அளிக்கப்பட்டாலும், குறைந்த செலவில் நடத்தப்படுகின்ற விமான பயணங்களில் குடிநீரைத் தவிர இலவச உணவோ, பானங்களோ எதிர்பார்க்க முடியாது என்று நீதிமன்றம் கூறியது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பயணத்தில் வழங்கப்பட்ட வசதிகள் நியாயமானவையே என்றும் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரின் (DGCA) அப்போதைய நெறிமுறைகளின்படி சரியானதாகவே இருந்தது என்றும் நீதிமன்றம் கூறியது. பயணிகளின் உணவு மற்றும் அவசரத் தேவைகள் பற்றி முன்கூட்டியே தகவல் ஏதும் இல்லாதபோது, இரண்டாவது சுற்று இலவச சிற்றுண்டியில் வெஜிடேரியன் சாண்ட்விச் அளிக்காதது குறைந்த அளவு உபசாரத்திற்கும் முரணான செயல்பாடு அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(உ) நிரந்தர லோக் அதாலத்தோ, உயர் நீதிமன்றமோ, பதில் மனுதாரர் தவறான முறையிலோ தொந்தரவு செய்யும் வகையிலோ ஹைதராபாத் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டார் என்ற முடிவுக்கு வராத நிலையில் பதில் மனுதாரருக்கு எவ்விதமான இழப்பீடும் வழங்க இயலாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. விமான நிலையத்தினரோ விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகளோ (ATC authorities) இந்த வழக்கில் சேர்க்கப்படாததால், விமானப் பயணம் தாமதமான போது பயணிகளை விமான நிலைய அமருமிடத்தில் அழைத்துச் செல்லாததையும் குற்றம் என்று சொல்ல முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. மோசமான வானிலை மற்றும் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையிடமிருந்து ஒப்புதல் வராமை ஆகிய எதிர்பாரா காரணங்களால் தாமதம் ஏற்பட்டதால், விமான சேவையில் குறைபாடோ அலட்சியமோ இருந்ததாகவும் கருத முடியாது. ஆகவே உயர் நீதிமன்றம் இழப்பீடு வழங்குவதை நியாயப்படுத்த கூறிய காரணங்கள் பொருண்மை அடிப்படையிலோ சட்டக் கூறுகளின் அடிப்படையிலோ ஏற்கத் தக்கதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஊ) மேல்முறையீடு ஏற்கப்பட்டது. பதில் மனுதாரருக்கு இழப்பீடும், வழக்காடும் செலவும் வழங்கி நிரந்தர லோக் அதாலத்தின் ஆணை (உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட

ஆணை) ஒதுக்கி வைக்கப்பட்டது. இழப்பீடு கோரி பதில் மனுதாரர் செய்த விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 7 SCC 463.

***

## (b) வீட்டு மனைகள் / குடியிருப்பு மனைகள் / மனை / பெட்டிக்கடை / தொழில் மனைகள்

### 1. கர்நாடகா தொழிற் பகுதிகள் வளர்ச்சி வாரியம் மற்றும் ஒருவர் *(எதிர்)* பிரகாஷ் பருப்பு அரவை ஆலை மற்றும் பலர்

(Karnataka Industrial Areas Development Board & Anr. v. Prakash Dal Mill & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

கர்நாடகா உயர் நீதிமன்றம், பெங்களூரு, 18.02.2003 அன்று WAs Nos.2183-221 மற்றும் 1492/2000-ல் அளித்த தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கர்நாடகா தொழிற் பகுதிகள் வளர்ச்சி வாரியம் மற்றும் ஒருவர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

பிரகாஷ் பருப்பு அரவை ஆலை மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:5406-45/2005.

தீர்ப்பு தேதி : 06.04.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் வாரியம் 1983-ல் தரிஹால் கிராமத்தில் மேம்படுத்திய தொழிற்பகுதியில் ஒரு மனை ஒதுக்குமாறு பதில் மனுதாரர்கள் கோரியிருந்தனர். மனை ஒதுக்கீடு செய்து அதற்கான நிபந்தனைகள் உள்ளடக்கிய கடிதங்கள் பதில் மனுதாரருக்கு அனுப்பப்பட்டன. பதில் மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளின்படி ஒதுக்கீட்டிற்கான மதிப்பில் 99 சதவிகிதம் உடனடியாகவும் மீதிமுள்ள ஒரு சதவிகிதம் பத்து ஆண்டுகளில் சமதவணைகளிலும் குத்தகை தொகையோடும் 12.5 சதவிகிதம் வட்டியோடும் செலுத்தப்படவேண்டும். இதற்கான குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தம் பதில்மனுதாரர்களுடன் கையொப்பமிடப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் 11 ஆண்டுகள் கழிந்தபிறகும் விற்பனை பத்திரத்தை பதில்

மனுதாரர்களுக்கு அளிக்கவில்லை என்பது பதில் மனுதாரர்களின் வாதம். முறையீட்டாளர்கள் குத்தகை காலம் முடிந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு பதில் மனுதாரர்களுக்கு இறுதி ஒதுக்கீடு விலை குறித்து மேல்முறையீட்டாளர்கள் கடிதம் அனுப்பினார்கள். இது நில ஆர்ஜித விலைக்குமேல் சற்று கூடுதலாக இருக்கும் என்று மேல்முறையீட்டாளர்கள் அளித்திருந்த உறுதிக்கு முற்றிலும் புறம்பானதாகவும் மாறுபட்டதாகவும், நியாயமற்றதாகவும், தன்னிச்சையாக முடிவு செய்யப்பட்டதாகவும் இருந்ததென்று பதில் மனுதாரர்கள் கருதினார்கள். அவர்களது ஆட்சேபனையை கருத்தில் கொண்டு முதல் மேல்முறையீட்டாளர் இறுதி ஒதுக்கீட்டு தொகையை சற்றே குறைத்து நிர்ணயித்தார்கள். இருப்பினும் இது அதிகமானதாகவே பதில் மனுதாரர்களால் கருதப்பட்டது. அவர்கள் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர் அதிக விலை நிர்ணயித்து அனுப்பிய கடிதத்தை செல்லுபடியாகாது என்று உத்தரவிடுமாறு ரிட் மனுக்களை (writ in the nature of certiorari) தாக்கல் செய்தார்கள். உயர் நீதிமன்றம் ரிட் மனுக்களை தள்ளுபடி செய்தது. ரிட் மேல்முறையீட்டு மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதிகள் கலம் 1-ல் கண்ட 18.02.2003 தேதியிட்ட உத்தரவில் அதை ஏற்று மேல்முறையீட்டாளர் விலையை உயர்த்திய கடிதம் செல்லுபடியாகாது என்று தீர்ப்பளித்தார்கள். இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் சிறப்பு விடுப்பு மனு மூலமாக இந்த மேல்முறையீட்டை செய்துள்ளார்கள். மேல்முறையீட்டு மனுக்கள் தகுதியற்றவை என தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுகள் 12 மற்றும் 14; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o); கர்நாடகா தொழிற்பகுதி மேம்பாட்டுச் சட்டம், 1966 (18/1966) பிரிவுகள் 13, 14 மற்றும் 41; கர்நாடகா தொழில் மேம்பாட்டு பகுதி வாரிய நடைமுறைகள், 1969, நடைமுறைகள் 7 மற்றும் 10.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Meerut Development Authority v. Association of Management Studies,* (2009) 6 SCC 171 : (2009) 2 SCC (Civ) 803.
2. *Kanpur Development Authority v. Sheela Devi,* (2003) 12 SCC 497.
3. *Centre for Public Interest Litigation v. Union of India,* (2000) 8 SCC 606.
4. *Indoor Development Authority v. Sadhana Agarwal,* (1995) 3 SCC 1.
5. *Premji Bhai Parmar v. DDA,* (1980) 2 SCC 129.
6. *East India Tobacco Co. v. State of A.P.,* AIR 1962 SC 1733.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) ஒப்பந்தத்தின் ஷரத்து 7(b) படி சம்பந்தப்பட்ட மனைக்கான இறுதி விலையை நிர்ணயிக்கும் உரிமை வாரியத்திற்கு உண்டு என்றாலும் அது குத்தகைதாரரை

கட்டுப்படுத்தும் என்றாலும் மேற்சொன்ன ஷரத்தை காரணம் காட்டி வாரியம் தன்னிச்சையாகவும், நியாயமற்ற முறையிலும் இறுதி விலையை நிர்ணயிக்க முடியாது என நீதிமன்றம் கருதியது. ஷரத்து 7-ன்படி விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் சட்டப்படி அளிக்கப்பட்டதால், சட்ட விதிகளுக்கு உட்பட்டே அந்த அதிகாரத்தை பயன்படுத்தவேண்டும்.

(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 12-ன்படி வாரியம் 'மாநிலம்' என்ற வரையறைக்குள் வருவதால் நியாயமாகவும், நேர்மையாகவும் செயல்படவேண்டும். தன்னிச்சையாகவோ, தான்தோன்றித்தனமாகவோ செயல்படக்கூடாது. உயர் நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14-ன் அடிப்படையில் இந்த பிரச்சனையை பரிசீலித்தது. வாரியத்தால் விலை நிர்ணயம் செய்யப்பட்ட முறை அரசியலமைப்புச் சட்ட பிரிவு 14-க்கு புறம்பானது என்றும் உயர் நீதிமன்றம் கருதியது. ஷரத்து 7(b) படி விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் வாரியத்திற்கு இருந்தாலும் அதை நியாயமாகவும் நேர்மையாகவும் செய்யவில்லையென்றால் அது குத்தகைதாரரை கட்டுப்படுத்தாது என்று உயர் நீதிமன்றம் சரியாகவே முடிவெடுத்தது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. அம்மாதிரி நேரங்களில் அத்தகைய முடிவுகளை ரத்து செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என்றும் கருதியது.

(இ) ஷரத்து 7(b)-ஐ படித்து பார்க்கும்போது அது இறுதி விலை எத்தகைய கூறுகளை கொண்டிருக்கவேண்டும் என்று ஏதும் நிர்ணயம் செய்யவில்லை. மேலும் ஷரத்து 7(b) ஆனது மனை ஒதுக்கீடு செய்யும் நேரத்தில் நிர்ணயிக்கின்ற தாற்காலிக விலையை மறு நிர்ணயம் செய்வதற்கோ அல்லது மாற்றுவதற்கோ வாரியத்திற்கு எந்த உரிமையையும் அளிக்கவில்லை. மேலும் ஷரத்து 7(b) வாரியம் தன்னிச்சையாக இறுதி விலையை நிர்ணயம் செய்யாதபடி எந்தவிதமான வரைமுறைகளையும் கொண்டிருக்கவில்லை என்று உயர் நீதிமன்றம் சரியாகவே கருதியது. ஷரத்து 7(b), சட்டப்படி செல்லுபடியாகுமா என்பது ஒரு பிரச்சனையாக இல்லாத நிலையில் உயர் நீதிமன்றம் இதுபற்றி கருத்து ஏதும் கூறாமல் இருந்ததும் சரியானதுதான் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஈ) ஒப்பந்தத்தின் ஷரத்துகள் இறுதி விலையை நிர்ணயிக்கும் உரிமையை வாரியத்திற்கு அளித்திருந்தபோதிலும் அந்த உரிமை நியாயமாகவும் பகுத்தறியும் தன்மை உடையதாகவும் இருக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மனை ஒதுக்கீட்டிற்கு பிறகு அந்த இடத்தில் செலவுகள் மேற்கொண்டிருந்தால் அதை கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமை வாரியத்திற்கு உண்டு. ஆனால் அதை சாக்காக கொண்டு மற்ற இடங்களில் செலவழித்தத் தொகையை இறுதி விலையை நிர்ணயம் செய்யும் நேரத்தில் மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் மீது சுமத்துவதை அனுமதிக்க முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(உ) மேலும் மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் அனைவரும் ஒரே வகுப்பு அல்லது பிரிவை சார்ந்தவர்களாக கருதமுடியாது என்றும் நீதிமன்றம் கூறியது. மேம்படுத்தப்பட்ட பகுதிகளில் மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களை மேம்படுத்தப்படாத பகுதிகளில் மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களோடு சேர்க்க முடியாது என்றும் அவ்வாறு சேர்ப்பது அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14-க்கு எதிரானது என்றும் நீதிமன்றம் கூறியது.

(ஊ) ஷரத்து 7(b)-யின் கீழ் இறுதி விலையை நிர்ணயிக்கும் உரிமையை மனை ஒதுக்கீடு செய்த பிறகு காலவரையறை ஏதுமின்றி வாரியம் பயன்படுத்த முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. அம்மாதிரி செய்தால் ஷரத்து 7(b)-யில் உள்ள 'கூடிய விரைவில் (as soon as)' என்ற பதத்திற்கு அர்த்தமில்லாமல் போகும். இந்த வழக்கில் வாரியம் 13 ஆண்டுகள் இடைவெளிக்குப்பிறகு இறுதி விலையை நிர்ணயம் செய்ய முனைந்திருக்கிறது என்றும் அம்மாதிரி செய்வதை ஷரத்து 7(b)-ல் 'கூடிய விரைவில் (as soon as)' என்ற பதத்தின் காரணமாக அனுமதிக்க முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஆகவே வாரியம் இறுதி விலை நிர்ணயம் செய்தது சட்டப்படி செல்லுபடியாகாது என்ற முடிவுக்கு உயர் நீதிமன்றம் வந்தது சரியானதே என்று உச்ச நீதிமன்றம் கூறியது. வாரியம் தன்னிச்சையாகவும் நியாயமற்ற முறையிலும் செயல்பட்டதால் அது அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14-க்கு புறம்பாக செயல்பட்டது என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(எ) மேல்முறையீடுகளை அனுமதிப்பதற்கான காரணங்கள் ஏதுமில்லை என்று உச்ச நீதிமன்றம் அவற்றை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 6 SCC 714.

***

**2. அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம்** *(எதிர்)* **சுசீலா தேவி சர்மா**

(Haryana Urban Development Authority v. Shushila Devi Sharma)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:2725/2011-ல் 07.09.2010 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

சுசீலா தேவி சர்மா - பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

மேல்முறையீட்டுக்கான சிறப்பு விடுப்பு மனு எண்:(சி)..../2011 (CC 14018 of 2011 உடன் IA No.1).

தீர்ப்பு தேதி : 02.09.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

மனுதாரர் 1987-ல் நடத்திய ஏலத்தில் பங்கு கொண்ட ஸ்ரீ ராம் பால் அகர்வால் என்பவருக்கு அவர் செலுத்த முன்வந்த தொகையின் அடிப்படையில் 75.62 சதுர கஜம் பரப்புள்ள ஒரு மனை ஒதுக்கப்பட்டது. மனையின் மதிப்பு ரூ.3,27,500/-. மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர் இத்தொகையில் 10 சதவீதத்தை மனுதாரருக்கு செலுத்தினார். ஒரு ஆண்டுகாலம் கழித்து ஸ்ரீ ராம் பால் அகர்வால் அந்த மனையை பதிலளிப்பவருக்கு (சுசீலா தேவி சர்மா) விற்றார். பதில் அளிப்பவர் பெயரில் 28.12.1988 அன்று மனை ஒதுக்கீட்டு கடிதம் அளிக்கப்பட்டது. அடுத்த 11 ஆண்டுகளில் மனுதாரர் மனை மேம்பாட்டிற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மனையை ஒப்படைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே பதில் அளிப்பவர் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 பிரிவு 12-ன் கீழ் மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகார் கொடுத்தார். புகாரை ஏற்ற மாவட்ட மன்றம் பதிலளிப்பவருக்கு ரூ.55,379/- திருப்பித்தரவும், கட்டுமான செலவில் ஏற்பட்ட விலையேற்றத்தின் காரணமாக ரூ.1,13,190/- இழப்பீடு வழங்குமாறும் மேலும் மன உளைச்சலை ஏற்படுத்தியதற்காக ரூ.10,000/- இழப்பீடு வழங்குமாறும் மனுதாரருக்கு உத்தரவிட்டது. மாவட்ட மன்றத்தின் ஆணையை உறுதி செய்து மாநில ஆணையம் உத்தரவு பிறப்பித்தது. இந்த ஆணையை எதிர்த்து தேசிய ஆணையத்தில் மனுதாரர் மேல்முறையீடு செய்தார். அத்தோடு 130 நாள் காலதாமதத்தை பொறுத்தருளுமாறும் மனு செய்தார். காலதாமதத்தை தேசிய ஆணையம் ஏற்க மறுத்ததோடு மாநில ஆணையம் கூறியபடி இவ்வழக்கில் சேவை குறைபாடு இருந்ததாகவும் ஆகவே புகார் அளித்தவருக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட மனுதாரர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய சிறப்பு விடுப்பு மனுவை தாக்கல் செய்தார். சிறப்பு விடுப்பு மனு நிராகரிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

மூன்று நுகர்வோர் மன்றங்களும் பிறப்பித்த ஆணைகளில் சட்டரீதியாக எந்தவித குறைபாடும் இல்லை என்றும் ஆகவே இவற்றில் தலையீடு செய்வதற்கான முகாந்திரம் ஏதும்

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 136-ன் கீழ் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. ஆகவே சிறப்பு விடுப்பு மனுவை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 3 (SC).

***

**3. அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம்** *(எதிர்)* **விரேஷ் சங்வான் மற்றும் ஒருவர்**

(Haryana Urban Development Authority v. Viresh Sangwan & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:2664/2010-ல் 23.08.2010 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

விரேஷ் சங்வான் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:9691/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:33789/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது) .

தீர்ப்பு தேதி : 08.11.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் 23.01.1986 தேதியிட்ட கடிதத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பகுதி 12A (Sector 12A)-வில் 335.50 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பிளாட் எண்:478-ல் உள்ள மனையை ஸ்ரீ சம்பத் ஜெயின் (Shri Champat Jain) என்பவருக்கு ஒதுக்கீடு செய்தார். குழுமத்தின் இள நிலை பொறியாளர் 27.02.1998 அன்று மனையை திரு.சம்பத் ஜெயின் அவர்களுக்கு ஒப்படைத்தார். மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர் அதை ஏற்றுக் கொண்டு மனை ஒப்படைப்பு சான்றிதழில் கையெழுத்திட்டார். சில நாட்களுக்குப் பிறகு திரு.சம்பத் ஜெயின் தேவேந்திர யாதவ் மற்றும் நரேந்திர யாதவ் ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட நிலத்தை விற்றார். அவர்களது பெயரில் ஒதுக்கீடு கடிதம் 17.11.1999-ல் அனுப்பப்பட்டது. அதற்குப்பிறகு ஆறு வருடங்கள் மற்றும் இரண்டு மாதங்கள் கழித்து அதாவது 18.01.2006 அன்று விதிமுறை எண்:20-ன்கீழ் மேல்முறையீட்டாளர் மற்றும் நிலம் மாற்றப்பட்டவர்களிடையே ஒதுக்கீடு பத்திரம் (conveyance deed) பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது. இது நடந்த ஒருவார காலத்திற்குள்

நிலம் மாற்றப்பட்டவர்கள் மேற்கண்ட நிலத்தை பதிவு செய்யப்பட்ட, 24.01.2006 தேதியிட்ட விற்பனை பத்திரத்தின்படி, பதில் அளிப்பவர்களுக்கு விற்பனை செய்தார்கள். மறு ஒதுக்கீடு கடிதமும் 03.03.2006 அன்று அவர்களது பெயரில் அனுப்பப்பட்டது. விற்பனை பத்திரம் பதிவு செய்யப்பட்டபோது நிலத்தின் பரப்பளவு பற்றியோ அல்லது அந்த நிலத்தில் கிராமத்தில் உள்ள சிலரது ஆக்கிரமிப்பு பற்றியோ எந்தவித புகாரும் இல்லை. இருப்பினும் ஓராண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 12–ன்கீழ் மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் சேவையில் குறைபாடு என்று புகார் கொடுத்தனர். மாற்று மனையை ஒதுக்கீடு செய்ய மேல்முறையீட்டாளருக்கு ஆணையிடுமாறும் கேட்டுக்கொண்டனர். மொத்த பரப்பளவு 335.50 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தது என்றும் நிலத்தில் ஆக்கிரமிப்பு இருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இளநிலை பொறியாளர் தயாரித்ததாக சொல்லப்பட்ட அறிக்கையையும் அவர்கள் காண்பித்தனர். அந்த அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட நுகர்வோர் மன்றம் புகாரை ஏற்று பதில் அளிப்பவர்களுக்கு அதே அளவுள்ள மாற்று நிலத்தை அதே பகுதியிலோ அல்லது அருகிலுள்ள பகுதியிலோ ஒதுக்கீடு செய்யுமாறு ஆணையிட்டது. மேல்முறையீட்டாளர் அந்த ஆணையை எதிர்த்து மாநில ஆணையத்தில் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. தேசிய ஆணையமும் மேல்முறையீட்டாளருடைய சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மேல்முறையீட்டை தாக்கல் செய்தார். மேல்முறையீடு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o), மற்றும் 23; அரியானா நகர்ப்புற மேம்பாடு (மனை மற்றும் கட்டிடங்கள் பாராதீனம் செய்தல்) விதிமுறைகள் 1978, விதிமுறை எண்:53.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) சேவையில் குறைபாடு இருந்ததாக மாவட்ட மன்றம் எடுத்த முடிவு தவறானது என்றும் பதில் அளிப்பவர்களுக்கு மாற்று மனையை ஒதுக்கீடு செய்ய மாவட்ட மன்றம் அளித்த ஆணையை, மாநில ஆணையமும், தேசிய ஆணையமும் உறுதி செய்தது பெரிய தவறு என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.சம்பத் ஜெயினுக்கு நிலத்தை 27.02.1998–ல் ஒப்படைத்தபோது அந்த நிலத்தில் எந்தவிதமான வில்லங்கமும் இல்லை என்பதை துரதிருஷ்டவசமாக நுகர்வோர் மன்றங்கள் கவனிக்க தவறிவிட்டன என்றும் அரியானா நகர்ப்புற மேம்பாட்டு குழுமம் சட்டம் 1977 மற்றும் விதிகளின்படி நிலம் மாற்றப்பட்டவர்களுக்கு நிலத்தை ஒப்படைப்பு செய்வதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் நீதிமன்றம் கூறியது. திரு.சம்பத் ஜெயின் நிலத்தை

பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கமால் இருந்திருக்கலாம் என்றும் அவர் அந்த இடத்தில் இல்லாததால் அந்த வாய்ப்பை பயன்படுத்தி அருகில் உள்ளோர் அதில் ஆக்கிரமிப்பு மேற்கொண்டிருக்கலாம் என்றும் நீதிமன்றம் கருதியது. ஆகவே ஆக்கிரமிப்புக்கு மேல்முறையீட்டாளரை குறை சொல்ல முடியாது என்றும் நீதிமன்றம் கூறியது. ஆக்கிரமிப்பு ஏதும் இருந்தாலோ அல்லது நிலத்தின் பரப்பளவு, ஒதுக்கீடு/மறு ஒதுக்கீடு ஆணையில் குறிப்பிட்ட அளவைவிட குறைவாக இருந்தாலோ பதில் மனுதாரர்கள் உடனடியாக நிலத்தை விற்றவர்களிடம் முறையிட்டிருப்பார்கள். இளநிலை பொறியாளர் தயாரித்த நேர்மையற்ற அறிக்கையை காரணம் காட்டி மாற்று மனையை ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட மன்றத்தில் ஆணை பெறுவதில் பதில் அளிப்பவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்றும் நீதிமன்றம் கருதியது.

(ஆ)திரு.சம்பத் ஜெயினிடமிருந்து நிலத்தை வாங்கிய தேவேந்தர் யாதவ் மற்றும் நரேந்திர யாதவ் ஆகியவர்களோ அல்லது பதில் அளிப்பவர்களோ திரு.சம்பத் ஜெயினுக்கு நிலத்தை ஒப்படைப்பு செய்த பின்னர் ஏற்பட்ட ஆக்கிரமிப்புக்கு மேல்முறையீட்டாளரை காரணம் காட்ட முடியாது என்றும் நிலத்தில் ஆக்கிரமிப்பு இருந்த காரணத்தினால் மேல்முறையீட்டாளரது சேவையில் குறைபாடு இருக்கிறது என்று கூற முடியாது என்றும் நீதிமன்றம் கருதியது.

(இ மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்ட, மாநில மற்றும் தேசிய நுகர்வோர் மன்றங்களது ஆணைகள் ஒதுக்கி வைக்கப்பட்டன. பதில் அளிப்பவர்களது புகார் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2012 SC 506; IV (2011) CPJ 65 (SC).

***

**4. மீரட் மேம்பாட்டுக் குழுமம்** *(எதிர்)* **முகேஷ் குமார் குப்தா**

(Meerut Development Authority v. Mukesh Kumar Gupta)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:3656/2011-ல் 10.01.2012 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

மீரட் மேம்பாட்டுக் குழுமம் – மனுதாரர்

**எதிர்**

முகேஷ் குமார் குப்தா – பதில் அளிப்பவர்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

மேல்முறையீடு செய்வதற்கு சிறப்பு விடுப்பு கோரி தாக்கல் செய்த மனு (சிவில்) சி.சி.எண்:8841/ 2012.

தீர்ப்பு தேதி : 09.05.2012.

### 4. வழக்கின் சுருக்கம் :

பதில் அளிப்பவருக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்வதாக ஆசைகாட்டி அவர் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை 1992-ம் ஆண்டு விட்டுக்கொடுக்க மனுதாரர்கள் காரணமாயிருந்தனர் என்பது இந்த வழக்கின் சாராம்சமாகும். மேற்படி நிலம் வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டிருப்பது மனுதாரர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. நிலம் ஒதுக்கீடு செய்யப்படாததால் பதில் மனுதாரர் 2009-ல் மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகார் செய்தார். காலவரையறை கடந்த புகார் என்று எதிர் மனுதாரர் கூறிய வாதத்தை மாவட்ட நுகர்வோர் மன்றம் நிராகரித்து ரூ.50,000/-த்தை புகார் செய்தவருக்கு வழங்குமாறு உத்தரவிட்டது. மனை வழங்கப்படாததால் புகார் அளிப்பதற்கான காலம் முடிவடையவில்லை என்றும் நுகர்வோர் மன்றம் தீர்ப்பளித்தது. குழுமத்தின் மேல்முறையீடு மாநில மற்றும் தேசிய ஆணையங்களால் நிராகரிக்கப்பட்டது. நுகர்வோர் மன்றங்களின் ஆணைகளால் பாதிக்கப்பட்ட மனுதாரர் மேல்முறையீடு செய்வதற்கான சிறப்பு விடுப்பு மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

Nil.

### 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

(அ) நடவடிக்கைக்கான காரணம் 1992-ம் ஆண்டே ஆரம்பித்தது என்றும் ஆகவே 2009-ம் ஆண்டு பதில் மனுதாரர் புகார் செய்தது காலவரையறை கடந்தது என்றும் மனுதாரர் கூறியதை நீதிமன்றம் நிராகரித்தது. நுகர்வோர் மன்றங்கள் விற்பனை பத்திரத்தை பதிவு செய்யுமாறும் அதே நேரத்தில் காலதாமதமாக மனையின் எஞ்சிய விலையை செலுத்தியபோதிலும் அதற்கான வட்டியை பதில் மனுதாரர் செலுத்த வேண்டியதில்லை என்று ஆணையிட்டதும் தவறு என்று மனுதாரர் வாதாடினார். ஆனால் 'மாநிலம்' என்ற வரையறைக்குள் மனுதாரர்கள் வந்தபோதிலும் அவர்கள் சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாகவும் நியாயமற்ற முறையிலும் நடந்துள்ளனர் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. பொதுமக்களுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்போவதாகவும் அவற்றின் மீது அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்புகின்ற வகையில் தவறாக விளம்பரம் செய்தது மிகவும் கண்டிக்கத்தக்க

செயல் என்றும் ஆகவே இந்த மனுவை தாக்கல் செய்தவர்கள் மீது கடுமையான அபராதம் விதிக்கலாம் என்றும் நீதிமன்றம் கருதியது.

(ஆ)மேலும் புகார் செய்தவர் / பதில் மனுதாரர் மனை ஒதுக்கீடு செய்யப்படும் என்ற நம்பிக்கையில் 27 ஆண்டுகாலம் பொறுமையாகக் காத்திருந்தார் என்றும் மனை ஒதுக்கீடு செய்யப்படாததால் காலவரையறை அவருக்கு பொருந்தாது என்றும் கூறி குழுமத்தின் ஆட்சேபனையை மாவட்ட நுகர்வோர் மன்றம் நிராகரித்தது சரியே என்றும் நீதிமன்றம் கூறியது.

(இ) சிறப்பு விடுப்பு மனுவை நிராகரித்த உச்ச நீதிமன்றம் மனுதாரர்கள் மீது ரூ.50,000/– அபராதமும் விதித்தது. இந்த தொகையை ஆணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் உச்ச நீதிமன்ற சட்ட சேவைகள் குழுவிடம் செலுத்தவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2012) CPJ 12 (SC).

***

## 5. பஞ்சாப் நகர்ப்புற திட்டம் மற்றும் மேம்பாட்டுக் குழுமம் மற்றும் பலர் *(எதிர்)* ரகுநாத் குப்தா மற்றும் பலர்

(Punjab Urban Planning & Dev. Authority & Ors. v. Raghu Nath Gupta & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

CWP.எண்:6929/2007–ல் சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றத்தின் 05.11.2008 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பஞ்சாப் நகர்ப்புற திட்டம் மற்றும் மேம்பாட்டுக் குழுமம் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

ரகுநாத் குப்தா மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:5887/2012 மற்றும் 5888/2012.

தீர்ப்பு தேதி : 16.08.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் குழுமம் 16.03.2001 அன்று வணிக மனைகள் விற்பனைக்காக பொது ஏலம் ஒன்றை நடத்தியது. இந்த ஏலத்தில் ஒரு தளம் கொண்ட கடையை ரூ.31,75,000/–க்கு பதில் அளிப்பவரான ரகுநாத் குப்தா வெற்றிகரமாக எடுத்தார். அவர் மொத்த

விலையில் 25 சதவீதமான ரூ.7,93,750/- செலுத்திய பின் 25.05.2001 அன்று அந்த மனை அவருக்கு ஒப்படைக்கப்பட்டது. மீதி 75 சதவிகிதம் மூன்று ஆண்டு சமமான தவணைகளில் 15 சதவீத வட்டியோடு செலுத்தப்படவேண்டியிருந்தது. பதில் மனுதாரர் மேற்படி இடத்தில் கட்டிடத்தை 2002-ம் ஆண்டு கட்டினார். மேல்முறையீட்டாளரும் வணிக மனைகளுக்கான மேம்பாட்டு பணிகளை 20.12.2002-க்குள் முடித்து அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர். ஆனால் பதில் மனுதாரர் வாகனங்கள் நிறுத்துமிடம், விளக்கு வசதி, சாலை வசதி, குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் ஆகிய வசதிகளை செய்து கொடுக்கும்வரை வட்டி ஏதும் வசூலிக்கக்கூடாது என்று எஸ்டேட் அலுவலர் மற்றும் கூடுதல் தலைமை நிர்வாகி ஆகியவர்களிடம் கோரிக்கை விடுத்தார். 31.03.2007 தேதியிட்ட கடிதத்தில் கூடுதல் தலைமை நிர்வாகி மேற்படி கோரிக்கையை நிராகரித்தார். இதை எதிர்த்து பதில் மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தில் CWP.எண்:6929/2007-ஐ தாக்கல் செய்தார்கள். உயர் நீதிமன்றம் கலம் 1-ல் கண்ட 05.11.2008 தேதியிட்ட ஆணையில் உச்ச நீதிமன்றம் *சாந்தி குஞ்ச் இன்வெஸ்ட்மென்ட் (Shantikunj Investment)* என்ற வழக்கில் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் மனுவை அனுமதித்தது. மேற்படி ஆணையை எதிர்த்து தற்போதைய மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Municipal Corporation, Chandigarh & Ors. v. Shantikunj Investment (P) Ltd.,* II (2006) SLT 592. (Referred) [Para 3]
2. *U.T. Chandigarh Administration & Anr. v. Amerjeet Singh & Ors.,* II (2009) CPJ 1 (SC)=II (2009) SLT 736. (Relied) [Para 13]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர் வெளியிட்ட ஏலத்திற்கான அறிவிக்கையை படித்துப் பார்த்த நீதிமன்றம், ஷரத்து 5-ல் ஏலத்திற்கான இடம் 'உள்ளது உள்ளபடி' (as is where is basis) அளிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட இடத்தை சமப்படுத்துவதற்கோ அதில் உள்ள கட்டிடங்களை அகற்றுவதற்கோ குழுமத்திற்கு எந்த பொறுப்பும் இல்லை என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்த ஷரத்து இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும் என்றும் கருதியது. மேற்படி ஷரத்து பதில் அளிப்பவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. ஏலத்திற்கான மொத்த தொகையையும் முழுவதுமாகவோ அல்லது தவணை முறையிலோ செலுத்துகின்ற வாய்ப்பு பதில் மனுதாரர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் ஒதுக்கீட்டு கடிதத்தில், தவணையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவில்லை என்றால் அந்த நாளிலிருந்து சாதாரண வட்டியோடு கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 2 சதவீதம் அபராதம் விதிக்க எஸ்டேட் அலுவலருக்கு

அதிகாரம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தவணைகளை வட்டியோடு மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்தவில்லை என்றால் அதுவரை செலுத்திய தொகையை முழுவதுமாகவோ, பகுதியாகவோ இழக்க நேரிடும் என்றும் எஸ்டேட் அலுவலர் ஒதுக்கீட்டை ரத்து செய்யவும் முடியும் என்றும் ஒதுக்கீட்டு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) பதில் அளிப்பவர்கள் மேற்கூறிய நிபந்தனைகளை ஏற்றுத்தான் வணிகத்திற்கான மனைகளை ஒப்புக் கொண்டார்கள். ஏலத்தின்போதே மனைகளில் என்னென்ன வசதிகள் இருந்தன என்று அவர்கள் கண்டறிந்திருக்க முடியும். ‘உள்ளது உள்ளபடி’ (as is where is basis) என்ற நிபந்தனையை ஏற்றுக்கொண்ட பின் மேல்முறையீட்டாளர் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவில்லை என்று அவர்கள் கூற முடியாது. மேல்முறையீட்டாளர்கள் சம்பந்தப்பட்ட வசதிகளை செய்து கொடுக்க காலதாமதம் ஏதும் செய்யவில்லை என்பதையும் நீதிமன்றம் குறித்துக் கொண்டது. மின்சாரப் பணிகள் 24.12.2002-லும் சுகாதாரப் பணிகள் 22.11.2002-லும் முறையே முடிக்கப்பட்டன. வாகனங்கள் நிறுத்துமிடம், விளக்கு வசதி, சாலை வசதி, குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் ஆகிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) *சாந்தி குஞ்ச் இன்வெஸ்ட்மென்ட் (Shantikunj Investment)* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் உயர் நீதிமன்றம் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. பதில் அளிப்பவர்கள் எழுப்பி உள்ள பல்வேறு வாதங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் *U.T. Chandigarh Administration & Anr. v. Amerjeet Singh & Ors.,* என்ற வழக்கின் தீர்ப்பில் பதில் உள்ளது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஏலத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் ஒதுக்கீட்டு கடிதத்தில் உள்ள நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்ட பின்னர் பதில் அளிப்பவர்கள் விதிமுறைகளையோ நிபந்தனைகளையோ ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூற முடியாது என்றும் நீதிமன்றம் கூறியது. மேலும் மேல்முறையீட்டாளர் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் எவ்வித தாமதமும் செய்யவில்லை என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(ஈ) பதில் மனுதாரர்கள் தவணை தொகைகளை தாமதமாக செலுத்திய காலத்திற்கு அதாவது 01.06.2001 முதல் 31.12.2002 வரை, வட்டி, அபராத வட்டி மற்றும் அபராதம் ஆகியவற்றை செலுத்த வேண்டியதில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது ஏற்கத்தக்கதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆகவே கலம் 1-ல் கண்ட உயர் நீதிமன்ற ஆணையை ஒதுக்கி வைத்தது. மேல்முறையீடுகள் ஏற்கப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

III (2012) CPJ 33 (SC).

***

**6. எஸ்.சீனிவாச மூர்த்தி** *(எதிர்)* **கர்நாடகா வீட்டு வசதி வாரியம்**

(S.Srinivasa Murthy v. Karnataka Housing Board)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 09.09.2004 மற்றும் 14.03.2008 தேதிகளில் வழங்கிய தீர்ப்புகள் மற்றும் ஆணைகள்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

எஸ்.சீனிவாச மூர்த்தி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கர்நாடகா வீட்டு வசதி வாரியம் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:5584/2012 (சிறப்பு விடுப்பு (சி) எண்:12334/2009 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 22.08.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

சுய உதவி திட்டத்தின் கீழ் உயர் வருமானம் உடையவர்களுக்கான (HIG) குடியிருப்பின் கீழ் (5–ஆம் கட்டம்) எல்லஹங்காவில் குடியிருப்பு மனை ஒதுக்கக்கோரி மேல்முறையீட்டாளர் மனு செய்திருந்தார். 29.11.1993 தேதியிட்ட கடிதத்தில் அவருக்கு Flat எண்:37, முதல் மாடி குடியிருப்பு ஒதுக்கப்பட்டது. குடியிருப்பு மனையின் மதிப்பு தோராயமாக ரூ.3,40,000/– என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பதில் அளிப்பவர் வெளியிட்டிருந்த விளம்பரத்தில் குடியிருப்பு டிசம்பர் 1994–ல் தயாராக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கட்டுமானம் 1998–ல்தான் முடிந்தது. மேல்முறையீட்டாளருக்கு 19.05.1999 அன்று ஒப்படைக்கப்பட்டது. தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்பு மனையை குத்தகை மற்றும் விற்பனை (lease cum sale) என்ற முறையில் இருந்து பூரண விற்பனை (outright sale) என்ற வகைக்கு மாற்றித் தரும்படி 14.12.1998 அன்று மேல்முறையீட்டாளர் பதில் அளிப்பவரின் நிர்வாக பொறியாளருக்கு கடிதம் அனுப்பினார். பதில் அளிப்பவர் அந்த கோரிக்கையை ஏற்று மேல்முறையீட்டாளருக்கு எல்லஹங்கா 5–ஆம் கட்ட 3500 குடியிருப்புகள் என்ற திட்டத்தில் பூரண விற்பனை முறையில் ஒரு குடியிருப்பு மனையை ஒதுக்கினார். குடியிருப்பின் விலை ரூ.5,23,232/– என்று தெரிவிக்கப்பட்டது. மறு ஒதுக்கீடு கடிதங்களை 22.01.1999 மற்றும் 25.01.1999 தேதிகளில் பெற்றுக்கொண்ட மேல்முறையீட்டாளர் 15.02.1999 அன்று வீட்டு வசதி ஆணையருக்கு அனுப்பிய கடிதத்தில் தாம் ஏற்கனவே ரூ.3,75,750/– கட்டியிருந்ததை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்க தவறிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டினார். அதற்குப்பின் பதில் அளிப்பவர் எஞ்சிய தொகையான ரூ.1,57,482/–ஐ செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு 06.04.1999 அன்று

கடிதம் அனுப்பினார். மேல்முறையீட்டாளரும் மறு ஒதுக்கீடை ஏற்று எஞ்சிய தொகையை செலுத்தினார். விற்பனை பத்திரத்தை பதிவு செய்யும்போது வீட்டுமனையின் மதிப்பை ரூ.4,31,918/- என்று காட்டலாம் என்றும் அம்மாதிரி செய்தால் மேல்முறையீட்டாளர் மொத்த விற்பனை தொகையில் 81 விழுக்காடு மட்டுமே பதிவு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் பதில் அளிப்பவர் மேல்முறையீட்டாளருக்கு ஆலோசனை வழங்கினார். மேல்முறையீட்டாளரும் 22.08.1998, 27.11.1998 மற்றும் 15.05.1999 தேதியிட்ட கடிதங்களில் தனது ஒப்புதலை தெரிவித்தார். குடியிருப்பு மனையை பெற்றுக்கொண்ட பின்னர் மேல்முறையீட்டாளர் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, பிரிவு 17-ன்கீழ் நுகர்வோர் ஆணையத்தில் புகார் செய்தார். தாம் செலுத்திய தொகைக்கு வட்டி அளிக்க வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் நிராகரித்தது. ஒதுக்கப்பட்ட குடியிருப்பு மனையில் குறைபாடுகள் இருந்தன என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தையும் மாநில ஆணையம் நிராகரித்தது. ஆனால் குடியிருப்பு மனையை ஒப்படைப்பு செய்வதில் காலதாமதம் இருந்தது என்பதை ஓரளவு ஏற்றுக்கொண்ட மாநில ஆணையம் மேல்முறையீட்டாளருக்கு ரூ.25,000/- இழப்பீடு அளிக்கும்படி பதில் அளிப்பவருக்கு ஆணையிட்டது. இதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு 09.09.2004 அன்று தேசிய ஆணையத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரிய மனுவும் கலம் 1-ல் கண்ட 14.03.2008 தேதியிட்ட ஆணையின்படி தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த ஆணைகளை எதிர்த்து சிவில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; ஆதராச் சட்டம் (1/1872) பிரிவு 115.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*GDA v. Balbir Singh,*
(2004) 5 SCC 65 (AIR 2004 SC 2141 : 2004 AIR SCW 2362). [Para 14]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) ஒதுக்கீடு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விலை தோராயமானதே என்றும் அதை மாற்றுவதற்கான உரிமை பதில் அளிப்பவருக்கு உண்டு என்று மாநில ஆணையம் கூறியதை தேசிய ஆணையம் ஏற்றுக்கொண்டது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும் மேல்முறையீட்டாளர் தானாகவே முன்வந்து ஒதுக்கீடு முறையை மாற்றச் சொல்லி கோரிக்கை விடுத்ததால் விலை மாற்றத்தைப் பற்றி புகார் செய்ய அவருக்கு அதிகாரம் இல்லை என்றும் நுகர்வோர் ஆணையங்கள் தெரிவித்திருந்தன. மேலும் மாநில

ஆணையம் அளித்த இழப்பீடு சரியாகவும் நியாயமாகவும் இருந்தது என்று தேசிய ஆணையம் தீர்ப்பளித்திருந்தது.

(ஆ)வீட்டு மனை 1994-ல் ஒப்படைக்கப்படும் என்று உறுதிமொழி அளித்திருந்தாலும் 19.05.1999 அன்றுதான் மனுதாரருக்கு ஒப்படைக்கப்பட்டது என்பதையும் நீதிமன்றம் பதிவு செய்தது. உச்ச நீதிமன்றம் *GDA v. Balbir Singh* என்ற வழக்கில் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் பதில் அளிப்பவர் மேல்முறையீட்டாளருக்கு ஆண்டொன்றுக்கு 12 சதவீதம் வட்டி செலுத்தவேண்டும் என்று மாநில ஆணையம் தீர்ப்பளித்தது என்றும் ஆகவே 18 சதவீதம் வட்டி வழங்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை தேசிய ஆணையம் நிராகரித்தது என்றும் உச்ச நீதிமன்றம் பதிவு செய்தது.

(இ) மேல்முறையீட்டாளர் தானாகவே முன்வந்து ஒதுக்கீடு முறையை மாற்றும்படி கோரியதால் 22.01.1999 மற்றும் 25.01.1999 ஆகிய தேதிகளில் பதில் அளிப்பவர் தெரிவித்த விலையை அவர் ஆட்சேபிக்க முடியாது என்றும் ரூ.5,23,232/- என்ற விலையை செலுத்த மேல்முறையீட்டாளர் எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி ஒப்புக் கொண்டார் என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரத்தில் உள்ள விலையை விட குடியிருப்பு மனையின் விலை அதிகமாக இருக்க முடியாது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் கவர்ச்சிகரமாக இருந்தாலும் அதில் நியாயம் இல்லை என்றும் நீதிமன்றம் கருதியது. மேல்முறையீட்டாளர் 22.08.1998, 27.11.1998 மற்றும் 15.05.1999 தேதியிட்ட கடிதங்களை உற்று நோக்கும்போது மனையின் மதிப்பு ரூ.5,23,232/-ஆக இருந்தாலும் அதை ரூ.4,31,918/-க்கு பதிவு செய்ய அவர் முழு சம்மதமும் தெரிவித்திருந்தார் என்று புரிகிறது எனவும் நீதிமன்றம் தெரிவித்தது. வாரியம் தெரிவித்திருந்த யோசனையை ஏற்று உண்மையான விலையைவிடக் குறைந்த விலையில் மனையை பதிவு செய்த பின்னர் தற்போது மேல்முறையீட்டாளர் ரூ.1,01,314/- திருப்பித்தர வேண்டும் என்று கோருவது சரியல்ல என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஈ) மேல்முறையீட்டாளரது புகார் நியாயமானது அல்ல என்ற காரணத்தினால் அவர் மாநில ஆணையம் அளித்த இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று கோருவதும் நிராகரிக்கப்பட வேண்டியதே என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(உ) ஆகவே மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2012) 8 SCC 424; III (2012) CPJ 37 (SC); AIR 2013 SC 990.

***

**7. பிரதீப் ஷர்மா** *(எதிர்)* **தலைமை நிர்வாகி, அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் மற்றும் ஒருவர்**

(Pradeep Sharma v. Chief Administrator, Haryana Urban Development Authority & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:671/2011-ல் 19.07.2011 மற்றும் மறு ஆய்வு மனு எண்:142/2011-ல் 29.09.2011 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் மற்றும் ஆணைகள்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பிரதீப் ஷர்மா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

தலைமை நிர்வாகி,
அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:52-53/2016 (சிறப்பு விடுப்பு (சி) எண்:5567-5568/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 07.01.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் / புகார்தாரருக்கு 01.01.2001 அன்று சதுர கஜம் ரூ.1,865/– என்ற விலையில் 250 சதுர கஜம் கொண்ட மனை ஒன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் 22.01.2001 அன்று 10 விழுக்காடு பிணை உறுதி தொகையும் 15 விழுக்காடு விற்பனை தொகையும் செலுத்தினார். எஞ்சியத் தொகையை ஆறு ஆண்டுகாலத்தில் தவணை முறையில் 15 விழுக்காடு வட்டியோடு செலுத்தவேண்டி இருந்தது. 04.10.2002 அன்று பதிலளிக்கும் குழுமம் ரூ.59,782.50/– செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு கடிதம் அனுப்பியது. மேல்முறையீட்டாளர் அத்தொகையை செலுத்தாததால் அவருக்கு மனை ஒப்படைக்கப்படவில்லை. பதில் அளிப்பவரின் சேவையில் குறைபாடு என்று கூறி மேல்முறையீட்டாளர் மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகார் செய்தார். புகார் நிலுவையில் இருக்கும்போது மேல்முறையீட்டாளர் முன்பணமாக செலுத்திய தொகை அவருக்கு திருப்பி அளிக்கப்பட்டது. அவரும் அதை பெற்றுக் கொண்டார். ஆனால் மாவட்ட நுகர்வோர் மன்றம் மேல்முறையீட்டாளருக்கு அதே மனையை அதே விலையில் மறு ஒதுக்கீடு செய்து அதை அவரிடம் ஒப்படைக்குமாறு 19.12.2005-ல் பதில் அளிப்பவர் குழுமத்திற்கு ஆணை பிறப்பித்தது. அப்போது மேல்முறையீட்டாளருக்கு அவர் செலுத்திய தொகை திருப்பி அளிக்கப்பட்டு விட்டது

என்ற விவரம் நுகர்வோர் மன்றத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. மேலும் மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகையை அவருக்கு மனை ஒதுக்கீடு செய்யும்போது சரிசெய்து கொள்ளுமாறு நுகர்வோர் மன்றம் ஆணையிட்டது. மேல்முறையீட்டாளருக்கு கொடுக்கப்பட்ட மன உளைச்சல் மற்றும் அலைகழித்தல் ஆகியவற்றிற்காக ரூ.50,000/-மும் வழக்காடும் செலவுக்காக ரூ.5,000/-மும் பதில் அளிப்பவர்கள் வழங்க வேண்டுமென்றும் நுகர்வோர் மன்றம் ஆணையிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட குழுமம் மாநில ஆணையத்தில் மேல்முறையீடு செய்தது. மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது புகார்தாரர் ஏற்கனவே நுகர்வோர் மன்றம் பிறப்பித்த ஆணையை நிறைவேற்றுமாறு குழுமத்திற்கு உத்தரவிடுமாறு நிறைவேற்று மனு (execution petition) ஒன்றை நுகர்வோர் மன்றத்தில் தாக்கல் செய்தார். நுகர்வோர் மன்றம் இதன்மீது 02.09.2009-ல் பிறப்பித்த ஆணையின்படி மனை புகார்தாரருக்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்கிடையில் மாநில ஆணையம் குழுமத்தின் மேல்முறையீட்டை ஏற்று மாவட்ட மன்றத்தின் ஆணையை தள்ளி வைத்தது. புகார்தாரர் ஏற்கனவே மனைக்காக செலுத்திய தொகையை திருப்பி பெற்றுக்கொண்டு விட்டதால் அந்த மனை தொடர்பாக வேறு எந்த கோரிக்கையும் அவர் வைக்க முடியாது என்று மாநில ஆணையம் தீர்ப்பளித்தது. மேலும் மனையை சரண் செய்து அதன் விலையில் 10 விழுக்காடு திருப்பிப் பெற்றுக்கொண்டதால் புகார்தாரர் நுகர்வோர் என்று கருதப்பட மாட்டார் என்றும் மாநில ஆணையம் தெரிவித்தது. இந்த ஆணையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் மறு சீராய்வு மனு ஒன்றை தாக்கல் செய்தார். அது தள்ளுபடி செய்யப்பட்டது. அதை மறு பரிசீலனை செய்யுமாறு தாக்கல் செய்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த ஆணைகளால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 21 மற்றும் 23; அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் சட்டம் (13/1997) பிரிவுகள் 15 மற்றும் 17.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) குழுமத்தின் மேல்முறையீடு மாநில ஆணையத்தில் நிலுவையில் இருக்கும்போது, மாவட்ட மன்றம் நிறைவேற்று மனு மீது வெளியிட்ட 07.10.2009 தேதியிட்ட ஆணையின் அடிப்படையில் குழுமத்தின் எஸ்டேட் அலுவலர் சம்பந்தப்பட்ட மனை ஒதுக்கீட்டை முறைப்படுத்தி மனையை புகார்தாரருக்கு ஒப்படைத்துவிட்டார் என்பதை நீதிமன்றம் குறித்துக்கொண்டது. இது தொடர்பாக விசாரணை நடத்தும்படியும் ஒதுக்கீட்டை முறைப்படுத்தியது, மனையை ஒப்படைத்தது ஆகியவற்றிற்கு யார் பொறுப்பு என்று

கண்டறியும்படியும் நீதிமன்றம் ஆணையிட்டது. அதற்குப் பின்பும் குழுமம் விசாரணை நடத்துவதை தாமதப்படுத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியதின் பேரில் குழுமம் எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

(ஆ)மேல்முறையீட்டாளர் தாம் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் என்றும் குழுமத்திடமிருந்து ‘நிலுவைத் தொகை ஏதுமில்லை’ என்ற சான்றிதழ் பெறுவதற்கு முன்பு ரூ.6,79,557/- செலுத்தியதாகவும் மனையை எடுத்துக்கொண்ட பிறகு அதில் கட்டிடம் கட்டுவதற்கு தனது ஓய்வூதியத் தொகையில் பெரும் பங்கு செலவழித்ததாகவும் ஆகவே மனையையும் அதன் மீது எழுப்பப்பட்ட கட்டிடத்தையும் தாம் அனுபவிக்க அனுமதிக்குமாறும் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டார். அம்மாதிரி அனுமதித்தால் அதனால் குழுமத்திற்கு எந்தவித இழப்பும் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.

(இ) வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் சம்பந்தப்பட்ட மனை இருக்கின்ற 64-ஆம் பகுதியில் தற்போதைய விலை நிலவரங்களை கேட்டறிந்தும் மேல்முறையீட்டாளர் 2009-ஆம் ஆண்டே மனையின் அப்போதைய விலையை குழுமத்திற்கு செலுத்தியுள்ளார் என்பதை கருத்தில் கொண்டும் உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் மனையை தக்க வைத்துக்கொள்ள அனுமதிக்குமாறு குழுமத்திற்கு ஆணையிட்டது. ஆனால் மனையை தற்போதைய விலையான சதுர மீட்டருக்கு ரூ.10,500/- என்ற விலையின் அடிப்படையில் அம்மாதிரி அனுமதிக்கலாம் என்றும் நிபந்தனை விதித்தது. மேல்முறையீட்டாளர் தீர்ப்பு தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் பணத்தை குழுமத்திற்கு செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்திய பின் நான்கு வாரங்களுக்குள் குழுமம் தேவையான ஆவணங்களை தயார் செய்து மேல்முறையீட்டாளருக்கு ‘நிலுவைத் தொகை ஏதுமில்லை’ என்ற சான்றிதழ் வழங்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. தவறு செய்த அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் குழுமத்திற்கு ஆணையிடப்பட்டது. அம்மாதிரி எடுத்த நடவடிக்கை தொடர்பான அறிக்கையை ஒன்பது மாதங்களுக்குள் தாக்கல் செய்யுமாறும் பதில் அளிக்கும் குழுமத்திற்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 438; 2016(1) CPR 111 (SC).

***

## (c) வங்கிகள்

### 1. குர்காவ்ன் கிராமிய வங்கி *(எதிர்)* ஸ்ரீமதி கசனி மற்றும் ஒருவர்

(Gurgaon Gramin Bank v. Smt. Khazani & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:4098/2009-ல் 25.11.2009 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

குர்காவ்ன் கிராமிய வங்கி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஸ்ரீமதி கசனி மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:6261/2012 (சிறப்பு விடுப்பு (சி) எண்:8875/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 04.09.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

முதலாவது பதிலளிப்பவர் ஸ்ரீமதி கசனி மேல்முறையீட்டாளர் வங்கியிடம் எருமை மாடு வாங்குவதற்காக கடன் வாங்கியிருந்தார். இரண்டாவது பதிலளிப்பவரான நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கன்பெனி லிமிடெடிடம் அந்த மாட்டை ரூ.15,000/-க்கு 06.02.2001 முதல் 06.02.2004 வரை காப்பீடு செய்திருந்தார். ஸ்ரீமதி கசினி 05.03.2001 அன்று பிரிமியமாக ரூ.759/- செலுத்தியிருந்தார். துரதிருஷ்டவசமாக 27.12.2001 அன்று எருமை மாடு இறந்துவிட்டது. ஸ்ரீமதி கசினி காப்பீட்டு நிறுவனத்திடம் காப்பீட்டு தொகையை தருமாறு மனு செய்தார். மாட்டின் காதில் வைக்கின்ற கம்மல் (ear tag)-ஐ வங்கியிடம் கொடுத்து காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பக் கோரி இருந்தார். ஆனால் வங்கியோ அல்லது காப்பீட்டு நிறுவனமோ புகார்தாரருக்கு காப்பீட்டுத் தொகையை அளிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் 30.07.2003 அன்று அளித்த நோட்டீசுக்கும் எந்த பதிலும் இல்லை. ஆகவே அவர் மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகார் செய்தார். புகாரை ஏற்ற மாவட்ட மன்றம் மாடு இறந்த தேதியிலிருந்து காப்பீடு செய்த தொகையை 9 விழுக்காடு வட்டியோடு செலுத்துமாறு வங்கிக்கு உத்தரவிட்டது. மேலும் வழக்கிற்கு செலவாகும் தொகையாகவும், நஷ்டஈடாகவும் ரூ.3,000/- செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இந்த ஆணையை எதிர்த்து வங்கி மாநில ஆணையத்தில் முறையீடு செய்தது. முறையீடு நிராகரிக்கப்பட்டது. தேசிய ஆணையத்தில் மேல்முறையீட்டாளர்/வங்கி தாக்கல் செய்த மறு சீராய்வு மனுவும் கலம் 1-ல் கண்ட 25.11.2009 தேதியிட்ட ஆணையின்படி நிராகரிக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச

நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீடு வழக்கிற்கான செலவோடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கிற்காக வங்கி எவ்வளவு தொகை செலவிட்டது என்று உச்ச நீதிமன்றம் வினவியது. தலைமை மேலாளர் தனது பிரமாணப்பத்திரத்தில் ரூ.12,950/- செலவு செய்ததாகக் குறிப்பிட்டார். வழக்கின் மொத்த மதிப்பே ரூ.15,000/- என்று இருக்கும்போது வங்கி அலுவலர்கள் சென்று வர ஆகும் செலவைத் தவிர அவர்களது நேரத்தையும் மேலும் ரூ.12,950/-யையும் வங்கி செலவிட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. வழக்கில் எழுப்பப்பட்ட பிரச்சனைகள் அனைத்தும் பொருண்மை சம்பந்தப்பட்டது என்றும் சட்டரீதியாக உச்ச நீதிமன்றம் முடிவு செய்யவேண்டிய பிரச்சனை எதுவுமில்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. இம்மாதிரி வழக்குகளை தாக்கல் செய்வதை தவிர்க்குமாறு அறிவுரை வழங்கவேண்டும் என்றும் இல்லையேல் மிக எளிய சாதாரணமான பிரச்சனைகளையும் உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டுவருகின்ற நிலை ஏற்படும் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

(ஆ) கிராமத்தில் வசிப்பவர்கள் மாடுகள் வாங்குவதற்கும், வேளாண் சாதனங்கள், உரம், விதை ஆகியவற்றை வாங்குவதற்கும் கிராமிய வங்கிகளை அணுகுகிறார்கள் என்றும் அவர்களது நலனுக்காக வங்கிகள் செயல்படவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. வறட்சியால் பயிர் இழப்பு ஏற்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றங்கள் காரணமாக கால்நடைகளுக்கு நோயோ அல்லது உயிர்ச் சேதமோ ஏற்பட்டாலோ கிராம மக்கள் தாங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த சிரமப்படுவார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு பதிலாக அவர்கள் நீதி மன்றங்களை நாடவேண்டிய சூழ்நிலைக்கு வங்கிகள் அவர்களை தள்ளுகின்றன என்றும் அதனால் அவர்கள் மேலும் இன்னலுக்கு ஆளாகின்றனர் என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. வங்கியின் பக்கம் ஓரளவு நியாயம் இருந்தாலும் மாவட்ட மன்றம் போன்ற அமைப்புகள் ஒரு முடிவுக்கு வந்தபிறகு அதை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர மேலும் மேலும் வழக்குகள் தொடர்ந்து உச்ச நீதிமன்றம் வரை வருவதை வங்கிகள் தவிர்க்க வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியது. ஏழை எளிய கிராம மக்களை பல்வேறு வழக்காடும் மன்றங்களுக்கு அனுப்பி அவர்கள் மேலும் செலவுகளை மேற்கொள்ளுமாறு செய்வது

கண்டிக்கத் தக்கதொன்று என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. கொள்கை சம்பந்தப்பட்டதாகவோ அல்லது பல்வேறு தரப்பினரை பாதிக்கின்ற ஒரு பிரச்சனையாகவோ இருந்தால் ஒழிய இம்மாதிரி சிறிய பிரச்சனைக்காக உச்ச நீதிமன்றம் வருவதை கண்டிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(இ) இந்த வழக்கில் தேசிய ஆணையம் உட்பட நுகர்வோர் மன்றங்கள் எடுத்த முடிவுகளில் எந்த தவறும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. ஆகவே வங்கி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. முதல் பதிலளிப்பவருக்கு வங்கி ரூ.10,000/– ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2012(4) CPR 1 (SC); IV (2012) CPJ 5 (SC); 2013(4) CPR 377 (SC).

***

**2. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா *(எதிர்)* ஜக்பீர் சிங்**

(Central Bank of India v. Jagbir Singh)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:3648/2013-ல் 19.11.2013 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஜக்பீர் சிங் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3645/2015 (சிறப்பு விடுப்பு (சி) எண்:2343/2014 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 16.04.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர், மேல்முறையீட்டாளர்/வங்கியிடம் இருந்து கடன் பெற்று ட்ராக்டர் ஒன்றை வாங்கினார். மோட்டார் வாகனச் சட்டம் 1988-ன்கீழ் அந்த வாகனம் ஆரம்பத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் 25.05.2005-க்குப் பிறகு காப்பீட்டிற்கான பிரிமியம் மேல்முறையீட்டாளரால் செலுத்தப்படவில்லை. 24.09.2007 அன்று அந்த ட்ராக்டர் ஒரு

மோட்டார் சைக்கிளோடு மோதியதில் பாபுராம் கர்க் என்பவருடைய மகனாகிய பங்கஜ் என்பவர் உயிரிழந்தார். இந்த விபத்துக்கு பதிலுரையாளரின் ஓட்டுநராகிய திவான் சிங் என்பவர் அபாயகரமாகவும், அலட்சியமாகவும் வண்டி ஓட்டியதே காரணம். புதுதில்லியில் உள்ள மோட்டார் வாகன தீர்ப்பாயம்–II ட்ராக்டரின் சொந்தக்காரர் மற்றும் ஓட்டுநர் ஆகியோரை ரூ.4,01,460/–ஐ 7.5 விழுக்காடு வட்டியோடு செலுத்துமாறு தீர்ப்பளித்தது. பதிலுரையாளர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மேல்முறையீட்டாளர்/வங்கியையும் இழப்புக்கு பொறுப்பாக்க வேண்டும் என்று புகார் மனு தாக்கல் செய்தார். நுகர்வோர் மாவட்ட மன்றம் புகாரை ஏற்று காப்பீட்டை புதுப்பிக்காததற்கு வங்கியும் பொறுப்பேற்கவேண்டும் என்று தீர்ப்பளித்தது. வங்கி செய்த மேல்முறையீடு மாநில நுகர்வோர் ஆணையத்தால் நிராகரிக்கப்பட்டது. கடன் ஒப்பந்தத்தின்படி வங்கிக்கு காப்பீட்டு பிரிமியத்துக்கான தொகையை பிடித்தம் செய்ய உரிமை இருந்ததால், வங்கி தனது பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாது என்று மாநில ஆணையம் தெரிவித்தது. பதிலுரையாளர் தேசிய ஆணையத்தில் தாக்கல் செய்த மறு சீராய்வு மனு காலதாமதமாக செய்யப்பட்ட மனு என்ற காரணம் காட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து தற்போதைய மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீடு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; மோட்டார் வாகனச் சட்டம் 1988–ன் பிரிவு 146.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Pradeep Kumar Jain v. Citi Bank & Anr.,* (1999) 6 SCC 361. [Para 7]
2. *HDFC Bank Ltd. v. Kumari Reshma & Ors.,* AIR 2015 SC 290. [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர் வங்கி மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்தவற்கு முன்பு பல்வேறு நிலைகளில் ஒப்புதல் பெறவேண்டி இருந்ததால், காலதாமதத்தைப் பொருத்தருள வேண்டி தேசிய ஆணையத்தில் வங்கி செய்த மனுவில் கூறப்பட்ட காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவையே என்றும் அந்த மனுவை நிராகரித்து தேசிய ஆணையம் பிறப்பித்த உத்தரவு சரியல்ல என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஆ) வழக்கின் தகுதிப்பாட்டைப் பொறுத்தவரை, நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று வாகனம் வாங்கிய பிறகு அந்த வாகனம் விபத்துக்குள்ளானால் நிதி அளிப்பவருடைய பொறுப்பு என்ன என்பதைப் பற்றி உச்ச நீதிமன்றம் வரையறுத்த சட்ட வழிமுறைகளை நுகர்வோர் மன்றங்கள் கவனிக்கத் தவறிவிட்டன என்று உச்ச நீதிமன்றம் கருதியது. *Pradeep Kumar Jain v. Citi Bank & Anr.,* என்ற வழக்கில் 'பாலிசியை பெறுகின்ற பொறுப்பு மேல்முறையீட்டாளருக்கு இருக்கும்போது, காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டிய ஒரு காசோலையைத் தந்துவிட்டால் மட்டுமே அவரது பொறுப்பு தீர்ந்து விடாது'

என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் *HDFC Bank Ltd. v. Kumari Reshma & Ors.,* என்ற வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நிதி அளிக்கும் வங்கியின் பொறுப்பு பற்றி விவரமாக விளக்கி உள்ளது. காப்பீட்டு பாலிசியை அவ்வப்போது புதுப்பிக்கின்ற பொறுப்பு கடன் கொடுக்கின்ற நிறுவனத்திற்கு கிடையாது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் 24-வது பத்தியில் வாகனம் அடமானத்தில் இருந்தாலும் யாருடைய உடமையில் இருக்கின்றதோ (person in possession of the vehicle) அவர்தான் வாகனத்தின் உரிமையாளராக கருதப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. *Purnya Kala Devi v. State of Assam & Anr.* [2014 (4) SCALE 586], என்ற வழக்கில் யாருடைய உடமை மற்றும் பொறுப்பில் வாகனம் இருக்கின்றதோ அவர் பதிவின்படி உரிமையாளராக மட்டுமின்றி முழு உரிமையாளராகவும் கருதப்படுவார் என மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு தெளிவுபடுத்தியுள்ளது. இதே வழக்கில் வாகனம் ஒருவருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அவரது உடமை மற்றும் பொறுப்பில் அந்த வாகனம் இல்லை என்றால் அவர் மீது (விபத்துக்கு) பொறுப்பு சுமத்த முடியாது என்பதுதான் சட்டம் இயற்றியவர்களுடைய நோக்கமாக இருக்க முடியும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்கூறிய வழக்குகளில் தெரிவிக்கப்பட்ட சட்ட விதிமுறைகளின்படி மாவட்ட நுகர்வோர் மன்றமும், மாநில, தேசிய ஆணையங்களும் இந்த வழக்கில் கொடுத்த தீர்ப்புகள் ஒதுக்கி வைக்கப்படவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே அவற்றை ஒதுக்கி வைத்து ஆணையிட்டது. மேல்முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2015 SC 2070.

***

## (d) சரக்குகளை ஏற்றிச் செல்லுதல்

### 1. நாக்பூர் கோல்டன் ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி (பதிவு) *(எதிர்)* நாத் ட்ரேடர்ஸ் மற்றும் பலர்

(M/s. Nagpur Golden Transport Company (Registered) v. Nath Traders and Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:371/2000-ல் 18.02.2003 மற்றும் இதர மனு (Misc. Petition) எண்:98/2003-ல் 10.04.2003 ஆகியவற்றில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் மற்றும் ஆணைகள்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நாக்பூர் கோல்டன் ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி (பதிவு) – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நாத் ட்ரேடர்ஸ் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3546/2006.

தீர்ப்பு தேதி : 07.12.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

மார்ச் 1997-ல் கோயம்பத்தூரில் இருந்து குவாலியர் நகரில் இருந்த பதிலுரையாளர்கள் நம்பர் 1 மற்றும் 2 ஆகியவர்களுக்கு மோனோ பிளாக் பம்புகள் (monoblock pumps) கொண்ட சரக்கு லாரியை எடுத்துச் செல்ல மூன்றாவது பதிலுரையாளர், மேல்முறையீட்டாளரிடம் பணித்திருந்தார். மேல்முறையீட்டாளர் லாரியில் சரக்கை எடுத்துச் செல்லும்போது விபத்து ஏற்பட்டு மோனோ பிளாக் பம்புகள் சேதம் அடைந்தன. சேதம் அடைந்த 198 மோனோ பிளாக் பம்புகளை பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2 எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே மேல்முறையீட்டாளர் அவற்றை மூன்றாவது பதிலுரையாளருக்கு திருப்பி கொடுத்துவிட்டார். பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2 குவாலியர் நுகர்வோர் மன்றத்தில் சேவை குறைபாடு என்ற புகார் மனுவை தாக்கல் செய்தனர். தாங்கள் ஏற்கனவே பணம் செலுத்தியதால் மோனோ பிளாக் பம்புகளுடைய விலையாக ரூ.3,60,131/–, சேதாரமாக ரூ.70,000/– இலாபத்தில் ஏற்பட்ட இழப்பாக ரூ.14,000/–, வழக்காடும் செலவாக ரூ.5,000/– மற்றும் வட்டி 18 விழுக்காடு கோரினர். மாவட்ட நுகர்வோர் மன்றம் மனுவை ஏற்று ரூ.3,60,131/– இழப்பீடு மற்றும் 01.04.1997 முதல் தொகை செலுத்துகின்ற நாள் வரை 18 விழுக்காடு வட்டி, வழக்கறிஞர் கட்டணமாக ரூ.500/– மற்றும் வழக்காடும் செலவாக ரூ.500/– ஆகியவற்றை செலுத்தும்படி ஆணையிட்டது. மேல்முறையீட்டாளர் மாநில ஆணையத்தில் மேல்முறையீடு செய்தார். மாநில ஆணையம், மாவட்ட மன்றம் அளித்த தீர்ப்பில் சட்டப்படியான தவறு ஏதுமில்லை என்றாலும், வட்டி தொகை அதிகம் என்று கூறி அதை 18 விழுக்காட்டில் இருந்து 12 விழுக்காடாக குறைத்தது. மேல்முறையீட்டாளர், தேசிய ஆணையத்தில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்தார். கலம் 1–ல் கண்ட 18.02.2003 தேதியிட்ட ஆணையில், தேசிய ஆணையம் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் நடப்பு மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு மனுவின் ஒரு பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14, 18, 22 மற்றும் 23; ஒப்பந்தச் சட்டம், 1872–ன் பிரிவுகள் 70, 151 மற்றும் 161; சாலையில் சரக்கு எடுத்துச் செல்லுதல் சட்டம், 2007–ன் பிரிவுகள் 10 மற்றும் 17.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Fibrosa Spolka Akcyjna v. Fairbairn Lawson Combe Barbour Ltd.,* 1943 AC 32 : (1942) 2 All ER 122 (HL).

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர், பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2-க்கு 198 மோனோ பிளாக் பம்புகளுக்கான விலையைத் தரவேண்டும் என்று நுகர்வோர் மன்றங்கள் தீர்ப்பளித்ததால் மூன்றாம் பதிலுரையாளரிடமிருந்து 198 மோனோ பிளாக் பம்புகளை திரும்பப் பெறும் உரிமை மேல்முறையீட்டாளருக்கு உள்ளதா என்பதுதான் உச்ச நீதிமன்றத்தில் எழுப்பப்பட்ட சட்டப் பிரச்சனையாகும். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிமன்றம், மாவட்ட நுகர்வோர் மன்றம் மேல்முறையீட்டாளர் பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2-க்கு ரூ.3,60,131/- திருப்பித்தர வேண்டும் என்று ஆணையிட்டிருந்தாலும் அந்த ரூ.3,60,131/- 198 மோனோ பிளாக் பம்புகளுடைய விலையாக இருந்தாலும் மேலும் மூன்றாவது பதிலுரையாளர் அந்த பம்புகளுக்கான தொகையை பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2 நபர்களிடமிருந்து பெற்றிருந்தாலும் அவர் மூன்றாம் பதிலுரையாளரிடமிருந்து சேதமடைந்த 198 மோனோ பிளாக் பம்புகளையும் திரும்பப் பெற தகுதி உடையவராகிறார் என்று தீர்ப்பளித்தது. இதற்கிடையில் மூன்றாவது பதிலுரையாளர் 198 மோனோ பிளாக் பம்புகளை விற்றிருந்தால் அதற்கான விலையை அவரிடமிருந்து பெற மேல்முறையீட்டாளர் தகுதி உடையவராகிறார் என்றும் நீதிமன்றம் கூறியது. மோனோ பிளாக் பம்புகளை மூன்றாவது பதிலுரையாளர் திருப்பித்தரவில்லை என்றாலோ அல்லது அதற்கான விலையை மேல்முறையீட்டாளருக்கு அளிக்கவில்லை என்றாலோ மூன்றாவது பதிலுரையாளர் நியாயமற்ற முறையில் பலனடைவார் என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(ஆ) சம்பந்தப்பட்ட நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரணை செய்தபின் 198 மோனோ பிளாக் பம்புகளை மேல்முறையீட்டாளருக்கு திருப்பித் தருமாறு மூன்றாம் பதிலுரையாளருக்கு உத்தரவிடுமாறும் அவரிடம் அந்த பம்புகள் இல்லையென்றால் அதற்கான விலையை கண்டறிந்து அந்தத் தொகையை மேல்முறையீட்டாளருக்கு செலுத்துமாறு உத்தரவிடுமாறும் உச்ச நீதிமன்றம் குவாலியர் மாவட்ட நுகர்வோர் மன்றத்திற்கு ஆணையிட்டு வழக்கை மாவட்ட நுகர்வோர் மன்றத்திற்கு அனுப்பியது.

(இ) மேல்முறையீடு மேற்சொன்ன அடிப்படையில் தீர்வு செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2012 SC 357; (2012) 1 SCC 555; I (2012) CPJ 30 (SC).

***

**2. ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்** *(எதிர்)* **கணேஷ் பாலிடெக்ஸ் லிமிடெட்**

(Transport Corporation of India Ltd. v. Ganesh Polytex Limited)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் நேரடி / முதல் மனு (Original Petition) எண்:341/ 1993-ல் 20.12.2006 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கணேஷ் பாலிடெக்ஸ் லிமிடெட் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1427/2007.

தீர்ப்பு தேதி : 05.11.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் சரக்குகளை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு போக்குவரத்து செய்கின்ற தொழிலை செய்து வருகிறார். பதிலுரையாளர் இழைநூல் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல், பலவிதமான ஆடைகள் தயாரித்து ஏற்றுமதி செய்தல் ஆகிய தொழிலை செய்து வருகிறார். 1992-ல் வங்கதேசத்தில் உள்ள திருமிகு அஸீம் கார்மென்ட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து 100 விழுக்காடு காட்டன் இழைநூல் கொண்ட ஆடையை ஏற்றுமதி செய்யுமாறு பதிலுரையாளருக்கு வேண்டுகோள் வந்தது. பதிலுரையாளர் ஐந்து லோடுகளுக்கான பொருட்களை பல்வேறு தினங்களில் மேல்முறையீட்டாளரிடம் ஒப்படைத்தார். பதிலுரையாளர்/ புகார்தாரரின் வங்கியாளரான அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பாங்க் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் பேசி ஒப்புதல் பெறும்வகையில் அனைத்து ஆவணங்களும் இஸ்லாமி பாங்க் பங்களாதேஷ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு அனுப்பி வைத்ததாக பதிலுரையாளர் தெரிவித்தார். மேலும் பதிலுரையாளர் சரக்குகளை தனது பெயருக்கு மீண்டும் திருப்பி அனுப்புமாறு போக்குவரத்து செய்பவரிடம் தெரிவித்திருந்தார். சரக்கு ஏற்றுக்கொள்பவரிடம் அது ஒப்படைக்கப்படாததால் பதிலுரையாளர் தேசிய ஆணையத்தில் புகார் செய்தார். மேல்முறையீட்டாளர் ஒரு லோடு தவிர மற்றவை அனைத்தும் வங்கதேச சுங்க அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித்தார். ஆனால் புகார் செய்தவர் அனுப்பிய விலைப்பட்டியலுக்கும் மேல்முறையீட்டாளர் காண்பித்த விலைப்பட்டியலுக்கும் இடையே வேறுபாடு இருந்ததால் வங்கதேச எல்லையில் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை என்று தேசிய ஆணையம் தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவு 23; சுங்கவரிச் சட்டம், 1962-ன் பிரிவுகள் 40, 41, 50, 51, 74 மற்றும் 75; சாட்சிய சட்டம், 1872-ன் பிரிவுகள் 78(4) & (6); சுங்கவரி, மத்திய கலால்வரி மற்றும் சேவைவரிகளை திரும்பப் பெறுவதற்கான விதிகள், 1995-ன் விதி 13.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Ganesh Polytex Ltd. v. Transport Corporation of India Ltd.,* Original Petition No.341 of 1993, order dated 20.12.2006. [Para 1]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்தியாவில் பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல் சுங்கவரிச் சட்டம், 1962-ன்கீழ் நெறிமுறைப் படுத்தப்பட்டுள்ளது. தரை வழியாக ஒரு பொருளை ஏற்றுமதி செய்பவர் மேற்படி சட்டத்தின் பிரிவு 50-ன்கீழ் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு ஏற்றுமதி சீட்டு அளித்து அது தொடர்பான பதிவு செய்து கொள்ளவேண்டும். ஏற்றுமதி செய்பவர் தேவையான கட்டணங்களை செலுத்திய பிறகு ஏற்றுமதி செய்யப்படும் பொருள் தடை செய்யப்பட்டப் பொருளாக இல்லாமல் இருந்தால், சம்பந்தப்பட்ட அலுவலர் பிரிவு 51-ன்கீழ் பொருளை ஏற்றுமதி செய்வதற்கும், வாகனத்தில் ஏற்றுவதற்கும் அனுமதி அளிப்பார். போக்குவரத்து செய்யும் நபர் சம்பந்தப்பட்ட அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி சீட்டு ஒப்படைக்கப்பட்டால் மட்டுமே பொருளை வாகனத்தில் ஏற்றுவதற்கு பிரிவு 40-ன்கீழ் அனுமதிக்கப்படுவார். மேலும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் நபர் பிரிவு 41-ன்கீழ் தக்க படிவத்தில் ஏற்றுமதி அறிக்கை ஒன்றை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு ஒப்படைக்க வேண்டும். மேல்முறையீட்டாளர் இந்திய எல்லையைக் கடந்து பெட்ரபோல் சுங்கவரி நிலையத்திற்கு அப்பால் (Petrapole Customs Station) பொருட்களை எடுத்துச் சென்றார் என்பதற்கு அத்தாட்சியாக அவர் மேற்சொன்ன இரு ஆவணங்களை அதாவது, ஏற்றுமதி சீட்டு மற்றும் ஏற்றுமதி அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கருதியது. நான்கு லோடுகளை எடுத்துச் சென்றது தொடர்பாக மேற்சொன்ன இரு ஆவணங்களை அவர் தாக்கல் செய்ததாக தேசிய ஆணையத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்தில் அளித்த மனுவிலோ அவர் தெரிவிக்கவில்லை. எந்தெந்த தேதியில் மேற்சொன்ன ஆவணங்கள் பெறப்பட்டன என்ற விவரமும் தெரிவிக்கப் படவில்லை.

(ஆ) மேல்முறையீட்டாளர், ஏற்றுமதிக்கான பொருளை வங்கதேசத்தில் உள்ள பெனபோல் சுங்கவரி நிலையத்தில் (Benapole Customs Station) ஒப்படைப்பதோடு சட்டப்படி தனது பொறுப்பு முடிந்துவிட்டது என்று வாதாடினர். வங்கதேசத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் வங்கதேச சட்டப்படி நெறிமுறைப் படுத்தப்படவேண்டும். ஆனால் மேல்முறையீட்டாளர் வங்கதேச சட்டப்படி சுங்கவரி நிலையங்களில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இறக்கி வைப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பது பற்றி

எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும் நான்கு லோடுகளில் உள்ள பொருட்களை பெனபோல் சுங்கவரி நிலையத்தில் எந்தெந்த தேதிகளில் ஒப்படைத்தார் என்ற விவரமும் தெரிவிக்கவில்லை.

(இ) மேல்முறையீட்டாளர் மூன்று லோடுகளுக்கான நுழைவு பட்டியலை ஏற்றுக்கொண்டு வங்கதேசத்து சுங்க அதிகாரி 10/11.04.2002 அன்று அளித்ததாக கூறிய கடிதம் பதிலுரையாளரின் நான்கு லோடுகளில் தெரிவிக்கப்பட்ட பொருட்கள் தொடர்புடையதுதானா என்பது உறுதி செய்யப்படவில்லை என நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. மேலும் வங்கதேசத்து சட்டத்தின்படி இறக்குமதி செய்யப்படும் பொருட்களை எவ்வாறு எடுத்துச் செல்லவேண்டும் என்பது பற்றி வழிமுறைகள் உள்ளதா என்று மேல்முறையீட்டாளர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. சாட்சிய சட்டம் பிரிவு 78–ன்படி பொது ஆவணங்களுக்கான ஆதாரம் தெரிவிக்கப்படவேண்டும். ஆனால் நடப்பு வழக்கில் சாட்சிய சட்டம் 78–ன்படி மேற்சொன்ன கடிதம் நிரூபிக்கப்படவில்லை.

(ஈ) வேறு எந்த ஆதாரமும் இல்லாதபோது, பதிலுரையாளர் வரியை திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை வைத்தார் என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில், மேல்முறையீட்டாளர் பொருட்களை பெனபோல் சுங்கவரி நிலையத்தில் ஒப்படைத்தார் என்று கருத முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

(உ) மேல்முறையீட்டாளர், வங்கதேசத்தில் உள்ள பெனபோல் என்ற இடத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல பதிலுரையாளர் தம்மிடம் ஒப்படைத்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். ஆகவே சட்டப்படி அவர் பொருட்களை கொண்டு சேர்த்தாரா என்று நிரூபிக்க வேண்டியது அவரது கடமை என்றும் அவர் அக்கடமையை செய்யத் தவறிவிட்டார் என்றும் உச்ச நிதிமன்றம் கூறியுள்ளது. தேசிய ஆணையம் பதிலுரையாளரின் கோரிக்கையை ஏற்று ஆணையிட்டது சரியே என்றும் அதில் தலையிடுவதற்கான முகாந்திரம் ஏதுமில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஊ) மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2014) CPJ 19 (SC); (2015) 3 SCC 571; AIR 2015 SC 826.

***

## 3. வீரேந்தர் குல்லர் *(எதிர்)* அமெரிக்கன் கன்சாலிடெஷன் சர்வீசஸ் லிமிடெட் மற்றும் பலர்

(Virender Khullar v. American Consolidation Services Ltd. & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் நேரடி/முதல் மனு (Original Petition) எண்:89/ 1995 மற்றும் 90/1995–ல் 22.03.2012 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

வீரேந்தர் குல்லர் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அமெரிக்கன் கன்சாலிடெஷன் சர்வீசஸ் லிமிடெட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4861/2012 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்:9217/2012.

தீர்ப்பு தேதி : 16.08.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

1994 டிசம்பர் மாதத்தில் ஆண்கள் உடுத்தும் ஆடைகள் அடங்கிய லோடுகளை மேல்முறையீட்டாளர்கள்/புகார்தாரர்கள் ஏற்றுமதிக்காக பதிலுரையாளர்களிடம் ஒப்படைத்தனர். அதற்கான ரசீதை முதலாவது பதிலுரையாளர் மேல்முறையீட்டாளருக்கு வழங்கினார். ரசீதுபடி லோடுகளை இரண்டாவது பதிலுரையாளருக்கு அமெரிக்காவில் உள்ள சென்ட்ரல் ஃபிடிலிட்டி பாங்க், ரிச்மாண்ட், வர்ஜீனியா என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். முதலாவது பதிலுரையாளர் லோடுகளை மும்பையில் உள்ள M/s. Hoeg Lines, Lief Hoegh & Co., A/S Oslo, Norway என்ற நான்காவது பதிலுரையாளரிடம் அமெரிக்காவில் உள்ள விலாசத்திற்கு அனுப்புவதற்காக ஒப்படைத்தார். கப்பலை ஓட்டிச் செல்பவர்களால் கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டில் (Bill of Lading) சரக்கை வாங்குபவரின் பெயர் சென்ட்ரல் ஃபிடிலிட்டி பாங்க் என்பதற்கு பதிலாக கரோனெட் குரூப் என்ற பெயருக்கு மாற்றியதாகவும் கப்பலில் அனுப்புபவர் பெயரும் கெவாலியர் ஷிப்பிங் கம்பெனி என்று மாறி இருந்ததாகவும் வேறு சில மாறுதல்களும் இருந்ததாகவும் புகார் செய்யப்பட்டது. 1995 மார்ச் வரை சரக்குகளுக்கான தொகை வராததால் மேல்முறையீட்டாளர் முதலாம் பதிலுரையாளருக்கு எதிராக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் செய்தார். முதலாம் பதிலுரையாளர் தாம் சரக்கு ஏற்றிச் செல்லும் கப்பலை நடத்துபவர் இல்லை என்றும் சரக்கை ஒருங்கிணைத்து அனுப்புபவர் என்றும் கரோனெட் குழுமத்தின் துணை நிறுவனமான Zip Code Inc., என்ற சரக்கை இறக்குமதி செய்கின்ற நிறுவனத்தின் முகவர் என்றும் ஆகவே ஒப்பந்தச் சட்டம், 1872-ன் பிரிவு 230-ன்படி அவருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்றும் வாதாடினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட தேசிய ஆணையம் 20.01.2004 அன்று வெளியிட்ட தனித்தனி ஆணைகளில் மேல்முறையீட்டாளர் வீரேந்திர குல்லர் கேட்ட தொகையில் ரூ.20,82,908.40-ம் மேல்முறையீட்டாளர் கிரீஷ் சந்தர் கேட்ட தொகையில் ரூ.15,27,461.76-ம் வட்டியோடு அளிக்குமாறு முதல் பதிலுரைளாயருக்கு ஆணையிட்டது. இந்த ஆணையை எதிர்த்து முதல் பதிலுரையாளர் உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு எண்கள்:2079/2004 மற்றும் 2080/2004 வழக்குகள் தொடுத்தார். உச்ச நீதிமன்றம் பதிலுரையாளர்களிடமிருந்து இழப்பீடு கோரியவர்களில் சரக்கை பெறுபவரையும் மேலும் சரக்கை எடுத்துச் செல்பவரையும் வழக்கில்

இணைத்திருக்க வேண்டும் என்று கூறியது. அந்த ஆணைக்கிணங்க, இரண்டாவது பதிலுரையாளரான சென்ட்ரல் ஃபிடிலிட்டி பாங்க், மூன்றாவது பதிலுரையாளரான Zip Code Inc., மற்றும் நான்காவது பதிலுரையாளரான Hoeg Lines/American President Lines Limited ஆகியோரும் வழக்கில் சேர்க்கப்பட்டனர். மூன்றாவது மற்றும் நான்காவது பதிலுரையாளர்கள் ஆஜராகாததால் அவர்கள் இல்லாமலேயே வழக்கு நடத்தப்பட்டது. இரண்டாவது பதிலுரையாளரிடமிருந்து எந்த இழப்பும் மேல்முறையீட்டாளரால் கோரப்படவில்லை. தேசிய ஆணையம் பத்தி 1-னில் கண்ட 22.03.2012 தேதியிட்ட ஆணையில் மூன்றாவது பதிலுரையாளரான Zip Code-தான் சரக்கு சீட்டில் குறிக்கப்பட்ட சரக்குகளை பெற்றார்கள் என்றும் ஆனால் வங்கிக்கோ அல்லது புகார்தாரர்களுக்கோ எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும் ஆகவே மேல்முறையீட்டாளர்களுக்கு அவர்கள்தான் இழப்பீடு செலுத்த வேண்டும் என்றும் முடிவு செய்தனர். ஆகவே மூன்றாவது பதிலுரையாளரை மேல்முறையீட்டாளர் வீரேந்திர குல்லருக்கு ரூ.20,82,902.40-ம் மேல்முறையீட்டாளர் கிரீஷ் சந்தருக்கு ரூ.15,25,461-ம் அத்தொகைகளை 01.04.1995-லிருந்து ஆண்டிற்கு 12 விழுக்காடு வட்டியுடனும் செலுத்தும்படி ஆணையிட்டது. மூன்றாவது பதிலுரையாளர் தேசிய ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து வழக்கேதும் தொடரவில்லை. ஆனால் புகார்தாரர்கள் மற்ற பதிலுரையாளர்களையும் இழப்பீட்டிற்கு பொறுப்பாக்க வேண்டும் என்று சிவில் மேல்முறையீடு செய்தனர். மேல்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23; ஒப்பந்தச் சட்டம், 1872-ன் பிரிவு 230.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*Marine Container Services South Pvt. Ltd. v. Go Go Garments,*
(1998) 3 SCC 247. (Relied) [Para 13]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) சரக்கு சீட்டுகளின் நகல்களை பார்த்த பின்பு சரக்குகளின் இடைத்தரகர் மூன்றாவது பதிலுரையாளரான Zip Code என்று நீதிமன்றம் குறித்துக் கொண்டது. சரக்கை பெறுபவர் என்ற இடத்தில் 'சென்ட்ரல் ஃபிடிலிட்டி பாங்க், ரிச்மாண்ட் வி.ஏ.' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் கப்பல் நிறுவனத்தின் பெயர் Hoegh Clipper/Eagle Prestige என்றும் சரக்கு சீட்டுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேல்முறையீட்டாளர்களால் முதல் பதிலுரையாளரிடம் சரக்குகள் ஒப்படைக்கப்பட்டன என்பது பற்றி எந்தவித சந்தேகமும் இல்லை என்று நீதிமன்றம் தெரிவித்தது. ஆனால் முதலாவது பதிலுரையாளருக்கு சரக்கை ஏற்றிச் செல்வதற்கோ அல்லது ஏனைய சேவைக்காகவோ பணம் ஏதும் செலுத்தப்பட்டது பற்றி மேல்முறையீட்டாளரால் எந்த தகவலோ அல்லது

சான்றோ தெரிவிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றம் குறித்துக் கொண்டது. ஆகவே முதல் பதிலுரையாளர், ஒப்பந்தப்படி சரக்கை வாங்குபவரின் முகவர் மட்டுமே என்று நீதிமன்றம் முடிவு செய்தது. சரக்குகளை ஏற்றிச் செல்லும்போது இழப்பு ஏற்பட்டதாக யாரும் தெரிவிக்கவில்லை. அதற்கு மாறாக கரோனெட் குரூப்பைச் சார்ந்த மூன்றாவது பதிலுரையாளரான Zip Code Inc., சரக்கை பெற்று கொண்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. சரக்குசீட்டில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள்படி, முதலாவது பதிலுரையாளர், இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு 230-ன்படி கரோனெட் குரூப் இன்கார்ப்பரேட்டட் என்ற நிறுவனத்தின் முகவர் மட்டுமே என்றும் ஆகவே மேல்முறையீட்டாளர்களும், முதன்மை நிறுவனமும் செய்து கொண்ட ஒப்பந்தம் அவர்களை கட்டுப்படுத்தாது என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஆ) *Marine Container Services South Pvt. Ltd. v. Go Go Garments,* என்ற வழக்கில் புகார்தாரர்கள் ஒரு நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டால் அந்த நிறுவனத்தின் முகவர்களுக்கு இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு 230-ன்படி பாதுகாப்பு உண்டு என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

(இ) இரண்டாவது பதிலுரையாளரான சென்ட்ரல் ஃபிடிலிட்டி பாங்க் மற்றும் நான்காவது பதிலுரையாளரான Hoegh Lines ஆகியோரைப் பொறுத்தவரை, நான்காவது பதிலுரையாளர் கப்பல் ஏற்றுமதி ஒப்பந்தப்படி சரக்கை ஏற்றிச் சென்று ஒப்படைத்தார் என்றும் அவருக்கும் மேல்முறையீட்டாளர்களுக்கும் இடையே எவ்வித ஒப்பந்தமும் இல்லை என்றும் தேசிய ஆணையம் கூறியதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இரண்டாவது பதிலுரையாளரான வங்கி, சரக்கை பெற்றவரிடமிருந்து எந்த தொகையையும் பெறாததால் மேல்முறையீட்டாளர்/புகார்தாரருக்கு அவர் அத்தொகையை அனுப்புகின்ற பிரச்சனை எழவில்லை என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. ஆகவே இவ்வழக்கில் கரோனெட் குரூப் இன்கார்ப்பரேட்டட் நிறுவனத்தின் துணை நிறுவனமான, மூன்றாவது பதிலுரையாளர் Zip Code மட்டுமே சரக்கை பெற்றுக் கொண்டு அதற்கான பணத்தை செலுத்தாததற்கு பொறுப்பு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஈ) தேசிய ஆணையத்தின் தீர்ப்பில் எவ்வித தவறும் இல்லை என்ற முடிவுக்கு வந்த உச்ச நீதிமன்றம் மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 3798; III (2016) CPJ 22 (SC); 2016(3) CPR 590 (SC).

***

## (e) கல்வி சேவைகள்

### 1. ராஞ்சி பல்கலைக்கழகம் *(எதிர்)* ஸ்நேஹ் குமார்

(Ranchi University v. Sneh Kumar)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 03.08.2007 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ராஞ்சி பல்கலைக்கழகம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஸ்நேஹ் குமார் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3163/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:3374/2008 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 08.04.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர், 1991–ல் மேல்முறையீட்டாளரது பல்கலைக்கழகத்தின் மூலம் முதுநிலை (கணிதம்) தேர்ச்சி பெற்றார். தான் சட்டப்படி தேவையான கட்டணத்தை செலுத்தியிருந்தும் மேல்முறையீட்டாளரின் பல்கலைக்கழகம் எம்.எஸ்சி சான்றிதழை தமக்கு வழங்காததால் சேவை குறைபாடு என்று அவர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986–ன் பிரிவு 12–ன்கீழ் புகார் செய்தார். மேல்முறையீட்டாளர் இந்த புகாரை எதிர்த்து கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. அவர் ஆஜராகாததால் மாவட்ட நுகர்வோர் மன்றம் 26.11.2002–ல் பிறப்பித்த உத்தரவின்படி மேல்முறையீட்டாளரை, பதிலுரையாளருக்கு சான்றிதழை வழங்குமாறும் ரூ.50,000/– இழப்பீடு வழங்குமாறும் ஆணையிட்டது. மேல்முறையீட்டாளர், மாநில நுகர்வோர் ஆணையத்தில் செய்த முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. தேசிய ஆணையம், சட்டப்படி பல்கலைக்கழகம் செய்கின்ற பணிகள் ‘சேவைகள்’ என்ற வரையறைக்குள் வரவில்லை என்ற வாதத்தை ஏற்றுக் கொண்டாலும் மேல்முறையீட்டாளர் தாற்காலிக சான்றிதழை கொடுக்க தவறியதால் இழப்பீடு வழங்க வேண்டியது நியாயமே என்று தீர்ப்பளித்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o), 12, 15, 19 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) பதிலுரையாளர், அகர்வால் மகிளா மஹா வித்யாலயா என்ற கல்வி நிறுவனத்தில் கணித ஆசிரியராக பணி புரிகிறார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. அவர் முதுநிலை பட்டத்தைப் பெற்றதற்கான சான்று ஏதும் அளிக்காமல் அந்தப் பணியை பெற்றிருக்க முடியாது. ஆகவே பதிலுரையாளர் சான்றிதழின் நகலைத்தான் கோரினார் என்கிற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என்றும் தாற்காலிக சான்றிதழ் மேல்முறையீட்டாளரால் வழங்கப்படவில்லை என்று முடிவு செய்து பதிலுரையாளருக்கு இழப்பீடு வழங்க நுகர்வோர் மன்றங்கள் வழங்கிய தீர்ப்பு மிகவும் தவறானது என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஆ)மேல்முறையீடு ஏற்கப்பட்டது. மாவட்ட மன்றம் மற்றும் மாநில, தேசிய ஆணையங்கள் அளித்த தீர்ப்புகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2011 SC 1824; I (2012) CPJ 29 (SC).

***

**2. அப்யுத்யா சான்ஸ்தா *(எதிர்)* யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர்**

(Abhyudya Sanstha v. Union of India & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

சிறப்பு விடுப்பு மனு (சிவில்) எண்கள்:5795-96/2009-லிருந்து எழுப்பப்பட்ட ரிட் மனு எண்:2701/2008; CAW No.52/2009 in W.P.2701/2008 மனுக்களில் பாம்பே உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் அமர்வு 07.01.2009 மற்றும் 16.01.2011 தேதிகளில் அளிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அப்யுத்யா சான்ஸ்தா - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:4305-06/2011 உடன் எண்கள்:4307-16/2011.

தீர்ப்பு தேதி : 12.05.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

2006 மற்றும் 2007 ஆண்டுகளுக்கு கல்வியியலில் டிப்ளமா படிப்பிற்காக அங்கீகாரம் கோரி தேசிய ஆசிரியர் கல்வி குழுவிற்கு (NCTE) மேல்முறையீட்டாளர் நிறுவனம் மனு செய்திருந்தது. மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான தேவை தற்போது இல்லை என்று மாநில அரசு கூறியதன் அடிப்படையிலும் NCTE–யின் மேற்கு பிராந்திய குழுவின் தணிக்கைக்குப் பிறகும் மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதற்கிடையில் மேற்கு பிராந்தியக் குழு சில நிறுவனங்களுக்கு கொடுத்த அங்கீகாரம் வேறு சிலர் கொடுத்த தகவலின் பேரில் உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. இந்த ஆணைக்கும் மேல்முறையீட்டாளருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் மேல்முறையீட்டாளர் சிறப்பு விடுப்பு மனு மூலமாக அந்த ஆணையை எதிர்த்து மனு செய்தார். உயர் நீதிமன்றத்தின் உத்தரவு தமது நிறுவனம் கல்வியியலில் டிப்ளமா படிப்பை தொடர்வதை பாதிக்கும் என்று தமது மனுவில் கூறினர். தமது மனுவின் சுருக்கத்திலும், தேதிகள் பட்டியலிலும் தேசிய நிறுவனமானது மேற்படி படிப்பை ஆரம்பிக்க தங்களுக்கு அனுமதி / அங்கீகாரம் அளித்ததாக அவர்கள் தெரிவித்தனர். உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் மேற்கு பிராந்திய குழு தங்களுக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டனர். ஆயினும், மாநில அரசின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் தங்களது மனுக்களை மறு பரிசீலணை செய்யவேண்டும் என்று மேற்கு பிராந்திய குழுவுக்கு வழிகாட்டுதல் ஆணை பிறப்பிக்கும்படி, உச்ச நீதிமன்றத்தை அவர்கள் வேண்டினர். மனுவின் சுருக்கத்திலும் தேதிகள் பட்டியலிலும் தெரிவித்த விவரங்கள் வேண்டுமென்றே அளிக்கப்பட்டவை அல்ல என்றும் அவர்கள் தெரிவித்தனர். தேசிய ஆசிரியர் கல்விக் குழு, சிறப்பு விடுப்பு மனுக்களை எதிர்த்தது. மேல்முறையீட்டு மனுக்கள் கண்டிக்கத்தக்க வகையில் செலவுகளோடு தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 136; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o); ஆசிரியர் கல்விக்கான தேசிய குழு சட்டம், 1993–ன் பிரிவுகள் 12, 14, 15, 16, 17-A மற்றும் 32; ஆசிரியர் கல்விக்கான தேசிய குழு (அங்கீகாரம், விதிமுறை மற்றும் செயல்முறை) நடைமுறைகள், 2007–ன் நடைமுறைகள் 7(11) மற்றும் 8(12).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Dalip Singh v. State of U.P.,* (2010) 2 SCC 114 : (2010) 1 SCC (Cri) 324.
2. *G.Narayanaswamy Reddy v. Govt. of Karnataka,* (1991) 3 SCC 261.
3. *Hari Narain v. Badri Das,* AIR 1963 SC 1558.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர்கள் அங்கீகாரத்திற்காக அளித்த மனுக்களின் உண்மையான நிலை தமக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழுவின்

அங்கீகாரம் கிடைத்துவிட்டது என்று அவர்கள் அளித்த தவறான திசைதிருப்பும் வகையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலும், மேற்கு பிராந்திய குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வேறு சிலர் தொடர்ந்த வழக்குகளோடு மேல்முறையீட்டாளர்களது சிறப்பு விடுப்பு மனு அனுமதிக்கப்பட்டது என்றும் அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி தற்போதைய நிலையே தொடரட்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது என்றும் நீதிமன்றம் கூறியது. அதன் பிறகு கல்வியில் டிப்ளமா படிப்பிற்கு மாணவர்களை மேல்முறையீட்டாளர்கள் நிறுவனத்தில் அனுமதிக்குமாறு மாநில அரசுக்கு இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் உண்மையை திரித்து கூறாமலும், மேற்கு பிராந்திய குழுவின் அங்கீகாரம் குறித்து தவறான அறிக்கையும் தெரிவிக்காமல் இருந்திருந்தால் உச்ச நீதிமன்றம் சிறப்பு விடுப்பு மனுவை அங்கீகரிக்காமல் இருந்திருக்கும் என்றும் இடைக்கால ஆணை பிறப்பிக்காமல் இருந்திருக்கும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஆ) மேல்முறையீட்டாளர்களது நிறுவனங்களை நடத்துபவர்கள் அப்பாவிகளோ அல்லது எழுத்தறிவில்லாதவர்களோ அல்ல. மேலும், இது தொடர்பான சட்ட விதிமுறைகளையோ, நீதிமன்ற வழிமுறைகளையோ அறியாதவர்களும் அல்ல என்று நீதிமன்றம் கூறியது. தூய நோக்கத்தோடு மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும் வேண்டுமென்றே தவறான அறிக்கையை அளித்ததன் மூலம் நீதியின் பாதையை மாசு படுத்திவிட்டார்கள் என்றும் ஆகவே, அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 136-ன்கீழ் அவர்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிப்பதற்கான தகுதி இல்லாதவர்கள் என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(இ மேலும், உச்ச நீதிமன்றம் அளித்த இடைக்கால உத்தரவின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்களது கல்வி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களது சேர்க்கையை அங்கீகரிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிப்பது சரியாக இருக்காது என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. நிகழ்ந்த செயலுக்கு மாணவர்கள் பொறுப்பு என்பதற்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், மேற்கு பிராந்திய குழுவினால் மேல்முறையீட்டாளர்கள் எவருக்கும் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது என்றும், சட்ட பிரிவு 17-A மற்றும் விதிமுறை 8(12)-ன்படி தடை இருப்பதனால் மேல்முறையீட்டாளர்கள் மாணவர்களை அனுமதித்திருக்க முடியாது என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. கல்வியின் பெயரால் இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வணிக நோக்கோடு மாணவர்களை தமது கல்வி நிறுவனங்களில் அனுமதிப்பதற்கு நீதிமன்ற வழிமுறைகளை மேல்முறையீட்டாளர்கள் தவறாக பயன்படுத்திக் கொண்டார்கள் என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. ஆகவே, தவறான முறையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களது சேர்க்கையை நியாயபடுத்துவதற்கோ, அங்கீகரிப்பதற்கோ எந்தவித முகாந்திரமும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(ஈ) ஒவ்வொரு மேல்முறையீட்டாளரும் தலா ரூ.2 இலட்சம் கட்டணம் செலுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இத்தொகை மூன்று மாதங்களுக்குள் மஹாராஷ்ட்ரா சட்ட சேவைகளுக்கான குழுமத்திற்கு செலுத்தப் படவேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது.

(உ) மேலும், மாநில அரசின் ஒதுக்கீட்டின் பேரில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட அமைப்புகளிடமிருந்து பட்டம் பெறுவதற்கான தகுதியில்லை என்றும் அம்மாதிரி பட்டம் அளிக்கப்பட்டிருந்தால் அது செல்லுபடியாகாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. உச்ச நீதிமன்றம் அளித்த இடைக்கால ஆணையின் பேரில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களது பட்டியலை தயாரித்து வெளியிடுமாறும் அதை கல்வித்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அம்மாதிரி பட்டம் பெற்றவர்கள் வேறு எந்த பொறுப்பிலும் நியமனம் பெறாதவகையில் அப்பட்டியலை அனைத்து அரசு நிறுவனங்களுக்கும், அரசு உதவி பெறும் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்குமாறும் கல்வித்துறைக்கு உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

(ஊ) கல்விக்கான டிப்ளமா படிப்பில் மாணவர்களை சேர்ப்பதற்கு தங்களுக்கு தகுதி உண்டு என்று தவறான அறிக்கை அளித்ததன் மூலம் மாணவர்களுக்கு தீங்கிழைத்ததற்காக மேல்முறையீட்டாளர்கள் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1 இலட்சம் இழப்பீடு அளிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

(எ) மேற்சொன்ன அடிப்படையில் மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 6 SCC 145.

***

## (f) தவணைமுறையில் வாங்குதல்

### 1. சிட்டிகார்ப் மாருதி நிதி நிறுவனம் *(எதிர்)* எஸ்.விஜயலட்சுமி

(Citicorp Maruti Finance Ltd. v. S. Vijayalaxmi)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:737/2005-ல் 27.07.2007 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சிட்டிகார்ப் மாருதி நிதி நிறுவனம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

எஸ்.விஜயலட்சுமி – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:9711-9716/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:19314/2007 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது) உடன் 3119/2008 உடன் 9550, 10544, 11696, 10547/2009.

தீர்ப்பு தேதி : 14.11.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலளிப்பவர், மாருதி ஆம்னி கார் ஒன்றை தவணைமுறையில் வாங்குவதற்காக மேல்முறையீட்டாளருடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி மேல்முறையீட்டாளர் ரூ.1,82,396/-ஐ பதிலளிப்பவருக்கு கொடுப்பதாகவும், அந்த தொகையை அவர் 60 சமமான தவணைகளில் வட்டியோடு மாதம் ரூ.4,604/- என்ற முறையில் திருப்பிக் கொடுப்பதாகவும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. காலதாமதமின்றி தவணைகளை செலுத்துவது ஒப்பந்தத்தின் முக்கியமான அம்சமாகும். பதிலளிப்பவர் தவணைத் தொகைகளை குறித்த காலத்தில் செலுத்த தவறியதால், 10.10.2002 அன்று மேல்முறையீட்டாளர் அவருக்கு சட்டப்படி நோட்டீஸ் அனுப்பினார். பதிலளிப்பவர் கொடுத்திருந்த 26 காசோலைகள் வங்கியில் பணம் இல்லாததால் திருப்பப்பட்டன. மேல்முறையீட்டாளர், நோட்டீஸ் பெற்ற மூன்று நாட்களில் ரூ.1,31,299.44-ஐ திருப்பிச் செலுத்துமாறு பதிலளிப்பவரைக் கோரினார். அதன் பிறகு பதிலளிப்பவர் கேட்டுக்கொண்டதின் பேரில், மேல்முறையீட்டாளர் 16.05.2003-க்குள் ரூ.60,000/-த்தை ரொக்கமாக அளித்தால் எஞ்சியுள்ள தொகையான ரூ.1,26,564.84-ஐ முடிவுகட்டுவதாக (liquidate) 10.05.2003 அன்று தெரிவித்தார். பதிலளிப்பவர், ரூ.60,000/- செலுத்துவதில் ஏதேனும் காலதாமதம் ஏற்படுத்தினால் முழுத் தொகையையும் செலுத்த வேண்டி வரும் என்றும் தெளிவுபடுத்தினார். ஆனால், பதிலளிப்பவர், மேற்படி தொகையை செலுத்தாததால், மேல்முறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்த பின்னர் வண்டியை எடுத்துக்கொண்டார். பதிலளிப்பவருடைய வீட்டிலிருந்து வண்டியை எடுத்துக் கொண்டதாக மீண்டும் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார். எடுத்த பொருள் பற்றிய பட்டியல் ஒன்றை தயாரித்து அதில் பதிலளிப்பவருடைய கணவரின் கையொப்பத்தையும் பெற்றுக் கொண்டார். பின்பு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்களிடம் வண்டியை காண்பித்து அதை மதிப்பிட்டு பின்பு விற்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார். திருவாளர்கள் சின் சின் மோட்டார்ஸ் (M/s. Chin Chin Motors) அதிகபட்ச விலையாக ரூ.70,000/-க்கு வண்டியை எடுத்துக்கொள்ள முன்வந்தனர். மேல்முறையீட்டாளர், கடனில் பாக்கியிருந்த ரூ.1,21,920.48-ல் மேற்படி ரூ.70,000/-த்தை கழித்துக் கொண்டதாகவும், எஞ்சிய தொகையான ரூ.51,920.48-ஐ திருப்பிச் செலுத்துமாறும் மேல்முறையீட்டாளர், பதிலளிப்பவருக்கு தெரிவித்தார். பதிலளிப்பவர் ஷேக் சராய் என்ற இடத்தில் உள்ள மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகார் செய்தார். புகாரை அனுமதித்த நுகர்வோர் நீதிமன்றம், பதிலளிப்பவருக்கு ரூ.1,50,000/-த்தை புகார் அளித்த தேதியிலிருந்து தொகையை செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு 9 விழுக்காடு வட்டியோடு

அளிக்குமாறு, மேல்முறையீட்டாளருக்கு ஆணையிட்டது. அத்துடன் தொல்லை கொடுத்தல் மற்றும் வழக்கிற்கான செலவு ஆகியவற்றிற்காக ரூ.5,000/- அளிக்குமாறு ஆணையிட்டது. மாநில நுகர்வோர் ஆணையம், மேற்படி ஆணையை உறுதி செய்ததோடு அபராதத் தொகையாக ரூ.50,000/- செலுத்துமாறும் ஆணையிட்டது. மேல்முறையீட்டாளர், தேசிய நுகர்வோர் ஆணையத்தில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்தார். மாநில ஆணையம் விதித்த அபராதத் தொகையை தேசிய ஆணையம் ஒத்தி வைத்தது. எஞ்சிய ஆணை உறுதி செய்யப்பட்டது. ஆனால், மேல்முறையீட்டாளர், பதிலளிப்பவராகிய புகார்தாரருக்கு வழக்காடும் செலவாக ரூ.10,000/- அளிக்க வேண்டும் என தேசிய ஆணையம் ஆணையிட்டது. அதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளரான வங்கி, மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் தீர்ப்பை ஏற்று தொகையை ஏற்கனவே செலுத்தியதால் நிவாரணம் ஏதும் அளிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; தவணைமுறைச் சட்டம், (26/1972) பிரிவு 21; இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், (2/1934) பிரிவு 45JA.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

1. *Bharathi Knitting Company v. DHL Worldwide Express Courier,* [(1996) 4 SCC 704:AIR 1996 SC 2508:1996 AIR SCW 3115]. [Para 16]
2. *ICICI Bank Ltd. v. Prakash Kaur,* (2007) 2 SCC 711:AIR 2007 SC 1349:2007 AIR SCW 1667]. [Para 17, 21]
3. *Sundaram Finance Ltd. v. State of Kerala,* AIR 1996 SC 1178. [Para 18]

### 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

(அ) மேல்முறையீட்டாளர், மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் ஆணையை ஏற்று செயல் படுத்தியதாலும், தேசிய ஆணையம், மாநில ஆணையம் விதித்த அபராதத் தொகையை ஒத்தி வைத்ததாலும், கடன் பெற்றவரிடமிருந்து வண்டியை சட்டத்திற்கு புறம்பாகவும், தவறான முறையிலும், மேல்முறையீட்டாளர் எடுத்துக் கொண்டார் என்று நுகர்வோர் மன்றங்கள் எடுத்த முடிவு சரியானதுதானா என்று நிர்ணயிப்பதுதான் நீதிமன்றத்தின் முன்பு உள்ள ஒரே ஒரு பிரச்சனை என உச்ச நீதிமன்றம் கருதியது. பல்வேறு வழக்குகளில் குறிப்பாக, *ICICI Bank Ltd. v. Prakash Kaur* என்ற வழக்கில் இப்பிரச்சனை குறித்து தெளிவாக முடிவெடுக்கப்பட்டது என நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. தவணைமுறைக்கு உட்பட்ட அடமானம் செய்யப்பட்ட பொருளாக இருந்தாலும் சட்டப்படிதான் பொருளை திருப்பி எடுத்துக் கொள்ள முடியும் என்று உச்ச

நீதிமன்றம் மேற்படி வழக்கில் தெரிவித்திருந்தது. நடப்பு வழக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களிலும் பொருளை (வாகனத்தை) சட்டப்படிதான் திருப்பி எடுக்கவேண்டுமே தவிர பலவந்தமாக எடுக்க கூடாது என்று கூறப்பட்டுள்ளது. பொருளை வாங்குபவர் பெயருக்கு உரிமை மாற்றப்படும் வரை தவணைமுறையில் அளிப்பவர் வண்டியின் சொந்தக்காரராக இருப்பார். ஆனால் அதை காரணம் காட்டி பலவந்தமாக அவர் பொருளை எடுத்துக்கொள்ள முடியாது. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டும் நடைமுறைகள் மற்றும் மேல்முறையீட்டாளர் வங்கியின் நடைமுறைகளும் இதையே ஆதரிக்கின்றன/வலியுறுத்துகின்றன. இந்த நடைமுறைகளுக்கு புறம்பாகவும், நீதிமன்றம் வகுத்த விதிமுறைகளுக்கு மாறாகவும் பொருளை கைப்பற்றினால் அம்மாதிரி செயலைத் தவறு என்று கண்டிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

(ஆ) நடப்பு வழக்கில், வாகனத்தைக் கைப்பற்றிய பிறகு இன்னொருவருக்கு விற்றுவிட்டதால், மூன்றவது நபர் சம்பந்தப்பட்ட உரிமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவேதான் வழக்கு நிலுவையில் இருந்தபோதிலும், மேல்முறையீட்டாளர் வங்கி, மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் ஆணையை செயல்படுத்தியிருக்கக் கூடும் என நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(இ) மேல்முறையீட்டாளருக்கு எவ்வித நிவாரணமும் அளிக்க முடியாது என தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் மேல்முறையீடுகளை மேற்சொன்ன வகையில் முடிவு செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 67 (SC); AIR 2012 SC 509.

***

## (g) வீட்டுவசதி

**1. நார்னே கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் *(எதிர்)* யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பலர்**

(Narne Construction Private Limited & Ors. v. Union of India & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

ஹைதராபாத்தில் உள்ள ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் W.P.Nos.28246/2009, 302, 3947, 5091/2010, 26520/2009, 360, 364, 405, 429, 304-305, 339, 356-357, 5003, 5088, 5121, 5131 மற்றும் 5903/2010. (சிறப்பு விடுப்பு (சி) எண்கள்:3499-517/2011 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது) ஆகிய வழக்குகளில் 13.08.2010 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நார்னே கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4432-50/2012.

தீர்ப்பு தேதி : 10.05.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர்கள், நிலத்தை வாங்கி, வீட்டு மனைகளாக மாற்றி மேம்படுத்தும் தொழிலை செய்து வந்தனர். செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்தும், சிற்றேடு/கையேடுகள் மூலம் அறிவிப்பு செய்தும் உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். புகார்தாரர்களும் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி உறுப்பினர்களாக சேர்ந்தனர். வீட்டுமனைகளை விற்பது மற்றும் ஒதுக்கீடு செய்வது குறித்து இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டபடி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உறுப்பினர்கள் மட்டுமே வீட்டுமனைகளை பெறுவதற்கு தகுதியுடையவர்கள். மற்றவர்கள் இதில் சேர முடியாது. வீட்டுமனை விற்பனையானது ‘உள்ளது உள்ளபடி’ (as is where is basis) என்ற முறைக்கு உட்பட்டது அல்ல. மேம்படுத்தப்பட்ட மனைகளே விற்பனை செய்யப்படும் என்றும் வீட்டுமனைகள் அமைப்புக்கான (layout) ஒப்புதல் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்ற பின்பே அவை விற்பனை செய்யப்படும் என்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவுபடுத்தின. வீட்டுமனையின் விலை, நிலத்திற்கு மட்டுமின்றி மேம்பாடு மற்றும் கட்டுமான வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். மேல்முறையீட்டாளர்கள் மேற்சொன்ன விதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதால் உறுப்பினர்கள்/நுகர்வோர் சிலர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் பிரிவு 2(1)(o)-வின் கீழ் தாங்கள் ‘சேவை புரிபவர்கள்’ என்ற வரையறைக்குள் அடங்கவில்லை என்று வாதிட்டனர். உச்ச நீதிமன்றம் *LDA v. M.K.Gupta* என்ற வழக்கில் முடிவு செய்தபடி உறுப்பினர்களுக்கு வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்து கட்டுமான வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும், வீட்டுமனைகள் அமைப்புக்கான (layout) ஒப்புதல் பெற்றுத் தருவதாகவும் ஒரு நிறுவனம் வாக்குறுதி அளித்தால் அது நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 2(1)(o)-வின்படி ‘சேவை’ என்ற வரையறைக்குள் அடங்கும் எனவும், ஆகவே சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட நுகர்வோர் நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டிற்குள் வரும் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மேல்முறையீடுகளை தாக்கல் செய்துள்ளனர். மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o); சொத்து மாற்றுதல் சட்டம், 1882-ன் பிரிவு 54.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Narne Constructions P. Ltd. v. Union of India,* W.P.No.28246 of 2009 order dated 13.08.2010 (AP). [Para 1]
2. *U.T. Chandigarh Administration v. Amarjeet Singh,* (2009) 4 SCC 660:(2009) 2 SCC (Civ) 273. (Distinguished) [Para 7]
3. *Bangalore Development Authority v. Syndicate Bank,* (2007) 6 SCC 711. (Relied upon) [Para 8]
4. *LDA v. M.K.Gupta,* (1994) 1 SCC 243. (Relied upon) [Para 1, 3, 4, 5, 6]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர் நிறுவனத்திற்கும், அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட வணிக நடவடிக்கையை பார்க்கும்போது அது ஒரு அசையா சொத்தை மாற்றம் செய்வது மட்டுமின்றி வேறு சில ஒப்பந்தங்களும் இருந்தன. ஆகவே, சட்டத்தின் கீழ் அது 'சேவை' என்று கருதப்படும் என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. *U.T. Chandigarh Administration v. Amarjeet Singh (supra)* என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தானது 'உள்ளது உள்ளபடி' (as is where is basis) என்ற அடிப்படையில் சாதக பாதகங்களைப் பார்க்காமல் விற்கப்பட்டது. ஆனால் நடப்பு வழக்கில் அம்மாதிரி அல்ல. வாங்குபவர்களுக்கு எந்தெந்த வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்கள் உறுப்பினர்களுக்கு குறிப்பிடப்பட்ட விலையில் வீட்டுமனைகளை அளிக்க முன்வந்துள்ளார். வீட்டுமனைகளை மேம்படுத்தி விற்பது, ஒப்பந்தத்தில் ஒரு பகுதி என்பதால் மேல்முறையீட்டாளர்கள் ஒரு 'சேவை'யை மேற்கொண்டுள்ளார்கள் என்றுதான் கூறவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஆ) *LDA v. M.K.Gupta* என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ள 'நுகர்வோர்' மற்றும் 'சேவை' ஆகிய சொற்களின் பொருளை விரிவாக ஆராய்ந்தது. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் நுகர்வோர்களது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம் என்பதால் அதிலுள்ள ஷரத்துகள் நுகர்வோர் பயன்படும் வகையில் தாராளமாக விளக்கப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஒரு தனியார் அமைப்போ அல்லது சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட அமைப்போ, வீடு கட்டுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்போது, ஒரு தனி நபரின் உபயோகத்திற்காக மேற்கொள்கிறார்கள். ஒரு தனி நபர் வீடு கட்டும்போது தானாகவே முன்வந்து கட்டலாம் அல்லது ஒரு ஒப்பந்தக்காரர் / வீடு கட்டும் நிறுவனம் மூலமாக அந்தப்பணியை செய்து முடிக்கலாம். அவர் அதற்கான தொகையை செலுத்துவதால் சட்டத்தின்படி அது 'சேவை' என்று கருதப்படும். அதுபோலவே சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட அமைப்பு மனையை

மேம்படுத்துவதற்கோ, ஒதுக்கீடு செய்வதற்கோ அல்லது வீடு கட்டுவதற்கோ முன்வந்தால் அதுவும் 'சேவை' என்ற பொருளின் கீழ் அடங்கும். முதலில் சொன்னது ஒப்பந்தக்காரர்கள் மேற்கொள்ளும் 'சேவை' மற்றொன்று சட்டப்படி செய்கின்ற 'சேவை'. 'சேவை'-யில் குறைபாடு இருந்தாலோ அல்லது அது ஒப்பந்தத்திற்கு மாறுபட்டிருந்தாலோ, சட்டத்தின் கீழ் அது நியாயமற்ற வியாபார நடைமுறை என்று கருதப்படும்.

(இ) *Bangalore Development Authority v. Syndicate Bank* என்ற வழக்கில் முழுத் தொகையும் செலுத்தப்பட்டு வீடும் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், ஏற்கத்தக்க காரணங்களின்றி, உடைமை உரிமைப் பத்திரம் (title deed) அளிக்கப்படவில்லை என்றால், ஒதுக்கீடு செய்யப்பட்டவருக்கு அலைக்கழித்தல் மற்றும் மன உளைச்சலுக்காக இழப்பீடு வழங்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அத்தோடு உடைமை உரிமை பத்திரத்தை தயாரித்து அளிக்கவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

(ஈ) இப்பொருள் சம்பந்தமான சட்டநிலை, பல தீர்ப்புகளின் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அதை மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் நீதிமன்றம் கருதியது. உயர் நீதிமன்றம் அம்மாதிரி தீர்ப்புகளை சரியான முறையில் கவனித்து நடப்பு வழக்கில் உபயோகித்துள்ளதால், அவர்களது தீர்ப்பில் தலையிடுவதற்கான எந்த முகாந்திரமும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) ஆகவே, மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2012) 5 SCC 359; AIR 2012 SC 2369; II (2012) CPJ 4 (SC).

***

## (h) வீட்டுவசதி (மோசடியான ஒதுக்கீடு)

### 1. பிரதாப் சிங் யாதவ் *(எதிர்)* அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் மற்றும் ஒருவர் (Pratap Singh Yadav v. Haryana Urban Development Authority & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:186/2011 மற்றும் மறு ஆய்வு மனு எண்:191/2012 ஆகியவற்றில் 25.09.2012 மற்றும் 26.11.2012 ஆகிய தேதிகளில் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பிரதாப் சிங் யாதவ் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமம் மற்றும் ஒருவர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:10418-10419/2016.

தீர்ப்பு தேதி : 28.10.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

நவம்பர் 1998-ல் ஃபரீதாபாத்திலுள்ள HUDA இரண்டாம் பகுதியில் (Sector-II) உள்ள வீட்டுமனை எண்:2342, மேல்முறையீட்டாளருக்கு ஒதுக்கப்பட்டது. மனையின் தோராய விலையில் 25 விழுக்காட்டை குறிப்பிட்ட காலத்திற்குள் மேல்முறையீட்டாளர் செலுத்தினார். 30.10.2000-ம் அன்று பதிலுரையாளரிடமிருந்து வந்த கடிதத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர், எஸ்டேட் அலுவலர் முன்பு ஆஜராகி, தனது மனையை சரண் செய்வதாகவும், வேறு மனையை ஒதுக்கீடு செய்யுமாறும் வேண்டினார். எஸ்டேட் அலுவலர் அந்த மனுவை ஏற்று பிணை உறுதிப் பணத்தில் (earnest money) 10 விழுக்காடு பிடித்தம் செய்த பின்பு, மேல்முறையீட்டாளர் செலுத்திய எஞ்சிய தொகையை 01.12.2000 தேதியிட்ட காசோலை மூலமாக திருப்பியளித்தார். மேல்முறையீட்டாளரும் எவ்வித மறுப்பும் இன்றி அதைப் பெற்றுக் கொண்டு காசாக்கினார். ஆயினும், மேல்முறையீட்டாளர், மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகார் செய்து, மனையை தனக்கு திருப்பித் தருமாறும் அல்லது அதே அளவுள்ள வேறு ஒரு மனையை அதே விலைக்கு ஒதுக்கீடு செய்து, இழப்பீடும் வழங்குமாறும் பதிலுரையாளருக்கு, ஆணை பிறப்பிக்க வேண்டினார். மாவட்ட நுகர்வோர் மன்றம் புகாரை ஏற்று மேல்முறையீட்டாளருக்கு மனையை ஒப்படைக்குமாறும் அவர் கட்டியத் தொகைக்கு 12 விழுக்காடு வட்டி வழங்குமாறும் ஆணையிட்டது. அது தவிர மேல்முறையீட்டாளருக்கு இழைக்கப்பட்ட மன உளைச்சல் மற்றும் அலைக்கழித்தல் ஆகியவற்றிற்காக ரூ.50,000/- இழப்பீடும், வழக்காடும் செலவிற்காக ரூ.5,000/- வழங்குமாறும் ஆணையிட்டது. இந்த தீர்ப்பை எதிர்த்து பதிலுரையாளர், மாநில நுகர்வோர் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டாளர் தானாகவே முன்வந்து மனையை சரண் செய்ததால் அவர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்படி நுகர்வோர் என்ற வரையறைக்குள் வரமாட்டார் என்று கூறிய ஆணையம் மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டது. மேல்முறையீட்டாளர், தேசிய ஆணையத்தில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்தார். அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மனுக்களின் ஒரு பகுதி ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*Pradeep Sharma v. Chief Administrator,*
*Haryana Urban Development Authority & Anr.,*
AIR 2016 SC 438; 2016(1) CPR 111 (SC). (Relied) [Para 7]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மாவட்ட நுகர்வோர் மன்றம் பிறப்பித்த ஆணையை அடுத்து சம்பந்தப்பட்ட மனை, மேல்முறையீட்டாளருக்கு மாற்றுப் பத்திரம் (Conveyance Deed) மூலம் 09.01.2008 அன்று மாற்றப்பட்டுவிட்டது என்பதை நீதிமன்றம் குறித்துக் கொண்டது. சம்பந்தப்பட்ட மனை மீது கட்டிடம் கட்டுவதற்காக மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த கட்டிட வரைபடத்திற்கும், எஸ்டேட் அலுவலர் ஒப்புதல் வழங்கினார். மேல்முறையீட்டாளர் செலுத்தவேண்டியது எதுவும் இல்லை ("no due" certificate) என்பதற்கான சான்றிதழும் 15.03.2009 அன்று எஸ்டேட் அலுவலர் வழங்கினார். மேல்முறையீட்டாளரும் மனையின் மீது வீடு கட்டிவிட்டார். பதிலுரையாளர், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்து மாநில ஆணையத்தில் மேல்முறையீடு செய்திருந்த நிலையில் பதிலுரையாளரின் ஆணை எதுவும் இல்லாமல் மேற்கூறிய சம்பவங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்று விசாரணை நடத்துமாறு பதிலுரையாளருக்கு நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. பதிலுரையாளர் அளித்த அறிக்கையின் பேரில், மனை ஒதுக்கீடு, மாற்றுப் பத்திரம் அளித்தல், கட்டிடப் பணிக்கான ஒப்புதல் அளித்தல், வீட்டில் முழுவதும் குடியேறியதற்கான சான்றிதழ் ஆகிய அனைத்தும் பதிலுரையாளரின் கட்டுப்பாட்டில் பணிபுரிபவர்களுடைய உடந்தையோடு நடைபெற்றுள்ளன என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஆ) இந்தப் பின்னணியில் இரண்டு விஷயங்களை பரிசீலிக்க வேண்டியுள்ளது என நீதிமன்றம் கருதியது. முதலாவது, மோசடிக்கு உடந்தையாக இருந்த அலுவலர்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியது. இரண்டாவது, மோசடியான முறையில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்கு பிறகு, இதனால் பயனடைந்த நபர் வீடும் கட்டி விட்டதால் அதை எந்த முறையில் எதிர்கொள்வது என்பது பற்றியது.

(இ) முதலாவது பிரச்சனையைப் பொறுத்தவரையில் பதிலுரையாளர் நிறுவனத்தை சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து சட்டப்படி அவர்களுக்கு தண்டனை அளிக்குமாறு நீதிமன்றம் ஆணையிட்டது.

(ஈ) இரண்டாவது பிரச்சனையைப் பொறுத்தவரையில் 2015-2016 ஆம் ஆண்டில் ஃபரீதாபாத் இரண்டாம் பகுதியில் மனை ஒதுக்கீட்டிற்கான விலை ஒரு சதுர மீட்டருக்கு

ரூ.18,000/- என நீதிமன்றம் கண்டறிந்தது. மேல்முறையீட்டாளர் மோசடியான முறையில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் பயனாளி என்றாலும், வழக்கின் உண்மை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை நோக்கும்போது, வீட்டை இடித்து மனையை பதிலுரையாளருக்கு திரும்பவும் ஒப்படைப்பது மேல்முறையீட்டாளருக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்று நீதிமன்றம் கருதியது. *Pradeep Sharma v. Chief Administrator, Haryana Urban Development Authority & Anr.*, என்ற இதே மாதிரியான வழக்கில், நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை தற்போதைய விலைப்படி தொகை செலுத்த வேண்டும் மற்றும் ஏற்கனவே செலுத்திய தொகையை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வீட்டை தக்கவைத்துக் கொள்ள அனுமதி அளித்தது. அதே மாதிரியான நிவாரணம் நடப்பு வழக்கில் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவது நியாயமாக இருக்கும் என்று நீதிமன்றம் கருதியது. ஆகவே, உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டாளருக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.18,000/- என்ற விலைப்படி 6 மாதங்களுக்குள் மனை ஒதுக்குமாறு பதிலுரையாளருக்கு ஆணை பிறப்பித்தது. அம்மாதிரி ஒதுக்கீடு செய்யவில்லை என்றால், மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும் மாநில மற்றும் தேசிய ஆணையங்கள் பிறப்பித்த ஆணைகள் உறுதி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(உ) மேற்சொன்ன அடிப்படையில் மேல்முறையீடுகளின் ஒரு பகுதி ஏற்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2016) CPJ 1 (SC); 2017(1) CPR 279 (SC).

***

## (i) வீட்டுவசதி (ஒப்படைக்காமல் இருத்தல்)

### 1. ஷிவாலிக் விஹார் சைட்ஸ் (பி) லிமிடெட் மற்றும் பலர் *(எதிர்)* தர்ஷன் சிங் (Shivalik Vihar Sites P. Ltd & Ors. v. Darshan Singh)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஷிவாலிக் விஹார் சைட்ஸ் (பி) லிமிடெட் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

தர்ஷன் சிங் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்பு மூலம் மேல்முறையீடு செய்வதற்கான மனு (சிவில்) எண்:33470/2012.

தீர்ப்பு தேதி : 10.12.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர்கள், காரர் (பஞ்சாப்) என்ற இடத்தில் மேல்முறையீட்டாளர்கள் கட்டவிருந்த ஷிவாலிக் வீட்டுமனை தொகுப்பில் வீட்டுமனைகளை வாங்குவதற்கு பணம் கட்டிருந்தார்கள். அடுக்குமாடி வீட்டிற்கான மொத்த தொகையையும் செலுத்தி இருந்தார்கள். மேல்முறையீட்டாளர்கள் கொடுத்த ஒதுக்கீட்டு கடிதத்தில் அடுக்குமாடி வீடுகள் 13 மாதங்களுக்குள் ஒப்படைக்கப்படும் என்று தெளிவாக கூறப்பட்டிருந்தது. 2 ஆண்டுகள் ஆயினும், வீடுகள் ஒப்படைக்கப்படாததால், பதிலுரையாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 12–ன்கீழ் புகார் செய்தனர். காரர் சிவில் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்தனர். மேல்முறையீட்டாளர்கள் அடுக்குமாடி கட்டவேண்டிய இடத்தை ஒப்படைப்பதில் தற்போதைய நிலையே தொடரவேண்டும் *(status quo)* என்று நீதிமன்றம் ஆணையிட்டது. பதிலுரையாளர்களுடைய புகார் மனு மாவட்ட நுகர்வோர் மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள் சட்டத்தின் பிரிவு 15–ன்கீழ் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் செய்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது. பதிலுரையாளர்களுக்கு அடுக்குமாடி வீடுகளை ஒப்படைக்காதது சேவையில் குறைபாடு என மாவட்ட நுகர்வோர் மன்றம் கூறியதை மாநில ஆணையம் ஏற்றுக்கொண்டது. மேல்முறையீட்டாளர்கள், மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் ஆணையை நிறைவேற்ற தவறியதால் பதிலுரையாளர்கள் நிறைவேற்று மனுக்களை சட்டத்தின் பிரிவு 27-A–ன்கீழ் தாக்கல் செய்து தாங்கள் செலுத்திய தொகையை திருப்பித் தரவேண்டும் என்று கோரினர். மாவட்ட நுகர்வோர் மன்றம் நிறைவேற்று மனுக்களை ஏற்று பதிலுரையாளர்கள் செலுத்திய தொகையை திருப்பிச் செலுத்துமாறு மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிட்டது. இதை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள், மாநில ஆணையத்தில் மேல்முறையீடு செய்தனர். மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. தேசிய ஆணையத்தில் தாக்கல் செய்த மறு சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. தேசிய ஆணையம் இரண்டு வழக்குகளிலும் ரூ.50,000/– தண்டனைக் கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் ஆணையிட்டது. இந்த ஆணையை எதிர்த்து நடப்பு சிறப்பு விடுப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சிறப்பு விடுப்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மாவட்ட நீதிமன்றம் பின்வரும் விவரங்களின் அடிப்படையில் புகார் மனுவை ஏற்றுக்கொண்டது என உச்ச நீதிமன்றம் கண்டறிந்தது.

"(i) எதிர் தரப்பினர் இப்புகார் மனு பதிவு செய்த தேதியான 18.09.2010-லிருந்து 10 மாதங்களுக்குள் வழக்கிற்கான செலவாக ரூ.5,500/-உடன் வீட்டை புகார்தாரருக்கு ஒப்படைக்க வேண்டும் அல்லது

(ii) இந்த ஆணை கிடைத்த 30 தினங்களுக்குள் எதிர் தரப்பினர் புகார்தாரர் செலுத்திய ரூ.9,78,129/-ஐ வழக்கிற்கான செலவான ரூ.5,500/-உடன் திருப்பித் தரவேண்டும்.

(iii) எதிர் தரப்பினர் புகார்தாரர் செலுத்திய ரூ.9,78,129/-மீது அவர்கள் தொகையை செலுத்திய தேதியிலிருந்து அதை திருப்பித்தரும் தேதி வரை ஆண்டுக்கு 9 விழுக்காடு வட்டியுடன் இழப்பீடாக இந்த ஆணை கிடைத்த 30 நாட்களுக்குள் திருப்பித் தரவேண்டும்.

மேற்சொன்ன (i) அல்லது (ii) இரண்டில் ஒன்றை நிறைவேற்றத் தவறினால் எதிர் தரப்பினர் முழுத் தொகையையும், தொகையை பெற்ற 22.11.2005-லிருந்து அதை திருப்பித் தரும்வரை ஆண்டிற்கு 12 விழுக்காடு என்ற விகிதத்தில் அபராத வட்டியாக செலுத்த வேண்டும். மேற்சொன்ன ஆணை (iii)-ஐ முப்பது நாட்களுக்குள் பின்பற்ற தவறினால் ஒவ்வொரு மாதமும் செலுத்தவேண்டிய தொகைக்கு 12 விழுக்காடு அபராத வட்டி என்ற கணக்கில் தொகையை புகார்தாரருக்கு திருப்பித் தரும்வரை எதிர் தரப்பினர் செலுத்தவேண்டும்."

(ஆ) வழக்கின் உண்மை நிலவரங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் சேவையில் குறைபாடு இருப்பதாக மாவட்ட நுகர்வோர் மன்றம் சரியாகவே முடிவுக்கு வந்துள்ளது என்றும் மாநில ஆணையமும் இதில் தலையிடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சரியாகவே தீர்ப்பளித்துள்ளது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. பதிலுரையாளர்கள் செலுத்திய தொகையை மேல்முறையீட்டாளர்கள் திருப்பித் தரவேண்டும் என்று மாவட்ட நுகர்வோர் மன்றம் அளித்த ஆணையும் சரியானதே என்றும் அதை உறுதி செய்வதில் மாநில மற்றும் தேசிய ஆணையங்கள் எவ்வித தவறும் இழைக்கவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(இ) மேல்முறையீட்டாளர்கள் நிறைவேற்று மனு மீதான ஆணை தொடர்பாக தாக்கல் செய்த மறு சீராய்வு மனுவை தள்ளுபடி செய்யும்போது ரூ.50,000/- மட்டுமே அபராதத் தொகையாக விதித்ததன் மூலம் தேசிய ஆணையம் தாராளமாகவே நடந்து கொண்டிருக்கிறது என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஈ) சிறப்பு விடுப்பு மனுக்களை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டாளர்களை முழுத் தொகையையும் பதிலுரையாளருக்கு ஒரு மாத காலத்திற்குள் திருப்பித் தருமாறு ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

I (2013) CPJ 15 (SC).

***

## (j) காப்பீட்டு நஷ்டஈடு கோருதல்

### 1. ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் ஒருவர் *(எதிர்)* ஹீரா லால்

**(LIC of India & Anr. v. Hira Lal)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:3625/2007-ல் 17.04.2009-அன்று தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் ஒருவர் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஹீரா லால் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்புக்கான மேல்முறையீட்டு (சிவில்) எண்:28693/2009.

தீர்ப்பு தேதி : 23.08.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர் ஒரு விபத்தில் முழுமையாக கண்பார்வை இழந்தார். தாம் பெற்றுள்ள காப்பீடு பாலிசியின் கீழ் அவருக்கு இழப்பீடு வழங்கும்படி நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 12-ன் கீழ் மனு செய்தார். மாவட்ட மன்றம் இந்த மனுவை தள்ளுபடி செய்தது. மாநில ஆணையம் தீர விசாரித்தபின் பதிலுரையாளரின் மனுவை ஏற்றுக்கொண்டது. மாநில ஆணையத்தின் ஆணையை எதிர்த்து முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் தாக்கல் செய்த மறு சீராய்வு மனுவை (Revision Petition) தேசிய ஆணையம் நிராகரித்தது. தேசிய ஆணையத்தின் ஆணையை எதிர்த்து சிறப்பு விடுப்பு மனுவை (SLP) உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில், சிறப்பு விடுப்பு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 12 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது: "மாநில ஆணையம் "விபத்து"என்பதன் பொருளை விரிவாக பரிசீலித்தது. காப்பீட்டு பாலிசியின் கீழ், சாதாரண நிலையில் இந்த வார்த்தையின் பொருள் எதிர்பாராத நிகழ்வு அல்லது எதிர்பாராத சூழலில் ஏற்படும் செயல்பாடு அல்லது உருவாக்கப்படாத ஒன்று என்பது ஆகும். காப்பீடு சொல்லகராதி, E.R.ஹார்டி, 1981-ஆம் பதிப்பின்படி "விபத்து" என்பது தற்செயலான அல்லது எதிர்பாராத நிகழ்வு ஆகும். இவ்வகை காப்பீட்டு பாலிசிகளில் விபத்து என்பதன் பொருளை சரியாக நிர்ணயித்து அதற்கான வரையறையை (boundary) முடிவு செய்வது கடினமான ஒன்றாகும். உதாரணமாக இயற்கையான காயங்களும், மரணங்களும் மற்றும் விபத்தினால் ஏற்படும் காயங்களும், மரணங்களும் பொதுவான விளைவையே ஏற்படுத்த முடியும். அதே நேரத்தில் விபத்து என்று கூறும்போது ஒரு வகையான வன்முறை (violence) அல்லது விபரீதம் (casualty or *vis major)* கண்டிப்பாக நிகழ்ந்திருக்க வேண்டும். தெரிந்த காரணங்களால் ஏற்படும் வியாதிகள் விபத்தின் கீழ் எடுக்கமுடியாது". மோஸ்லே மற்றம் ஒயிட்லே அவர்களின் சொல்லகராதி 8-ஆம் பதிப்பு 1970-ல் விபத்து என்பதன் பொருள் / விளக்கம் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

> "விபத்து என்பது நீதிமன்றத்தில் ஏற்கத்தக்கதாய் இருக்கவேண்டுமானால், அது தவிர்க்க முடியாத தீவிர சிகிச்சைக்கு உட்படுகின்ற, இறைவனின் / இயற்கையின் செயலால் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வாக இருந்தால் மட்டும் போதாது; அலட்சியம் மற்றும் தவறான நடவடிக்கைகளால் ஏற்படாத எதிர்பாராத நிகழ்வு, இழப்பு அல்லது அசம்பாவிதமாக இருக்கவேண்டும்."

மாநில ஆணையம் சொல்லகராதியின் பொருளை தொகுத்து பார்த்து விபத்து என்பது எதிர்பாராததாக இருக்கவேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் போன்ற நபர் மீது குற்றம் சாட்ட முடியாத நிகழ்வாக இருக்கவேண்டும் என்று தெளிவக எடுத்துரைத்தது. எனவே சொல்லகராதியில் கொடுக்கப்பட்ட பொருள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையில் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்டது ஒரு விபத்து என்பது மறுக்க இயலாத ஒன்று. அதுவும் 100% கண்பார்வை இழக்க காரணமாய் இருந்தது விபத்தாகத்தான் இருக்கமுடியும். மேலும் பதிலுரையாளர்களோ அல்லது மருத்துவரோ 100% கண்பார்வை இழப்பு முறையீட்டாளரின் கவனக் குறைவாலோ அல்லது அவரது செயலாலோ ஏற்பட்டது என்று சொல்லவில்லை. மேலும் ஒரு வழக்கில் இரண்டுவித விமர்சனங்களுக்கு வழியுண்டு எனில் நுகர்வோருக்கு பயனுடையதாய் அமையும் கருத்தை எடுத்துக்கொள்வதுதான் சரியாக இருக்கும் என்று மாநில ஆணையம்

கூறியுள்ளது. அதுமட்டுமல்லாது ஆயுள் காப்பீட்டு சட்டம் சமூக பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட ஒன்று என்றும் பாலிசிதாரருக்கு உரிய பயனை சட்டப்படி அவர்கள் பெறவேண்டும் என்பதே அதன் குறிக்கோளாக இருக்கமுடியும். நீதிமன்றங்கள் குறுகிய நோக்கோடு விபத்து என்பதின் பொருளை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் மாநில ஆணையம் மேல்முறையீட்டை ஏற்று மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் ஆணையை ஒதுக்கிவைத்தது.

(ஆ) தேசிய ஆணையம் தனித்துவமாக இந்த வழக்கை பரிசீலணை செய்தது எனவும் மாநில ஆணையம் பதிலுரையாளர் விபத்தின் மூலமாகவே கண்பார்வையை இழந்தார் என்றும் அவர் காப்பீட்டு இழப்பீட்டை பெற தகுதி பெற்றவர் என ஆணையிட்டதையும் உறுதி செய்தது என உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(இ) தேசிய ஆணையமும் மாநில ஆணையமும் எடுத்த முடிவில் சட்டபூர்வமான எந்த எதிர்மறையும் இல்லை என்றும் பதிலுரையாளர் விபத்தினால் ஏற்பட்ட காரணங்களாலே தன் பார்வையை இழந்தார் என உச்ச நீதிமன்றம் நிர்ணயித்தது.

(ஈ) இதன்படி சிறப்பு விடுப்பு மனு நிராகரிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 4 (SC).

***

**2. கோயல் நகை மாளிகை** *(எதிர்)* **நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**(Goel Jewellers v. National Insurance Co. Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பின்மேல் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கோயல் நகை மாளிகை – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7460/2011.

தீர்ப்பு தேதி : 09.09.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த மேல்முறையீட்டாளர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 21–ன்படி தேசிய ஆணையத்தில் நேரடியாக வழக்கை பதிவு செய்தார். நகை மாளிகையில் துப்பாக்கி முனையில்

களவு நிகழ்ந்தது எனும் உண்மையை ஏற்று இழப்பீட்டை கொடுக்க பதிலுரையாளர் மறுத்துவிட்டதாகவும் தேசிய ஆணையத்தில் வாதாடினார். 28.10.1997-ல் பதிந்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தேசிய ஆணையம் புகார் மனுவை நிராகரித்தது. அந்த ஆணையை எதிர்த்து முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்தார். முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 21 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

மேல்முறையீட்டாளரின் இழப்பீட்டு கோரிக்கையை காப்பீட்டு நிறுவனம் (பதிலுரையாளர்) நிராகரித்தது நியாயமே என தேசிய ஆணையம் முடிவு செய்ததில் எந்தவிதமான சட்ட இடர்பாடுகளும் இல்லை என உச்ச நீதிமன்றம் இவ்வழக்கை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 1 (SC).

***

**3. இந்திய ஏற்றுமதி கடன் உறுதியளிப்பு கழகம்** *(எதிர்)* **M/s. கர்க் சன்ஸ் இண்டர்நேஷனல்**

**(Export Credit Guarantee Corporation of India Ltd. v. M/s. Garg Sons International)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்கள்:662 முதல் 674/2002, 933/2002 மற்றும் இறுதி மேல்முறையீட்டு எண்கள்:238, 246 மற்றும் 247/2001 ஆகியவற்றில் 18.02.2003-அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

இந்திய ஏற்றுமதி கடன் உறுதியளிப்பு கழகம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

M/s. கர்க் சன்ஸ் இண்டர்நேஷனல் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1557/2004 உடன் சிவில் மேல்முறையீட்டு எண்கள்:1542 முதல் 1553, 1555, 1556, 1558 மற்றும் 1559/2004.

தீர்ப்பு தேதி : 17.01.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் ஒரு அரசு நிறுவனம். ஏற்றுமதியாளர்களின் வணிகத்தை காப்பீடு செய்வது இவர்களது பணியாகும். இங்கிலாந்து நாட்டிலுள்ள M/s. நேச்சுரல் செலக்ஷன் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திற்காக ஏற்றுமதி செய்த பொருட்களை காப்பீடு செய்வதற்காக பதிலுரையாளர் நிறுவனம் முறையீட்டாளரிடம் ஒரு பாலிசியை வாங்கியது. 28.12.1995 முதல் பதிலுரையாளரிடம் வாங்கிய பொருட்களுக்கு வெளிநாட்டில் இருந்த நிறுவனம் பணத்தை தரவில்லை. காப்பீடு பெற்றவர் இறக்குமதியாளர் பணத்தை திரும்ப செலுத்தாத சூழலில் கடன்பெறும் நிலையை ரூ.50 இலட்சத்திற்கு உயர்த்தி தரும்படி கோரிக்கை விடுத்தார். இதைத் தொடர்ந்து 17 இழப்பீட்டு கோரிக்கைகளை முன் வைத்தார். காப்பீட்டு ஒப்பந்தப் பிரிவு 8-ன்படி வெளிநாட்டு இறக்குமதியாளர் பணத்தை கட்ட தவறும்போது குறிப்பிட்ட கால அளவையின்படி இந்திய கடன் உறுதி கழகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இதை செய்யாததால் காப்பீட்டு கழகம் கோரிய இழப்பீட்டை தர மறுத்தது. காப்பீடு பெற்றவர் பல இழப்பீட்டு கோரிக்கைகளை புகார் மனுக்கள் மூலமாக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் தொடர்ந்தார். மனுக்களை ஏற்று மாநில ஆணையம் காப்பீட்டு கழகம் உரிய இழப்பீட்டையும், 9% வட்டியையையும் இதர செலவுகளையும் தர உத்தரவிட்டது. காப்பீட்டு நிறுவனம் தேசிய ஆணையத்தில் மேல்முறையீடு செய்ததில் 9 கோரிக்கைகளை நிராகரிக்கவும், 4 கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவும் ஆணையம் ஆணைபிறப்பித்தது. இதனால் பாதிப்படைந்த இருவரும் உச்ச நீதிமன்றத்தில் தம் மேல்முறையீட்டை பதிவு செய்தனர். உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டு எண்கள் 1547 மற்றும் 1577/ 2004-ஐ ஏற்று மற்றவைகளை நிராகரித்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Oriental Insurance Co. Ltd. v. Sony Cheriyan,*
   AIR 1999 SC 3252.
2. *Polymat India Pvt. Ltd. v. National Insurance Co. Ltd.,*
   AIR 2005 SC 286.
3. *M/s. Sumitomo Heavy Industries Ltd. v. Oil and Natural Gas Co.,*
   AIR 2010 SC 3400.

4. *Rashtriya Ispat Nigam Limited v. M/s. Dewan Chand Ram Saran,* AIR 2012 SC 2829.
5. *Vikram Greentech (I) Ltd. & Anr. v. New India Assurance Co. Ltd.,* AIR 2009 SC 2493.
6. *Sikka Papers Ltd. v. National Insurance Co. Ltd. & Ors.,* AIR 2009 SC 2834.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) காப்பீட்டு கழகத்தின் வழக்குறைஞர், தேசிய ஆணையம் அளித்த தீர்ப்பில் 9 கோரிக்கைகள் (claims) நிராகரிக்கப்பட்டதாகவும், 4 கோரிக்கைகள் ஏற்கப்பட்டது என கூறப்பட்டு இருந்தும், ஆணையில் 5 கோரிக்கைகள் ஏற்கப்பட்டும், 11 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன என கூறினார். வழங்கப்பட்ட தீர்ப்பில் தட்டச்சுப் பிழைகள் இருந்ததாகவும் மேல்முறையீட்டு எண்கள்:1547 மற்றும் 1557/2004 ஆகிய இரண்டு கோரிக்கைகளில் மட்டும் சட்டப்படியான அனைத்து தேவைகளும் (statutory requirements) பூர்த்தி செய்யப்பட்டதால் அவைகளில் மட்டும்தான் கோரிக்கைகளை ஏற்கத்தக்கவை எனவும் கூறினார். மேலும் பதிலுரையாளரின் வழக்கறிஞர் தட்டச்சுப் பிழைகள் இருந்ததை ஒப்புக் கொண்டாலும், மேல்முறையீட்டு எண்கள்:1543, 1544, 1545, 1546 மற்றும் 1559/2004 ஆகியவற்றில் உள்ள மனுக்களும் ஏற்கப்படவேண்டும் என கூறினார்.

(ஆ) நீதிமன்றம் 23.03.1995-ல் வழங்கப்பட்ட காப்பீட்டு பாலிசியின் ஷரத்துகளை, குறிப்பாக பிரிவு 8-ன்படி overdue payments பிரிவு 19-ன்படி பொறுப்பை தள்ளி வைத்தல் (Exclusion of Liability) ஆகியவற்றை கவனமாக பரிசீலணை செய்தது. பிரிவு 19-ல் (அ) மற்றும் (ஆ)-வில் கண்ட நிபந்தனைகளை சேர்த்து பரிசீலிக்கும்போது காப்பீடு செய்தவர் பிரதி மாதம் 15-ஆம் தேதி செயல்பாட்டினை தெரிவிக்க வேண்டும் என்பதையும் வெளிநாட்டு இறக்குமதியாளர் 30 நாட்களுக்குள் பகுதியாகவோ, முழுமையாகவோ பணப்பட்டுவாடா செய்யாவிடில் அதனை காப்பீட்டாளருக்கு தெரிவிக்க வேண்டுமெனவும் தவறினால் காப்பீட்டு ஒப்பந்தம் செயலற்றதாகிவிடும் என்பதைக் கண்டறிந்தது.

(இ) ஒரு ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் உள்ள சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றங்கள் அச்சொற்களை கூட்டியோ, குறைத்தோ மாற்று சொற்களை உபயோகித்தோ உத்தரவுகள் பிறப்பிக்கக் கூடாது என்பது வெகுகாலமாக நிலை நாட்டப்பட்ட ஒரு கோட்பாடு ஆகும் என்று நீதிமன்றம் கூறியது. மேலும் ஒரு காப்பீட்டு பாலிசியை அளிக்கும்போது அதில் தெரிவிக்கப்பட்டுள்ள அபாய நேர்வுகளுக்கு (risks) பொறுப்பு ஏற்று இழப்பீடு வழங்க காப்பீட்டு நிறுவனம் முன்வருவதால்,

பாலிசியில் உள்ள ஷரத்துகளை மிகவும் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது. மேலே எடுத்துக்காட்டப்பட்ட தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டியது.

(ஈ) ஆவணங்களை பரிசீலித்தபின் நீதிமன்றம் காப்பீடு செய்தவர்/பாலிசிதாரர் காப்பீட்டு ஒப்பந்தத்தின்படி 8(b) கூறுகளை கடைபிடிக்கவில்லை என தெரிவித்தது. மேல்முறையீட்டு எண்:1547 மற்றும் 1557/2004-ஐ தவிர இதர மனுக்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளில் வெளிநாட்டு இறக்குமதியாளர் கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் நிலுவையிலுள்ள தொகையை செலுத்தவில்லை என்பதை பாலிசிதாரர் காப்பீட்டு நிறுவனத்திற்கு தெரிவிக்கவில்லை என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(உ) எனவே உச்ச நீதிமன்றம் இந்த இரண்டு மேல்முறையீட்டு மனுக்கள் தொடர்பான கோரிக்கைகள் அதாவது 1547 மற்றும் 1557/2004 மட்டும் ஏற்கப்படவேண்டும் என்றும் மற்றவை நிராகரிக்கப்படவேண்டும் எனவும் தீர்ப்பு அளித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

II (2013) CPJ 1 (SC); 2013(4) CPR 373 (SC); 2017(1) CPR 53 (SC).

***

## 4. சந்தீப் குமார் சௌராசியா *(எதிர்)* கோட்ட மேலாளர், நியூ இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்

**(Sandeep Kumar Chourasia v. Divisional Manager, The New India Insurance Co. Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் இறுதி மேல்முறையீட்டு எண்:339/2006 (சிறப்பு விடுப்பு (சி) மனுவிலிருந்து எழுப்பப்பட்ட எண்:25991/2008) 14.01.2008-அன்று கொடுக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சந்தீப் குமார் சௌராசியா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கோட்ட மேலாளர்,
நியூ இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2759/2013.

தீர்ப்பு தேதி : 02.04.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

1997 ஜுலை மாதம், மேல்முறையீட்டாளரின் தகப்பனார் P.D.சௌராசியா ரூ.7 இலட்சத்திற்கு "ஜனதா கிராமின் வியக்திகட் துர்கட்னா பாலிசியை" மேல்முறையீட்டாளருக்கு (மகனுக்கு) பாலிசியை எடுத்திருந்தார். இந்த பாலிசியின்படி, விபத்தினால் ஏற்படும் மரணம், முழுமையான செயலிழப்பு, இரண்டு கைகளோ, கால்களோ, கண்களோ, ஒரு கையோ, ஒரு காலோ, ஒரு கண்ணோ இழக்க நேர்ந்தால் தக்க இழப்பீடு வழங்கப்படும். 22.10.1999 அன்று மேல்முறையீட்டாளர் விளையாடிக்கொண்டிருக்கும்போது கீழே விழுந்து தலையின் வலது புறத்திலும், வலது கண்ணிலும் காயங்கள் ஏற்பட்டது. அவர் முதலில் அரசு மருத்துவ மனையிலும் பின்பு தனியார் மருத்துவ மனையிலும் சிகிச்சை பெற்றார். பிலாய் அரசு மருத்துவமனையை சார்ந்த உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் ஜெய்ஸ்ரீ கோபிநாத் 22.11.1999-அன்று வழங்கிய மருத்துவ சான்றிதழில் கண்களில் ஏற்பட்ட காயங்களினால் வலது கண்ணில் முழுமையான பார்வையையும், இரண்டு காதுகளில் மிகவும் அதிக அளவில் செவித்திறனையும் இழந்தார் என குறிப்பிட்டிருந்தார். மருத்துவர் K.K.மிஸ்ரா மற்றும் மருத்துவர் A.K.வர்மா ஆகியோர் வழங்கிய சான்றிதழ்களிலும் செயலிழப்பின் விகிதாசாரத்தில் சிறிய மாறுதல்களோடு அம்மாதிரியே கூறியிருந்தனர். துர்க் மாவட்ட மருத்துவ குழுமம், 27.10.2005ல் வழங்கிய சான்றிதழ்களிலும் வலது கண்ணில் 100% பார்வை இழப்பு உள்ளது என உறுதிபடுத்தியுள்ளது. மேல்முறையீட்டாளரின் தந்தை பதிலுரையாளரிடம் தன் மகன் விபத்தினால்தான் பார்வையை இழந்தார் என அதற்குண்டான இழப்பீட்டை தரும்படி கோரினார். ஆனால் பதிலுரையாளர் இந்த இழப்பு பாலிசியில் கொடுக்கப்படாத நிலையில் உள்ளது என நிராகரித்தது. மேல்முறையீட்டாளர் தன் தந்தையின் மூலம் ரூ.7 இலட்சம் நஷ்டஈடும் அதனுடன் வட்டியும் வழங்கும்படி கேட்டிருந்தார். காப்பீட்டு நிறுவனம் மேல்முறையீட்டாளர் தன் பார்வையை இழந்தது விபத்தினால் அல்ல அவருக்கு தைஸிஸ் புல்பி (Phthisis bulbi) என்ற நோய் இருந்தது என்றும் பிறவியிலிருந்தே அவருக்கு காது கேட்கவில்லை என்றும் தெரிவித்தது. மாநில ஆணையத்தின் உத்தரவின் பேரில் ஏற்படுத்தப்பட்ட மருத்துவக்குழு (Medical Board) மனுதாரரை 05.08.2005-அன்று பரிசீலித்து அதன் அறிக்கையை அளித்தது. அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்தது: "(i) வலது கண்ணில் முழுமையாக கண்பார்வை இழப்பு உள்ளது என்றும் (ii) நோயாளிக்கு குறைந்த பார்வை (pathological myopia) இருந்தது என்றும் இதற்குமுன் இவருக்கு கதிரியக்க ஒளி விலகல் அறுவை சிகிச்சை (radial keratotomy surgery) நடந்துள்ளது என்றும் (iii) விளையாடும்போதும், கீழே விழும்பொழுதும் வலது கண்ணில் ஏற்பட்ட காயம் அவருக்கு பார்வை இழப்பை ஏற்படுத்தியிருக்கலாம் என்றும் பார்வையை மீண்டும் பெற வாய்ப்பில்லை என்றும் பதிவு செய்தனர். மாநில ஆணையம் 28.10.1999-ல் தானி மருத்துவமனை (Dani Hospital) தயாரித்த மருத்துவ அறிக்கையை சார்ந்து தைஸிஸ் புல்பி எனும் வலது கண்ணில் ஏற்பட்ட வியாதியே பார்வை இழப்பிற்கு காரணமாய் இருக்கலாம் என கருதியது. மாநில ஆணையம் மருத்துவர் குழு 05.08.2005-ல்

வழங்கிய மருத்துவ சான்றிதழை எடுத்துக்காட்டியது. ஆனால் விபத்தின் காரணமாக மேல்முறையீட்டாளர் கண்பார்வையை இழந்தார் என்ற முடிவை நிராகரித்தது. தேசிய ஆணையம், மாநில ஆணையத்தின் ஆணையை ஏற்று மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்தது. தேசிய, மாநில ஆணையங்களின் ஆணையினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த முறையீடு உச்ச நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 13(4)(iv), 18 மற்றும் 23; ஆதாரசட்டம் 1872, பிரிவு 45.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) உச்ச நீதிமன்றம், நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் இரண்டும் 05.08.2005-ல் மருத்துவகுழு வழங்கிய பரிந்துரைகளை சரிவர பார்க்கவில்லை என்று கருதியது. இந்த மருத்துவ அறிக்கையில், மேல்முறையீட்டாளர் விளையாட்டின்போது கீழே விழுந்து அதன் விளைவாக பார்வையை இழந்திருக்கலாம் என்பதனை பதிவு செய்திருந்தது. புகார் மனுவில் வழக்கு தொடர்ந்தவரின் தந்தை, தன் மகன் வீட்டிற்கு வெளியே விளையாடும்போது தவறி கீழே விழுந்து ஏற்பட்ட விபத்தினால் வலது கண்ணில் பார்வை இழந்தார் என்று தெரிவித்து இருந்ததையும் இதே கூற்றுடைய வாக்குமூலம் (Affidavit) பதிவு செய்திருந்ததையும் பதிலுரையாளர்கள் மறுக்கவில்லை என்பதையும் நீதிமன்றம் பதிவு செய்தது.

(ஆ) மேலும் மாநில, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் மேல்முறையீட்டாளருக்கு தைஸிஸ் புல்பி எனும் வியாதி இருந்ததனால் பார்வை இழந்தார் எனும் முடிவை எடுத்தது மிகவும் தவறானதொன்றாகும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மருத்துவ இலக்கியங்கள் தைஸிஸ் புல்பி என்பது உடற்கூற்றில் கடைசி நிலையில் ஏற்படும் கண்நோய் என்றும் நோய் பரவல் வியாதி (diffusion disease) கண்காட்சி அமைப்பை பாதிக்கும் நோய் (ocular disease); காயத்தினுள் ஊடுருவி பாதிப்பை ஏற்படுத்தும் நிலை அதிகமாக பரவும் **(atrophy)** கதிர்வீச்சு (radiation) கண்களின் நிலை சமநிலை படுத்தாமல் இருப்பது ஆகிய காரணங்களால் ஏற்படும் நோய் என்றும் தெரிவிக்கின்றன. 05.08.2005-அன்று மருத்துவகுழு தவறி விழுகின்ற விபத்தினால் “தைஸிஸ் புல்பி” ஏற்படக்கூடும் எனத் தெரிவித்த பரிந்துரையை முழுமையாகத் தவறவிட்டு விட்டனர். மேல்முறையீட்டாளர் 22.10.1999-ல் நிகழ்ந்த விபத்திற்கு போதுமான ஆதாரங்களை மாநில ஆணையத்தில் சமர்ப்பித்து விபத்தின் விளைவாக ஏற்பட்ட காயத்தினால்தான்

பார்வையை இழந்தார் என பதிவு செய்தார். உச்ச நீதிமன்றம், மாநில, தேசிய ஆணையங்கள் பதிலுரையாளர் 1–ஆம் நபர் அளித்த காப்பீட்டு பாலிசியில் இது குறிப்பிடப்படவில்லை எனும் தவறான முடிவை எடுத்து இழப்பீட்டை தரமறுத்தது தவறாகும் என கூறியது.

(இ) அனைத்தையும் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், மாநில, தேசிய ஆணையங்கள் வழங்கிய தீர்ப்பை ஒதுக்கி வைத்து பதிலுரையாளர் மேல்முறையீட்டாளருக்கு ரூ.7 இலட்சமும், 6% வட்டியும் வழக்கு தொடுத்த நாளிலிருந்து வழங்கவேண்டும் என ஆணைபிறப்பித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 4 SCC 270; III (2013) CPJ 29 (SC); 2013(2) CPR 321 (SC).

***

**5. மெட்டல் பவுடர் கம்பெனி லிமிடெட்** *(எதிர்)* **ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**(Metal Powder Company Ltd. v. Oriental Insurance Company Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு நீதிமன்றம் A.S.No.1350/1989–ல் வழங்கப்பட்ட 28.04.2006 தேதியிட்ட ஆணையின் மீது.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

மெட்டல் பவுடர் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:481/2009.

தீர்ப்பு தேதி : 07.04.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

சென்னை உயர் நீதிமன்றம் 28.04.2006–ல் வழங்கிய ஆணைக்கு எதிராக அந்த ஆணையை திரும்பிபெற வாதி மேல்முறையீட்டை தொடுத்தார். இவர் மேற்கு ஜெர்மனியில் ஃபிராங்க்பாட் நகரில் உள்ள மெடால்ஜெசலியாசாப்ட் AG (M/s. Metallgeseliachaft AG, Frankfurt, West Germany) என்ற நிறுவனத்திடமிருந்து மஞ்சள் பாஸ்பரசை வாங்கினார். இந்த பொருள் "எம்.வி.பாலம் டிரேடர்" என்ற கப்பல் மூலம் பம்பாய் துறைமுகத்திற்கு அனுப்பும்படியாகவும் அங்கிருந்து மரவன் குளத்திலுள்ள அவர்களுடைய தொழிற்சாலைக்கு

அனுப்பவும் சொல்லியிருந்தார். இந்த சரக்கு ரூ.2,65,000/–க்கு காப்பீடு செய்யப்பட்டு இருந்தது. சரக்கை மரவன் குளத்தில் ஒப்புவிக்காவிடில் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவேண்டும் என்று பாலிசியில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. வரும்வழியில் இந்த சரக்கை ஏற்றிவந்த கப்பல் தீவிபத்திற்குள்ளானது. இந்த விபத்தைக் குறித்த முதல் தகவல் அறிக்கை கிரீஸில் உள்ள "பாலம் டிரேடர்" கப்பலின் உரிமையாளரின் முகவர் ரிச்சர்ட் ஹாக்ஸ் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. காப்பீடு செய்யப்பட்ட தொகையை காட்டிலும் கப்பலை சீரமைக்கும் செலவு அதிகம் என்பதால் கப்பலை சீர்செய்யும் பணியை கைவிடவேண்டும் என காப்பீட்டாளருக்கு (underwriters-காப்பீட்டை ஏற்பவர்) தெரிவிக்கப்பட்டது. இந்த உண்மைகள் எதிரியான காப்பீட்டு நிறுவனத்திற்கு வாதியால் தெரிவிக்கப்பட்டு தங்களுக்கு காப்பீடு செய்த தொகையான ரூ,2,65,000/– தரும்படி கோரிற்று. எதிர்வாதி கப்பலின் உரிமையாளர் திவாலானதால்/நொடிந்துவிட்டதால் பாலிசியின் சட்டதிட்டம் 4.6–ன் ஷரத்துபடி இழப்பீட்டை கொடுக்கலாகாது என கோரிக்கையை ரத்து செய்தது வாதியின் கோரிக்கையை பிரதிவாதி ஏற்காததால் தாம் காப்பீடு செய்த ரூ.2,65,000/– தொகையை 18% வட்டியுடன் (21.03.1984 முதல் 30.09.1995 வரையிலான வட்டி ரூ.73,053/– எனக் கணக்கிடப்பட்டது) கொடுக்கும்படி புகார் தாக்கல் செய்தார். இதனை விசாரித்த விசாரணை நீதிமன்றம் (Trial Court) 18% வட்டியுடன் சேர்த்து ரூ.3,38,053/– வாதிக்கு வழங்க பிரதிவாதிக்கு உத்தரவிட்டது. காப்பீட்டு நிறுவனம் மேற்படி தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்தது. மேல்முறையீட்டு மனுவை ஏற்று உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட பிரதிவாதி தொடுத்த தற்போதைய முறையீடு உச்ச நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

காப்பீட்டு பாலிசியின் உட்பிரிவுகள் 4.6 மற்றும் 5.1.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) வாதிக்கு வழங்கப்பட்ட பாலிசி அனைத்து விபத்துக்களுக்கும் ஈடுசெய்யும் பாலிசி என்பதை நீதிமன்றம் குறித்துக் கொண்டது. அதாவது கடல் மார்க்கமாக கொண்டு செல்லுதல், திருட்டு, உரிந்து கொள்ளுதல் (pilferage), கொடுக்கப்படவேண்டியவை கொடுக்கப்படாமலிருத்தல், சிவில் குழப்பங்கள், வேலை நிறுத்தம், சூரையாடுதல், உடைதல், சேதப்படுத்துதல் முதலியவை இதில் அடங்கும். மேலும் "Non-delivery" அதாவது ஒப்பந்தப்படி கொடுக்கவேண்டிய சரக்கை கொடுக்காமல் இருப்பது பாலிசியின்படி வாதிக்கு இழப்பை ஏற்படுத்துவதாகும்.

(ஆ)மேலும் பாலிசியின் 4.6 ஷரத்துப்படி உரிமையாளர் திவாலாகும் பட்சத்தில் அதனால் ஏற்படும் இழப்புகள் திருப்பிதர இயலாது எனக்கூறி காப்பீட்டாளர் பொறுப்பேற்காது

இருப்பது சரியானதல்ல என்று நீதிமன்றம் கருதியது. மேலும், திவாலாவது என்பது அந்தந்த நாட்டின் நகராட்சிகளின் அதிகார சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது என்றும் இதில் ஒரு தனிமனிதனின் நிலைப்பாடோ அல்லது கூற்றோ ஏற்புடையது அல்ல என்றும் தெரிவித்தது. உரிமையாளர் திவாலாகிவிட்டார் என்பதை உறுதி செய்வதற்கு ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு ஆதாரங்களும் இல்லாத சூழலில், காப்பீட்டு பாலிசி 4.6-ல் உள்ள ஷரத்துகள் இந்த வழக்கிற்குப் பொருந்தாது என்றும் எனவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்த வழக்கில் நிலை நிற்காது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(இ) காப்பீட்டு பாலிசியின் ஷரத்து 5.1-ன் கூறுகள் இந்த வழக்கிற்குப் பொருந்தாது எனவும் கப்பல் செல்வதற்கான தகுதியைப் பெறவில்லை (unseaworthiness) என்பது வாதிக்கு தெரியவாய்ப்பில்லை எனவும் ஆகவே ஷரத்து 5.1-ன்படி வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு காப்பீடுதாரர் பொறுப்பேற்க இயலாது என்ற நிலையும் ஏற்கத் தக்கதல்ல என்றும் நீதிமன்றம் கூறியது.

(ஈ) இதன்படி மதுரையில் உள்ள உயர் நீதிமன்ற இணையின் 28.04.2006 தேதியிட்ட ஆணை மற்றும் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒதுக்கி வைத்தது. முதலில் வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம் (Trial Court) 28.04.1989 தேதியிட்ட ஆணையை உச்ச நீதிமன்றம் நிலை நிறுத்தியது. மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2014) 5 SCC 771; IV (2014) CPJ 9 (SC); 2015(2) CPR 645 (SC).

***

## 6. கோகிலகட்டா சுப்பாராவ் *(எதிர்)* யுனைட்டெட் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர்

**(Kokkilagadda Subba Rao v. Divisional Manager, United India Assurance Co. Ltd. & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முதல் மேல்முறையீட்டு எண்:397/2002-ல் 10.01.2005-அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கோகிலகட்டா சுப்பாராவ் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யுனைட்டெட் இந்தியா
அன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:5822/2006.

தீர்ப்பு தேதி : 16.04.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

ஆந்திர மாநிலத்திலுள்ள மீன்பிடி படகின் உரிமையாளரான மேல்முறையீட்டாளர், பதிலுரையாளரான இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திடம் இந்த படகை காப்பீடு செய்திருந்தார். 27.07.1992–அன்று இந்த படகு கவிழ்ந்தது. இந்தகால கட்டத்தில் இந்த படகிற்கு காப்பீடு இருந்தது. 03.08.1992–ல் மேல்முறையீட்டாளர் ரூ.6 இலட்சம் இழப்பீடு வழங்கும்படி கோரிக்கை விடுத்தார். காப்பீட்டு நிறுவனம் ரிலையன்ஸ் கண்காணிப்பு எனும் சேத மதிப்பீட்டாளரை அமர்த்தியது. அவர் படகு முழுமையான சேதம் அடைந்தது என 03.05.1993–அன்று தம் அறிக்கையை சமர்ப்பித்தார். இந்த அறிக்கையில் அதிருப்தி அடைந்த காப்பீட்டு நிறுவனம் திருமிகு. கோஸ்டல் கன்சல்டண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் எனும் மற்றுமொரு சேத மதிப்பீட்டாளரை அமர்த்தியது. அவர் தமது 15.06.1993 தேதியிட்ட அறிக்கையில் இந்த படகு விபத்து ஆந்திரமாநில கடல் பரப்பில் நேர்ந்ததா அல்லது ஒரிசா மாநில கடல் பரப்பில் நேர்ந்ததா எனும் சந்தேகம் எழுந்துள்ளது என்று கருத்து தெரிவித்தது. மேலும் திருமிகு. மொஹண்டி அசோசியேட்ஸ் என்ற நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அதில் சம்பந்தப்பட்ட படகு ஒரிசா மாநில கடல் பரப்பில் கவிழ நேர்ந்தது என்றும், இந்த படகு குறிக்கப்பட்ட எல்லையை தாண்டி சென்றதால் காப்பீட்டு கழக பாலிசியின் உட்பிரிவின் ஷரத்தை மீறி சென்றுள்ளது என்றும் கூறினார். மேற்படி அறிக்கையின் அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை நிராகரித்தது. மேல்முறையீட்டாளர் ஆந்திர மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை அணுகி காப்பீட்டு நிறுவனம் தமக்கு ரூ.6 இலட்சமும் 24% வட்டியும் சேர்த்து தரவேண்டும் என தன் புகாரை பதிவு செய்தார். இந்த புகார் தள்ளுபடி செய்யப்பட்டதால், தேசிய ஆணையத்தை அணுகினார். அங்கும் அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தை அணுகினார். மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; காப்பீட்டு சட்டம், 1938, உட்பிரிவு 64 UM (3).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

உச்ச நீதிமன்றம், தேசிய, மாநில ஆணையங்கள் இந்த மீன்பிடி படகு மத்திய கடற்பரப்பில் ஆழ்கடலில் மீன் பிடிக்க சென்றபோது விபத்துக்குள்ளானது என்றும் ஒரிசா

கடற்பரப்பில் மூழ்கியது என்றும் கூறியதை பதிவு செய்தது. காப்பீட்டுக் கொள்கையின்படி இந்த இழப்பு ஈடு செய்யத்தக்கதல்ல என இரு ஆணையங்களும் தெரிவித்திருந்தன. காப்பீட்டு சட்டம் உட்பிரிவு 64 UM (3)-ன்படி இரண்டாவது முறை சேத மதிப்பீட்டாளரை அமர்த்தியது தவறு என மேல்முறையீட்டாளர் வாதாடினார். இக்கூற்றை மாநில ஆணையத்திலோ அல்லது தேசிய ஆணையத்திலோ அவர்கள் முன் எழுப்பவில்லை என்றும் இந்த மீன்பிடிபடகு கவிழ்ந்தது ஆந்திரமாநில கடற்பரப்பிலா அல்லது ஒரிசா மாநில கடற்பரப்பிலா எனும் வினா மட்டுமே எழுப்பப்பட்டது என்றும் நீதிமன்றம் எடுத்துக்காட்டியது. இரண்டு ஆணையமும் இந்த படகு காப்பீட்டு கொள்கையில் உள்ள ஷரத்துகளுக்கு எதிர்மறையாக ஆழ்கடலுக்கு சென்று ஒரிசா கடல் பகுதியில் முழ்கியது எனவும் அவர்களது ஆணைகளில் தெரிவித்தன. இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது எனவும் நீதிமன்றம் தெரிவித்தது. இந்த சூழலில் இரண்டு ஆணையங்களின் முன்பும் எழுப்பப்படாத புதிய விவாதத்தை ஏற்க இயலாது எனவும் இவ்வழக்கிலுள்ள உண்மைகளின் மூலம் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது எனவும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2014) CPJ 18 (SC); 2014(2) CPR 258 (SC).

***

## 7. BHS தொழிற்சாலை *(எதிர்)* ஏற்றுமதி கடன் உத்திரவாத கழகம் மற்றும் ஒருவர் (BHS Industries v. Export Credit Guarantee Corp. & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முதல் முறையீட்டு எண்:189/2007-ல் 20.08.2007-அன்று வழங்கிய ஆணையின் மீது மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

BHS தொழிற்சாலை – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஏற்றுமதி கடன் உத்திரவாத கழகம் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2729/2009.

தீர்ப்பு தேதி : 07.07.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் சிறுதொழில் நிறுவனமாவார். இந்த நிறுவனம் ஒரேயொரு உரிமையாளரால் நடத்தப்படும் தொழிற்சாலையாகும். இவர்

அமெரிக்காவில் அட்லாண்டா என்னும் பகுதியில் உள்ள "டிரெஷர்ஸ் ஆஃப் இந்தியா" எனும் நிறுவனத்திற்கு தாம் தயாரித்த கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பினார். 15.06.1999-ல் முதல் பதிலுரையாளரிடம் அதே நாளில் கடல்மார்க்கமாக அனுப்பப்படும் கைவினைப் பொருட்களுக்கு காப்பீடு செய்தார். இந்த காப்பீட்டில் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை காப்பீட்டு உத்தரவாதத்தை முதல் பதிலுரையாளர் ஏற்றிருந்தார். 14.07.1999-ல் காப்பீட்டாளர் நிறுவனம் மேல்முறையீட்டாளருக்கு தற்காலிகமாக ரூ.8 இலட்சம் கடன் உத்தரவாதம் வழங்கி பின் 20.07.1999-ல் ரூ.10 இலட்சமாக உயர்த்தி பின் ரூ.20 இலட்சமாக உயர்த்தியது. 15.07.1999-ல் மேல்முறையீட்டாளர் ரூ.6,50,000/-க்கு "டிரெஷர்ஸ் ஆஃப் இந்தியா" நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்து இதன் தகவலை பதிலுரையாளர் 1-ஆம் நபருக்கு தெரிவித்தார். 20.08.1999-அன்று ரூ.4,76,139/-க்கான ஏற்றுமதியை அனுப்பியதையும் பதிலுரையாளருக்கு தெரிவித்தார். மீண்டும் ரூ.2,77,732/- மற்றும் ரூ.1,00,512/-க்கான ஏற்றுமதியை 20.08.1999-ல் அனுப்பினார். முதலில் அனுப்பிய இரண்டு ஏற்றுமதிகளும் ரூ.10 இலட்சத்திற்கான கடன் உத்தரவாதத்தை எட்டி விட்டதாலும் மேலும் உத்தரவாதம் வழங்க பதிலுரையாளர்கள் காலதாமதம் செய்துவந்ததாலும் கடைசி இரண்டு ஏற்றுமதிகளும் மனுதாரரின் பொறுப்பிலேயே செய்யப்பட்டது. இறக்குமதியாளர் மேல்முறையீட்டாளரின் சரக்குகளை வாங்க மறுத்ததை 22.10.1999-ல் பதிலுரையாளருக்கு தெரிவிக்கப்பட்டது. 10.12.1999-ல் இந்த சரக்குகளுக்கு காப்பீட்டு உத்தரவாதம் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் பதிலுரையாளருக்கு கொடுத்த கடிதத்தின்படி தேவையான நிபந்தனைகளை கடைப்பிடித்ததால் அவருக்கு இழப்பீடு வழங்கும்படி கோரினார். ஆனால் காப்பீட்டு சட்டதிட்டங்களை அவர் கடைபிடிக்க தவறியதால் இழப்பீடு வழங்க இயலாது என பதிலுரையாளர் 06.06.2000 அன்றைய கடிதத்தில் தெரிவித்தார். சண்டிகரிலுள்ள மாநில ஆணையத்தினிடம் மனுதாரர் புகார் செய்தார். கீழ்க்காணும் இரண்டு காரணங்களுக்காக புகார் மனு நிராகரிக்கப்பட்டது.

(1) இந்த புகார் சட்ட வரம்புகளுக்குள் காலதாமதம் காரணமாக தடை செய்யப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல.

(2) பாலிசியின் சட்டதிட்டங்களை மீறியதால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல.

மாநில ஆணையத்தின் ஆணையை தேசிய ஆணையம் உறுதி செய்தது. இந்த ஆணைகளால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் தனது முறையீட்டை தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *United India Insurance Co. Ltd. v. M.K.J. Corpn.,* III (1996) CPJ 8 (SC)=1996 (SLT SOFT) 2275. (Referred & Discussed) [Para 9]

2. *Amalgamated Electricity Co. v. Ajmer Municipality,* (1968) (SLT SOFT) 122. (Referred & Discussed) [Para 10]

3. *Bay Berry Apartments (P) Ltd. and Another v. Shobha and Others,* VIII (2006) SLT 241. (Referred & Discussed) [Para 11]

4. *Polymer India (P) Ltd. and Another v. National Insurance Co. Ltd. and Others,* IV (2004) CPJ 49 (SC)=VII (2004) SLT 243. (Relied) [Para 12]

5. *General Assurance Society Ltd. v. Chandmull Jain,* 1966 (SLT SOFT) 184. (Relied) [Para 13]

6. *Baj (Run Off) Ltd. v. Durham and Others,* (2012) UKSC 14. (Referred & Discussed) [Para 14]

7. *High Court of Judicature for Rajasthan v. P.P. Singh,* I (2003) SLT 652. (Referred) [Para 15]

8. *Marathwada University v. Seshrao Balwant Rao Chavan,* 1989 (SLT SOFT) 491. (Referred) [Para 15]

9. *Babu Varghese v. Bar Council of Kerala,* II (1999) SLT 605. (Referred) [Para 15]

10. *United India Insurance Co. Ltd. v. Harchand Rai Chandan Lal,* IV (2004) CPJ 15 (SC)=V (2004) SLT 876. (Referred) [Para 16]

11. *Oriental Insurance Co. Ltd. v. Sony Cheriyan,* II (1999) CPJ 13 (SC)=VI (1999) SLT 565=II (1999) ACC 196 (SC). (Referred & Discussed) [Para 17]

12. *ABL International Ltd. & Anr. v. Export Credit Guarantee Corporation of India Ltd. & Ors,* 109 (2004) DLT 415 (SC)= I (2004) SLT 381. (Not Applicable) [Para 28]

13. *Kumari Shrilekha Vidyarthi v. State of U.P.,* 1990 (SLT SOFT) 195. (Not Applicable) [Para 28]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) கீழ்கண்ட காரணங்களுக்காக மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகளை பதிலுரையாளர் கார்ப்பரேஷன் நிராகரித்தது.

"(1) ரூ.4,76,139/–க்கான சரக்கை கடல்மார்க்கமாக ஏற்றுமதி செய்ய விண்ணப்பபடிவம் (order form) DA-90 நாட்களில் செய்யவேண்டிய பணபரிமாற்றத்தை படிவம் DA-60 நாட்கள் எனும் படிவத்தில் விமானம் மூலம் செய்ய நடவடிக்கை எடுத்தது. ரூ.6,50,000/– ஏற்றுமதி செய்வதற்கான படிவம் DA-90 நாட்கள்

பொறுத்தவரையில் பணபரிமாற்றத்திற்கான வரைமுறைகளை DA-90 நாட்கள் எனும் படிவத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பரிமாற்ற மசோதாவில் DA-60 நாட்கள் குறிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தப்படி இது உங்கள் தரப்பில் மீறுதலாகும் என கருத்தில் கொள்ளப்பட்டது.

(2) ஏற்றுமதி விவரங்களை தெரிவிப்பதில் எண்ணிக்கையில் 50% மற்றும் தொகையில் 34% விடுபட்டுள்ளது. இது பாலிசி பத்திரத்தின் சட்டதிட்டங்கள் 1, 2, 8(a), 10, 19(1), 28, 7(a) மற்றும் 29–ன்படி மிகவும் மோசமான ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லாத விதி மீறலாகும்.

(3) மேலும் இறக்குமதி நாட்டில் தங்களது எதிர்ப்பினை தெரிவிக்கவில்லை.

(ஆ) உச்ச நீதிமன்றம், ஒப்பந்த சட்டம் பிரிவு 5 கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாத சரக்குகள் பற்றியது என்பதை குறித்துக்கொண்டது. விதி 5(c)–யின்படி காப்பீட்டாளர் காப்பீடு செய்பவருக்கு அதிகபட்சமாக 180 நாட்கள் கடன் உத்தரவாதம் அளிக்கவேண்டும். 02.09.1999 கடிதப்படி மேல்முறையீட்டாளர் சரக்குகளை அனுப்புவதற்கான பணபரிமாற்றத்தின் காலம் 90 நாட்கள் என குறிப்பிட்டிருந்தார். உச்ச நீதிமன்றம், மாநில, தேசிய ஆணைகளின் முடிவை அதாவது பாலிசி சட்டவரையறைக்குள் பணபரிமாற்றத்தின் காலம் குறைக்கப்பட்டது எனும் கூற்றை ஏற்கவில்லை. 180 நாட்களுக்கு மேற்பட்டால் கடன் உத்தரவாத நிறுவனம் பொறுப்பை ஏற்காது என தெரிவித்திருந்தது. காப்பீடு செய்தவர் தனது கடனை மேற்குறிப்பிட்ட கால அளவுக்குள் நிர்ணயித்து இருந்ததால் அது அவருக்கு எதிரிடையாக இருந்தது என எடுத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்தது.

(இ) இரண்டாவது விதி மீறல் சரக்கு ஏற்றுமதியை குறித்த விவரங்களை தெரிவிப்பதில் எண்ணிக்கையில் 50% மற்றும் தொகையில் 30% இருந்தது என்பதாகும். ஒவ்வொரு மாதமும் 15 தேதிக்குள் ஏற்றுமதிகளை குறித்த விவரங்களை ஷரத்து 8(a) மற்றும் 19(a)–யின்படி காப்பீடு வழங்குபவருக்கு காப்பீடு பெறுபவர் தெரிவிப்பது கட்டாயமாகும். அப்படி ஏதேனும் சரக்குகள் ஏற்றுமதி செய்யபடவில்லை எனில் ஏதும் இல்லை எனும் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். 19(a) எனும் வரையறை தனித்துவம் வாய்ந்தது. இதன்படி ஏற்றுமதி செய்யப்படும் எல்லா சரக்குகள் பற்றிய தகவலை ஷரத்து 8(a)–ன்கீழ் தெரிவித்து அதற்குண்டான பிரிமியத்தையும் ஷரத்து 10–ன்படி செலுத்தவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் ஏற்றுமதி செய்த பொருளுக்கான மதிப்பிற்கு காப்பீடு வழங்குபவர் எந்த வகையிலும் பொறுப்பேற்க வேண்டியதில்லை. பாலிசிதாரர் பிரிமியத்தை மட்டும் செலுத்தினால் போதாது. அவர்களுடைய தார்மீக பொறுப்பையும் அறிந்திருக்கவேண்டும் என நீதிமன்றம் அறிவுறுத்தியது. பாலிசிதாரர், மேல்முறையீட்டாளர் இவர்கள் இருவரும் எவ்வித குழப்பமின்றி எல்லாவித

விளக்கங்களையும் தடையின்றி புரிந்துக்கொள்ளுதல் வேண்டும். தற்போதைய சூழலில் சரக்குகளை மீட்டெடுக்க மேல்முறையீட்டாளர் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்று ஆணையம் தன் கருத்தினை தெரிவித்திருப்பது தேவையற்ற ஒன்றாகும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. ஆணையத்தின் கருத்துகளில் சில மாறுபட்டு தவறானவையாக இருந்தாலும் முடிவு சரியானதே.

(ஈ) காப்பீட்டு ஒப்பந்தத்தின் வரையறைகள் மீறப்பட்டு இருந்ததால் இந்த மேல்முறையீடு ஏற்கத்தக்கதல்ல என்று கருதி உச்ச நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

III (2015) CPJ 1 (SC); 2017(1) CPR 18 (SC).

***

**8. யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** *(எதிர்)* **ஓரியண்ட் டிரெஷர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

**(United India Insurance Co. Ltd. v. Orient Treasures Pvt. Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அசல் புகார் எண்:375/1999-ன்கீழ் 19.03.2007-ல் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

**சிவில் மேல்முறையீட்டு எண்:2140/2007**

யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஓரியண்ட் டிரெஷர்ஸ் பிரைவேட் லிமிடெட் – பதில் அளிப்பவர்

**சிவில் மேல்முறையீட்டு எண்:5141/2007**

ஓரியண்ட் டிரெஷர்ஸ் பிரைவேட் லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2140/2007 இதனுடன் 5141/2007.

தீர்ப்பு தேதி : 13.01.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2140/2007-ல் பதிலுரையாளர் பலவிதமான நகை வியாபாரத்தில் ஈடுபட்டார். அவர் தன் நகை கடையில் 02.07.1993 முதல் தொடர்ந்து "நகைகள் தொகுப்பு பாலிசி" (Jewellers Block Policies) மேல்முறையீட்டாளரிடம் எடுத்து வந்தார். பாலிசி நடைமுறையில் இருக்கும்போது 02.06.1995-அன்று கடையில் கொள்ளை நடந்தது. ரூ.40,63,735.53 மதிப்புள்ள தங்க, வெள்ளி நகைகளை கதவை உடைத்து கொள்ளை அடித்துள்ளார்கள் என்று தன் முதல் அறிக்கையில் பதிலுரையாளர் தெரிவித்துள்ளார். பதிலுரையாளரின் புகாரின் பேரில் மேல்முறையீட்டாளர் சரியான மதிப்பீட்டை கணக்கிடும்படி சேத மதிப்பீட்டாளரை அமர்த்தினார். இவர் ரூ.36,10,211/-க்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று தன் அறிக்கையை தாக்கல் செய்தார். காவல் துறையினரும் விசாரணை செய்து அவர்களது அறிக்கையை 24.06.1995-ல் தாக்கல் செய்தனர். களவுபோன நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை எனும் சான்றிதழையும் காவல் துறையினர் வழங்கியிருந்தனர். பார்வையாளர்களின் பார்வைக்காக வைக்கப்படும் மேசை மற்றும் காட்சிப்பேழை (display window) மீது களவுபோன நகைகள் இரவு நேரத்தில் வைக்கப்பட்டிருந்ததால் இழப்பீடு வழங்க இயலாது என 02.06.1995-ல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பாலிசிதாரர் பாலிசி விதிகளின் கீழ் செயல்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. முன்மொழிவு படிவம் குறிப்பு 4, 5-ன்படியும் பாலிசி பத்திர விதி எண்:12-ன்படியும் நகைகள் வேலை நேரங்களில் பார்வையாளர்களின் பார்வைக்காக மேசையின் மீதோ அல்லது காட்சிப்பேழையின் மீதோ வைக்கப்பட்டாலோ காப்பீட்டுக் கொள்கைக்குள் அடங்கும். ஆனால் இரவு நேரங்களில் இவை பாதுகாப்பு பெட்டகத்தினுள் வைக்கப்படவேண்டும். வேலை நேரங்கள் அல்லாத சமயங்களில் நகைகள் வெளியே வைத்திருந்து அப்பொழுது களவு நிகழ்ந்தால் இந்த பாலிசியின் கீழ் இழப்பீடு வழங்கப்படமாட்டாது. இரவு நேரங்களில் கடையில் உள்ள நகைகள் அனைத்தும் பாதுகாப்பு பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கவேண்டியது பாலிசிதாரரின் கடமையாகும். மேலும் பதிலுரையாளர் விதி எண்கள்: 4, 5, 12-ன்படி கூடுதலாக பிரிமியம் செலுத்தவில்லை என்றும் காப்பீட்டு நிறுவனம் வாதிட்டது. பதிலுரையாளர் தனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு தான் பாதிக்கப்பட்டதால் ரூ.1,32,06,786.30 கோரி தேசிய ஆணையத்தில் தன் புகாரை சமர்ப்பித்தார். இதனை விசாரித்த தேசிய ஆணையம் தனது தீர்ப்பில் மேல்முறையீட்டாளரான காப்பீட்டு நிறுவனம் ரூ.36,10,211/-ஐ 10% வட்டியோடு 03.12.1995 முதல் கணக்கிட்டு தொகை செலுத்தப்படும் நாள் வரை புகார் மனுதாரருக்கு வழங்கவும் அதனுடன் ரூ.50,000/- செலவினங்களுக்கு வழங்கவும் உத்தரவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனம் தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்தது. பதிலுரையாளரும் மனு எண்: CA.5141 of 2007-ன் கீழ் இழப்பீட்டுத் தொகையை அதிகரித்து வழங்கக் கோரினார். சிவில் முறையீட்டு எண்:2140/2007-ஐ உச்ச நீதிமன்றம் ஏற்று புகார்தாரர் அளித்த மனுவை (CA.5141 of 2007) பலனளிக்காத ஒன்று (infructuous) என்று தள்ளுபடி செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 21 மற்றும் 23; காப்பீட்டு பத்திரத்தின் ஷரத்துக்கள் 4, 5, 12.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *General Assurance Society Ltd. v. Chandumull Jain & Anr.,* 1966 (SLT Soft) 184=AIR 1966 SC 1644. (Referred) [Para 22]
2. *United India Insurance Co. Ltd. v. Harchand Rai Chandan Lal,* V (2004) SLT 876=IV (2004) CPJ 15 (SC). (Referred) [Para 22]
3. *Oriental Insurance Co. Ltd. v. Sony Cheriyan,* VI (1999) SLT 565=II (1999) CPJ 13 (SC)= II (1999) ACC 196 (SC). (Referred) [Para 22]
4. *Rahee Industries Ltd. v. Export Credit Guarantee Corporation of India Ltd. & Anr.,* (2009) 1 SCC 138. (Referred) [Para 22]
5. *Sikka Papers Ltd. v. National Insurance Co. Ltd. & Ors.,* III (2009) CPJ 90 (SC). (Referred) [Para 22]
6. *Vikram Greentech India Ltd. & Anr. v. New India Assurance Co. Ltd.,* IV (2009) SLT 35=II (2009) CPJ 34 (SC). (Referred) [Para 22]
7. *New India Assurance Co. Ltd. v. Zuari Industries Ltd. & Ors.,* VII (2009) SLT 122=IV (2009) CPJ 19 (SC)=IV (2009) ACC 390 (SC). (Referred) [Para 22]
8. *Amravati District Central Cooperative Bank Ltd. v. United India Fire and General Insurance Co. Ltd.,* III (2010) SLT 232=II (2010) ACC 622 (SC). (Referred) [Para 22]
9. *Suraj Mal Ram Niwas Oil Mills P. Ltd. v. United India Insurance Co. Ltd. & Anr.,* VIII (2010) SLT 375=IV (2010) CPJ 38 (SC)= IV (2010) ACC 653 (SC). (Referred) [Para 22]
10. *Deokar Exports P. Ltd. v. New India Assurance Co. Ltd.,* I (2009) CPJ 6 (SC)=I (2009) ACC 93 (SC). (Referred) [Para 22]
11. *Export Credit Guarantee Corp. of India Ltd. v. Garg Sons International,* I (2013) SLT 614=II (2013) CPJ 1 (SC). (Referred) [Para 22]
12. *Rust v. Abbey Life Assurance Co. Ltd. & Anr.,* (1979) Vol.2 Lloyd's Law Reports 334. (Referred) [Para 22]
13. *General Assurance Society Ltd. v. Chandumull Jain & Anr.,* VII (2011) SLT 29=III (2011) CLT 431 (SC). (Relied) [Para 30]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு (constitution bench) *ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி* என்ற வழக்கில் காப்பீட்டு பத்திரங்களில் உள்ள சொற்களை சம்பந்தப்பட்ட நபர்கள் எந்த அடிப்படையில் உபயோகிக்கிறார்களோ அதே அடிப்படையில் விளக்க வேண்டுமென்றும் புதிதாக அர்த்தங்களை உருவாக்குவது கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

(ஆ) மேலும் நீதிமன்றம் காப்பீட்டு பத்திர ஷரத்து எண்:4-ல் இணைக்கப்பட்டுள்ள குறிப்பைப் படிக்கும்போது முன்மொழிவு மனுவிலேயே தெளிவாக "பார்வையாளர்கள் காணும் காட்சிப்பேழை, மேசையின் மீது நகைகளை இரவு நேரங்களில் வைக்கக்கூடாது" எனக் கூறியிருப்பது தெரியவரும் என்பதை சுட்டிக்காட்டியது. பகல் நேரத்தில் வியாபார நேரங்களில் பார்வையாளர்களின் காட்சிப்பேழைகளில் வைப்பது காப்பீட்டு ஷரத்துகளில் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் இரவு நேரங்களில் இது அனுமதிக்கப்படுவதில்லை.

(இ) மேலும் நீதிமன்றம் ஷரத்து எண்:5-ல் இணைக்கப்பட்டுள்ள குறிப்பைப் படிக்கும்போது மேல்முறையீட்டாளர் பதிலுரையாளரின் முன்மொழிவு படிவத்தில் தெளிவாக "வியாபார நேரத்திற்குப்பின் இரவு நேரத்தில் பாதுகாப்புப் பெட்டகத்திற்கு வெளியே வைப்பது காப்பீட்டு பாலிசியின் விதிமுறைகளுக்கு எதிரானது" என்று தெரிவித்திருப்பதை சுட்டிக்காட்டியது. எனவே நகைகள் பாதுகாப்பு பெட்டகத்திற்கு வெளியில் இருக்கும்போது ஏதேனும் இழப்பு நேர்ந்தால் மேல்முறையீட்டாளர் இழப்பை வழங்க எந்த பொறுப்பையும் ஏற்கமாட்டார் என்பதை பதிலுரையாளருக்கு உறுதிபடக்கூறியுள்ளது.

(ஈ) மேலும் நீதிமன்றம் மொழியிலோ, வார்த்தையிலோ இந்த ஷரத்துகள் தெளிவாக குழப்பமின்றி வாசிப்பவர்கள் தெளிவாக புரிந்துக்கொள்ளும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என கூறியுள்ளது. மேலும் ஷரத்து எண்:12 தெளிவாக வியாபார நேரத்திற்குப்பின் பார்வையாளர்களின் பார்வைக்காக காட்சிப்பேழைகளில் (display window) வைத்திருக்கும்போது களவு நேர்ந்தால் இழப்பீடு வழங்கலாகாது என்பதனை தெளிவுபடுத்தியது.

(உ) மேலும் நீதிமன்றம் ஷரத்துகள் 4 மற்றும் 5-ஐ விளக்கும்போது விளக்கங்களை *(contra proferentem)* பயன்படுத்தவேண்டும் என்ற வாதத்தை நிராகரித்தது. நீதிமன்றம் விதி எண்:4, 5-ல் மொழியிலோ, வார்த்தையிலோ எவ்வித குழப்பமும் காணப்படவில்லை என்பதால் அம்மாதிரி விளக்கங்களை பயன்படுத்தவேண்டிய அவசியமில்லை என்று கூறியது.

(ஊ) மேற்கூறிய காரணங்களால் உச்ச நீதிமன்றம் தேசிய ஆணையத்தின் ஆணை நிலைபெறாது எனக் கூறி அதை ஒதுக்கி வைத்தது. காப்பீட்டு நிறுவனத்தின் மேல்முறையீடு ஏற்கப்பட்டு பதிலுரையாளர் இழப்பீட்டை உயர்த்தி கோரிய மனு

நிராகரிக்கப்பட்டது. இவ்வழக்கு பயனளிக்காத ஒன்று (infructuous) என தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2016) 3 SCC 49; AIR 2016 SC 363; I (2016) CPJ 6 (SC);
2016(1) CPR 115 (SC); 2016(2) CPR 645 (SC).

***

## 9. ஹெவன் டைமண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் *(எதிர்)* ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**(Heaven Diamonds Pvt. Ltd. v. Oriental Insurance Co. Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் அசல் புகார் எண்:357/1999-ல் 20.11.2012-அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஹெவன் டைமண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2800/2013.
தீர்ப்பு தேதி : 02.02.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் வைர வாயு சக்கரங்கள் (அரைக்கும் சக்கரங்கள்) உற்பத்தி உட்பட வைர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். அம்மாதிரி செய்யப்பட்ட சக்கரங்களை மரத்தால் செய்யப்பட்ட இரண்டு பெட்டிகளில் அடைத்து பெல்ஜியத்திற்கு ஏற்றுமதி செய்தார். பெல்ஜியத்தில் உள்ள திருவாளர். நைஸ் டைமண்ட்ஸ் BVBA, இந்த சரக்குகளை பரிசோதித்து அதனை ஏற்க மறுத்தனர். அவர்கள் கூற்றுப்படி ஒரு பெட்டி உடைந்து முழுமையாக சேதமடைந்து scaives உடைந்து இருந்தன என்றும் மற்ற பெட்டியில் மிகவும் கரைபடிந்து வைரத்தின் மேற்பகுதியில் துளைகள் காணப்பட்டதாகவும் கூறினார். எனவே இந்த scaives முழுமையாக பழுதடைந்துள்ளதால் அதை பயன்படுத்த இயலாது என்றனர். மேல்முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் புகார் செய்தார். மேல்முறையீட்டாளர் அவர் நியமித்திருந்த, சேத மதிப்பீட்டாளர் தமது 09.02.1999 தேதியிட்ட அறிக்கையில் ஒரு பெட்டி உடைந்து இருந்ததாகவும் ஆனால் மற்றொரு பெட்டி ஓரளவு நல்ல நிலையில் இருந்ததாகவும் ஆனால் இரண்டு பெட்டிகளிலும் இருந்த அரைக்கும் சக்கரங்கள் ஓரளவு துருப்பிடித்திருந்ததாகவும் கூறியிருந்ததாக தனது

மனுவில் தெரிவித்திருந்தார். ஆனால் தேசிய ஆணையம் இந்த புகாரை ஏற்கவில்லை. காப்பீட்டாளர் அமர்த்தியிருந்த சேத மதிப்பீட்டாளர் திருமிகு.K.L.அஸ்லார் அண்டு கம்பெனி தனது அறிக்கையில் புகார் மனுதாரரின் உற்பத்தி முறையை (manufacturing process) பார்வையிடும்படி தான் பணிக்கப்பட்டதாகவும் ஆனால் அதைப் பார்வையிடுவதற்கு புகார் மனுதாரர் அனுமதி அளிக்கவில்லை எனவும் கூறியிருந்தார். இந்த அறிக்கையின் அடிப்படையில் தேசிய ஆணையம் புகார் மனுவை நிராகரித்தது. இதனால் பாதிக்கப்பட்ட புகார் மனுதாரர் உச்ச நீதிமன்றத்தில் இம்மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார். முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) பழுதடையாமல் இருந்த பெட்டியில் இருந்த அரைக்கும் சக்கரங்களும் முழுமையாக துருபிடித்து இருந்ததை தேசிய ஆணையம் சரியான முறையில் கணித்து சேத மதிப்பீட்டாளரை டைமண்ட் தயாரிக்கும் இடத்தில் மேல்முறையீட்டாளர் அனுமதிக்காததையும் பதிவு செய்திருந்தது என உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. புகார்தாரர் எவ்வளவு நஷ்டம் அடைந்தார் என்பதற்கான ஆதாரம் எதையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் தேசிய ஆணையம் கண்டறிந்தது. மேற்கூறப்பட்ட சரக்குகள் நிராகரிக்கப்பட்ட பின் அதை புகார் மனுதாரர் திரும்பப்பெற்று அவர் வசம் வைத்திருந்தார் என்பது மறுக்கமுடியாத உண்மை. புகார்தாரர் தயாரிப்பை குறித்தும் அதன் எந்திரங்கள் குறித்தும் திரும்பப்பெற்ற பொருட்களில் சேதாரம் போக கிடைத்தது எவ்வளவு என்பதைப் பற்றின எந்தவித அனுபவம் வாய்ந்த பரிந்துரைகளையும் பெற்று சமர்ப்பிக்கவில்லை. புகார்தாரர் இந்த சரக்குகளுக்கு என்ன ஆயிற்று என்பதற்கான எவ்வித ஆதாரங்களையும் கொடுக்கவில்லை.

(ஆ) தேசிய ஆணையம் தீவிர பரிசீலனையின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கியுள்ளதாகவும், புகார் மனுதாரர் பொருட்களை திரும்பப்பெற்றது குறித்து வெளியிட்ட கருத்து தவறானது என்றாலும் ஆணையத்தின் தீர்ப்பில் குறிப்பிடத்தக்க பலவீனம் எதுவும் இல்லை என்றும் கூறி உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

II (2016) CPJ 1 (SC); 2017(1) CPR 295 (SC).

***

## 10. யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* லீஷர் வேர் எக்ஸ்போர்ட் லிமிடெட் ETC, ETC.,

## (United India Insurance Co. Ltd. v. Leisure Wear Export Ltd. ETC, ETC.,)

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

முதல் மேல்முறையீட்டு எண்:30-33/2000-ல் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைம் 05.07.2004-அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

லீஷர் வேர் எக்ஸ்போர்ட் லிமிடெட் ETC, ETC., - பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:1004/2006 உடன் சிவில் மேல்முறையீட்டு எண்:1016/2006.

தீர்ப்பு தேதி : 29.06.2016.

### 4. வழக்கின் சுருக்கம் :

பதிலுரையாளரான புகார்தாரர் லூதியானாவில் பலதரப்பட்ட உள்ளாடைகளும் ஆயத்த ஆடைகளும் விற்பனை செய்துவந்தார். இவர் ரூ.2 கோடி மதிப்புள்ள சரக்குகளுக்கு 13.06.1996 முதல் 12.06.1997 வரை மேல்முறையீட்டாளரிடம் காப்பீடு செய்திருந்தார். இவருக்கு மாஸ்கோவில் உள்ள மேக்னா ஓவர்சீஸ் எனும் நிறுவனத்திலிருந்து உள்ளாடைகளும் மற்ற ஆடைகளும் அனுப்பும்படி ஆணை (order) கிடைத்தது. பதிலுரையாளர் 320 அட்டைபெட்டிகளில் இரண்டு கட்டமாக மாஸ்கோவிற்கு அனுப்பினார். இந்த சரக்குகள் உக்ரைனிலுள்ள ஒடெஸ்ஸா எனும் கப்பல்தளத்திற்கு சென்று அங்கிருந்து தரைமார்க்கமாக மாஸ்கோவிற்கு சென்றடைந்தது. ஆனால் ஒவ்வொரு கட்டத்திலும் முறையே 142, 139 பெட்டிகள் குறைவாக சேர்ந்தது என்று கண்டறிந்து மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது. காப்பீட்டு நிறுவனம் மாஸ்கோவிலுள்ள இன்கோ ஸ்டார்க் காப்பீட்டு நிறுவனத்தை (M/s. Ingostarkh Insurance Company) அமர்த்தி சேதம் மதிப்பீடு செய்யும்படி பணித்தது. சேத மதிப்பீட்டாளர் ஏற்றுமதி செய்த பொருட்கள் குறைவாகவே ஒப்படைக்கப்பட்டது என உறுதி செய்தார். பாலிசி விதிமுறைகளின்படி இறக்குமதியாளர் இழப்பீட்டை காப்பீட்டு நிறுவனத்திடம் கோரியதை வழங்கவில்லை. எனவே இறக்குமதியாளர் பதிலுரையாளரிடம் மேல்முறையீட்டாளரிடமிருந்து இழப்பை பெற்றுத்தரும்படி தன் உரிமையை கோரினார். பதிலுரையாளர் பஞ்சாப் மாநில நுகர்வோர் ஆணையத்தில் இரண்டு புகார்களை மேல்முறையீட்டாளருக்கு எதிராக சமர்ப்பித்தார். மாநில ஆணையம் இருபுகார்களையும் ஏற்று மனுதாரருக்கு ரூ.19,90,000/- வழங்க

ஆணையிட்டது. இத்தொகை இழப்பீட்டை ஈடுசெய்வதோடு வருவாய் குறைச்சல் மற்றும் வட்டி இவைகளின் கூட்டாகும். மேல்முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் முறையீடு செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; கடல்மார்க்க காப்பீட்டு சட்டம் 1963-ன் பிரிவுகள் 17 மற்றும் 52.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *New India Assurance Co. Ltd. v. G.N. Sainani,*
   III (1997) CPJ 1 (SC)=1997 (SLT Soft) 1268. (Distinguished) [Para 34]
2. *Oberai Forwarding Agency v. New India Assurance Co. Ltd. & Anr.,*
   II (2000) SLT 86=I (2000) CPJ 7 (SC). (Distinguished) [Para 35]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இவ்வழக்கில் எழுப்பப்பட்ட வினா என்னவெனில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் புகார்தாரரான பதிலுரையாளர் காப்பீட்டாளரின் மேல் தாக்கல் செய்த புகார் மனு ஏற்புடையதாகுமா என்பதாகும்.

(ஆ) ஏற்கனவே பதிலுரையாளர் இறக்குமதியாளரான மேக்னா ஓவர்சீஸ் நிறுவனத்திற்கு காப்பீட்டு பாலிசியை உரிமை ஊர்ஜிதம் (assignment) செய்து இழப்பீட்டை கோரும் உரிமையை அவருக்கு வழங்கியதால் எப்படி பதிலுரையாளர் இழப்பீட்டை கோரமுடியும் என மேல்முறையீட்டாளர் வினவினார்.

(இ) கடல்மார்க்க காப்பீட்டு சட்டம் 1963-ன் பிரிவுகள் 17 மற்றும் 52 இவைகளை உச்ச நீதிமன்றம் கூர்ந்து பரிசீலித்தது. குறிப்பாக உரிமை ஊர்ஜிதம் செய்தல் மற்றும் ஒரு பாலிசியை எப்பொழுது எவ்வாறு உரிமை ஊர்ஜிதம் செய்ய முடியும் என்பதனை ஆராய்ந்தது. பாலிசிதாரர் மற்றும் மேக்னா ஓவர்சீஸ் நிறுவனம் (இறக்குமதியாளர்) ஆகியோரிடையே பாலிசிதாரர் தனது உரிமைகளை முழுவதுமாக விட்டுக்கொடுக்கும் படியான ஒப்பந்தம் எதுவும் இல்லை என நீதிமன்றம் குறித்துக்கொண்டது. இறக்குமதியாளருக்கு உரிமை ஊர்ஜிதம் செய்ய ஒப்புதல் அளித்திருந்தாலும் கடல்மார்க்க காப்பீட்டு சட்டம் விதி 17-ன்படி பதிலுரையாளர் சட்டப்படி அவர்கள் செய்த உடன்படிக்கையில் கோரிய அனைத்து உரிமைகளையும் மேல்முறையீட்டாளரிடம் கோரமுடியும் என தெரிவித்தது.

(ஈ) முதலாவதாக, மேல்முறையீட்டாளர் கூற்றுப்படி பதிலுரையாளர் (பாலிசிதாரர்) பாலிசியை இறக்குமதியாளருக்கு உரிமை ஊர்ஜிதம் செய்ததிற்கான எந்த ஆதாரமும் இல்லை என

நீதிமன்றம் கூறியது. இரண்டாவதாக, பதிலுரையாளர் அம்மாதிரி பாலிசியை இறக்குமதியாளருக்கு உரிமை ஊர்ஜிதம் செய்ததாக எடுத்துக்கொண்டாலும் பாலிசியின்படி பாலிசிதாரருக்கு உள்ள உரிமைகளை அது பாதிக்காது எனவும் கடல்மார்க்க காப்பீட்டு சட்டம் பிரிவு 17-ல் கூறப்பட்டபடி (assignment) சட்டப்படி மேல்முறையீட்டாளரின் மீது பதிலுரையாளர் புகார் அளிக்க உரிமம் உள்ளது எனவும் நீதிமன்றம் உறுதிபடுத்தியது.

(உ) மேலும் 04.07.1997-ல் இறக்குமதியாளர் பதிலுரையாளருக்கு வழங்கிய அனுமதி கடிதம் மூலம் பதிலுரையாளர் மேல்முறையீட்டாளர் மீது புகார் கொடுத்து தன் இழப்பீட்டை பெற்றுக்கொள்ள வழிவகைகள் உண்டு என நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஊ) மாநில மற்றும் தேசிய ஆணையங்கள் மேல்முறையீட்டாளர் தெரிவித்த எதிர்ப்புகளை நிராகரித்து புகார்தாரரான பதிலுரையாளர் வழக்கு தொடுத்தது ஏற்புடையதாகும் என்று கூறியதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

(எ) மேலும் உச்ச நீதிமன்றம் உண்மைகளின் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 3145; III (2016) CPJ 11 (SC); 2017(1) CPR 273 (SC).

***

**11. கலாடா மின் மற்றும் தொலைதொடர்பு நிறுவனம்** *(எதிர்)* **யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்**

**(Galada Power and Telecommunication Ltd. v. United India Insurance Co. Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 06.03.2009-ல் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணையின் மீது மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கலாடா மின் மற்றும் தொலைதொடர்பு நிறுவனம்
(Galada Power and Telecommunication Ltd.) - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
மற்றும் ஒருவர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:8884-8900/2010.

தீர்ப்பு தேதி : 28.07.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

புகார்தாரரான மேல்முறையீட்டாளர் 01.03.1998 முதல் 13.04.1998 வரை முழுவதுமாக அலுமினியத்தால் ஆன அலாய கண்டக்டர்களை மரபெட்டிகளில் அடைத்து அஸ்ஸாமிலுள்ள பவர் கிரிட் கழகத்திற்கு 21 டிரக்குகளில் அனுப்பிவைத்தார். 25.03.1998-அன்று எல்லா பெட்டிகளிலும் சரக்குகளின் அளவீடு குறைந்திருப்பதை பவர் கிரிட் கழகம் கண்டுபிடித்தது. சரக்கை ஏற்றிச்செல்லும் வழியில் ஏற்படுகின்ற இழப்பிற்காக (transit loss) புகார்தாரர் பதிலுரையாளரிடம் ஒரு காப்பீட்டு பாலிசி எடுத்திருந்தார். அந்த பாலிசிபடி ரூ.35 இலட்சம் இழப்பீடு கோரினார். காப்பீட்டு நிறுவனம் சேத மதிப்பீட்டாளரை அமர்த்தியது. அவர் ஒவ்வொரு பெட்டியிலும் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் குறைந்துள்ளது என்றும், மொத்தம் தோராயமாக ரூ.43 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளதாக செப்டம்பர் 1998-ல் அளித்த தம் முதல் அறிக்கையில் தெரிவித்திருந்தார். ஆனால் காப்பீட்டு நிறுவனம் மேற்சொன்ன இழப்பு சரக்கை ஏற்றிச் செல்லும்போது வழியில் ஏற்பட்ட இழப்பீடு அல்ல என கூறி இழப்பீட்டை தர மறுத்தது. மேல்முறையீட்டாளர் நிறுவனம் மாவட்ட மன்றத்தில் ரூ.43.59 இலட்சம் இழப்பீடும் அதற்க 18% வட்டியும் கோரி 21 வழக்குகளை பதிலுரையாளரான யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் மற்றும் இந்தியா போக்குவரத்து கழகம் ஆகியவற்றின் மேல் தொடர்ந்தது. இப்புகார் மனுக்களை மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து மனுதாரர் 21 வழக்குகளிலும் ஆந்திரபிரதேச ஆணையத்தில் முறையீடு செய்தார். சேத மதிப்பீட்டாளர் நேரிடையாக சேதத்தை கண்டறிந்தும் அவருடைய அறிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாது என காப்பீட்டாளர் தள்ளுபடி செய்தது சரியல்ல என மாநில ஆணையம் கருதியது. காப்பீட்டாளரும், போக்குவரத்து கழகமும் இணைந்து ரூ.43 இலட்சம் வழங்கவேண்டும் என ஆணையிட்டது. காப்பீட்டாளர் மற்றும் போக்குவரத்து கழகம் ஆகிய இருவரும் தேசிய ஆணையத்தில் சீராய்வு மனுவை தாக்கல் செய்தனர். போக்குவரத்து கழகத்தின் சீராய்வு மனு நிராகரிக்கப்பட்டது. ஆனால் இதை எதிர்த்து அவர்கள் மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை. காப்பீட்டாளரது 21 மனுக்களில் 17 வழக்குகளில் காப்பீட்டு விதிகளின்படி இழப்பு நேர்ந்த 7 நாட்களுக்குள் புகார் அளிக்க மனுதாரர் தவறினார் என்ற காப்பீட்டாளரின் கூற்றை ஆணையம் ஏற்றுக்கொண்டது. மாநில ஆணையம் பிறப்பித்த ஆணையை ஒதுக்கிவைத்து தேசிய ஆணையம் உத்தரவு பிறப்பித்தது. தேசிய ஆணையத்தின் ஆணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23; காப்பீட்டு சட்டம் (4 of 1938); இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 115 (1 of 1872) (Evidence Act).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Krishna Wanti v. Life Insurance Corporation of India,* 82 (1999) DLT 598 (DB). (Approved) [Para 12]
2. *Manak Lal v. Dr. Prem Chand Singhvi,* 1957 (SLT Soft) 15. (Relied) [Para 14]
3. *Krishna Bahadur v. Purna Theatre,* V (2004) SLT 378. (Relied) [Para 15]
4. *State of Punjab v. Davinder Pal Singh Bhullar,* IX (2011) SLT 48=IV (2011) DLT (Crl.) 880 (SC)= IV (2011) CCR 394 (SC). (Relied) [Para 16]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) தேசிய ஆணையம் பாலிசி விதி எண் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள “காலகட்டம்” (duration) என்பதனை கருத்தில்கொண்டு புகார்தாரர் மீது பழியை சுமர்த்தி இழப்பீட்டை வழங்க மறுத்ததை நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும் நிராகரிப்பு கடிதத்தில் காலதாமதத்தை குறித்து ஒரு வார்த்தைக்கூட எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றும் பாலிசியின் காலவரையறை குறித்து எங்கும் குறிப்பிடப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளதை நீதிமன்றம் கண்டறிந்தது. நிராகரிப்பு கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள காரணம் அடுத்து நடைபெற்ற ஆய்வில் கண்டறியப்பட்ட விவரங்களினால் புகார்தாரர் தொடுத்துள்ள இழப்பீட்டு கோரிக்கை, சரக்குகளை ஏற்றிச்செல்லும் வழியில் ஏற்படும் இழப்பு என்ற வரையறைக்குள் வராது என்பதாகும். நிராகரிப்பு கடிதத்தில் காலவரையறையைப்பற்றி ஏதும் குறிப்பிடாமல் இருந்ததிலிருந்தும் காப்பீட்டுக் கழகம் சேத மதிப்பீட்டாளரை அமர்த்தியதிலிருந்தும் காலவரையறை பற்றிய விதியை காப்பீட்டு நிறுவனம் தளர்த்தி இருப்பதாகவே கருதவேண்டுமென உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. டெல்லி உயர் நீதிமன்றம் *கிருஷ்ணா வாண்டி* வழக்கில் நிராகரிப்பு கடிதத்தில் ஒரு குறிப்பிட்ட காரணம் குறிப்பிடவில்லை எனில் வழக்கில் வாதாடும்போது அக்காரணத்தை சாதகமாக எடுத்துக்கொள்ள இயலாது என்று கூறியிருப்பதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(ஆ) மேலும் உச்ச நீதிமன்றம் *மானக் லால் v. Dr.பிரேம் சந்த் சிங்வி* (supra), *கிருஷ்ணா பகதூர் v. பூர்ணா திரையரங்கம்* (supra) மற்றும் *பஞ்சாப் மாநிலம் v. தவிந்தர்பால் சிங் புல்லர்* (supra) ஆகிய வழக்குகளை மேற்கோள் காட்டி ஒரு விதியை விட்டுக்கொடுப்பது உரிமைகளை வேண்டுமென்றே விட்டுக்கொடுப்பதற்கு ஒப்பாகும் என உறுதிப்படுத்தியது. இவ்வழக்கில் காப்பீட்டு பத்திரம் காப்பீட்டாளரின் வசமே உள்ளது. விதி எண் 5(3)-லிருந்து 5(5)-வரை உள்ள விதிகளின் சாரத்தை அவர் நன்கு அறிவார் என்றும், இதை அறிந்தபோதும் சேத மதிப்பீட்டாளரை அமர்த்தியுள்ளார் என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. கூடுதலாக நிராகரிப்பு கடிதத்தில் மனுதாரரது கோரிக்கை

இழப்பீடு சரக்குகளை ஏற்றிச்செல்லும்போது வழியில் ஏற்பட்ட இழப்பு அல்ல என்று மட்டுமே தெரிவிக்கப்பட்டது. காப்பீட்டு நிறுவனம் தனது நடவடிக்கையின் மூலம் காலவரையரை பற்றிய விதி மீறப்பட்டுவிட்டது என்ற வாதத்தை முன்வைக்கும் உரிமையை விட்டுக்கெடுத்துவிட்டார். ஆகவே தேசிய ஆணையம் மேற்கூறப்பட்ட வரையறைகளை வைத்து இழப்புக்கு காப்பீட்டாளர் பொறுப்பல்ல என்ற முடிவுக்கு வந்தது சரியல்ல என்றும் நீதிமன்றம் கருதியது.

(இ) மாநில ஆணையம் உண்மைகளின் அடிப்படையில் ஆவணங்களிலிருந்து கண்டறிந்தது சட்டப்படி ஏற்புடையதாகும் என உச்ச நீதிமன்றம் கருதியது. மேலும் மாநில ஆணையம் சேத மதிப்பீட்டாளரின் அறிக்கையையும், மாநில ஆணையத்தின் தீர்ப்பையும், ஆணையையும் கூர்ந்து கவனித்ததில் முழு திருப்தியடைந்து மாநில ஆணையம் எடுத்த முடிவே சரியானது என கூறியது.

(ஈ) எனவே தேசிய ஆணையத்தின் ஆணையை ஒதுக்கி வைத்து மாநில ஆணையம் அளித்த தீர்ப்பு சரியானது என முடிவெடுத்து உச்ச நீதிமன்றம் இந்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 4021; IV (2016) CPJ 5 (SC); 2017(1) CPR 4 (SC).

***

**12. ஒரிசா தொழில் ஊக்குவிப்பு மற்றும் மூலதன கழகம்** *(எதிர்)* **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர்**

**(Industrial Promotion & Investment Corporation of Orissa Ltd. v. New India Assurance Co. Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வர்த்தக நடைமுறைகள் ஆணையம், (Monopolies and Restrictive Trade Practices Commission) புதுடெல்லி மனு எண்:45/2001-ல் 17.08.2005-அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஒரிசா தொழில் ஊக்குவிப்பு மற்றும் மூலதன கழகம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1130/2007.

தீர்ப்பு தேதி : 22.08.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் ஒரிசா அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு பொது நிறுவனமாகும். அந்நிறுவனம் ரூ.40,74,000/-திற்கு குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்தும் கடனை திருமிகு.ஜோஸ்னா காஸ்டிங் சென்டர் ஒரிசா பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு வழங்கியது. ஜோஸ்னா காஸ்டிங் நிறுவனம் வாங்கிய கடனை திருப்பித்தராததால் மேல்முறையீட்டாளர் அவரது சொத்தை 14.02.1992-அன்று கையகப்படுத்தியது. மேற்கண்ட சொத்தை 23.01.1996-அன்று மேல்முறையீட்டாளர், பதிலுரையாளர் 1-ஆம் நபரிடம் ரூ.46 இலட்சத்திற்கு விபத்துக்களிலிருந்து தடுக்கவும், ரூ.60,40,000/-த்திற்கு தீ விபத்துகளிலிருந்து காக்கவும் ரூ.46 இலட்சத்திற்கு திருட்டு மற்றும் கொள்ளை ஆகியவற்றிலிருந்து காக்கவும் காப்பீடு செய்திருந்தது. 22.01.1997-ல் கையகப்படுத்தப்பட்ட சொத்தை ஏலம் விடும்போது சில எந்திரங்களும் அதன் உபரிபாகங்களும் குறைந்திருந்தது தெரியவந்தது. களவு மற்றும் கொள்ளையினால் ஏற்படும் நஷ்டங்களுக்காக முதல் தகவல் அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. 07.02.1997-அன்று மேல்முறையீட்டாளர் பதிலுரையாளரிடம் இழப்பு பற்றி தெரிவித்து இழப்பீடு கோரும் மனுவை கேட்டிருந்தார். 16.12.1997-ல் கதவு உடைப்பு மற்றும் களவு பாலிசியின் கீழ் ரூ.34,40,650/- கோரியிருந்தார். குறிக்கப்பட்ட இந்த இழப்பு வழங்கப்பட்ட பாலிசியின் ஷரத்துக்குள் வரவில்லையென பதிலுரையாளர் 1-ஆம் நபர் 31.03.1998-அன்று கோரிய இழப்பீட்டை தர மறுத்தார். மேல்முறையீட்டாளர் நஷ்டஈடு கோரும் விண்ணப்ப எண்:45/2001-ஐ MRTP சட்டம் 1969-ன் பிரிவு 12B மற்றும் 36A-யின் கீழ் பதிவு செய்தது. MRTP ஆணையம் மனுவை நிராகரித்து உத்தரவை பிறப்பித்தது. இந்த ஆணையால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் தன் முறையீட்டை தாக்கல் செய்தார். அவருடைய முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o); MRTP சட்டம் 1969-ன் பிரிவுகள் 12B, 36A.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *United India Insurance Co. Ltd. v. Orient Treasures (P) Ltd.,* I (2016) CPJ 6 (SC)=I (2016) SLT 337. (Not Applicable) [Para 4]
2. *United India Insurance Co. Ltd. v. Harchand Rai Chandan Lal,* IV (2004) CPJ 15 (SC)=V (2004) SLT 876. (Not Applicable) [Para 5]
3. *General Assurance Society Ltd. v. Chandmull Jain & Anr.,* 1966 (SLT Soft) 184. (Relied) [Para 11]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர் கதவை உடைத்து உள்ளே நுழைந்து களவு மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதி செய்யாமல் வழக்கு தொடுத்துள்ளார் என்பதை உச்ச நீதிமன்றம்

கண்டறிந்தது. கட்டாய உள்நுழைவு (forcible entry) இந்த பாலிசியின் கீழ் தேவையில்லை என்பது மேல்முறையீட்டாளரின் வாதமாகும். மற்ற வியாபார ஒப்பந்தங்களைப்போல் காப்பீட்டு ஒப்பந்தத்தில் உள்ள சொற்களும் நிபந்தனைகளும் தெளிவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற வகையில் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்ட நீதிமன்றம் கட்டாய உள்நுழைவினால் களவு நேர்ந்தால் அதனால் ஏற்படும் நஷ்டத்தை உறுதி செய்வதே இப்பாலிசியின் வரைமுறையாகும் என்று தெரிவித்தது. கட்டாய உள்நுழைவு களவு நிகழ்வதற்குமுன் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்தால்தான் இந்த புகார் ஏற்றுக்கொள்ளப்படும். இரண்டு பக்க வாதங்களையும் கேட்டறிந்தபின் மேல்முறையீட்டாளரின் புகாரை MRTP ஆணையம் நிராகரித்ததில் எந்தவித தவறும் இல்லையென உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஆ) காப்பீட்டு ஒப்பந்தத்திற்கும் மற்ற ஒப்பந்தங்களுக்கும் ஒரு வித்தியாசத்தைத் தவிர வேறு எவ்வித வித்தியாசமும் இல்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. இதற்காக *பொது அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட் v. சந்தன்மல் ஜெயின்* வழக்கு எடுத்துக்காட்டாக காட்டப்பட்டது. அந்த வித்தியாசம் என்னவெனில் காப்பீட்டு ஒப்பந்தங்கள் உண்மையான நம்பிக்கையின் பேரில் செயல்படும் செயல்பாடுகளாகும். இவ்வொப்பந்தத்தில் உள்ள இருவரும் நம்பிக்கைக்கு முரண்பாடாக செயல்படக்கூடாது என்பதனையும், சந்தேகங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தக்கூடாது என்பதனையும், சந்தேகம் வரும் வகையில் சொற்கள் இருந்தால் அது காப்பீட்டு நிறுவனத்திற்கு பாதகமாக எடுத்துக்கொள்ளப்படும் என்றும் உச்ச நீதிமன்றம் அந்த வழக்கில் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தியது. மேலும் ஒப்பந்தங்களிலுள்ள வார்த்தைகளுக்கு ஒப்பந்ததாரர்கள் எந்த வகையில் புரிந்துகொண்டார்களோ அந்த வகையில் விளக்கங்கள் கொடுக்கலாமே தவிர புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

(இ) மேலும் இந்த நீதிமன்றம், தற்போதைய வழக்கில் கொடுக்கப்பட்ட பாலிசி வழக்கமாக கொடுக்கப்படும் படிவத்தில் உள்ள பாலிசியாகும். இந்த வழக்கைப் போன்றே *யுனைடெட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லி மிடெட் v. ஓரியண்ட் டிரஷரர் பிரைவேட் லிமிடெட்* தொடுத்த வழக்கில் களவு மற்றும் கொள்ளை தொடர்பான பாலிசி வழங்கப்பட்டது. இந்த பாலிசியில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் ஷரத்து எதுவும் இல்லை எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஈ) MRTP ஆணையத்தின் தீர்ப்பை ஏற்று உச்ச நீதிமன்றம் முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2016) CPJ 11 (SC); 2017(1) CPR 300 (SC).

***

## 13. நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* இந்துஸ்தான் சேஃப்டி கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட்

**(National Insurance Co. Ltd. v. Hindustan Safety Glass Works Ltd.)**

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அசல் மனு எண்:161/1996-ல் 23.04.2007-அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இந்துஸ்தான் சேஃப்டி கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட் – பதில் அளிப்பவர்

**உடன்**

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கனோரியா கெமிக்கல்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் – பதில் அளிப்பவர்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:3883/2007 உடன் 1156/2008.

தீர்ப்பு தேதி : 07.04.2017.

### 4. வழக்கின் சுருக்கம் :

**சிவில் மேல்முறையீட்டு எண்:3883/2007**

பதிலுரையாளரான இந்துஸ்தான் சேஃப்டி கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட் மேல்முறையீட்டாளரிடம் இரண்டு பாலிசிகள் எடுத்திருந்தார். ரூ.4.9 இலட்சத்திற்கு கல்கத்தாவில் உள்ள அலுவலக கட்டிடம், குடியிருப்பு கட்டிடம், உணவகம் இவைகளுக்கு ஒரு பாலிசியும், கட்டிடம், எந்திரங்கள், சரக்குகள், இருக்கைகள், ஒயரிங் மற்றும் ஃபிட்டிங் ஆகியவற்றிற்கு ரூ.5.7 கோடிக்கு மற்றொரு பாலிசியும் எடுத்திருந்தார். இந்த இரு பாலிசிகளும் வெள்ளம் மற்றும் நீர்தேக்கம் இவைகளால் ஏற்படும் பாதிப்பினால் ஏற்படக்கூடிய இழப்பையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. பதிலுரையாளர் 06.08.1992-அன்று கல்கத்தாவில் ஏற்பட்ட பெருமழை காரணமாக அவர்களது தொழிற்சாலையை சுற்றிலும் தண்ணீர் தேங்கி நின்றதில் ரூ.52 இலட்சத்திற்கு நஷ்டமடைந்து அதற்கான இழப்பீட்டை 07.08.1992 மற்றும் 08.08.1992-ல் கோரினார். 24.09.1992-ல் காப்பீட்டு நிறுவனம் சேத மதிப்பீட்டாளரான N.T.கோத்தாரி அண்டு கம்பெனியை மதிப்பிடும்படி அமர்த்தியது. 11.11.1993-ல் சேத மதிப்பீட்டாளர் ரூ.24 இலட்சம் சேதமடைந்திருக்கும் என தன் அறிக்கையை சமர்ப்பித்தார். இந்த அறிக்கையை

ஒப்புக்கொள்ளாத காப்பீட்டு நிறுவனம் மற்றுமொரு சேத மதிப்பீட்டாளரான சீஸ்கேன் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்பவரை இரண்டாவது முறையாக அமர்த்தியது. இவர் 23.11.1994-ல் தம் முதல் அறிக்கையில் இழப்பீட்டு தொகை ரூ.26 இலட்சம் எனவும் பின் 1995 பிப்ரவரியில் இழப்பீட்டு தொகை ரூ.24 இலட்சம் எனவும் தெரிவித்தார். இரண்டு சேத மதிப்பீட்டாளர்கள் தம் அறிக்கையை சமர்ப்பித்தும் காப்பீட்டு நிறுவனம் பதிலுரையாளருக்கு இழப்பீட்டை கொடுக்கவில்லை. பதிலுரையாளர் ரூ.52.32 இலட்சம் இழப்பீடும், ரூ.1.81 இலட்சம் செலவிட்ட தொகைக்கு ஈடாகவும், 18% வட்டியும் கோரி தேசிய ஆணையத்தில் புகார் மனு அளித்தார். புகார் அளித்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு 22.05.2001 அன்று காப்பீட்டு நிறுவனம் கோரிக்கையை நிராகரித்தது. தேசிய ஆணையம் புகார் மனுவை ஏற்று பதிலுரையாளருக்கு ரூ.21,05,803.89-ம் 11.05.1995-லிருந்து ஆண்டுக்கு 9% வட்டியும் ரூ.20,000/- வழக்கிற்கான செலவும் தர காப்பீட்டு கழகத்திற்கு உத்தரவிட்டது. அதனால் பாதிப்படைந்த காப்பீட்டு நிறுவனம் இந்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**சிவில் மேல்முறையீட்டு எண்:1156/2008**

06.09.1993-அன்று ஏற்பட்ட விபத்தில் கனோரியா கெமிக்கல்ஸ் மற்றும் தொழிற்சாலைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இழப்பீட்டு மனு, நிகழ்ச்சி ஏற்பட்ட மறுநாளே காப்பீட்டு நிறுவனத்திற்கு தாக்கல் செய்தபோதிலும் நேஷனல் காப்பீட்டு நிறுவனம் 27.12.1999-அன்று மனுவை நிராகரித்தது. இவ்வழக்கு தேசிய ஆணையத்திடம் 06.03.1998 முதல் நிலுவையிலிருந்தது. இந்த வழக்கை விசாரித்த தேசிய ஆணையம் எந்திரத்தினுள் ஏற்பட்ட மின்கோளாறு காரணமாக மின்கசிவினால் சேதாரம் ஏற்பட்டது என்று முடிவு செய்தது. இதனால் பாதிப்படைந்த காப்பீட்டு நிறுவனம் இந்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில், இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 21, 23 மற்றும் 24A.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *State Bank of India v. B.S. Agricultural Industries (I),* (2009) 5 SCC 121:(AIR 2009 SC 2210). (Referred) [Para 15]
2. *Kandimalla Raghavaiah and Co. v. National Insurance Co. Ltd.,* (2009) 7 SCC 768:(AIR 2010 SC (Supp) 880). (Referred) [Para 16]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

**சிவில் மேல்முறையீட்டு எண்:3883/2007**

(அ) காப்பீட்டு நிறுவனம் எழுப்பிய கீழ்வரும் நான்கு எதிர்மறைகளை தேசிய ஆணையம் பதிவு செய்ததை உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது:

1. பாலிசிகளில் இருந்த விதி எண் 6(ii)-ன்படி இப்புகார் ஏற்கத் தக்கதல்ல;
2. ஆகஸ்ட் 1992-ல் ஏற்பட்ட பாலிசிதாரரின் பொருட்சேதத்திற்கு 13.08.1996-ல் வழக்கு பதிவு செய்ததால் இவ்வழக்கு காலவரையறைக்குட்படவில்லை;
3. 03.05.1991 முதல் தொழிற்சாலை மூடியிருந்ததால் அதன் விளைவாக படிந்த தூசி மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றால் சரக்குகள் சேதமடைந்து நஷ்டம் ஏற்பட்டதே தவிர வெள்ளத்தினாலோ அல்லது நீர் தேக்கத்தினாலோ அல்ல;
4. இரண்டு சேத மதிப்பீட்டாளரின் அறிக்கைகளையும் இழப்பீட்டை அளிப்பதற்கு அடிப்படையாக எடுக்க முடியாது.

(ஆ)தேசிய ஆணையம் இவ்வெல்லா வாதங்களையும் பின்வரும் முக்கிய காரணங்களுக்காக ஏற்க முடியாது என கூறியது:

1. காப்பீட்டு பாலிசியின் விதி எண் 6(ii)-ல் கண்டுள்ளபடி விபத்து அல்லது நிகழ்வு ஏற்பட்ட தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாவிடில் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பை ஏற்க இயலாது. ஆனால் இவ்வழக்கில் செயல்பாடு நிலுவையில் உள்ளது. வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கருதப்படும் என்ற வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. இழப்பீட்டு கோரிக்கையை பாலிசிதாரர் கோரும்போதே நடவடிக்கை எடுத்ததாக கருதப்படுவார். பாலிசிதாரர் நீதிமன்றத்தை அணுகி சட்டப்படியான தீர்வை கோரவேண்டிய அவசியமில்லை. தேவையில்லாமல் வழக்குகளை பதிவு செய்வதை இது ஊக்குவிப்பதோடு பொதுமக்களின் நலனுக்கு உகந்ததாகவும் அது இருக்காது. காப்பீட்டின் குறிக்கோள் நிச்சயமாக அதுவாக இருக்கமுடியாது என்பதனை நீதிமன்றம் வலியுறுத்தியது.
2. *பாரத ஸ்டேட் பேங்க் v. B.S. விவசாய தொழிற்சாலை மற்றும் காண்டிமல்லா ராகவய்யா கம்பெனி v. நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன* வழக்குகளை எடுத்துக்காட்டுகளாக காட்டி தொடுக்கப்பட்ட இந்த வழக்கு காலவரையறைக்கு அப்பாற்பட்டது என்று வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. இழப்பு நேரிட்ட மறுநாளே பாலிசிதாரர் தன் இழப்பீட்டு கோரிக்கையை சமர்ப்பித்துள்ளார் என்பதனை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. காப்பீட்டு நிறுவனம் இரண்டு சேத மதிப்பீட்டாளர்களை அமர்த்தி அவர்கள் தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்க எடுத்துக்கொண்ட காலம் ஆகியவற்றால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தாமதம் ஏற்பட்டது. இவ்வழக்கில் காலதாமதம் ஏற்படுத்தியது பாலிசிதாரர் அல்ல காப்பீட்டு நிறுவனமே என நீதிமன்றம் பதிவு செய்தது. புகாரை சமர்ப்பித்த வெகுநாட்களுக்குப் பின்னரே மனுதாரர் கோரிய இழப்பீட்டை

22.05.2001–அன்று காப்பீட்டு நிறுவனம் நிராகரித்தது என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

3. மூன்றாவதாக காப்பீட்டாளரது முடிவு அவர்கள் அமர்த்திய சேத மதிப்பீட்டாளர்களின் அறிக்கைக்கு எதிர்மறையான முடிவாக இருப்பதை நீதிமன்றம் பதிவு செய்தது. ஆகவேதான் சேத மதிப்பீட்டாளர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சேத அளவை ஏற்றுக்கொள்ள காப்பீட்டு நிறுவனம் முன்வரவில்லை என்பதனையும் நீதிமன்றம் பதிவு செய்தது.

4. மேலும் இரண்டாவது சேத மதிப்பீட்டாளர் மத்திய கண்ணாடி, செராமிக் ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசனை பேரிலே தன் அறிக்கையை தயார் செய்து சமர்ப்பித்தது. காப்பீட்டாளர் இரண்டாவது அறிக்கையையும் ஏன் ஏற்கவில்லை என்பதற்கான விளக்கத்தைத் தெரிவிக்கத் தவறிவிட்டார். மேலும் தேசிய ஆணையம் இரண்டாவது சேத மதிப்பீட்டு அறிக்கையில் எவ்வித குறைகளையும் காணவில்லை என்பதையும் நீதிமன்றம் குறித்துக்கொண்டது.

**<u>சிவில் மேல்முறையீட்டு எண்:1156/2008</u>**

1. இந்த மேல்முறையீட்டில் நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் காப்பீட்டு பாலிசி விதி எண் 6(ii)–ன் கீழும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 24A–ன் கீழும் காலதாமதம் ஏற்பட்டது என வாதிட்டதை நீதிமன்றம் ஏற்கவில்லை. இந்த வழக்கு 06.03.1998 முதல் தேசிய ஆணையத்தில் நிலுவையில் இருந்ததையும், 27.12.1999–அன்றுதான் காப்பீட்டு நிறுவனம் பாலிசிதாரரின் கோரிக்கையை நிராகரித்தது என்பதை நீதிமன்றம் பதிவு செய்தது.

2. காப்பீடு செய்யப்பட்ட எந்திரம் வெடித்ததா அல்லது இயந்திரத்திலுள்ள மின்கசிவினால் பாதிப்பு ஏற்பட்டதால் இழப்பு ஏற்பட்டதா என்பதுதான் இவ்வழக்கில் உள்ள பிரச்சனை. தேசிய ஆணையம் அவர்களுக்கு கிடைத்த சாட்சியின் பேரில் எந்திரம் வெடித்ததால் மின்கசிவு ஏற்பட்டு இயந்திரத்தின் பாகங்கள் சேதமடைந்தன என முடிவு செய்தது. தேசிய ஆணையம் வழங்கிய தீர்ப்பில் மாறுதல் செய்ய நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் எந்தவித முகாந்திரத்தையும் அளிக்கவில்லை என்று உச்ச நீதிமன்றம் கருதியது. இறுதியாக இரண்டு மேல்முறையீடுகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2017 SC 1900; II (2017) CPJ 1 (SC); 2017(2) CPR 1 (SC).

***

## (k) சட்ட சேவைகள்

### 1. மத்திய புலனாய்வுத்துறை ஹைதராபாத் *(எதிர்)* K.நாராயணராவ்

### (Central Bureau of Investigation, Hyderabad v. K. Narayana Rao)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

ஆந்திரபிரதேச உயர் நீதிமன்றம் ஹைதராபாத் குற்றவியல் மனு எண்:2347/2008-ல் 09.07.2010 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

மத்திய புலனாய்வுத்துறை ஹைதராபாத் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

K.நாராயணராவ் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

குற்றவியல் மேல்முறையீட்டு எண்:1460/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 21.09.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

தகவல் விபரங்களின் அடிப்படையில் ஹைதராபாத்தில் உள்ள நாராயணகுடா கிளை, விஜயா வங்கியின் அப்போதைய மேலாளர் திரு.ராதா கோபால் ரெட்டி (A1) மற்றும் உதவி மேலாளர் திரு.உதய சங்கர் (A2) ஆகியோர் மீது இ.பி.கோ. பிரிவுகள் 120-B, 419, 420, 467, 468 மற்றும் 471 மற்றும் இ.பி.கோ. பிரிவு 109 மற்றும் லஞ்ச ஒழிப்பு சட்டம் 1988 பிரிவு 13(2) மற்றும் 13(1)(b) இவைகளின் கீழ் 30.11.2005 அன்று குற்றவியல் புலணாய்வுத்துறை ஹைதராபாத் முதல் தகவல் அறிக்கை (F.I.R) பதிவு செய்தனர். இவ்வழக்கில் புகார் என்னவெனில் பொது ஊழியர்களாக இருக்கும் அவர்கள் தங்கள் அலுவலக பதவியை தவறாக பயன்படுத்தி தனிநபர்களான திரு.P.Y.கொண்டலராவ் (A3), கட்டுமான கலைஞர் மற்றும் திரு.N.S.சஞ்சீவ்ராவ் (A4) மற்றும் பெயர் தெரியாத ஒருவருடன் சேர்ந்து வங்கி நலனுக்கு எதிராக 22 நபர்களுக்கு குடியிருப்பு கடனை பெறுவதற்கான உத்தரவை பிறப்பித்து வங்கியின் விதிமுறைகளை மீறி ரூ.1.27 கோடி சதிசெய்து வங்கிக்கு இழப்பை ஏற்படுத்தி அதன்மூலமாக இலாபத்தை பெறவும் முயற்சித்துள்ளார்கள் என்பதாகும். விசாரணைக்குப்பின் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தபோது சட்டப்பயிற்சியாளர் மற்றும் விஜயா வங்கிக்கு சட்ட ஆலோசகராகவும் இருந்த K.நாராயணராவ் (A6) குற்றவாளியாக இணைக்கப்பட்டார். இவர் 10 குடியிருப்பு கடன்களை பெற தவறான பரிந்துரைகளை கொடுத்து வங்கிக்கு ரூ.1.27 கோடி இழப்பை ஏற்படுத்தினார் என்பது இவர் மீது தொடுக்கப்பட்ட புகார் ஆகும். மேலும் பதிலுரையாளரான (A6) மற்றும் K.C.ராமதாஸ் (A7) மதிப்பீட்டாளர் ஆகியோர் தம்

அறிக்கையில் சொத்திற்கு யார் உரிமையாளர் என்பதனையும் குடியிருப்புகளின் பெயர்களையும் நகராட்சி அலுவலர்கள் தவறாக கட்டுமான பணிக்கு அனுமதி கொடுத்த விவரங்களையும் தெரிவிக்கவில்லை என்பது அவர்கள் மீதான புகாராகும். இதனால் பாதிக்கப்பட்ட பதிலுரையாளர், தன் மீது தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி ஆந்திரபிரதேச உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 482-ன் கீழ் குற்றவியல் மனு எண்:2347/2008 தாக்கல் செய்தார். 09.07.2010-ல் வழங்கப்பட்ட உயர் நீதிமன்ற ஆணையில் பதிலுரையாளர் A6 அவர்களது மீதான குற்றவியல் நடைமுறைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் பாதிப்படைந்த ஹைதராபாத் மத்திய புலனாய்வுத்துறை சிறப்பு விடுப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தில் இந்த முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது. மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Sajjan Kumar v. CBI,*
   (2010) 9 SCC 368 : (2010) 3 SCC (Cri) 1371.
2. *P. Vijayan v. State of Kerala,*
   (2010) 2 SCC 398 : (2010) 1 SCC (Cri) 1488.
3. *K. Narayana Rao v. State of A.P.,*
   Criminal Petition No.2347 of 2008, order dated 09.07.2010.
4. *Jacob Mathew v. State of Punjab,*
   (2005) 6 SCC 1 : 2005 SCC (Cri) 1369.
5. *Mahaveer Prashad Gupta v. State (NCT of Delhi),*
   (2000) 8 SCC 115 : 2000 SCC (Cri) 1453.
6. *Rupan Deol Bajaj v. Kanwar Pal Singh Gill,*
   (1995) 6 SCC 194 : 1995 SCC (Cri) 1059.
7. *State of Haryana v. Bhajan Lal,*
   1992 Supp (1) SCC 335 : 1992 SCC (Cri) 426.
8. *State of Bihar v. Murad Ali Khan,*
   (1988) 4 SCC 655 : 1988 SCC (Cri) 27.
9. *Pandurang Dattatraya Khandekar v. Bar Council of Maharashtra,*
   (1984) 2 SCC 556 : 1984 SCC (Cri) 335.
10. *Shivnarayan Laxminarayan Joshi v. State of Maharashtra,*
    (1980) 2 SCC 465 : 1980 SCC (Cri) 493.

11. *State of Bihar v. Ramesh Singh,*
(1977) 4 SCC 39 : 1977 SCC (Cri) 533.

## 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

(அ) ஒரு வழக்கறிஞர் தனது கட்சிக்காரருக்கு முழு விசுவாசத்தோடு இருக்கவேண்டும் எனவும் அவரது நலனை முன்னிறுத்தி செயல்படுபவராக இருக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. வழக்கறிஞரது வாதம் ஏற்கத் தக்கதாக இல்லை என்ற காரணத்திற்காக அவரை குற்றவாளியாக சேர்க்க முடியாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் / பதிலுரையாளர் A6 மற்ற குற்றவாளிகளுக்கு இந்த சதிசெயலில் உடந்தையாகவும், உதவியாகவும் இருக்கும் பட்சத்தில், அவர்மீது பிரிவு 420 மற்றும் 109 இ.பி.கோ. படி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், அதற்கு தகுந்த ஆதாரம் இல்லாததால், அது சாத்தியமில்லை. அதிகபட்சம், அவர்மீது கவனக்குறைவு மற்றும் தொழிலில் தவறான நடத்தைக்காக வேண்டுமானால், நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், அதுவுமே தகுந்த சாட்சியங்களோடு நிரூபிக்கப்படவேண்டும். அதற்கு போதுமான ஆதாரம் இல்லாததால், உச்ச நீதிமன்றம், பதிலுரையாளர் மற்ற குற்றவாளிகளுடன் சேர்த்து, மேற்படி வங்கிக்கு நஷ்டம் ஏற்பட காரணமாக இருந்தார் என்ற முடிவுக்கு வர இயலவில்லை.

(ஆ) பொதுவாக ஒரு வழக்கறிஞர், தனது கட்சிக்காரருக்கு கீழ்க்கண்ட இரண்டு விஷயங்கள் குறித்து உறுதி செய்ய முடியும்:

(1) தான் தன்னுடைய தொழிலில் போதுமான திறமையும், தொழில் நேர்த்தியும் கொண்டவர்;

(2) அத்தகைய திறமையையும், தொழில் நேர்த்தியையும், தான் எடுத்துக்கொள்ளும் வழக்கில் பெருமளவு கையாளுகிறார்.

உச்ச நீதிமன்றம், இந்த வழக்கில் அடிப்படை முகாந்திரம் இல்லாததால் மேற்கூறிய காரணங்களை சுட்டிக்காட்டி, பதிலுரையாளரை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்தது. மேலும், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் எடுத்த முடிவினை உறுதி செய்து, மத்திய புலனாய்வுத்துறையின் நிலைப்பாட்டை நிராகரித்தது.

## 8. ஆவணச் சான்றுகள் :

(2012) 9 SCC 512.

***

## (1) நஷ்டஈட்டினை வழங்கும் பொறுப்பினை ஏற்பது

### 1. வினோத்குமார் தரேஜா *(எதிர்)* ஆல்ஃபா கட்டுமானம் மற்றும் பலர்

### (Vinod Kumar Thareja v. M/s. Alpha Construction & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

நுகர்வோர் குறைதீர் ஆணையம் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

வினோத்குமார் தரேஜா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஆல்ஃபா கட்டுமானம் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1493/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:7283/2010 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 08.02.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

11,000 சதுரடி நிலத்திற்கான உரிமையாளரான மேல்முறையீட்டாளர் கூட்டு முயற்சியாக கட்டிட வல்லுநரான பதிலுரையாளருடன் அந்த இடத்தில் ஒன்பது இரண்டடுக்கு குடியிருப்புகளை கட்ட ஒப்பந்தத்தை மேற்கொண்டார். இந்த ஒப்பநதத்தில் முதல் பதிலுரையாளர் கட்டிடத்தை கட்டி முடிக்கவும் குடியிருப்புகளை விற்கவும் முழு பொறுப்பினை ஏற்கிறார். விற்பனையில் வரும் பயனில் 45% மேல்முறையீட்டாளரும், 55% முதல் பதிலுரையாளரும் பெறுவர். முதல் பதிலுரையாளர் கட்டிடத்தின் தரத்திலும் கட்டிடத்தை கட்டி முடிப்பதிலும் தனி பொறுப்பினை ஏற்கின்றார். மேல்முறையீட்டாளரும் முதல் பதிலுரையாளரும் இணைந்து, இரண்டாம் மற்றும் மூன்றாம் பதிலுரையாளருடன் விற்பனை ஒப்பந்தத்தை செய்கையில் 968 சதுரடி நிலத்தை எலும்புகூடு கட்டமைப்புகளாக ரூ.6 இலட்சத்திற்கு விற்பதாக ஒப்புக் கொண்டதாக தெரிவித்தனர். 2–ஆம் மற்றும் 3–ஆம் பதிலுரையாளர்கள் கட்டிடகலைஞரால் கட்டப்பட்ட குடியிருப்புகள் நகராட்சி மன்றத்தால் இடிக்கப்பட்டதால் சேவை குறைபாடு உள்ளது என்று மாவட்ட மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். புகார்தாரர்கள் அவர்கள் செலுத்திய ரூ.11,80,000/–ம் அதனுடன் சேர்த்த வட்டி ரூ.3,35,000/–மும் அதனுடன் இழப்பீடும் மற்றும் அபராதத் தொகையும், தண்டனை பாதிப்பும் வழங்கும்படி கோரினார். மாநில மன்றத்தில் தொடுத்த வழக்கில் மேல்முறையீட்டாளரை சேர்க்கவில்லை. முதல் பதிலுரையாளரும், மேல்முறையீட்டாளரை உடன் பதிலுரையாளராக சேர்க்க எந்த மனுவையும் சமர்ப்பிக்கவில்லை. மாவட்ட நுகர்வோர் மன்றம் புகாரை ஏற்று பதிலுரையாளர்கள் 2–ஆம் மற்றும் 3–ஆம் நபர்களுக்கு 18% வட்டியுடன் ரூ.11,80,000/–ம்

வழங்க உத்தரவிட்டது. முதல் பதிலுரையாளர் மாநில ஆணையத்தில் சமர்ப்பித்த மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளரை 3-வது பதிலுரையாளராக இணைக்கும்படி மனு செய்தது. இதனை ஏற்ற மாநில ஆணையம் மேல்முறையீட்டாளரை பதிலுரையாளராக ஏற்க அனுமதித்தது. மேல்முறையீட்டாளர் இவ்வழக்கில் தனக்கு எந்த பொறுப்பும் இல்லை என்று வாதிட்டார். மாநில ஆணையம் இந்த மேல்முறையீட்டில் ஒரு பகுதியை பதிலுரையாளரும் ஏற்று முதல் மேல்முறையீட்டாளரும் கூட்டாக கட்டுமான பணியில் பங்கேற்பதாய் விற்பனை பத்திரத்தில் ஒப்பமிட்டுள்ளதால் முறையீட்டாளருக்கும் பொறுப்பு உண்டு என்று தீர்ப்பளித்தது. மாநில ஆணைம் 2-ஆம் மற்றும் 3-ஆம் பதிலுரையாளர்கள் இந்த சொத்தை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப கொடுத்து 2-ஆம் மற்றும் 3-ஆம் பதிலுரையாளர்கள் செலுத்திய பணத்தை முதலாம் பதிலுரையாளரும், மேல்முறையீட்டாளரும் திருப்பிக்கொடுக்க ஆணையிடப்பட்டது. வட்டி 18% இருந்ததை வருடத்திற்கு 9% மாற்றியமைத்தது. தேசிய ஆணையத்தின் முன் சமர்ப்பித்த மேல்முறையீட்டாளரின் மறுபரிசீலனை மனு தள்ளுபடி செய்யப்பட்டு கட்டிட வல்லுநரும், நிலத்தின் உரிமையாளரும் எவ்வித தவறுதல்களுக்கும் மற்றும் செயல்பாடுகளுக்கும் இருவரும் சேர்ந்து பொறுப்பேற்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்டவர் இந்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். முறையீட்டு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இதில் எழுப்பப்பட்ட ஒரு கேள்வி நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பதிலுரையாளருக்கு கொடுக்கப்பட்ட ஆணையில் ஒரு 3-வது நபரை (முறையீட்டாளரை) நஷ்டஈட்டில் முழுமையாகவோ பகுதியாகவோ கொடுக்கவேண்டிய பொறுப்பு உள்ளதாக சேர்க்க முடியுமா என்பதாகும். புகார்தாரர்கள் முறையீட்டாளர் மீது எந்த குறைபாடுகளையும் தெரிவிக்கவில்லை, எந்த இழப்பீட்டையும் கேட்கவில்லை. முதல் முறையீட்டாளர் மாவட்ட மன்றத்தின் முன் மேல்முறையீட்டாளரை பதிலுரையாளராக நியமித்தது. மாவட்ட மன்றம் வழங்கிய உத்தரவில் முதல் பதிலுரையாளரின் சேவையில் குறைபாடு உள்ளது என்பதனை புகார்தாரர்கள் எதிர்க்கவில்லை. ஆனால் இந்த மேல்முறையீட்டு மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது, 2-ஆம் மற்றும் 3-ஆம் பதிலுரையாளருக்கு முதலாம் பதிலுரையாளர் பணத்தை கொடுக்க வேண்டுமா? கொடுக்க வேண்டுமென்றால் எந்த அளவிற்கு? ஆகையால் இந்த நீதிமன்றம், இவ்வழக்கில் கூறியதாவது, "புகார்தாரருக்கு இழப்பை ஈடுகட்ட முடியுமே ஒழிய 3-வது நபருக்கு அல்ல".

(ஆ) மேலும் நீதிமன்றம், கீழ்க்கண்ட கருத்தை முன் வைத்தது, "சேவை தருபவரிடம் நஷ்டஈட்டை புகார்தாரர் கோரும்போது சேவை புரிபவருக்கு பாதகமாக ஆணை வழங்கப்பட்டால் வேறு 3-வது நபரும் சேவை குறைபாட்டுக்கு பொறுப்பாவார் என்று அவர் கருதினால் அவர் மீது சேவை புரிபவர் தனிமையாக நடவடிக்கை எடுக்கவேண்டும் மாறாக, கொடுக்க நேரும் நஷ்டஈட்டு தொகையில், 3-வது நபரின் பங்களிப்பை கோர இயலாது".

(இ) சமர்ப்பித்ததில் முதலாம் பதிலுரையாளர் அவரை 3-ஆம் பதிலுரையாளராக நியமித்ததில் மேல்முறையீட்டாளர் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை என்ற வாதம் குறித்து நீதிமன்றம், கீழ்க்கண்ட இரு கருத்துக்களை கூறியது:

(1) மேல்முறையீட்டு மனுவின் மூலம், ஒரு நபரை வழக்கின் நபராக மாற்றுவதற்கும், உத்தரவின் மூலம் ஒரு நபரை பொறுப்புடையவராக மாற்றுவதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. எவ்வாறெனில், வழக்கின் முடிவு, வழக்கு தொடுத்தவர்களுக்கு சாதகமாக அமையும் பட்சத்தில், வழக்கில் சேர்க்கப்பட்ட நபருக்கு பெரிதும் பாதிப்பு இருக்காது;

(2) மாறாக வழக்கின் முடிவு, வழக்கு கொடுத்தவர்களை பொறுப்பாக மாற்றும் பட்சத்தில், வழக்கில் சேர்க்கப்பட்ட நபரையும் பொறுப்புக்கு உள்ளாக்கும்.

(ஈ) ஆகையால், உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுவை அனுமதித்தன் மூலம், தேசிய நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம், மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணைகளை மாற்றி அமைத்தது. குறைதீர் ஆணையங்கள் தங்களது ஆணையில், மேல்முறையீட்டாளர் மற்றும் முதல் பதிலுரையாளர் ஆகிய இருவருக்கும் பொறுப்பு உண்டு என்று தெரிவித்திருந்தன. அத்தோடு, முதல் பதிலுரையாளர், மேல்முறையீட்டாளரிடம் ஏதேனும் கோரிக்கையோ அல்லது சட்டபூர்வ உரிமையோ கோரும்பட்சத்தில், அதற்கு தனியாக நடவடிக்கை எடுக்கும் உரிமையும் அளிக்கப்பட்டது.

(உ) மாநில உயர் நீதிமன்ற ஆணையான வட்டிவிகித குறைப்பு 18% இருந்து 9% வரை (வருடத்திற்கு) தேசிய நுகர்வோர் ஆணையத்தால் உறுதி செய்யப்பட்டது. இது மேலும் உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. மேலும், 2-ஆம் மற்றும் 3-ஆம் பதிலுரையாளர்கள், மேல்முறையீட்டாளருக்கு நிலத்தை திருப்பி கொடுக்கவேண்டும் என்ற ஆணையும், அங்கீகரிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2011 SC 996; II (2011) CPJ 3 (SC).

***

## (m) ஆயுள் காப்பீடு

### 1. இந்திராவதி சிங் சாந்து *(எதிர்)* இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம்

### (Indirawati Singh Sandhu v. Life Insurance Corporation of India)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய தீர்ப்பும் அதன் ஆணையும்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

இந்திராவதி சிங் சாந்து - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் - பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7067/2011.
தீர்ப்பு தேதி : 16.08.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளரின் கணவர் திரு.நரேந்தர் பால் சிங் சாந்து, 11.08.1993-ஆம் தேதி அன்று ஒரு பாலிசியை எடுத்திருக்கிறார். பாலிசி எடுத்து, 13 நாட்களுக்கு பின் இறந்துவிட்டார். பதிலுரையாளர் இழப்பீட்டு தொகை தர மறுத்ததால், மேல்முறையீட்டாளர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 பிரிவு 12-ன்கீழ் புகார் மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், பதிலுரையாளர் சமர்பித்த R-3 ஆவணத்தை சான்றாக கொண்டு, மனுவை பின்வரும் காரணங்களுக்காக தள்ளுபடி செய்தது: (1) மேல்முறையீட்டாளர், அக நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்கிறார்; (2) மேல்முறையீட்டாளர் தனக்கு இருந்த வியாதி சம்பந்தமாக, சில உண்மைகளை மறைத்திருக்கிறார். மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் முடிவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்ட மனு, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முடிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முடிவுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 12 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) பாலிசியை படித்த நீதிமன்றம் இதில் மேல்முறையீட்டாளரின் கணவர் காலம்சென்ற திரு.நரேந்தர் பால் சிங் சாந்து த/பெ. திரு.ரிசால் சிங் சாந்து 11.08.1993-ல் எடுத்த பாலிசியில் அவர் கொடுத்திருந்த விலாசம் H.No.18, பழைய வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, முர்தால் ஆடா, சோனாபெட் என்று இருந்தது. ஆனால் பதிலுரையாளர் சமர்ப்பித்த சான்றிதழில் நரேந்தர் சிங் த/பெ. சர்தா சிங் H.No.905, செக்டார்-13, ஃபரிதாபாத் என்ற இடத்தில் வசித்துவந்தார் என எதிர்மறையாக கொடுக்கப்பட்டிருந்தது. மேல்முறையீட்டாளரான இறந்தவரின் மனைவி எதிர்தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ் R-3 தன் கணவரைச் சார்ந்த சான்றிதழ் அல்ல என்று கூறியபோதும், மாநில ஆணையமும், தேசிய ஆணையமும் இதைக் குறித்து இந்த வழக்கில் எதையும் பொருட்படுத்தாமல் தள்ளுபடி செய்தது மட்டுமல்லாமல் மறு சீராய்வு மனு பதிவு செய்தபோது இறந்தவர் உண்மைகளை மறைத்து பாலிசியை பெற்றதாக கூறப்பட்டது.

(ஆ) மாவட்ட மன்றமும், மாநில ஆணையமும், தேசிய ஆணையமும் எடுத்த முடிவிற்கும் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனவே உச்ச நீதிமன்றம் அந்த ஆணைகளைத் தள்ளுபடி செய்தது. மேலும் உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை புதிதாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தீர்ப்பு நல்குமாறு மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தை பணித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 1 (SC).

***

**2. P.வெங்கட் நாயுடு** *(எதிர்)* **இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் ஒருவர்**

**(P. Vankat Naidu v. Life Insurance Corporation of India & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

P.வெங்கட் நாயுடு – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7437/2011.

தீர்ப்பு தேதி : 26.08.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

28.04.2002-ல் மேல்முறையீட்டாளரின் மகனான P.ஸ்ரீகாந்த் என்பவர் ரூ.10 இலட்சத்திற்கு பதிலுரையாளரிடம் பாலிசியை எடுத்தார். இவர் முதல்நிலை ஒப்பந்தக்காரராக இருந்தார். முன்மொழிவு விண்ணப்பம் வரிசை எண்:11(A)-ல் கடந்த 5 ஆண்டு காலத்தில் பாலிசிதாரர் எந்த மருத்துவ ஆலோசகரிடமும், எந்த வியாதிக்காகவும் ஆலோசனை பெறவில்லை என குறிப்பிட்டிருந்தார். 19.12.2003-ல் இதய மூச்சு திணறல் காரணமாக பாலிசிதாரர் இறந்துவிட்டார். இறந்தவரின் வாரிசுதாரரான மேல்முறையீட்டாளர் 16.04.2004-ல் இழப்பீட்டை கோரி விண்ணப்பித்ததில் பதிலுரைப்பவரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. எனவே பதிலுரையாளர் காப்பீட்டு தொகையினையும் அதற்குண்டான போனஸையும் சேர்த்து வருடத்திற்கு 24% வட்டியுடன் வழங்கும்படி நுகர்வோர் புகாரை இவர் பதிவு செய்தார். பதிலுரையாளர், மனுதாரர் காப்பீட்டை கோருவதற்கு தகுதியற்றவர் என்றும் பாலிசிதாரர் பாலிசியை எடுக்கும்போது தனக்குள்ள வியாதியை மறைத்துவிட்டார் என்றும் வாதிட்டார். வழக்காடுபவர்கள் கொடுத்த ஆதாரங்களையம், சாட்சியங்களையும் கருத்தில்கொண்டு மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், பதிலுரையாளர்கள் ரூ.10 இலட்சம் இழப்பீட்டையும் 12% வட்டியையும் மற்றும் ரூ.10,000/- வழக்கின் செலவிற்காகவும் கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது. மாவட்ட மன்றத்தின் ஆணைக்கு எதிராக, முறையீட்டாளர் மாநில ஆணையத்தில் செய்த முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. தேசிய ஆணையம், மாவட்ட மன்றம் மற்றும் மாநில ஆணையத்தின் முடிவை மாற்றி அமைத்து அக நோயாளியாக சிகிச்சை பெற்றதை பாலிசிதாரர் குறிப்பாக முன்மொழிவு விண்ணபத்தில் மறைத்துள்ளதால் காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டை நிராகரித்தது சரியே என தீர்ப்பளித்தது. தேசிய ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) உச்ச நீதிமன்றம், அனைத்து காரண காரணிகளை அலசி ஆராய்ந்த பின் மேல்முறையீட்டு மனுவை அனுமதித்தன் மூலம், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முடிவை மாற்றி அமைத்தது. மேலும் பின்வரும் காரணங்களுக்காக மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் நீதிமன்ற ஆணையை உறுதி செய்தது.

(ஆ) மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணைப்படி பாலிசிதாரர், P.ஸ்ரீகாந்த் நீண்டகால இதய நோயால் பாதிக்கப்பட்டு வந்தார் என்பதற்கும், அதை அவர் மறைத்திருந்தார்

என்பதற்கும் போதுமான ஆதாரம் இல்லாததால், எதிர்வாதிகளின் வாதம் பொய்த்து விடுகிறது. மேலும் 03.09.2002-அன்று எடுத்த மின்னனு இதய அறிக்கை (ECG) அதை உறுதி செய்கிறது.

(இ) மேலும், மாநில நுகர்வோர் நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள டாக்டர் சங்கர் சர்மா–வின் சாட்சியத்தின் மூலம், பாலிசிதாரர் வயிற்றுவலிக்காக அவரிடம் சிகிச்சை பெற்றிருந்தார் என்பது தெரியவருகிறது. மேலும், எதிர்தரப்பு வாதிகள், பாலிசிதாரர், இதய நோயால் பாதிக்கப்பட்டார் என்பதை நிரூபிக்க எந்த ஆதாரமும் மாநில நுகர்வோர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தை பார்க்கும்போது, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் தவறான அனுமானத்தில் இந்த முடிவை எடுத்துள்ளது என்று தெரியவருகிறது.

(உ) இத்தகைய சூழ்நிலையில், எதிர்தரப்பு வாதிகளின், வாதங்களுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முடிவு நியாயமற்றதாக தெரிகிறது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 6 (SC).

***

## (n) கடல்சார்ந்த காப்பீடு

### 1. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* பிரியா புளூ இன்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

**(The New India Assurance Co. Ltd. v. Priya Blue Industries (P) Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அசல் புகார் எண்:129/1998-ல் 19.05.2005 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பிரியா புளூ இன்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3714/2005 இதனுடன் சிவில் மேல்முறையீட்டு எண்:2116/2006.
தீர்ப்பு தேதி : 09.03.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர் / புகார்தாரர், கப்பல் உடைத்தல் மற்றும் பயன்படுத்திய பொருட்களை மறுசுழற்சி செய்யும் வியாபாரத்தை செய்துவந்தார். ஆலங் துறைமுகத்தில் மிக அதிக அளவுள்ள தாதுக்களையும், எண்ணெயையும் எடுத்துச்செல்லும் தகுதியுடைய கப்பலை உடைப்பதற்கும், பொருட்களை மறுசுழற்சி செய்வதற்கும் இறக்குமதி செய்தார். பதிலுரையாளர் காப்பீட்டு கப்பலுக்கும் மற்ற எந்திரங்களுக்கும் ஆலங் நங்கூரம் மற்றும் ஆலங் கப்பல் உடைக்கும் இடத்திற்கும் இடையே உள்ள தூரத்திற்கு கொண்டு செல்ல கடல்சார்ந்த பாலிசியை எடுத்திருந்தார். இவர் எடுத்த காப்பீட்டு தொகை ரூ.25.70 கோடியாகும். ஆனால் இறுதிப் பயணத்தில் கடுமையான வானிலை காரணங்களால் இந்த கப்பல் முழுமையாக சேதம் அடைந்தது. பதிலுரையாளர் ரூ.18.30 கோடி அதனுடன் 19.5% வட்டியையும் மற்றும் செலவினங்களையும் கோரியிருந்தார். மேல்முறையீட்டாளரான காப்பீட்டாளர் இரண்டு சேத மதிப்பீட்டாளர்களையும் அமர்த்தினர். பதிலுரைப்பவர் டோனி பெர்னான்டஸ் ஆவரேஜ் அட்ஜஸ்டார் பிரைவேட் லிமிடெட் என்பவரை காப்பீட்டு நிறுனத்தின் ஒப்புதலோடு சேதமதிப்பீடு செய்யும்படி அமர்த்தியது. சேத மதிப்பீட்டாளர்கள் தமது அறிக்கையை சமர்ப்பித்தனர். ஆனால் காப்பீட்டு நிறுவனம் பதிலுரையாளர் / புகார்தாரர் அவர்களின் கோரிக்கையை ஏற்று இழப்பீட்டை தரவில்லை. பதிலுரையாளர் தேசிய ஆணையத்தை அணுகி ரூ.18.30 கோடி இழப்பீட்டையும் மற்ற செலவினங்களையும் கோரினார். தேசிய ஆணையம் புகார் மனுவை ஏற்று மேல்முறையீட்டாளர் ரூ.13.70 கோடியும் அதனுடன் வட்டியையும் கொடுக்குமாறு ஆணை பிறப்பித்தது. இதனால் பாதிக்கப்பட்டவர் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்தார். பதிலுரையாளரும் தன் குறுக்கு முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளரான காப்பீட்டு நிறுவனம், பதிலுரையாளர் புகார்தாரருமானவர் இன்ஜீனிலுள்ள குறைபாடுகளை கூறாமல் மறைத்து வைத்ததால் எந்தவித இழப்பீட்டையும் பெற தகுதியற்றவர் ஆகிறார் என மேல்முறையீடு செய்தது. மேல்முறையீடும், குறுக்கு மேல்முறையீட்டு மனுவும் இரண்டுமே தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர், காப்பீட்டு நிறுவனத்தின் முக்கியமான வாதமெனில், பதிலுரையாளர் ஒரு இன்ஜீன் வேலை செய்யவில்லை என்ற உண்மையை மறைத்ததன் மூலம் நன்னம்பிக்கை கோட்பாட்டிற்கு எதிராக செயல்பட்டிருக்கிறார் என்பதாகும்.

(ஆ) இந்த வழக்கு தேசிய நுகர்வோர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்தபோது காப்பீட்டு நிறுவனம் இந்த வாதத்தை முன் வைக்கவில்லை என்றும் குற்றச்சாட்டிற்கு சாதகமாக எந்த ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கண்டறிந்தது. ஆகையால், இத்தகைய சூழ்நிலையில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் எடுத்த முடிவு சரியானது என்று உறுதி செய்தது. தேசிய ஆணையத்தின் முடிவு முன்வைக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், தீவிர ஆய்வின் அடிப்படையிலும் எடுக்கப்பட்ட நியாயமான முடிவு எனவும் சாட்சியங்களை பரிசீலித்ததில் எவ்வித தவறும் இல்லை எனவும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(இ) மேற்சொன்ன காரணங்களை சுட்டிக்காட்டி புகார்தாரர் முறையீட்டு மனு / பதிலுரையாளர் தாக்கல் செய்த குறுக்கு மேல்முறையீட்டு மனு ஆகிய இரண்டையும் தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 4 SCC 231; II (2011) CPJ 15 (SC); 2013(2) CPR 18 (SC); 2015(3) CPR 458 (SC); 2015(4) CPR 474 (SC).

***

## 2. சில்வர்சன்ஸ் *(எதிர்)* ஓரியண்டல் காப்பீட்டு நிறுவனம் மற்றும் ஒருவர்

**(Silversons v. Oriental Insurance Co. Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய 17.11.2003 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சில்வர்சன்ஸ் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஓரியண்டல் காப்பீட்டு நிறுவனம் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1451/2005.

தீர்ப்பு தேதி : 15.09.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர் அமெரிக்காவிலுள்ள ஃப்ளோரிடா என்னும் இடத்திலுள்ள ஆல்கெம் தொழிற்சாலையுடன் (M/s. Allchem Industries Inc. Florida, USA) டைபினைல் ஆக்ஸைட் (Diphenyl Oxide) தருவிக்கும்படி ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தார். சரக்கு பாம்பேவில் இருந்து அமெரிக்காவிலுள்ள நார்ஃபோக் எனும் இடத்திற்கு ஏற்றுமதி செய்ய

இருந்தது. மேல்முறையீட்டாளர் பதிலுரையாளரிடம் கடல்சார்ந்த இழப்புகளுக்கு காப்பீடு செய்திருந்தார். நவம்பர் 1993-ல் M/s.கிரின்வேஸ் ஷிப்பிங் ஏஜென்ஸிஸ் பிரைவேட் லிமிடெட் என்ற முகவரிடம் டைபினைல் ஆக்ஸைட் பேரல்களில் அடைத்து அதை கண்டெய்னரில் ஏற்றினார். கொலம்போவிலுள்ள துறைமுகத்திற்கு கப்பல் சென்றடைந்தவுடன் இந்த சரக்கை இறக்கி ஜெயா கண்டெய்னர் முனையத்திலிருந்து இறுதி இடத்திற்கு எடுத்துசெல்ல தயார்நிலையில் வைத்தனர். முனையத்தில் சோதனையின்போது கண்டெய்னரிலிருந்து அமில கசிவு ஏற்பட்டிருந்தது தெரிய வந்தது. இதன்பின் கப்பல் நிர்வாகம் SGF Marine Surveyors என்ற சேத மதிப்பீட்டாளரை சேதம் மதிப்பீடு செய்ய அமர்த்தியது. சேத மதிப்பீட்டாளர்கள் தங்களுடைய அறிக்கையில் தரக்குறைவற்ற பேரல்களை பயன்படுத்தியதே வாயு சார்ந்த ரசாயனம் திரவத்தில் கலந்து கசிவு ஏற்படுத்தியதற்குக் காரணம் என்று தெரிவித்தனர். இந்த அறிக்கையை பெற்ற கப்பல் நிர்வாகம் 18.12.1993-ல் மேல்முறையீட்டாளருக்கு கடிதத்தை அனுப்பி பேரலிலிருந்து இரசாயனம் கசிந்தது என்பதை தெரிவித்தது. இருதரப்பினருக்குமிடையே இரசாயன கலவை மீண்டும் கண்டெய்னரில் ஏற்றப்படவில்லை. 14.03.1994-ல் மேல்முறையீட்டாளர் மூன்று மாதம் கழித்து காப்பீட்டாளருக்கு கசிவை குறித்து தெரிவித்தார். மேலும் சரக்கு கொலம்போ துறைமுகத்தை அடைந்து 60 நாளைக்கு மேற்பட்ட காலத்திற்குப் பின் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் காப்பீட்டு நிறுவனம், மேல்முறையீட்டாளரின் இழப்பீட்டு கோரிக்கையை நிராகரித்தது. இதனால் மேல்முறையீட்டாளர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15-ன் கீழ் ரூ.10,44,621/- இழப்பீட்டையும் அதற்குண்டான வட்டி 17% அளிக்கும்படி புகார் செய்தார். புகாரை விசாரித்த மாநில ஆணையம் காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிராக தீர்ப்பளித்தது. காப்பீட்டு நிறுவனமும் பொருட்களை ஏற்றிச்சென்ற கப்பல் நிர்வாகமும் இருவரும் இணைந்து மேல்முறையீட்டாளருக்கு நஷ்டத்தை வழங்கவேண்டுமென்று ஆணையிட்டது. மாநில ஆணையத்தின் முடிவிற்கு எதிராக காப்பீட்டு நிறுவனமும், கப்பல் நிறுவனமும் (carrier) தேசிய நுகர்வோர் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தனர். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை மாற்றியமைத்தது. மேலும், மேல்முறையீட்டாளர், காப்பீட்டு நிறுவனத்திற்கு உரிய நேரத்தில் அமில கசிவை தெரிவிக்காததால் காப்பீட்டு நிறுவனம் மேல்முறையீட்டாளருக்கு எந்த இழப்பீடும் தரத்தேவையில்லை என்று தேசிய ஆணையம் உத்தரவு பிறப்பித்தது. மேலும் விதி 9, சரக்கு நிறுவன விதிகளின்படி, உரிய நேரத்தில் இழப்பீட்டை தெரிவிக்காததால் காப்பீட்டு நிறுவனத்தின் சேவையில் எந்த குறைபாடும் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார். மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 15 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) நீதிமன்றம் இந்த வழக்கில் சரக்குகளின் நிர்வாக விதி 9–ன் கீழ் (Clause 9 of the Institute of Cargo Clauses) "பாலிசிதாரரின் கட்டுப்பாட்டிற்கு உட்படாத காரணங்களால் சேருமிடத்தை அடைவதற்கு முன்பாக ஒப்பந்தம் முடிந்தாலோ அல்லது விதி 8–ன்கீழ் பொருட்களை ஒப்படைப்பதற்கு முன்பாக முடிவடைந்தாலோ உடனடியாக காப்பீட்டாளருக்குத் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் காப்பீடும் நிறைவு பெற்றதாக கருதப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய ஆணைம் தெரிவித்த கருத்தின்படி பாலிசியின் பயனை அடையவேண்டுமென்றால் பாலிசிதாரர் 24 மணிக்குள்ளாகவோ அல்லது 48 மணிக்குள்ளாகவோ, எப்படியும் 72 மணி நேரத்திற்கு மிகாமல் தங்களது இழப்பினை குறிப்பிட்ட காலத்திற்குள் தெரிவிக்கவேண்டும். ஆனால் இந்த கருத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. நியாயமான கால வரையறைக்குள் காப்பீட்டு நிறுவனத்திற்குத் தகவல் அளிக்க வேண்டும் என்றும் எது நியாயமான காலம் என்பது சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் முடிவு செய்யவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் கொலம்போ துறைமுகத்தில் சரக்குகள் கொடுக்கப்பட்டபின் மூன்று மாதம் கழித்து தகவலை தெரிவித்திருப்பது விதிகளுக்கு முரண்பாடானதாகும் என்றும் மேல்முறையீட்டாளர் சரியான நேரத்தில் தகவல் கொடுத்திருக்கிறார் என்று கூறுவது ஏற்புடையதல்ல என்றும் நீதிமன்றம் முடிவெடுத்தது.

(ஆ) மேலும் உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையம் எடுத்த முடிவை அதாவது மேல்முறையீட்டாளருக்கு நஷ்டஈட்டை வழங்கும் தார்மீக பொறுப்பை காப்பீட்டு நிறுவனம் ஏற்காது என்பதை உறுதி செய்தது.

(இ) முடிவாக இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2011) CPJ 9 (SC).

***

## (o) மருத்துவ சிகிச்சையில் அலட்சியம்

### 1. டாக்டர் P.B.தேசாய் *(எதிர்)* மஹாராஷ்ட்டிர அரசு மற்றும் ஒருவர்

### (P.B. Desai (Dr.) v. State of Maharashtra & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

15.10.2012 அன்று பாம்பே உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

டாக்டர் P.B.தேசாய் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

மஹாராஷ்ட்டிர அரசு மற்றும் ஒருவர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

கிரிமினல் மேல்முறையீட்டு எண்:1432/2013.

தீர்ப்பு தேதி : 13.09.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

புகார்தாரரான ஸ்ரீ பதம்சந்திர சிங்கி என்பவரது மனைவி, ஸ்ரீமதி லீலா சிங்கி, 1977-லிருந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார். அவரது உடல்நிலை மோசமானதன் காரணமாக அவரை அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். அங்கிருந்த மருத்துவர்கள் அவரது உடல்நிலை அறுவை சிகிச்சைக்கான நிலையை தாண்டிவிட்டது என்று கூறியதால் அவர் 29.11.1987 அன்று இந்தியா திரும்பினார். அமெரிக்க மருத்துவர்கள் அறிவுறுத்தியிருந்தபடி டாக்டர் A.K.முகர்ஜி என்ற மருத்துவர் அவருக்கு சிகிச்சை அளித்து வந்தார். ஒரு சில நாட்களுக்குள் அவருக்கு யோனியில் இரத்தபோக்கு ஏற்பட்டதால் மருத்துவமனையில் சிகிச்சை பெறுமாறு டாக்டர் முகர்ஜி அறிவுறுத்தினார். மருத்துவமனையில் அவரை பரிசோதித்த மேல்முறையீட்டாளர் இரத்தப் போக்கை தடுப்பதற்கு நோயாளியின் கர்ப்பப்பையை எடுக்க முடியுமா அல்லது முடியாதா என்று பார்ப்பதற்காக குடற்பகுதி அறுவை சிகிச்சை (Exploratory Laparatomy) செய்யலாம் என்று ஆலோசனை கூறினார். அதன்படி இரு மருத்துவர்கள் உதவியோடு டாக்டர் முகர்ஜி 22.12.1987 அன்று குடற்பகுதி அறுவை சிகிச்சையை செய்ய தொடங்கினார். வயிற்றுப் பகுதியை திறந்து பார்த்தபோது குடற்பகுதி பூசியபடி இருந்ததையும், அதிக அளவில் திரவக் கசிவு இருந்ததையும் பார்த்தார். வேறு ஒரு அறையில் அறுவை சிகிச்சையில் ஈடுபட்டிருந்த மேல்முறையீட்டாளரை அவர் உடனடியாக கூப்பிட்டார். நோயாளியின் நிலையை சற்று தூரத்திலிருந்தே பார்த்த மேல்முறையீட்டாளர் உடனடியாக

வயிற்றுப்பகுதியை மூடிவிடுமாறு டாக்டர் முகர்ஜிக்கு ஆலோசனை வழங்கினார். அதற்கு பிறகு ஃபிஸ்துலா ஏற்பட்டதன் காரணமாக நோயாளியின் நிலை மேலும் மோசமடைந்தது. மூன்று மாதங்களுக்கு பிறகு அவர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டார். அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால் 26.02.1989 அன்று அவர் மரணம் அடைந்தார். புகார்தாரர் மேல்முறையீட்டாளர் மீது மஹாராஷ்ட்டிரா மருத்துவ கவுன்சிலில் பல புகார்களை செய்தார். இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 338-ன்கீழ் தண்டனை அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். புகார் மனுவில் டாக்டர் முகர்ஜியும் சேர்க்கப்பட்டார். மேலும், மேல்முறையீட்டாளர் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 109-ன்கீழ் உடந்தையாக இருந்தார் என்றும் புகார் செய்தார். புகார்தாரருடைய அறிவுறுத்தலின் பேரில் டாக்டர் முகர்ஜியின் மீதான நடவடிக்கை கைவிடப்பட்டது. இதற்கிடையே மஹாராஷ்ட்டிரா மருத்துவ கவுன்சில் சட்டம், 1965, பிரிவு 22(1)-ன்கீழ் மேல்முறையீட்டாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவருக்கு ஒரு எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் அதை எதிர்த்து முறையீடு செய்யாமல் எச்சரிக்கையை ஏற்றுக் கொண்டார். மேல்முறையீட்டாளர் மீது தொடுக்கப்பட்ட கிரிமினல் வழக்கில் அவருக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறை தண்டனையும், ரூ.50,000/- அபராதமும் விதிக்கப்பட்டது. அதை செலுத்தவில்லை என்றால் மூன்று மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பும் தண்டனையும் கூடுதல் செஷன்ஸ் நீதிபதியால் உறுதி செய்யப்பட்டது. பம்பாய் உயர் நீதிமன்றமும் மேலே (1)-ல் தெரிவிக்கப்பட்ட 15.10.2012 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணையினால் அதை உறுதி செய்தது. அத்தீர்ப்பை எதிர்த்து தற்போதைய மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீடு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o); இந்திய தண்டனை சட்டம், 1860-ன் பிரிவு 338 மற்றும் 109.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Faguna Kant Nath v. The State of Assam,* (1959) 2 Suppl. SCR 1. (Referred) [Para 17]
2. *Madan Raj Bhandari v. State of Rajasthan,* (1969) 2 SCC 385. (Referred) [Para 17]
3. *Lambert v. California,* 355 US 225 (1957). (Relied) [Para 26]
4. *Kusum Sharma & Ors. v. Batra Hospital & Medical Research Centre & Ors.,* II (2010) SLT 73=I (2010) CPJ 29 (SC). (Relied) [Para 41]

5. *Jacob Mathews v. State of Punjab & Anr.,* III (2005) CCR 9 (SC)=VI (2005) SLT 1=122 (2005) DLT 83 (SC)=III (2005) CPJ 9 (SC). (Relied) [Para 42]

6. *R. v. Adomako,* (1994) 3 WLR 288. (Relied) [Para 68]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர் குடல் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று கொடுத்த ஆலோசனை, நோயாளியின் தொடர்ந்து மோசமாகி வரும் உடல் நிலையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது எந்த மருத்துவ நிபுணரும் கொடுக்கக் கூடிய ஆலோசனைதான் என்றும் அதில் அவர் அலட்சியம் காட்டினார் என்று சொல்ல முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. ஆகவே, அறுவை சிகிச்சை மூலம் வயிற்றை திறந்து சிகிச்சை செய்தது கடுமையான காயம் ஏற்படுத்தும் செயலாக கருத முடியாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. மருத்துவர்கள் கண்மூடித்தனமாக, அலட்சியமாக சிகிச்சையை மேற்கொண்டிருந்தால்தான் அம்மாதிரி ஒரு முடிவுக்கு வரமுடியும் என்றும் இந்த வழக்கில் அம்மாதிரி அவர்கள் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றும் நீதிமன்றம் கருதியது. அதே நேரத்தில் நோயாளி ஃபிஸ்துலா பாதிப்பினால் அவதிப்படுகிறார் என்பதை அறிந்து கொண்ட பிறகும் தானே அறுவை சிகிச்சை செய்யாமல் ஒதுங்கி இருந்தது, மேல்முறையீட்டாளர் செய்த தவறு என்றும் நீதிமன்றம் கருதியது. ஆயினும், அவரது செயல் கிரிமினல் நடவடிக்கை தொடருமளவுக்கு மோசமானதல்ல என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. இந்திய தண்டனை சட்டம், பிரிவு 338-ன்படி மேல்முறையீட்டாளர் நோயாளிக்கு மோசமான நிலையை ஏற்படுத்தியதற்கான ஆதாரம் வேண்டும். இல்லையேல் பிரிவு 338-ன்படி தண்டனை அளிக்க முடியாது. நடப்பு வழக்கில் அம்மாதிரியான ஆதாரம் ஏதும் இல்லை என்றும் நீதிமன்றம் கருதியது.

(ஆ) டாக்டர் முகர்ஜி அறுவை சிகிச்சையை சரியான முறையில் செய்யவில்லை என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. வயிற்றுப் பகுதியை திறந்து பார்த்தபோது சிக்கல்கள் இருந்தது தெரிய வந்ததால் அறுவை சிகிச்சையை முடிக்க முடியவில்லை. டாக்டர் முகர்ஜியைத் தவிர வேறு எந்த மருத்துவரோ அல்லது மேல்முறையீட்டாளரோ அறுவை சிகிச்சை செய்திருந்தாலும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கும் என்றும் நீதிமன்றம் கூறியது. அதற்கு மாறாக புகார்தாரரே டாக்டர் முகர்ஜி சரியான முறையில் அறுவை சிகிச்சை செய்யவில்லை என்று தெரிவிக்காதது மட்டுமின்றி நல்லமுறையில் செய்தார் என்று கூறியதையும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

(இ) மேல்முறையீட்டாளரது நடத்தை, இந்திய தண்டனை சட்டம், பிரிவு 338-ன்கீழ் அவரை தண்டனைக்கு உள்ளாக்கும் அளவிற்கு மோசமாக இல்லை என்றும் அவரது கவனக்

குறைவு நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றமே என்றும் அதற்காக மருத்துவ கவுன்சில் அளித்த தண்டனையே போதுமானது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஈ) மேல்முறையீடு ஏற்கப்பட்டது. நீதிமன்றங்களின் தீர்ப்புகள் ஒத்தி வைக்கப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2013) CPJ 63 (SC).

***

**2. பல்ராம் பிரசாத்** *(எதிர்)* **குணால் சாஹா மற்றும் பலர்**

**(Balram Prasad v. Kunal Saha and Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அசல் புகார் எண்:240/1999-ல் 21.10.2011 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

**சிவில் மேல்முறையீட்டு எண்:2867/2012**

பல்ராம் பிரசாத் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

குணால் சாஹா மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

உடன்

**சிவில் மேல்முறையீட்டு எண்:692/2012**

அட்வான்ஸ்டு மெடிகேர் மற்றும் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் லிமிடெட் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

குணால் சாஹா மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

உடன்

**சிவில் மேல்முறையீட்டு எண்:2866/2012**

குணால் சாஹா - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

சுகுமார் முகர்ஜி மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

உடன்

**சிவில் மேல்முறையீட்டு எண்:731/2012**

வைத்தியநாத் ஹல்தர் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

குணால் சாஹா மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

மற்றும்

**சிவில் மேல்முறையீட்டு எண்:858/2012**

சுகுமார் முகர்ஜி - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

குணால் சாஹா மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2867/2012 உடன் எண்கள்:692, 2866, 731 மற்றும் 858/ 2012.

தீர்ப்பு தேதி : 24.10.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

அனுராதா சாஹா என்கிற 36 வயதுடைய குழந்தைகள் மனோதத்துவ நிபுணர் அமெரிக்காவில் குடியிருந்தார். அவரது கணவரும் ஒரு மருத்துவர். அவர்கள் இருவரும் 1998-ல் இந்தியாவிற்கு வந்தபோது, திருமதி சாஹாவிற்கு தோலில் அரிப்பு ஏற்பட்டதால் மேல்முறையீட்டாளரான டாக்டர் சுகுமார் முகர்ஜியை சிகிச்சைக்காக அணுகினார். திருமதி சாஹாவிற்கு இருந்த பிரச்சனை வாஸ்குலைட்டிஸ் (vasculitis) என்று கருதிய டாக்டர் முகர்ஜி அவருக்கு டெபோமெட்ரால் (Depomedrol) என்ற மருந்தை ஊசி மூலம் செலுத்தினார். அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படாததால் சிவில் மேல்முறையீட்டு எண்:692/2012-ல் மேல்முறையீட்டாளரான AMRI என்கிற அட்வான்ஸ்டு மெடிகேர் மற்றும் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டில் டாக்டர் முகர்ஜியின் மேற்பார்வையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார். அம்மருத்துவமனையில் சிவில் மேல்முறையீட்டு எண்:731/2012-ல் மேல்முறையீட்டாளரான டாக்டர் வைத்தியநாத் ஹல்தர் என்கிற நிபுணர் அவரை பரிசோதித்து அவர் Toxic Epidermal Necrolysis (TEN) என்கிற நோயால் பாதிக்கப்பட்டார் என்று கருதினார். டெபோமெட்ரால் (Depomedrol) என்ற ஸ்டீராய்டை (steroid) நிறுத்திவிட்டு அதனால் ஏற்கனவே உடலில் ஏற்பட்டிருந்த பாதிப்பை கருதாமல் மற்றொரு ஸ்டீராய்டான பிரெட்னிசோலோன் (Prednisolone) என்கிற மருந்தை 40mg செலுத்தினார். சிவில் மேல்முறையீட்டு

எண்:2867/2012-ல் மேல்முறையீட்டாளரான, டாக்டர் பல்ராம் பிரசாத் என்கிற ஜுனியர் மருத்துவர் இந்த சிகிச்சையில் அதிக கவனம் செலுத்தவில்லை. பல மருத்துவர்கள் சிகிச்சை அளித்தும் அனுராதாவின் உடல்நிலை மோசமடைந்ததால் அவர் அவசர வானூர்தி (air ambulance) மூலம் மும்பையில் உள்ள ப்ரீச் கேன்டி மருத்துவமனைக்கு (Breach Candy Hospital) மாற்றப்பட்டார். இரண்டு நாட்களுக்கு அவரது உடல்நிலையில் முன்னேற்றம் இருந்தாலும் ஒரு சில நாட்களில் அவர் மரணம் அடைந்தார். அவரது கணவரான குணால் சாஹா, டாக்டர் முகர்ஜி, டாக்டர் ஹல்தர் மற்றும் டாக்டர் பிரசாத் ஆகியோர் மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் காட்டியதாக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் செய்து ரூ.77 கோடி இழப்பீடு கோரினார். தேசிய ஆணையம் அவரது புகாரை தள்ளுபடி செய்தது. அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றம், *Malay Kumar Ganguly*, (2009) 9 SCC 221 என்ற வழக்கில் எடுத்த முடிவின் அடிப்படையில் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த மருத்துவ சிகிச்சை முறைகளில் செயல்படாமல், நடப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் செயல்பட்டதாலும் அவர்களது கவனக்குறைவுமே அனுராதாவின் மறைவுக்கு காரணம் என்று கருதியது. வழக்கை தேசிய ஆணையத்திற்கு திருப்பியனுப்பி நியாயமான, ஏற்கத்தக்க நிவாரணத்தை புகார்தாரருக்கு வழங்குமாறு பணித்தது. தேசிய ஆணையத்தில் புகார்தாரர் ரூ.97 கோடி இழப்பீடு கோரி ஒரு மனு அளித்தார். ஏற்கனவே கோரியிருந்த ரூ.77 கோடிக்கு மனுவை கட்டுப்படுத்திய தேசிய ஆணையம் மருத்துவ சிகிச்சையில் அலட்சியத்திற்காக ரூ.1.7 கோடி இழப்பீடு வழங்குமாறு ஆணையிட்டது. ஆயினும், புகார்தாரர் சிகிச்சையின்போது தலையிட்டதன் காரணமாக மருத்துவ சிகிச்சை ஓரளவு பாதிக்கப்பட்டது என்று கருதிய தேசிய ஆணையம் வழங்கிய இழப்பீட்டு தொகையில் 10 விழுக்காட்டை குறைத்து புகார்தாரருக்கு ரூ.1.5 கோடி வழங்குமாறு ஆணையிட்டது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட புகார்தாரர் மற்றும் எதிர்தரப்பினர், உச்ச நீதிமன்றத்தில் நடப்பு மேல்முறையீடுகளை தாக்கல் செய்தனர். தேசிய ஆணையம் பல்வேறு தலைப்புகளின் கீழ் வழங்கிய இழப்பீட்டு தொகையை உச்ச நீதிமன்றம் மாற்றியமைத்து, டாக்டர் குணால் சாஹாவுக்கு ரூ.6,08,00,550/- இழப்பீடாக வழங்குமாறு ஆணையிட்டது. அத்துடன் மனு செய்த தேதியிலிருந்து தொகையை வழங்கும் தேதிவரை ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டியும் வழங்குமாறு ஆணையிட்டது. மேல்முறையீட்டாளரான AMRI என்கிற மருத்துவமனை தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு எண்:692/2012 தள்ளுபடி செய்யப்பட்டது. மற்ற மேல்முறையீடுகள் பகுதியாக ஏற்கப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1), (g), (o), 12, 13, 14, 18, 22 மற்றும் 23; சாட்சிய சட்டம், 1872-ன் பிரிவு 45; மோட்டார் வாகன சட்டம், 1988-ன் பிரிவு 163A; உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908-ன் கட்டளை 2, விதி 2 மற்றும் கட்டளை 41, விதி 23A மற்றும் 23; நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், விதி 14(1)(e); இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவுகள் 14, 21, 141 மற்றும் 142; வட்டி சட்டம், 1978-ன் பிரிவு 3.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Time Global Broadcasting Co. Ltd. v. Parshuram Babaram Sawant,* (2014) 1 SCC 703. [Para 69]

2. *Reshma Kumari v. Madan Mohan,* (2013) 9 SCC 65:(2013) 4 SCC (Civ) 191:(2013) 3 SCC (Cri) 826. [Para 29, 20]

3. *Rajesh v. Rajbir Singh,* (2013) 9 SCC 54:(2013) 4 SCC (Civ) 179: (2013) 3 SCC (Cri) 817:(2014) 1 SCC (L&S) 149. [Para 176]

4. *Kavita v. Dipak,* (2012) 8 SCC 604:(2012) 4 SCC (Civ) 558: (2012) 3 SCC (Cri) 997:(2012) 2 SCC (L&S) 711. [Para 72, 107]

5. *A.Shanmugam v. Ariya Kshatriya Rajakula Vamsathu Madalaya Nandhavana Paripalana Sangam,* (2012) 6 SCC 430:(2012) 3 SCC (Civ) 735. [Para 37]

6. *Santosh Devi v. National Insurance Co. Ltd.,* (2012) 6 SCC 421:(2012) 3 SCC (Civ) 726: (2012) 3 SCC (Cri) 160:(2012) 2 SCC (L&S) 167. [Para 20, 109, 166, 176]

7. *Maria Margarida Sequeira Fernandes v. Erasmo Jack de Sequeira,* (2012) 5 SCC 370:(2012) 3 SCC (Civ) 126. [Para 37]

8. *New India Assurance Co. Ltd. v. Yogesh Devi,* (2012) 3 SCC 613: (2012) 2 SCC (Civ) 385:(2012) 2 SCC (Cri) 215. [Para 20]

9. *National Insurance Co. Ltd. v. Sinitha,* (2012) 2 SCC 356: (2012) 1 SCC (Civ) 881:(2012) 1 SCC (Cri) 659. [Para 20]

10. *MCD v. Uphaar Tragedy Victims Association,* (2011) 14 SCC 481:(2013) 1 SCC (Civ) 897: (2013) 2 SCC (Cri) 555:(2013) 1 SCC (L&S) 305. [Para 33]

11. *Ramachandrappa v. Royal Sundaram Alliance Insurance Co. Ltd.,* (2011) 13 SCC 236:(2012) 3 SCC (Civ) 452: (2012) 1 SCC (Cri) 825. [Para 72, 107]

12. *National Textile Corporation Ltd. v. Nareshkumar Badrikumar Jagad,* (2011) 12 SCC 695:(2012) 2 SCC (Civ) 791. [Para 36]

13. *Sunil Sharma v. Bachitar Singh,* (2011) 11 SCC 425: (2011) 4 SCC (Civ) 251:(2011) 3 SCC (Cri) 206. [Para 20]

14. *Laxman v. Oriental Insurance Co. Ltd.,* (2011) 10 SCC 756: (2012) 3 SCC (Civ) 1095:(2012) 1 SCC (Cri) 108. [Para 70, 72, 103.7, 107, 115]

15. *Govind Yadav v. New India Insurance Co. Ltd.,* (2011) 10 SCC 683:(2012) 3 SCC (Civ) 1082: (2012) 1 SCC (Cri) 82:(2012) 1 SCC (L&S) 422. [Para 72, 84, 99, 107]

16. *Sanjay Batham v. Munnalal Parihar,* (2011) 10 SCC 665: (2012) 3 SCC (Civ) 1072:(2012) 1 SCC (Cri) 64. [Para 43]

17. *Ibrahim v. Raju,* (2011) 10 SCC 634:(2012) 3 SCC (Civ) 1053: (2012) 1 SCC (Cri) 120. [Para 42, 70, 72, 84, 99, 103.8, 107]

18. *Pushpa v. Shakuntala,* (2011) 2 SCC 240: (2011) 1 SCC (Civ) 399:(2011) 1 SCC (Cri) 682. [Para 20]

19. *Raj Kumar v. Ajay Kumar,* (2011) 1 SCC 343: (2011) 1 SCC (Civ) 164:(2011) 1 SCC (Cri) 1161. [Para 72]

20. *Kunal Saha v. Sukumar Mukherjee,* Original Petition No.240 of 1999, order dated 21.10.2011 (NC). [Para 1, 35, 36, 94.7, 100, 129]

21. *Shyamwati Sharma v. Karam Singh,* (2010) 12 SCC 378: (2010) 4 SCC (Civ) 626:(2011) 1 SCC (Cri) 288. [Para 20]

22. *Arvind Kumar Mishra v. New India Assurance Co. Ltd.,* (2010) 10 SCC 254:(2010) 4 SCC (Civ) 153: (2010) 3 SCC (Cri) 1258. [Para 72, 106, 108]

23. *Arun Kumar Agrawal v. National Insurance Co. Ltd.,* (2010) 9 SCC 218:(2010) 3 SCC (Civ) 664: (2010) 3 SCC (Cri) 1313. [Para 20, 175]

24. *V. Kishan Rao v. Nikhil Super Speciality Hospital,* (2010) 5 SCC 513:(2010) 2 SCC (Civ) 460. [Para 79, 118]

25. *Kunal Saha v. Sukumar Mukherjee,* SLP (C) No.15070 of 2010, order dated 17.05.2010 (SC). [Para 14]

26. *S.P. Aggarwal v. Sanjay Gandhi Postgraduate Institute of Medical Sciences,* First Appeal No.478 of 2005, decided on 31.03.2010 (NC). [Para 91]

27. *Usha Rajkhowa v. Paramount Industries,* (2009) 14 SCC 71: (2009) 5 SCC (Civ) 307:(2010) 1 SCC (Cri) 1289. [Para 20]

28. *R.K. Malik v. Kiran Pal,* (2009) 14 SCC 1:
(2009) 5 SCC (Civ) 265:(2010) 1 SCC (Cri) 1265. [Para 23, 71, 105]

29. *Ningamma v. United India Insurance Co. Ltd.,*
(2009) 13 SCC 710:(2009) 5 SCC (Civ) 241:
(2010) 1 SCC (Cri) 1213. [Para 70, 103.1, 114]

30. *Raj Rani v. Oriental Insurance Co. Ltd.,*
(2009) 13 SCC 654:(2009) 5 SCC (Civ) 232:
(2010) 1 SCC (Cri) 1171. [Para 20, 70, 103.6, 115]

31. *Rani Gupta v. United India Insurance Co. Ltd.,*
(2009) 13 SCC 498:(2009) 5 SCC (Civ) 172:
(2010) 1 SCC (Cri) 1080. [Para 20]

32. *Reshma Kumari v. Madan Mohan,* (2009) 13 SCC 422:
(2009) 5 SCC (Civ) 143:(2010) 1 SCC (Cri) 1044.
[Para 20, 84, 98, 99, 124]

33. *National Insurance Co. Ltd. v. Meghji Naran Soratiya,*
(2009) 12 SCC 796:(2009) 4 SCC (Civ) 846:
(2010) 1 SCC (Cri) 750. [Para 20]

34. *Oriental Insurance Co. Ltd. v. Angad Kol,* (2009) 11 SCC 356:
(2009) 4 SCC (Civ) 535:(2009) 3 SCC (Cri) 1371. [Para 20]

35. *Malay Kumar Ganguly v. Sukumar Mukherjee,*
(2009) 9 SCC 221:(2009) 3 SCC (Civ) 663:
(2010) 2 SCC (Cri) 299.
[Para 5, 13, 22, 44, 45, 51, 67.4, 70, 75, 76, 79, 83, 89, 101, 103.2, 105, 113, 115, 118, 133, 134, 135, 136, 137, 140, 142, 143, 144, 146, 147, 152, 153, 154, 155, 157, 158, 178]

36. *Thazhathe Purayil Sarabi v. Union of India,* (2009) 7 SCC 372:
(2009) 3 SCC (Civ) 133:(2009) 3 SCC (Cri) 408. [Para 86, 129]

37. Postgraduate Institute of Medical Education & Research v.
Jaspal Singh, (2009) 7 SCC 330:(2009) 3 SCC (Civ) 114:
(2009) 3 SCC (Cri) 399. [Para 79, 118]

38. *Sarla Varma v. DTC,* (2009) 6 SCC 121:
(2009) 2 SCC (Civ) 770:(2009) 2 SCC (Cri) 1002.
[Para 20, 29, 32, 74.5, 80, 108, 118, 122, 124, 164, 166, 176]

39. *Nizam's Institute of Medical Sciences v. Prasanth S. Dhananka,* (2009) 6 SCC 1:(2009) 2 SCC (Civ) 688. [Para 21, 26, 43, 69, 70, 75, 79, 80, 92, 103.3, 112, 118, 123, 135, 179, 180]

40. *Destruction of Public & Private Properties v. State of A.P.,* (2009) 5 SCC 212:(2009) 2 SCC (Civ) 451:(2009) 2 SCC (Cri) 629. [Para 87]

41. *National Insurance Co. Ltd. v. Mahadevan,* (2009) ACJ 1373 (Mad). [Para 175]

42. *Laxmi Devi v. Mohd. Tabbar,* (2008) 12 SCC 165:(2009) 1 SCC (Cri) 336. [Para 20]

43. *Oriental Insurance Co. Ltd. v. Jashuben,* (2008) 4 SCC 162:(2008) 2 SCC (Cri) 752. [Para 9, 23, 70, 99, 103.4, 115]

44. *APSRTC v. M. Ramadevi,* (2008) 3 SCC 379: (2008) 1 SCC (Civ) 884:(2008) 2 SCC (Cri) 42. [Para 20]

45. *State of Punjab v. Jalour Singh,* (2008) 2 SCC 660: (2008) 1 SCC (Civ) 669:(2008) 1 SCC (Cri) 524: (2008) 1 SCC (L&S) 535. [Para 20]

46. *Samira Kohli v. Prabha Manchanda,* (2008) 2 SCC 1:(2008) 1 SCC (Civ) 421. [Para 79, 118]

47. *State of Punjab v. Shiv Ram,* (2005) 7 SCC 1. [Para 79, 118]

48. *Amar Singh Thukral v. Sandeep Chhatwal,* (2004) 112 DLT 478. [Para 175]

49. *Captain Singh v. Oriental Insurance Co. Ltd.,* (2004) 112 DLT 417. [Para 175]

50. *Savita Garg v. National Heart Institute,* (2004) 8 SCC 56. [Para 76, 79, 118, 138, 139]

51. *Chandra Singh v. Gurmeet Singh,* (2003) 7 AD 222 (Del). [Para 175]

52. *Abati Bezbaruah v. Geological Survey of India,* (2003) 3 SCC 148:2003 SCC (Cri) 746. [Para 20, 108]

53. *Nagappa v. Gurudayal Singh,* (2003) 2 SCC 274:2003 SCC (Cri) 523. [Para 39, 43, 103.6]

54. *Krishna Gupta v. Madan Lal,* (2002) 96 DLT 829. [Para 175]

55. *J.J. Merchant v. Shrinath Chaturvedi,* (2002) 6 SCC 635. [Para 79, 118]

56. *United India Insurance Co. Ltd. v. Patricia Jean Mahajan,* (2002) 6 SCC 281:2002 SCC (Cri) 1294. [Para 11, 24, 30, 74.3, 121, 163]

57. *Dardinger v. Anthem Blue Cross & Blue Shield,* 98 Ohio St 3d 77:781 NE 2d 121 (2002). [Para 87]

58. *Lata Wadhwa v. State of Bihar,* (2001) 8 SCC 197. [Para 33, 88, 175]

59. *M.S. Grewal v. Deep Chand Sood,* (2001) 8 SCC 151:2001 SCC (Cri) 1426. [Para 33]

60. *Oriental Insurance Co. Ltd. v. Hansrajbhai V. Kodala,* (2001) 5 SCC 175:2001 SCC (Cri) 857. [Para 20]

61. *Charan Singh v. Healing Touch Hospital,* (2000) 7 SCC 668:2000 SCC (Cri) 1444. [Para 77, 79, 83, 118]

62. *Welch v. Epstein,* 342 SC 279:536 SE 2d 408 (Ct App 2000). [Para 87]

63. *Spring Meadows Hospital v. Harjol Ahluwalia,* (1998) 4 SCC 39. [Para 79, 118, 138]

64. *Paschim Banga Khet Mazdoor Samity v. State of W.B.,* (1996) 4 SCC 37. [Para 183]

65. *Sarla Dixit v. Balwant Yadav,* (1996) 3 SCC 179. [Para 20, 108]

66. *Achutrao Haribhau Khodwa v. State of Maharashtra,* (1996) 2 SCC 634. [Para 138]

67. *Indian Medical Association v. V.P.Shanta,* (1995) 6 SCC 651. [Para 68, 74.5, 79, 111, 118, 165]

68. *R.D. Hattangadi v. Pest Control (India) (P) Ltd.,* (1995) 1 SCC 551:1995 SCC (Cri) 250. [Para 70, 103.2, 103.5, 115, 179]

69. *Kerala SRTC v. Susamma Thomas,* (1994) 2 SCC 176:1994 SCC (Cri) 335. [Para 20, 31, 108, 121]

70. *Landgraf v. USI Film Products,* 128 L Ed 2d 229:511 US 244 (1994). [Para 87]

71. *National Insurance Co. Ltd. v. Swaranlata Das,* 1993 Supp (2) SCC 743:1993 SCC (Cri) 788. [Para 20]

72. *R v. Yogasekaran,* (1990) 1 NZLR 399 (CA). [Para 137]

73. *A. Rajam v. M. Manikya Reddy,* 1989 ACJ 542 (AP). [Para 175]

74. *Lim Poh Choo v. Camden and Islington Area Health Authority,* 1980 AC 174:(1979) 3 WLR 44:(1979) 2 All ER 910 (HL). [Para 177]

75. *Cookson v. Knowles,* 1979 AC 556:(1978) 2 WLR 978:(1978) 2 All ER 604 (HL). [Para 130]

76. *Mehmet v. Perry,* (1977) 2 All ER 529 (DC). [Para 175]

77. *Regan v. Williamson,* (1976) 1 WLR 305:(1976) 2 All ER 241. [Para 175]

78. *Smith v. Middleton,* 1972 SC 30. [Para 130]

79. *Berry v. Humm & Co.* (1915) 1 KB 627. [Para 175]

80. *Livingstone v. Rawyards Coal Co.,* (1880) LR 5 AC 25 (HL). [Para 101]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ)நிவாரணம் கோருபவர்கள்/பதிலுரையாளர்கள் எழுப்பிய வாதங்களும் அவற்றின் மீது நீதிமன்றம் அளித்த முடிவுகளும் பின்வருமாறு:

*i) பல்வேறு தலைப்புகளின் கீழ் தேசிய ஆணையம் அளித்த இழப்பீடு மிகவும் குறைவு. பணவீக்கத்தின் காரணமாக 1998-ல் கேட்கப்பட்ட நிவாரணத்திற்கு தற்போது ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளதை கணக்கில் கொண்டு எந்த அளவு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று ஆணையம் கருதத் தவறிவிட்டது.*

தேசிய ஆணையம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு கடந்த 15 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது. ஆகவே, பணவீக்கத்தை காரணம் காட்டி மேல்முறையீட்டாளர் எழுப்பிய வேண்டுகோளை காரணம் எதுவும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்தது முறையானதல்ல என்று நீதிமன்றம் கருதியது. ஒவ்வொரு ஆண்டும் நிதி அமைச்சரகம் வெளியிடுகிற Cost Inflation Index (CII)-ன் அடிப்படையில் நிவாரணம் கோருபவர் 1998-ல் கோரிய ரூ.77 கோடி 2013-ம் ஆண்டு மதிப்பின்படி ரூ.188.6 கோடிக்கு சமம் என்றும் ஆகவே, சரியான, நியாயமான, ஏற்றுக் கொள்ளத்தக்க நிவாரணம் எவ்வளவு என்பது முடிவு செய்யப்பட வேண்டும். தேசிய ஆணையம் முதலில் கோரிய ரூ.77 கோடிக்கு தொகையை கட்டுப்படுத்தி ஒவ்வொரு தலைப்பின் கீழும் குறைந்த அளவிலேயே நிவாரணம் வழங்கியது சட்டப்படி நியாயப்படுத்தக் கூடியது அல்ல என்றும் சட்ட வழிமுறைகளுக்கு புறம்பானது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

*ii) தேசிய ஆணையம் ஒரு நியாயமான இழப்பீட்டை வழங்க முற்படுகையில் இறந்த நபர் அமெரிக்காவில் இருந்தபோது அவரது அந்தஸ்து, அவரது கல்வி தகுதி, எதிர்கால வாய்புகள் மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை கருதவில்லை. அமெரிக்காவில் தங்கியுள்ள பொருளாதார நிபுணர், பேராசிரியர் ஜான் எஃப். பர்க், அவரது வாக்குமூலத்தில் அகால மரணத்தின் காரணமாக இறந்த நபருக்கு ஏற்பட்ட நேரடி இழப்பு 51,25,000 அமெரிக்க டாலர் இருக்குமென்று தெரிவித்துள்ளார்.*

இறந்த நபர் நியூயார்க் நகரிலுள்ள மிகவும் புகழ்வாய்ந்த ஐ வீ லீக் ஸ்கூல் (Ivy League School)-லிருந்து பட்டம் பெற்றவர் என்றும் அவருக்கு ஒரு மிகச்சிறந்த வாழ்க்கை அமைய இருந்தது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. ஒரு பட்டதாரி சம்பாதித்துக் கொண்டிருந்த மிகவும் குறைந்த சம்பளமான ஆண்டுக்கு 30,000 டாலர் என்ற அடிப்படையில் தேசிய ஆணையம் இழப்பீட்டுத் தொகையை கணக்கிட்டு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இழப்பையும் அதே அடிப்படையில் கணக்கிட்டதன் மூலம் தவறு செய்துவிட்டது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேலே குறிப்பிட்ட தொகை (30000 டாலர்) நிரந்தர பணியிலிருந்து வருகின்ற வருமானம் அல்ல என்றும் நிரந்தர பணியிலிருந்து அவர் மிகவும் அதிகமாகவே சம்பாதித்திருப்பார் என்றும் நீதிமன்றம் கூறியது. பேராசிரியர் பர்க் கொடுத்த மதிப்பீடை இறந்த நபரின் வருமானமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும் இறந்தவருக்கு ஆண்டொன்றுக்கு நிரந்தர பணி மூலம் 40,000 டாலர் கிடைத்திருக்குமென நீதிமன்றம் கருதியது. எதிர்காலத்தில் வருவாய் இழப்பை கணக்கிடும்போது இத்தொகையில் 30 விழுக்காடு கூட்ட வேண்டும் என்றும் நீதிமன்றம் கருதியது. மேலும், உச்ச நீதிமன்றம் ஏற்கனவே பல வழக்குகளில் ஏற்படுத்திய வழிமுறைகளின்படி மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு சொந்த செலவிற்காக எடுத்துக் கொண்டு அதற்கு பிறகே பெருக்கப்படும் எண்ணை (multiplicand) முடிவு செய்யவேண்டும் என்றும் நீதிமன்றம் கருதியது.

*iii) 1988-ம் ஆண்டில் இயற்றப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 163A மற்றும் இரண்டாவது அட்டவணையின் படி (Second Schedule) பெருக்கும் எண்ணை அடிப்படையாக வைத்து (multiplier method) மருத்துவ சிகிச்சையில் அலட்சியத்தினால் ஏற்படுகின்ற இழப்பிற்கு, இழப்பீட்டை தேசிய ஆணையம் நிர்ணயித்தது நியாயம் அல்ல.*

இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்கும்போது பெருக்கும் எண்ணை மட்டுமே அடிப்படையாக வைத்து வழக்குகளை முடிவு செய்ய முடியாது என்றும் பல வழக்குகளில் நிலைமைக்கு ஏற்ப பெருக்கப்படும் எண் (multiplicand) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றம் கூறியது. தற்போதைய நிலையில் ஒரு நபரது சராசரி ஆயுள் 70 என்ற அடிப்படையில், ஒரு ஆண்டிற்கான இழப்பை 30-ஆல் பெருக்குவதன் மூலம் மொத்த இழப்பீட்டை நிர்ணயிக்கலாம் என்று நீதிமன்றம் கருதியது. மேலும், கணக்கிடுகையில் சராசரியாக ரூபாயின் மதிப்பு ஒரு டாலருக்கு 55 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுவது விவேகமானதாக இருக்கும் என்று நீதிமன்றம் கருதியது. ஆகவே, 'இறந்த நபருக்கு ஏற்பட்ட வருமான இழப்பு' ("loss of income of the deceased") ரூ.5.72 கோடி என நீதிமன்றம் கணக்கிட்டது. [$40,000+(30/100x$40,000)-(1/3x$52,000)x30xRs.55]=Rs.5,72,00,550/-.

*iv) 'வேலைக்குச் செல்லாததால் ஏற்பட்ட வருமான இழப்பு', 'கடந்த 12 ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு வந்ததற்கான பிரயாண செலவுகள்', 'வழக்கறிஞர் கட்டணம் உட்பட வழக்காடும் செலவுகள்' ஆகிய தலைப்புகளின் கீழ் உரிமை கோருபவருக்கு பண இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். "loss of consortium",*

*'உரிமை கோருபவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் வலி மற்றும் துயரம்', இறந்த நபருக்கு மருத்துவ சிகிச்சையின்போது ஏற்பட்ட வலி மற்றும் துன்பம் ஆகிய பண சம்பந்தப்படாத இழப்பீடும் சுமார் ரூ.31.5 கோடி அளவிற்கு உரிமை கோருபவருக்கு வழங்கப்பட வேண்டும்.*

உரிமை கோருபவர் அளித்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்த உச்ச நீதிமன்றம் 'கடந்த 12 ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு வந்ததற்கான பிரயாண செலவுகள்' என்ற தலைப்பின் கீழ் ரூ.10 இலட்சமும், 'வழக்காடும் செலவுகள்' என்ற தலைப்பின் கீழ் ரூ.1.5 இலட்சமும் அனுமதித்தது. 'இறந்த நபருக்கான மருத்துவ செலவு' என்ற தலைப்பின் கீழ் இழப்பீட்டு தொகையை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உச்ச நீதிமன்றம் உயர்த்தியது. இறந்த நபரை அவர் உயிரோடிருந்தபோது மும்பைக்கு மருத்துவ சிகிச்சைக்காக அழைத்து சென்றதற்கான பயண மற்றும் சிகிச்சை செலவுகளை தேசிய ஆணையம் அனுமதித்த ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.1.5 இலட்சமாக உச்ச நீதிமன்றம் உயர்த்தியது. 'தனி விமானத்தை ஏற்பாடு செய்ததற்கான செலவு' என்ற தலைப்பின் கீழ் தேசிய ஆணையம் அனுமதித்த ரூ.5 இலட்சம் உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது. *Nizam's Institute of Medical Sciences* என்ற வழக்கில் 'உரிமை கோருபவரின் மனைவி மருத்துவ சிகிச்சையின்போது அனுபவித்த வலி மற்றும் துன்பம்' என்ற தலைப்பின் கீழ் இழப்பீடு வழங்கியதின் அடிப்படையில் நடப்பு வழக்கிலும் இறந்த நபர் சிகிச்சையின்போது அனுபவித்த அளவிடமுடியாத வலி, மன உளைச்சல் மற்றும் துன்பம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. 'Loss of consortium' என்ற தலைப்பின் கீழ் ரூ.1 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 'உரிமை கோருபவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல், வலி மற்றும் துயரம்' என்ற தலைப்பின் கீழ் எந்த இழப்பீடும் வழங்க நீதிமன்றம் முன்வரவில்லை. உரிமை கோருபவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும் மேல்முறையீட்டாளர்களாகிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை காட்டிய அலச்சியத்திற்கும் நேரடி தொடர்பு இல்லை என்ற காரணத்தினால் அவ்வாறான இழப்பீடு மறுக்கப்பட்டது.

*v) இந்திய நீதி அமைப்பைச் சார்ந்த பல்வேறு மன்றங்களில் இந்த வழக்கு 15 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தும் இழப்பீட்டு தொகைக்கான வட்டியை வழங்க தேசிய ஆணையம் தவறிவிட்டது.*

இழப்பீட்டு தொகைக்கு தேசிய ஆணையம் வட்டி வழங்காதது நியாயத்திற்கு முற்றிலும் ஒவ்வாதது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. புகார் கொடுத்த தேதியிலிருந்து இழப்பீட்டு தொகை வழங்கும் தேதிவரைக்கான காலத்திற்கு ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டி செலுத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஆ)மேல்முறையீட்டாளர்களான மருத்துவர்களும், மருத்துவமனையும் பயன்படுத்திய வாதங்களும் அவற்றின் மீது உச்ச நீதிமன்றத்தின் முடிவுகளும் பின்வருமாறு:

*(i) தேசிய ஆணையம் நிர்ணயித்த இழப்பீடு மிகவும் அதிகமானதாகவும், கடுமையானதாகவும் உள்ளது. ஒவ்வொருவருக்கும் இழப்பீட்டில் பங்கு நிர்ணயம் செய்ததும் நியாயமற்றதாக உள்ளது.*

உச்ச நீதிமன்றம் *Malay Kumar Ganguly* என்ற வழக்கில் உரிமை கோருபவருக்கும் அவரது மனைவியின் மருத்துவ சிகிச்சையிலும், மரணத்திலும், மருத்துவர்கள் காட்டிய அலட்சியத்தில் பங்கு உண்டு என்ற வாதத்தை அறவே நிராகரித்து இழப்பீட்டு தொகையை சரியான முறையில் நிர்ணயிக்கும்படி தேசிய ஆணையத்தை பணித்தது. ஆயினும் நடப்பு வழக்கில் உரிமை கோருபவரின் மனைவியின் மருத்துவ சிகிச்சையில் மருத்துவர்கள் காண்பித்த அலட்சியத்திற்கு உரிமை கோருபவருக்கும் பங்கு உண்டு என்று தேசிய ஆணையம் நிர்ணயம் செய்தது தவறு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மருத்துவர்களும், மருத்துவமனையும் காண்பித்த அலட்சியத்திற்கு உரிமை கோருபவர் எந்த விதத்திலும் பொறுப்பல்ல என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மாறாக இறந்த நபரது மருத்துவ சிகிச்சையில், மேல்முறையீட்டாளர்களில் ஒருவரான டாக்டர் முகர்ஜி ஒரு மூத்த நிபுணராக இருந்தும் சரியான அளவு அக்கறை எடுக்கவில்லை என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேலும், அவர் மீது குற்றம் சாட்டப்பட்டபோது அவர் மற்ற மருத்துவர்களை குறை சொல்ல முயன்றார். இன்னொரு மேல்முறையீட்டாளரான டாக்டர் ஹல்தரும் ஒரு புகழ் பெற்ற நிபுணராக இருந்தும் மிகவும் அலட்சியமாக சிகிச்சை அளித்ததால் அனுராதா மரணமடைந்தார். மேல்முறையீட்டாளரான, டாக்டர் பிரசாத் ஜூனியர் மருத்துவராக இருந்தாலும், மேல்நிலைப் பட்டப் படிப்பு முடித்து, தனியாக தொழில் செய்கின்ற ஒரு நிபுணராவார். அனுராதாவின் சிகிச்சையில் காண்பிக்கப்பட்ட அலட்சியத்திற்கு அவருக்கும் ஒரு பொறுப்பு உண்டு என்றாலும் மற்ற சீனியர் மருத்துவர்களோடு ஒப்பிட்டு பார்க்கும்போது அவரது பங்கு குறைவே என்று உச்ச நீதிமன்றம் கருதியது. ஆகவே, டாக்டர் முகர்ஜி மற்றும் டாக்டர் ஹல்தர் ஆகிய இருவரும் தலா ரூ.10 இலட்சம் இழப்பீடு தரவேண்டும் என்றும் டாக்டர் பிரசாத் ரூ.5 இலட்சம் இழப்பீடு தரவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. *Savita Garg* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் முடிவு செய்ததுபோல் மருத்துவர்களின் அலட்சியத்திற்கு மேல்முறையீட்டாளரான AMRI மருத்துவமனைக்கும் பொறுப்பு உண்டு என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேல்முறையீட்டாளர்களான மூன்று மருத்துவர்களும் செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூ.25 இலட்சம் போக எஞ்சிய தொகையை மருத்துவமனை வட்டியோடு உரிமைகோரும் நபருக்கு செலுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

*(ii) இழப்பீடு கோரும் மனுவில் மாறுதல் ஏதும் செய்யாததால் பல்வேறு தலைப்புகளின் கீழ் மேல்முறையீட்டாளர் கோரியுள்ள கூடுதல் இழப்பீட்டிற்கான கோரிக்கையை பரிசீலிக்க முடியாது.*

கூடுதல் கோரிக்கையை வலியுறுத்தி மனு ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 23-ன்படி அறிவிக்கப்பட்ட காலவரையறையை கருத்தில் கொண்டால் அம்மாதிரி மனுவும் சமர்பிக்க வழியில்லை என்றும் ஆகவே, Civil Procedure Code,

1908-ன் கட்டளை 2, விதி 2-ன்படி அம்மாதிரி கோரிக்கை ஏதும் உரிமைகோரும் நபரால் செய்ய முடியாது என்று தேசிய ஆணையம் தெரிவித்த கருத்து சட்டப்படி சரியானதல்ல என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஒவ்வொரு வழக்கினுடைய உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் சாட்சியங்களை ஆராய்ந்தும், நியாயமான அனைவரும் ஏற்கத்தக்க இழப்பீட்டை வழங்கவேண்டிய கடமை, தீர்ப்பாயங்கள், ஆணையங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு உள்ளது என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது. மேலும், இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 136-ன்கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு நியாயமும் கிடைக்கும் வகையில் நியாயமான அனைவரும் ஏற்கத்தக்க இழப்பீட்டை வழங்குகின்ற அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

(இ) தேசிய ஆணையம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, டாக்டர் பல்ராம் பிரசாத், டாக்டர் சுகுமார் முகர்ஜி மற்றும் டாக்டர் வைத்தியநாத் ஹல்தர் ஆகியோர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் முறையே 2867/2012, 858/2012 மற்றும் 731/2012 ஆகியவை பகுதியாக ஏற்கப்பட்டு தேசிய ஆணையம் ஆணையிட்ட இழப்பீட்டுத் தொகை திருத்தியமைக்கப்பட்டது. டாக்டர் குணால் சாஹா தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு எண்:2866/2012 பகுதியாக ஏற்கப்பட்டது. சிகிச்சையில் காண்பிக்கப்பட்ட அலட்சியத்திற்கு அவருக்கும் பொறுப்பு உண்டு என்ற முடிவு ஒத்தி வைக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் AMRI மருத்துவமனை தாக்கல் செய்த சிவில் மேல்முறையீட்டு மனு எண்:692/2012 தள்ளுபடி செய்யப்பட்டது. மொத்த இழப்பீட்டுத் தொகையின் அளவு ரூ.1,34,66,000/-லிருந்து ரூ.6,08,00,550/-ஆக உயர்த்தப்பட்டது. புகார் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து இழப்பீட்டுத் தொகையை முழுவதுமாக செலுத்தும் தேதிவரை ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டி வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மருத்துவர்கள் செலுத்த வேண்டிய தொகையை கழித்துக்கொண்டு, எஞ்சிய தொகையை உரிமைகோரும் நபருக்கு செலுத்துமாறு மருத்துவமனைக்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2013) CPJ 1 (SC); 2013(4) CPR 284 (SC); (2014) 1 SCC 384.

***

## 3. திருமதி காந்தா *(எதிர்)* தாகூர் இருதய சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி நிலையம் (தனியார்) மற்றும் ஒருவர்

**(Mrs. Kanta v. Tagore Heart Care & Research Centre Pvt. Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் 27.05.2011 தேதியிட்ட ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

திருமதி காந்தா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

தாகூர் இருதய சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி நிலையம்
(துனியார்) மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:6284/2014 (சிறப்பு விடுப்பு (சி) எண்:18367/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 10.07.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

கடுமையான நெஞ்சு வலியினால் பாதிக்கப்பட்ட புகார்தாரர் / மேல்முறையீட்டாளர், முதலாவது பதிலுரையாளரான தாகூர் இருதய சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இணைந்திருந்த, இரண்டாவது பதிலுரையாளரான, டாக்டர் ராமன் சாவ்லாவை கலந்து ஆலோசித்தார். அவரது ஆலோசனையின்படி புகார்தாரருக்கு 02.09.1999 அன்று ஆஞ்சியோகிராஃபி (angiography) செய்யப்பட்டது. புகார்தாரர் தனக்கு ஒரு சில ஆன்டிபயாடிக் (antibiotics) மருந்துகளை தவிர பெரும்பாலான மருந்துகளோடு ஒவ்வாமை (allergy) இருந்ததாகவும், ஆஞ்சியோகிராஃபி குறிக்கப்பட்டிருந்த நேரத்தில் செய்யப்படவில்லை என்றும், பிற்பகலில் செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார். அதை செய்யும்போது தனக்கு வயிற்றில் கடும் வலி ஏற்பட்டதாகவும், ஆனால் டாக்டர் சாவ்லா அதை பொருட்படுத்தாமல் சிகிச்சையை தொடர்ந்து செய்ததாகவும் கூறினார். புகார்தாரரது LAD இரத்தக் குழாயில் 95 விழுக்காடு அடைப்பு இருந்ததாக ஆஞ்சியோகிராம் காண்பித்தது. புகார்தாரர் அடைப்புகளை நீக்குவதற்கு, ஆஞ்சியோபிளாஸ்டி (PTCA or angioplasty) அறுவை சிகிச்சைக்கு ஒப்புதல் அளித்திருந்தபோதிலும் சிகிச்சை ஆரம்பித்த 15-20 நிமிடங்களுக்குப் பிறகு பல மருந்துகளுக்கு அவருக்கு ஒவ்வாமை இருக்கிறது என்பதை காரணம் காட்டி, சிகிச்சை பாதியில் நிறுத்தப்பட்டது என புகார் செய்தார். 03.09.1999 அன்று டாக்டர் சூரி என்கிற மற்றொரு மருத்துவ ஆலோசகர் டாக்டர் சாவ்லாவுடன் வந்து அவரை பரிசோதித்ததாகவும், அவரது வலது காலில் நாடித்துடிப்பு முழுவதுமாக இல்லாதது தெரியவந்தது என்றும் அதற்காக டாக்டர் சாவ்லாவை அவர் கடிந்து கொண்டார் என்றும் புகார் செய்தார். புகார்தாரர், தாகூர் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அவர் டாக்டர் த்ரஹான் நடத்துகின்ற எஸ்கார்ட்ஸ் இதய மருத்துவமனையில் 13.09.1999 அன்று சேர்க்கப்பட்டார். 18.10.1999 அன்று மீண்டும் ஒரு ஆஞ்சியோகிராம் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி செய்யப்பட்டது. டாக்டர் சாவ்லா ஆஞ்சியோகிராஃபி செய்தபோது குழல் நீக்கம் (aortic dissection) ஏற்பட்டதாகவும் அதுவே மருத்துவ செனிமம்

(கோளாறு) ஏற்பட்டதற்குக் காரணம் என்றும் டாக்டர் த்ரஹான் கருத்து தெரிவித்தார். புகார்தாரர், டாக்டர் சாவ்லாவின் அலட்சியத்தினால் தாம் எஸ்கார்ட்ஸ் இதய மருத்துவமனைக்கு செல்ல வேண்டியிருந்தது என்றும், மிகுந்த செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்றும் புகார் செய்தார். முதலாவது பதிலுரையாளர் மற்றும் டாக்டர் சாவ்லா ஆகியவர்கள் இழப்பீடு தரவேண்டும் என்று கோரி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் செய்தார். டாக்டர் சாவ்லா, வடிகுழாயை (catheter) புகார்தாரரது இரத்த குழாயில் அலட்சியமாக செலுத்தியதால் பெருந்தமனியில் இடர் அல்லது குழல் நீக்கம் (aortic dissection) ஏற்பட்டது என்று கருதிய மாநில ஆணையம் ரூ.5 இலட்சம் இழப்பீடு தரவேண்டும் என்று ஆணையிட்டது. பதிலுரையாளர்கள் செய்த மேல்முறையீட்டின்பேரில் தேசிய ஆணையம், மாநில ஆணையத்தின் உத்தரவை ஒதுக்கி வைத்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், நடப்பு மேல்முறையீட்டை தாக்கல் செய்தார். மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) 03.09.1999-ல் எடுக்கப்பட்ட புகார்தாரரது CT scan மற்றும் MRI மூலம் புகார்தாரருக்கு பெருந்தமனியில் இடர் அல்லது குழல் நீக்கம் (aortic dissection) ஏற்பட்டது என்று சந்தேகத்திற்கு இடமின்றி தெரியவந்ததாக தேசிய ஆணையம் தெரிவித்தது. ஆஞ்சியோகிராஃபி செய்யும்போது டாக்டர் சாவ்லா அலட்சியமாகவும், கண்மூடித்தனமாகவும் நடந்துகொண்டதால் அது ஏற்பட்டதா என்பதுதான் தற்போதுள்ள பிரச்சனை. மருத்துவமனையின் விடுவிப்பு ஆவண சுருக்கத்திலிருந்து (discharge summary) குழல் நீக்கத்திற்காக அவசர சிகிச்சை ஏதும் அளிக்கவேண்டிய தேவை இருந்ததாகத் தெரியவில்லை. 03.09.1999 அன்று குழல் நீக்கம் இருந்தது சந்தேகத்திற்கு இடமின்றி தெரியவந்தது. ஆனால் புகார்தாரருக்கு அறுவை சிகிச்சை ஏதும் செய்யப்படவில்லை. சாதாரணமாக கடுமையான பெருந்தமனி இடர் அல்லது குழல் நீக்கம் ஏற்படும்போது இதயத்தை அறுத்து சிகிச்சை செய்யவேண்டியது அவசியம் என்பதை ஆணையம் கவனித்தது. ஆனால், குழல் நீக்கம் கடுமையாக இல்லாத நிலையில் மருந்துகளை கொண்டு சிகிச்சை செய்ய முடியும். புகார்தாரரைப் பொறுத்த வரையில் ஆஞ்சியோகிராஃபி செய்யப்பட்ட மூன்றாவது தினத்தில் இருந்து அவர் விடுவிக்கப்பட்ட தேதியான 08.09.1999 வரை அவர் திடமான நிலையிலேயே இருந்ததாக ஆணையம் பல்வேறு ஆவணங்களிலிருந்து முடிவுக்கு வந்தது. டாக்டர் சாவ்லா வடிகுழாயை செலுத்துவதில் முரட்டுத்தனமாக நடந்துகொண்டார் என்பதற்கான

சான்றுகள் ஏதும் இல்லை என்றும் ஆணையம் கருதியது. புகார்தாரருக்கு கடுமையான பெருந்தமனி இடர் இல்லை என்றும் குறைவான பெருந்தமனி இடர் மட்டுமே இருந்தது என்றும் ஆகவே அவருக்கு மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் ஆணையம் முடிவுக்கு வந்தது. மேலும், டாக்டர் சாவ்லா ஒரு தேர்ச்சி பெற்ற, நல்ல சான்றிதழ்களைப் பெற்ற மருத்துவர் என்பதையும் ஆணையம் குறித்துக் கொண்டது. சாதாரணமாக ஒரு தகுதி வாய்ந்த மருத்துவர் எப்படி நடந்து கொள்வாரோ அவ்வாறே டாக்டர் சாவ்லா நடந்து கொண்டார் என்றும் குறை சொல்லும்படி அவரது நடத்தை இல்லை என்றும் ஆணையம் கருதியது.

(ஆ)தேசிய ஆணையத்தின் மேற்படி முடிவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. புகார்தாரர் மருத்துவர் மீது சிகிச்சையில் அலட்சியம் காட்டியதற்கான புகாரை நிரூபிக்கவில்லை என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேல்முறையீடு தகுதியின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2014 SC 3355; III (2014) CPJ 3 (SC).

***

**4. ஆல்ஃபிரடு பென்டிக்ட் மற்றும் ஒருவர்** *(எதிர்)* **மணிபால் மருத்துவமனை, பெங்களூரு மற்றும் பலர்**

**(Alfred Benddict & Anr. v. Manipal Hospital, Bangalore & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

முதல் முறையீட்டு எண்:275/2007-ல் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் 22.05.2013 அன்றைய ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஆல்ஃபிரடு பென்டிக்ட் மற்றும் ஒருவர் – மேல்முறையீட்டாளர்கள்/ பதில் அளிப்பவர்கள்

**எதிர்**

மணிபால் மருத்துவமனை, பெங்களூரு மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்/ மேல்முறையீட்டாளர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:7620-7621/2014.

தீர்ப்பு தேதி : 11.08.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

புகார்தாரர்கள் இருமல் மற்றும் சளியால் பாதிக்கப்பட்டிருந்த தங்களது இரண்டு வயது மகளை குழந்தைகள் மருத்துவ ஆலோசகரான டாக்டர் அரவிந்த் ஷெனாய் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள். சில நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு அவர் குழந்தையை பெங்களூரில் உள்ள மணிபால் மருத்துவமனையில் சேர்க்குமாறு ஆலோசனை கூறினார். குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட குழந்தைக்கு சளி மற்றும் இருமல் தவிர நிமோனியா ஜுரமும் இருந்தது தெரியவந்தது. ஆகஸ்ட் 26, 2002 முதல் ஆகஸ்ட் 28, 2002 வரை குழந்தையின் பின்புற மணிக்கட்டு பகுதியில் ஊசி மூலம் திரவம் செலுத்தப்பட்டது. ஆயினும், குழந்தையின் விரல் நுனியில் அழுகல் (gangrene) ஏற்பட்டது. இரத்த ஓட்டம் தடைப்பட்டதன் காரணமாக அது படிப்படியாக மணிக்கட்டு பகுதிக்கு கீழே உள்ள கைக்குப் பரவியது. மருத்துவர்கள் ஆஞ்சியோகிராம் செய்ததாகவும் வலது முழங்கைவரை இரத்த ஓட்டம் முழுமையாக தடைப்பட்டது கண்டறியப்பட்டதாகவும், இரத்த ஓட்டத்தை மீண்டும் கொண்டுவர அறுவை சிகிச்சை மூலம் முயற்சி மேற்கொண்டதாகவும் அது வெற்றி பெறாததால் குழந்தையின் முன்கை வரை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் புகார்தாரர்கள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் ஊசியை நரம்பில் (veins) செலுத்துவதற்கு பதிலாக மருத்துவர்கள் தவறுதலாக இரத்தக் குழாயில் (artery) செலுத்தியதால் இரத்த ஓட்டம் தடைப்பட்டது என்று பின்பு தெரிய வந்ததாகவும் புகார் செய்தனர். குழந்தையின் பெற்றோர்களாகிய புகார்தாரர்கள், குழந்தையின் கையை துண்டிப்பதற்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும் மருத்துவமனையில் இருந்த டாக்டர் வாசுதேவராவ் என்கிற வாஸ்குலர் அறுவை சிகிச்சை நிபுணர் அவர்களை மிரட்டியதாகவும் அவர்கள் கையை துண்டிப்பதற்கு ஒப்புக் கொள்ளாவிடில் குழந்தையின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று வற்புறுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் காட்டியதற்காக ரூ.1 கோடி இழப்பீடு தரவேண்டும் என்று கோரி, கர்நாடகா மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் செய்தனர். புகார் மனுவை ஏற்ற ஆணையம் மருத்துவமனையில் இருந்த பணியாளர்கள் அலட்சியம் காட்டியதாக முடிவு செய்து ரூ.5 இலட்சம் இழப்பீடு வழங்கவேண்டும் என்று ஆணையிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட இருதரப்பினரும் தேசிய ஆணையத்தில் தனித்தனியாக மேல்முறையீடு செய்தனர். தேசிய ஆணையம், மாநில ஆணையம் வழங்க உத்தரவிட்ட தொகையை உறுதி செய்ததோடு வழக்காடும் செலவாக ரூ.10,000/- அளிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டது. ரூ.5 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற ஆணையை எதிர்த்து, மேல்முறையீட்டாளரான மணிபால் மருத்துவமனை சிறப்பு விடுப்பு (சிவில்) மனு CC எண்:12025/2014-யிருந்து எழுப்பப்பட்ட மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தனர். புகார்தாரர்கள் சிறப்பு விடுப்பு (சிவில்) மனு எண்:35632/ 2013-யிருந்து எழுப்பப்பட்ட மேல்முறையீட்டு மனுவை கூடுதல் இழப்பீடு கோரி தாக்கல் செய்தனர். மருத்துவமனை தாக்கல் செய்த சிவில் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. புகார்தாரர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு ஏற்கப்பட்டது. இழப்பீட்டுத் தொகை ரூ.20 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Jacob Mathew v. State of Punjab,*
(2005)3 R.C.R Criminal 836:(2005)6 SCC 1. [Para 10]

2. *Indian Medical Association v. V.P. Shantha,*
(1995) 6 SCC 651. [Para 10]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இரத்தக் குழாய் வளையங்களைப் (arterial annulation) பொருத்தவரை, துளையிடும் செயல்முறைகள் (invasive procedures) வரைபடங்கள், விளக்கப்படங்கள் ஆகியவை பற்றிய ஆவணங்கள் சரிவர பராமரிக்கப்படவேண்டும் என்று மருத்துவ நூல்கள் மற்றும் மதிப்பாய்வுகள் தெளிவாக கூறியுள்ளன என்றும் அவ்வாறு பராமரிக்காமல் இருப்பது மருத்துவ சிகிச்சையில் அலட்சியத்தை காண்பிப்பதாகும் என்று தேசிய ஆணையம் முடிவு செய்ததை உச்ச நீதிமன்றம் குறித்துக் கொண்டது. மேலும், மேல்முறையீட்டாளரது மருத்துவமனையை சார்ந்த மருத்துவர்கள் வலது கையில் அழுகல் (gangrene) எப்படி ஏற்பட்டது என்பதை சரிவர விளக்க முடியவில்லை. ஆகவே நடப்பு வழக்கில் மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் மிகவும் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இது விபத்து நடைபெற்றதால் தெரிகின்ற வெட்டவெளிப்படையான உண்மை *(res ipsa loquitur)* என்றும் ஆகவே எதிர்தரப்பினர் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. தேசிய ஆணையத்தின் முடிவிலிருந்து மாறுபடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஆ) 2014-ம் ஆண்டு, 13 வயதே நிரம்பிய பெண்குழந்தை அனுபவித்த துன்பத்தை கணக்கில் கொண்டு பார்க்கும்போது தேசிய ஆணையம் அனுமதித்த இழப்பீடு மிகவும் குறைவு என்று உச்ச நீதிமன்றம் கருதியது. செயற்கை கையோடு அப்பெண் தன் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படவேண்டும் என்றும் கல்வி கற்பதில் உள்ள இன்னல்கள் தவிர திருமணம் செய்து கொள்வதிலும் பிரச்சனைகளை மேற்கொள்ள வேண்டிவரும் என்றும் நீதிமன்றம் கருதியது. அப்பெண்ணின் இன்னல்கள், துயரம், மனச்சோர்வு ஆகியவற்றை பணத்தால் மதிப்பீடு செய்யமுடியாது என்றாலும் தற்போதுள்ள பிரச்சனைகளை சமாளிப்பதற்கும், எதிர்காலத்தில் சவால்களை ஈடு செய்வதற்கும் ரூ.20 இலட்சம் இழப்பீடு வழங்குவது நியாயமாகவும், ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(இ) புகார்தாரர்களாகிய பெண்ணின் பெற்றோர்கள் தாக்கல் செய்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இழப்பீடு தொகை ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டு ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆண்டிற்கு 9 விழுக்காடு சாதாரண வட்டியும் வழங்கப்படவேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டது. மொத்த இழப்பீட்டு தொகையில் ரூ.10 இலட்சத்தை ஒரு தேசிய வங்கியில் நீண்டகால வைப்புத்தொகையாக வைக்கவேண்டும் என்றும் அதிலிருந்து கிடைக்கின்ற வட்டியை எதிர்கால செலவுகளுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. ரூ.5 இலட்சம் பெண்ணின் மருத்துவ செலவுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் எஞ்சியுள்ள ரூ.5 இலட்சத்தை குறுகியகால வைப்புத்தொகையாக வைக்கவேண்டும் என்றும் அதையும் அதில் வருகின்ற வட்டியையும் எதிர்கால செலவுகளுக்காக பயன்படுத்தலாம் (needs in the near future) என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

(ஈ) மருத்துவமனையின் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

I (2017) CPJ 8 (SC).

***

## 5. V. கிருஷ்ணகுமார் *(எதிர்)* தமிழக அரசு மற்றும் பலர்

## (V. Krishnakumar v. State of Tamil Nadu & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அசல் புகார் எண்:57/1998-ல் 27.05.2009 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

V. கிருஷ்ணகுமார் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

தமிழக அரசு மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8065/2009 உடன் சிவில் மேல்முறையீட்டு எண்:5402/2010.

தீர்ப்பு தேதி : 01.07.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளரின் மனைவியின் கர்ப்பத்தில் இருந்த சிசு 29-வது வாரத்திலேயே சென்னை, எழும்பூரிலுள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் குறைபிரசவமாக பிறந்தது. குழந்தையின் எடை பிறப்பின்போது 1250 கிராம் மட்டுமே இருந்தது. ஆகவே, குழந்தையை தீவிர சிகிச்சைப்பிரிவில் உள்ள காப்பகத்தில் (incubator) சுமார் 25 நாட்கள் வைத்திருந்தனர். பிரசவ சமயத்தில் குழந்தைக்கு 90-100 விழுக்காடு ஆக்ஸிஜன் கொடுக்கப்பட்டது. மேலும், குழந்தை பிறந்த ஒருவாரத்தில் குழந்தைக்கு இரத்த ஏற்றமும் (blood exchange transfusion) அளிக்கப்பட்டது. மூன்றாவது பதிலுரையாளரான குழந்தை மருத்துவரான டாக்டர் எஸ்.கோபால் மற்றும் நியோநேட்டாலஜி பிரிவைச் சார்ந்த நான்காவது பதிலுரையாளரான டாக்டர் துரைசாமி ஆகியோரது பராமரிப்பில் குழந்தை இருந்தது. தாயும் சேயும் 23.09.1996 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். குழந்தை பிறந்து ஒன்பது வாரங்களான பின்பு 30.10.1996 அன்று அவர்கள் மீண்டும் மருத்துவமனைக்கு வந்தனர். நான்காவது பதிலுரையாளர் வீட்டில் அளிக்கவேண்டிய சிகிச்சைப்பற்றி அவ்வப்போது ஆலோசனை அளித்து வந்தார். மூன்றாவது பதிலுரையாளர், குழந்தைக்கு 14-15 வாரங்களானபோது தனது தனியார் மருத்துவ மையத்தில் பரிசோதனை செய்தார். குறைபிரசவமான ஒரு குழந்தைக்கு ஆக்ஸிஜன் மற்றும் இரத்த ஏற்றம் அளித்தால் குறைபிரசவத்தால் ஏற்படும் விழியேற்றம் (Retinopathy of Prematurity (ROP)) என்கிற நோய் தாக்குகின்ற ஆபத்து அதிகம் உள்ளது என்பதை இரண்டு மருத்துவர்களும் கவனிக்க தவறிவிட்டார்கள். இந்த நோய், ஐந்து காலகட்டங்களை கடந்து, இறுதியான காலகட்டத்தில் பார்வையை முழுவதும் இழக்கக்கூடிய நிலைக்கு கொண்டு செல்லக்கூடியது. நடப்பு வழக்கில் மேல்முறையீட்டாளர் குழந்தையை மும்பையில் உள்ள ஒரு குழந்தை மருத்துவ நிபுணரிடம் அழைத்து சென்றபோது அந்த நிபுணர் குழந்தையின் பிறப்பு பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வதற்கு முன்பே பார்த்தமாத்திரத்தில் குழந்தைக்கு ROP இருப்பதாக சந்தேகத்தை வெளிப்படுத்தினார். மேல்முறையீட்டாளர் அதற்கு பிறகு பல கண் மருத்துவ நிபுணர்களை கலந்தாலோசித்தார். சங்கர நேத்ராலயாவின் தலைமை மருத்துவரான டாக்டர் பத்ரிநாத் அவர்களின் பரிந்துரையின் பேரில் மேல்முறையீட்டாளர் குழந்தையை சிகிச்சைக்காக அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றார். ஆனால், அதற்குள்ளாகவே நோய் ஐந்தாவது கட்டத்தை அடைந்துவிட்டதால் சிகிச்சை பயனளிக்கவில்லை. மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் காட்டியதாக மேல்முறையீட்டாளர் வழக்கு தொடர்ந்தார். தேசிய ஆணையம் தமிழக அரசு, அரசு மருத்துவமனை மற்றும் இரு மருத்துவர்கள் மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் காட்டியதாக முடிவுக்கு வந்து மேல்முறையீட்டாளருக்கு ரூ.5 இலட்சம் இழப்பீடு தருமாறு ஆணையிட்டது. மேல்முறையீட்டாளரான, V.கிருஷ்ணகுமார் இழப்பீட்டுத்தொகையை அதிகரிக்கவேண்டும் என்று சிவில் மேல்முறையீட்டு எண்:8065/2009 மூலம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தமிழக அரசும், மற்றவர்களும் தேசிய ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து சிவில் மேல்முறையீட்டு

எண்:5402/2010-ல் வழக்கு தொடர்ந்தார். சிவில் மேல்முறையீட்டு எண்:8065/2009 ஏற்கப்பட்டது. சிவில் மேல்முறையீட்டு எண்:5402/2010 தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Roe v. Minister of Health,* 1954(2) QB 66. (Relied) [Para 10]
2. *Balram Prasad v. Kunal Saha,* IV (2013) CPJ 1 (SC)=VIII (2013) SLT 513=IV (2013) ACC 378 (SC). (Relied) [Para 16]
3. *Nizam's Institute of Medical Sciences v. Prashant S. Dhananka and Others,* II (2009) CPJ 61 (SC)=III (2010) SLT 734. (Relied) [Para 16]
4. *Malay Kumar Ganguly v. Sukumar Mukherjee,* III (2009) CPJ 17 (SC)=VI (2009) SLT 164. (Relied) [Para 17]
5. *Spring Meadows Hospital and Another v. Harjol Ahluwalia,* I (1998) CPJ 1 (SC)=III (1998) SLT 684. (Relied) [Para 20]
6. *Wells v. Wells,* 1999 (1) AC 345. (Relied) [Para 22]
7. *Jones & Laughlin Steel Corporation v. Pfeifer,* (1983) 462 US 523. (Relied) [Para 24]
8. *O'Shea v. Riverway Towing Company,* (1982) 677 F(2d) 1194 (7th Cir.). (Relied) [Para 24]
9. *Taylor v. O'Connor,* 1971 AC 115. (Relied) [Para 24]
10. *Simon v. Helmot,* 2012 UKPC 5. (Relied) [Para 24]
11. *Savita Garg v. National Heart Institute,* IV (2004) CPJ 40 (SC)=VI (2004) SLT 385. (Relied) [Para 27]
12. *Achutrao Haribhau Khodwa v. State of Maharashtra,* IV (2006) CPJ 8 (SC)=1996 (SLT SOFT) 1000=I (1996) CLT 532 (SC). (Relied) [Para 27]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) ROP என்ற நோய் குறித்து தேவையான அளவு மருத்துவ நூல்கள்/ஆய்வுகள் உள்ளன என்றும் குழந்தை கர்ப்பத்தில் இருந்த காலம், எடை ஆகியவற்றை கணக்கில் கொண்டு மேற்சொன்ன நோயை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனையை மேற்கொண்டிருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. குழந்தை பிறந்தபோதும் அதற்கு பிந்தைய வாரங்களிலும் எந்தவித குறைபாடும் (deformities)

வெளிப்படவில்லை என்றும் புகார்தாரருக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன என்றும் ஆனால் அவர் அவற்றை பின்பற்றவில்லை என்றும் பதிலுரையாளர்கள் வாதிட்டனர். மருத்துவமனையின் விடுவிப்பு ஆவண சுருக்கத்தில் (discharge summary) பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. 'தாய் தைரியமாக இருக்கிறார்; ஆபத்துக்கான அறிகுறிகள் பற்றி அவருக்கு தெரிவிக்கப்பட்டன; (1) தாய்ப்பாலை தொடர்ந்து கொடுக்கவேண்டும் (2) பிரசவத்திற்கு பிறகு புறநோயாளிகள் பிரிவுக்கு செவ்வாய் கிழமை அன்று செல்லவேண்டும்' இதை சுட்டிக்காட்டிய பதிலுரையாளர்கள் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்கள். மருத்துவமனையின் விடுவிப்பு ஆவண சுருக்கத்தில், ஒரு ஓரத்தில் மேற்சொன்ன வாசகங்கள் கிறுக்கப்பட்டிருந்ததை கவனித்த உச்ச நீதிமன்றம் அது அவசர அவசரமாக எழுதப்பட்ட எச்சரிக்கையே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று தேசிய ஆணையம் கூறியதை ஏற்றுக்கொண்டது. ROP நோய்வராமல் தடுப்பதற்கு பெற்றோர் எந்தவிதமான தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றோ அம்மாதிரி நோய் வருவதற்கான ஆபத்து உள்ளது என்று மருத்துவர்கள் சந்தேகிக்கிறார்கள் என்றோ எந்தவிதமான குறிப்பும் விடுப்பு ஆவணச் சுருக்கத்தில் இல்லை.

(ஆ)தேசிய ஆணையம், டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையத்திலிருந்து (AIIMS) இந்த நிகழ்வு பற்றி அறிக்கை பெற்றிருந்தது என்பதை உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது. AIIMS இந்த நிகழ்வை பரிசீலிக்க நான்கு கண் மருத்துவ நிபுணர்கள் உள்ளடங்கிய ஐந்து நபர்கள் கொண்ட மருத்துவ குழுவை நியமித்தது. குழந்தை பிறந்த இரண்டு முதல் நான்கு வாரங்களுக்குள் ROP ஆரம்பமாகிறது என்றும் அப்பொழுது குழந்தைக்கு நோய்க்கான முதல் பரிசோதனை செய்வது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) பதிலுரையாளர்கள் சிகிச்சையில் அலட்சியமாகசெயல்பட்டனர் என்றும் அவர்களது மருத்துவ சேவையில் குறைபாடு இருந்தது என்றும் தேசிய ஆணையம் முடிவு செய்ததை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. மூன்றாவது மற்றும் நான்காவது பதிலுரையாளர்கள் (டாக்டர் கோபால் மற்றும் டாக்டர் துரைசாமி) தேசிய ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்பதையும் தாம் மருத்துவ சிகிச்சையில் அலட்சியமாக செயல்பட்டதாக கூறிய தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள் என்பதையும் உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது.

(ஈ) ஒரு வழக்கில் இழப்பீடு வழங்கும்போது *Malay Kumar Ganguly v. Sukumar Mukherjee* என்ற வழக்கில் எடுத்துக்காட்டியபடி *restitutio in integrum* என்ற வழிமுறையை பின்பற்றவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. அதன்படி தவறு ஏற்படாமலிருந்தால் ஒரு நபர் எந்த நிலையில் இருந்திருப்பாரோ அந்த நிலையை

அடைவதற்கான அளவிற்கு இழப்பீடு வழங்கவேண்டும். அதாவது, நிகழ்வால் ஏற்பட்ட பண இழப்பு, அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பம் மேலும் நிகழ்வு ஏற்படுத்திய இயலாமையை (disability) எதிர்கொள்வதற்கு ஏற்படும் செலவு ஆகிய அனைத்தையும் ஈடுசெய்யும் வகையில் இழப்பீடு இருக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(உ) ஏற்கனவே இந்த நிகழ்வில் ஏற்பட்ட மருத்துவ செலவு ரூ.42,87,921/- என்று நீதிமன்றம் கணித்தது. இதில் ரூ.40 இலட்சத்தை தேசிய ஆணையத்தில் வழக்கு தொடர்ந்த தேதியிலிருந்து தொகையை செலுத்தும் தேதிவரையில் ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டியோடு பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2 ஆகியோர் இணைந்து அளிக்கவேண்டும் என்றும் பதிலுரையாளர்கள் 3 மற்றும் 4 ஆகிய இருவரும் எஞ்சிய ரூ.2,87,921/-ஐ 6 விழுக்காடு வட்டியோடு சரிசமமாக அளிக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஊ) ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்படும் பணவீக்கத்தை கருத்தில்கொணடு எதிர்காலத்தில் மருத்துவ சிகிச்சைக்காக ஏற்கவேண்டிய செலவு ரூ.1,38,00,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தெட்டு இலட்சம்) ஆக இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. பதிலுரையாளர்கள் 1 மற்றும் 2 ஆகிய இருவரும் இதில் ரூ.1,30,00,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சம்) வழங்கவேண்டும் என்றும் பதிலுரையாளர்கள் 3 மற்றும் 4 ஆகிய இருவரும் தலா ரூ.4 இலட்சம் மேல்முறையீட்டாளருக்கு தீர்ப்பளித்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அளிக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

(எ) இரண்டு மேல்முறையீடுகளும் மேற்கூறியவாறு முடிவு செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2015 SC 2836; (2015) 9 SCC 388; III (2015) CPJ 15 (SC); 2015(3) CPR 104 (SC); 2016(1) CPR 443 (SC).

***

## 6. ஷீலா ஹிர்பா நாயக் கௌனேக்கர் *(எதிர்)* அப்போலோ மருத்துவமனைகள் குழுமம் (Sheela Hirba Naik Gaunekar v. Apollo Hospitals Ltd.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அசல் புகார் எண்:103/1997-ல் 13.05.2005 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஷீலா ஹிர்பா நாயக் கௌனேக்கர் - மேல்முறையீட்டாளர்/பதில் அளிப்பவர்

**எதிர்**

அப்போலோ மருத்துவமனைகள் குழுமம் - பதில் அளிப்பவர்/மேல்முறையீட்டாளர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3625/2005 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்:4408/2005.

தீர்ப்பு தேதி : 05.10.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

புகார்தாரருடைய கணவர் திரு.கௌனேக்கர் என்பவர் 14.05.1996 அன்று சென்னை அப்போலோ மருத்துவமனையில் ஆஞ்சியோபிளாஸ்டி அறுவை சிகிச்சையை மேற்கொண்டார். ஆனால், 18.05.1996 அன்று மாரடைப்பு காரணமாக அவர் மரணமடைந்தார். மருத்துவ சிகிச்சையின்போது மருத்துவமனையும் அதிலுள்ள மருத்துவர்களும் அலட்சியத்துடன் செயல்பட்டதாக புகார்தாரர் தேசிய ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார். ரூ.70 இலட்சம் இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் கோரியிருந்தார். சாட்சியங்களையும், ஆவணங்களையும் பரிசீலித்த தேசிய ஆணையம் பதிலுரையாளரான மருத்துவமனை அலட்சியத்துடன் நடந்துகொண்டதாக முடிவுக்குவந்து ரூ.2 இலட்சம் இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் 6 விழுக்காடு வட்டி வழங்கவேண்டும் என்றும் ஆணையிட்டது. பணியில் அலட்சியம் காட்டியதாக வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மருத்துவமனையும், இழப்பீட்டை உயர்த்தித்தரவேண்டும் என்று மேல்முறையீட்டாளரும் ஆகிய இருதரப்பினரும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். புகார்தாரர் தாக்கல் செய்த சிவில் மேல்முறையீட்டு மனு எண்:3625/2005 ஏற்றுக்கொள்ளப்பட்டது. மருத்துவமனை தாக்கல் செய்த சிவில் மேல்முறையீட்டு மனு எண்:4408/2005 தள்ளுபடி செய்யப்பட்டது. மருத்துவமனை வழங்கவேண்டிய இழப்பீடு 9 விழுக்காடு வட்டியுடன் ரூ.50 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இந்த தொகையில் அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் ரூ.10 இலட்சம் வழங்கவேண்டும் என்றும் முடிவுசெய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Sarla Verma (Smt) & Ors. v. Delhi Transport Corporation & Anr.,* 162 (2009) DLT 278 (SC)=VI (2009) SLT 663 =III (2009) ACC 708 (SC). (Relied) [Para 7]

2. *Balram Prasad v. Kunal Saha & Ors.,* IV (2013) ACC 378 (SC) =VIII (2013) SLT 513=IV (2013) CPJ 1 (SC). (Relied) [Para 7]

3. *Municipal Corporation of Delhi v. Uphaar Tragedy Victims Association & Ors.,* VII (2011) SLT 757=IV (2011) ACC 382 (SC) =IV (2011) CPJ 74 (SC)=IV (2011) CLT 204 (SC). (Relied) [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) தேசிய ஆணையம் பிறப்பித்த ஆணையையும், அறுவை சிகிச்சையை செய்த மருத்துவர் டாக்டர் மேத்யூஸ் சாமுவேல் களரிக்கல் மீதான குறுக்கு விசாரணை உட்பட தேசிய ஆணையத்தின்முன் வைக்கப்பட்ட சாட்சியங்களையும் பார்வையிட்ட உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையத்தின் முடிவு சரியானதே என்று கருதியது. அறுவை சிகிச்சைக்குப்பிறகு இறந்துபோன நபருக்கு சரியான பராமரிப்பு வழங்கப்படவில்லை என்று தேசிய ஆணையம் அளித்த தீர்ப்பு சட்டரீதியாகவும், சாட்சியங்கள் அடிப்படையிலும் வழங்கப்பட்டது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. தேசிய ஆணையம் அளித்த தீர்ப்பில் எந்த தவறோ அல்லது முறைகேடோ இல்லாத நிலையில், இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 136–ன்கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பிரயோகித்து இந்த வழக்கில் தேசிய ஆணையம் அளித்துள்ள தீர்ப்பை மாற்றுவதற்கான அவசியம் ஏதுமில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. ஆகவே, அப்போலோ மருத்துவமனை தொடர்ந்த சிவில் மேல்முறையீட்டு மனு எண்:4408/2005, தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்று கருதிய உச்ச நீதிமன்றம் அதை அவ்வாறே தள்ளுபடி செய்தது.

(ஆ) இறந்த நபருடைய வருமானவரி படிவத்திலிருந்து அவரது ஆண்டு வருமானம் அவர் இறந்த காலகட்டத்தில் ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் என்று உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது. இதில் மூன்றில் ஒருபங்கு சொந்த செலவிற்கு என்று எடுத்துக்கொண்டால் எஞ்சிய தொகை சுமார் ரூ.3,33,000/–. இறந்த சமயத்தில் அவரது வயது 60 ஆகும். உச்ச நீதிமன்றம் *Sarla Verma (Smt) v. Delhi Transport Corporation and Anr.* என்ற வழக்கில் காட்டிய வழிமுறைகளின்படியும், மோட்டார் வாகனச் சட்டம், 1988–ன்படியும் நடப்பு வழக்கில் பெருக்கும் எண் (multiplier) 9 ஆகும். ஆகவே, அவரை சார்ந்து இருந்தவர்களுக்கு அவரது இறப்பால் ஏற்பட்ட ஆண்டு இழப்பு ரூ.29,70,000/–. சம்பவம் 1996–ல் நடந்தது என்பதை கருத்தில்கொண்டும், வழக்கு 20 ஆண்டுகளாக நடந்துவருகிறது என்பதை கருத்தில்கொண்டும், இழப்பீடு ரூ.40 இலட்சம் வழங்குவது நியாயமாக இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேலும், *Balram Prasad v. Kunal Saha and Ors.* என்ற வழக்கில் நிர்ணயித்தபடி, புகார்தாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சல், குடும்பத்தலைவரது மரணத்தால் ஏற்பட்ட இழப்பு, அவரது பிரிவால் கிடைக்கப்பெறாத அன்பு மற்றும் அரவணைப்பு ஆகியவற்றை

கணக்கில் கொண்டு பார்க்கும்போது இந்த தலைப்புகளின் கீழ் மொத்தமாக மேலும் ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்குவது பொருத்தமாக இருக்கும் என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. ஆக மொத்த இழப்பீடு ரூ.50 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டது.

(இ) *Municipal Corporation of Delhi v. Uphaar Tragedy Victims Association and Ors.* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் நிர்ணயம் செய்தபடி, பதிலுரையாளர்கள் ஆண்டிற்கு 6 விழுக்காட்டிற்கு பதிலாக புகார் கொடுத்த தேதியிலிருந்து தொகையை முழுவதுமாக செலுத்தும் தேதிவரை ஆண்டிற்கு 9 விழுக்காடு வட்டி அளிக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஈ) அப்போலோ மருத்துவமனையைத்தவிர திரு.கௌனேக்கருக்கு அறுவை சிகிச்சை செய்து அவரது மரணத்திற்கு காரணமாக இருந்த டாக்டர் மேத்யூஸ்சும் இழப்பீடு வழங்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. *பல்ராம் பிரசாத்* வழக்கில் முடிவுசெய்தபடி மொத்த தொகையான ரூ.50 இலட்சத்தில், டாக்டர் மேத்யூஸ் ரூ.10 இலட்சம் வட்டியோடு புகார்தாரருக்கு செலுத்தவேண்டும் என்று ஆணையிடுவது சரியாகவும், நியாயமாகவும் இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. அத்தொகையை அவர் நான்கு வாரங்களுக்குள் செலுத்தவில்லை என்றால் பதிலுரையாளரான மருத்துவமனை, மேல்முறையீட்டாளர்/புகார்தாரருக்கு மேற்படி தொகையை செலுத்தவேண்டும் என்றும் அவர்கள் பிறகு அதை டாக்டர் மேத்யூஸ்சிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) மேல்முறையீடு மேற்சொன்ன வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

I (2017) CPJ 1 (SC); 2017(1) CPR 297 (SC).

***

## (p) மருத்துவ சிகிச்சையில் அலட்சியம் / *res ipsa loquitur*

### 1. அஷிஷ் குமார் மசூம்தார் *(எதிர்)* அய்ஷி ராம் பத்ரா சாரிடபிள் ஆஸ்பிடல் டிரஸ்ட் மற்றும் பலர்

**(Ashish Kumar Mazumdar v. Aishi Ram Batra Charitable Hospital Trust & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

RFA, முதல் வழக்கு எண்:7/2009-ல் டெல்லி உயர் நீதிமன்றம் 23.12.2009 அன்று பிறப்பித்த ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அஷிஷ் குமார் மசூம்தார் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அய்ஷி ராம் பத்ரா சாரிடபிள் ஆஸ்பிடல் டிரஸ்ட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:4010/2010 மற்றும் 4011–12/2010.

தீர்ப்பு தேதி : 22.04.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், வாதி/மேல்முறையீட்டாளர் அதிகபடியான காய்ச்சல் மற்றும் மோசமான உடல்நிலை காரணமாக பதில் மனுதாரரின் மருத்துவமனையில் அக நோயாளியாக, 27.10.1988 அன்று, 3–வது தளத்தில், அறை எண்:305–ல் அனுமதிக்கப்பட்டார். 31.10.1988 மற்றும் 01.11.1988–க்கு இடைபட்ட இரவு வேளையில், 2.20 am மணியளவில், நோயாளியின் சகோதரி, நோயாளி/வாதி அறையில் இல்லை என்பதை கவனித்து, அந்த நேரம் வேலையில் இருந்த செவிலியரிடம் தெரிவித்தார். தேடிப் பார்த்தபோது, வாதி/நோயாளி, தரைதளத்தில் உள்ள புற்றுநோய் பிரிவுக்கு பக்கத்தில், வாதியின் ஜன்னலுக்கு நேராக, 50 அடி தூரத்தில் விழுந்து கிடப்பதை, காவலாளி பார்த்து கூறினார். விழுந்ததின் விளைவாக, வாதியின் நாரி முள்ளெலும்பு முறிந்து அதன் காரணமாக, வாதியின் தண்டுவடம், முற்றிலும் இடமாறியிருக்கிறது. சிகிச்சை எடுத்தும், அவர் உடலியக்க குறைபாட்டிற்கு உள்ளானார் (அதாவது இடுப்புக்கு கீழே 100 விழுக்காடு முற்றிலும் செயலற்ற நிலையில் இருந்தார்). இதற்காக இழப்பீடு கோரி தொடரப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்றம் (ஒரு நீதிபதியை உள்ளடக்கிய அமர்வு) ரூ.7 இலட்சம், 12 விழுக்காடு வட்டியுடன் இழப்பீடு தொகையாக வழங்க ஆணையிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டு மனு இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, பிரதிவாதி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது, அதே வேளையில், இழப்பீட்டு தொகையை ரூ.7 இலட்சத்திலிருந்து ரூ.11 இலட்சமாக 12 விழுக்காடு வட்டியுடன் உயர்த்தி கேட்டு தாக்கல் செய்த, மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மேலும் திருப்தியடையாத வாதி உரிமையியல் மேல்முறையீட்டு மனு எண்:4010/2010 தாக்கல் செய்தார். அத்தோடு, பிரதிவாதி உரிமையியல் மேல்முறையீட்டு மனுக்கள் 4011/2010, 4012/2010 ஆகியவற்றை தாக்கல் செய்தார். இரு தரப்பினரது மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

1. *Ashish Kumar Mazumdar v. Aishi Ram Batra Charitable Hospital Trust & Ors.,* RFA (OS) No.7 of 2009 dated 23.12.2009.
2. *Ashish Kumar Mazumdar v. Aishi Ram Batra Charitable Hospital Trust & Ors.,* CS (OS) No.3413 of 1991 decided on 02.12.2008.
3. *Shyam Sunder vs. State of Rajasthan,* (1974) 1 SCC 690.
4. *Scott v. London & St. Katherine Docks Co.,* (1865) 3 H & C 596 : 159 ER 665.

### 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

(அ) வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், விபத்து நடந்த தேதியன்று, வாதியின் உடல்நிலையை பார்க்கும்போது, பிரதிவாதியின் (மருத்துவமனையின்) வாதமான, வாதி தானாகவே ஜன்னல் வழியாக ஏறிக்குதித்து காயமுற்றார் என்பதை, கீழ் நீதிமன்றங்கள் கூறியதுபோல் ஏற்றுக்கொள்ள முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. நடந்த சம்பவம், தெளிவாக *res ipsa loquitur* என்ற கோட்பாட்டிற்கு கீழ் வருகிறது என்றும் நீதிமன்றம் கூறியது. மேலும், பிரதிவாதி தரப்பில் மிகவும் கவனமாக இருந்தார் மற்றும் அலட்சியமாக இல்லை என்பதை நிரூபிக்கும் சுமை, பிரதிவாதியின்மேல் உள்ளது என்றும் நீதிமன்றம் கூறியது. நோயாளிகளை பரிசோதிப்பதும், சிகிச்சை அளிப்பது மட்டும் மருத்துமனைகளில் பணி புரிபவரின் வேலை இல்லை; மாறாக, மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துவரும் நோயாளிகள் குறிப்பாக உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளவர்களை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்ள வேண்டியது மருத்துவமனையில் பணிபுரிபவர்களின் கடமை என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆகையால், நோயாளியின் காயத்திற்கு, பிரதிவாதியின் மருத்துவமனை ஊழியர்கள், நோயாளியை சரியாக கவனிக்காததே காரணம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மருத்துவமனை ஊழியர்கள் யாரும் கவனிக்காததால்தான், வாதி (நோயாளி) நடந்து சென்று, ஜன்னல் வழியே ஏறிக் குதித்து காயமுற்றார் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஆ) *res ipsa loquitur* என்ற கோட்பாட்டின்படி வாதிக்கு ஏதேனும் பாதிப்புகள் நடந்திருக்க வேண்டும். மேலும், அது தொடர்பான சம்பவங்களை வைத்து பார்க்கும்போது, அது நடந்ததை பிரதிபலிக்கும் வண்ணமாக இருக்கவேண்டும். மேலும், அதை நிரூபிக்க வாதி எந்த முயற்சியும் எடுக்க தேவையில்லை என்றும் நீதிமன்றம் கூறியது. மேலும், நடந்த நிகழ்வுகள் பிரதிவாதி ஏதேனும் குறிப்பிட்ட செயலை கவனக்குறைவாக செய்ததையோ அல்லது செய்யத் தவற விட்டதையோ தானாகவே விளங்க வைக்கும் வண்ணம் இருக்கும் என்றும் நீதிமன்றம் கூறியது. ஒரு விபத்து சம்பந்தமான நிகழ்வுகள நிரூபிக்க வேண்டிய நிலையில், வாதி இருக்கும்போது, வாதிக்கு தெரியாத, பிரதிவாதிக்கு தெரிந்த

உண்மைகயை, வெளிக்கொணர்வதே இந்த கோட்பாட்டின் நோக்கமாகும். மேலும், இந்த கோட்பாடு, நடந்த விபத்தை அப்படியே வைத்து பார்க்கும்போது அது பிரதிவாதியின் கவனக்குறைவை பிரதிபலிக்கும் வகையில் இருக்கும் சூழ்நிலைகளுக்கு (மற்ற சூழ்நிலைகளை விட) மிகவும் பொருத்தமாக இருக்கும்.

(இ) சமர்பிக்கப்பட்ட சாட்சியங்கள், ஆவணங்களையும் மற்றும் இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்டு, அக நோயாளியை பேணிப் பார்ப்பதில், போதுமான கவனம் எடுக்கவில்லை என்பது இந்த கோட்பாட்டின் மூலம் நன்கு புலப்படுவதாக, கீழ்நீதிமன்றங்கள் கூறியது சரி என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஈ) இந்த வழக்கில், வாதி, வேலை பார்க்க முடியாமல் போனதிற்காக கொடுக்கப்பட்ட ரூ.4 இலட்சமும், உதவியாளர் வைத்துக் கொள்வதற்காக கொடுக்கப்பட்ட ரூ.4 இலட்சமும், பொருளாதார நஷ்டம், வலி மற்றும் வேதனை, உறுப்புகளை இழந்ததற்காக கொடுக்கப்பட்ட ரூ. 3 இலட்சமும் சேர்த்து பார்க்கும்போது அது வாதியின் முறையீட்டிற்கு போதுமானதே என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், இம்மாதிரியான வழக்குகளில், இழப்பீட்டு தொகையை, அறுதியிட்டு திட்டவட்டமாக இவ்வளவுதான் என்று கணக்கிட முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. அதுமட்டுமல்லாது, அம்மாதிரியான இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்ய, விசாரணை நீதிமன்றத்திற்கு, தன்னிச்சையாக முடிவு செய்ய, அதிகாரம் இருக்கிறது என்றும் பொதுவாக, அது வாதி கோரிய தொகைக்கு நியாயமாக பொருந்தும் வகையிலும் கொடுக்கப்படும்போது அதில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தலையிட தேவையில்லை என்றும் கூறியது.

(உ) மேற்கூறிய, உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளின் அடிப்படையில், இரு மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2014) 9 SCC 256; II (2014) CPJ 5 (SC).

***

## (q) கலால் வரி கட்டணம் (PAYMENT OF EXCISE DUTY)

**1. ரவீந்தர் ராஜ் *(எதிர்)* காம்பிடென்ட் மோட்டார்ஸ் கம்பெனி (பி) லிமிடெட் மற்றும் ஒருவர் (Ravinder Raj v. Competent Motors Co. Pvt. Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

i. மறு சீராய்வு மனு எண்:1485/2005 வழக்கில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 19.07.2005 அன்று கொடுத்த தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டது.

ii. மறு சீராய்வு மனு எண்:2974/2005 மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு எண்:1533/2005 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இதர மனு எண்:599/2006 என்ற வழக்கிலும் 07.08.2008 அன்று பிறப்பித்த ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ரவீந்தர் ராஜ் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

காம்பிடென்ட் மோட்டார்ஸ் கம்பெனி (பி) லிமிடெட் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்பு மனு (சிவில்) எண்:10364/2006 உடன் சிறப்பு விடுப்பு மனு (சிவில்) எண்கள்:9739-9740/2009 ஆகிய மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 10.02.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மனுதாரர் ரூ.10,000/-ஐ முன்பணமாக ஹுலுத்தி மாருதி 800 (Maruti 800) காரை முன்பதிவு செய்தார். 15.07.1988-ம் தேதியன்று, 2-ம் பதில் மனுதாரர், மனுதாரர் முன்பதிவு செய்த கார் டெலிவரி செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், மனுதாரர் மீதிப்பணத்தை கொடுத்துவிட்டு காரை எடுத்து செல்லலாம் என்று கூறினார். 16.02.1989-ம் தேதியன்று மனுதாரர் முழுதொகையான ரூ.78,351.05-ஐ செலுத்தினார். இந்த முழுதொகை வாகனத்தின் விலை, காப்பீட்டு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான பதிவுக் கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். 01.03.1989-ம் தேதியன்று கலால் வரி கட்டணம் உயர்த்தப்பட்டதால், வாகனத்தின் விலையில் ரூ.6,710.61 சேர்க்கப்பட்டது. கலால் வரி கட்டண உயர்வால் ஏற்பட்ட விலை உயர்வை செலுத்தும்படி, மனுதாரர் கேட்டுக்கொள்ளப்பட்டார். மனுதாரர், இந்த கட்டணத்தை, தனது எதிர்ப்பினைத் தெரிவித்தபின் செலுத்தினார். அதற்கான ரசீது 05.04.1989-ம் தேதியிட்டு கொடுக்கப்பட்டது. மனுதாரர் இதனை எதிர்த்து, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது. கலால் வரியால் ஏற்பட்ட விலையேற்றத்தை, 2-ம் பதில் மனுதாரர் பொறுப்பெடுத்துக் கொள்ளும்படி (முன்சொன்ன) மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவை அனுமதித்து வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை மாற்றி அமைத்தது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து, இந்த சிறப்பு விடுப்பு, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; பொருட்கள் விற்பனை சட்டம், 1980–ன் பிரிவு 64-A(1)(a).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Omprakash v. Asst. Engineer, Haryana Agro Industries Corporation Ltd.,* II (1994) CPJ 1 (SC). (Not Applicable) [Para 12]

2. *Mohinder Pratap Dass v. Modern Automobiles & Anr.,* 1995 (3) SCC 581. (Not Applicable) [Para 12]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில், மனுதாரரின் வாதம் என்னவெனில், கலால் வரியால் ஏற்பட்ட விலையேற்றத்தை, பதில் மனுதாரர்தான் பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். ஏனெனில், மனுதாரர் கொடுத்திருந்த ஆவணங்கள் எல்லாம் சரியாக இருந்ததாலும், மனுதாரர் கேட்டிருந்த காரின் கலரும் தயாராக இருந்ததால், வாகனம் டெலிவரி செய்வதில் ஏற்பட்ட தாமதத்திற்கோ, அதற்கிடையில் நடந்த விலையேற்றத்திற்கோ, மனுதாரர் பொறுப்பேற்க முடியாது என்று வாதிட்டார்.

(ஆ) 2–ம் பதில் மனுதாரர், மனுதாரருக்கு 15.07.1988 அன்று எழுதிய கடிதத்தை, நீதிமன்றம் குறிப்பிட்டது. அதில் மனுதாரர், கார் டெலிவரி எடுப்பதற்கான நடைமுறைகளை முடித்து, காரை டெலிவரி எடுத்துக்கொள்ளுமாறு, பதில் மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. மேலும், 15.07.1988–ம் தேதியன்று, 2–ம் பதில் மனுதாரர் கொடுத்த விலைப்பட்டியலில், விலை குறித்திருந்தாலும், முழு விலையும் கொடுத்து முடித்து, வாகனம் டெலிவரி எடுக்கும்போது, வாகனத்தின் விலை எவ்வளவோ, அந்த விலையே வசூலிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்ததை நீதிமன்றம் எடுத்துக்காட்டியது.

(இ) முழுதொகையையும் செலுத்திய பிறகு, வாகனத்திற்கு 05.04.1989–ம் தேதியன்று, ரசீது கொடுக்கப்பட்டது. வாகனத்தை டெலிவரி செய்வதில், பதில் மனுதாரர்கள் வேண்டுமென்றே தாமதித்தனர் என்று நிரூபிக்கப்படாதவரை, கலால் வரி உயர்வால், வாகனத்தில் ஏற்பட்ட விலை மாற்றத்திற்கு, மனுதாரர்தான் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.

(ஈ) பொருட்கள் விற்பனை சட்டம், பிரிவு 64-A(1)(a)–ஐ வைத்து பார்க்கும் போதும், வாகனத்தில் ஏற்பட்ட விலை உயர்வு, வாகனம் டெலிவரி செய்யப்படுவதற்கு முன் ஏற்பட்டதால், மனுதாரர்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.

(உ) இந்த சூழ்நிலைகளில், சிறப்பு அனுமதி பெற்ற மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

II (2011) CPJ 1 (SC).

***

## (r) வட்டி செலுத்துதல்

### 1. கேரள மாநில வீட்டுவசதி வாரியம் மற்றும் பலர் *(எதிர்)* கேரள மாநில வீட்டுவசதி வாரியம், நெல்லிக்கோட் குடியிருப்பு ஒதுக்கீட்டாளர்கள் சங்கம் மற்றும் பலர்

**(Kerala State Housing Board & Ors. v. Kerala State Housing Board, Nellikode Housing Colony Allottees Association & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

W.A.No.1760/2004-ல் 28.02.2016 அன்று கேரள மாநிலம், எர்ணாகுளத்தில் உள்ள உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கேரள மாநில வீட்டுவசதி வாரியம் மற்றும் பலர் - மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

கேரள மாநில வீட்டுவசதி வாரியம்,
நெல்லிக்கோட் குடியிருப்பு ஒதுக்கீட்டாளர்கள் சங்கம் மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:7835/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:10580/2006 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது) உடன் எண்கள்: 7836/2011 மற்றும் 7837/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:21478 மற்றும் 21817/2008 மனுவிலிருந்து முறையே எழுப்பப்பட்டது) .

தீர்ப்பு தேதி : 14.09.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர்கள் (Kerala State Housing Board & Ors.), சேவையூர் வீட்டுவசதி திட்டம் மற்றும் நெல்லிக்கோடு வீட்டுவசதி திட்டத்தின் கீழ் முறையே 1984 மற்றும் 1985-ஆம் ஆண்டுகளில் வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்வதற்காக நிலம் வாங்கினார். நிலத்திற்கு உரிமையாளர்கள், மேல்முறையீட்டாளர் கொடுத்த இழப்பீட்டு தொகையை ஏற்றுக் கொள்ளவில்லை. இது குறித்து, வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது. இதற்கிடையில், 1988-1990-ல், வீட்டுவசதி வாரியம், வீட்டுமனைகள் ஒதுக்கீடு

செய்யப்பட்டவர்களுடன், மேற்கூறிய வழக்கு முடிவிற்கு வந்தபின், பிளாட்டின் விலையை மீண்டும் நிர்ணயம் செய்வதற்கு ஏதுவாக, பிளாட் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுடன் ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றியது. மேலும், அந்த ஒப்பந்தத்தில், வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள், வீட்டுமனை விலையில் வித்தியாசம் ஏதும் இருக்குமெனில், அந்த வித்தியாசத்தை 15 விழுக்காடு வட்டியுடன், 30 நாட்களுக்குள் வீட்டுவசதி வாரியத்திற்கு திருப்பி கொடுக்கவேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டது. இழப்பீட்டு தொகை பிரச்சனை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு 1997-ல் முடிவுக்கு வந்தது. வழக்கின் முடிவில், வீட்டுவசதி வாரியம், நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டு தொகையில் ஏற்பட்ட விலை உயர்வை வட்டியோடு நீதிமன்றத்தில் செலுத்தியது. ஆனால் இறுதி விலையை நிர்ணயம் செய்து ஆரம்ப விலை மற்றும் இறுதி விலையிலான வேறுபாட்டுத் தொகையை 15 விழுக்காடு வட்டியோடு செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் கூறியது. வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள், உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்த (ஒரு நீதிபதி அமர்வு) உயர் நீதிமன்றம், வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள், மேற்சொன்ன 15 விழுக்காடு விலை உயர்வை கொடுக்கவேண்டாம் என்று கூறியது. இந்த உத்தரவினை எதிர்த்து, வீட்டுவசதி வாரியம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு, இரு நீதிபதிகள் கொண்ட அமர்வினால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து, இந்த உரிமையியல் மேல்முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டன. மேல்முறையீட்டு மனுக்கள் பகுதியளவில் அனுமதிக்கப்பட்டன. மனுவை அனுமதித்த உச்ச நீதிமன்றம், வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள், வீட்டுவசதி வாரியத்திற்கு ஆரம்ப விலை மற்றும் இறுதி விலை ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டுத் தொகையை, விலை உயர்வை, 8 விழுக்காடு வட்டியுடன் திருப்பி கொடுக்கவேண்டும் என்றும் அதை வீட்டுவசதிக்கழகம் நீதிமன்றத்தில் செலுத்திய தேதியிலிருந்து ஒதுக்கீட்டுதாரர்கள் அளித்த தேதிவரை கொடுக்கவேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o); நில கையகப்படுத்துதல் சட்டம், 1894, பிரிவு 34.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Kerala State Housing Board v. Kerala State Housing Board, Nellikode Housing Colony Allottees Association,* Writ Appeal No.1760 of 2004 decided on 28.02.2006. (Ker)
2. *Chandigarh Housing Board v. K.K. Kalsi,* (2003) 12 SCC 734.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) நில கையகப்படுத்துதல் சட்டம், 1894, பிரிவு 34-ன்கீழ் கைப்பற்றிய நிலத்திற்கான இழப்பீட்டு தொகையை ஒரு வருடத்திற்குள் திருப்பி அளிக்காத பட்சத்தில், அவ்வாறு திருப்பி அளிக்காத தொகையை 15 விழுக்காடு வட்டியுடன் திருப்பி அளிக்கவேண்டும்

என்று கூறியிருப்பதை சுட்டிக்காட்டி, அதனால்தான், அம்மாதிரியான ஒரு நிபந்தனை, வீட்டுவசதி வாரியம் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையில் இடம்பெற்றது என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(ஆ) இந்த வழக்கில், மேலும், உச்ச நீதிமன்றம் கூறியது என்னவென்றால், நில உரிமையாளர்களுக்கு கொடுக்கவேண்டிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்று நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட (உயர்த்தப்பட்ட) இழப்பீட்டு தொகை, வாரியத்தால் 1997-ல் செலுத்தப்பட்டதால், வீட்டுவசதி வாரியம், பிரிவு 34-ல் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைப்படி, எந்த ஒரு வட்டியும் வசூலிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆண்டிற்கு 15 விழுக்காடு வட்டி என்று நிர்ணயிக்கப்பட்டதன் நோக்கம் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் அதிக இழப்பீட்டுத் தொகை கொடுக்க நேர்ந்தால் அதை ஈடுகட்டுவதற்காகவே என்றும், கூடுதலாக வீட்டுமனை ஒதுக்கீட்டாளர்களிடமிருந்து பெற்று இலாபம் அடைவதற்கு அல்ல என்றும் கருத்து தெரிவித்த உச்ச நீதிமன்றம், வீட்டுவசதி வாரியம் மேற்சொன்னவாறு, இழப்பீட்டு தொகையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு 15 விழுக்காடு வட்டி வசூலிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியதை, உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது.

(இ) மேலும், நீதிமன்றம் கூறியதாவது 1997-ல் இழப்பீட்டு தொகையில் ஏற்பட்ட மாற்றத்தை, வீட்டுவசதி வாரியம் கொடுத்தது. ஆனால், ஒதுக்கீட்டாளர்களுக்கு நோட்டீஸ் 1999-ல் தான் கொடுக்கப்பட்டது. இதனால், இந்த இடைப்பட்ட காலத்தில், இந்த தொகை வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் கையில் இருந்ததால், வீட்டுவசதி வாரியம் பயன்படுத்த முடியவில்லை என்பதை நீதிமன்றம் பதிவு செய்தது. ஆகையால், உச்ச நீதிமன்றம் *Chandigarh Housing Board v. K.K. Kalsi*-என்ற வழக்கை மேற்கோள்காட்டி, இழப்பீட்டு தொகையில் ஏற்பட்ட உயர்வை ஈடுசெய்ய வீட்டுவசதி வாரியத்திற்கு 8 விழுக்காடு வட்டியை ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் கொடுக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஈ) இறுதியாக, உச்ச நீதிமன்றம், கீழ் நீதிமன்றங்களின் ஆணைகளை ரத்து செய்ததோடு, பதில்மனுதாரர்கள், வீட்டுவசதி வாரியத்திற்கு 8 விழுக்காடு வட்டியுடன் திருப்பி கொடுக்கவேண்டும் என்றும் அத்தொகையை வாரியம், இழப்பீட்டு தொகை டெபாசிட் செய்த தேதியிலிருந்து அல்லது இழப்பீட்டு தொகை உயர்த்தப்பட்ட தேதியிலிருந்து ஒதுக்கீட்டுதாரர்கள் செலுத்தும் தேதிவரை 8 விழுக்காடு வட்டி வசூலிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது. மேற்சொன்ன உத்தரவுக்கு ஏற்றவாறு, மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 9 SCC 653.

***

## 2. K.A. நாகமணி *(எதிர்)* வீட்டுவசதி ஆணையாளர், கர்நாடக வீட்டுவசதி வாரியம் (K.A. Nagamani v. Housing Commissioner, Karnataka Housing Board)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

மறு சீராய்வு மனுவில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் 04.08.2011 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணை உடன் 14.10.2011 தேதியிட்ட செயல்படுத்து ஆணை ஆகியவற்றிற்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

K.A. நாகமணி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

வீட்டுவசதி ஆணையாளர், கர்நாடக வீட்டுவசதி வாரியம் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:6730-6731/2012.

தீர்ப்பு தேதி : 19.09.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

மனுதாரர் HIG-B அடுக்குமாடிக் கட்டிட வீட்டிற்கு (Flat), சுயநிதி வீட்டுவசதி திட்டத்தின் கீழ் பெங்களூரில் உள்ள வீட்டுவசதி வாரியத்திற்கு விண்ணப்பித்திருந்தார். பதில் மனுதாரரும், 25.03.1992-ல் அனுப்பிய கடிதத்தின் மூலம், கங்கேரி இடத்தில் ரூ.3,15,000/- விலைமதிப்பு கொண்ட, Flat No.116, டைப்-B, முதல்தளம், சுயநிதி வீட்டுவசதி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்தது. மனுதாரர், தான் வேலை பார்க்கும் நிறுவனமான இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.2,56,725/- கடன்பெற்று, இறுதியாக ரூ.2,67,750/-ஐ 12.05.1991 மற்றும் 04.12.1992 ஆகிய தேதிகளுக்கிடையே செலுத்தினார். மனுதாரரின் பிரச்சனை என்னவெனில், பணம் செலுத்தி, இரண்டரை வருடம் ஆகியும், ஃபிளாட்டை ஒப்படைக்கவில்லை என்பதாகும். இதற்கிடையில் 24.06.1995-ல் அனுப்பிய கடிதத்தில், மனுதாரருக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ஃபிளாட்டிற்கு பதிலாக, வேறொரு ஃபிளாட் எண்:64, HIG-B-5, பிளாக் நம்பர் 61-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், இந்த புதிய ஃபிளாட், பழைய ஃபிளாட்டைவிட விலை அதிகம் அதாவது ரூ.5,90,000/- என்றும் கூறியது. இதனையடுத்து, மனுதாரர், பதில்மனுதாரரிடம், ஃபிளாட் மாற்றத்தினால் ஏற்பட்ட விலை உயர்வை செலுத்த இயலாது என்றும், பழைய விலையிலே அந்த ஃபிளாட்டை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், ஏற்கனவே ஒதுக்கீடு செய்த ஃபிளாட்டின் பிரச்சனை தொடர்பாக வழக்கு நிலுவையில் இருப்பதால், அந்த ஃபிளாட்டை கட்ட இயலாது என்று பதில்மனுதாரர் கூறினார். அதனைத் தொடர்ந்து, மனுதாரர் தான் செலுத்திய தொகையை திருப்பித்தருமாறு வீட்டுவசதி வாரியத்திடம் கேட்டார். நீண்ட போராட்டத்திற்கு பிறகு, 14 வருடங்கள் கழித்து, ரூ.3,937/-ஐ கழித்துவிட்டு, மீதிதொகையை

பதில்மனுதாரர் திருப்பிகொடுத்தார். மனுதாரரின் வேண்டுகோளான ரூ.3,937/-யும், ரூ.2,67,750/-ன் மீதான 27 விழுக்காடு வட்டித்தொகையையும் திருப்பி கொடுக்காததால், மனுதாரர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், பெங்களூரில் புகார் செய்தார். மனுவை விசாரித்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், பெங்களூர், பதில்மனுதாரரை ரூ.3,937/-யும், ரூ.2,67,750/-ன் மீதான 12 விழுக்காடு வட்டித்தொகையையும் திருப்பித்தருமாறு கூறியது. இந்த உத்தரவை எதிர்த்து, மனுதாரர் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம், தனக்கு ஏற்பட்ட நஷ்டம், பாதிப்பு, மனவேதனை, அவஸ்தை மற்றும் நிரந்தரமாக வீடே வாங்க முடியாமல் போனதைக் கூறி, மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதுவும் ரூ.10,000/- அபராதத்துடன் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, அதனை எதிர்த்து, இந்த மேல்முறையீட்டு மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*Ghaziabad Development Authority v. Balbir Singh,*
II (2004) CPJ 12 (SC)=III (2004) SLT 161. (Relied) [Para 24]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் கூறியதுபோல் பதில்மனுதாரரின் சேவையில் குறைபாடு இருந்தது என்பதை மாநில மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் உறுதி செய்ததை கண்டறிந்தது. ஆனால், நுகர்வோர் நீதிமன்றம் 12 விழுக்காடு மட்டுமே வட்டித்தொகையாக வழங்கியிருக்கிறது என்றும், அதற்குமேல் இழப்பீட்டு தொகையாக எதுவும் வழங்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியது. மேலும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் தன்னுடைய அதிகார வரம்பை உபயோகிக்காமல் வழக்கை தள்ளுபடி செய்ததையும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையமும் மனுவை அனுமதிக்காமல் அபராதம் விதித்ததையும், உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(ஆ) உச்ச நீதிமன்றம், இதேபோன்று, பொருண்மை கொண்ட வழக்கான *Ghaziabad Development Authority v. Balbir Singh* (supra) வழக்கை மேற்கோள் காட்டியது. அந்த வழக்கில், எழுப்பப்பட்ட சட்டவினா என்னவெனில், நுகர்வோர் நீதிமன்றம் இழப்பீட்டு தொகை அல்லது வேறு ஏதேனும் தொகை செலுத்தகோரி விடப்படும் உத்தரவில் 18 விழுக்காடு வட்டிவிகிதம் விதிப்பது சரியா என்பதே ஆகும். அதற்கு பதிலளிக்கும் வகையில், அந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் ‘வழக்கின் பொருண்மையை

கருத்தில் எடுத்துக்கொள்ளாது அனைத்து வழக்கிலும் 18 விழுக்காடு வட்டி விதிப்பது சரியல்ல என்று கருத்து கூறியது. அதன்படி, பொதுவாக இழப்பீட்டு தொகை என்பது, வாதி அடைந்த நஷ்டத்திற்காகவோ அல்லது பாதிப்பிற்காகவோ வழங்குவது. அதனடிப்படையில், கொடுக்கப்படும் இழப்பீடானது, நஷ்டம் அல்லது பாதிப்பை பொறுத்தே அமையும். மேலும், அவ்வாறு கொடுக்கப்படும் இழப்பீட்டு தொகையானது, ஏற்பட்ட நஷ்டம் அல்லது பாதிப்பிற்கு சரிசமமாக அமையவேண்டும்'. மேற்கூறிய கோட்பாடுகளை வைத்து பார்க்கும்போது, இந்த வழக்கில், மனுதாரர் வீடு கிடைக்கும் என்ற நோக்கத்தில் டெபாசிட் செய்தார். ஆனால் வீடு ஒதுக்கீடு செய்யப்பட முடியாததால் பணம் மட்டும் திருப்பி அளிக்கப்பட்டது. வீடு ஒதுக்கப்பட்டிருந்தால் அதன் மதிப்பு கூடியிருக்கும். எனவே, இந்த வழக்கில் மனுதாரருக்கு அதிகப்படியான நஷ்டஈட்டு தொகை வழங்கியிருக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(இ) மேற்சொன்ன காரணங்களுக்காக, உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டு மனுக்களை அனுமதித்து, பதில்மனுதாரருக்கு கீழ்கண்ட உத்தரவுகளை பிறப்பித்தது:

(1) பதில்மனுதாரர், மனுதாரருக்கு ரூ.3,937/- மற்றும் ரூ.2,67,750/-ல் 18 விழுக்காடு வட்டியும் திருப்பி அளிக்கவேண்டும் என்று கூறியது; டெபாசிட் செய்த தேதியிலிருந்து திருப்பி அளித்த தேதிவரை வட்டி வழங்கவேண்டும் என்றும் கூறியது;

(2) சேவையின் மீதான குறைபாடு காரணமாக ரூ.50,000/- இழப்பீட்டு தொகையாக வழங்கவேண்டும் என்று கூறியது;

(3) மேலும், ரூ.20,000/- வழக்கிற்கான செலவாக வழங்கவேண்டும் என்று கூறியது.

(ஈ) மாநில மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் பிறப்பித்த உத்தரவுகள் ரத்து செய்யப்பட்டன. மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணைகள் மேற்சொன்ன ஆணைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

III (2016) CPJ 16 (SC).

***

## (s) ஓய்வூதியம் (PENSION)

### 1. வர்த்தக ஊழியர்கள் நலன்புரி சமூகத்தின் அனைத்து இந்திய ஓரியண்டல் வங்கி *(எதிர்)* J.S. ரேகி மற்றும் பலர்

**(All India Oriental Bank of Commerce Employees' Welfare Society v. J.S.Rekhi & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

வர்த்தக ஊழியர்கள் நலன்புரி சமூகத்தின்
அனைத்து இந்திய ஓரியண்டல் வங்கி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

J.S. ரேகி மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3821/2014 உடன் சிவில் மேல்முறையீட்டு எண்கள்:3822-3825/2014 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்:3826/2014.

தீர்ப்பு தேதி : 12.03.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர், All India Oriental Bank of Commerce Employees' Welfare Society ஒன்றை அதன் உறுப்பினர்களின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நலனுக்காகவும், அதன் உறுப்பினர்கள் இறக்கும் பட்சத்தில், அவரை சார்ந்திருப்பவர்களுக்கு சமூக பாதுகாப்பிற்காகவும் தோற்றுவித்தனர். இந்த சமூக கட்டமைப்பு, அதன் உறுப்பினர்கள் பணிபுரியும்போது இறக்கும் நபர்களின் உறவினர்களின் நலனுக்காக, ஓய்வூதிய திட்டம் ஒன்றை ஏற்படுத்தினர். இதற்காக, இதன் உறுப்பினர்கள் 25 வருடத்திற்கு மாதம் ரூ.30/– தரவேண்டும் என்றும் முடிவில் அவர்கள் ரூ.30,000/– அந்த சமூக கட்டமைப்பிலிருந்து (Society) பெறுவார்கள். இந்த வங்கியில் பணிபுரியும் சில தொழிலாளர்கள், அவர்களுடைய ஓய்வு பெறும் தேதி வருவதற்கு முன்பாகவே, தானாக முன்வந்து, ராஜினாமா (VRS) செய்தனர். அவ்வாறு ராஜினாமா செய்தவர்கள், அந்த சமூக கட்டமைப்பிடமிருந்து (Society) ரூ.30,000/– கேட்டனர். ஆனால், 25 வருடங்கள் அவர்கள் கட்டவேண்டிய மாத சந்தாவை கட்டவில்லை என்பதை ஒப்புக்கொண்டனர். இந்த சமூக கட்டமைப்பு அவர்களுக்கு பதிலளிக்கும் விதமாக, உறுப்பினர்கள் பணிமூப்பு காரணமாக ஓய்வு பெற்றதோடு, மாதாந்திர தொகையை செலுத்தியிருந்தால் மட்டுமே அவர்கள் ரூ.30,000/– பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று கூறியது. இதனை உறுதிசெய்யும் வகையில், 02.02.2001 அன்று வெளியிட்ட சுற்றறிக்கையும் அவர்கள் காண்பித்தனர். எனவே, இதனால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள், தானாக முன்வந்து ராஜினாமா (VRS) செய்வதற்கும், ஓய்வுபெறும் தேதியன்று ஓய்வு பெறுவதற்கும் வித்தியாசம் இல்லை என்று கூறி, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் தொடுத்தனர். மனுவை அனுமதித்து மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஒரு சில ஆணைகளை பிறப்பித்தது; அவை மாநில மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திலும் உறுதி செய்யப்பட்டது. அதனால் பாதிப்படைந்த மனுதாரர்கள், இந்த சிறப்பு மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் முதலாவதாக, உறுப்பினர்கள் கொடுக்கவேண்டிய சந்தா திட்டத்தில் உள்ள விதிமுறையை எடுத்துரைத்தது:

ஒவ்வொரு உறுப்பினரும், தொகை செலுத்தவேண்டிய மொத்த காலம்:

“இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உறுப்பினரும், 1st July 1982–லிருந்தோ அல்லது அவர் உறுப்பினரான தேதியிலிருந்தோ, எது பிறகு வருகிறதோ, அந்த தேதியிலிருந்து 25 வருடத்திற்கு அவர் இந்த திட்டத்திற்கு (விண்ணப்பிக்கவோ) சேரவோ வேண்டும். ஏதேனும் உறுப்பினர், 25 வருடம் முடிவதற்குமுன் ஓய்வுபெறும் பட்சத்தில், மொத்தமுள்ள 25 வருடத்தில் மீதமிருக்கும் ஆண்டிற்கான சந்தா தொகை, மாதா மாதம் உறுப்பினருக்கு (Society–ல்) வழங்கப்படும் பென்சன் தொகையில் இருந்து பிடிக்கப்படும்”.

(ஆ) இந்த வழக்கில் எழுப்பப்பட்டிருக்கும் சட்டவினாவை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தானாக வேலையை ராஜினாமா (VRS) செய்வதற்கும், ஓய்வுபெறும் தேதியன்று வேலையிலிருந்து விடைபெறுவதற்கும், வங்கி பணியாளர்களை பொறுத்தவரையில் எந்த ஒரு பெரிய வித்தியாசமும் இல்லை என்று நீதிமன்றம் கூறியது. ஆனால், இந்த திட்டத்தைப் பொறுத்தவரை அம்மாதிரியான விளக்கம் பொருத்தமானதாக இராது என்றும் நீதிமன்றம் கூறியது. இம்மாதிரியான திட்டத்தில், உறுப்பினர்கள் செலுத்தும் சந்தா தொகையை முதலீடு செய்து, அந்த முதலீட்டிலிருந்து ஓய்வு பெறும்போது உறுப்பினர்களுக்கு தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்படி, உறுப்பினர் ரூ.9,000/– சந்தாவாக செலுத்தியிருக்கலாம், ஆனால் அவர் பணிமூப்பு காரணமாக ஓய்வு பெறும்போது ரூ.30,000/– பெறுகிறார். இம்மாதிரியான நிகழ்வு எப்போது சாத்தியமெனில், முழு சந்தாத் தொகையையும் முறையாக முதலீடு செய்தால் மட்டுமே சாத்தியமாகும். வேறு மாதிரியான அணுகுமுறை, மொத்த திட்டத்தையும் கெடுத்துவிடும். இதையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இந்த திட்டத்தின்படி, பணியிலிருந்து ஓய்வுபெறுதல் என்பது, ஓய்விற்குரிய வயதை அடைந்து ஓய்வு பெறுதல் மட்டுமே ஆகும்.

(இ) மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில், உச்ச நீதிமன்றம், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் கொடுத்த உத்தரவு மற்றும் கீழ்நீதிமன்றங்கள் பிறப்பித்த உத்தரவுகளை ரத்து செய்தது. மேலும், உச்ச நீதிமன்றம் மனுதாரர், தானாக விருப்ப ஓய்வு (VRS) திட்டத்தின்கீழ் ஓய்வு பெறுபவர்கள் நலத்திட்டத்தின் பயன்களைப்பெற அந்த

திட்டத்தின்கீழ் சொல்லப்பட்டிருக்கும் மற்ற நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவேண்டும் என்று கூறியது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2014) CPJ 15 (SC).

***

## (t) தொலைபேசி கண்காணிப்பு (PHONE MONITORING)

### 1. அமர் சிங் *(எதிர்)* யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர்

**(Amar Singh v. Union of India & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

Nil.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அமர் சிங் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

ரிட் மனு (சிவில்) எண்:39/2006.

தீர்ப்பு தேதி : 11.05.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

மனுதாரர் அமர் சிங், இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 21-ன்கீழ் தன்னுடைய அடிப்படை உரிமையான, தனியுரிமையைப் பாதுகாக்க அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 32-ன்கீழ் இந்த நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார். இந்த மனு, தாக்கல் செய்ததற்கான காரணம் என்னவெனில், இந்திய அரசு மற்றும் டெல்லி அரசு (7-வது பதில் மனுதாரரான இந்திய தேசிய காங்கிரசின் வலியுறுத்தல் காரணமாக) மனுதாரரின் தொலைபேசி உரையாடலை தடங்கல்/ இடைமறிப்பு செய்திருக்கிறார்கள் மற்றும் அதை கவனித்து வந்தது மட்டுமில்லாது, அதை பதிவு செய்திருக்கிறார்கள் என்பதாகும். மனுதாரர், ரிலையன்ஸ் இன்போகாம் லிமிடெட் (8-ம் பதில்மனுதாரர்) கம்பெனியின் சேவையை பயன்படுத்தி வருகிறார். மேற்கூறிய புகாருக்கு வலுசேர்க்கும் வகையில், காவல்துறை இணை ஆணையாளர் 22.10.2005-ம் தேதியன்று கொடுத்ததாகச் சொல்லப்பட்ட கடிதத்தையும், 09.11.2005-ம் தேதியன்று, உள்துறை முதன்மை செயலாளர், டெல்லி அரசு கொடுத்த உத்தரவையும் சமர்பித்தார். மனுதாரர், மேலும் கூறியதாவது: “ரிலையன்ஸ் இன்போகாம் லிமிடெட் கம்பெனியை பயன்படுத்தும் பெரிய அரசியல்

தலைவர்கள் உட்பட பலருக்கும் இந்த தொந்தரவு இருந்திருக்கிறது". மேலும், இம்மாதிரியான செயல்கள், அவரது தனிமையை பெரிதும் பாதிக்கிறது என்றும், இவை அனைத்தும், அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தான் நடைபெறுகிறது என்றும் கூறினார். மனுவில், மனுதாரர், வேண்டியிருப்பது என்னவென்றால்; "இம்மாதிரியான செயல்கள் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று அறிவிக்கப்படவேண்டும்; மேலும் இது குறித்து ஒரு நீதிவிசாரணை அமைக்கப்பட்டு உரிய உத்தரவுகளும், இழப்பீட்டு தொகையும் வழங்கப்படவேண்டும்". அதனை தொடர்ந்து, உச்ச நீதிமன்றம், ஊடகங்கள் மற்றும் செய்திதாள்கள் நிறுவனங்களுக்கு மனுதாரரின் உரையாடலை வெளியிட வேண்டாம் என்று இடைக்கால உத்தரவு வழங்கியது. இந்த இடைக்கால உத்தரவு, மனுதாரர் தாக்கல் செய்த, இடைக்கால மனுவின் அடிப்படையில் வழங்கப்பட்டது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் வழக்கை தீரவிசாரித்த பிறகு, நீதிமன்றம் கூறியதாவது: "மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள், மனுதாரர் யாரை விசாரிக்கவேண்டும் என்று கூறினாரோ, அவர்களால் திரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இதில் மனுதாரர் யாரை விசாரிக்கவேண்டும் என்று கூறினாரோ, அவர்கள் மீதான விசாரணை, டெல்லி போலீசாரால் நடத்தப்பட்டு வருகிறது". மேலும், இந்த வழக்கில், மேற்கூறிய ஆவணங்கள் மோசடி செய்யப்பட்டது தொடர்பாக, மனுதாரரே, 7–ஆம் பதில்மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை திரும்பப் பெற்றிருக்கிறார். அதுபோக, டெல்லி போலீஸ் நடத்திய விசாரணை திருப்தியாக இருப்பதாகவும் கருத்து தெரிவித்திருக்கிறார். ஆகையால், இறுதியாக, உச்ச நீதிமன்றம், இந்த நீதிப்பேராணை, ஒரு நியாயமான வழக்கு இல்லை என்பதாலும், யூகங்கள் அடிப்படையில் இருப்பதாகவும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், மனுதாரர் விரும்பினால், 8–ஆம் பதில்மனுதாரருக்கு எதிராக, வேறு ஒரு முறையான நீதிமன்றத்தில் தனிவழக்கு தொடரலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்துகள் 21 மற்றும் 32; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g) மற்றும் (o).

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

1. *People's Union for Civil Liberties (PUCL) v. Union of India & Anr.,* (1997) I SCC 301. (Relied) [Para 1]
2. *Padmabati Dasi v. Rasik Lal Dhar,* (1910) Indian Law Reporter 37 Calcutta 259. (Relied) [Para 15]
3. *State of Bombay v. Purushottam Jog Naik,* AIR 1952 SC 317. (Relied) [Para 16]
4. *Hari Narain v. Badri Das,* AIR 1963 SC 1558. (Relied)
5. *Welcome Hotel & Ors. v. State A.P. & Ors.,* (1983) 4 SCC 575. (Relied)

6. *G.Narayanaswamy Reddy (Dead) by LRs & Anr. v. Govt. of Karnataka & Anr.* JT 1991 (3) SC 12 : (1991) 3 SCC 261. (Relied)
7. *S.P. Chengalvaraya Naidu (Dead) by LRs v. Jagannath (Dead) by LRs & Ors.,* JT 1993 (6) SC 331 : (1994) 1 SCC 1. (Relied)
8. *A.V.Papayya Sastry & Ors. v. Govt. of A.P. & Ors.,* JT 2007 (4) SC 186 : (2007) 4 SCC 221. (Relied)
9. *Prestige Lights Ltd. v. SBI.,* JT 2007 (10) SC 218 : (2007) 8 SCC 449. (Relied)
10. *Sunil Poddar & Ors. v. Union Bank of India.,* JT 2008 (1) SC 308 : (2008) 2 SCC 326. (Relied)
11. *K.D.Sharma v. SAIL & Ors.,* JT 2008 (8) SC 57 : (2008) 12 SCC 481. (Relied)
12. *G.Jayashree & Ors. v. Bhagwandas S.Patel & Ors.,* JT 2009 (2) SC 71 : (2009) 3 SCC 141. (Relied)
13. *Dalip Singh v. State of U.P. & Ors.,* JT 2009 (15) SC 201 : (2010) 2 SCC 114. (Relied)

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம், முதலாவதாக, மனுதாரர் தாக்கல் செய்த வாக்குமூலம், கவனத்துடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அதில் நிறைய தவறுகள் இருப்பதாகவும், அது சட்ட விதிகளுக்கு உட்பட்டு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் கூறியது. மேலும், அதனை தொடர்ந்து மனுதாரர் தாக்கல் செய்த, விவரமான நீண்ட வாக்குமூலத்தின் வழியாக தெரிவது என்னவென்றால், மனுதாரர் தாக்கல் செய்த இந்த நீதிப்பேராணை மனு, பிற்சேர்க்கை ஆவணம் A மற்றும் B-ன் 22.10.2005 மற்றும் 09.11.2005-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில் அமைகிறது. மேலும், இதில் மேற்கூறிய ஆவணங்கள் அனைத்தும் அனுராக் சிங் எனும் கைதியிடமிருந்து பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்சொன்ன கைதி, ஆவணங்கள் மோசடி சம்பந்தமாக, ஒரு குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது, மனுதாரரின் நீதிப்பேராணையில் உள்ள தகவல்களும் அதே அனுராக் சிங்கிடமிருந்தே பெறப்பட்டிருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஆ) மேலும், நீதிமன்றம், 09.11.2005-ம் தேதியன்று, கொடுக்கப்பட்ட தகவல் முற்றிலும் தவறானது என்றும், அத்தகைய சூழ்நிலையில், சேவை அளிப்பவர் (இன்போகாம் லிமிடெட்), கொடுக்கப்பட்ட தகவலை, அனுப்பியவரிடம் கேட்டு உறுதி செய்திருக்க

வேண்டும் என்றும் கூறியது. சேவை அளிப்பவர், மிகவும் பொறுப்புள்ள ஒரு நிறுவனமாக செயல்படவேண்டும் என்றும், எவரேனும் கொடுக்கும் தகவலை நம்பி செயல்படக் கூடாது என்றும் நீதிமன்றம் கூறியது. ஏதேனும் தகவல் கொடுக்கப்பட்டால், அதனுடைய உண்மைத்தன்மையையும், ஸ்சிரத்தன்மையும் பார்க்கவேண்டும். ஏனெனில், இன்போகாம் லிமிடெட் நிறுவனம், இம்மாதிரி ஒரு நபரின், அடிப்படை உரிமையான, தனிமை உரிமையை, தொடர்பை இடையூறு செய்வதன் மூலம் பறித்திருக்கிறார்கள். மேற்சொன்ன காரணங்களை வைத்து பார்க்கும்போது, சேவைதாரர் கவனமாகவும், பொறுப்புடனும் நடக்க தவறிவிட்டார் என்று நீதிமன்றம் கூறியது.

(இ) மனுதாரர், பிப்ரவரி 2011–ல் கூடுதல் வாக்குமூலம் தாக்கல் செய்ததன் மூலம் 7–ஆம் பதில்மனுதாரருக்கு எதிராக உள்ள அனைத்து வாதங்களையும், குற்றச்சாட்டுகளையும் வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். மேலும், மனுதாரர், அனுராக் சிங் மீதான மோசடி வழக்கில் டெல்லி போலீஸ் நடத்திய விசாரணையும் திருப்தியாக இருந்தது என்று கருத்து தெரிவித்திருக்கிறார். ஆகவே, இது சம்பந்தமாக, நீதிமன்றம் மனுதாரர் தாக்கல் செய்த கூடுதல் வாக்குமூலம், அவருடைய வழக்கின் அடிப்படை முகாந்திரத்தையே பாதித்திருக்கிறது என்று கூறியது.

(ஈ) மேலும், மனுதாரர், 30.12.2005–ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில், குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 161–ன்கீழ் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். ஆனால் அதை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தாததை உச்ச நீதிமன்றம் கண்டித்தது.

(உ) ஆகவே, நீதிமன்றம், இந்த நீதிப்பேராணையை நியாயமற்றது மற்றும் யூகங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று கூறி தள்ளுபடி செய்தது. தொலைபேசி உரையாடலை பதிவுசெய்தது சம்பந்தமாக உள்ள சட்ட வினாக்களைப்பற்றி விசாரிப்பதற்காக தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனு, அடிப்படை முகாந்திரமே இல்லாமல் இருக்கக்கூடாது என்று நீதிமன்றம் கூறியது. ஆனால், மனுதாரர் விரும்பினால், 8–ஆம் பதில்மனுதாரருக்கு எதிராக, வேறு ஒரு முறையான நீதிமன்றத்தில் முறையிடலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2013(4) CPR 381 (SC).

***

## (u) அஞ்சல் சேவைகள்

### 1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, தமிழ்நாடு (இணை ஆணையர் மூலமாக) *(எதிர்)* அஞ்சல் அலுவலகங்களின் தலைவர், அஞ்சல் அலுவலகத்துறை மற்றும் பலர்

**(Arulmighu Dhandayudhapaniswamy Thirukoil, Palani, Tamil Nadu through its Joint Commissioner v. Director General of Post Offices, Dept. of Posts & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முதல் மேல்முறையீட்டு எண்:411/1997-ல் 31.05.2006 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி, தமிழ்நாடு (இணை ஆணையர் மூலமாக) - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அஞ்சல் அலுவலகங்களின் தலைவர்,
அஞ்சல் அலுவலகத்துறை மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4995/2006.

தீர்ப்பு தேதி : 13.07.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

அஞ்சல் அலுவலக கால வைப்புநிதி திட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர், பழனி அஞ்சல் அலுவலரிடம் 05.05.1995 முதல் 16.08.1995 வரை பல்வேறு தினங்களில் 5 ஆண்டுகளுக்கான மொத்த சேமிப்புத்தொகையாக ரூ.1,40,64,300/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சத்து அறுபத்தி நாலாயிரத்து முன்னூறு) செலுத்தியிருந்தார். 01.12.1995 அன்று மூன்றாவது பதிலுரையாளரான பழனி அஞ்சல் அலுவலரிடமிருந்து மேல்முறையீட்டாளருக்கு கடிதம் ஒன்று வந்தது. அதில், மேற்சொன்ன திட்டத்தின்கீழ் நிறுவனங்கள் சேமிப்புத்தொகை வைப்பது 01.04.1995 முதல் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் ஆகவே அவ்வித கணக்குகள் வட்டியேதும் கொடுக்கப்படாமல் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திருக்கோயில் செலுத்திய தொகை வட்டியேதுமின்றி 03.01.1996 அன்றுதான் திருப்பித்தரப்பட்டது. மேல்முறையீட்டாளர், தொகை செலுத்திய தேதியிலிருந்து திருப்பி அளித்த நாட்கள் வரை ஆண்டுக்கு 12 விழுக்காடு வட்டி என்ற அடிப்படையில் ரூ.9,13,951/- ஏழு நாட்களுக்குள்

அஞ்சல்துறை செலுத்தவேண்டும் என்று சட்டரீதியாக நோட்டீஸ் அனுப்பியிருந்தார். பதிலுரையாளர்களிடமிருந்து பதிலேதும் வராததால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மேல்முறையீட்டாளர் புகார் செய்தார். புகார் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர், தேசிய ஆணையத்தில் செய்த மேல்முறையீடும் பத்தி 1-ல் குறிப்பிடப்பட்ட 31.05.2006 தேதியிட்ட ஆணையின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து சிறப்பு விடுப்பு மூலமாக தற்போதைய மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; அரசு சேமிப்புகள் வங்கிகள் சட்டம் (5/1873) பிரிவு 15; அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி பொதுவிதிகள், 1981, விதி 17.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) அரசு சேமிப்புகள் வங்கிகள் சட்டம், 1873, பிரிவு 15-ன்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி பொதுவிதிகள் 1981, மத்திய அரசினால் இயற்றப்பட்டன என்பதை நீதிமன்றம் குறித்துக்கொண்டது. மத்திய அரசு வெளியிட்ட அறிவிக்கைகள் எண்கள்:G & SR 118(E), 119(E), 120(E)-ன்படி எந்த நிறுவனமும் 01.04.1995-லிருந்து காலவைப்புத் தொகையை அஞ்சல் அலுவலகங்களில் வைப்பதும், அஞ்சல் அலுவலகங்கள் அவற்றை பெறுவதும் நிறுத்தப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர், 05.05.1995-லிருந்து 16.08.1995 வரை மிகப்பெரிய தொகையான ரூ.1,40,64,300/-ஐ அஞ்சல் அலுவலரிடம் அளித்திருந்தார். மூன்றாவது பதிலுரையாளரும் அதை பெற்றுக் கொண்டார். ஆயினும் அவருடைய செயல் அரசினுடைய அறிவிக்கைக்கு முரணாக இருந்தது என்பதை நீதிமன்றம் குறித்துக்கொண்டது. அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி பொதுவிதிகள் 1981, பின்வரும் கணக்கு வகைகளுக்கு பொருந்தும் (1) சேமிப்பு கணக்குகள் (2) ஒட்டுமொத்த காலவைப்பு கணக்குகள் (3) தொடர்வைப்பு கணக்குகள் (4) காலவைப்பு கணக்குகள். இவை 01.04.1982 முதல் அமலுக்கு வந்தன. மேற்கண்ட விதிகளில், விதி 17-ன்படி 'அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியில் விதிகளுக்கு முரணாக கணக்கேதும் துவக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட தலைமை சேமிப்பு வங்கி எந்த நேரத்திலும் அந்த கணக்கை மூடுவதற்கும், வைப்புத்தொகையை வட்டியின்றி சேமிப்பாளருக்கு திருப்பித்தரவும்' அதிகாரம் உண்டு. நடப்பு வழக்கில், வைப்புத் தொகைகள் மூடப்பட்டு சேமிப்பாளருக்கு வட்டியின்றி அவை திருப்பித்தரப்பட்டுள்ளன.

(ஆ)மேல்முறையீட்டாளர், பழனி அஞ்சல் அலுவலரது சேவை குறைபாட்டின் காரணமாக தமக்கு வட்டியளிக்கவேண்டும் என்று கூறியிருந்தாலும், அம்மாதிரி கணக்கை துவக்குவது விதிகளின்படி முறையற்றது என்பதால், விதி 17-ன்கீழ் அவரது கோரிக்கையை பதிலுரையாளர்கள் நிராகரித்தது நியாயமானதுதான் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மாநில மற்றும் தேசிய ஆணையங்கள், மூன்றாவது பதிலுரையாளர் அரசு அறிவிக்கைப்பற்றி அறிந்திருக்கவில்லை என்றும், அவரது அறியாமையே மேல்முறையீட்டாளர் பெருமளவு வட்டியை இழப்பதற்கு காரணம் என்று பதிவு செய்திருந்ததை உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது. மாநில, தேசிய ஆணையங்கள் ஆகியோரது தீர்ப்பை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம், வழக்கு விவரங்களின் அடிப்படையில், சட்டரீதியாகவோ அல்லது உடன்பாட்டின் அடிப்படையிலோ, பதிலுரையாளர்களது சேவையில் குறைபாடு இருந்ததாக சொல்ல முடியாது என்றும் ஆகவே நடப்பு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் முடிவெடுத்தது.

(இ) மேல்முறையீடு அவ்வாறே தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2011 SC 2604; III (2011) CPJ 25 (SC); 2011(3) CPR 362 (SC).

***

## 2. திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் *(எதிர்)* அஞ்சல் அலுவலகங்களின் முதுநிலை கண்காணிப்பாளர், மீரட்

**(M/s. Bhagwati Vanaspati Traders v. Senior Superintendent of Post Offices, Meerut)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:1456/2008-ல் 04.09.2008 அன்று வழங்கிய ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அஞ்சல் அலுவலகங்களின் முதுநிலை கண்காணிப்பாளர், மீரட் - பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4854/2009.

தீர்ப்பு தேதி : 10.10.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் என்பது திரு.பி.கே.கர்க் என்பவரை தனி உரிமையாளராக கொண்ட ஒரு நிறுவனம். 28.04.1995 அன்று திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் ரூ.5,000/- மதிப்புள்ள தேசிய சேமிப்பு சான்றிதழ் (NSC) ஒன்றை வாங்கினர். அது 28.04.2001 அன்று முதிர்ச்சியடைய இருந்தது. முதிர்வு தொகை ரூ.10,075/-. திரு.கர்க் பலமுறை அஞ்சல் அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோதிலும் அந்ததொகை அவருக்கு வழங்கப்படவில்லை. தேசிய சேமிப்பு சான்றிதழை ஒரு தனிநபர் பெயரில்தான் வாங்க முடியும் என்றும் நிறுவனத்தின் பெயரில் வாங்கினால் அது செல்லாது என்றும் அவருக்கு தெரிவிக்கப்பட்டது. அவர் பரேலியில் உள்ள அஞ்சல் அலுவலகத் தலைவர் அலுவலகத்திற்குச் சென்று விசாரித்தபோது அதுபற்றி அஞ்சலக தலைமை இயக்குநரிடம் விளக்கம் கேட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. பல நாட்கள் காத்திருந்தபின் அவர் மீரட் நகரிலுள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகார் செய்தார். புகார் ஏற்கப்பட்டு பதிலுரையாளர் முதிர்வு தொகையான ரூ.10,075/-ஐ முதிர்ச்சி பெற்ற தேதியிலிருந்து தொகையை வழங்கும் தேதிவரை ஆண்டுக்கு 12 விழுக்காடு வட்டியோடு மேல்முறையீட்டாளருக்கு அளிக்கவேண்டும் என்றும் மேலும், ரூ.5,000/- இழப்பீடாகவும் ரூ.2,000/- வழக்காடும் செலவாகவும் அளிக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பதிலுரையாளர் அந்த தீர்ப்பை எதிர்த்து மாநில நுகர்வோர் ஆணையத்தில் செய்த மேல்முறையீடு ஏற்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் மறு சீராய்வு மனு எண்:1456/2008-ஐ தாக்கல் செய்தார். பத்தி 1-ல் குறிப்பிட்ட 04.09.2008 தேதியிட்ட ஆணை மூலம் சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த முடிவை எதிர்த்து தற்போதைய மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீடு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி பொதுவிதிகள், 1981, விதி 17.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Post Master, Dargamitta HPO, Nellore v. Raja Prameelamma,* (1998) 9 SCC 706 - Referred. [Para 4]
2. *Arulmighu Dhandayudhapaniswamy Thirukoil, Palani, Tamil Nadu v. Director General of Post Offices,* (2011) 13 SCC 220 : 2011 (8-9) SBR 451:2011 (5) Supreme 214:2011(3) CCC 119 - Referred. [Para 4]
3. *Tata Iron and Steel Co. Ltd. v. Union of India & Ors.,* (2001) 2 SCC 41 - Referred. [Para 6]
4. *Moorgate Mercantile Co. Ltd. v. Twitchings,* (1977) AC 890 - Relied. [Para 7]

5. *Ashok Transport Agency v. Awadhesh Kumar & Anr.,* (1998) 5 SCC 567 – Referred. [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி பொதுவிதிகள் 1981, விதி 17 பின்வருமாறு கூறுகிறது:

"17. விதிகளுக்குப் புறம்பாக துவக்கப்பட்ட கணக்கு:–

விதி 16–ல் கூறப்பட்ட நடைமுறைக்கு உட்பட்டு, 'அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியில் விதிகளுக்கு முரணாக கணக்கேதும் துவக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட தலைமை சேமிப்பு வங்கி எந்த நேரத்திலும் அந்த கணக்கை மூடுவதற்கும், வைப்புத்தொகையை வட்டியின்றி சேமிப்பாளருக்கு திருப்பித்தரவும்' அதிகாரம் உண்டு."

அதுமட்டுமல்லாமல் உச்ச நீதிமன்றம் *Post Master, Dargamitta HPO, Nellore v. Raja Prameelamma* and *Arulmighu Dhandayudhapaniswamy Thirukoil, Palani, Tamil Nadu v. Director General of Post Offices* ஆகிய வழக்குகளில் அளித்த தீர்ப்பையும், பதிலுரையாளர் முன்மாதிரியாக காட்டியிருந்ததை உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது.

(ஆ) ஆனால் மேல்முறையீட்டாளர், உச்ச நீதிமன்றம் *Tata Iron and Steel Co. Ltd. v. Union of India & Ors.*என்ற வழக்கில் அளித்த தீர்ப்பை எடுத்துக்காட்டி தனி உரிமையாளரது பெயருக்கு பதிலாக தனி உரிமையாளரின் நிறுவனத்தின் பெயரை, நடப்பு வழக்கில் செய்ததைப்போல், உபயோகப்படுத்தலாம் என்று வாதாடினார். மேலும் நிறுவனத்தின் பெயரை பதிலுரையாளர் ஏற்கவில்லை என்றால் அவர் சான்றிதழில் திருவாளர்கள பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் என்ற பெயருக்கு பதிலாக பி.கே.கர்க் என்று மாற்றியிருக்கவேண்டும் என்றும் வாதாடினார்.

(இ) மேல்முறையீட்டாளரது வாதத்தில் நியாயம் இருப்பதாக உச்ச நீதிமன்றம் கருதியது. சேமிப்பு சான்றிதழை வாங்கும்போது திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் என்பதற்கு பதிலாக பி.கே.கர்க் என்ற பெயரை சுலபமாகமாற்றி தவறை திருத்தியிருக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. ஒரு தனி உரிமையாளரின் நிறுவனத்தில், நிறுவனத்தின் உரிமையாளர் பொதுவாக தனது பெயருக்கு பதிலாக ஒரு கற்பனை வர்த்தக பெயரை உபயோகப்படுத்துவார் என்றும் நடப்பு வழக்கில், அதிகாரிகள் ஏன் கடினமாக நடந்துகொண்டார்கள் என்று புரியவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. அஞ்சல் அதிகாரிகள், திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் பெயரில் 1995–ல் சான்றிதழ் வாங்க அனுமதித்தப்பிறகு 2001–ல் சான்றிதழ் முதிர்வடையும்போது ஏன் தவறு என்று சொல்கிறார்கள் என்று தெரியவில்லை என்றும் அது தவறாக இருந்தாலும் நிவர்த்தி செய்யக்கூடியது என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. சான்றிதழ் வழங்கும்போது தவறு செய்த அதிகாரிகள், அந்த தவறை சுட்டிக்காட்டி ஆதாயம் பெற முயல்வது சரியல்ல என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஈ) பதிலுரையாளர்கள் எடுத்துக்காட்டிய இரண்டு வழக்குகளிலும், தேசிய சேமிப்பு சான்றிதழில் திருத்தம் செய்யும் கோரிக்கை எழுப்பப்படவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(உ) அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 142-ன்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, மீரட், முதுநிலை அஞ்சல் அலுவலக கண்காணிப்பாளருக்கு திருவாளர்கள் பகவதி வனஸ்பதி டிரேடர்ஸ் என்ற பெயரை மாற்றி மேல்முறையீட்டாளரது பெயரான பி.கே.கர்க் என்ற பெயரில் சேமிப்பு சான்றிதழை திருத்தம் செய்யுமாறு ஆணை பிறப்பிப்பது நியாயமானதாகவும், பொருத்தமுடையதாகவும் இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. பதிலுரையாளர், மேல்முறையீட்டாளரான பி.கே.கர்க் என்ற நபருக்கு முதிர்வு தொகையான ரூ.10,075/-ஐ முதிர்வு அடைந்த தேதியிலிருந்து தொகையை திருப்பிச் செலுத்தும் தேதிவரை ஆண்டிற்கு 12 விழுக்காடு வட்டியோடு திருப்பித்தரவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அதுதவிர திரு.பி.கே.கர்க் என்ற நபருக்கு ரூ.5,000/- இழப்பீடு வங்கவும், வழக்காடும் செலவாக ரூ.10,000/- வழங்கவும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

(ஊ) மேற்சொன்னவாறு மேல்முறையீடு முடிவு செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2014(4) CPR 63 (SC); 2015(2) CPR 405 (SC).

***

## (v) விதைகள் வழங்கல்

### 1. தேசிய விதைகள் கழகம் *(எதிர்)* மதுசூதன் ரெட்டி மற்றும் ஒருவர்

### (M/s. National Seeds Corporation v. Madhusudhan Reddy & Anr.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

தேசிய விதைகள் கழகம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

மதுசூதன் ரெட்டி மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7543/2004 உடன் சிவில் மேல்முறையீட்டு எண்கள்:622 மற்றும் 623/2012, 7542/2004, 3498, 3499, 3596, 3598, 4509-4522, 4704, 4798, 4824, 4962, 4964, 4954, 4955, 4957, 4959, 4963 மற்றும் 4967/2009.

தீர்ப்பு தேதி : 16.01.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர்கள், ஆந்திரபிரதேச மாநிலத்தில், பல்வேறு மாவட்டங்களில், நில உரிமையாளர்களாக உள்ளனர். விவசாயம் மற்றும் விதை உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். பதிலுரையாளர்கள் விவசாயம் செய்வதற்காக சூரியகாந்தி, பாகற்காய், ஆமணக்கு, மிளகாய் ஆகிய வெவ்வேறு விதைகளை வாங்கினார்கள் என்பதைத்தவிர மற்ற விவரங்களைப் பொருத்தவரையில் அவர்களது வழக்கு ஒரே மாதிரியானது. மேல்முறையீட்டாளர் கழகம் விற்ற/வழங்கிய விதைகள் தரமற்றவையாக இருந்ததால் விவசாயத்தில் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதாக அவர்கள் புகார் செய்தனர். கர்நூல், மெஹபூப் நகர், குண்டூர், கம்மம் மற்றும் காக்கிநாடா மாவட்டங்களில் உள்ள மாவட்ட நுகர்வோர் மன்றங்கள் புகார்களை ஏற்று, பதிலுரையாளர்களுக்கு இழப்பீடு வழங்க ஆணையிட்டனர். பல வழக்குகளில் மாவட்ட மன்றங்கள், விதைகளின் தரம் குறித்து விசாரிக்க ஆணையர்களை நியமித்தும் அல்லது வேளாண்மைத்துறை அதிகாரிகளை விசாரித்தும் விவரங்களைப்பெற்று ஆணைகளை வெளியிட்டன. மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீடுகள், ஆந்திரபிரதேச மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆகியவற்றால் தள்ளுபடி செய்யப்பட்டன. தேசிய ஆணையத்தின் முடிவினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மேல்முறையீடுகளை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேல்முறையீடுகள் கட்டணத்தோடு தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1)(d), 3, 13(1)(c) மற்றும் 23; .விதைகள் சட்டம், 1966, பிரிவுகள் 6,7, 9, 10, 11, 14(1)(a) மற்றும் (b), 16, 19, 20 மற்றும் 21; மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம், 1996, பிரிவுகள் 8 மற்றும் 34.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Fair Air Engineers (P) Ltd. v. N.K. Modi,* (1996) 6 SCC 385. [Para 6.6]
2. *State of Karnataka v. Vishwabharathi House Building Coop. Society,* (2003) 2 SCC 412. [Para 6.6]
3. *CCI Chambers Housing Coop. Society Ltd. v. Development Credit Bank Ltd.,* (2003) 7 SCC 233. [Para 6.6]
4. *Indochem Electronic v. Additional Collector of Customs,* (2006) 3 SCC 721. [Para 6.6]
5. *Lucknow Development Authority v. M.K. Gupta,* (1994) 1 SCC 243. [Para 22]
6. *Skypay Couriers Limited v. Tata Chemicals Ltd.,* (2000) 5 SCC 294. [Para 22]

7. *Secretary, Thirumurugan Coop. Agricultural Credit Society v. M. Lalitha,* (2004) 1 SCC 305. [Para 22]

8. *H.N. Shankara Shastry v. Asst. Director of Agriculture, Karnataka,* (2004) 6 SCC 230. [Para 22]

9. *Kishore Lal v. Chairman Employees' State Insurance Corporation,* (2007) 4 SCC 579. [Para 24]

10. *Spring Meadows Hospital v. Harjol Ahluwalia,* (1998) 4 SCC 39. [Para 24]

11. *Maharashtra Hybrid Seeds Co. Ltd. v. Alavalapati Chandra Reddy,* (1998) 6 SCC 738. [Para 37]

12. *National Commission in N.S.C. Ltd. v. Guruswamy,* (2002) CPJ 13. [Para 38]

13. *E.I.D. Parry (I) Ltd. v. Gourishankar,* (2006) CPJ 178. [Para 38]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர், பின்வரும் காரணங்களுக்காக மேல்முறையீடுகளை தாக்கல் செய்திருந்தார் என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது: (1) விதைகளின் தரம் பற்றிய பிரச்சனைகள், விதைகள் சட்டம், 1966-ன்கீழ் எழுப்பப்படவேண்டும். தரமற்ற விதைகளின் விற்பனை அல்லது வழங்கல் பற்றிய புகார்கள் விதைகள் சட்டத்தின்கீழ்தான் தாக்கல் செய்யப்படவேண்டுமே அல்லாது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் அல்ல. ஆகவே, மாவட்ட நுகர்வோர் மன்றங்கள் இவற்றை விசாரிக்க முடியாது. (2) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 13(1)(c)-யில் விவரிக்கப்பட்ட நடைமுறையை பின்பற்றாமல், மாவட்ட மன்றங்கள், பதிலுரையாளர்கள் தெரிவித்த புகார்களை விசாரித்து இழப்பீடு வழங்கியிருக்க முடியாது. (3) மேல்முறையீட்டாளர் கழகத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த விதைகளை வளர்த்தவர்கள், அவற்றை வணிக நோக்கத்தோடு வாங்கியதால், அவர்கள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 2(1)(d)-யின்படி 'நுகர்வோர்' என்று கருதப்படமாட்டார்கள்.

(ஆ) 1986-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பின்னணி, அதன் முகவுரை, நுகர்வோர் என்ற சொல்லின் வரையறை, மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 13 ஆகியவற்றின் நோக்கம் மற்றும் 1966-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட விதைகள் சட்டத்தின் பல்வேறு கூறுகள் ஆகியவற்றை விவரமாக ஆய்வு செய்த உச்ச நீதிமன்றம் மேலே (அ)-வில் எழுப்பப்பட்ட மூன்று கருத்துக்களுக்கும் பின்வருமாறு விளக்கம் அளித்தது.

(i) விதைகள் சட்டம் விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் விற்கப்படுகின்ற விதைகளின் தரம், எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்யும் சட்டமாகவும்,

தரக்குறைவான விதைகளை விற்பவர்களை தண்டிக்க வழிசெய்யும் சட்டமாகவும் இருப்பினும், தரமற்ற விதைகளை மேல்முறையீட்டாளரிடமிருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு நபரிடமிருந்தோ வாங்குவதால் பயிர் இழப்பு அல்லது குறைந்த மகசூல் ஆகியவற்றை சந்திக்க நேர்கின்ற விவசாயிகள் மற்றும் விதை வளர்ப்பவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான எவ்வித ஷரத்தும் அதில் இல்லை. அதற்கான வழிமுறையும் தெரிவிக்கப்படவில்லை. தரமற்ற விதைகளை உபயோகிப்பதால் பயிரிழப்பு ஏற்படுகின்ற விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து விதைகள் சட்டம் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 2(1)(d)-யின் 'நுகர்வோர் என்கிற' பரந்த வரையறையின்கீழ் வருகின்ற விவசாயிகள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் அளிக்கப்பட்ட சலுகைகளை பெறமுடியாது என்று விதைகள் சட்டத்திலோ அல்லது அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளிலோ, எங்கும் கூறப்படவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(ii) மாவட்ட மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வேளாண் நிபுணர்களின் அறிக்கைகள் பயிரிழப்புக்கு காரணம் தரமற்ற விதைகள்தான் என்பதைத் தெளிவாக கூறியுள்ளன. அவற்றைப் படித்தபிறகுதான் மாவட்ட மன்றங்கள் விதைகள் தரமற்றவை என்பதை உறுதி செய்து கொண்டன. விதைகளை பரிசோதனை கூடங்களில் சோதிப்பதற்காக புகார்தாரர்களிடமிருந்து விதைகளை கோராததற்கு அதுவே முக்கியகாரணம். மாவட்ட மன்றம் மேற்கொண்ட நடைமுறை நுகர்வோர் சட்டம், பிரிவு 13(1)(c)-க்கு புறம்பானது என்று கூறமுடியாது என்றும் பிரிவு 13(1)(c)-யை காரணம்காட்டி மூன்று நுகர்வோர் மன்றங்களும் பிறப்பித்த நியாயமான ஆணைகளை ரத்து செய்யவேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரமுடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(iii) விவசாயிகளும், விதை உற்பத்தியாளர்களும் மேல்முறையீட்டாளருக்கு விலைகொடுத்து விதைகளை வாங்கியதால் அவர்கள் நிச்சயமாக நுகர்வோர் சட்டத்தின் பிரிவு 2(1)(d)(i)-ன் வரையறைக்குள் வருவார்கள் என்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குகின்ற மற்ற நுகர்வோர்களுக்கு அளிக்கும் நிவாரணங்களை அவர்களுக்கு மறுப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. நுகர்வோர் சட்டத்தின் வீச்சிலிருந்து விவசாயிகளை பிரிக்க முயல்வது பாகுபாடு செய்கின்ற முயற்சியாக கருதப்பட்டு அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்கிற குற்றச்சாட்டுக்கும் ஆளாகும் என்றும் நுகர்வோர் சட்டத்தின் கூறுகளை அம்மாதிரி விமர்சிப்பது சரியாக இருக்காது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(இ பதிலுரையாளர்கள், மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம், 1996-ன்கீழ் நிவாரணம் கேட்டிருக்கவேண்டும் என்ற வாதத்தைப் பொறுத்தவரை, உற்பத்தியாளர்களுக்கு மத்தியஸ்தம் என்கிற ஒரே நிவாரணம் இருப்பதாக கருதமுடியாது என உச்ச நீதிமன்றம் கூறியது. பல நிவாரணங்களில் அவர்களுக்கு அதுவும் ஒரு நிவாரணம். உற்பத்தியாளர்

மத்தியஸ்தம் கோரி மனுகொடுக்கலாம் அல்லது நுகர்வோர் சட்டத்தின்கீழ் புகார் செய்யலாம். அவர் மத்தியஸம் என்கிற நிவாரணத்தை விரும்புவாராயின், அவர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் நிவாரணம் கோரமுடியாது என்று கூறமுடியும். ஆனால், அவர் முதலில் நுகர்வோர் மன்றத்தில் புகார் செய்ய முனைந்தால் மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம், 1996-ன் பிரிவு 8-யை காரணம்காட்டி அவருக்கு நிவாரணத்தை மறுக்க முடியாது. மாவட்ட மன்றம், மாநில ஆணையம் மற்றும் தேசிய ஆணையம் ஆகியவை நீதியை நிலைநாட்டுகின்ற அமைப்புகள். மத்தியஸ்த சட்டம், பிரிவு 34-ன்படி இருதரப்பினரையும் சமசரத்திற்கு அனுப்பாமல், நுகர்வோர் சட்டப்படி ஒரு தீர்வுகாண முயற்சிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஈ) இந்த வழக்கில் தேசிய ஆணையம் தெரிவித்த கூற்று, சட்டநிலையை தெளிவாக எடுத்துரைத்தது என்று கூறிய உச்ச நீதிமன்றம், மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்து மேல்முறையீட்டாளரை ஒவ்வொரு பதிலுரையாளருக்கும் 60 நாட்களுக்குள் தலா ரூ.25,000/- வழங்கவேண்டும் என்று ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2012 SC 1160; I (2012) CPJ 1 (SC); 2013(3) CPR 589 (SC); 2013(4) CPR 345 (SC); 2014(3) CPR 574 (SC).

***

## (w) வாகன காப்பீடு

**1. நரேந்தர் சிங்** *(எதிர்)* **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் (Narinder Singh v. New India Assurance Co. Ltd. & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:4951/2012-ல் 12.04.2013-அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நரேந்தர் சிங் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8463/2014.

தீர்ப்பு தேதி : 04.09.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

மனுதாரராகிய புகார்தாரர், மகேந்திரா வண்டியை விலைக்கு வாங்கி அதை பதிலுரையாளர் 1-ஆம் நபரிடம் ரூ.4,30,037/-க்கு 12.12.2005 முதல் 11.12.2006 வரை காப்பீடு செய்திருந்தார். இந்த வாகனத்தை 11.12.2006 வரை ஒரு மாத காலத்திற்கு தற்காலிக பதிவு செய்திருந்தார். 02.02.2006-ல் இந்த வாகனம் விபத்துக்குள்ளாகி பாதிப்படைந்தது. புகார்தாரர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து பதிலுரையாளருக்கு தெரிவித்திருந்தார். பதிலுரையாளர் சேத மதிப்பீட்டாளரை அமர்த்தினார். அவர் பழுதுபார்க்க ரூ.2,60,845/- செலவாகும் என தம் அறிக்கையை சமர்ப்பித்தார். இருந்தபோதிலும் காப்பீட்டு நிறுவனம் விபத்து நடந்த சமயத்தில் இவ்வாகனத்தை ஓட்டிய ராஜீவ் ஹெட்டா (Rajiv Hetta) என்பவருக்கு தகுதியான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதனாலும் வாகனம் நிலையான பதிவு பெறாமல் இருந்ததாலும் தற்காலிக பதிவு முடிவடைந்ததாலும் புகார்தாரர் கோரிய இழப்பீட்டை நிராகரித்தது. புகார்தாரர் மவாட்ட நீதிமன்றத்தில் தன் புகாரை சமர்ப்பித்தார். மாவட்ட மன்றம் பதிலுரையாளரான காப்பீட்டு நிறுவனத்தை புகார்தாரருக்கு காப்பீடு செய்த தொகையில் 75% மற்றும் அதற்கு வட்டியாக 9% கொடுக்கும்படி உத்தரவிட்டது. பதிலுரையாளரான காப்பீட்டு நிறுவனமும் முறையீட்டாளரும் இந்த தீர்ப்புக்கு எதிராக மாநில ஆணையத்தில் முறையீடு செய்தனர். மாநில ஆணையம் இந்த காப்பீட்டு நிறுவனத்தின் முறையீட்டை ஏற்று முறையீட்டாளரது புகார் ஏற்புடையதல்ல என தள்ளுபடி செய்தது. புகார்தாரர் தேசிய ஆணையத்திடம் மறு சீராய்வு மனுவை சமர்ப்பித்ததில் அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தார், அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23; மோட்டார் வாகன சட்டம் 1988-ன் பிரிவுகள் 39, 43 மற்றும் 192.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Narinder Singh v. New India Assurance Co. Ltd.,*
   2013 SCC OnLine NCDRC 354. (Affirmed)
2. *Amalendu Sahoo v. Oriental Insurance Co. Ltd.,*
   (2010) 4 SCC 536 : (2010) 2 SCC (Civ) 224. (Referred to)

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர் வாகன ஓட்டுநர் தகுதியற்ற ஓட்டுநர் உரிமத்தை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 3-க்கு புறம்பாக வைத்திருந்தால் இழப்பீட்டு மதிப்பை குறைத்து (non-standard) காப்பீட்டு நிறுவனம் வழங்கலாம் என்றும் மற்றும் வாகன சட்டம் பிரிவு 39-ன் கீழ் அதுபோலவே தகுதியற்ற பதிவுச் சான்றிதழ் வைத்திருந்தாலும் அதே நடைமுறையைப் பின்பற்றலாம் என்றும் வாதிட்டார். *அமலேந்து சாகு v. ஓரியண்டல்*

*இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்* வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது என்னவென்றால், பாலிசி ஆவணங்களிலோ, பாலிசி பத்திரத்திலோ ஏதாவது முரண்பாடுகள் இருந்தால் காப்பீட்டு நிறுவனம் முழுமையாக இழப்பீட்டை மறுக்கக்கூடாது என்பதாகும். மேலும் வாகனத்தை பதிவு செய்தது அரசு ஆவணங்களில் அது குறித்த விவரங்களை குறித்துக் கொள்வதற்கே. இந்த வழக்கில் தற்காலிக பதிவு எண் காலாவதி ஆகியிருந்தும் வாகனத்தில் ஒட்டப்பட்டிருப்பதால், அப்பதிவு வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை சட்டப்படி உறுதி செய்யும் எனவும் வாதிட்டார்.

(ஆ) பதிலுரையாளர் மறுமொழியாக வாதிட்டதில் வாகனம் பதிவு பெறாமல் பயன்படுத்தியது மோட்டார் வாகன சட்டம் பிரிவு 192-ன்படி முரண்பாடானதாகும். மேலும் ராஜீவ் ஹெட்டா (Rajiv Hetta) அவர்களின் ஓட்டுநர் உரிமத்தில் எந்தவித ஒப்புதலும் பதியவில்லை மற்றும் இந்த உரிமம் 20.04.2002-வரை மட்டுமே செல்லுபடி ஆகும் நிலையில் உள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது பாலிசியின் சட்ட விதிகள் மீறப்பட்டிருக்கிறது என்றும் வாதிட்டார்.

(இ) நீதிமன்றம் மோட்டார் வாகன சட்டம் பிரிவுகள் 39 மற்றும் 43 இவைகளின் கூறுகளை பரிசோதித்ததில் பிரிவு 39-ன்படி பொது இடங்களில் யாரும் தகுந்த பதிவு பெறாமல் வாகனங்களை ஓட்டக்கூடாது என்றும், ஆனால் பிரிவு 43-ன்படி உரிமையாளர் தற்காலிக பதிவு செய்து ஒரு மாதத்திற்கு வண்டியை ஓட்டலாம் எனவும் கூறப்பட்டிருப்பதை குறித்துக்கொண்டது. இந்த வழக்கில் வாகனத்தின் தற்காலிக பதிவு 11.01.2006-ல் முடிவடைந்தது. விபத்து நடந்த 02.02.2006-ல் சரியான பதிவு இல்லாமல் வாகனம் ஓட்டப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் 11.01.2006-க்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ தற்காலிக பதிவு காலாவதியானபின் உரிமையாளர் நிலையான பதிவைப் பெற சட்டத்தின் 39 பிரிவின் கீழ் தற்காலிக பதிவை நீட்டிக்கவோ அல்லது நிலையான பதிவு பெறவோ மனு செய்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. பொது இடங்களில் வாகனத்தை பதிவு செய்யாமல் ஓட்டுவது மோட்டார் வாகன சட்டம் பிரிவு 192-ன்படி தண்டனைக்குரிய குற்றமாகும். மேலும் பாலிசி அடிப்படை விதிமுறைகளை மீறியதாகும் என நீதிமன்றம் கருதியது.

(ஈ) ஆகவே உச்ச நீதிமன்றம், தேசிய மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் உத்தரவுகளில் எவ்வித தவறும் இல்லாததால் அவற்றை உறுதி செய்தது. ஏற்பதற்கு நியாயமான காரணங்கள் இல்லாததால் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2014) 9 SCC 324; IV (2014) CPJ 11 (SC); 2014(3) CPR 609 (SC).

***

## 2. லக்மி சந்த் *(எதிர்)* ரிலையன்ஸ் பொதுகாப்பீட்டு நிறுவனம்

## (Lakhmi Chand v. Reliance General Insurance)

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:2032/2012-ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் 26.04.2013-ம் தேதியிட்ட ஆணை இதில் மறு ஆய்வு மனு (Review Petition) எண்:253/2013-னின் மீது 23.07.2013 அன்று வழங்கப்பட்ட ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

லக்மி சந்த் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ரிலையன்ஸ் பொதுகாப்பீட்டு நிறுவனம் - பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:49-50/2016.

தீர்ப்பு தேதி : 07.01.2016.

### 4. வழக்கின் சுருக்கம் :

மேல்முறையீட்டாளர் HR 67-7492 பதிவு எண் உள்ள டாடா மோட்டார்ஸ் பொருட்களை சுமந்து செல்லும் வாகனத்தின் உரிமையாளராவார். பதிலுரையாளரிடம் இந்த வாகனத்திற்கு ரூ.2,21,153/-க்கு 31.07.2009 முதல் 30.07.2010 வரை காப்பீடு செய்திருந்தார். 11.02.2010 அன்று UP-75 J 9860 என்ற எண்ணுடைய வாகனம் மிக அலட்சியமாக ஓட்டப்பட்டு வந்ததால் மேல்முறையீட்டாளர் வாகனம் விபத்துக்குள்ளானது. மேல்முறையீட்டாளர் தமது முதல் தகவல் அறிக்கையை அந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் தாக்கல் செய்தார். மேலும் இந்த வாகனத்தை பழுதுபார்க்க ரூ.1,64,033/- செலவழித்த மேல்முறையீட்டாளர் அதுபற்றிய விவரத்தை பதிலுரையாளரின் நிறுவனத்திற்கு தெரிவித்தார் அவர்கள் சேத மதிப்பீட்டாளரை அமர்த்தினர். ஆனால் சேத மதிப்பீட்டாளர் தனது அறிக்கையில் ரூ.90,000/-க்கு சேதம் என மதிப்பிட்டிருந்தார். இது மேல்முறையீட்டாளர் பழுதுபார்க்க கோரிய ரூ.1,64,033/-த்தைவிட குறைவான தொகையாகும். மேலும் பதிலுரையாளர் நிறுவனம் ஒரு விசாரணை அலுவலரையும் அனுப்பியது. அவர் தம் அறிக்கையில் இந்த வாகனத்தில் இருவர் மட்டும் உட்காரலாம் என்றும் ஆனால் இந்த சரக்கை ஏற்றிச் செல்லும் வாகனத்தில் ஐந்து பேர் பயணித்தார்கள் என்றும் தம் அறிக்கையில் கூறியிருந்தார். இந்த காரணத்தை சுட்டிக்காட்டி, காப்பீட்டு நிறுவனம் பாலிசி விதிகளை வாகனத்தின் உரிமையாளர் கடைபிடிக்கவில்லை என்று கூறி, இழப்பீட்டு தொகையினை வழங்க மறுத்தது. மேல்முறையீட்டாளர் மாவட்ட மன்றத்தில் புகார் செய்தார்.

தேசிய நுகர்வோர் நீதிமன்றத்தின் வழக்கான, *நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் v. பிரவின்பாய் D.பிரஜபதி* வழக்கை எடுத்துக்காட்டி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், மதிப்பு குறைப்பு கோட்பாடு (non-standard basis) படி, மேல்முறையீட்டாளர் வாகனத்தை பழுதுபார்க்க செலவிட்ட தொகையில் 75% அளிக்கவேண்டும் என்றும் பதிலுரையாளரின் நிறுவனடம் இழப்பீடு கோரிய தேதியிலிருந்து வருடத்திற்கு 9% வட்டியையும் வழங்கிட உத்தரவிட்டது. மேலும், மன உளைச்சலுக்காகவும், வழக்கின் செலவுகளுக்காகவும் ரூ.2,000/– அளிக்கவும் ஆணையிட்டது. பதிலுரையாளர் மாநில ஆணையத்திடம் மேல்முறையீடு செய்தார். மாநில ஆணையம் முறையீட்டை ஏற்று புகார் மனுவை தள்ளுபடி செய்து மாவட்ட நீதிமன்றத்தின் ஆணையையும் தள்ளுபடி செய்தது. முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அவர் தாக்கல் செய்த மறு ஆய்வு (Review) மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *National Insurance Co. Ltd. v. Pravinbhai D. Prajapati,* IV (2010) CPJ 315 (NC). (Relied) [Para 8]
2. *Suraj Mal Ram Niwas Oil Mills (P) Ltd. v. United India Insurance Co. Ltd. & Anr.,* VIII (2010) SLT 375=IV (2010) ACC 653 (SC)=IV (2010) CPJ 38 (SC). (Relied) [Para 9]
3. *B.V. Nagaraju v. Oriental Insurance Co. Ltd. Divisional Officer, Hassan,* I (1997) ACC 123 (SC)=II (1996) CPJ 28 (SC). (Relied) [Para 15]
4. *National Insurance Company Ltd. v. Swaran Singh & Ors.,* 109 (2004) DLT 304 (SC)=I (2004) ACC 1 (SC)=I (2004) SLT 345. (Relied) [Para 16]
5. *Oriental Insurance Company Ltd. v. Meena Variyal,* IV (2007) ACC 335 (SC)=IX (2007) SLT 251. (Relied) [Para 17]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் கூறியது என்னவென்றால், தேசிய ஆணையம், உச்ச நீதிமன்ற தீர்ப்பான *B.V.நாகராஜு v. ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்* வழக்கை கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. மேற்சொன்ன வழக்கில் உச்ச நீதிமன்றம்

கூறியதாவது, "அனுமதிக்கப்பட்ட உட்காரும் நபர்களுக்கு மேலாக சரக்கு ஏற்றிச்செல்லும் வாகனத்தில் ஏற்றிச் செல்லும்போது அது காப்பீட்டு வரைமுறைக்குள் வராது என்று கூறுவது காப்பீட்டு நிறுவனம் தன் பொறுப்பை விலக்கிக்கொள்ளும் அளவிற்கு ஒரு பிரதானமான காரணம் இல்லை. மேலும், அதன் மூலம் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்தை கொடுக்க மறுப்பதும் நியாயமற்றது".

(ஆ) மேலும், உச்ச நீதிமன்றம், *நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் v. சுவரண்சிங் மற்றும் பலர்* என்ற வழக்கை மேற்கோள்காட்டியது. இந்த வழக்கில் நீதிமன்றம் கூறியதாவது, ஒருவர் மற்றொருவரின் மீது விதிமீறல் குற்றச்சாட்டை முன்வைக்கும்போது அதை நிரூபிக்கும் சுமை குற்றம் சாட்டுபவரின் மீது உள்ளது. அதன்படி எடுத்துக்கொண்ட வழக்கில், பாலிசிதாரர் பாலிசி விதிகளை கடைபிடிக்கவில்லை என்பதனை நிரூபிக்காவிட்டால் அவர்கள் பொறுப்பிலிருந்து விலக்கி கொள்ளமுடியாது. இந்த தீர்ப்புக்கு பிறகு இதே கருத்து *ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் v. மீனாள் வாரியல்* வழக்கிலும் பின்பற்றப்பட்டது.

(இ) மேலும், உச்ச நீதிமன்றம் கூறியது என்னவென்றால், இந்த வழக்கில் பதிலுரையாளர் நிறுவனம் அதிகபடியான பயணிகளை சரக்கு ஏற்றும் வாகனத்தில் ஏற்றிச்சென்றதால் விபத்து ஏற்பட்டது என்பதற்கு எந்த ஆதாரங்களையும் கொடுக்கவில்லை. *B.V.நாகராஜு* வழக்கில் கண்டதைபோல் பாலிசி விதிகளை கடைபிடிக்க தவறுவது அடிப்படையாக ஒப்பந்தத்தை மீறும் அளவிற்கு பிரதானமாக இருக்கவேண்டும். இந்த வழக்கில் அலட்சியமாக வாகனத்தை ஓட்டி அதனால் ஏற்பட்ட விளைவுகளுக்காக, இந்திய குற்றவியல் நீதிமன்றத்தில் ஓட்டுநருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதை மாநில ஆணையமும், தேசிய ஆணையமும் கருத்தில் கொள்ளவில்லை.

(ஈ) உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையத்தின் மறு சீராய்வு மனு எண்:2032/2012-ன் ஆணைகளில் தவறுகளை சுட்டிக்காட்டி மாவட்ட மன்றத்தின் ஆணையை உறுதிசெய்தது. மேலும், மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டு, பதிலுரையாளரான இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் மேல்முறையீட்டாளருக்கு ரூ.25,000/- வழக்கிற்கான செலவுக்காக வழங்கும்படி ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 315; II (2016) CPJ 3 (SC);
2016 (2) CPR 411 (SC); 2017(1) CPR 57 (SC).

***

## 7. சட்டம் மற்றும் அதிகார நடைமுறைகளை பகுத்துக்கொடுத்தல்

### 1. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் *(எதிர்)* இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனம் மற்றும் பலர்

**(Petroleum and Natural Gas Regulatory Board v. Indraprastha Gas Limited & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

டெல்லி உயர் நீதிமன்ற புகார் W.P.(C).No.2034/2012-ல் 01.06.2012-அன்று வழங்கப்பட்ட ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனம் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4910/2015 (சிறப்பு விடுப்பு மனு (சி) எண்:22273/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 01.07.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையச் சட்டம், 2006, பிரிவு 22-ன்படி டெல்லி மாநிலத்தில் 01.04.2008 முதல் இயற்கை எரிவாயுக்கான அதிகபட்ச விலை ரூ.38.58/MMBtu மற்றும் CNG எரிவாயு சுருக்கக் கட்டணம் ஒரு கிலோவிற்கு ரூ.2.75 என்றும் நிர்ணயம் செய்து 09.04.2012 அன்று ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை எதிர்த்து, இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை மனுவை பதில்மனுதாரர் தாக்கல் செய்தார். மேற்சொன்ன ஆணையின்படி, டெல்லியில் உள்ள அனைத்து கேஸ் கம்பெனிகளும், எந்த ஒரு உயர்வும், கழிவும் இல்லாமல், இயற்கை எரிவாயுக்கு விலை விதித்தது. மேற்சொன்ன ஆணையின்படி, கேஸ் கம்பெனிகள், நிலுவையில் உள்ள தொகையை வசூலிக்கவும், புதிய உத்தரவிற்கேற்ப, நடப்பில் உள்ள CNG விலையை குறைப்பதற்கும் பணிக்கப்பட்டது. இந்த வழக்கில், நீதிப்பேராணை மனுதாரர்/பதிலுரையாளர்-1 ன் முதன்மையான வாதம் என்னவென்றால், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை

ஆணையத்திற்கு, மேற்படி சொன்ன உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு அதிகாரம் இல்லை என்பதுதான். மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு இயற்கை எரிவாயு சம்பந்தமாக விலையை நிர்ணயம் செய்வதற்கோ, நெறிமுறைப்படுத்துவதற்கோ எந்த அதிகாரமும் இல்லை என்று கூறியது. மேலும், நீதிப்பேராணை மனுதாரர்/பதிலுரையாளர்-1 போன்ற கேஸ் கம்பெனி நிறுவனங்கள் நுகர்வோருக்கு இயற்கை எரிவாயுவை என்ன விலைக்கு விற்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பதற்கும் அதிகாரம் இல்லை. எனவே, உயர் நீதிமன்றம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம் 09.04.2012-ல் இயற்கை எரிவாயு சம்பந்தமாக அதிகபட்ச விலை நிர்ணயித்தல் மற்றும் நுகர்வோருக்கு இயற்கை எரிவாயுவை என்ன விலைக்கு பட்டியலிட்டு விற்கவேண்டும் என்பது சம்பந்தமாக பிறப்பித்த ஆணை செல்லாது என்று தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றத்தின் ஆணைக்கு எதிராக, இந்த மேல்முறையீட்டு மனு, உச்ச நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரிய சட்டம் 2006-ன் பிரிவுகள் 2(j), (i) மற்றும் (m), பிரிவுகள் 11(e)(ii) மற்றும் பிரிவு 22; பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் நகரத்திற்கோ அல்லது உள்ளூர் இயற்கை வாயு விநியோக சேவைகள் மற்றும் சுருக்க கட்டணம் நிர்ணயித்தல் மற்றும் இயற்கை வாயு கட்டுப்படுத்தும் சட்டம் 2008-ன் விதிமுறைகள் 3 மற்றும் 4.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Sarah Mathew v. Institute of Cardio Vascular Diseases,*
   (2014) 2 SCC 62 : (2014) 1 SCC (Cri) 721.
2. *Bharat Aluminium Co. v. Kaiser Aluminium Technical Services Inc.,*
   (2012) 9 SCC 552 : (2012) 4 SCC (Civ) 810.
3. *Union of India v. S.Srinivasan,*
   (2012) 7 SCC 683 : (2012) 2 SCC (L&S) 433.
4. *Indraprastha Gas Ltd. v. Petroleum and Natural Gas Regulatory Board,*
   2012 SCC OnLine Del 3215.
5. *Academy of Nutrition Improvement v. Union of India,*
   (2011) 8 SCC 274.
6. *Tata Power Co. Ltd. v. Reliance Energy Ltd.,*
   (2009) 16 SCC 659.
7. *State of T.N. v. P.Krishnamurthy,*
   (2006) 4 SCC 517.

8. *Ashok Leyland Ltd. v. State of T.N.*
(2004) 3 SCC 1.

9. *Shiv Shakti Coop. Housing Society v. Swaraj Developers,*
(2003) 6 SCC 659.

10. *St. Johns Teachers Training Institute v. NCTE,*
(2003) 3 SCC 321 : 5 SCEC 391.

11. *Kunj Behari Lal Butail v. State of H.P.,*
(2000) 3 SCC 40.

12. *Surjit Singh Kalra v. Union of India,*
(1991) 2 SCC 87.

13. *Hameedia Hardware Stores v. B.Mohan Lal Sowcar,*
(1988) 2 SCC 513.

14. *General Officer Commanding-in-Chief v. Subhash Chandra Yadav,*
(1988) 2 SCC 351 : 1988 SCC (L&S) 542 : (1988) 7 ATC 296.

15. *State of Karnataka v. H.Ganesh Kamath,*
(1983) 2 SCC 402 : 1983 SCC (Cri) 514.

16. *S.P. Gupta v. Union of India,*
1981 Supp SCC 87.

17. *CIT v. National Taj Traders,*
(1980) 1 SCC 370 : 1980 SCC (Tax) 124.

18. *Duport Steels Ltd. v. Sirs,*
(1980) 1 WLR 142 : (1980) 1 All ER 529 (HL).

19. *Board of Muslim Wakfs v. Radha Kishan,*
(1979) 2 SCC 468.

20. *CWT v. Trustees of H.E.H. Nizam's Family,*
(1977) 3 SCC 362 : 1977 SCC (Tax) 457.

21. *CST v. Parson Tools and Plants,*
(1975) 4 SCC 22 : 1975 SCC (Tax) 185.

22. *Sukhdev Singh v. Bhagatram Sardar Singh Radhuvanshi,*
(1975) 1 SCC 421 : 1975 SCC (L&S) 101.

23. *B.S. Vadera v. Union of India,*
AIR 1969 SC 118.

24. *Artemiou v. Procopiou,*
(1966) 1 QB 878 : (1965) 3 WLR 1011 : (1965) 3 All ER 539 (CA).

25. *Utah Construction and Engg. (P) Ltd. v. Pataky,*
1966 AC 629 : (1966) 2 WLR 197 : (1965) 3 All ER 650 (PC).

26. *South India Corporation (P) Ltd. v. Board of Revenue,*
AIR 1964 SC 207.

27. *Indramani Pyarelal Gupta v. W.R. Natu,*
AIR 1963 SC 274.

28. *Prem Nath L. Ganesh Dass v. Prem Nath L. Ram Nath,*
AIR 1963 Punj 62 : 64 Punj LR 975.

29. *Luke v. IRC,*
1963 AC 557 : (1963) 2 WLR 559 : (1963) 1 All ER 655 (HL).

30. *K.R.C.S Balakrishna Chetty & Sons and Co. v. State of Madras,*
AIR 1961 SC 1152.

31. *Siraj-ul-Huq Khan v. Sunni Central Board of Waqf,*
AIR 1959 SC 198 : 1959 SCR 1287.

32. *Shanahan v. Scott,* (1957) 96 CLR 245.

33. *Nalinakhya Bysack v. Shyam Sunder Haldar,*
AIR 1953 SC 148.

34. *Hansraj Gupta v. Official Liquidators,*
(1932-33) 60 IA 13 : (1933) 37 LW 445 : AIR 1933 PC 63.

35. *Canada Sugar Refining Co. Ltd. v. R.,*
1898 AC 735 (PC).

36. *Commissioners for Special Purposes of Income Tax v. Pemsel,*
1891 AC 531 (HL).

37. *Crawford v. Spooner,*
(1846-49) 6 Moo PC 1 : 13 ER 582 : 4 Moo IA 179 : 18 ER 667.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

உச்ச நீதிமன்றம், இவ்வழக்கில் கீழ்க்கண்ட முடிவுகளை எட்டியது:

(அ) பிரிவு 11–ன்படி பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு, இயற்கை எரிவாயு சம்பந்தமாக, உள்ளூர் கேஸ் நிறுவனங்களுக்கு, விலை நிர்ணயம் சம்பந்தமாகவோ அல்லது வசூலிப்பது சம்பந்தமாகவோ, உத்தரவு பிறப்பிக்க எந்த அதிகாரமும் இல்லை. இதுவே சட்டம் இயற்றுபவர்களின் எண்ணமாகும்.

(ஆ) பிரிவு 61, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை சட்டத்தின்படி, மேற்சொன்ன சட்டத்தின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக, சில விதிமுறைகளை ஆணையம் இயற்ற முடியும். பிரிவு 61-ஐ எதற்காக திட்டம் வகுக்கப்பட்டதோ அந்த அடிப்படையில் கவனிக்க வேண்டும். சட்டத்தின் நோக்கம் மற்றும் கோட்பாடுகளுக்கு உடன்படும் வகையில் விதிகள் இருக்க வேண்டும். மேலும், பிரிவு 22-ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் பதமான “உட்பட்டு” (subject to) இதை மீண்டும் உறுதி செய்கிறது.

(இ) ஆகையால், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம் பிறப்பித்த விதிமுறைகள் அந்த சட்டத்திற்கு வரம்பு மீறியது என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஈ) எனவே மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2015) 9 SCC 209.

***

# 8. ஒருதலையான ஆணை (EX-PARTE ORDER)

## 1. கான்பூர் வளர்ச்சிக் குழுமம் *(எதிர்)* ஷியோ பிரகாஷ் குப்தா மற்றும் ஒருவர் (Kanpur Development Authority v. Sheo Prakash Gupta & Anr.)

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய முதல் முறையீட்டு எண்:42/2012-ல் 29.05.2012-அன்று கொடுக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

கான்பூர் வளர்ச்சிக் குழுமம் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஷியோ பிரகாஷ் குப்தா மற்றும் ஒருவர் - பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:6017/2012 (சிறப்பு விடுப்பு (சி) எண்:23892/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது)

தீர்ப்பு தேதி : 24.08.2012.

### 4. வழக்கின் சுருக்கம் :

பதிலுரையாளர்கள் 2005-ம் ஆண்டு மேல்முறையீட்டாளர்கள் விற்பனைக்காக பல நிலங்களை ஏலத்தில் விட்டபோது பங்கேற்றனர். பதிலுரையாளர் ப்ளாட் எண்:6, பிளாக்-M, 1364.15 ச.மீ. அளவுகொண்ட நிலத்தை வாங்க விரும்பினார்கள். இந்த நிலத்தை ரூ.8,000/-க்கு ஒரு சதுர மீட்டர் என இதனை நிர்வகிப்பவர் குறிப்பிட்டு இந்த ஏலத்தில் பங்கேற்பதற்குமுன் ரூ.11 இலட்சம் பதிவு கட்டணமாக செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டனர். பதிலுரையாளர் 18.08.2005 அன்று மேல்முறையீட்டாளரின் அதிகாரிக்கு தன் வாக்குமூலத்தில் ஒருவேளை நிலத்தை பெறுவற்கு காலதாமதம் ஆனாலோ, பிறகு ஒதுக்கப்பட்ட நிலம் தங்களுக்கு தாமதமாக கிடைத்தாலோ எந்தவித நஷ்டஈடும் கோரமாட்டேன் என தெரிவித்தார். தங்களுடைய வாக்குமூலத்தில் மேல்முறையீட்டாளரின் மற்ற நிபந்தனைகளுக்கும் ஒப்புக்கொள்வதாக தெரிவித்தார். பதிலுரையாளர் அதிகப்படியான விலைக்கு ஏலத்தை கோரியதால் 20.08.2005 அன்று இந்த நிலம் ஒதுக்கப்பட்டது. இந்த நிலம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.11,700/- என நிர்ணயிக்கப்பட்டு பதிலுரையாளர் தன் முதல் தவணையான ரூ.32,76,623/-ஐ 01.10.2005-க்குள் செலுத்தவேண்டுமென்றும் மீதமுள்ள 3/4 பங்கை 4 தவணைகளாக அதனுடன் 15% வட்டியும் செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. பதிலுரையாளர்களுக்கு நில உரிமத்தை கொடுப்பதற்குமுன் கான்பூர் சிவில் நீதிமன்றம் அளித்த தற்காலிக ஆணைப்படி

மேல்முறையீட்டாளர் ப்ளாட் வழங்குவதாக பதிலுரையாளருக்கு அளித்த உத்தரவை ரத்து செய்து பதிலுரையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் ரூ.1,53,62,528/–யை 28.10.2006 அன்று காசோலை மூலமாக அவர்கள் கட்டியிருந்த மொத்த தொகையும் திருப்பி அளித்தனர். எந்தவிதமான விதிகளும், வழிமுறைகளும் இல்லாததால் எந்த நஷ்டஈடும் வழங்கவில்லை. மொத்த தொகையினையும் பெற்ற பதிலுரையாளர் நஷ்டஈட்டையும், வட்டியையும் வழக்கின் செலவினையும் கோரி, லக்னோ மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் தன் புகாரை பதிவு செய்தார். மேல்முறையீட்டாளர் ஆணையத்தின்முன் வராததாலும், தன் வாதுரைகளை சமர்ப்பிக்காததாலும் ஆணையம் ஒருதலைபட்சமாக 14.10.2011 அன்று ஆணை பிறப்பித்து, மேல்முறையீட்டாளர்கள் ரூ.32,49,175/–யை வட்டியாகவும் அதனுடன் வருடத்திற்கு 18% கூடுதலாக நிலுவைக் காலத்திற்கு வழங்கவேண்டும் என்றும் ஆணையிட்டது. மேலும் மன உளைச்சலுக்காக ரூ.50,000/–மும், வழக்கின் செலவினங்களுக்காக ரூ.10,000/–மும் வழங்கவேண்டும் என்று ஆணையிட்டது. மேல்முறையீட்டாளர் தன் மேல்முறையீட்டு எண்:42/2012–ஐ தேசிய ஆணையத்திடம் சமர்ப்பித்தார். மாநில ஆணையம் வழங்கிய உத்தரவு சரியானது என்று தேசிய ஆணையம் 29.05.2012 அன்று உத்தரவை பிறப்பித்தது. மாநில ஆணையத்தின் உத்தரவினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவு 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) புகார் எண்:25/2007–ஐ பரிசீலித்ததில் பதிலுரையாளர் புகாரை பதிவு செய்யும்முன் 20.12.2006 அன்று மேல்முறையீட்டாளரின் அதிகாரிக்கு 20.12.2006 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை 21.12.2006 அன்று நேரில் சமர்ப்பித்தும் கடைசியாக 21.01.2007–ல் அளித்திருப்பதை நீதிமன்றம் கண்டறிந்தது.

(ஆ) மாநில ஆணையம் 24.10.2011 தேதியிட்ட உத்தரவில் மேல்முறையீட்டாளரின் நிர்வாகிக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததும் அவர்களுக்காக யாரும் நீதிமன்றத்தில் நேர்முகமாக ஆஜராகவில்லை என்று கூறியிருக்கிறது. ஆனால், மாநில ஆணையம் வழங்கிய அறிவிப்பு மேல்முறையீட்டாளரின் அதிகாரிக்கு தெரிவித்ததாக எவ்வித ஆவணமும் காணப்படவில்லை.

(இ) மேலும், மேல்முறையீட்டாளரின் நிர்வாகி அவர்களுக்கு மாநில ஆணையத்தின் மூலம் எவ்வித அறிக்கையும் தெரிவிக்கப்படவில்லை என்று மேல்முறையீட்டாளர்கள் வாதிக்கின்றனர். ஆனால் தேசிய ஆணையம் இதை கவனத்தில் கொள்ளத் தவறி விட்டது. மேலும் மாநில ஆணையத்தின் முன் 03.05.2007-ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் (புகார் எண்:25/2007), எவ்வாறு 21.12.2006-ல் அறிவிப்பை சமர்ப்பிக்க முடியும் என்பதை உற்றுநோக்க தேசிய ஆணையம் தவறிவிட்டது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஈ) முடிவாக இந்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எந்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் வழக்கு தேசிய ஆணையத்திற்கு திருப்பியனுப்பப்பட்டது. மாநில ஆணையம் கூறியதுபோல் அறிவிப்பு சமர்பிக்கப்பட்டதா என்று கண்டறிந்து, மேல்முறையீட்டாளரின் முதல் மேல்முறையீட்டு எண்:42/2012-ஐ நியாயமான காரணங்களின் அடிப்படையில் முடிவு செய்ய உத்தரவிடப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2012) CPJ 13 (SC).

***

# 9. நுகர்வோர் மன்றங்களின் நடைமுறைகள்

## 1. உத்திர பிரதேச மாநிலம் மற்றும் பலர் *(எதிர்)* அனைத்து உத்திரபிரதேச நுகர்வோர் பாதுகாப்பு வழக்கறிஞர்களின் கூட்டமைப்பு

**(State of U.P & Ors. v. All UP Consumer Protection Bar Association)**

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவிலிருந்து.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

உத்திர பிரதேச மாநிலம் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

அனைத்து உத்திரபிரதேச
நுகர்வோர் பாதுகாப்பு வழக்கறிஞர்களின் கூட்டமைப்பு – பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:2740/2007 உடன் நீதிப்பேராணை மனு (சி) (Writ Petition) எண்:164/2002.

தீர்ப்பு தேதி : 21.11.2016.

### 4. வழக்கின் சுருக்கம் :

14.01.2016 அன்று உச்ச நீதிமன்றம், நுகர்வோர் நீதிமன்றங்கள் பல்வேறு மட்டங்களில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை மதிப்பீடு செய்வதற்காக, முன்னாள் நீதிபதி திரு.அர்ஜித் பசாயத் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்த குழு, அக்டோபர் 2016–ல் சமர்பித்த இடைக்கால அறிக்கையில், நுகர்வோர் நீதிமன்றங்கள் பின்வரும் காரணங்களுக்காக எதிர்பார்த்த அளவிற்கு திறம்பட செயல்பட முடியவில்லை என்று கூறியது: (1) திறமில்லாத நிர்வாக கட்டமைப்பு; (2) போதுமான உள்கட்ட வசதியின்மை; (3) போதுமான பயிற்சிபெற்ற ஆட்களின்மை மற்றும் (4) வழக்கை தீர்த்து வைக்கும் குழுவில் தகுதிவாய்ந்த ஆட்களின்மை. இந்த குழு, மேலும் தன் அறிக்கையில், மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் நீதிமன்றம், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரங்கள் மட்டுமே செயல்படுவதாகவும், நீதிபதிகளின் எண்ணிக்கை போதுமான அளவு இல்லாததால், மாதக்கணக்கில் செயல்படாமல் இருப்பதாகவும், மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணைகள், உரிமையியல் நீதிமன்றத்தின் ஆணைகளைப்போல் செயல்படுத்தப்படவில்லை என்றும், மாநில அரசும் இதை சரிசெய்வதற்காக, இந்த குழு சமர்பித்த ஆலோசனைகளை நிறைவேற்ற தவறிவிட்டது என்றும் கூறியது. இந்த குழு மேலும் கூறியதாவது, மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் நீதிமன்றங்களை தலைமை தாங்கி வழிநடத்தி செல்லும் நபர்கள் குறிப்பாக சட்டபின்புலம் இல்லாத நபர்கள், அந்த

பணியை திறம்பட எடுத்துச் செய்யும் அளவிற்கு தகுதிவாய்ந்தவர்களாக இல்லை என்றும் கூறியது. இந்த குழு, மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் நீதிமன்றத்தின் குறைவான செயல்திறனுக்கு பின்வரும் குறைபாடுகள்தான் காரணம் என்று தனது அறிக்கையில் சமர்ப்பித்தது: (1) போதுமான ஊதியமின்மை; (2) தன்னார்வமும் திறமையும் இல்லாத முன்னாள் நீதிபதிகளை பணியில் அமர்த்துவது; (3) மாவட்ட நீதிமன்றங்களில் வழக்காடும் தொழிலில் இருக்கும் வழக்கறிஞர்களை நீதிபதியாக அமர்த்துவது மற்றும் (4) நீதிபதிகளை நியமிப்பதில் அரசியல் மற்றும் அதிகாரத்துவ தலையீடு. இந்த குழு தனது பரிந்துரையில் மேலும் சமர்பித்தது என்னவென்றால், ‘அநேக நீதிபதிகள் (சட்டபின்புலம் இல்லாதவர்கள்), சட்ட பின்புலம் வாய்ந்த நீதிபதிகள் தயாரித்த ஆணைகளில் கையொப்பம் இடுவதற்காக மட்டுமே பணிக்கு வருகிறார்கள்’. இந்த குழு சமர்பித்த ஆணைகளை பரிசீலித்த உச்ச நீதிமன்றம், இவ்வழக்கில் மத்திய, மாநில அரசிற்கு இந்த குழு சமர்பித்த ஆணைகளை நடைமுறைப்படுத்தும்படி கட்டளையிட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 10(1)(b), 10(3), 16(1)(b), 16(2), 20(1)(b), 23, 24(B)(1)(iii), 24(B)(2) மற்றும் 30.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம், மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் நீதிமன்றம் செயல்படுவதில் இருக்கும் இடர்படுகளை களைவதற்கு, பிரிவு 24B நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை முறையாக செயல்படுத்தினால் தீர்வு காணலாம் என்று கருதியது. பிரிவு 24B கூறுவது என்னவென்றால், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் நிர்வாக சீரமைபிற்காக, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் எந்த ஒரு ஆணையையும் பிறப்பிற்கும் அளவிற்கு அதிகார வரம்பு கொண்டு உள்ளது. அதேபோல், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களின் நிர்வாக சீரமைப்பிற்காக எந்த ஒரு ஆணையும் பிறப்பிற்கும் அளவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முதன்மை நீதிபதி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சம்பந்தமாகவும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முதன்மை நீதிபதி, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்கள் சம்பந்தமாக அத்தகைய ஆணைகளை பிறப்பிக்கும் அதிகார வரம்பு, பிரிவு 24B-ன்கீழ் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதனைத் தொடர்ந்து மேற்சொன்ன ஆணைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, உச்ச நீதிமன்றம் இந்த வழக்கில் கீழ்க்கண்ட இதர ஆணைகளையும் பிறப்பித்தது:

(1) நடுவண் அரசு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவுகள் 10(3) மற்றும் 16(2)-ன்கீழ் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் மாதிரி விதிமுறைகளை நான்கு மாதத்திற்குள் தயாரித்து இந்த நீதிமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கவேண்டும்;

(2) நடுவண் அரசு, மேலும் பிரிவுகள் 10(1)(b), 16(1)(b) மற்றும் 20(1)(b)-ன்படி மாவட்ட, மாநில மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் நீதிபதிகளை நியமிக்கும் பொருட்டு, மாதிரி விதிகளும் அவரது தகுதிகளை நிர்ணயம் செய்யும் விதிமுறைகளையும் நான்கு மாதத்திற்குள் இந்த நீதிமன்றத்திற்கு சமர்பிக்கவேண்டும்.

(3) நடுவண் அரசு, மேற்சொன்ன விதிகளை வடிவமைக்கும்போது, மேற்சொன்ன சட்டப்பிரிவுகளின்படி, அந்தந்த மாவட்ட, மாநில மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு ஏற்றவாறு, நீதிபதிகளுக்கு போதுமான திறமையும், சட்ட அறிவும், அனுபவமும் இருக்கும் வண்ணம் விதிமுறைகள் அமைக்கப்படவேண்டும். மேலும், இந்த விதிமுறைகள், நீதிபதிகளின் சம்பளம், படி மற்றும் அவரது பணி சம்பந்தமான நிபந்தனைகளையும் குறிக்கவேண்டும். மேற்சொன்னவாறு வடிவமைக்கப்படும் விதிகளும், விதிமுறைகளும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முதன்மை நீதிபதியின் ஒப்புதல் பெற்று இறுதியாக்கப்படவேண்டும்.

(4) மேற்சொன்னவாறு வடிவமைக்கப்படும் இந்த விதிகளும், விதிமுறைகளும் இந்த நீதிமன்றத்தின் அனுமதி பெற்ற பிறகு, இத்தகைய விதிகளையும், விதிமுறைகளையும் அமலாக்கம் செய்யும்பொருட்டு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 30-ன்கீழ் தேவையான விதிகளை மாநில அரசு இயற்றும்.

(5) நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் நோக்கத்தையும், கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், நடுவண் அரசின் முறையான அனுமதி பெற்றபிறகு, பிரிவுகள் 24(B)(1)(iii) மற்றும் 24(B)(2)-ன்கீழ் சொன்னபடி, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மீதும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் மீதும் முறையே தத்தமது அதிகார வரம்பை கையாளுவதற்கும், பிரிவு 30A-ன் தேவையான விதிமுறைகளை இன்றிலிருந்து 3 மாதத்திற்குள் இயற்றிக்கொள்ளும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2016) CPJ 15 (SC); 2016(4) CPR 528 (SC); (2017) 1 SCC 444.

***

## 10. நுகர்வோர் மன்றத்தின் அதிகார வரம்பு

### 1. கண்காணிப்பாளர், வெளிநாட்டு தபால் நிலையம் *(எதிர்)* இண்டோ லாசா கியூரியஸ் (Superintendent, Foreign Post Office v. Indo Lhasa Curious)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் ஆணையில் இருந்து எழுப்பப்பட்டது.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கண்காணிப்பாளர், வெளிநாட்டு தபால் நிலையம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இண்டோ லாசா கியூரியஸ் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:6121/2001.

தீர்ப்பு தேதி : 07.06.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

உயர் நீதிமன்றத்தின் ஆணைக்கு எதிராக இந்த மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்திற்கு முன்பாக இந்த மேல்முறையீட்டாளர், மலேசியாவிற்கு அனுப்பப்படவேண்டிய பார்சல் டில்லியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதாலும், இந்த வழக்கிற்கான செயல்முறைக் காரணிகள் அனைத்தும் டெல்லியில் நடைபெற்றாலும் வழக்கிற்கான எந்தவித பரிமாற்றமும் ஸ்ரீநகர் எல்லைக்குள்ளாக ஏற்படவில்லை என்பதாலும், ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் இவ்வழக்கினை ஏற்க அவர்களுக்கு அதிகார வரம்பு இல்லை என்று வாதிட்டார். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 17, 21 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது என்னவென்றால், வழக்கில் எழுப்பப்பட்டிருக்கும் பிரச்சனை, பொருண்மை மற்றும் சட்ட சம்பந்தமான வினாக்களை உள்ளடக்கியது. மேல்முறையீட்டாளர், உயர் நீதிமன்றத்தில் விசாரணையின்போது இதை

சமர்ப்பிக்கவில்லை. இந்த நீதிமன்றம், வழக்கின் பொருண்மை சம்பந்தமான வினாக்களை இதுவரை அனுமதித்ததில்லை. ஆகவே, இந்த வழக்கில் மட்டும் முதன் முறையாக பொருண்மை சம்பந்தமான வினாக்களை விசாரிக்க அனுமதியளிக்க முடியாது. மேலும், மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டுக்கான காரணங்களிலும், உறுதி மொழிகளிலும், அதிகாரவரம்பு சம்பந்தமான பிரச்சனை உயர் நீதிமன்றத்தின் முன்பாக எழுப்பப்பட்டது என்றும் அதை உயர் நீதிமன்றம் நியாயமான காரணங்களில் பரிசீலிக்கவில்லை என்றும் தெரிவிக்கவில்லை.

(ஆ) ஆகையால், மேற்சொன்ன காரணங்களுக்காக, இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

III (2011) CPJ 19 (SC).

***

**2. ட்ரான்ஸ் மத்திய தரைக்கடல் ஆகாயமார்க்கம்** *(எதிர்)* **யூனிவர்சல் ஏற்றுமதி மற்றும் ஒருவர்**

**(Trans Mediterranean Airways v. Universal Exports & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய அசல் மனு எண்:161/1994-ல் 15.01.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் உத்தரவு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ட்ரான்ஸ் மத்திய தரைக்கடல் ஆகாயமார்க்கம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யூனிவர்சல் ஏற்றுமதி மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:1919/2004.

தீர்ப்பு தேதி : 15.09.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர், லெபனானில், பெய்ரூட் எனும் இடத்தை, பிரதானமான வியாபார ஸ்தலமாக கொண்டு, சரக்குகளை தூக்கி செல்லும் பணியை, சர்வதேச அளவில் செய்து வந்தார். இதில், பதிலுரையாளர் நம்பர்-1 (சரக்கை அனுப்புபவர்) ஆடைகளை ஏற்றுமதி செய்பவர் மற்றும் பதிலுரையாளர் நம்பர்-2 பன்னாட்டு ஆகாயமார்க்கமான

போக்குவரத்து அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட முகவர். இந்த முகவர், 25.08.1992 அன்று, துணிகள் அடங்கிய 3 பார்சல்களை அதன் ரசிதுகளுடன், பதிலுரையாளர் நம்பர்-1 (சரக்கை அனுப்புபவர்) சார்பாக, மேல்முறையீட்டாளரின் ஊர்தி மூலமாக, ஸ்பெயினுக்கு அனுப்பி வைத்தார். அந்த சரக்குகள் அடங்கிய பார்சல்கள், 30.08.1992 அன்று ஆம்ஸ்டர்டம்-ஐ சென்றடைந்தது. அங்கிருந்து, சாலை மார்க்கமாக, அது மாட்ரிட்-ஐ 03.09.1992 அன்று சென்றடைந்தது. அதன் பிறகு, அவை சுங்க அலுவலர்களின் முறையான அனுமதியையும் பெற்றது. பதிலுரையாளர் நம்பர்-1 (சரக்கை அனுப்புபவர்) அனுப்பிய சரக்கில், M/s. Liwe Espanola என்று ஒரு முகவரி மட்டுமே இருந்ததால், சரக்குகள் M/s. Liwe Espanola-விடம் ஒப்படைக்கப்பட்டது. சரக்குகள் ஒப்படைக்கப்பட்டு, 9 மாதங்களுக்கு பிறகு, துணிகள் அடங்கிய மொத்தம் 3 பார்சல்களில், 2 பார்சல்கள் பற்றி விசாரிக்கப்பட்டது. அதன்பிறகு, 4 மாதங்கள் கழித்து, மீண்டும் விசாரிக்கப்பட்டது. அதற்கு பதில் கூறும் விதமாக மேல்முறையீட்டாளர், M/s. Liwe Espanola-ன் பெயர் மற்றும் முழு முகவரி அதில் இருந்ததாலும், மேலும் அவரை சரக்குகளை வாங்குபவராக குறிப்பிட்டிருந்ததாலும், சரக்குகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று கூறினார். பதிலுரையாளர் நம்பர்-1-ன் (சரக்கை அனுப்புபவர்) முறையீடு/வாதம் என்னவெனில், மேல்முறையீட்டாளர், சரக்குகளை பார்க்லேஸ் வங்கி, மாட்ரிட்-க்கு (Barclays Bank, Madrid) கொடுப்பதற்கு பதிலாக, சரக்கின் பின்பகுதியில் ஒட்டியிருந்த முகவரியின்படி, M/s. Liwe Espanola-விடம் தவறாக கொடுத்துவிட்டார் என்பதாகும். அது மட்டுமல்லாது, பார்க்லேஸ் வங்கி-க்கு மாட்ரிட்-ல் ஒரே ஒரு கிளை மட்டுமே இருப்பதாலும், அந்த துணிகள் அடங்கிய சரக்கு பார்சலில், சரக்கை வாங்குபவராக பார்க்லேஸ் வங்கி, மாட்ரிட்-ஐதான் குறித்திருந்தாலும், மேல்முறையீட்டாளரின் இந்த செயல், முற்றிலுமான சேவைகுறைபாடு என்று கூறி மேல்முறையீட்டாளர் மற்றும் முகவருக்கு எதிராக, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முன்பாக இழப்பீடு கோரி புகார் கொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், சமர்பிக்கப்பட்ட சாட்சியங்களை கருத்தில் கொண்டு, பதிலுரையாளர் நம்பர்-1-க்கு US$ 71,615.75 தொகையை நஷ்ட ஈடாக 5% வட்டியுடன், வழக்கு தொடர்ந்த நாளிலிருந்து முழு தொகையையும் கொடுக்கும்வரை அளிக்கவேண்டும் என்று கூறியது. இதனுடன் ரூ.1 இலட்சமும் அபராதமாகவும் விதித்தது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் இந்த உத்தரவை எதிர்த்து, இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(h), (k), (p), 3, 9, 11, 17, 21 மற்றும் 23; ஆகாய மார்க்கமாக ஏற்றிச் செல்வதற்கான சட்டம் 1972-ன் பிரிவுகள் 2, 3, 7, Sch.I R.28 Sch.II R.28, Sch.II R.30 and Sch.III R.33; வார்ஸா ஒப்பந்தம் 1929; உரிமையியல் ஒழுங்குமுறை நடைமுறைச் சட்டம் 1908-ன் பிரிவுகள் 2, 9 மற்றும் 96; ஒப்பந்தச் சட்டம் 1972-ன் பிரிவு 28.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Ethiopian Airlines v. Ganesh Narain Saboo,* (2011) 8 SCC 539.
2. *Union of India v. Madras Bar Association,* (2010) 11 SCC 1.
3. *Kishore Lal v. ESI Corporation,* (2007) 4 SCC 579 : (2007) 2 SCC (L&S) 1.
4. *Thirumurugan Coop. Agri. Credit Society v. M.Lalitha,* (2004) 1 SCC 305.
5. *State of Karnataka v. Vishwabharathi House Building Coop. Society,* (2003) 2 SCC 412.
6. *Charan Singh v. Healing Touch Hospital,* (2000) 7 SCC 668 : 2000 SCC (Cri) 1444.
7. *P. Sarathy v. SBI,* (2000) 5 SCC 355 : 2000 SCC (L&S) 699.
8. *Skypak Couriers Ltd. v. Tata Chemicals Ltd.,* (2000) 5 SCC 294.
9. *Patel Roadways Ltd. v. Birla Yamaha Ltd.,* (2000) 4 SCC 91.
10. *Fair Air Engineers (P) Ltd. v. N.K. Modi,* (1996) 6 SCC 385.
11. *Laxmi Engg. Works v. P.S.G. Industrial Institute,* (1995) 3 SCC 583.
12. *Jabalpur Tractors v. Sedmal Jainarain,* 1995 Supp. (4) SCC 107.
13. *Canara Bank v. Nuclear Power Corpn. of India Ltd.,* 1995 Supp. (3) SCC 81.
14. *State of T.N. v. G.N. Venkataswamy,* (1994) 5 SCC 314.
15. *Kihoto Hollohon v. Zachillhu,* 1992 Supp. (2) SCC 651.
16. *Baradakanta Mishra v. Orissa High Court,* (1974) 1 SCC 374 : 1974 SCC (Cri) 128.
17. *Jugal Kishore Sinha v. Sitamarhi Central Coop. Bank Ltd.,* AIR 1967 SC 1494 : 1967 Cri LJ 1380.

18. *Ram Narain v. Simla Banking and Industrial Co. Ltd.,*
AIR 1956 SC 614.

19. *Brajnandan Sinha v. Jyoti Narain,*
AIR 1956 SC 66 : 1956 Cri LJ 156 : (1955) 2 SCR 955.

20. *State of Bombay v. Narottamdas Jethabhai,*
AIR 1951 SC 69 : 1951 SCR 51.

21. *Bharat Bank Ltd. v. Employees,*
AIR 1950 SC 188 : 1950 SCR 459.

22. *Isbill v. Stovall,* 92 SW 2d 1067 (Tex Civ App, 1936).

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில், இரு பெரும் சட்டம் மற்றும் பொருண்மை சம்பந்தமான வினாக்கள் எழுப்பப்பட்டன. அவையானவை:

(1) சேவையில் குறைபாடு காரணமாக, பதிலுரையாளர் நம்பர்–1 (சரக்கை அனுப்புபவர்) தொடர்ந்த புகாரை விசாரிக்க தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986–ன்படியோ அல்லது வார்ஸா பன்னாட்டு ஒப்பந்தங்களின்படியே, அதிகார வரம்பு இருக்கிறதா? அல்லது உள்நாட்டு சட்டத்தை, வார்ஸா பன்னாட்டு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஷரத்துகளை அமலாக்கும் பொருட்டு பயன்படுத்தி தீர்வு கொடுக்கலாமா?

(2) வழக்கின் பொருண்மையின்படி, மேல்முறையீட்டாளர், பதிலுரையாளர் நம்பர்–1–க்கு (சரக்கை அனுப்புபவர்) இழப்பீடு வழங்கவேண்டுமா?

(ஆ) மேற்சொன்ன இரு பெரும் வினாக்களுக்கு கீழ்க்கண்டவாறு உச்ச நீதிமன்றம் பதிலளித்தது:

மேற்கூறிய கேள்வி (1)–னிற்கு, உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்ட கருத்துகளை கூறி முடிவை எட்டியது:

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986–ன் 2–வது அட்டவணையில் (Sch.II) விதி எண்:29–ல் பயன்படுத்தப்பட்டிருக்கும், 'நீதிமன்றம்' எனும் பதத்தின் பொருள், வார்ஸா பன்னாட்டு ஒப்பந்த சட்டத்திலிருந்தே பெறப்பட்டது; மேலும், 'நீதிமன்றம்' எனும் பதத்தின் பொருள், வார்ஸா பன்னாட்டு ஒப்பந்தத்தில் நமது சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் ஷரத்துகளுக்கு சற்று மாறுபட்டிருக்கிறது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986–ன்கீழ் பயன்படுத்தப்படும், 'நீதிமன்றம்' எனும் பதம் குறிப்பது என்னவென்றால், 'நீதிமன்றம்' என்பது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் எழும் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு அமைப்பு. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், இதற்காக, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம்,

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் என்று 3 பெரும் அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இந்த 3 அமைப்பிற்கான அதிகாரங்கள், அதிகார வரம்பு மற்றும் செயல்முறைகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த 3 அமைப்புகளும், சுருக்கமான முறைகளை கையாண்டாலும், இந்த அமைப்புகளின் முக்கியமான மற்றும் பிரதானமான பணி வழக்குகளை விசாரித்து தீர்வளிப்பதே ஆகும்.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவுகள்படி பார்த்தாலும், வார்ஸா பன்னாட்டு ஒப்பந்த சட்ட ஷரத்துகளின்படி பார்த்தாலும், ‘நீதிமன்றம்’ எனும் பதத்திற்குள் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையமும், உள்ளடங்குகிறது. *பட்டேல் ரோட்வேஸ் லிமிடெட்* வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 போன்ற சமுதாய நலனில் அக்கறை கொண்ட சட்டங்களில், பொருள் விளக்கம் காணும்போது, அதன் பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ‘நீதிமன்றம்’ போன்ற வார்த்தைகளுக்கு, குறுகலான விளக்கத்தை எடுத்துக்கொள்ள இயலாது.

(இ) கேள்வி (2)–ற்கு, கீழ்க்கண்ட பதில்களை உச்ச நீதிமன்றம் கூறியது:

(1) உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டாளரின் வாதமான, Barclays Bank SAE, Madrid சரக்கை பெறுபவர் இல்லை என்ற வாதத்தை நிராகரித்தது. மேலும், மேல்முறையீட்டாளரின் வாதமான, M/s. Liwe Espanola என்ற ஒரு முகவரிதான், சரக்கை பெறுபவர் என்று அந்த பார்சலில் குறிக்கப்பட்டிருந்தது என்பதையும், சரக்கை அனுப்புபவர் (பதிலுரையாளர் நம்பர்–1) உரிய நபரின் முகவரியை கொடுக்கவில்லை என்பதையும், நிராகரித்தது.

(2) சரக்குகள் அனுப்பப்படும் ரசீதுகளில், தெளிவாக Barclays Bank SAE, Madrid-தான் சரக்குகளை வாங்குபவர் என்று தெளிவாக குறிப்பிட்டிருப்பதால், மேல்முறையீட்டாளரின் மேற்கூறிய வாதங்கள் ஏற்புடையதாக இல்லை. மேலும், அவ்வாறு சந்தேகம் ஏற்படும்பட்சத்தில், அதை பதிலுரையாளர் நம்பர்–1–னிடம் (சரக்கை அனுப்புவரிடம்) கேட்டு, ரசீதுகளில் குறிப்பிட்டிருக்கும் உரிய நபரிடம் சரக்குகளை ஒப்படைப்பது, முகவரின் (பதிலுரையாளர் நம்பர்–2) கடமையாகும்.

(3) ஸ்பெயின் போன்ற பல நாடுகளுக்கு ஆகாயமார்க்கமாக பொருட்களை எடுத்துச்செல்லும், சர்வதேச அளவில் பிரசித்திபெற்ற முகவர், துணிகள் அடங்கிய பார்சல்களில், சரக்கை பெறுபவராக, யார் பெயரை குறித்திருக்கிறது என்பதை பார்த்திருக்கவேண்டும். மேலும், சரக்கை ஒப்படைத்தபின், சரக்கை அனுப்பியவருக்கு, சரக்குகள் ஒப்படைத்ததற்கான தகவலையும் கொடுத்திருக்க வேண்டும். ஆகையால், மேற்சொன்ன காரண காரணிகளை வைத்து

பார்க்கும்போது, மேல்முறையீட்டாளரின் (பதிலுரையாளர் நம்பர்-2) செயல்பாடுகள் முற்றிலுமாக, சேவையின் மீதான குறைபாடாகும்.

(ஈ) எனவே, உச்ச நீதிமன்றம், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பை ஆதரித்து, இந்த மேல்முறையீட்டு மனுவை, தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 10 SCC 316; IV (2011) CPJ 13 (SC).

***

## 3. தன்பீர் சிங் *(எதிர்)* அரியானா நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம்

## (Dhanbir Singh v. Haryana Urban Development Authority)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 01.04.2011 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

தன்பீர் சிங் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அரியானா நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் - பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8639/2011.

தீர்ப்பு தேதி : 14.10.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர், தன்பீர் சிங், சிஷ்பால் சிங் எனும் நபரிடமிருந்து 420 சதுர மீட்டர் அடங்கிய ஒரு பிளாட்டை வாங்கினார். இதில் சிஷ்பால் சிங் தான் Haryana Urban Development Authority (பதிலுரையாளரிடமிருந்து) நேரடியாக முதலில் அந்த பிளாட்டை வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. தன்பீர் சிங், அதன்பிறகு, தன்னுடைய பிளாட்டை மாற்றிதருவதற்காக விண்ணப்பித்திருந்தார். அதற்குரிய கட்டணமாக ரூ.62,400/- நீட்டிப்பு தொகையாக செலுத்தியிருந்தார். அதன்பின், அந்த பிளாட் 10.12.1998 தேதியிட்ட பதிலுரையாளரின் அலுவலக குறிப்பாணை மூலமாக, மேல்முறையீட்டாளருக்கு திருப்பியளிக்கப்பட்டது. ஆனால், பிளாட் அவரது கைவசம் ஒப்படைக்கப்படாததால், கட்டிட வரைபடத்திற்கான ஒப்புதலும் அவருக்கு அளிக்கப்படவில்லை. இறுதியாக, பிளாட் அவரது கைவசம் கொடுக்கப்பட்டபோது, பிளாட்டின் மொத்த அளவில், 11.25 சதுர மீட்டர் குறைவாக

இருந்தது. மேலும், அவர் நீட்டிப்பு கட்டணமாக ரூ.71,688/-, 31.12.1999-வரை, (அதாவது பிளாட் அவரது கைவசம் ஒப்படைக்கப்படும்வரை) செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆகையால், அவர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் பிரிவு 12, நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், பின்வரும் காரணங்களை கூறி புகார் மனு தாக்கல் செய்தார்:

(அ) பதிலுரையாளரின் சேவையில் குறைபாடு;

(ஆ) பிளாட்டை ஒப்படைப்பதில் ஏற்பட்ட காலதாமதம்;

(இ) பிளாட்டின் அளவு 11.25 சதுர மீட்டர் குறைவாக இருந்தது;

(ஈ) அதிகப்படியான நீட்டிப்பு தொகை மற்றும் பிளாட்டை மாற்றி தருவதற்காக அதிகப்படியான தொகை கோரியது.

வழக்கை விசாரித்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், புகாரை ஏற்று மேல்முறையீட்டாளர் அதிகப்படியாக கொடுத்த நீட்டிப்பு தொகை மற்றும் மாற்றுதலுக்கான தொகையை வருடத்திற்கு 15% வட்டியுடன் (மேல்முறையீட்டாளர் செலுத்திய தேதியிலிருந்து) கொடுக்கும்படி பதிலுரையாளரை பணித்தது. மேலும், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ரூ.10,000/- இழப்பீடாகவும், ரூ.3,000/- வழக்கிற்கான செலவாகவும், பதிலுரையாளரை கொடுக்கும்படி ஆணையிட்டது. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் அதிகப்படியான நீட்டிப்பு தொகைக்கு எதிரான கோரிக்கை, Haryana Urban Development Authority அதிகாரியினால் நிராகரிக்கப்பட்டது. இந்த ஒரு காரணத்திற்காக, பதிலுரையாளர், தொடுத்த மேல்முறையீட்டு மனு, மாநில நுகர்வோர் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட மறு சீராய்வு மனு, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அத்தோடு, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், கூறியதாவது: மேல்முறையீட்டாளர், எப்போது புகார் மனுவிற்கு பதிலாக, மேல்முறையீடு செய்தாரோ, அதன்பிறகு அவர், மாற்று நிவாரணங்களை தொடர்ந்திருக்க வேண்டும். தேசிய நுகர்வோர் ஆணையத்தின் மீது திருப்தியில்லாமல், இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(d), 3, 12, 17, 21, 23 மற்றும் 24(A)(2).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் கூறியதாவது:

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை, எப்போது நுகர்வோர் தன்னுடைய நுகர்வோர் பிரச்சனைக்கு, துறைசார்ந்த நிவாரணங்களை பெறுகிறாரோ,

அப்போது அவர், நுகர்வோர் குறைதீர் மன்றங்களை அணுக இயலாது என்ற தவறான புரிதலில், தள்ளுபடி செய்துவிட்டது. மேலும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையமும், மேல்முறையீட்டாளர் தொடர்ந்த நீட்டிப்பு தொகைக்கு எதிரான மேல்முறையீட்டு மனு HUDA முன்பு நிலுவையில் இருப்பதாக கருதி, மறு சீராய்வு மனுவை தள்ளுபடி செய்துவிட்டது.

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் பிரிவு 3-ஐ குறிப்பிட்டு, உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்ட கருத்துக்களை முன்மொழிந்தது:

(1) மற்ற சட்டங்களிலிருந்து பெறப்படும், நிவாரணங்களை பெற்றபிறகு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் கீழ் அளிக்கப்படும் நிவாரணங்களை பெறுவதற்கு எந்தவித தடையும் இல்லை.

(2) Haryana Urban Development Authority மற்றும் அதுபோன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள் (மாநில சட்டங்களின் கீழ் செயல்படும்) வீடு/நிலம் ஒதுக்கீடு செய்யும்போது, யாரேனும் பாதிக்கப்பட்டால், அவர் துறைசார்ந்த நிவாரணங்களை பெறலாம். அவ்வாறு பாதிக்கப்பட்ட நபர், பிரிவு 2(d)-யில் குறிப்பிடப்பட்டிருக்கும் நுகர்வோர் என்ற பதத்தில் வந்தால், அவர் நேராக நுகர்வோர் குறைதீர் மன்றம் கொடுக்கும் ஆணைக்கு எதிராகவோ அல்லது நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் கொடுக்கும் உத்தரவுகளுக்கு எதிராகவோ மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யலாம். அம்மாதிரியான மனு தாக்கலில் தாமதம் ஏதேனும் ஏற்பட்டால், தாமதத்தினை மன்னிக்கக்கோரி, தனி மனு பிரிவு 24(A)(2)-ன் கீழ் தாக்கல் செய்யலாம்.

(இ) இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் மேலும் கூறியதாவது:

(1) நீட்டிப்பு தொகைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனு ஏற்கனவே, Haryana Urban Development Authority நிர்வாகியால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

(2) ஆகையால், மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு, Haryana Urban Development Authority-யிடம் நிலுவையில் இருப்பதாக கருதி, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மறு சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது தவறானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதேபோல், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையமும், மேல்முறையீட்டாளர் எற்கனவே மாற்று நிவாரணங்களை பெற்றிருக்கிறார் என்று கூறி, மேல்முறையீட்டு மனுவை நிராகரித்தது தவறு என்று கூறியது. பதில் மனுதாரரின் துறைசார்ந்த மேல்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டதால், மேல்முறையீட்டாளரின் புகார் மனு (நீட்டிப்பு தொகை செலுத்துதல் மற்றும் தாமதமாக இடத்தை அளித்ததற்கு எதிராக தொடரப்பட்ட மனு) நிராகரிக்கப்பட முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஈ) இறுதியில், மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. தேசிய மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் ஆணைகள் ஒதுக்கி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டு மனுவை மீண்டும் விசாரிக்குமாறு (புதிதாக), மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை, உச்ச நீதிமன்றம் பணித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

III (2012) CPJ 1 (SC).

***

**4. சுனில் ஜே. வர்மா மற்றும் பலர்** *(எதிர்)* **நகர்புறம் மற்றும் தொழில் அபிவிருத்தி கழகம் மற்றும் ஒருவர்**

**(Sunil J. Verma & Ors. v. City & Industrial Development Corporation Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் பாதுகாப்பு ஆணைய தீர்ப்பு, அதன்பேரில் உத்தரவு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சுனில் ஜே. வர்மா மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நகர்புறம் மற்றும் தொழில் அபிவிருத்தி கழகம் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்பிற்கான மனுவிலிருந்து மேல்முறையீடு (சி) எண்:9435/2013.

தீர்ப்பு தேதி : 03.05.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

புகார்தாரர்கள் நுகர்வோர் மன்றத்தை அணுகி பதிலுரையாளர்கள் ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைக்க உத்தரவு கொடுக்கும்படியும் தவறினால் அதற்குண்டான நஷ்டஈட்டை அவர்களிடமிருந்து கோரியும் புகார் செய்தனர். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் இந்த புகாரை அங்கீகரிக்க மறுத்தது. இந்த மறுப்பினால் பாதிக்கப்பட்ட மனுதாரர்கள் இந்த சிறப்பு விடுப்பு மனுவின் மூலம் மேல்முறையீட்டை செய்தார்கள். இந்த சிறப்பு விடுப்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 11, 17, 21 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) பதிலுரையாளரின் நிர்வாகிகள் ஏன் கூட்டுறவு சங்கத்தை அமைக்கவில்லை என்பதற்கான உத்தரவை கோரி நுகர்வோர் மன்றத்திடம் புகார்தாரர்கள் அணுகியிருக்ககூடாது. சங்கத்தை அமைக்காதது சேவை குறைப்பாடு சாராம்சங்களில் வராது என்றும் அதன் மூலமாக நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நஷ்டஈட்டை கோரமுடியாது என உச்ச நீதிமன்றம் கண்டது.

(ஆ)உச்ச நீதிமன்றம் தேசிய ஆணையத்தின் உத்தரவுகளை உறுதி செய்து இந்த சிறப்பு விடுப்பு மனுவை தள்ளுபடி செய்தது.

(இ) மேலும் உச்ச நீதிமன்றம், கூட்டுறவு சங்கத்தை அமைக்காதது நகர்புற அமைப்பின் விதிகளையும் சட்ட அமைப்புகளையும் மற்ற ஏதாவது ஷரத்துக்களையும் மீறியதாக இருக்கும் என மனுதாரர்கள் கருதினால் அவர்கள் முடிவின்படி உயர் நீதிமன்றத்தை இதற்காக அணுகலாம். ஆனால், இந்த வழக்கில் நஷ்டஈட்டை நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கோருவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை எனவும் கூறியது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2013) CPJ 62 (SC).

***

**5. Dr. ஜெக்மித்தர் செயின் பகத் *(எதிர்)* இயக்குநர் மருத்துவ சேவைகள், அரியானா மற்றும் பலர்**

**(Dr. Jagmittar Sain Bhagat v. Director Health Services, Haryana & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:1156/2007, M.A.No.291/2008 மற்றும் M.A.No.450/2008-ல் 26.11.2009 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

Dr. ஜெக்மித்தர் செயின் பகத் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இயக்குநர் மருத்துவ சேவைகள், அரியானா மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:5476/2013 (சிறப்பு விடுப்பு (சி) எண்:11381/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது)

தீர்ப்பு தேதி : 11.07.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர், அரியானா மாநிலத்தின், சுகாதார துறையில், மருத்துவ அதிகாரியாக, ஜீன் 1953 முதல் அக்டோபர் 1985 வரை பணியாற்றி வந்தார். இதற்கிடையில், அதே மாநிலத்தில் அவர், வேறொரு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டார். அவர், பணிமாற்றம் செய்யப்பட்ட பிறகும், அரசு தந்த குடியிருப்பில், 11.05.1980-லிருந்து 11.07.1981-வரை வசித்து வந்தார். மேல்முறையீட்டாளரின் முறையீடு என்னவென்றால், அவரது ஓய்வு பெற்றதின் தொடர்பாக உள்ள அனைத்து நலன்களும் கொடுக்கப்படவில்லை என்றும், அரசாங்க குடியிருப்பில் தங்கியிருந்ததற்காக அபராத வாடகையும் அவருக்கு முன்னறிவிப்பு இல்லாமல், பிடிக்கப்பட்டு விட்டதாகவும் கூறினார். ஆனால், அவருடைய முறையீட்டிற்கு எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. ஆகையால், அவர், Faridabad மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் தொடுத்தார். மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் சேமநல நிதி (pension, gratuity and provident fund) சரியாக கணக்கிடப்பட்டு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறி, மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. இதை எதிர்த்து, மேல்முறையீட்டாளர், மாநில நுகர்வோர் நீதிமன்றத்திடம், மேல்முறையீடு செய்தார். மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மேல்முறையீட்டாளர் 'நுகர்வோர்' எனும் வரையறைக்குள் வராததாலும், அதிகார வரம்பு பிரச்சனையை, எதிர் தரப்பினர் எழுப்பாததாலும், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது என்று கூறி, மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முடிவை எதிர்த்து, மேல்முறையீட்டாளர் மறு சீராய்வு மனுவை தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக தாக்கல் செய்தார். மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து, மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதுவும், 26.11.2009-ல் பிறப்பிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் ஆணையத்தின் ஆணை மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து, இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1)(d)(ii), 2(b), (c), (d), (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *United Commercial Bank Ltd. v. Their Workmen,*
   AIR 1951 SC 230. [Para 7]

2. *Smt. Nai Bahu v. Lal Ramnarayan & Ors.,*
AIR 1978 SC 22. [Para 7]

3. *Natraj Studios (P) Ltd. v. Navrang Studios & Anr.,*
AIR 1981 SC 537. [Para 7]

4. *Kondiba Dagadu Kadam v. Savitribai Sopan Gujar & Ors.,*
AIR 1999 SC 2213. [Para 7]

5. *Sushil Kumar Mehta v. Gobind Ram Bohra (Dead) Thr. Lrs.,*
(1990) 1 SCC 193. [Para 8]

6. *Premier Automobiles Ltd. v. K.S. Wadke & Ors.,*
(1976) 1 SCC 496. [Para 8]

7. *Kiran Singh v. Chaman Paswan,*
AIR 1954 SC 340. [Para 8]

8. *Chandrika Misir & Anr. v. Bhaiyalal,*
AIR 1973 SC 2391. [Para 8]

9. *Setrucharlu Ramabhadra Raju Bahadur v. Maharaja of Jeypore,*
AIR 1919 PC 150. [Para 9]

10. *State of Gujarat v. Rajesh Kumar Chimanlal Barot & Anr.,*
AIR 1996 SC 2664. [Para 9]

11. *Harshad Chiman Lal Modi v. D.L.F. Universal Ltd. & Anr.,*
AIR 2005 SC 4446. [Para 9]

12. *Carona Ltd. v. M/s. Parvathy Swaminathan & Sons,*
AIR 2008 SC 187. [Para 9]

13. *Morgan Stanley Mutual Fund v. Kartick Das,*
(1994) 4 SCC 225. [Para 12]

14. *Secretary, Board of Secondary Education, Orissa v. Santosh Kumar Sahoo & Anr.,*
AIR 2010 SC 3553. [Para 13]

15. *Bihar School Examination Board v. Suresh Prasad Sinha,*
AIR 2010 SC 93. [Para 14]

16. *Maharshi Dayanand University v. Surjeet Kaur,*
(2010) 11 SCC 159. [Para 14]

17. *Regional Provident Fund Commissioner v. Bhavani,*
AIR 2008 SC 2957. [Para 15]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியதாவது:

அதிகார வரம்பு பகிர்வு என்பது ஒரு சட்டப்பூர்வ (அங்கீகாரம்) செயல். அதிகார வரம்பு உள்ள நீதிமன்றத்தாலோ அல்லது இரு தரப்பினர்களின் இசைவினாலோ அது பகிரப்படமுடியாது. மேலும், எந்த ஒரு நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லையோ, அந்த நீதிமன்றத்தின் ஆணை செயல்படுத்தப்பட முடியாத ஒன்றாக மாறிவிடுகிறது. அதேபோல், ஒரு நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லாத பட்சத்தில், வழக்கு தொடர்ந்தவர்களின் இசைவு/நிலைப்பாடு சட்டத்தின் எண்ணத்திற்கு எதிராக அமையக்கூடாது.

(ஆ) *Sushil Kumar Mehta* மற்றும் பிற வழக்குகளில், நீதிமன்றம் கூறியது என்னவென்றால், அதிகார வரம்பு இல்லாமல் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை செல்லாது.

(இ) *S.R. Raju Bahadur* வழக்கை மேற்கோள் காட்டி, உச்ச நீதிமன்றம் கூறியதாவது:

"எந்த ஒரு நீதிமன்றமும் தானாகவே அதிகார வரம்பை உருவாக்கி கொள்ள முடியாது. மேலும், அதிகார வரம்பு இருப்பதாக அனுமானித்துக் கொள்வதற்கு கூட, அந்த அதிகார வரம்பை உருவாக்குவதற்கு தொடர்புடைய பொருண்மை அவசியம்".

(ஈ) அநேக வழக்குகளில், உச்ச நீதிமன்றம், நுகர்வோர், புகார்தாரர் மற்றும் சேவையில் குறைபாடு போன்ற பதங்களுக்கு பொருள் விளக்கம் அளித்திருக்கிறது. அதில் குறிப்பாக, *Bihar School Examination Board* (supra), *Secretary, Board of Secondary Education, Orissa* (supra) வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியது என்னவென்றால், தேர்வு எழுதும் மாணவர் நுகர்வோர் எனும் வரையறைக்குள் வர இயலாது. அதேபோல், தேர்வுவாரியம் சேவை அளிப்பவரும் இல்லை என்று கூறியது. மேலும், அத்தகைய புகார் மனு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஏற்புடையதும் அல்ல.

(உ) ஆகையால், உச்ச நீதிமன்றம், இந்த வழக்கில், அரசு பணியாளர், தன்னுடைய பணிநலன் தொடர்பாக உள்ள பணிக்கொடையோ அல்லது சேமநல நிதி அல்லது ஓய்வு சம்பந்தப்பட்ட எந்த ஒரு பலனையும், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எந்த ஒரு நுகர்வோர் நீதிமன்றத்திலும் கோர முடியாது என்றும் அரசு பணியாளர், பிரிவு 2(1)(d)(ii)-ன் கீழ் சொல்லப்பட்டிருக்கும், 'நுகர்வோர்' எனும் வரையறைக்குள் வர இயலாது என்றும் இம்மாதிரியான, அரசு பணியாளர்கள், தன்னுடைய ஓய்வு நலத்திட்டம் சம்பந்தமான பலன்களை அதனுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு, அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்புகளிடமே கோர முடியும் என்றும் தெரிவித்தது.

(ஊ) உச்ச நீதிமன்றம், அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட உறுதிமொழியான, 'எந்த ஒரு அபராத வாடகையும் மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூலிக்கப்பட போவதில்லை' என்பதை

குறித்துக் கொண்டது. வேறு எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்காமல், மேல்முறையீட்டு மனு, இவ்வாறாக முடிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2013 SC 3060; (2013) 10 SCC 136;

(2013) CPJ 22 (SC); 2013(3) CPR 514 (SC).

***

## 6. அரியானா மாநில விவசாய வர்த்தக வாரியம் *(எதிர்)* பிஷாம்பர் தயாள் கோயல் மற்றும் பலர்

**(Haryana State Agricultural Marketing Board v. Bishamber Dayal Goyal and Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய சீராய்வு மனு (Revision Petition) எண்கள்:534-537/2005-ல் 13.04.2005-அன்று வழங்கிய ஆணையிலிருந்து.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

அரியானா மாநில விவசாய வர்த்தக வாரியம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பிஷாம்பர் தயாள் கோயல் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:3122/2006.

தீர்ப்பு தேதி : 26.03.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

அரியானா மாநில அரசு 16.11.1971-ல் வெளியிட்ட தகவல் அறிவிப்பில் (notification) ஆதம்பூர், புதிய அரிசி மண்டி பகுதியை மார்கெட் பகுதியாக அறிவித்தது. 1980-ல் அதே அரசு, புதிய அரிசி மண்டியின் துணை மார்கெட் பகுதியை அறிவித்தது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட பகுதி 1986-ல் மேல்முறையீட்டாளர்களான வேளாண்மை வர்த்தக வாரியத்திற்கு மாற்றப்பட்டது. முழு பணத்தில் 25% செலுத்தியதின் அடிப்படையில், பதிலுரையாளர்களுக்கு, மேல்முறையீட்டாளரினால், வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டன. பணம் செலுத்தும் முறை மற்றும் பணம் செலுத்த தவறினால் ஏற்படும் விளைவுகளும், வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டள்ளது. இந்த வழக்கில், பதில் மனுதாரர்கள் பிறதவணைகளை செலுத்த தவறியதால், மேல்முறையீட்டாளர் மீதமுள்ள 75% தவணைத் தொகையை வட்டி மற்றும்

அபராதத்துடன் செலுத்த கோரி நோட்டீஸ் அனுப்பினர். ஆதம்பூர் மண்டியை மார்கெட் பகுதியாக அறிவிக்காததாலும், அங்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தராததையும், சேவையின் மீதான குறைபாடு என்று கூறி, பதிலுரையாளர்கள் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்தனர். புகார் மனுவை விசாரித்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், ஆணையாளர் ஒருவரை நியமித்து, அவரிடம் இந்த வழக்கில் எழுப்பப்பட்டிருக்கும் பிரச்சனைகள் குறித்து, ஒரு அறிக்கை சமர்பிக்கும்படி கேட்டுக்கொண்டது. அவ்வறிக்கையை அடிப்படையாக கொண்டு, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் கூறியதாவது: மேல்முறையீட்டாளர், புகார்தாரரின் அரிசி மண்டி பகுதியை துணை மார்கெட் பகுதியாக அறிவிக்காததால், புகார்தாரர்கள்/பதில் மனுதாரர்கள் தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் (வாங்கியிருக்கும்) இடத்தில், தானிய வியாபாரம் செய்யமுடியவில்லை. ஆகவே, இது மேல்முறையீட்டாளரின் சேவையின் மீதான குறைபாடு என்று கூறிய மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர்கள் (வீட்டு மனைக்கான ஆணை வழங்கிய தேதியிலிருந்து) இரண்டு வருடத்திற்கு பிறகு, பதில் மனுதாரர்கள் செலுத்திய தொகையை 12% வட்டியுடன் திருப்பி கொடுக்கவேண்டும் என்றும் கூறியது. அதனுடன், பதில் மனுதாரர்கள், மீதி தொகையையும் செலுத்தக்கோரி, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் பணித்தது. மேலும், மேல்முறையீட்டாளர்கள் அதன் மீது எந்த வட்டியும், அபராத தொகையும் விதிக்கக் கூடாது என்றும் கூறியது. மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவுகளை எதிர்த்து, மேல்முறையீட்டாளர், தாக்கல் செய்த, மேல்முறையீட்டு மனு, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. மாநில நுகர்வோர் குறைதீர் நீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மறு சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து, இந்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 12 18, 22 மற்றும் 23; பஞ்சாப் விவசாய விளைபொருள் வர்த்தக சட்டம், (23/1961)-ல் பிரிவு 7.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *U.T. Chandigarh Administration & Anr. v. Amarjeet Singh & Ors.,* (2009) 4 SCC 660 : (AIR 2009 SC 1607 : 2009 AIR SCW 2522). [Para 6]
2. *Karnataka Industrial Areas and Development Board v. Nandi Cold Storage Pvt. Ltd.* (2007) 10 SCC 481 : (AIR 2007 SC 2694 : 2007 AIR SCW 4871). [Para 6]
3. *Narne Construction (P) Ltd. v. Union of India,* (2012) 5 SCC 359 : (AIR 2012 SC 2369 : 2012 AIR SCW 3274). [Para 6]
4. *Lucknow Development Authority v. M.K.Gupta,* (1994) 1 SCC 243 : (AIR 1994 SC 787 : 1994 AIR SCW 97). [Para 6]

5. *Municipal Corporation, Chandigarh & Ors. v. Shantikunj Investment (P) Ltd. & Ors.,*
(2006) 4 SCC 109 : (AIR 2006 SC 1270 : 2006 AIR SCW 1169). [Para 7]
6. *Haryana State Agricultural Marketing Board v. Raj Pal,*
(2011) 13 SCC 504 : (AIR 2011 SC 1394 : 2011 AIR SCW 950). [Para 7]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளரான நிர்வாகத்தின் முதன்மை வாதம் என்னவெனில் பதில் மனுதாரர்கள் நுகர்வோர்கள் இல்லை என்பதாகும். ஆனால், உச்ச நீதிமன்றம், *UT Chandigarh Administration and Anr. v. Amarjeet Singh and Ors.* (supra) and *Karnataka Industrial Areas and Development Board v. Nandi Cold Storage Pvt. Ltd.* (supra) வழக்குகளை மேற்கோள் காட்டி, கூறியதாவது, சட்டரீதியான நிர்வாகம் மற்றும் வளர்ச்சிக்கான குழுமம், பொதுவாக, வளர்ச்சிக்காக, இம்மாதிரியான நிலங்கள் ஒதுக்கீடு செய்யும்போது, அதன் சேவையில், ஏதேனும் குறை ஏற்பட்டால், அது நுகர்வோர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வரும் என்றும் கூறியது.

(ஆ) இந்த வழக்கில், கட்டுமான பணி நடந்து கொண்டிருக்கும்போது, முன்னேற்றத்தில் இருந்த வீட்டு மனைகளை தானிய ஏலம் மற்றும் வியாபாரம் தொடர்பாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிபந்தனைக்கு உட்பட்டுதான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆகையால், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஏலம், பொது ஏலம் அல்லது ‘உள்ளபடியேயான ஏலம்’ (as is where is basis) என்கிற மாதிரியான ஏலத்திலிருந்து மாறுபட்டது. இத்தகைய சூழ்நிலையில், கொடுக்கப்பட்ட வீட்டு மனைகள் உபயோகப்படுத்துவதற்கும், அனுபவிப்பதற்கும் போதுமான வசதிகளோடு கொடுக்க வேண்டியது மேல்முறையீட்டாளரான நிர்வாகத்தின் கடமையாகும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(இ) மேலும், உச்ச நீதிமன்றம், *Haryana State Agricultural Marketing Board v. Raj Pal* (மேலே குறிப்பிடப்பட்டுள்ளது) வழக்கில் கொடுக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகளை மேற்கோள் காட்டி கூறியதாவது: வீட்டு மனைகளுக்கான தவணைகளை சரியாக செலுத்தாததும், வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டதற்கான உத்தரவில் சொல்லப்பட்டிருக்கும் விதிமுறைகளை மீறுவதும், பதிலுரையாளர்களின் மீதான தவறாகும். நடந்த சூழ்நிலைகளை வைத்து பார்க்கும்போது, மேல்முறையீட்டாளர்கள் கடந்த இருபது வருடங்களாக வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்ட பகுதியை சீர்செய்ய முடியவில்லை; அதன் விளைவாக, பதில் மனுதாரர்கள்/புகார்தாரர்கள் மிகவும் நஷ்டம் அடைந்துள்ளார்கள். ஆகையால், இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, பதிலுரையாளர்களுக்கு போதுமான நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும், அபராத வட்டி தொகை விதித்தது மற்றும் வேறு சில அபராதங்கள் விதித்தது முற்றிலும் நியாயமற்றது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஈ) மேலும், இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியதாவது: மேல்முறையீட்டாளர், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவிற்கு எதிராக, எந்த ஒரு காரணங்களும் கூறவில்லை. மேலும், புகார்தாரர்கள்/பதிலுரையாளர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகையில் 12% தொகையை அபராத வட்டித் தொகையாக செலுத்தும்படி மேல்முறையீட்டாளருக்கு ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மேல்முறையீட்டு மனுவில், எந்த ஒரு நியாயமான காரணமும் எழுப்பப்படாததால், மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2014 SC 1766; II (2014) CPJ 11 (SC);

2014(2) CPR 176 (SC); 2017(1) CPR 44 (SC).

***

# 11. நுகர்வோர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு – மின்சார விநியோகம்

## 1. உத்திரபிரதேச மின்சக்திக் கழகம் மற்றும் பலர் *(எதிர்)* அனீஸ் அகமது (U.P. Power Corporation Ltd. & Ors. v. Anis Ahmad)

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 10.04.2008/16.04.2008, 13.03.2009, 29.03.2011, 07.07.2011–ஆகிய தேதிகளில் வழங்கிய தீர்ப்புகள் மற்றும் ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

உத்திரபிரதேச மின்சக்திக் கழகம் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

அனீஸ் அகமது – பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:5466/2012 (சிறப்பு விடுப்பு (சி) எண்:35906/2011 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது) உடன் C.A.No.5467-5468/2012 [@ SLP (C) No.18284-18285/2008]

C.A.No.5469 / 2012 [@ SLP (C) No.14306 / 2009]

C.A.No.5470 / 2012 [@ SLP (C) No.33557 / 2011]

C.A.No.5471 / 2012 [@ SLP (C) No.33558 / 2011]

C.A.No.5472 / 2012 [@ SLP (C) No.33559 / 2011]

C.A.No.5473 / 2012 [@ SLP (C) No.33560 / 2011]

C.A.No.5474 / 2012 [@ SLP (C) No.33561 / 2011]

C.A.No.5475 / 2012 [@ SLP (C) No.33562 / 2011]

தீர்ப்பு தேதி : 01.07.2013.

### 4. வழக்கின் சுருக்கம் :

இந்த வழக்கில், அனிஸ் அகமது, ராக்கி கோஷ், பிரித்வி பால் சிங், ஜுல்பிகர், ஷாசாதே ஆலம், அடுல் குமார் குப்தா, தவ்சீப் அகமது மற்றும் முகமது யூனிஸ் ஆகிய 8 பேர், தங்கள் குடியிருப்பில் வழங்கப்பட்டிருக்கும் இணைப்புகளிலிருந்து மின்சாரம் திருடியதாக கூறி, மேல்முறையீட்டாளரான கார்பரேஷன், நோட்டீஸ் அனுப்பியது. அவர்கள் அனைவரும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 2(1)(d)–ன் கீழ், மேல்முறையீட்டாளரான கார்பரேஷன் அனுப்பிய நோட்டீஸை ரத்து செய்யக்கோரியும், துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை திரும்ப வழங்க

கோரியும் மற்றும் இழப்பீடு வேண்டியும், மேல்முறையீட்டாளரான கார்பரேஷனுக்கு எதிராக, மோரதாபாத் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம்–II முன்பாக, புகார் மனு தாக்கல் செய்தனர். மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் புகார்தாரர்களுக்கு சாதகமாக முடிவு செய்தது. நுகர்வோர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக, உ.பி. பவர் கார்பரேஷன் லிமிடெட் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தது. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் சீராய்வு மனு செய்யப்பட்டது. சீராய்வு மனுவை விசாரித்த தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புகார்தாரர்/பதில் மனுதாரர், மின்சார திருட்டிற்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து, மின்சாரச் சட்டம் பிரிவு 126–ன் கீழோ அல்லது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழோ மேல்முறையீடு செய்யலாம் என்று தீர்ப்பளித்தது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் இந்த முடிவை எதிர்த்து, இந்த உரிமையியல் மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டு மனுவில் இருபெரும் சட்ட வினாக்கள் எழுப்பப்பட்டன அவையானவை: (1) இந்த வழக்கில் புகார்தாரர்கள்/பதில் மனுதாரர்கள் தாக்கல் செய்த புகார் மனு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் விசாரிக்க ஏற்புடையதா? (2) பிரிவு 126 அல்லது பிரிவுகள் 135 முதல் 140 மின்சாரச் சட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க நுகர்வோர் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இருக்கிறதா? மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டன மேலும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவுகள் ரத்து செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (c), (d), (g), (o) மற்றும் 23; மின்சாரச் சட்டம், 2003–ன் பிரிவுகள் 126, 127, 135–140, 153, 173 மற்றும் 174.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளர்கள் உச்ச நீதிமன்றத்தின் முன்பாக வைத்த வாதங்கள் பின்வருமாறு: (1) மின்சார சட்டம், 2003–ன் பிரிவுகள் 126, 127 மற்றும் 135–ன் கீழ் புகார்தாரரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மின்சேவையின் மீது குறைபாடு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை இல்லை. எனவே, மேற்சொன்ன பிரிவுகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிரான புகார்கள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நுகர்வோர் நீதிமன்றங்களில் ஏற்புடையதல்ல; (2) பிரிவுகள் 126, 127 மற்றும் 135 மின்சாரச் சட்டத்திற்கும், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திற்கும் எந்த முரண்பாடும் இல்லையெனும் போது, மின்சாரச் சட்டம், பிரிவுகள் 173 மற்றும் 174–ன் தலையீட்டிற்கு அவசியமில்லை.

(ஆ) அதற்கு மாறாக, பதில் அளிப்பவர்கள் மின்சாரச் சட்டம், பிரிவு 126-ன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட புகார் மனு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நுகர்வோர் நீதிமன்றங்களில் அனுமதிக்கத் தக்கது என்று வாதிட்டனர்.

(இ) உச்ச நீதிமன்றம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவுகள் 2(1)(c), (d), (g), (o), (r) மற்றும் மின்சார சட்டம், 2003-ன் பிரிவுகள் 126, 127, 135 to 140, 173, 174 மற்றும் 175 அலசி ஆராய்ந்த பிறகு, பின்வரும் முடிவுகளை எட்டியது:

(1) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 3-ஐ பார்க்கும் போது, மற்ற பிற சட்டங்களின் எந்த பிரிவுகளுக்கும் எந்த வித முரண்பாடும் ஏற்படாத அளவிற்கு, நுகர்வோர் நீதிமன்றங்களுக்கு அதிகார வரம்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மற்ற பிற சட்டங்களினால் அளிக்கப்படும் உரிமைகளையோ, நிவாரணங்களையோ பறிக்கும் வகையில் பிரிவு 3 வடிவமைக்கப்படவில்லை. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் அளிக்கப்படும் நிவாரணங்கள், மற்ற பிற சட்டங்களிலிருந்து கிடைக்கும் நிவாரணங்களுக்கு கூடுதல் நிவாரணமே தவிர, அதை பறிக்கும் வகையில் இல்லை. இதுவே, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 3-ஐ பொறுத்தவரையில் பாராளுமன்றத்தின் எண்ணமாகவும் பிரதிபலிக்கப்படுகிறது.

(2) எனவே, மின்சாரச் சட்டம், பிரிவு 126-ன்கீழ் 'அனுமதி இல்லாமல் மின்சாரம் எடுத்ததற்கு' எதிராக தொடரப்பட்ட நடவடிக்கையில், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 3 மற்றும் மின்சாரச் சட்டம், பிரிவுகள் 173, 174 மற்றும் 175-ஐ பயன்படுத்தி, நுகர்வோர் நீதிமன்றம் அதிகார வரம்பை எடுத்துக்கொள்ள முடியாது. மேலும், மின்சாரச் சட்டம், பிரிவு 126-ன் வரையறை செய்யப்பட்டிருக்கும் 'அனுமதியின்றி மின்சாரம் எடுத்தல்' எனும் குற்றமோ அல்லது மின்சாரச் சட்டம், பிரிவுகள் 135 முதல் 140 வரை குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்களோ, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 2(1) (c)-ன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் புகார் எனும் பதத்திற்குள் வராது என்று நீதிமன்றம் கூறியது.

(ஈ) மேலும் உச்ச நீதிமன்றம் கூறியதாவது: மின்சாரச் சட்டம், 2003, பிரிவு 126 (b)-ன் வரையறை செய்யப்பட்டிருக்கும் அனுமதியின்றி மின்சாரம் எடுத்தல் எனும் குற்றத்திற்கும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டிருக்கும் 'நியாயமற்ற வியாபார நடைமுறைக்கும்', 'ஒடுக்கப்பட்ட வியாபார நடைமுறைக்கும்' அல்லது சேவையின் மீதான குறைபாடு எனும் குற்றத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மேலும் ஆபத்தான சேவைகள் எனும் பதத்திற்குள்ளும் வரவில்லை. அதுமட்டுமல்லாது, 'அனுமதியின்றி மின்சாரம் எடுத்தல்' என்பது 'அதிகமாக விலை விதித்தல்' எனும் செயலுடனும் சம்பந்தபடுத்த முடியாது என்று நீதிமன்றம் கூறியது. எனவே, மேற்சொன்ன செயல், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டிருக்கும் புகார் எனும்

பதத்திற்குள் வராது என்றும், அதன் விளைவாக, மின்சாரச் சட்டம், பிரிவு 126–ன்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக தொடுக்கப்பட்ட புகார் மனுவும், நுகர்வோர் நீதிமன்றத்தில் அனுமதிக்க இயலாது என்றும் கூறியது. மின்சாரச் சட்டம், பிரிவுகள் 135 முதல் 140 வரை சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களை, பிரிவு 153–ல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறப்பு நீதிமன்றங்களில் மட்டுமே விசாரிக்க முடியும் என்று ஏற்கனவே தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் கூறியதை, உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. எனவே, பிரிவுகள் 135 முதல் 140 வரையிலான மின்சார சட்டத்தின் குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு, எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளை நுகர்வோர் நீதிமன்றத்தில் அனுமதிக்க இயலாது.

(உ) மேற்சொன்ன கருத்துகளின் உதவியோடு, கீழ்க்கண்ட முடிவுகளை இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது:

(1) நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திற்கும், மின்சார சட்டத்திற்கும் இடையே முரண்பாடு (கருத்து வேறுபாடு) ஏற்படும்போது, நுகர்வோர் பாதுகாப்பு சட்டமே மேலானதாக கருதப்படும். ஆயினும், அத்தகைய நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் வரையறைகளில் சொல்லப்பட்டிருக்கும் ‘சேவை’, ‘புகார்’ எனும் பதத்திற்குள் சம்பந்தப்பட்ட நபரின் செயலோ அல்லது சேவையோ வராத பட்சத்தில், நுகர்வோர் நீதிமன்றத்திற்கு எந்த ஒரு அதிகார வரம்பும் வராது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(2) எனவே மின்சாரச் சட்டம் பிரிவு 126 மற்றும் பிரிவுகள் 135 முதல் 140–ன்கீழ் வரையறுக்கப்பட்டிருக்கும் குற்றங்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக தொடுக்கப்பட்ட புகார் மனு, நுகர்வோர் நீதிமன்றங்களில் அனுமதிக்க இயலாது.

(3) மேலும், மின்சாரச் சட்டம், 2003 மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 2(1)(d)–ல் வரையறுக்கப்பட்டிருக்கும் நுகர்வோர் எனும் பதத்திற்குள் வருவோருக்கு, போதுமான நிவாரணங்களை அளிக்க தயாராக உள்ளது. ஆனால், அவை, நியாயமற்ற வியாபார நடைமுறை, ஒடுக்கப்பட்ட வியாபார நடைமுறை மற்றும் சேவையில் குறைபாடு அல்லது அபாயகரமான சேவை அல்லது மிக அதிகமாக விலை விதிப்பு சம்பந்தமாக எழும் பிரச்சனைகளுக்கு மட்டுமே ஆகும்.

(ஊ) அதன் அடிப்படையில், உச்ச நீதிமன்றம், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் உத்தரவுகளை ரத்து செய்து, மேல்முறையீட்டாளர் அல்லது சேவைதாரர்/உரிமையாளர்/ உ.பி. பவர் கார்ப்ரேஷன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை அனுமதித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

III (2013) CPJ 1 (SC); 2013(3) CPR 670 (SC).

***

## 12. வரையறைகள்

### 1. மத்திய தலைமை தபால்துறை தலைவர் அவர்கள் அலுவலகம் மற்றும் பலர் *(எதிர்)* லிவ்விங் மீடியா இந்தியா லிமிடெட் மற்றும் ஒருவர்

**(Office of the Chief Post Master General & Ors. v. Living Media India Ltd. & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

டெல்லி உயர் நீதிமன்ற வழக்கின் LPA எண்கள்:418 மற்றும் 1006/2007 அனுமதிக்கப்பட்ட 11.09.2009 தேதியிட்ட தீர்ப்பும் அதன் ஆணையும்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

மத்திய தலைமை தபால்துறை தலைவர் அவர்கள் அலுவலகம்
மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

லிவ்விங் மீடியா இந்தியா லிமிடெட் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:2474-2475/2012 (சிறப்பு விடுப்பு (சி) எண்கள்:7595-96/2011 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 24.02.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், பதிலுரையாளர் நம்பர்-1, லிவிங் மீடியா லிமிடெட் கம்பெனியானது, ‘ரீடர்ஸ் டைஜெஸ்ட்’ மற்றும் ‘இந்தியா டுடே’ என்ற இரண்டு பத்திரிகைகளை வெளியிடக்கூடிய நிறுவனமாகும். மேற்சொன்ன இரு பத்திரிக்கைகளும், மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தால் (டெல்லி வட்டாரம்) முறையே பதிவு செய்யப்பட்டு, பதிவு எண் பெற்றவை ஆகும். பதிலுரையாளர் நம்பர்-1-னின் நிறுவனமானது, இந்திய தபால் அலுவலகச் சட்டம் மற்றும் அதன் விதிமுறைகளின் அடிப்படையில், தன் நிறுவன பத்திரிக்கைகளை சலுகை விலையில் தபாலில் அனுப்புவதற்கு அனுமதி பெற்றிருந்தது. 14.10.2005 அன்று, ரீடர்ஸ் டைஜெஸ்ட், டிசம்பர் 2005 மாத பிரதியை தபாலில் அனுப்புவதற்கு மேல்முறையீட்டாளரின் அலுவலகத்திடம் விண்ணப்பித்திருந்தது. பதிலுரையாளர் நம்பர்-1 நிறுவனம், மேற்சொன்ன டிசம்பர் 2005 மாத பிரதியுடன், டொயோடா மோட்டார் கார்பரேஷன் பற்றிய ஒரு விளம்பரத்தையும், 2006-ம் ஆண்டிற்கான காலண்டரையும் இலவச இணைப்பாக இணைத்திருந்தது. மேல்முறையீட்டாளர் அலுவலகம், மேற்சொன்ன விளம்பரத்தையும், 2006-வது வருட காலண்டரையும், இலவச இணைப்பாகவோ அல்லது பத்திரிக்கையின் ஒரு பகுதியாகவோ எடுக்க மறுத்து, அதனை சலுகை விலையில்,

அந்த பத்திரிக்கையுடன் தபாலில் அனுப்புவதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இதேபோல், டிசம்பர் 26, 2005-ல் வெளியிடப்பட்ட இந்தியா டுடே பத்திரிக்கையுடன் இலவச இணைப்பாக வைக்கப்பட்ட ஆம்வே இந்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விளம்பரத்தை சலுகை விலையில், அந்த பத்திரிக்கையுடன் தபாலில் அனுப்புவதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மேல்முறையீட்டாளரின் இந்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட, பதிலுரையாளரின் நிறுவனம், உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராண்மை மனு தாக்கல் செய்தது. மனு அனுமதிக்கப்பட்டது. அது சம்பந்தமாக, தபால் அலுவலகம் தாக்கல் செய்த Letters Patent Appeal (காப்புரிமைக்கான மேல்முறையீட்டு மனுவும்) 11.09.2009 அன்று கொடுத்த உத்தரவினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து, தபால் நிறுவனம், சிறப்பு அனுமதியுடன் கூடிய மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. மேல்முறையீட்டு மனுவின் தாமதத்தை காரணம் காட்டி, உச்ச நீதிமன்றம் அதனை தள்ளுபடி செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், ஷரத்து 136; வரையறை சட்டம், 1963, பிரிவு 5.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *State of Haryana v. Chandra Mani & Ors.,* (1996) 3 SCC 132. [Para 7]
2. *State of U.P & Ors. v. Harish Chandra & Ors.,* (1996) 9 SCC 309. [Para 7]
3. *National Insurance Co. Ltd. v. Giga Ram & Ors.,* (2002) 10 SCC 176. [Para 7]
4. *State of Nagaland v. Lipok Ao & Ors.,* (2005) 3 SCC 752. [Para 7]
5. *Commissioner of Wealth Tax Bombay v. Amateur Riders Club,* (1994) Supp. (2) SCC 603. [Para 10]
6. *Pundlik Jalam Patil (dead) by LRS v. Executive Engineer, Jalgaon Medium Project & Anr.,* (2008) 17 SC 448. [Para 10]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில் பின்வரும் சட்டப் பிரச்சனைகள் எழுப்பப்பட்டன:

(i) தலைமை தபால் அலுவலக அதிகாரியின் அலுவலகம், 427 நாள் கழித்து, சிறப்பு அனுமதி பெற்ற மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ததற்கு நியாயமான காரணம் தெரிவித்திருக்கிறதா? மேற்சொன்ன தாமதத்தை அனுமதிக்கும் பட்சத்தில், கீழ்க்கண்ட சட்ட வினாக்கள், தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன. அவையானவை:

(2) ரீடர்ஸ் டைஜெஸ்ட், டிசம்பர் 2005-துடன் இணைத்து வைக்கப்பட்ட விளம்பரம், சட்டப்படி அனுமதிக்க தக்கதா?

(3) தபால் அலுவலகம் தாக்கல் செய்த சிறப்பு அனுமதியுடன் கூடிய மேல்முறையீட்டு மனுவை, இந்த உச்ச நீதிமன்றம் ஷரத்து 136-ன்கீழ் தலையிட்டு, உயர் நீதிமன்றம் அளித்த முடிவுகளை மறு ஆய்வு செய்யும் அளவிற்கு, அதில் அடிப்படை முகாந்திரம் உள்ளதா?

(ஆ)தபால் அலுவலகம், *Collector, Land Acquisition, Anantnag and Another v. Mst. Katiji and Others, G. Ramegowda, Major and Others v. Special Land Acquisition Officer, Bangalore, (1988) 2 SCC 142, State of Haryana v. Chandra Mani & Ors., State of U.P & Ors. v. Harish Chandra & Ors., National Insurance Co. Ltd. v. Giga Ram & Ors., State of Nagaland v. Lipok Ao & Ors.,* வழக்குகளை தனது வாதங்களுக்கு ஆதரவாக மேற்கோள் காட்டியது. பதிலுரையாளரின் வழக்கறிஞர், *Commissioner of Wealth Tax Bombay v. Amateur Riders Club, Pundlik Jalam Patil (dead) by LRS v. Executive Engineer, Jalgaon Medium Project & Anr.,* ஆகிய வழக்குகளை மேற்கோள் காட்டி காலதாமதத்தை கட்டுப்படுத்தும் சட்டம் (law of limitation) அனைவரையும் கட்டுப்படுத்தும், அதற்கு அரசு துறைகளும் விதிவிலக்கு அல்ல என்று வாதிட்டனர்.

(இ) இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பிறகு, உச்ச நீதிமன்றம் பின்வரும் கருத்துக்களை கூறியது:

(1) மேல்முறையீட்டாளர் மேற்கோள் காட்டிய வழக்குகளில் கால தாமதம் மன்னிக்கப்பட்டு, மனு ஏற்கப்பட்டிருக்கிறது.

(2) அதேபோல், இந்த வழக்கிலும், தபால் அலுவலகம் ஏற்படுத்திய தாமதத்தை மன்னித்து வழக்கை ஏற்கவேண்டும் என்ற கோரிக்கையை இந்த நீதிமன்றம் பரிசீலிக்கிறது.

(3) ஆனால், இந்த வழக்கில், உயர் நீதிமன்றம் கொடுத்த உத்தரவின் தேதியை தபால் அலுவலகம் நன்கு அறிந்திருக்கிறது என்பதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(4) ஆனால், அந்த தீர்ப்பின் உரிய நகலை பெறுவதற்கு ஏன் உடனே விண்ணப்பிக்கவில்லை என்பதற்கான விளக்கம் கொடுக்கப்படவில்லை.

(5) தபால் அலுவலகம் சமர்பித்த வாக்கு மூலத்தை வைத்து பார்க்கும்போது, வழக்கின் ஒவ்வொரு நிலையிலும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் தாமதத்திற்கான காரணம் ஏதும் சமர்பிக்கப்படவில்லை. மாறாக கோப்புகள் கைமாறிய தேதி மற்றும் முடிவுகள் எடுத்தது மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. தபால் அலுவலகத்தின் நபர்கள், இந்த வழக்கை போதுமான கவனத்துடன், கையாளவில்லை என்று இறுதியாக உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(ஈ) இந்த வழக்கில் தொடர்புடைய, மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தை சேர்ந்தவர்கள், இந்த வழக்கின் மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு, சிறப்பு அனுமதியுடன் கூடிய மேல்முறையீட்டு மனுவாகதான் தாக்கல் செய்ய முடியும் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். மேலும், இந்த வழக்கின், ஒவ்வொரு நிலையிலும், கால தாமதம் ஏற்பட்டால், அது கால நிர்ணயச் சட்டம் (law of limitation)-க்கு உட்பட்டுதான் செய்ய முடியும் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். இம்மாதிரியான வழக்குகளில், பொதுவாக அரசு தரப்பிலிருந்து கூறப்படும், போதிய ஆள் பலம் இல்லை மற்றும் அதிகப்படியான பணிச்சுமை போன்ற சாக்கு போக்குகள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் கால நிர்ணயச் சட்டம் அனைவரையும் கட்டுப்படுத்தும், அரசாங்கத்தையும் கூட என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(உ) மேலும், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளும்படியான விளக்கம் அளிக்காமல், வழக்கமாக கூறப்படும் நிர்வாக முறைப்படி கோப்புகள் பார்க்கப்படுவதால் சில கோப்புகள் கட்டுண்டு (Red-tape) சில மாதங்கள் இருந்தது என வழக்கமாக சொல்லப்படும் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. அரசுத் துறைகள் எப்போதும் மிகவும் சுறுசுறுப்பாகவும் மற்றும் பொறுப்புடனும் செயல்படவேண்டிய தார்மீக கடமை அவைகளுக்கு உள்ளது. வழக்கின் தாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொள்ளுதல் என்பது விதிவிலக்குதானே தவிர, அதை எப்போதும் ஒரு அனுகூலமாக, நீதிமன்றங்கள் தரப்பிலிருந்து அரசு எப்போதும் எதிர்பார்க்க கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. சட்டம் என்பது அனைவருக்கும் ஒரே மாதிரியான நிலைப்பாட்டை கையாள கருவியாக இருக்கவேண்டுமே தவிர, ஒரு சிலரின் அனுகூலத்திற்காக, அது தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள இயலாது என்றும் நீதிமன்றம் கூறியது. இந்த வழக்கை பொருத்தவரை, தபால் அலுவலகம் ஏற்றுக்கொள்ளும்படியான மற்றும் தாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் அளவிற்கான காரணத்தை சமர்ப்பிக்க தவறிவிட்டது.

(ஊ) மேற்சொன்ன முடிவுகளின் அடிப்படையில் மேலே கூறப்பட்ட சட்ட வினாக்கள் (2) மற்றும் (3) பற்றி விசாரிக்க தேவையில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆகையால், மேல்முறையீட்டு மனுக்கள் கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்ட காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

2013(2) CPR 306 (SC).

***

**2. முனிஷ் தேவி** *(எதிர்)* **உத்திரபிரதேச மின்சார வாரியம் மற்றும் பலர்**

**(Muneesh Devi v. Uttar Pradesh Power Corporation Ltd. & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் OP.No.253/2012-ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

முனிஷ் தேவி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

உத்திரபிரதேச மின்சார வாரியம் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:4075/2013.

தீர்ப்பு தேதி : 19.07.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளரின் கணவர், ஸ்ரீ ஜக்பீர் சிங், மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட், டெல்லியில் வேலை பார்த்து வந்தார். 05.02.2000 அன்று, உ.பி. பவர் கார்ப்பரேஷன் லிமிடெட், பதிலுரையாளர் நம்பர்-1 நிறுவிய மின்மாற்றி தீடீரென வெடித்து சிதறியதால் மேல்முறையீட்டாளரின் கணவருக்கு 85% தீக்காயம் ஏற்பட்டது. காயத்தின் விளைவாக, மேல்முறையீட்டாளரின் கணவர், அவரது மனைவி மற்றும் மூன்று மைனர் குழந்தைகளை ஆதரவற்ற நிலையில் விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேல்முறையீட்டாளர், 28.07.2000 அன்று பதிலுரையாளரிடம் ரூ.25 இலட்சம் நஷ்டஈடாக கேட்டு கோரிக்கை விடுத்தார். கோரிக்கை மறுக்கப்பட்டதால், மேல்முறையீட்டாளர் ரூ.20 இலட்சம் நஷ்டஈடு கோரி உரிமையியல் நீதிபதி அடங்கிய நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு போதுமான, வழக்கிற்குரிய கட்டணம் செலுத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு, மேல்முறையீட்டாளர் இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 226-ன்கீழ், ஆணையிடுமாறு (mandamus), அவரது கணவர், பதிலுரையாளரின் கவனக் குறைவால்தான் இறந்தார் என்று கூறி, இழப்பீடு கேட்டு தாக்கல் செய்தார். அந்த நீதிப்பேராணை, இரண்டு நீதிபதிகள் கொண்ட, நீதிமன்ற அமர்வால், தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து, தாக்கல் செய்யப்பட்ட, சிறப்பு அனுமதி பெற்ற (சிவில்) மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு, மேல்முறையீட்டாளர், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 21-ன்கீழ், ரூ.25 இலட்சம் நஷ்டஈடு கோரி, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் தொடுத்தார். ஆணையம், 25.07.2002-ல் பிறப்பித்த ஆணையின்படி, மேல்முறையீட்டாளருக்கு புகாரை

திருத்தி அளிப்பதற்கு அனுமதி அளித்தது. மேல்முறையீட்டாளரும் அவ்வாறு செய்தார். மேல்முறையீட்டாளர், மேலும், இந்த புகார், தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 156 நாள் தாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்வதற்கு ஒரு மனு தாக்கல் செய்தார். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மேல்முறையீட்டாளர், ஏற்கனவே, 28.07.2000 அன்று முறையீடு செய்தார் என்பதை நிரூபிக்கவில்லை என்று கூறியும், புகார் மனு தாக்கல் செய்வதில் மிகுந்த தாமதம் ஏற்பட்டதாலும், புகார் மனுவை தள்ளுபடி செய்தது. மேலும், தேசிய நுகர்வோர் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் புகார் தொடுப்பதற்கு முன்பாக, உரிமையியல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே நிவாரணங்களை கோரியிருக்கிறார் என்பதை கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. தேசிய நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்து, இந்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. காலதாமதம் மன்னித்து ஏற்கப்பட்டது மற்றும் வழக்கை புதிதாக விசாரித்து நியாயமான காரணங்களின் அடிப்படையில் வழக்கை தீர்க்குமாறு தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு திருப்பி அளிக்கப்பட்டது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 12, 21, 23 மற்றும் 24A; வரையறை சட்டம், 1963, பிரிவுகள் 5 மற்றும் 14.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

1. *Munesh Devi v. State of U.P.,*
   SLP (C) No.5210 of 2002, order dated 15.03.2002 (SC).
2. *Munesh Devi v. State of U.P.,*
   Civil Misc. Writ Petition No.34463 of 2001
   (Writ-C 34463 of 2001), order dated 01.11.2001 (All).

### 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

(அ) இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் முதலாவதாக கூறியதாவது: பிரிவு 12 மற்றும் 24A, நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்படி, வழக்கிற்கான காரணம் எழுந்த இரண்டு வருடத்திற்குள், வழக்கு தாக்கல் செய்யப்படாவிடில், வழக்கு தாக்கல் செய்யாததற்கு போதுமான காரணத்தை தெரிவிக்க வேண்டும், அந்த காரணத்தை நீதிமன்றம், ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், வழக்கு ஏற்றுக்கொள்ளப்படும், இல்லாவிடில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) மேல்முறையீட்டாளர், ஏற்கனவே, தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு, நீதிப்பேராணை மற்றும் சிறப்பு அனுமதி பெற்ற மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் பிரதிகளை உற்றுநோக்கிய பிறகு, காலவரையறை சட்டத்தையும் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் காலதாமதத்திற்காக தாக்கல் செய்த புகார் மனுவை

ஏற்றுக்கொண்டது. மேல்முறையீட்டாளர் மேலும் வாதிட்டது என்னவென்றால், நஷ்டஈடு கோருவதற்கான காரணம், காலதாமதத்தினால் பாதிக்கப்படவில்லை, அது தொடர்கிறது என்று வாதிட்டார். மேலும், இதில் மேல்முறையீட்டாளர் போதுமான அளவு கல்வியறிவு இல்லாதவர் மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட சட்ட சம்பந்தமான அறிவுரையின்படிதான் அவர் செயல்பட்டார் என்கிற உண்மையை, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முற்றிலுமாக கருத்தில் எடுத்துக்கொள்ள தவறிவிட்டது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேல்முறையீட்டாளர் முதலில் தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு, போதுமான நீதிமன்ற வழக்கு தொகை தரவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு, மேல்முறையீட்டாளர், உயர் நீதிமன்றத்தின் முன்பாக ஒரு நீதிப்பேராணையும், உச்ச நீதிமன்றத்தின் முன்பாக, சிறப்பு அனுமதியுடன் கூடிய மனுவும், நஷ்டஈடு கொடுக்க கூறி, பதிலுரையாளருக்கு ஆணை (mandamus) பிறப்பிக்குமாறு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் கோரப்பட்டுள்ள இத்தகைய நிவாரணங்களை பெறுவதற்கு, இவ்வளவு காலம் தேவைப்பட்டது என்று நீதிமன்றம் அனுமானித்துக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், இந்த வழக்கில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலோ அல்லது இந்த வழக்கில் நீதிமன்ற நிவாரணங்களை கோருவதிலோ, மேல்முறையீட்டாளர் நியாயமற்ற முறையில் நடந்து கொண்டார் என்பதற்கான வாதமோ அல்லது அதற்கான சான்றுகளோ பதிலுரையாளர் சமர்ப்பிக்கவில்லை. ஆகையால், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 24A-ன்கீழ் தாமதத்தை மன்னித்து, மனுவை ஏற்றுக்கொள்வதற்கு, போதுமான முகாந்திரம் இந்த வழக்கில் இருப்பதாக உச்ச நீதிமன்றம் கருதியது. மேல்முறையீட்டாளர், பதிலுரையாளரிடம் நஷ்டஈடு கேட்டு முறையிட்டதை, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முன்பாக, திறம்பட வாதிக்கவில்லை என்ற ஒரு காரணத்தை காட்டி, தாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்தது நியாயமற்றது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே, உச்ச நீதிமன்றம், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் கொடுத்த உத்தரவு செல்லாது என்று கூறி ரத்து செய்தது.

(இ) முடிவில், மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மனு தாக்கல் செய்யப்படுவதில் ஏற்பட்ட தாமதம் மன்னித்து புகார் மனு ஏற்கப்பட்டது. மேலும், வழக்கை, நியாயமான காரணங்களுக்காக திரும்ப விசாரித்து தீர்ப்பு வழங்குமாறு, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 10 SCC 478; AIR 2013 SC 2766.

***

## 13. ஒரே வழக்கிலுள்ள சாரங்கள் இரண்டாவது புகாரில் ஏற்கப்படுமா என்பதனைக் குறித்த வரையறை

**1. இந்திய இயந்திர கம்பெனி** *(எதிர்)* **அன்சால் குடியிருப்பு மற்றும் கட்டுமான கழகம் (Indian Machinery Company v. M/s. Ansal Housing & Construction Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய ஆணை மீது.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

இந்திய இயந்திர கம்பெனி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அன்சால் குடியிருப்பு மற்றும் கட்டுமான கழகம் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:557/2016, சிறப்பு விடுப்பு (சி) எண்:19618/2013 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது.

தீர்ப்பு தேதி : 27.01.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில் எழுப்பப்பட்ட முக்கியமான சட்ட வினா என்னவெனில், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட முதல் புகார் மனுவின் மீது வழக்கு தொடரவில்லை அல்லது ஏதேனும் காரணங்களுக்காக (தவறுதலுக்காக) வழக்கின் மீது எந்த விசாரணையும் இல்லை என்றபோது, அதே காரணத்திற்காக, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில், இரண்டாவது புகார் மனு தாக்கல் செய்யப்பட முடியுமா? இந்த சட்ட வினா குறித்து தாக்கல் செய்யப்பட்ட, மேல்முறையீட்டு மனுவில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், இரண்டாவது புகார் மனு அனுமதிக்க முடியாது என்று கூறியது. ஆனால், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், இந்த வழக்கின் பொருண்மைகளை வைத்து பார்க்கும்போது, இரண்டாவது புகார் மனு அனுமதிக்கப்படலாம் என்று கூறியது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 23 மற்றும் 30(1); தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 1988, விதி எண் 9(6); நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 1987 விதி எண் 15(6); நுகர்வோர் பாதுகாப்பு வழக்கு (சிவில் வழக்குமுறை) ஆணை எண் 9 விதி எண் 9(1); நுகர்வோர் பாதுகாப்பு வழக்கு ஆணை எண் 9 விதி எண் 8, 1908.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*New India Assurance Company Ltd. v. R.Srinivasan,* (2000) 3 SCC 242.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இதேபோன்ற ஒரு சட்ட வினா, *New India Assurance Company Ltd. v. R.Srinivasan* (supra) என்ற வழக்கிலும் எழுப்பப்பட்டது. இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம், பத்தி 16-ல் கீழ்க்கண்ட கருத்துக்களை கூறியது: “தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 1988, விதி எண் 9(6), மத்திய நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், 1988-ன் விதி 4(8) மற்றும் விதி 8(8)-டுடன் ஒத்ததாக இருக்கிறது. மேற்சொன்ன, துணை விதிகளின் கீழ், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு, போதுமான முகாந்திரம் இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்படலாம் அல்லது நியாயமான காரணங்களின் அடிப்படையில் தீர்க்கப்படலாம். இதே அதிகாரம், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு, பிரிவு 30(1)-ன்கீழ் இயற்றப்பட்டிருக்கும், விதி 15(6) வழங்குகிறது. முதல் புகார் மனுவானது ஏதேனும் குறைபாடு காரணமாகவோ அல்லது அடிப்படை முகாந்திரம் இல்லாமலோ, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தினாலோ (விதி 4(8)-ன்கீழ்) அல்லது மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தினாலோ (விதி 8(8)-ன்கீழ்) தள்ளுபடி செய்யப்படும்போது, இரண்டாவது புகார் மனு தாக்கல் செய்ய முடியாது என அவை கூறவில்லை. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 8-ல் இருப்பது போல் தடை நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் இல்லை. அது அவ்வாறு இருக்கும்போது, கட்டளை 9 (Order 9), விதி 8-ன்கீழ் விதிக்கப்பட்டிருக்கும் தடை, மாவட்ட மற்றும் மாநில நுகர்வோர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கிற்கு பொருந்தாது என்றும் நீதிமன்றம் கூறியது. இந்த வழக்கு, கீழ் நீதிமன்றங்களில், நியாயமான காரணங்களுக்காக இல்லாமல், புகார்தாரர் ஆஜராகவில்லை என்ற ஒரே காரணத்திற்காக புகார் மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இத்தகைய சூழ்நிலையில், ஏன் இந்த வழக்கில் முன்னதாக தாக்கல் செய்யப்பட்ட புகார் மனு விசாரிக்கப்படவில்லை மற்றும் ஏன் அந்த புகார் மனு, புகார் மனுதாரர் ஆஜராகவில்லை என்ற ஒரே காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்று விளக்கம் கேட்டதோடு, இரண்டாவது புகார் மனு தாக்கல் செய்யலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது”.

(ஆ) மேற்சொன்ன கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, கட்டளை எண் 9, விதி எண் 9(1) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் தடைபோல், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் இல்லாததால், மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது புகார் மனுவை அனுமதிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே, இந்த வழக்கில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் கொடுத்த உத்தரவை ரத்து செய்து ஒதுக்கி வைத்தது. மேலும், வழக்கை மீண்டும் நியாயமான காரணங்களின்

அடிப்படையில், புதிதாக விசாரிக்குமாறு, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு, உச்ச நீதிமன்றம் வழக்கை திருப்பி அளித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2016) 3 SC 689; AIR 2016 SC 2209.

***

# 14. மன்றங்கள் பின்பற்றிய / பயன்படுத்திய செயல்முறைகள்

## 1. A. ஸ்ரீமன்நாராயணா *(எதிர்)* தாசரி சாந்தகுமாரி மற்றும் ஒருவர்

## (A. Srimannarayana v. Dasari Santakumari & Anr.)

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய மறு சீராய்வு மனு (Revision Petition) எண்கள்:2032/2010-ல் 15.07.2010 அன்று (சிறப்பு விடுப்பு மனுவிலிருந்து எழுந்த (சி) எண்:26043/2010 மற்றும் சிறப்பு விடுப்பு மனு (சி) எண்:1495/2011) இவைகளிலிருந்து எழுந்த தீர்ப்பு மற்றும் ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

A. ஸ்ரீமன்நாராயணா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

தாசரி சாந்தகுமாரி மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:368/2013 உடன் 369/2013.

தீர்ப்பு தேதி : 09.01.2013.

### 4. வழக்கின் சுருக்கம் :

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாம் பதில் மனுதாரர் (மருத்துவர்கள்) ஆகியோர் புகார்தாரரின் கணவருக்கு, இடது காலில் அறுவை சிகிச்சை செய்தனர். அறுவை சிகிச்சை முடிந்து சிறிது நாள் கழித்து, அவர் இறந்துவிட்டார். அதனால், இறந்தவரின் மனைவியாகிய, முதலாவது பதிலுரையாளர், மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாம் பதிலுரையாளருக்கு எதிராக மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து, மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் விளக்கம் கேட்டு மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாவது பதிலுரையாளருக்கு நோட்டீஸ் அனுப்பியது. நோட்டீஸ் கொடுத்ததை தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் இந்த வழக்கில், *Martin F.D′ Souza v. Mohd. Ishfaq* என்ற வழக்கில் கூறியபடி, வழக்கிற்கு தொடர்புடைய வல்லுநரிடம் கருத்து கேட்காமல் புகார் மனுவை பதிவு செய்திருக்க கூடாது என்று கூறி சீராய்வு மனு தாக்கல் செய்தார். மேலும், அந்த சீராய்வு மனுவில், இரண்டாவது பதிலுரையாளர், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கை நிறுத்தி வைப்பதற்காக, இடைக்கால விண்ணப்பம் எண்:2240/2009-யும் தாக்கல் செய்தார். மனுவை நிராகரித்த மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மேல்முறையீட்டாளர் முறையான

மனுக்களை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, வழக்கிற்கு தேவையான வல்லுநரின் கருத்தை பெறுவதற்கு, சுதந்திரம் (நிவாரணம்) அளித்தது. ஆனால் மேல்முறையீட்டாளர், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. மாறாக, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் மறு சீராய்வு மனு எண்:2032/2010 தாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றம், *V. Kishan Rao v. Nikhil Super Speciality Hospital* என்ற வழக்கில் கூறிய தீர்ப்பை மேற்கோள்காட்டி, *Martin F. D' Souza* வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பானது, தொடர்புடைய சட்டப் பிரிவுகளையும், அந்த வழக்கு சம்பந்தமான முன்தீர்ப்புகளையும் கொண்டிராததால், அதை ஒரு சட்ட முன்மாதிரியாக (precedent) எடுத்துக் கொள்ள முடியாது. எனவே, அந்த தீர்ப்பு, ஒரு நல்ல முன்மாதிரியான தீர்ப்பு அல்ல *(per incuriam)* என்று கூறி தேசிய ஆணையம் மறு சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது. எனவே, இந்த சிறப்பு அனுமதி கொண்ட மேல்முறையீட்டு மனு / உரிமையியல் மேல்முறையீட்டு மனுவானது தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), 13, 14 மற்றும் 23; சான்று சட்டம் 1872, பிரிவு 45; இந்திய குற்றவியல் சட்டம் 1860, பிரிவு 304A.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *V. Kishan Rao v. Nikhil Super Speciality Hospital,*
   (2010) 5 SCC 513 : (2010) 2 SCC (Civ) 460.
   (Affirmed and followed) [Para 5]
2. *A. Srimannarayana v. Dasari Santakumari,*
   RP.No.2032 of 2010 order dated 15.07.2010 (NC).
   (Affirmed) [Para 1]
3. *Martin F. D' Souza v. Mohd. Ishfaq,*
   (2009) 3 SCC 1 : (2009) 1 SCC (Civ) 735 : (2009) 1 SCC (Cri) 958.
   (Held *per incuriam* on this point) [Para 4]
4. *Jacob Mathew v. State of Punjab,*
   (2005) 6 SCC 1 : 2005 SCC (Cri) 1369.
   (Applied) [Para 4]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இந்த வழக்கில், மேல்முறையீட்டாளரின் வாதம் என்னவெனில், *Jacob Mathew v. State of Punjab* என்ற வழக்கில் 3 நீதிபதிகள் அமர்வு அளித்த தீர்ப்பை தவறுதலாக

புரிந்துகொண்டு *Martin F. D' Souza* (supra) என்ற வழக்கில் அளித்த தீர்ப்பு தவறானது என *V.Kishan Rao* (supra) என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம், கூறியதாக மேல்முறையீட்டாளர் வாதிட்டார். மேலும், இந்த சட்ட முரண்பாடு, 3 நீதிபதிகள் அடங்கிய குழு, *Jacob Mathew v. State of Punjab* என்ற வழக்கின் தீர்ப்பால் ஏற்பட்டது என்றும் வாதிட்டார். மேல்முறையீட்டாளரின் வாதங்களை நிராகரித்த உச்ச நீதிமன்றம், *Jacob Mathew* வழக்கை, குற்றவியல் புகாரை வைத்து பார்த்தாலும் அல்லது FIR-ஐ வைத்து பார்த்தாலும், அது மருத்துவ கவனக் குறைவினால் ஏற்படும் தவறுக்கு தண்டனை வழங்கப்படும் வழக்கிற்கு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, மற்ற வழக்கிற்கு பொருந்தாது என்று கூறியது. மேலும், மேற்சொன்ன தீர்ப்பில், பத்திகள் 12, 28, 29 மற்றும் 48 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் சந்தேகத்திற்கு இடமின்றி, இ.பி.கோ 304-A-ன் ஒரு மருத்துவரின் மீது வழக்கு தொடர்வதற்கு சம்பந்தமாக மட்டுமே எடுத்துக்கொள்ள முடியும்

(ஆ)*Martin F. D' Souza* (2009) வழக்கின் தீர்ப்பானது *Jacob Mathew* (2005) வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கு முரண்பாடாக அமைந்ததால், *V. Kishan Rao* (2010) வழக்கில் *Martin F. D' Souza* வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பானது ஒரு நல்ல சட்ட முன்மாதிரி அல்ல என்று சரியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த வழக்கில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் எடுத்த முடிவுகளை திரும்ப பெறுவதற்கு எந்தவித அவசியமும் இல்லை.

(இ அதன் அடிப்படையில், உரிமையியல் மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 9 SCC 496; I (2013) CPJ 6 (SC);
2013(1) CPR 601 (SC); 2014(4) CPR 273 (SC).

***

**2. ஜெனரல் மோட்டார்ஸ் (இந்தியா) தனியார் நிறுவனம்** *(எதிர்)* **அசோக் ராம்நிக் லால் டோலட் மற்றும் ஒருவர்**

**(General Motors (India) Pvt. Ltd. v. Ashok Ramnik Lal Tolat and Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புதுடில்லி மறு சீராய்வு மனு (Revision Petition) எண்கள்:3349/2006 மற்றும் 2858/2008-ல் 16.12.2008 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஜெனரல் மோட்டார்ஸ் (இந்தியா) தனியார் நிறுவனம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அசோக் ராம்நிக் லால் டோலட் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8072-73/2009.

தீர்ப்பு தேதி : 09.10.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளரின் கம்பெனி விளம்பரத்தை பார்த்து புகார்தாரர்/ பதில்மனுதாரர் Chevrolet Forester AWD Model motor வாகனத்தை ரூ.14 இலட்சம் கொடுத்து 01.05.2004 அன்று விலைக்கு வாங்கினார். மேலும், அந்த வாகனத்திற்கு ரூ.1.91 இலட்சம் செலவில் உபரி பாகங்களும் வாங்கினார். ஆனால், வாங்கிய பிறகுதான், அது SUV Model வாகனம் இல்லை, ஒரு சாதாரண பயணிகள் ஏற்றிச் செல்லக்கூடிய கார் என்று தெரிந்தது. மேலும், அந்த கார், மேல்முறையீட்டாளரின் கம்பெனி விளம்பரத்தில் கூறியபடி, சகதிகள் நிறைந்த சாலை மற்றும் ரோடு போடாத பகுதிகளில் ஓட்டுவதற்கு உகந்ததாக இல்லை. இதனால் பாதிப்படைந்த பதில் மனுதாரர், சேவையில் குறைபாடு மற்றும் நியாயமற்ற வியாபார முறை என்ற காரணத்தின் அடிப்படையில், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில், வாகனத்திற்காக செலுத்திய விலையை வட்டியுடன் திரும்ப தரக்கோரியும், ரூ.50,000/–த்தை நஷ்டஈட்டுத் தொகையாகவும், வழக்கின் செலவினத்தோடு தருமாறு புகார் மனு தாக்கல் செய்தார். வழக்கை விசாரித்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், வாகனத்திற்காக செலுத்திய தொகையை 9 விழுக்காடு வட்டியுடன் திருப்பிதர வேண்டும் என்றும், ரூ.5,000/–த்தை நஷ்டஈட்டுத் தொகையாகவும் (மன உளைச்சலுக்காக), ரூ.2,000/– வழக்கிற்கான செலவுத் தொகையாகவும் கருதி திருப்பி தரவேண்டும் என்று மேல்முறையீட்டாளரை பணித்தது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவில், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், மேல்முறையீட்டாளர் கொடுக்க வேண்டிய இழப்பீட்டு தொகை வழக்காடும் செலவு உட்பட ரூ.50,000/– என ஆணையிட்டது. அதனுடன், போதுமான முகாந்திரம் இல்லாத மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்ததால், மேல்முறையீட்டாளரை ரூ.5,000/–ஐ வழக்கின் தொகையாக செலுத்துமாறு உத்தரவிட்டது. அது மட்டுமல்லாது, மேல்முறையீட்டாளர் கம்பெனி, இனி தனது விளம்பரத்தில், SUV வாகனத்தை, உரிமையாளர் கையேட்டில் குறிப்பிட்டிருப்பது போல பயணிகள் வாகனம் என்றே குறிப்பிட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தது. மேற்சொன்ன உத்தரவை,

மேல்முறையீட்டாளர், பொறுப்பு துறப்பு அறிவிப்பு வெளியிட்டதன் மூலம் (disclaimer) பின்பற்றியது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து, பதில் மனுதாரர் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டாளர் எதிர் மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்தார். மறு சீராய்வு மனுவை விசாரித்த, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் கூறியபடி, மேல்முறையீட்டாளரின் செயல், ஒரு நியாயமற்ற வர்த்தக நடைமுறை என்பதை உறுதி செய்தது. மேலும், வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் வாகனத்தை பதில் மனுதாரர்/புகார்தாரர் ஒரு வருடகாலம் பயன்படுத்தியிருப்பதால், மேல்முறையீட்டாளரை ரூ.12.5 இலட்சம் நஷ்டஈட்டுத் தொகையாக திருப்பி தருமாறு ஆணையிட்டது. மேலும், பதில் மனுதாரர்/புகார்தாரரை, மேல்முறையீட்டாளரிடம், உபரி பாகங்கள் தவிர்த்து (உபரி பாகங்களுக்கு புகார்தாரர் தனியாக பணம் செலுத்தியிருப்பதால்)வாகனத்தை திருப்பி ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பித்தது. அதனுடன், பதில் மனுதாரர்/புகார்தாரர் மூன்று நுகர்வோர் நீதிமன்றங்களிலும் வழக்கிற்காக செலவிட்ட தொகைக்காக, ரூ.50,000/- வழங்குமாறு தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆணை பிறப்பித்தது. கூடுதலாக, இந்த வழக்கில், மற்ற நுகர்வோர்கள் யாரும் இதே குறைபாடு காரணமாக நீதிமன்றத்தை அணுகாததாலும், நான்கு வருடம் கடந்திருப்பதாலும், அபராத தொகையாக ரூ.25 இலட்சம், மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது. அந்த ரூ.25 இலட்சத்தில், ரூ.5 இலட்சம் புகார்தாரருக்கும், மீதி ரூ.20 இலட்சம், மத்திய அரசின் நுகர்வோர் சேமநல நிதியில் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறியது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில், உரிமையியல் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மேலும், மேல்முறையீட்டாளர், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், அபராத தொகைக்காக எந்த ஒரு கோரிக்கையும் வைக்கப்படவில்லை என்றும், அந்த அபராத தொகை முறையீட்டிற்கு எதிராக, மேல்முறையீட்டாளர் தரப்பு வாதங்களை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு தரப்படவில்லை என்றும் சமர்ப்பித்தனர். மேல்முறையீட்டு மனுவை அனுமதித்த உச்ச நீதிமன்றம், அபராதத் தொகை சம்பந்தமான உத்தரவு நீங்கலாக, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் பிறப்பித்த இதர உத்தரவுகளை உறுதி செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 12, 13, 14, 22 மற்றும் 23; ஒப்பந்த சட்டம், 1872-ன் பிரிவு 73.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Ludhiana Improvement Trust v. Shakti Coop. House Building Society Ltd.,* (2009) 12 SCC 369: (2009) 4 SCC (Civ.) 709. [Para 18]
2. *General Motors (I) (P) Ltd. v. Ashok Ramnik Lal Tolat,* SLPs(C) Nos.7313-14 of 2009 dated 20.11.2009 (SC). [Para 15]

3. *Godfrey Phillips India Ltd. v. Ajay Kumar,* (2008) 4 SCC 504. [Para 19]

4. *Ashok Ramnik Lal Tolat v. Gallops Motor (P) Ltd.* in Revision Petition No.3349 of 2006, dated 16.12.2008 (NC). [Para 01]

5. *Colgate Palmolive (India) Ltd. v. MRTP Commission,* (2003) 1 SCC 129. [Para 19]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டு மனுவை விசாரித்த, உச்ச நீதிமன்றம், மூன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களின் ஒத்த தீர்ப்பின்படி, மேல்முறையீட்டாளர் நியாயமற்ற வர்த்தக நடைமுறையை கையாண்டார் என்பதற்கு போதுமான ஆதாரம் இருப்பதாலும், அது *Colgate Palmolive (India) Ltd.* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய முக்கிய உட்கூறுகளை பூர்த்தி செய்வதாலும், அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என்று கூறி உறுதி செய்தது.

(ஆ)தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக அபராத தொகை இழப்பீடு சம்பந்தமாக எந்த ஒரு கோரிக்கையும் வைக்கப்படவில்லை என்றும், மேலும் அது குறித்து மேல்முறையீட்டாளர்கள் தரப்பு வாதங்களை சமர்ப்பிப்பதற்கு எந்த ஒரு வாய்ப்பும் வழங்கப்படவில்லை என்றும் கூறிய மேல்முறையீட்டாளரின் வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. மேலும், இது சம்பந்தமாக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் பிறப்பித்த உத்தரவையும் ஒதுக்கி வைத்தது (செல்லாது என்று அறிவித்தது). அதனுடன், இந்த வழக்கில் எழுப்பப்பட்ட சேவையின் குறைபாடு பிரச்சனை, பதிலுரையாளர் போல் மற்ற எந்த நுகர்வோரும் எழுப்பவில்லை என்றும், அது சம்பந்தமாக எந்த ஒரு உறுதிமொழியும் பதிலுரையாளரின் புகார் மனுவில் தெரிவிக்கப்படவில்லை என்றும், மேலும் இது சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் பதிலளிக்க வேண்டும் என்று அவர் அறிந்திருக்கவில்லை. பொதுவாக, அபராத தொகை இழப்பீடு, தெரிந்து செய்யும் தவறினால் ஏற்படும் சேதத்திற்காக எதிராக வழங்கப்படுவது என்று நீதிமன்றம் கருத்து கூறியது. மேலும், அம்மாதிரியான இழப்பீடு கோருவதற்கு, தனியாக மனுவில் குறிப்பிடவேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது. புகார்தாரர்/ பதில்மனுதாரர், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பால் திருப்தியடைந்ததால், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யவில்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அவர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் ஆணையை ஒதுக்கி வைத்த பிறகு (செல்லாது என அறிவித்த பிறகு) தான், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை நாடினார். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், பொதுவாக தன்னுடைய நீதிபரிபாலனத்தில், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் கொடுத்த உத்தரவை

செல்லாது என அறிவிக்கவோ அல்லது மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் உத்தரவை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் உறுதி செய்யும் பட்சத்தில் அந்த உத்தரவின் செல்லும் தன்மை பற்றி தீர்ப்பு நல்கவோ அல்லது மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், எம்மாதிரியான உத்தரவை பிறப்பிக்க வேண்டுமோ, அம்மாதிரியான உத்தரவை பிறப்பிக்கலாம். ஆனால், இந்த வழக்கில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புகார் மனுவில் கேட்கப்படாத ஒரு நிவாரணத்தை அல்லது மாநில குறைதீர் ஆணையம் கொடுக்காத ஒரு நிவாரணத்தை கொடுத்ததன் மூலம், தன்னுடைய அதிகார வரம்பிற்கு அதிகமாக செயல்பட்டிருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் கருத்து கூறியது. ஆகையால், அவ்வாறு தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் பிறப்பித்த உத்தரவு, இயற்கை நீதிக்கும் நியாயமான நடைமுறைக்கும் எதிராக இருப்பதால் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதைத்தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் கூறியதாவது: உச்ச நீதிமன்றம், இந்த வழக்கின் சாதகமான அணுகூலங்களை அலசி ஆராயவில்லை. ஆகவே, இதே பிரச்சனை தொடர்பாக, எந்த ஒரு நுகர்வோரும், எந்த ஒரு நீதிமன்றத்தையும் அணுகலாம் அதற்கு எந்த தடையும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(இ) மேலும், புகார்தாரர்/பதில் மனுதாரரிடம் ரூ.100 கோடி கேட்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் புகார் மனுவில் எந்தவித அடிப்படை முகாந்திரமும் இல்லை என்றும் புகார்தாரரை உச்ச நீதிமன்றம் வரை அழைத்து வந்த செயலிலும், எந்த ஒரு அடிப்படை முகாந்திரமும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. இறுதியாக, உச்ச நீதிமன்றம் வரை வழக்கை எடுத்து வந்ததற்காக அபராத இழப்பீட்டு தொகை வழங்கி வழக்கு தொடர்ந்தவரை தண்டிப்பது ஒரு நியாயமற்ற செயல். வழக்கு பொய்யாக இருக்கும் பட்சத்தில், அம்மாதிரியான அபராத இழப்பீட்டு தொகை விதிக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2014) CPJ 1 (SC); 2014(4) CPR 797 (SC);
(2015) 1 SCC 429; AIR 2015 SC 562.

***

**3. கமலேஷ் அகர்வால் *(எதிர்)* நாராயன்சிங் தபாஸ் மற்றும் ஒருவர்**

**(Kamlesh Aggarwal v. Narain Singh Dabbas & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், முதல் முறையீட்டு (First Appeal) எண்கள்:645 மற்றும் 646/2013-ல் 08.01.2014 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கமலேஷ் அகர்வால் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

நாராயன்சிங் தபாஸ் மற்றும் ஒருவர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:224-225/2015.

தீர்ப்பு தேதி : 10.02.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், மேல்முறையீட்டாளருக்கு, பிளாட் எண்:114-ஐ (விலேஜ் கோடா), பதிவு செய்து ஒதுக்கீடு செய்யாததால், நவசேட்னா சாகரி அவாஸ் சமிதி லிமிடெட்-க்கு எதிராக மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் அவர் புகார் மனு தாக்கல் செய்தார். மனுவை அனுமதித்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் 17.10.2003-ம் தேதியன்று உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவு அமல்படுத்தப்படாததால், மேல்முறையீட்டாளர் அதை அமல்படுத்துவதற்கான மனுவையும் தாக்கல் செய்தார். இதற்கிடையில், குலாப் சிங் என்ற நபர் ஏற்கனவே அந்த பிளாட்டின் உடைமையை தன் கைவசம் வைத்திருந்ததாகவும் ஆகவே தன்னை வழக்கின் ஒரு பார்ட்டியாக சேர்த்துக் கொள்ளுமாறும், மனு ஒன்றை தாக்கல் செய்தார். மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், 13.09.2006 அன்று பிறப்பித்த உத்தரவில் 17.10.2003 அன்று பிறப்பித்த உத்தரவு செல்லாது என்று கூறி, மேல்முறையீட்டாளரை உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும்படி கூறியது. மேல்முறையீட்டாளர், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். மனுவை அனுமதித்த மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை மீண்டும் அமல்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் பிறப்பித்த உத்தரவை சமிதி எதிர்க்கவில்லை. ஆனால், குலாப் சிங், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக ஒரு மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்தார். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அந்த மறு சீராய்வு மனுவை தள்ளுபடி செய்தது. அதன் பிறகு, மேல்முறையீட்டாளர், 17.10.2003 அன்று பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தக்கோரி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் முன்பாக மனு ஒன்றை இதற்காக தாக்கல் செய்தார். மனுவை அனுமதித்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் பதில் மனுதாரர் சமிதியை, மேல்முறையீட்டாளருக்கு (புகார்தாரருக்கு/மனுதாரருக்கு), வேறு ஒரு பிளாட் கொடுக்குமாறு உத்தரவு பிறப்பித்தது. இதனை எதிர்த்து, பதில் மனுதாரர்கள், மறு ஆய்வு மனுவை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்தனர். மறு ஆய்வு மனுவை 26.11.2010 அன்று பிறப்பித்த உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஏற்கனவே 17.10.2003-ம் தேதி கொடுத்த உத்தரவை அமல்படுத்தாதற்காக, பதில் மனுதாரருக்கு பிரிவு 27-ன்கீழ் ரூ.3,000/- அபராதமும், மூன்று மாத சிறை தண்டனையும்

விதித்தது. இந்த உத்தரவு, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்சொன்ன உத்தரவை தள்ளுபடி செய்த மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் கூறியதுபடி, சுருக்கமான விசாரணைக்குள்ள நடைமுறையை பின்பற்றாததால், மேற்சொன்ன உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது என்று கூறியது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டாளர், முதல் மேல்முறையீட்டு மனு எண்கள்: 645 மற்றும் 646/2013-ஐ தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பு தாக்கல் செய்தார். 08.01.2014 அன்று பிறப்பித்த உத்தரவின் மூலம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் பிரிவுகள் 27/27A-ன்படி, இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்வதற்கு வழிவகைகள் இல்லை என்று கூறி, மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்தது. மேலும், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் பிரிவு 27A-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக பிரிவு 21-ன்கீழ் தாக்கல் செய்வதற்கு, மேல்முறையீட்டாளருக்கு எந்த உரிமையும் இல்லை எனவும் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டபோதிலும், அந்த மனுவை தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வழி இல்லை எனவும் தேசிய ஆணையம் கூறியது. எனவே, மாநில மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் உத்தரவுகளினால், பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டன. மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தகோரி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்துக்கு மனுவை திருப்பியனுப்பியது. மேலும், பதில் மனுதாரர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையையும் நிறைவேற்றக்கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவிலிருந்து மேற்சொன்ன இரண்டு மாற்றங்களையும், உச்ச நீதிமன்றம் தன்னுடைய உத்தரவில் ஏற்படுத்தியது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

இந்திய அரசியல் அமைப்பு சட்டம், பிரிவு 142; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 13(4), 13(6), 13(7), 27 மற்றும் 27(A); குற்றவியல் நடைமுறை சட்டம், 262 r/w Chapter XX மற்றும் பிரிவு 251; உரிமையியல் நடைமுறை சட்டம், 1908 அதன் ஷரத்துக்கள் ஆணை XXI r/w, விதி எண்:32.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

Nil.

### 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

(அ) இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியதாவது: நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 27A-ன்படி மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படலாம். அதேபோல், மாநில

நுகர்வோர் நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படலாம். பிரிவு 27A(2) மேலும் கூறுவது என்னவென்றால், மேற்சொன்ன வழிமுறைகளை தவிர்த்து, எந்த ஒரு மேல்முறையீட்டு மனுவும், மாவட்ட, மாநில மற்றும் தேசிய நுகர்வோர் நீதிமன்றங்களுக்கு எதிராக அமையாது. ஆகையால், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த, மேல்முறையீட்டு மனுக்கள் செல்லாது என பிறப்பித்த உத்தரவு சட்டப்படி செல்லும்.

(ஆ) மேல்முறையீட்டாளர், 1962 முதல் சமிதியில் உறுப்பினராக இருப்பதால் அவருடைய விற்பனை பத்திரத்தை பதிவு செய்வதற்காக கடந்த 17 வருடங்களாக வெவ்வேறு நுகர்வோர் நீதிமன்றங்களை அணுகி வருகிறார். ஆகையால், இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 142-ஐ பயன்படுத்தி, உச்ச நீதிமன்றம் வழக்கை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பவும், அதன் பிறகு ஏற்கனவே மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை அமல்படுத்தவும், பதில் மனுதாரர்களுக்கு எதிரான தண்டனை நிறைவேற்றவும், குற்றவியல் நடைமுறைச் சட்டம், அத்தியாயம் XX, பிரிவு 262 மற்றும் 251-ல் சொல்லப்பட்டிருக்கும் நடைமுறைகளை பின்பற்றி, உத்தரவு பிறப்பித்தது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்திற்கு வழக்கை திருப்பி அனுப்பவேண்டும் என்ற அளவிற்கு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் பிறப்பித்த உத்தரவில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

(இ) மேலும், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986, பிரிவு 27-ன்கீழ் கிடைக்கும் நிவாரணம் தவிர்த்து உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை XXI மற்றும் விதி எண்.32-ன்கீழ், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஏற்கனவே கொடுத்த உத்தரவை நிறைவேற்றக் கோரி மனு அளிக்க, மேல்முறையீட்டாளருக்கு மாற்று நிவாரண வழி உண்டு என்பதையும் உச்ச நீதிமன்றம் கூறியது. அதன் மூலம், பிளாட் எண்:114-ன் விலேஜ் கோடா-வை முறையாக பதிவு செய்து அதனுடைய உடைமையை பெறுவதற்கு வழிவகைகள் உண்டு என்பதையும் கூறியது.

(ஈ) மேற்கூறிய உத்தரவுகளுக்கு ஏற்றவாறு மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2015) CPJ 1 (SC).

***

### 4. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் *(எதிர்)* ஹில்லி பல்வகை செயற்பாட்டிற்கான குளிர்பதன தனியார் நிறுவனம்

**(New India Assurance Co. Ltd. v. Hilli Multipurpose Cold Storage Pvt. Ltd.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஹில்லி பல்வகை செயற்பாட்டிற்கான குளிர்பதன தனியார் நிறுவனம் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

நகல் மனு எண்கள்:10941-10942/2013 இதனுடன் நகல் மனு எண்கள்:10943–10944/2013, நகல் மனு எண்:1774/2014, சிறப்பு விடுப்பு (சி) எண்:2833/2014 & சிறப்பு விடுப்பு (சி) எண்கள்:11257-11258/2014.

தீர்ப்பு தேதி : 04.12.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்வதற்கான கால வரையறையையும் மற்றும் எதிர் தரப்பினர் அவரது பக்கம் உள்ள வாதுரைகளை பிரிவு 13(2) (a)–ன்கீழ் சமர்ப்பிக்க ஆகும் கால அளவில் ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய, இந்த குற்றவியல் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, புகார்தாரர் புகார் மனு தாக்கல் செய்தபின், எதிர் மனுதாரருக்கு அவரது தரப்பு வாதங்களை சமர்பிக்க குறைந்தபட்சம் 30 நாட்களிலிருந்து அதிக பட்சமாக 45 நாட்கள், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. இதில் சந்தேகம் என்னவெனில், அதிகபட்சமான 45 நாட்களை தாண்டி, எதிர்தரப்பு மனுதாரர் தனது தரப்பு வாதங்களை சமர்பித்தால், அதை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியுமா? என்பதே ஆகும். இந்த முரண்பாடு, *Dr.J.J.Merchant v. Shrinath Chaturvedi* (2002) மற்றும் *Kailash v. Nanhku* (2005) என்ற இரு வழக்கிலும் கொடுக்கப்பட்ட இருவேறு தீர்ப்புகளால் ஏற்பட்டது. இறுதியில், உச்ச நீதிமன்றம், இந்த வழக்கில், *Dr.J.J.Merchant* supra என்ற வழக்கில் 3 நீதிபதிகள் உள்ளடக்கிய அமர்வின் தீர்ப்பை ஆதரித்தது. அதன் மூலம், எதிர் மனுதாரருக்கு, தனது தரப்பு வாதங்களை சமர்பிக்க கொடுக்கப்படும் கால அவகாசம் 45 நாட்கள் என்பதை உறுதி செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 12, 13(2) (a) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Dr.J.J.Merchant v. Shrinath Chaturvedi, (2002) 6 SCC 635.* (Relied) [Para 1]
2. *Kailash v. Nanku, (2005) 4 SCC 480.* [Para 1]
3. *Topline Shoes Ltd v. Corporation Bank, (2002) 6 SCC 33.* (Referred) [Para 12]
4. *Central Board of Dawoodi Bohra Community v. State of Maharastra (2005) 2 SCC 673.* (Relied) [Para 19]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) இவ்வழக்கில் எழுப்பப்பட்ட சட்ட பிரச்னை என்னவெனில், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986–ன், பிரிவு 13(2)(a)–ன்கீழ் புகார்தாரர் மனு கொடுக்கும்போது, அந்த மனுவிற்கு, எதிர்மனுதாரர் தனது தரப்பு வாதங்களை கொடுக்க எந்த அளவிற்கு கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஆகும்.

(ஆ) இருதரப்பு வாதங்களை கேட்டறிந்த உச்ச நீதிமன்றம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் நோக்கமான விரைவு நீதியை கருத்தில் கொண்டு, எந்த ஒரு வழக்கிலும், எதிர்தரப்பு மனுதாரர் அவரது தரப்பு வாதங்களைஅளிப்பதற்கு, அதிகபட்சமாக 45 நாட்கள் மட்டும்தான் முடியும் என்று கூறி சந்தேகத்தை நிவர்த்தி செய்தது. மேலும், அதன் மூலம், அதே கருத்தை தெரிவித்த, *Dr.J.J.Merchant* (Supra) வழக்கில் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கொடுத்த தீர்ப்பையும் ஆதரித்தது.

(இ) இறுதியாக, இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் கீழ்கண்ட கருத்துகளையும் பதிய வைத்தது.

(i) இந்த வழக்கில் எழுப்பப்பட்ட சட்டப் பிரச்சனையை வைத்து பார்க்கும்போது, மேலே குறிப்பிடப்பட்ட *Kailash* (supra) மற்றும் *Dr.J.J.Merchant* (Supra) ஆகிய இரு வழக்கை ஒப்பிடும்போது, *Dr.J.J.Merchant* வழக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. அதுமட்டுமில்லாது, *Kailash* வழக்கு தேர்தல் சம்பந்தமான பிரச்சனைகளை கையாண்டிருப்பதால், *Dr.J.J.Merchant* வழக்குதான் கையில் எடுக்கப்பட்டிருக்கும் சட்டப் பிரச்சனைக்கும் சரியான விளக்கம் கொடுக்க முடியும் என்று கருதியது.

(ii) மேலும், *Central Board of Dawoodi Bohra Community & Anr. v. State of Maharastra & Anr.* [(2005) 2 SCC 673] வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின்படி, 'அதிகபட்ச நீதிபதிகள் உள்ளடக்கிய அமர்வின் தீர்ப்பானது குறைந்தபட்ச அல்லது

அதற்கு சமமான எண்ணிக்கை நீதிபதிகள் உள்ளடக்கிய அமர்வின் தீர்ப்பை கட்டுப்படுத்தும்' என்பதையும் சுட்டிக் காட்டியது.

(iii) ஆகையால், 3 நீதிபதிகள் உள்ளடக்கிய *Dr.J.J.Merchant* வழக்கின் தீர்ப்பானது, 2005-ம் ஆண்டு *Kailash* (Supra)-வழக்கில் இரு நீதிபதிகள் உள்ளடக்கிய அமர்வு கொடுத்த தீர்ப்பை மட்டுமல்லாது, 3 நீதிபதிகள் உள்ளடக்கிய இந்த வழக்கின் தீர்ப்பையும் அது கட்டுப்படுத்தும்.

(iv) மேற்கூறிய, உச்ச நீதிமன்ற உத்தரவுகளின்படி, இந்த மேல்முறையீட்டு மனு தீர்த்து வைக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2016 SC 86; 2016(1) CPR 123 (SC).

***

**5. தலைமை நிர்வாகி, நகர்புற குடியிருப்பு முன்னேற்ற அமைப்பு மற்றும் ஒருவர்** *(எதிர்)* **சகுந்தலா தேவி**

**(Chief Administrator, HUDA & Anr. v. Shakuntla Devi)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய மேல்முறையீட்டு எண்:525/2007-ல் 25.09.2007 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

தலைமை நிர்வாகி,
நகர்புற குடியிருப்பு முன்னேற்ற அமைப்பு மற்றும் ஒருவர் - மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

சகுந்தலா தேவி - பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7335/2008.

தீர்ப்பு தேதி : 08.12.2016.

**4. வழக்கின் சுருக்கம் :**

இந்த வழக்கில், பதில் மனுதாரருக்கு, கர்ணல் என்ற இடத்தில் 40 மர்லஸ் (40 marlas) அளவிலான ஒரு பிளாட் 03.04.1987 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த பிளாட்டின் உடைமை பதில் மனுதாரரின் கைவசம் ஒப்படைக்கப் படாததால், பதில் மனுதாரர் மாநில

நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் 1997-ல் புகார் மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், பிளாட்டை ஒப்படைப்பதில் கால தாமதம் ஏற்பட்டதை பதில் மனுதாரர் நிரூபித்திருப்பதால், பிளாட்டின் உடைமையை ஒருமாத காலத்திற்குள் பதில் மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. மேலும், பதில் மனுதாரர் செலுத்திய தொகைக்கு 12 விழுக்காடு வட்டி 03.04.1989 முதல் திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் கூறியது. அதனுடன், அந்த கட்டிடத்தை கட்டுவதில் விலை ஏற்றத்தின் காரணமாக, ஏற்கனவே குறிப்பிட்ட தொகையிலிருந்து அதிகமாக ரூ.2 இலட்சம் தொகையை நஷ்டஈடாக கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. அதுமட்டுமல்லாது, ரூ.20,000/- மன உளைச்சல் மற்றும் பொருளாதார நஷ்டத்திற்காக பதில் மனுதாரருக்கு வழங்கப்பட்டது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட மனுவில், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மனுவை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு கட்டிடத் தொகையில் ஏற்பட்ட விலைமாற்றத்தை மத்திய பொதுப்பணித்துறை (CPWD) விலையை கருத்தில் கொண்டு, மீண்டும் பரிசீலிக்க வேண்டி திருப்பி அனுப்பியது. அதுதவிர, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் பிறப்பித்த இதர உத்தரவுகள் உறுதி செய்யப்பட்டன. மனுவை மறு பரிசீலணைக்கு எடுத்துக் கொண்ட மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், பதில் மனுதாரர் கட்டிடம் கட்டுவதற்கான செலவினங்கள் தொடர்பான ஆவணங்களையும், மேல்முறையீட்டாளர் 2006-ம் ஆண்டு வரை கட்டிட வேலையை ஆரம்பிக்கவில்லை என்பதையும் அறிந்த பின் ரூ.18,67,000/-க்கு பதிலாக ரூ.15,00,000/- நஷ்டஈடாக வழங்கியது. மேற்கூறிய நஷ்டஈடு, பதில் மனுதாரருக்கு கட்டிட செலவில் ஏற்பட்ட வித்தியாசத்திற்காக வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 25.09.2007 அன்று பிறப்பித்த உத்தரவின் மூலம் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை உறுதி செய்தது. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 14(1)(d) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Charan Singh v. Healing Touch Hospital,*
   (2000) 7 SCC 668; (2000) 6 Supreme 321. (Relied upon) [Para 13]

2. *Ghaziabad Development Authority v. Balbir Singh,*
   (2004) 4 SCC 65. (Relied upon) [Para 14]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், கீழ்கண்ட கருத்துகளை முன்வைத்தது:

(i) மேல்முறையீட்டாளர் பிளாட்டின் உடைமையை 1989-ம் ஆண்டிற்கு பதிலாக 2000-ம் ஆண்டில்தான் ஒப்படைத்துள்ளார்.

(ii) பதில் மனுதாரர், 1986 ஆம் வருடத்திலேயே ரூ.1,22,400/-ஐ கட்டிட செலவாக கொடுத்துள்ளார்.

(iii) இதனுடன், பதில் மனுதாரருக்கு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவுப்படி ரூ.1,28,188/- வட்டித் தொகையும் வழங்கப்பட்டது.

(iv) 2006-ம் ஆண்டுவரை, பதில் மனுதாரர் கட்டிட வேலையை ஆரம்பிக்கவில்லை.

(v) மாநில ஆணையம் ரூ.15 இலட்சம் இழப்பீடு வழங்கி ஆணையிடும்போது கட்டிட செலவில் ஏற்பட்ட மாற்றத்திற்காக ஒரு பெரிய தொகை பெறவேண்டும் என்பதற்காகவே பதில் மனுதாரர் கட்டிட பணியை ஆரம்பிக்கவில்லை என்றும் கூறியது.

(ஆ) *Charan Singh v. Healing Touch Hospital* and *Ghaziabad Development Authority v. Balbir Singh* ஆகிய இரு வழக்குகளிலும், எதிர்தரப்பினர் அலட்சியப்போக்கை கையாளும்போது, நுகர்வோருக்கு கொடுக்க வேண்டிய நஷ்டஈடு எவ்வகையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதை ஏற்கனவே உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதின் அடிப்படையில், கீழ்கண்ட கருத்துகளை, உச்ச நீதிமன்றம், இந்த வழக்கில் பதிவு செய்தது.

(i) ஒரு வழக்கில் நுகர்வோர் அடைந்த இழப்பிற்கு நஷ்டஈடு அளிக்கும் போது, முதலில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது என்னவெனில், எதிர்தரப்பினர் கவனக்குறைவாக இருந்தாரா? அல்லது இல்லையா? என்பதாகும்;

(ii) அவ்வாறு கவனக்குறைவாக இருந்தார் என்பது உறுதி செய்யப்பட்டால், நுகர்வோருக்கு எவ்வளவு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்;

(iii) மேலும், நிர்ணயம் செய்யப்படும் இழப்பீட்டு தொகை, மிகவும் நியாயமாகவும், ஏற்றுக் கொள்ளும்படியாகவும் மற்றும் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யும் அளவிலும் இருக்க வேண்டும்.

(iv) அவ்வாறு, நிர்ணயம் செய்வதற்கு, நுகர்வோர் நீதிமன்றம், அந்த வழக்கில் அதற்கு சம்பந்தமான அனைத்து காரணிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறியது.

(இ) இந்த வழக்கில், எழுப்பப்பட்ட முக்கியமான பிரச்சனை என்னவெனில், கட்டிட செலவில் ஏற்பட்ட விலை மாற்றத்திற்காக ரூ.15,00,000/- நஷ்டஈடாக, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆணையிட்டது சரியா? என்பதாகும். அதற்கு பதிலளிக்கும் வகையில், உச்ச நீதிமன்றம் மேற்சொன்ன அளவிற்கு நஷ்டஈடு கொடுக்கும் அளவிற்கு, இந்த வழக்கில் பதில் மனுதாரர் பாதிக்கப்படவில்லை என்று கூறியது. பதில் மனுதாரர், மேல்முறையீட்டாளர் பிளாட்டை தாமதமாக கொடுத்திருப்பதால், பிளாட்டை கட்டுவதற்கான செலவில் விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது, அதன் மூலம், பதில் மனுதாரர் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்றாலும், 1989 மற்றும் 2000-ல் (அதாவது பிளாட்டை ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதமான காலம்), பிளாட்டின் விலைமதிப்பு அதிகரித்திருப்பதால், பதில் மனுதாரர் அதன் மூலம் பலன் அடைந்திருக்கிறார். மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், பிறப்பித்த உத்தரவு நியாயமற்றதாகவும், முக்கியமான காரணங்களை கருத்தில் எடுக்காமலும், இருப்பதாக உச்ச நீதிமன்றம் கூறியது. உத்தரவின்போது, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மேல்முறையீட்டாளர் 6 வருடகாலமாக, பிளாட்டை வேண்டுமென கட்டாமல் தாமதித்ததை விமர்சித்திருக்கிறது. இருந்தபோதிலும் இழப்பீட்டு தொகை வழங்கியிருக்கிறது. வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் வைத்து பார்க்கும்போது, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஏற்கனவே பதில் மனுதாரருக்கு கொடுத்த வட்டித்தொகை, பிளாட்டை ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் பதில் மனுதாரர் அடைந்த நஷ்டத்திற்கு போதுமானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆகையால், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அளித்த ரூ.15,00,000/- மிகவும் அதிகம் என்று கூறியது.

(ஈ) இறுதியாக, மேல்முறையீட்டு மனுவை அனுமதித்த உச்ச நீதிமன்றம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் 05.07.2007 உத்தரவை உறுதி செய்த, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை ஒத்திவைத்து தீர்ப்பு வழங்கியது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2016 (4) CPR 600 (SC); (2017) 2 SCC 301;
AIR 2017 SC 70; 2017(1) CPR 149 (SC).

***

# 15. சீராய்வு, மறு ஆய்வு மீண்டும் அழைப்பு மற்றும் / மீட்டுக்கொள்ளுதல் ஆகிய அதிகாரங்கள்

## 1. திருமதி.ரூபி (சந்திரா) தத்தா *(எதிர்)* யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் (Mrs. Rubi (Chandra) Dutta v. M/s. United India Insurance Co. Ltd.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:2899/2008-ல் 18.12.2008 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

திருமதி.ரூபி (சந்திரா) தத்தா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2588/2011 (சிறப்பு விடுப்பு (சி) எண்:19246/2009 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது)

தீர்ப்பு தேதி : 08.03.2011 (அல்லது 18.03.2011).

**4. வழக்கின் சுருக்கம் :**

ஒரு பேருந்தின் உரிமையாளரான மேல்முறையீட்டாளர், பதிலுரையாளரான காப்பீட்டு நிறுவனத்திடம் 13.01.2003 முதல் 12.01.2004 வரை காப்பீட்டு பாலிசி எடுத்து பிரிமிய தொகையையும் செலுத்தியிருந்தார். 04/05.07.2003 அன்றின் இடைப்பட்ட இரவில் அப்பேருந்தானது தேசிய நெடுஞ்சாலை 34-ல் ஓட்டிச்செல்லும்போது வேப்பமரத்தின் மீதுமோதி தலைகீழாய் கவிழ்ந்தது. அப்பேருந்து மிகவும் சேதமடைந்து சாலையின் அருகிலுள்ள பள்ளத்தில் விழுந்தது. பேருந்தின் உள்பாகங்களும் அதிகப்படியான சேதமடைந்து அதில் பயனித்த பயணிகளுக்கும் காயம் ஏற்பட்டது. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் பதிலுரையாளருக்கு விபத்தை குறித்தும் பேருந்திற்கு ஏற்பட்ட சேதத்தை குறித்தும் தக்க நேரத்தில் தெரிவித்திருந்தார். பதிலுரையாளரால் அமர்த்தப்பட்ட சேத மதிப்பீட்டாளர் முழு நஷ்டத்தை ரூ.2,90,000/- என்று மதிப்பிட்டார். பதிலுரையாளர் மீண்டும் சூரியா தத் என்பவரை அமர்த்தி விளக்கமான அறிக்கையை புலனாய்வோடு சமர்ப்பிக்க பணித்ததில் அவர் தமது அறிக்கையில் சேதத்தை ரூ.2,72,517.90 என கணக்கிட்டிருந்தார். ஆனால் மேல்முறையீட்டாளர் தான் செலவழித்த தொகையானது ரூ.5,33,782/- என்றும் அதற்கு செலுத்திய ரசீதுகளை சமர்ப்பித்து அத்தொகையை கோரினார். பதிலுரையாளர் இந்த

கோரிக்கையை நிராகரித்ததால் மேல்முறையீட்டாளர் தன் புகாரை மாவட்ட மன்றத்தில் சமர்ப்பித்தார். பதிலுரையாளர் விபத்து நிகழ்ந்த நேரத்தில் பேருந்தை ஓட்டிய ஓட்டுநருக்கு தகுதியான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று மேல்முறையீட்டாளர் கோரிய கோரிக்கைக்கு எதிராக வாதாடியது. மாவட்ட மன்றம் விரிவாக இந்த வழக்கை விசாரித்ததில் விபத்தின்போது ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என கண்டறிந்து புகாரை ஏற்று மேல்முறையீட்டாளருக்கு ரூ.4,00,000/- இழப்பீடும், இந்த ஆணை பிறப்பித்த தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் வழங்காவிட்டால் இழப்பீட்டோடு 9% வட்டியும் வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. பதிலுரையாளர் மாநில ஆணையத்தின் முன் தன் மேல்முறையீட்டை சமர்ப்பித்தபோது, மாநில ஆணையம் ஓட்டுநர் உரிமத்தின் தகுதி குறித்து மாவட்ட நுகர்வோர் மன்றம் செய்த பதிவினை ஏற்றுக்கொண்டது. ஆனால் 2-வது சேத மதிப்பீட்டாளர் கணித்த சேத மதிப்பீடு ரூ.2,72,517/-ஐதான் மேல்முறையீட்டாளர் பெற தகுதியானவர் என மாநில ஆணையம் ஆணையிட்டது. பதிலுரையாளர் மாநில ஆணையத்தின் ஆணையை எதிர்த்து தேசிய ஆணையத்தின் முன் தமது மறு சீராய்வு மனுவை சமர்ப்பித்தார். தேசிய ஆணையம் இந்த மனுவை விசாரித்ததில் விபத்து ஏற்பட்டபோது வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என முடிவிற்கு வந்தது. இதன்படி பதிலுரையாளரின் கோரிக்கையை ஏற்று கீழ் மன்றங்களின் ஆணையை ஒத்திவைத்தது. தேசிய ஆணையத்தின் உத்தரவால் பாதிக்கப்பட்டவர் தற்போதய மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேல்முறையீடு பகுதியாக ஏற்கப்பட்டது. தேசிய ஆயைத்தின் உத்தரவை தள்ளுபடி செய்து பதிலுரையாளர் ரூ.2,72,517/-ஐ 9% வட்டியுடன் மனு சமர்ப்பித்த நாளிலிருந்து மேல்முறையீட்டாளருக்கு வழங்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

Nil.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மாவட்ட மன்றத்தின் முக்கியமான குறிப்பு என்னவென்றால் பேருந்து ஓட்டுநர், சிராஜுல் ஹேக் குறிப்பிட்ட விபத்து நடந்த நேரத்தில் அவரிடம் தகுதியான ஓட்டுநர் உரிமம் இருந்ததா இல்லையா என்பதுதான். மாவட்ட மன்றம், மண்டல போக்குவரத்து குழுமத்தின் அதிகாரியை நேரில் வரவழைத்து உண்மைகளை பதிவு செய்திருந்தது. அந்த மன்றம் அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து பார்த்ததில் ஓட்டுநர் அசல் ஓட்டுநர் உரிமத்தை தொலைத்து விட்டதால் நகல் ஓட்டுநர் உரிமத்தை பெற்றிருந்தார் என்பதைக் கண்டறிந்தது. இக்கூற்றை மாநில ஆணையம் அதன் பதிவில் உறுதி செய்திருந்ததை உச்ச நீதிமன்றம் குறிப்பெடுத்துள்ளது. சேத மதிப்பீட்டாளர்களான சுஜீத்

குமார் சர்கார் மற்றும் சூரியா தத் தங்களது அறிக்கையில் விபத்து நேர்ந்த பொழுது பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் சிராஜுல் ஹேக் அவருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இருந்தது என பதிவு செய்துள்ளார்கள் என்பதை உச்ச நீதிமன்றம் குறிப்பெடுத்துள்ளது. மண்டல போக்குவரத்து அதிகாரியின் அலுவலக ஆவணங்களை பார்த்ததில், ஓட்டுநரின் நற்செயல்களை ஆராய்ந்த பிறகே நகல் ஓட்டுநர் உரிமம் அவருக்கு வழங்கப்பட்டது என்பதை தெளிவுபடுத்துகிறது. இந்த உண்மைகளை தேசிய ஆணையம் சரிவர பார்க்க தவறியதாக உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஆ) தேசிய ஆணையத்தின் சீராய்வு அதிகாரங்களானது நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 21(b)-ன்கீழ் பெறப்பட்டு அவ்வதிகாரம், ஆணையில் அதிகாரவரை தவறுகள் முகாந்தரமாக இருந்தால் மட்டுமே செல்லும் என்றும், அப்படி இருப்பின், அவ்வாணையை ஒதுக்கிவைக்க இயலும் என உச்ச நீதிமன்றம் கருதியது. மேலும் அதிகார வரம்புகளில் எந்த தவறும் நிகழவில்லை என்றும், நீதி வழங்குவதில் எந்த முறைபாடும் ஏற்படவில்லை என்றும், இதனால் தேசிய ஆணையம் இரண்டு கீழ் மன்றங்களிலும் எடுத்த முடிவினை அல்லாது மாறுபட்ட முடிவை எடுத்தது தேவையற்றது எனவும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. தேசிய ஆணையத்தின் இந்த முடிவானது கீழ் மன்றங்களின் சட்டவரையறையை தவிர்த்ததால் ஏற்பட்டதல்ல என்றும் ஆனால் அம்முடிவானது மாறுபட்ட (மற்றும் தவறான) சட்ட பொருள் விளக்கத்தினை அதே உண்மைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. சீராய்வு அதிகாரங்கள் இப்படியாக பயன்படுத்தக்கூடாது என்பதை உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. மேலும் உச்ச நீதிமன்றம் தேசிய ஆணையத்திற்கு பிரிவு 21(b)-யின்கீழ் வழங்கப்பட்ட அதிகார வரையறைகள் மீறப்பட்டுள்ளதை உறுதிபடுத்தியது. இந்த காரணங்களால் தேசிய ஆணையத்தின் ஆணை சட்டப்படி ஏற்புடையதாகாது என தீர்மானித்தது.

(இ) மேல்முறையீட்டாளர் வேறு சீராய்வு மனு ஏதும் தாக்கல் செய்யாததால் மாநில ஆணையத்தால் குறிக்கப்பட்ட நஷ்டஈட்டை உயர்த்த முடியாது என்பதனை உச்ச நீதிமன்றம் உறுதிபடுத்தியது. இருந்தபொழுதிலும், சிவில் செயல்முறை குறியீட்டு எண்:34-ன்படி வழக்கிற்குட்பட்டவர்களுக்கு முழுமையான நீதியையும், நீதி, நேர்மை, மனசாட்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.2,72,517/-க்கு 9% வட்டியை புகார் அளித்த நாளிலிருந்து இந்த தொகையை செலுத்தும் நாள்வரை கணக்கிட்டு கொடுக்கப்படவேண்டும் என உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஈ) மேல்முறையீடு மேற்குறித்த அளவுக்கு அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

2013(2) CPR 14 (SC); II (2011) CPJ 19 (SC).

***

## 2. ராஜீவ் ஹித்தேந்திர பதக் மற்றும் பலர் *(எதிர்)* அச்யுத் காசிநாத் கரேகர் மற்றும் ஒருவர்

**(Rajeev Hitendra Pathak and Ors. v. Achyut Kashinath Karekar and Anr.)**

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:551/2005-ல் 16.11.2005 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

ராஜீவ் ஹித்தேந்திர பதக் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

அச்யுத் காசிநாத் கரேகர் மற்றும் ஒருவர் – பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:4307/2007 உடன் எண்:8155/2001.
தீர்ப்பு தேதி : 19.08.2011.

### 4. வழக்கின் சுருக்கம் :

இரண்டு மேல்முறையீடுகளில் சட்டத்தின் ஒரே கேள்விகள் எழுந்திருப்பதால், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு மன்றம் பொதுவான ஒரே ஆணையின்படி தீர்வு செய்தது.

**<u>சிவில் மேல்முறையீட்டு எண்கள்:4307/2007:</u>**

ஸ்மிதா அச்யுத் கரேகர் தண்டுவடம் நழுவியதால் 08.10.1997 அன்று ஆசிர்வாத் நர்சிங் ஹோமில் அறுவை சிகிச்சை பெற்றார். அவருக்கு அறுவை சிகிச்சையின் போது இரத்த நாளங்கள் எதிர்பாராத வகையில் வெடிப்புற்றதால் மாலை 5.35 மணிக்கு இறந்துவிட்டார். புகார்தாரர்கள் 24.07.1999 அன்று சட்டபூர்வமாக தகவல் அறிக்கையை அனுப்பியது மட்டுமல்லாது, சேவை குறைபாடு உள்ளதாக தங்கள் புகாரையும் பதிவு செய்தனர். மாநில ஆணையம் 10.02.2004 அன்று வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் அனுப்பி, பின் 09.09.2004 அன்று தகுந்த நிரூபணங்கள் தேவை என அறிவித்து புகாரை நிராகரித்தது. 04.11.2004 அன்று புகார்தாரர்கள் 09.09.2004 அன்று வழங்கிய ஆணையை திரும்பப்பெறும் மனுவினை அளித்தனர். மாநில ஆணையம் அந்த ஆணையினை திரும்ப அழைத்து, புகாரை மீண்டும் ஏற்றது. இந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் மறு சீராய்வு மனு எண்:551/2005-ஐ தேசிய ஆணையத்தின் முன் பதிவு செய்தனர். அது அந்த ஆணையத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த ஆணையை எதிர்த்து தற்போதைய சிவில் மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். மாநில ஆணையம் அதன் ஆணையை தானே மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தை உறுதிபடுத்திய தேசிய ஆணையத்தின் ஆணையை உச்ச நீதிமன்றம் தள்ளிவைத்தது. இருந்தபோதிலும் ஆணையத்தின் பதிவுகளை

ஒப்புக்கொண்டு புகார் எண்:470/1999-ஐ திரும்பப்பெற்று சட்டபூர்வமாக நடத்துமாறு உத்தரவிட்டது.

**சிவில் மேல்முறையீட்டு எண்கள்:8155/2001:**

இவ்வழக்கில் தேசிய ஆணையம் வழங்கிய ஒருதலைபட்ச ஆணையின் மீதான மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்களே ஆணையத்தை அணுகி அதன் ஒருதலைபட்ச ஆணையை தள்ளிவைக்க தெரிவு செய்தலை நீதிமன்றம் அவர்களுக்கே வழங்கியது. அதன்படி புகார்காரர்கள் சீராய்வு மனுவை தாக்கல் செய்தனர். ஆணையை தனது 12.07.2001-ல் வழங்கிய தீர்ப்பின்படி (ஜியோத்சனா வழக்கின் தீர்ப்பை சார்ந்து) அந்த மனுவை நிராகரித்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை பதிவு செய்துள்ளார். மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, தேசிய ஆணையத்தின் உத்தரவு தள்ளிவைக்கப்பட்டு, தேசிய ஆணையத்தின் அசல் மனு எண்:110/2003-மீது புதிதாக விசாரணை நடத்தி 3 மாத காலத்திற்குள் முடிக்க ஆணை பிறப்பித்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 12, 13, 17, 17-A, 17-B, 18, 22, 22-A, 23 மற்றும் 30-A; நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகள் 2005, விதிமுறை எண் 26; உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908, ஆணை எண் 9, விதி 13.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Rajeev Hitendra Pathak v. Achyut Kashinath Karekar,* (2007) 7 SCC 667.
2. *Eureka Estates (P) Ltd. v. A.P. State Consumer Disputes Redressal Commission,* AIR 2005 AP 118. (Referred) [Para 23]
3. *New India Assurance Co. Ltd. v. R.Srinivasan,* (2000) 3 SCC 242. (overruled) [Para 9]
4. *Jyotsana Arvindkumar Shah v. Bombay Hospital,* (1999) 4 SCC 325. (Relied upon) [Para 8]
5. *Forest Research Institute v. Sunshine Enterprises,* (1997) 1 CPR 42. (Referred) [Para 10]
6. *Gulzari Lal Agarwal v. Accounts Officer,* (1996) 10 SCC 590. (Referred) [Para 15]
7. *UCO Bank v. Ram Govind Agarwal,* (1996) 1 CPR 351. (Referred) [Para 10]
8. *Morgan Stanly Mutual Fund v. Kartick Das,* (1994) 4 SCC 225. (Referred) [Para 14]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மிகுந்த விழிப்புடன் சட்டத்தின் உட்கூறுகளை ஆராய்ந்து பார்த்ததில் தீர்ப்பாயங்கள் சட்டங்களின்படி உருவாக்கப்பட்டனவென்றும், சட்டங்களின் தெளிவான விதிகளின்படி அதிகாரங்களை பெற்றுள்ளன என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. மாவட்ட மன்றங்களுக்கும், மாநில ஆணையங்களுக்கும் ஒருதலைபட்ச ஆணைகளை ஒதுக்கிவைப்பதற்கு எந்தவித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றும் மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரம் சட்டத்தில் தெளிவாக கொடுக்கப்படாத பட்சத்தில் அதனை பயன்படுத்தவும் இயலாது என்பதும் தெளிவுபடுத்தப்பட்டது.

(ஆ) சட்டமன்றம், தேசிய ஆணையத்திற்கு ஒருதலைபட்ச ஆணையை மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தை வழங்கியுள்ளதை உச்ச நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளது என்றும் திருத்தப்பட்ட சட்டத்திற்கு முன்பு, ஓர் வழக்கு ஆணையத்தால் நிராகரிக்கப்பட்டால் நுகர்வோர் உச்ச நீதிமன்றத்தை விரைந்து நாடவேண்டி இருந்தது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. திருத்திய பிரிவு 22, (தேசிய ஆணையத்தின் அதிகாரமும் மற்றும் வரைமுறைகள்) மற்றும் புதிதாக அறிமுகப்படுத்திய பிரிவு 22-A (ஒருதலைபட்ச ஆணையை ஒதுக்கி வைக்கும் அதிகாரம்) ஆகியவை நுகர்வோரின் பயனுக்கென்று ஏற்படுத்தப்பட்டன. நீதிமன்றம் சட்டமன்றத்தின் குறிக்கோளை தெளிவாக தெரிவு செய்தது. அதற்கேற்றார்போல் சட்ட பொருள் விளக்கமும் கொடுக்கப்பட்டது.

(இ) *ஜியோத்சேனா* வழக்கில் எடுக்கப்பட்ட முடிவு சரியான சட்டத்தை விளக்குவதாகவும், பின் *நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி* வழக்கில் எடுத்த முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்படாத, நிலைபெறாத ஒன்று எனவும் நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஈ) சட்டக் கூறுகளை கருத்தில் கொண்டு, சிவில் மேல்முறையீட்டு எண்:4307/2007-ல் மாநில ஆணையம் தான் வழங்கிய ஆணைகளை சீராய்வு செய்து கொள்ளும் அதிகாரம் உள்ளது என முடிவெடுத்த தேசிய ஆணையத்தின் பதிவு ஒத்திவைக்கப்பட்டது. பிரிவு 22-ன் சட்ட திருத்தமும் 22-A-னின் புதிய மாற்றமும் 2002-ல் ஏற்படுத்திய பிறகு சீராய்வு செய்யும் அதிகாரமும் மீண்டும் அழைக்கும் அதிகாரமும் தேசிய ஆணையத்திடம் மட்டுமே வழங்கப்பட்டது. இருந்தபொழுதிலும் புகார் எண்:473/1999-ல் தேசிய ஆணையம் பதிவு செய்ததை உச்ச நீதிமன்றம் ஒத்து ஏற்று அசல் எண்ணையே திரும்பப் பெற்று சட்டப்படி வழக்கை நடத்த அனுமதித்தது.

(உ) தேசிய ஆணையத்தின் சிவில் மேல்முறையீட்டு எண்:8155/2001-ல் வழங்கப்பட்ட ஆணை ஒத்திவைக்கப்பட்டு, ஆணையம் அசல் மனு எண்:110/2003-ஐ புதிதாக நடத்த *(de novo)* தகவல் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் கூடுமானவரை துரிதமாக செயல்பட உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது.

(ஊ) இதன்படி இரண்டு மேல்முறையீடுகளும் முடிவு செய்யப்பட்டன.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 9 SCC 541; IV (2011) CPJ 35 (SC); 2012(1) CPR 78 (SC).

***

**3. லக்னோ முன்னேற்ற குழுமம்** *(எதிர்)* **ஷ்யாம் கபூர்**

**(Lucknow Development Authority v. Shyam Kapoor)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மறு சீராய்வு மனு (Revision Petition) எண்:3939/2011-ல் (சிறப்பு விடுப்பு மனு (சி) எண்:19556/2012 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது) 30.03.2012 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

லக்னோ முன்னேற்ற குழுமம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

ஷ்யாம் கபூர் – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:936/2013.

தீர்ப்பு தேதி : 05.02.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர் கோமதி நகரில் ‘A’ வகுப்பில், 6000 சதுர அடி குடியிருப்பு மனையை ஒதுக்கக்கோரி ரூ.5,000/- முன் பணமாக மேல்முறையீட்டாளரிடம் 01.12.1982-ல் கட்டியிருந்ததாக கூறி அதற்கான வழக்கை மாவட்ட மன்றத்தில் மேல்முறையீட்டாளர் மீது தொடர்ந்தார். அதில் மேல்முறையீட்டாளர் புகார்தாரருக்கு குடியிருப்பு நிலத்தை ஒதுக்கியோ அல்லது வைப்புதொகையை திருப்பியோ தரவில்லை என குறை கூறினார். மேல்முறையீட்டாளர் 1991-ல் பத்திரிகையில் ஒரு அறிவிப்பை அளித்து பதிலுரையாளர்களோ/புகார்தாரர்களோ மற்றவர்கள் அவர்களை போன்றுள்ளோர்களோ கூடுதல் வைப்பு தொகையை செலுத்தினால் ஒதுக்கீட்டிற்கு பரிசீலனை செய்வதாக அறிவித்தனர். பதிலுரையாளர்/புகார்தாரர் இதன்படி 30.01.1992-ல் கூடுதலாக ரூ.15,000/- செலுத்தினர். இருப்பினும் மனையை ஒதுக்கீடு செய்யவில்லை. மேல்முறையீட்டாளருக்கு கடிதங்கள் மூலமாக தொடர்பு கொண்டும் எந்த பதிலும் வராததால் மாநில ஆணையத்தில் பதிலுரையாளர் புகாரை பதிவு செய்தார். 30.12.2005 தேதியிட்ட ஆணைப்படி ஆணையம் புகாரை ஏற்று எதிர்மனுதாரர் ஜனவரி 1992-ல் உள்ள விலைப்படி 6000 சதுர அடி கொண்ட ஏதாவது ஒரு மேம்படுத்தப்பட்ட மனையினை கோமதி நகரில் ஒதுக்கித்தர ஆணையிட்டது. வழக்கின் செலவினங்களுக்காக ரூ.1,000/- புகார்தாரருக்கு அளிக்க உத்தரவிட்டது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் தனது

மேல்முறையீட்டை மாநில ஆணையத்தில் தாக்கல் செய்தார். இந்த மேல்முறையீட்டை ஏற்ற மாநில ஆணையம் மாவட்ட மன்றத்தின் ஆணையை நிலுவையில் வைத்து பதிலுரையாளருக்கு 01.11.2006-ல் நோட்டீஸ் வழங்கியது. ஆனால் மேல்முறையீட்டாளர் செயல்முறை கட்டணத்தை (process fee) செலுத்த தவறினார். 11.05.2007-ல் மாநில ஆணையம் ஒருவார காலம் அவகாசம் கொடுத்து மேல்முறையீட்டாளர் செயல்முறை கட்டணத்தை செலுத்த தவறினால் 01.11.2006-ல் வழங்கிய இடைக்கால நிலுவை ஆணை ரத்து ஆவதுடன் மேல்முறையீட்டாளர் தொடுத்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தது. ஆனால் மேல்முறையீட்டாளர் மாநில ஆணையம் கால அவகாசம் கொடுத்தும் அந்த கட்டணத்தை செலுத்தவில்லை. மாநில ஆணையத்தின் 11.05.2007 தேதியிட்ட உத்தரவால் அதிருப்தி அடைந்த மேல்முறையீட்டாளர் 05.12.2011 அன்று தேசிய ஆணையத்திடம் மறு சீராய்வு மனுவை 4½ ஆண்டுகளுக்கு பிறகு சமர்ப்பித்தனர். மாநில ஆணையத்தின் இடைக்கால உத்தரவு, அதன் அதிகார எல்லைக்குள் வரவில்லை என்றும் ஆகையால் 11.05.2007-ல் மாநில ஆணையம் வழங்கிய உத்திரவை ஒத்தி வைக்கவோ மீண்டும் அழைக்கவோ மனுவினை அளிக்கவில்லை என மேல்முறையீட்டாளர்கள் காரணம் கூறினர். இவ்வழக்கை பலமுறை விசாரித்து ஒத்திவைத்த தேசிய ஆணையம் இந்த மனு தவறான கோரிக்கை என கண்டு ரூ.10,000/- மேல்முறையீட்டாளரின் மீது அபராதம் விதித்தது. மேலும் இந்த மறு சீராய்வு மனு குறிப்பிட்ட காலவரைக்குள் சமர்ப்பிக்காததால் தள்ளுபடி செய்யப்பட்டது. 30.03.2012 தேதியிட்ட தேசிய ஆணையத்தின் ஆணையால் பாதிக்கப்பட்டு தற்போதைய மேல்முறையீடு பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் தேசிய ஆணையம் விதித்த செலவினங்கள் ரத்து செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 15, 17, 18, 21(b), 22, 22-A, 23, 24-A மற்றும் 30-A; நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகள் 2005, விதிமுறை எண் 26; உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908, ஆணை 9, விதி 13.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *LDA v. Shyam Kapoor,*
   Revision Petition No.3939 of 2011, order dated 30.03.2012 (NC).
   (Modified) [Para ….]

2. *Rajeev Hitendra Pathak v. Achyut Kashinath Karekar,*
   (2011) 9 SCC 541 : (2011) 4 SCC (Civ) 781. (Followed) [Para 10]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளரால் பதிவு செய்யப்பட்ட மறு சீராய்வு மனு அற்பமான ஒன்று என தேசிய ஆணையம் எடுத்த முடிவு நியாயமானதா எனும் முதல் கேள்வி உச்ச நீதிமன்றம்

முன்பாக எழும்பியது. மேல்முறையீட்டாளர், *ராஜீவ் ஹித்தேந்திர பதக் எதிராக அச்யுத் காசிநாத் கரேக்கர்* என்ற வழக்கில் மாவட்ட மன்றமோ அல்லது மாநில ஆணையமோ ஒருதலைபட்ச ஆணையை மறு ஆய்வு செய்ய எந்த அதிகாரமும் இல்லை என்பதை உச்ச நீதிமன்றம் எடுத்துக்காட்டியது. இந்தவித முடிவை எடுக்க தேசிய ஆணையத்திற்கு மட்டுமே அதிகாரமுள்ளது என நீதிமன்றம் பதிவு செய்தது. எனவே மேல்முறையீட்டாளர் மாநில ஆணையம் வழங்கிய 11.05.2007 தேதியிட்ட ஆணையின்மேல் தன் மனுவை கொடுத்து மனுவை திரும்ப அழைக்காததில் தவறேதும் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் மாநில ஆணையத்தை அணுகி தன் முறையீட்டை வெளிபடுத்தாதது மேல்முறையீட்டாளரின் தவறான நடத்தையாகும் என தேசிய ஆணையம் தீர்மானித்தது முற்றிலும் நியாயமற்றது என உச்ச நீதிமன்றம் கண்டறிந்தது.

(ஆ) தேசிய ஆணையம், மறு சீராய்வு மனுவை மிகவும் காலதாமதமாக பதிவு செய்ததுதான் வழக்கை தள்ளுபடி செய்வதற்கான காரணம் என்று உச்ச நீதிமன்றம் கருதியது. தேசிய ஆணையம் இவ்வித முடிவை எடுத்ததில் எவ்வித தவறும் இல்லை எனவும் உச்ச நீதிமன்றம் கருதியது. லக்னோ முன்னேற்ற குழுமம் 4½ ஆண்டு கழித்து தேசிய ஆணையத்தில் மேல்முறையீட்டை செய்தபோது, சரியான காரணங்களை காட்டி காலதாமதத்திற்கு விலக்கு கோர கடமைப்பட்டுள்ளது. சரியான காரணங்கள் இல்லாதபோது காலதாமதத்தை ஏற்காது தேசிய ஆணையம் இடைக்கால ஆணையை பிறப்பித்ததில் எந்த தவறும் இல்லை. மேலும் மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தின் முன் கூட காலதாமதமாக மேல்முறையீட்டை சமர்ப்பித்ததற்கு தகுந்த காரணங்களை கூறவில்லை என்பதனையும் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. ஆகையால் 30.07.2012-ல் தேசிய ஆணையம் வழங்கிய ஆணையை தகுந்த காரணங்கள் இல்லாமல் ஒத்தி வைக்க இயலாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து.

(இ) இருந்தபோதிலும், வழக்கிற்கான செலவுகளை கொடுக்கும்படி மேல்முறையீட்டாளர் மீது தேசிய ஆணையம் ஆணை பிறப்பித்ததை ஒத்திவைப்பது நியாயமாக இருக்கும் என நீதிமன்றம் கருதியது. மாநில ஆணையம் பிறப்பித்த உத்தரவின் மேல் 11.05.2007-ல் மேல்முறையீட்டாளர் தேசிய ஆணையத்தில் தொடுத்த மேல்முறையீடு அற்பமானது எனும் முடிவு சரியானதல்ல என உச்ச நீதிமன்றம் கருதியதே அதற்குக் காரணமாகும். மேற்காணும் முடிவைத்தவிர தேசிய ஆணையத்தின் உத்தரவானது மற்ற எந்தவொரு தலையீட்டிற்கும் ஆளாகவில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 2 SCC 754; I (2013) CPJ 1 (SC);

2013(1) CPR 597 (SC); 2013(4) CPR 369 (SC).

***

## 4. சுரேந்திர மோகன் அரோரா *(எதிர்)* எச்.டி.எப்.சி வங்கி மற்றும் பலர்
## (Surendra Mohan Arora v. HDFC Bank Ltd. and Others)

### 1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :

டில்லி உயர் நீதிமன்றம் எழுத்து மனு (Writ Petition) எண்:64/2013-ல் 07.01.2013 அன்று வழங்கப்பட்ட ஆணை.

### 2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :

சுரேந்திர மோகன் அரோரா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

எச்.டி.எப்.சி வங்கி மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

### 3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :

சிவில் மேல்முறையீட்டு எண்:4891/2014 (சிறப்பு விடுப்பு (சி) எண்:14965/2013 மனுவிலிருந்து எழுப்பப்பட்டது).

தீர்ப்பு தேதி : 25.04.2014.

### 4. வழக்கின் சுருக்கம் :

மேல்முறையீட்டாளர், முதல் பதிலுரையாளரின் பேரில் முறையற்ற வர்த்தக பயிற்சியினை செய்கிறார் என்று மாவட்ட மன்றத்தில் புகார் அளித்தார். இந்த புகாரை மாவட்ட மன்றம் ஏற்றது. பதிலுரையாளரின் மேல்முறையீட்டை மாநில ஆணையம் தள்ளுபடி செய்தது. தேசிய ஆணையத்தின் முன் பதிவு செய்யப்பட்ட மறு சீராய்வு மனு, வழக்கில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட மன்றம் மற்றும் மாநில ஆணையத்தின் ஆணைகள் ஒதுக்கி வைக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் தன் சீராய்வு மனுவை தேசிய ஆணையத்தின் முன் பதிவு செய்ததில் 24.09.2012-ல் வழங்கப்பட்ட ஆணையினால் நிராகரிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் அரசியல் சாசன சட்டம், பிரிவு 226-ன்கீழ் எழுத்து மனுவை உயர் நீதிமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு வரையறைகள் எண் 15-ன்கீழ் இது சட்டத்திலுள்ள முறைபாடு *(ultra vires)* என எடுத்துரைத்து சீராய்வு மனுவினை தேசிய ஆணையத்தில் மீண்டும் விசாரணை செய்யப்படவேண்டும் என்றும் மேல்முறையீட்டாளருக்கு வாய்மூலம் வாதிட தருணம் அளிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டது. உயர் நீதிமன்றம் எழுத்து மனுவை ரத்து செய்து வரையறை எண் 15-ஐ ஆட்கொண்டது. தற்போதைய மேல்முறையீடு உயர் நீதிமன்ற ஆணையினை எதிர்த்து தொடுக்கப்பட்டது. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 22, 23 மற்றும் 30A; நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகள் 2005, விதிமுறை எண் 15; இந்திய அரசியல் சாசன சட்டம், பிரிவு 226.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *State of Orissa v. Dr.(Miss) Binapani Dei and Ors.,* (1967) 2 SCR 625. [Para 8]
2. *Maneka Gandhi v. Union of India & Anr.,* (1978) 1 SCC 248. [Para 8]
3. *Sahara India (Firm), Lucknow v. Commissioner of Income Tax, Central-1 & Anr.,* (2008) 14 SCC 151. [Para 8]
4. *Automotive Tyre Manufactures Association v. Designate Authority and Ors.,* (2011) 2 SCC 258. [Para 8]
5. *Sanjay Kumar v. The State of Bihar & Anr.,* SLP (Criminal) No.9967 of 2011 dated 28.01.2014. [Para 11]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) மேல்முறையீட்டாளரின் வாதம் என்னவென்றால் வரையறை 15-ஐ அறிமுகப்படுத்தியதில் தேசிய ஆணையம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டவழி எண் 30A-ல் கொடுக்கப்பட்ட அதிகாரங்களையும், அதிகார வரையறைகளையும் மீறியுள்ளது என வாதிட்டார்.

(ஆ) தேசிய ஆணையத்திற்கு வழங்கப்பட்ட சீராய்வு அதிகாரம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986, பிரிவு 22-ன்கீழ் கீழ்காணும் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளதை இந்த நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது:

> “பிரிவு 22-ன்கீழ் தேசிய ஆணையத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் அதை பயன்படுத்தும் வழிமுறைகளும். - (1) பிரிவுகள் 12, 13 மற்றும் 14-ல் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் புகாரை தீர்க்க, செயல்படுத்த, மாவட்ட மன்றத்திற்கு கொடுத்துள்ளதைப்போல் சில மாறுதல்களை ஏற்படுத்தி தேவைப்பட்டால் தேசிய ஆணையம் குறைகளை தீர்த்துவைக்கலாம்.
>
> (2) தேசிய ஆணையம் உட்பிரிவு 1-ன்கீழ் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் ஆணையத்தால் வழங்கப்பட்ட உத்தரவை கோப்புகளின் அடிப்படையில் சீராய்வு செய்யலாம்”.

மத்திய அரசாங்கத்தின்முன் அனுமதியை பெற்று வரையறைகளை தயார் செய்வதில் தேசிய ஆணையத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 30A-ன்கீழ் காணலாம்.

வரையறை 15 கீழ்கண்டவாறு கூறுகிறது:

> “வரையறை 15, சீராய்வு:- (1) சீராய்வு செய்வதற்கான காரணங்களை தெளிவாக கூறவேண்டும்.

(2) தேசிய ஆணையத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகள் அன்றி சீராய்வு மனுவினை வாய்மொழி வாதங்களுக்காக சுற்றறிக்கை விட்டு, முடிந்தவரையில் எந்த உறுப்பினர்கள் ஆணையை வழங்கினார்களோ அவர்களே சீராய்வு செய்து தீர்க்கும்படி வழிவகுக்கிறது''.

(இ) மேல்முறையீட்டாளர் தங்கள் வாதத்தின்படி நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பதில் கேட்கும் உரிமத்தையும் மற்றும் நுகர்வோருக்கான தேவையான நிலைப்பாட்டினையும் குறிப்பிட்ட மன்றத்தில் பதிவு செய்ய உரிமம் உள்ளது என்பதனை எடுத்துரைத்தார். தேசிய ஆணையத்தின் சீராய்வு மனுக்களை வாய்மொழி வாதத்திற்கு அனுமதிக்காமல் சுற்றறிக்கை செய்வது நுகர்வோரின் கேட்கும் உரிமத்தை மற்றும் இயற்கை நியதிகளையும் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 22–ஐ மீறியதாகும். மேலும் தேசிய ஆணையம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 30A–ல் கொடுக்கப்பட்டுள்ள தன் அதிகாரத்தை வரையறை 15–ஐ அறிமுகப்படுத்துவதில் செயல்படுத்தி மீறியுள்ளது.

(ஈ) இந்த நீதிமன்றம் பிரிவு 22–ல் தேசிய ஆணையத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் உள்ளார்ந்த அதிகாரம் இல்லையென்றும், மேலும் இந்த ஆணையத்திற்கு ஆவணங்களின் முகப்பில் தவறு இருப்பின், தன் அதிகாரத்தை சீர்தூக்கி பார்க்க உரிமை உள்ளது என்று கூறியது. மேலும் இந்த வரையறைகள் பிரிவு 30A–ன்கீழ் ஆணையத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியே வடிவமைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கூறியது. வரையறை 15(2) உள் ஆராய்ந்து பார்த்ததில் இந்த தேசிய ஆணையத்திற்கு மீள் திருத்த மனுவை ஏற்றுக்கொள்ளவும் அதன் வழிமுறைகளை செயல்படுத்தவும் இரண்டு பக்க வாதுரைகளை கேட்டறிந்தோ அல்லது சுற்றறிக்கையின் மூலம் தெரிவித்தோ முடிவை எடுக்கலாம் என நீதிமன்றம் கூறியது. இதன்படி வரையறைகள் பிரிவு 22–ற்கு உட்பட்டே உள்ளது எனவும், அது அந்த சட்டத்திற்கு புறம்பாக இல்லை எனவும் நீதிமன்றம் முடிவெடுத்தது.

(உ) உயர் நீதிமன்றம் அந்த எழுத்துமூல மனுவானது, தவறுதலாக புரிந்துகொண்டும் உண்மை அடிப்படையில்லாமல் மீள் திருத்த மனுவை வாய்மொழி வாதுரையாக கேட்க விண்ணப்பிக்க கோரப்பட்டது தவறு என்று நீதிமன்றம் கூறியதையோ மேல்முறையீட்டாளர், தேசிய ஆணையம் தனது வாதுரையை கேட்க எந்தவித வேண்டுதலையும் கோரவில்லை என்றும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொண்டது. மேலும் இந்த நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தின் ஆணையில் எந்தவித குறுக்கீடும் செய்யாமல் அந்த ஆணையை ஏற்று இந்த வழக்கையும், மேல்முறையீட்டையும் தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

AIR 2014 SC 2871; II (2014) CPJ 1 (SC); 2014(2) CPR 614 (SC).

***

# 16. நுகர்வோர் மன்றத்தில் அனுமதிக்கப்பட்ட முகவர்களின் செயல்முறைகள்

## 1. C. வெங்கடாசலம் *(எதிர்)* அஜீத்குமார் சி ஷா மற்றும் பலர்

## (C. Venkatachalam v. Ajitkumar C Shah & Ors.)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

பாம்பே உயர் நீதிமன்றம் ரிட் மனு எண்:1425/2002-ல் 04.09.2002 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பும் அதன் ஆணையும்.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

C. வெங்கடாசலம் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

அஜீத்குமார் சி ஷா மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:868/2003 உடன் எண்கள்:869-70/2003.

தீர்ப்பு தேதி : 29.08.2011.

**4. வழக்கின் சுருக்கம் :**

அனுமதிக்கப்பட்ட முகவர், வழக்கறிஞராக பதிவு பெறாமல், புகார்தாரர்களுக்காக வாதிட அனுமதி வழங்கக்கூடாது என்று தெற்கு மும்பை மாவட்ட மன்றம் ஒரு வழக்கில் குறிப்பிட்டது. மகாராஷ்ட்ராவிலுள்ள இன்னொரு மாவட்ட மன்றத்தில் இதற்கு எதிராக முடிவு தெரிவிக்கப்பட்டது. இந்த பிரச்சனை மாநில ஆணைத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆணையம், அனுமதிக்கப்பட்ட முகவர்கள், புகார்தாரர்களுக்காக ஆஜராகியோ அல்லது தங்கள் இருப்பை பதிவு செய்திருந்த வழக்குகளுக்கு இடைக்கால தடை விதித்தது. மேலும் முகவர்கள், நுகர்வோர் மன்றத்தின்முன் வர தடை விதிக்கப்பட்டிருந்தால் அந்த தடையை நீக்கவும் ஆணையம் மறுத்தது. மாநில ஆணையத்தின் மேற்படி இடைக்கால உத்தரவை எதிர்த்து பாம்பே உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, அனுமதிக்கப்பட்ட முகவர்கள், நுகர்வோர் மன்றங்களில் ஆஜராக உரிமை இருக்கிறது என்றும் அந்த உரிமை வழக்கறிஞர்கள் சட்டம், 1961, நிபந்தனைகளின்படி சீரற்றதாகவோ, முரண்பாடு உடையதாகவோ இல்லை என்று தீர்ப்பளித்தது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்டு தற்போதய மேல்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுகுழு, பாம்பே உயர் நீதிமன்றத்தின் ஆணையை ஏற்றுக்கொண்டு, இந்த முறையீடுகளை தகுதி இல்லாதது என்று முடிவு செய்தது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 12, 18, 22 மற்றும் 28A; வழக்கறிஞர்கள் சட்டம், 1961, பிரிவுகள் 29, 32 மற்றும் 33; உரிமையியல் நடைமுறை சட்டம், ஆணை 3, விதி 1; நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், 1987, விதிகள் 2(b), 4(7), 14 மற்றும் 15; மகாராஷ்ட்ர நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், 2000, விதி 9 மற்றும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய விதிமுறைகள் 2005, விதிமுறை 16.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *R.D. Nagpal v. Vijay Dutt,* (2011) 12 SCC 498.
2. *C. Venkatachalam v. Ajitkumar C. Shah*, (2011) 12 SCC 497.
3. *J.J. Merchant v. Shrinath Chaturvedi,*
   (2002) 6 SCC 635. (Referred) [Para 77]
4. *Bhatia International v. Bulk Trading S.A.,*
   (2002) 4 SCC 105. (Referred) [Para 62]
5. *Ajitkumar C. Shah v. Oriental Insurance Co. Ltd,*
   WP (OS) No.1425 of 2002 decided on 04.09.2002 (Bom).
6. *District Mining Officer v. TISCO,*
   (2001) 7 SCC 358. (Referred) [Para 61]
7. *India Photographic Co. Ltd. v. H.D. Shourie,*
   (1999) 6 SCC 428. (Referred) [Para 76]
8. *Common Cause v. Union of India,*
   (1997) 10 SCC 729. (Referred) [Para 78]
9. *Laxmi Engineering Works v. PSG Industrial Institute,*
   (1995) 3 SCC 583. (Referred) [Para 75]
10. *Kartar Singh v. State of Punjab,*
    (1994) 3 SCC 569:1994 SCC (Cri) 899. (Referred) [Para 60]
11. *LDA v. M.K. Gupta,* (1994) 1 SCC 243. (Referred) [Para 74]
12. *Harishankar Rastogi v. Girdhari Sharma,*
    (1978) 2 SCC 165:1978 SCC (Cri) 168. (Referred) [Para 21]
13. *Anandji Haridas & Co. (P) Ltd. v. Engg. Mazdoor Sangh,*
    (1975) 3 SCC 862:1975 SCC L&S 165.
14. *O.N.Mohindroo v. Bar Council of Delhi,*
    AIR 1968 SC 888:(1968) 2 SCR 709. (Referred) [Para 20]

15. *R.M.D Chamarbaugwalla v. Union of India,*
AIR 1957 SC 628. (Referred) [Para 58]

16. *Donoghue v. Stevenson,*
1932 AC 562:1932 All ER Rep. 1 (HL). (Referred) [Para 25]

17. *MacPherson v. Buick Motor Co.,*
217 NY 382:111 NE 1050 (1916). (Referred) [Para 28]

18. *Carlill v. Carbolic Smoke Ball Co.,*
(1893) 1 QB 256:(1891-94) All ER Rep. 127. (Referred) [Para 23]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ல் கொண்டுவரப்பட்டது. நுகர்வோரின் குறைகளை நியாயமான கட்டணத்துடன் வேகமாக செயல்படுத்தவேண்டும் என்பதனை உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. பாராளுமன்றத்தின் எண்ணத்தை நன்கு புரிந்துகொண்டு அதனை எடுத்துரைப்பது நீதிமன்றங்களின் கடமையாகும் எனவும் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. ஆனால், நடப்பு வழக்கில், நாடாளுமன்றத்தின் எண்ணம் என்ன என்பது பிரச்சனையல்ல. ஏனெனில், முகவர்கள் யார் என்பது பற்றியும் அவர்களை நுகர்வோர் மன்றங்களில் அனுமதிப்பது பற்றியும் விதிகள் தெளிவாக உள்ளன.

(ஆ) பாதிக்கப்பட்ட நுகர்வோர், நுகர்வோர் மன்றங்களில் நேரில் ஆஜராகவோ அல்லது அனுமதிக்கப்பட்ட முகவர்கள் மூலம் ஆஜராகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகவோ சட்டம் அனுமதிக்கிறது. இது புகார்தாரரின் விருப்பம் என்பதனையும் நீதிமன்றங்கள் வழக்கறிஞர்களின் சேவையை அவர் கண்டிப்பாக பெறவேண்டும் என்று வலியுறுத்தக்கூடாது என்றும் நீதிமன்றம் பதிவுசெய்தது. மேலும் வழக்கறிஞர்கள், நுகர்வோர் மன்றத்தின்முன் ஆஜராகி வாதிட உரிமை உள்ளது என்றும் இந்த உரிமையை மற்றவர்கள் கண்டிப்பாக கோரமுடியாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

(இ) மகாராஷ்ட்ரா நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், 2000, வழக்கறிஞர்கள் வாதிடுவதையும், புகார்தாரர்களுக்காக மன்றத்தின்முன் வருவதையும் தடைசெய்ய முடியாது என்று தெளிவுபடுத்தியுள்ளது. அதே நேரத்தில், நேரடியாக ஆஜராகவோ அல்லது அனுமதிக்கப்பட்ட முகவர் மூலம் ஆஜராகவோ புகார்தாரருக்கு உரிமை உள்ளது. ஒவ்வொரு வழக்கறிஞரும், புகார்தாரரால் பணியமர்த்தப்பட்ட முகவர் ஆவர். மத்திய, மாநில விதிகளின்படி முகவர் என்பவர் வழக்கறிஞராகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. மத்திய, மாநில அரசுகளின் விதிமுறைகள் நுகர்வோர் பயனுக்காக ஏற்படுத்தப்பட்டன. சிக்கலான பிரச்சனைகளை உருவாக்கவோ அல்லது அதிகப்படியான தொழிற்கட்டணங்கள் செலுத்தவோ ஏற்படுத்தப்பட்டவை அல்ல. அம்மாதிரியான விளக்கம்தான் சட்டரீதியான குறிக்கோளை முன்னேற்ற உதவும். உரிமை கோருபவரும்,

பிரதிவாதியும் சமநிலையில் இருக்கவேண்டும் என்பதை இது ஊக்குவிக்கிறது. வழக்கறிஞர்கள் சட்டத்தின் கூறுகளை இது புறக்கணிக்கவில்லை.

(ஈ) மேலும் அனுமதிக்கப்பட்ட முகவர்கள், மாவட்ட மன்றங்கள் மற்றும் மாநில ஆணையத்தின் முன்பாக ஆஜராகும்போது அவர்கள் சட்டத் தொழிலில் ஈடுபடுவதாக எடுத்துக்கொள்ள முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியதை, உச்ச நீதிமன்றம் முழுமையாக ஒப்புக்கொள்கிறது. மேலும் விற்பனைவரி சட்டம், வருமானவரி சட்டம், போட்டி சட்டம் இவைகளில் வழக்கறிஞர்கள் அல்லாதவர், புகார்தாரர்களுக்காக வாதிட, அச்சட்டங்களில் வழிவகுத்தபடி அனுமதிக்கப்படுகின்றனர் என்பதை உயர் நீதிமன்ற தீர்ப்பு எடுத்துக் காட்டியுள்ளது. ஆனால் வழக்கறிஞர் அல்லாதவர்கள் சட்டப்பயிற்சியில் ஈடுபடுவதாகக் கூறமுடியாது என்பதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. இதே ஒப்புமை வழக்கறிஞர் அல்லாதவர் நுகர்வோர் மன்றத்தின்முன் ஆஜராகும்போது சட்டப்பயிற்சியில் ஈடுபடுவதாகக் கூறமுடியாது என்பதனை வெளிப்படுத்துகிறது. கலம் 1–ல் குறிப்பிடப்பட்ட தீர்ப்பில் உயர் நீதிமன்றம் எடுத்த முடிவை, உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

(உ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986, பிரிவு 30A–ன்கீழ் தேசிய ஆணையம் முகவர்கள் நுகர்வோர் மன்றங்களில் ஆஜராகுவதற்காக ஏற்படுத்தியுள்ள வழிமுறைகள், அம்மாதிரி ஆஜராவதை கட்டுப்படுத்தவும், நெறிப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டன என்பதை உச்ச நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும் வழிமுறை எண் 16, முகவர்கள் நேரில் ஆஜராவதை நியாயமான முறையில் கட்டுப்படுத்துகிறது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. தேசிய ஆணையம் ஏற்படுத்திய வழிமுறைகளின்படி முகவர்கள் நுகர்வோர் மன்றங்கள் முன்பு ஆஜராவதை தங்கள் தொழிலாகக் கருதி செயல்படுவதை தடுக்க உரிமை உள்ளது என்பதை உச்ச நீதிமன்றம் பதிவு செய்கிறது. மேலும் விதிமுறைகளை வகுக்கும்போது, முகவர்களை அங்கீகாரம் செய்யும்முறை, அவர்கள் செலுத்தவேண்டிய கட்டணம், அவர்களது நடத்தை கோட்பாடுகள் ஆகியவை குறித்து உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையத்திற்கு பல ஆலோசனைகளை வழங்கியது.

(ஊ) வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை முழுமையாக கருத்தில் கொண்டு, உச்ச நீதிமன்றம், மும்பை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று, மேல்முறையீடுகளை தகுதியில்லாதவை என தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 9 SCC 707; III (2011) CPJ 33 (SC); 2011(4) CPR 240 (SC).

***

## 17. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் இரண்டாவது நிபந்தனையும் பிரிவு 19-ன் எதிர்பார்ப்பும்

### 1. ஸ்ரீநாத் கார்ப்பரேஷன் மற்றும் பலர் *(எதிர்)* நுகர்வோர் படிப்பும் மற்றும் ஆராய்ச்சி சங்கம் மற்றும் பலர்

**(Shreenath Corporation and Others v. Consumer Education and Research Society and Others)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் இறுதி மேல்முறையீட்டு எண்:95/2012-ல் 15.05.2012 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஸ்ரீநாத் கார்ப்பரேஷன் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

நுகர்வோர் படிப்பும் மற்றும் ஆராய்ச்சி சங்கம் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:9052-9062/2013 இதனுடன் 9064-9066/2013.

தீர்ப்பு தேதி : 07.07.2014.

**4. வழக்கின் சுருக்கம் :**

நுகர்வோர் குறைதீர் ஆணையம் குஜராத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பிரிவு 17(1)-ன்கீழ் மாறுபட்ட பல நபர்களால் மேல்முறையீட்டாளர்களான எதிர் நபர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது. 30.01.2012 தேதியிட்ட ஆணையின்படி மாநில ஆணையம் மனுக்களை ஏற்று மேல்முறையீட்டாளரான எதிர் நபர்களை ஒரு பகுதியான தொகையினையும் அதற்குண்டான வட்டியையும் புகார்தாரர்களுக்கு வழங்க உத்தரவிட்டது. இந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீட்டாளர்கள் பிரிவு 19-ன்கீழ் தேசிய ஆணையத்தில் தனித்தனியே முறையீடுகள் செய்தனர். தேசிய ஆணையம் 15.05.2012 அன்று பொதுவான இடைக்கால தடை உத்தரவை வழங்கி அதில் மேல்முறையீட்டாளர்கள் தீர்ப்பு வழங்கிய தொகையில் (50 விழுக்காடு) 3 மாத காலத்திற்குள் மாநில ஆணையத்தில் செலுத்துமாறு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை, எதிர்த்தும், மற்றும் ஆணையினை கேள்வி கேட்ட பிரிவு 19-ன் நிபந்தனைகளுக்கு பொருந்தாது என தற்போதய மேல்முறையீடு பதிவு செய்யப்பட்டது. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 19 மற்றும் 23; உரிமையியல் நடைமுறை சட்டம், ஆணை எண் 41, விதி எண் 5 மற்றும் ஆணை எண் 39, விதி எண் 1.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Shreenath Corporation and Others v. Consumer Education and Research Society and Others* First Appeal No.95 of 2012, order dated 15.05.2012 (NC). [Para 1&11]
2. *K.Kathuria v. National Consumer Disputes Redressal Forum,* AIR 2007 Del 135. [Para 4]
3. *State of Haryana v. Maruti Udyog Ltd.,* (2000) 7 SCC 348. [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 19–ல் எவ்வளவு தொகை வைப்புத் தொகையாக வைக்கவேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே தேசிய ஆணையம் முறையீட்டாளரை மாநில ஆணையம் வழங்கிய ஆணைப்படி 50 விழுக்காடு தொகையினை அல்லது ரூ.35,000/– வைப்புத்தொகையாக வைக்க வேண்டும் என்கின்ற ஆணையை பிறப்பித்திருக்கக்கூடாது என்பது மேல்முறையீட்டாளர் தன் முறையீட்டிற்கு ஆதரவாக டெல்லி உயர் நீதிமன்ற தீர்ப்பு, *K.Kathuria v. National Consumer Disputes Redressal Forum* என்ற வழக்கை மேல்முறையீட்டாளர் சார்ந்திருந்தார். ஆனால் பதிலுரையாளர் தன் முறையீட்டில் இந்த இடைக்கால உத்தரவு நிபந்தனைக்குட்பட்ட தடை உத்தரவு. அது பிரிவு 19–ன்கீழ் வழங்கப்பட்ட 2வது நிபந்தனையல்ல என முறையிட்டார்.

(ஆ) பதிலுரையாளரின் முறையீட்டை உச்ச நீதிமன்றம் ஏற்று நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 19–ன்படி மாநில ஆணையத்தின் ஆணைக்கு எதிராக பிரிவு 17, விதி (a) உட்பிரிவு (i)–ல் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டியது.

“19. மேல்முறையீடுகள்: மாநில ஆணையத்தால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் அதில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பிரிவு 17, விதி (a) உட்பிரிவு (i)–ன்கீழ் தேசிய ஆணையத்தின்முன் தங்கள் முறையீட்டை 30 நாட்களுக்குள் ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து அதில் விவரிக்கப்பட்ட காரியங்களின்படி முறையீடு செய்யலாம்.

இந்த 30 நாட்கள் முடிந்தபின் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்க முடியவில்லை என்பதற்கான தகுந்த காரணங்களை தெரிவித்தால் தேசிய ஆணையம் இந்த முறையீட்டை ஏற்று செயல்படுத்தலாம்.

*மாநில ஆணையம் வழங்கிய உத்தரவின்படி செலுத்த வேண்டிய தொகையில் 50 விழுக்காடு தொகையையோ அல்லது ரூ.35,000/- இவைகளில் குறைந்த ஒன்றை செலுத்த தவறினால் தேசிய ஆணையம் இந்த மேல்முறையீட்டை பதிவுசெய்ய உரிமை இல்லை."*

(இ) மேலும், உச்ச நீதிமன்றம், பிரிவு 19-ஐ படித்ததில், பிரிவு 19 நிபந்தனை முன்வைப்பு தொகை தேசிய ஆணையம் மேல்முறையீட்டை ஏற்பதற்கு கட்டாயம் தேவை என்பதனை உறுதிபடுத்துகிறது. மேல்முறையீட்டாளர் இந்த முன்வைப்பு தொகையினை செலுத்தாவிடில் தேசிய ஆணையம் மேல்முறையீட்டினை ஏற்காது. மாநில ஆணையத்தின் ஆணைப்படி 50 விழுக்காடு முன்வைப்பு தொகையோ அல்லது ரூ.35,000/-மோ செலுத்தினால்தான் தேசிய ஆணையம் அதை எடுத்துக்கொள்ள முடியும். இந்த நிபந்தனை முன்வைப்புதொகை தேவையற்ற மேல்முறையீட்டினை தவிர்க்க உருவாக்கப்பட்டதாகும். மேலும், மேல்முறையீட்டை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது மற்றும் தடையாணை அளிப்பது ஆகியவை மாறுபட்ட செயலாகும். மேல்முறையீட்டின் தகுதிக்கும் முன்வைப்புத் தொகைக்கும் எந்த தொடர்பும் இல்லை. வழக்கின் தகுதி மற்றும் தடையாணை கோருபவருக்கு அது அளிக்கப்படவில்லை என்றால் ஏற்படக் கூடிய இழப்பு ஆகியவற்றைப் பொறுத்து தடையாணை விதிக்கப்படும்.

(ஈ) மேற்கண்ட காரணங்களை பதிவு செய்ததில் உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையத்தின் உத்தரவில் எந்த குறுக்கீடும் செய்யமுடியாது என்று தீர்ப்பளித்தது. உண்மைகளின் அடிப்படையில் மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2014) 8 SCC 657; III (2014) CPJ 1 (SC); 2015(1) CPR 1 (SC).

***

## 18. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 21-ன் நோக்கமும், தேசிய ஆணையத்தின் அதிகார வரம்புகளும்

**1. மோம்னா கௌரி** *(எதிர்)* **மண்டல மேலாளர் மற்றும் பலர்**

**(Momna Gauri v. Regional Manager & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

மறு சீராய்வு மனு எண்:3642/2009-ல் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் 04.04.2012 அன்று அளித்த தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

மோம்னா கௌரி - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

மண்டல மேலாளர் மற்றும் பலர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8815/2013.

தீர்ப்பு தேதி : 27.09.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

உடல் ஊனமுற்றவரான மேல்முறையீட்டாளர், ரூ.1,95,000/- கடன்பெற்று, "விக்ரம் 750 டீலக்ஸ்" என்ற மூன்று சக்கர ஆட்டோவை மொரெனாவில் உள்ள நவால் ஆட்டோ விற்பனை நிலையத்தில் இருந்து (பதிலுரையாளர் எண்.3) வாங்கினார். தன் வாழ்வாதாரத்திற்காக அவர் அந்த வாகனத்தை ஓட்டினார். மேற்படி வாகனத்தை விற்பனையாளரான, மூன்றாவது பதிலுரையாளர் சர்வீஸ் செய்யும்போது வாகனத்தினுடைய சேசிஸில் பிளவு இருந்ததை புகார்தாரர் கண்டறிந்தார். அதனைத்தொடர்ந்து இவர் வாகனத்தை மாற்றி தரும்படி கோரியதில், மூன்றாவது பதிலுரையாளர் விரிசல்களை பழுதுபார்த்து வாகனத்தை மேல்முறையீட்டாளருக்கு திருப்பிக் கொடுத்தார். சில காலம் சென்றபிறகு சேசிஸ் மீண்டும் உடைந்தது. ஆனால் விற்பனைதாரர் பழுதுபார்த்தோ அல்லது வாகனத்தை புதியதாக மாற்றியோ தரவில்லை. புகார்தாரர் அனுப்பிய சட்டரீதியான நோட்டீசுக்கும் எவ்வித பதிலும் இல்லை. ஆகவே அவர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், பிரிவு 12-ன்கீழ் மாவட்ட மன்றத்தில் புகார் செய்தார். இருதரப்பினரது வாதங்களையும் கேட்டறிந்த மாவட்ட மன்றம் உற்பத்தியில் குறைபாடு இருப்பதாக முடிவு செய்தது. அதிக சுமை ஏற்றப்பட்டதால்தான் சேசிஸ் உடைந்தது என்ற எதிர்மனுதாரரின் வாதம் நிராகரிக்கப்பட்டது. மாவட்ட மன்றம், பழைய வாகனத்திற்கு பதிலாக,

புதிய வாகனத்தை அளிக்குமாறு பதிலுரையாளர்களுக்கு ஆணையிட்டது. பதிலுரையாளர்கள், மாநில ஆணையத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பதிலுரையாளர்கள், தேசிய ஆணையத்தில் மேல்முறையீடு செய்தனர். *Maruti Udyog Limited v. Susheel Kumar Gabgotra* என்ற வழக்கை மேற்கோள்காட்டி மாவட்ட மன்றத்தின் உத்தரவில் சில மாற்றங்களை ஏற்படுத்தி தேசிய ஆணையம் ஆணையிட்டது. மனுதாரர் சேசிஸை மாற்றி புத்தம் புதிய சேசிஸை தரவும் அதற்கு தேவையான புதிய உத்தரவாதத்தை வழங்கவும் ஆணையிட்டது. மேலும் வாகனம் சாலையில் பயன்படுத்த எவ்வித குறையும் இல்லாமல் இருக்கவேண்டுமென்றும் அதற்கான எந்தத்தொகையையும் வசூலிக்கக்கூடாது என்றும் வழக்கின் செலவுகளுக்காக ரூ.10,000/- வழங்கவேண்டும் என்றும் பதிலுரையாளர்களுக்கு (அந்த வழக்கின் மனுதாரர்கள்) ஆணையிட்டது. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், நடப்பு மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (f), (g), 12, 21 மற்றும் 23.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Maruti Udyog Limited v. Susheel Kumar Gabgotra,*
   II (2006) CPJ 3 (SC). (Referred) [Para 7]
2. *Rubi (Chandra) Dutta v. United India Insurance Co. Ltd.,*
   IV (2011) SLT 303=II (2011) CPJ 19 (SC). (Relied) [Para 8]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) *Rubi (Chandra) Dutta v. United India Insurance Co. Ltd.* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஆணை, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986, பிரிவு 21-ன்கீழ் தேசிய ஆணையத்தின் வரம்புகளை விளக்குவதாய் உள்ளது என உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. மேல்முறையீட்டுக்கு உள்ளாகும் ஆணை, அதிகார வரம்பை மீறியதாகவோ அல்லது முறைகேடு உள்ளதாகவோ இருந்தாலன்றி மீள்திருத்த மனுக்களை ஏற்க தேசிய ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை என்பதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. நடப்பு வழக்கில், மாவட்ட ஆணையத்தின் அதிகார வரம்பில் எவ்வித பிழையும் தேசிய ஆணையம் காணவில்லை. நெறிபிறழ்வுக்கும் எவ்வித சந்தர்ப்பமும் இல்லை. மேலும் உற்பத்தியில் குறைபாடு (manufacturing defect) இருந்ததாக மாவட்ட மன்றம் எடுத்த முடிவில் தேசிய ஆணையம் எவ்வித குறையும் காணவில்லை. எனவே மாவட்ட மன்றத்தின் ஆணையில் தேசிய ஆணையம் தலையிட்டது பிரிவு 21-ன்கீழ் அதிகார வரம்பை மீறிய செயல் என உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஆ)முடிவாக, மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேசிய ஆணையத்தின் உத்தரவு தள்ளிவைக்கப்பட்டு, மாவட்ட மன்றமும் மாநில ஆணையமும் வழங்கிய உத்தரவு மீண்டும் செயல்படுத்தப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

I (2017) CPJ 11 (SC).

***

## 19. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்-பிரிவு 27A-ன் நோக்கம்

**1. சிசிலி கல்லாரக்கல்** *(எதிர்)* **வாகன தொழிற்சாலை**

**(Cicily Kallarackal v. Vehicle Factory)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

W.A.No.2518/2007 மற்றும் R.P.No.380/2009 ஆகியவற்றில் எர்ணாகுளத்தில் உள்ள கேரள உயர் நீதிமன்றம் 16.09.2008 மற்றும் 17.12.2009 ஆகிய தேதிகளில் அளித்த தீர்ப்புகள் மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

சிசிலி கல்லாரக்கல் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

வாகன தொழிற்சாலை – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிறப்பு விடுப்பு மனுக்கள் (சி) எண்கள்:24228-29/2012 (CCs Nos.12891-92/2012).

தீர்ப்பு தேதி : 06.08.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன்கீழ், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிராக ரிட் மனுவை அனுமதிக்கும் அதிகாரம், கேரள உயர் நீதிமன்றத்திற்கு இல்லை என்றும், ஆணையம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில்தான் வழக்காட முடியும் என்பதுதான் இந்த வழக்கில் எழுப்பப்பட்ட பிரச்சனையாகும். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தேசிய ஆணையத்தின் உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை அனுமதிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இல்லையென்றாலும் நடப்பு மேல்முறையீட்டு மனுக்கள், உயர் நீதிமன்றம் 16.09.2008 அன்று பிறப்பித்த உத்தரவிற்கு 1314 நாட்கள் கழித்து மிகவும் காலதாமதமாகவும் 17.12.2009 தேதியிட்ட உத்தரவிற்கு 851 நாட்கள் கழித்து காலதாமதமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவை தள்ளுபடி செய்யப்படவேண்டியவை என்று கருதியது. மேல்முறையீட்டு மனுக்கள் அவ்வாறே தள்ளுபடி செய்யப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 27-A(1)(c) மற்றும் 27-A(3); வரையறைகள் சட்டம், 1963, பிரிவு 5.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Anshul Aggarwal v. Noida,* (2011) 14 SCC 578.
2. *Cicily Kallarackal v. Vehicle Factory,* Review Petition No.380 of 2009, order dated 17.12.2009 (Ker). (Reversed)
3. *Vehicle Factory v. National Consumer Disputes Redressal Commission,* W.A.No.2518 of 2007, decided on 16.09.2008 (Ker). (Reversed)
4. *Mohd. Swalleh v. Addl. District Judge, Meerut,* (1998) 1 SCC 40.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) *Mohd. Swalleh v. Addl. District Judge, Meerut* என்ற வழக்கில் இதே மாதிரியான ஒரு பிரச்சனை எழுந்தது என்றும் மாவட்ட நீதிபதியின் ஆணைக்கு எதிராக மேல்முறையீட்டுக்கு வழிவகை இல்லையென்றாலும், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டை, அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 226–ன்கீழ் அனுமதித்தது என்றும் வாதம் செய்யப்பட்டது. அவ்வழக்கில், மாவட்ட நீதிபதியின் உத்தரவு சட்டத்திற்கு புறம்பானதும், ஒழுங்கில்லாததுமாக இருந்ததால் அந்த உத்தரவு ஒத்திவைக்கப்பட்டு நியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும் வாதம் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம், அதிகாரவரம்பு இல்லாத நபரோ அல்லது நீதிமன்றமோ ஒரு உத்தரவை வழங்கினால் அதை எப்பொழுதும் ஒத்திவைக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்று கருத்து தெரிவித்தது.

(ஆ) இருப்பினும், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986–ன்கீழ், தேசிய ஆணையத்தின் உத்தரவிற்கு எதிரான சட்டப்படியான மேல்முறையீடு, உச்ச நீதிமன்றத்தில்தான் செய்யமுடியும் என்பதால், அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 226–ன்கீழ், உயர் நீதிமன்றம் ரிட் மனுக்களை அனுமதித்திருக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்தது. நாடாளுமன்றம், ஒரு வழக்கில், சட்டபடியான மேல்முறையீட்டை, உச்ச நீதிமன்றத்தில் செய்ய வழிவகை செய்துள்ளபோது மற்ற நீதிமன்றங்கள், அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 226–ஐ காரணம்காட்டி அதை அனுமதிப்பது சட்ட வழிமுறையில் குறுக்கிடுவதாகும் என்றும் கருத்து தெரிவித்தது. நடப்பு வழக்கில் உயர் நீதிமன்றம் தனது அதிகார வரம்பை பயன்படுத்துவதில் தவறு இழைத்துள்ளது என்று உச்ச நீதிமன்றம் பதிவு செய்தது.

(இ) மேலும், இந்த வழக்கில், உயர் நீதிமன்றத்தின் 16.09.2008 தேதியிட்ட ஆணைக்கு எதிராக 1314 நாட்களும், 17.12.2009 தேதியிட்ட ஆணைக்கு எதிராக 851 நாட்களும் அபரிமிதமான, விளக்கப்படாத காலதாமதம் இருந்தது என்று உச்ச நீதிமன்றம் பதிவு செய்தது. குறிப்பிட்ட காலவரையறைக்குள் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்யாததற்கான காரணம், மேல்முறையீட்டாளர் உடல்நலம் குன்றியிருந்ததாகவும், *சிறது காலம்* மருத்துவமனையில் இருந்ததும்தான் என்று கூறப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளர் நேரடியாக ஆஜராகவேண்டிய அவசியம் இல்லாதபோது, மேற்கூறிய காரணம் ஏற்கத்தக்கதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. *Anshul Aggarwal v. Noida* என்ற வழக்கில் அளித்த தீர்ப்பை நினைவுகூர்ந்த உச்ச நீதிமன்றம், காலதாமதத்திற்கான மனுக்களை அனுமதிக்கும்போது சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள காலநிலையை கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. நடப்பு வழக்கில், காலதாமதத்தை விடுவித்து மனுவை ஏற்பதற்கான காரணம் ஏதும் இல்லை என்று நீதிமன்றம் கருதியதால், காலதாமதத்தை கருத்தில் கொண்டு மேல்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2012) 8 SCC 524; IV (2012) CPJ 1 (SC).

***

## 20. அனுமதியில்லாத கட்டிடங்கள்

### 1. தீபக் குமார் முகர்ஜி *(எதிர்)* கொல்கத்தா மாநகராட்சி மற்றும் பலர்

**(Dipak Kumar Mukherjee v. Kolkata Municipal Corporation & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

FMA எண்.2320/2011 கொல்கத்தா உயர் நீதிமன்றம் (இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு) 02.05.2011 அன்று அளித்த தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

தீபக் குமார் முகர்ஜி – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கொல்கத்தா மாநகராட்சி மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7536/2012.

தீர்ப்பு தேதி : 08.10.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

கொல்கத்தாவின் கோபால் டாக்டர் தெருவிலுள்ள எண்:8/1F என்ற இலக்கு உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக, 7–வது பதிலுரையாளரின் தனி உரிமையாளரும் அனுமதிக்கப்பட்ட முகவருமான முகமது ஷாஹித் என்ற நபர், 8–வது பதிலுரையாளருடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார். 7–வது பதிலுரையாளர் அளித்த கட்டிட வரைபடத்தின்படி இரண்டு அடுக்குகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு 11.04.1990 அன்று மாநகராட்சி அனுமதி அளித்தது. கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு 5 ஆண்டுகால அவகாசமும் அளிக்கப்பட்டது. 2009–ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மாநகராட்சி அலுவலர்கள் மனையை பார்வையிட்ட போது, அனுமதிக்கு மாறாக 8–வது பதிலுரையாளர் மூன்றாவது மாடியிலும், வலுப்படுத்தப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் கட்டிடம் எழுப்பி உள்ளதையும் அங்கு செல்வதற்கு படிக்கட்டுகள் கட்டி உள்ளதையும் பார்த்தனர். வேலையை ‘உடனடியாக நிறுத்த’ மாநகராட்சி உத்தரவு அளித்தபோதிலும், 7–வது பதிலுரையாளர் மேலும் ஒரு தளத்தை எழுப்பினார். அவரது எதிர்மறை செயலால் அதிர்ச்சி அடைந்த மாநகராட்சி அனுமதியற்ற கட்டிட பகுதியை இடித்துத்தள்ள முடிவெடுத்து, மொத்தம் கட்டப்பட்ட 1500 சதுரடியில் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட சுமார் 600 சதுரடியை 04.02.2010 அன்று இடித்துத்தள்ளியது. இதற்கிடையே அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்குமாறு மாநகராட்சிக்கு உத்தரவிட வேண்டுமென்று உயர் நீதிமன்றத்தில், மேல்முறையீட்டாளர், ரிட் மனு எண்.23741/2009 தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த ஒரு நபர் அமர்வு,

மேல்முறையீட்டாளரது ஆட்சேபனையை பரிசீலிக்குமாறும் இருதரப்பினரையும் விசாரித்து தக்க முடிவெடுக்குமாறும் ஆணை பிறப்பித்தார். மேல்முறையீட்டாளர் புதியதாக ரிட் மனு எண்:13815/ 2010 தாக்கல் செய்து அனுமதியற்ற கட்டிடத்தை இடித்துத்தள்ளுமாறும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது என்பதற்கான சான்றிதழை அளிக்கக்கூடாது என்றும் மாநகராட்சிக்கு ஆணையிடுமாறும் வலியுறுத்தினார். இந்த மனுவை விசாரித்த தனிநபர் அமர்வு 8 வாரங்களுக்குள் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்குமாறு நிர்வாகத்திற்கு ஆணையிட்டார். உடனடியாக முகமது ஷாஹித் 1980 ஆம் ஆண்டு சட்டம், பிரிவு 400(1)-ன்கீழ் அனுமதியின்றி கட்டப்பட்ட பகுதியை அனுமதித்து உத்தரவு வழங்குமாறு மனு தாக்கல் செய்தார். தனிநபர் அமர்வின் தீர்ப்பை எதிர்த்து, 7-வது பதிலுரையாளர் மேல்முறையீடும் தாக்கல் செய்தார். அவரது பிரமாணப்பத்திரத்தில் கொல்கத்தா மாநகராட்சி கட்டிட விதிகள், 1990, விதி 25-ன்படி மனை மற்றும் கட்டிடப்பரப்பு விகிதாசாரத்திற்கு மேலாக கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்க மாநகராட்சிக்கு அதிகாரம் உள்ளது என்று வாதிட்டார். அனுமதி அளிக்கப்படாத பகுதிகளை வாங்கியிருந்த இரு நபர்கள் 7-வது பதிலுரையாளர் அளித்த மேல்முறையீட்டில் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள். 01.03.2011 மற்றும் 15.03.2011 ஆகிய தேதிகளில் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் அமர்வு, அனுமதி அளிக்கப்படாத பகுதிகளை வாங்கியிருந்த மற்ற நபர்களும் தங்களது கருத்துக்களை தெரிவிக்க உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 1, விதி 8-ன்கீழ் நோட்டீஸ் அனுப்ப தானாகவே முடிவெடுத்து ஆணை பிறப்பித்தது. 02.05.2011 அன்று உயர் நீதிமன்றத்தின் அமர்வு, இயற்கை நீதியின் கூறுகளை (principles of natural justice) கடைபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களுக்கு ஆணையிட்டு, 7-வது பதிலுரையாளர் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனுவை முடிவுக்கு கொண்டுவந்தது. இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், நடப்பு மேல்முறையீட்டை தாக்கல் செய்திருந்தார். மேல்முறையீடு பின்வருமாறு அனுமதிக்கப்பட்டது: (i) மாநகராட்சி அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தை ஒருமாத காலத்திற்குள் இடித்துத்தள்ள வேண்டும் (ii) 7-வது பதிலுரையாளர், அடுக்குமாடி வீடுகளை வாங்கியதால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, வீட்டிற்கான விலையை அவர்கள் செலுத்திய தேதியிலிருந்து, ஆண்டுக்கு 18 விழுக்காடு வட்டியோடு திருப்பித்தரவேண்டும்.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 136; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1)(g), (o) மற்றும் 14; சொத்து மாற்று சட்டம், 1882, பிரிவுகள் 55(1)(a) மற்றும் 55(2); கொல்கத்தா மாநகராட்சி சட்டம், 1980, பிரிவுகள் 400(1) மற்றும் 401-A; கொல்கத்தா மாநகராட்சி கட்டிட விதிகள், 1990, விதி 25(2).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Priyanka Estates International (P) Ltd. v. State of Assam,* (2010) 2 SCC 27 : (2010) 1 SCC (Civ) 283.

2. *Dipak Kumar Mukherjee v. Kolkata Municipal Corporation,* W.P. No.13815 of 2010, order dated 28.07.2010 (Cal).
3. *Shanti Sports Club v. Union of India,* (2009) 15 SCC 705 : (2009) 5 SCC (Civ) 707.
4. *Friends Colony Development Committee v. State of Orissa,* (2004) 8 SCC 733.
5. *M.I. Builders (P) Ltd. v. Radhey Shyam Sahu,* (1999) 6 SCC 464.
6. *Manju Bhatia v. NDMC,* (1997) 6 SCC 370.
7. *Pleasant Stay Hotel v. Palani Hills Conservation Council,* (1995) 6 SCC 127.
8. *G.N. Khajuria v. DDA,* (1995) 5 SCC 762.
9. *Virender Gaur v. State of Haryana,* (1995) 2 SCC 577.
10. *Cantonment Board, Jabalpur v. S.N. Awasthi,* (1995) Supp (4) SCC 595.
11. *Pratibha Coop. Housing Society Ltd. v. State of Maharashtra,* (1991) 3 SCC 341.
12. *K. Ramadas Shenoy v. Town Municipal Council, Udipi,* (1974) 2 SCC 506.
13. *Purusottam Lalji v. Ratan Lal Agarwalla,* AIR 1972 Cal 459.

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) சட்டத்திற்கு முரணாக அனுமதியின்றி கட்டப்படுகின்ற கட்டிடங்களும், அமைப்புகளும் நகராட்சி விதிமுறைகளையும் சம்பந்தப்பட்ட பகுதியின் திட்டமிட்ட முன்னேற்றத்தையும் மீறுவது மட்டுமின்றி மற்ற நபர்களுடைய அடிப்படை உரிமைகளையும், அரசியலமைப்பு சட்டப்படியான உரிமைகளையும் பாதிப்பதாகவும் உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. சட்டத்திற்கு முரணாகவும், அனுமதியின்றியும் கட்டிடங்கள் கட்டுபவர்களுக்கு பெருந்திட்டம், மேம்பாட்டுத்திட்டம், பகுதி மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை தயாரித்து செயல்படுத்த வேண்டியவர்களே ஆதரவாக இருப்பதைக் காணும்போது பாமர மனிதர்கள் ஏமாற்றப்பட்டதாகவே கருதுகிறார்கள் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. முறையற்ற கட்டிடங்களை இடித்துத் தள்ளுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தவறும்போது, திட்டங்களை செயல்படுத்துவதில் ஏழை, எளியவர்களிடம் கண்டிப்பாகவும், வசதி படைத்தவர்கள் மற்றும் பொறுப்பில் உள்ளவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்கள்

ஆகியவர்களிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடும் அரசு நிர்வாகம் செயல்படுகிறது என்று பொதுவாக நிலவும் கருத்து வலுப்படுகிறது என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. ஆகவே சட்டத்தை துச்சமாக மதித்து, சட்டத்திற்கு புறம்பாகவும், அனுமதியின்றியும் கட்டிடங்களை கட்டுபவர்கள்மீது எவ்வித தாட்சண்யமும் நீதிமன்றங்கள் காட்டக்கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.

(ஆ)மேலும், மாநகர வளர்ச்சி திட்டம் மற்றும் பிராந்திய வளர்ச்சி திட்டம் ஆகியவற்றை தயாரிக்கும்போது, திட்ட வல்லுநர்கள் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சிகளை கருத்தில்கொண்டு, குடிநீர் வசதி, சாக்கடை வசதி, கழிவுநீர் அகற்றுதல் வசதி மற்றும் மின்சார வினியோகம் ஆகியவற்றை செய்து கொடுப்பதற்கான அனைத்து வழிவகைகளையும் செய்யவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள் திட்டமிட்ட வளர்ச்சி என்ற கோட்பாட்டை அழிப்பதாக மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள் செய்து கொடுக்கின்ற வசதிகளுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்துவதாகவும் உள்ளன என்றும் கருத்து தெரிவித்தது. சில நேரங்களில் அம்மாதிரி கட்டிடங்கள் பொதுமக்களுக்கு இடையூறாகவும், வாகன நெரிசலை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. ஆகவே அம்மாதிரி கட்டிடங்களை இடிப்பதோடு மட்டுமல்லாமல் அக்கட்டிடங்களை கட்டுபவர்கள் மீது தக்க அபராதமும் விதிக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(இ) கட்டிடம், திட்ட அனுமதிக்கு முரணாக கட்டப்பட்டது என்பதை 7-வது பதிலுரையாளர் மறுக்கவில்லை. மாநகராட்சி மேயரும் மன்ற கூட்டத்தில், கட்டிடத்தை இடிக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார். இந்நிலையில், உயர் நீதிமன்றத்தின் அமர்வு, 7-வது பதிலுரையாளரை விசாரித்தபின்பு தக்க ஆணை பிறப்பிக்குமாறு மாநகராட்சிக்கு அளித்த உத்தரவு ஏற்கத்தக்கதல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் சம்பந்தப்பட்ட கட்டிடம், அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு முரணாக கட்டபட்டதாலும் மாநகராட்சி ஏற்கனவே நோட்டீஸ் அனுப்பியிருந்ததாலும் கட்டிடத்திற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று கோரிய மனு, கட்டிடம் கட்டப்பட்டபின் கொடுக்கப்பட்டதாலும், 7-வது பதிலுரையாளர் விதி 25-ன்கீழ் அனுமதி அளிக்கவேண்டும் என்று கோரமுடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

(ஈ) அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தில் வீடுகளை வாங்கியவர்கள், கட்டிடம் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது என்று நம்பி வாங்கியதால் அவர்களை 7-வது பதிலுரையாளர் ஏமாற்றியிருக்கிறார் என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது. ஆகவே அவர்களுக்கு 7-வது பதிலுரையாளர் இழப்பீடு தரவேண்டும் என்றும் அவர்களிடமிருந்து பணத்தை வாங்கிய தேதியிலிருந்து ஆண்டுக்கு 18 விழுக்காடு என்ற வட்டியோடு அதை அவர்களுக்கு திருப்பித்தரவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

(உ) தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தப்பின்பு மாநகராட்சி, அனுமதி இல்லாத கட்டிடத்தை இடிக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு முற்றிலும் முரணாகவும், 'கட்டிடவேலையை நிறுத்தவும்' என்று நோட்டீஸ் கொடுத்தபிறகும் அனுமதியில்லாமல் கட்டிடத்தை தொடர்ந்து கட்டியதற்காவும், 7-வது பதிலுரையாளர் ரூ.25 இலட்சம் அபராதம் கட்டவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. மேற்படி தொகையை கொல்கத்தா மாநில சட்டசேவை குழுமத்திடம் செலுத்தவேண்டும் என்றும் சட்டசேவையை நாடுகின்ற நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் அதை பயன்படுத்தவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 5 SCC 336.

***

## 2. ஈஷா ஏக்தா அடுக்குமாடிகள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மற்றும் பலர் *(எதிர்)* மும்பை மாநகராட்சி மற்றும் பலர்

**(Esha Ekta Apartments Cooperative Housing Society Ltd. & Ors. v. Municipal Corporation of Mumbai & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

பாம்பே உயர் நீதிமன்றம் ஆணை எண்:1124/2010–மீதான மேல்முறையீட்டில் 24.08.2011–அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை (சிறப்பு விடுப்பு மனு (சி) எண்:33471/2011–லிருந்து எழுப்பப்பட்டது).

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

ஈஷா ஏக்தா அடுக்குமாடிகள்
கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மற்றும் பலர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

மும்பை மாநகராட்சி மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்கள்:7934/2012 உடன் எண்கள்:7935, 7936, 7937 மற்றும் 7938/2012 மற்றும் இதனுடன் மாறுதல் செய்யப்பட்ட வழக்கு (சி) எண்:55/2012.

தீர்ப்பு தேதி : 27.02.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

சம்பந்தப்பட்ட நிலத்தின் குத்தகைதாரரான திருவாளர்கள் ப்யூர் டிரிங்ஸ் (M/s. Pure Drinks) தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மூன்றில் ஒரு பங்கை குடியிருப்பு பகுதியாக மாற்றியமைக்க மாநில அரசின் அனுமதியை பெற்றிருந்தார். அந்த அனுமதி மஹாராஷ்ட்ரா முன்னேற்ற கட்டுப்பாட்டு விதிகள், 1967 மற்றும் சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நிலமாற்றம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும். குத்தகைதாரர், கட்டிடங்கள் கட்ட முன்வந்த நபர்களிடம் (developers) ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தார். சம்பந்தப்பட்ட இடத்தில் ஐந்து மாடிகள் கொண்ட ஆறு குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டிருந்தது. மாற்றியமைக்கப்பட்ட வரைபடங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் கூடுதலாக தளங்கள் கொண்ட தனி கட்டிடங்கள் கட்டவேண்டும் என்ற கோரிக்கை 06.09.1984 அன்று நிராகரிக்கப்பட்டது. அனுமதி மறுக்கப்பட்ட பின்னரும் ‘வேலையை நிறுத்தவேண்டும்’ என்ற நோட்டீஸ் பெறப்பட்டபின்னரும் கட்டிடக்காரர்கள் தொடர்ந்து கட்டிடத்தை கட்டிவந்தனர். பதிலுரையாளரான மாநகராட்சி, 2005 நவம்பர்/டிசம்பர் மாதங்களில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டிடங்களை இடிப்பதற்கு மூன்று நோட்டீஸ்களை அளித்தது. கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் அளித்த பதில்களை மாநகராட்சி நிராகரித்தது. வழக்கில் எழுப்பப்பட்ட பிரச்சனை என்னவென்றால் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்துவதற்கு மாநகராட்சி அனுமதி மறுத்தது சட்டப்படி செல்லுபடியாகுமா என்பதாகும். கூட்டுறவு சங்கங்களும் வீடுகளை வாங்கியவர்களும் நடந்த தவறுக்கு தாங்கள் பொறுப்பல்ல என்றும் சட்டத்திற்கு முரணாக கட்டிடங்களை கட்டிய நபர்கள் மற்றும் குத்தகைதாரர் ஆகியோரை தண்டிக்கவேண்டும் என்றும் கட்டிடங்களை முறைப்படுத்தி தரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர். கட்டிடங்கள் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டது என்பது தங்களுக்கு தெரியாது என்றும் அவர்கள் வாதிட்டனர். பம்பாய் பெருநகர முன்னேற்ற கட்டுபாட்டு விதிமுறைகள், 1991, உட்பிரிவு 35(2)(c)-படி தக்க கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு கூடுதலாக Floor Space Index (FSI) அனுமதிக்கவேண்டும் என்றும் வேண்டினர். கட்டிடத்தைக் கட்டியவர்கள் தங்களுடைய வாதுரையில் வீடுகளை வாங்கியவர்களது வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திருத்தியமைக்கப்பட்ட திட்ட வரைபடங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதும் வேலையை நிறுத்தக்கோரி நோட்டீஸ் வந்தபின்பும் கட்டிடப்பணி நடந்த விபரம் அவர்களுக்குத் தெரியும் என்றும் அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்திலிருந்து இது தெரியவரும் என்றும் வாதிட்டனர். மஹாராஷ்ட்ரா முன்னேற்ற கட்டுப்பாட்டு விதிகள், 1967-படி கூடுதல் தளங்களை முறைப்படுத்த வழிவகை இல்லை என்று மாநில அதிகாரிகள் தெரிவித்தனர். பம்பாய் பெருநகர முன்னேற்ற கட்டுபாட்டு விதிமுறைகள், 1991, உட்பிரிவு 35(2)(c)-படியும் இதை முறைப்படுத்த முடியாது; ஏனெனில் சம்பந்தப்பட்ட மனை CRZ பகுதியில் இருக்கிறது என்றும் மேலே கூறிய விதிமுறைகள், திருத்தியமைக்கப்பட்ட வரைபடங்கள் நிராகரிக்கப்பட்டதற்கு வெகுநாட்களுக்குப் பிறகே அமலுக்கு வந்தன என்றும்

அவர்கள் தெரிவித்தனர். 19.02.1991 அன்று நடைமுறையில் இருந்த முன்னேற்ற கட்டுப்பாட்டு விதிகள் மட்டுமே CRZ பகுதியில் அமைந்துள்ள இடங்களுக்குப் பொருந்தும் என்றும் அவர்கள் கூறினர். உச்ச நீதிமன்றம் குடியிருப்பு மனைகள் வாங்கிய நபர்கள் மற்றும் வீட்டுவசதி சங்கங்கள் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனுக்களையும், மாறுதல் மனுவையும் தள்ளுபடி செய்தது. சட்டத்திற்கு முரணாக கட்டப்பட்ட கட்டிடங்களை இடிக்குமாறும் ஆணையிட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 21; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் பிரிவுகள் 2(1) (g), (o) மற்றும் 14; சொத்து மாற்று சட்டம், 1882, பிரிவுகள் 55(1)(a) மற்றும் 55(2); பாம்பே மாநகராட்சி சட்டம், 1888, பிரிவுகள் 351 மற்றும் 354-A; மஹாராஷ்ட்ரா மண்டல மற்றும் நகர திட்டமிடல் சட்டம், 1966, பிரிவுகள் 44-47 மற்றும் 52-56; பம்பாய் பெருநகர முன்னேற்ற கட்டுபாட்டு விதிமுறைகள், 1991, உட்பிரிவு 35(2)(c); மஹாராஷ்ட்ரா முன்னேற்ற கட்டுப்பாட்டு விதிகள், 1967, விதிகள் 9 மற்றும் 10(2); மஹாராஷ்ட்ரா அடுக்குமாடி உரிமையாளர்கள் (கட்டுமான பணி, விற்பனை, பராமரிப்பு மற்றும் மாறுதல் தொடர்பான கட்டுப்பாடுகள்) விதிகள், 1964, விதிகள் 3 மற்றும் 5 மற்றும் படிவம் V.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Esha Ekta Apartments Coop. Housing Society Ltd. v. Municipal Corpn. of Mumbai,* (2013) 5 SCC 395. [Para 30]
2. *Dipak Kumar Mukherjee v. Kolkata Municipal Corporation,* (2013) 5 SCC 336. [Para 6]
3. *Esha Ekta Apartments Coop. Housing Society Ltd. v. Municipal Corpn. of Mumbai,* (2012) 4 SCC 689 : (2012) 2 SCC (Civ) 669. [Para 29]
4. *Esha Ekta Apartments Coop. Housing Society Ltd. v. Municipal Corpn. of Mumbai,* Appeal from Order No.1124 of 2010, decided on 24.08.2011 (Bom). [Para 28]
5. *Priyanka Estates International (P) Ltd. v. State of Assam,* (2010) 2 SCC 27 : (2010) 1 SCC (Civ) 283. [Para 5]
6. *Shanti Sports Club v. Union of India,* (2009) 15 SCC 705 : (2009) 5 SCC (Civ) 707. [Para 4]
7. *Suresh Estates (P) Ltd. v. Municipal Corpn. of Greater Mumbai,* (2007) 14 SCC 439. [Para 37&42]
8. *Jayantilal Investments v. Madhuvihar Coop. Housing Society,* (2007) 9 SCC 220. [Para 54]

9. *Suresh Estate (P) Ltd. v. Municipal Corpn. of Greater Mumbai,* WP(OS) No.1627 of 2007, decided on 13.08.2007. [Para 42]

10. *Royal Paradise Hotel (P) Ltd. v. State of Haryana,* (2006) 7 SCC 597. [Para 3&56]

11. *Orchid Coop. Housing Society v. Municipal Corpn. of Greater Mumbai,* WP(OS) No.1808 of 2000. [Para 25]

12. *Friends Colony Development Committee v. State of Orissa,* (2004) 8 SCC 733. [Para 2]

13. *Mid-Town Apartment Coop. Housing Society v. Municipal Corpn. of Greater Mumbai,* WP(OS) No.1141 of 1999, Order dated 12.07.1999 (Bom). [Para 22]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடத்திற்கு முரணாக கட்டப்பட்ட தளங்களை முறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்ததன் மூலம் நகரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படுத்தவேண்டும் என்பதில் தங்களுக்கு உள்ள உறுதியை அதிகாரிகள் எடுத்துக்காட்டியுள்ளார்கள் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஆ)வீடுகளை வாங்கியவர்களோடு கட்டிடம் கட்டியவர்கள் ஏற்படுத்திக்கொண்ட சில ஒப்பந்தகளைப் பார்க்கும் போது கட்டிட வடிவமைப்பாளர் அளித்த திருத்திய வரைபடங்களுக்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்வரை திட்ட அலுவலர்கள் அனுமதி அளிக்கவில்லை என்பதை அடுக்குமாடி குடியிப்பை வாங்கியவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதை நீதிமன்றம் குறித்துக்கொண்டது. வீட்டுவசதி சங்க உறுப்பினர்கள், கட்டிடங்களை கட்டியவர்கள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டிருக்கிறார்கள் என்று தெரியாமல் தாங்கள் அடுக்குமாடி குடியிருப்பகளை வாங்கியதாக கூறிய வாதத்தை விசாரணை நீதிமன்றம் நிராகரித்திருந்தது என்பதையும் உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது. கட்டிட வடிவமைப்பாளர், கட்டிடம் கட்டுபவர்களிடம் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடம் கட்டுவது சட்டப்படி செல்லாது என்று பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார்கள் என்பதையும் சங்கங்களின் உறுப்பினர்களும் அதை அறிந்தே இருந்தார்கள் என்பதையும் உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது.

(இ) CRZ அறிவிக்கை 02.02.1991 அன்று வெளியிடப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முன்னேற்ற கட்டுபாட்டு விதிமுறைகள் (DCR) 20.02.1991 அன்று அறிவிக்கப்பட்டன. நடப்பு வழக்கில் கூடுதல் FSI-க்கான அனுமதி கேட்கப்பட்டபோது 1967 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முன்னேற்ற கட்டுபாட்டு விதிமுறைகள் (DCR)-தான் நடைமுறையில் இருந்தன. 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விதிமுறைகள் அல்ல.

ஆகவே மாநகராட்சி 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தது சரிதான் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஈ) குத்தகைதாரர்களும், கட்டிடம் கட்டியவர்களும் செய்த முறைகேட்டிற்கு வீடுகளை வாங்கியவர்களை தண்டிக்கக்கூடாது என்ற வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள், குத்தகைதாரர் மற்றும் கட்டியவர்கள்மீது வழக்கு தொடர்ந்து இழப்பீடு கோரவேண்டுமே தவிர சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்த வேண்டும் என்று கோருவது சரியல்ல என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) மஹாராஷ்ட்ரா மண்டல மற்றும் நகர திட்டமிடல் சட்டம், 1966, பிரிவுகள் 44, 45 மற்றும் 52-56, அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடங்களையோ அல்லது அனுமதிக்கு முரணாக கட்டப்பட்ட கட்டிடங்களையோ முறைப்படுத்த வேண்டும் என்று கூறவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஊ) கட்டிடங்களை முறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மனுவை அனுமதிக்க 04.02.2011 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை காரணம் காட்டமுடியாது என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது. அந்த சுற்றறிக்கை அனுமதி அளிக்கப்படாத பணிகள்/அமைப்புகள் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கான வழிமுறையை தெரிவிக்கிறது. மனுதாரர், கட்டிடத்தை முறைப்படுத்த வேண்டுகின்ற கோரிக்கையை எப்படி பரிசீலிக்க வேண்டும் என்று அந்த சுற்றறிக்கை தெரிவிக்கவில்லை. மஹாராஷ்ட்ரா மண்டல மற்றும் நகர திட்டமிடல் சட்டம், 1966, பிரிவு 47–ன்கீழ் அளிக்கப்பட்ட மேல்முறையீடு நிராகரிக்கப்பட்ட பின்னரும் திட்ட அதிகாரிகள் சட்டவிரோதமான கட்டிடங்களை முறைப்படுத்தலாம் என்றும் அது தெரிவிக்கவில்லை. ஆகவே 04.02.2011 தேதியிட்ட சுற்றறிக்கையில் உள்ள வழிமுறை இந்த வழக்கில் அடுக்குமாடி குடியிருப்புகள் வாங்கிய நபர்களுக்கு பொருந்தாது என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது.

(எ) கட்டிடம் கட்டுபவர்கள்/ஆதரவு அளிப்பவர்கள்தான் முறைகேடாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு பொறுப்பாவர் என்பது மஹாராஷ்ட்ரா அடுக்குமாடி உரிமையாளர்கள் (குட்டுமான பணி, விற்பனை, பராமரிப்பு மற்றும் மாறுதல் தொடர்பான கட்டுப்பாடுகள்) சட்டம், 1963–ல் உள்ள ஷரத்துகளில் இருந்து தெளிவாகிறது. ஆனால் அது வீட்டுவசதி சங்கங்களுக்கோ அவற்றின் உறுப்பினர்களுக்கோ உதவி புரிவதாக இல்லை. ஏனெனில், கட்டிடம் கட்டுபவர்கள்/ஆதரவு அளிப்பவர்கள் முறைகேடாக கட்டும் கட்டிடங்களை முறைபடுத்துவதற்கோ அல்லது அவர்களது செயல்களை மன்னிப்பதற்கோ சட்டத்தில் எந்த வழியும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஏ) மேலும், 1963 ஆம் ஆண்டு சட்டத்தின்படி கட்டிடத்திற்கு ஆதரவு அளிப்பவர்/ மேம்படுத்துபவர் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் அனுமதியைப் பெறவேண்டும்; அதை குடியிருப்பு வீடுகள் வாங்குபவர்களுக்கு தெரிவிக்கவேண்டும். அம்மாதிரி செய்யவில்லை என்றால் அவர்கள் மீது அபராதம் விதிக்க வழிவகை உண்டு. ஆனால் வீடுகளை வாங்குபவர்கள் முறைகேடாக கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்த வேண்டும் என்று உரிமை வழக்கு தொடர முடியாது.

(ஐ) அனுமதிக்கு முரணாக கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்த பதிலுரையாளர்களுக்கு ஆணையிட வேண்டும் என்ற கோரிக்கைக்கு சாதகமாக குடியிருப்பு வீடுகளை வாங்கியவர்களும், சங்கங்களும் எந்த வாதமும் வைக்கவில்லை என்று உச்ச நீதிமன்றம் கருதியது. ஆகவே மேல்முறையீடுகளையும், மாற்றப்பட்ட வழக்கையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 1888 ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 351-ன்படி மாநகராட்சி அனுப்பிய கட்டிட இடிப்பு நோட்டீசை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எந்தவித தடையும் இல்லை என்றும் மாநகராட்சி விரைவில் இது தொடர்பான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 5 SCC 357.

***

## 21. நியாயமற்ற வியாபாரம்

**1. கிரிஷ் சந்தர குப்தா** *(எதிர்)* **உத்திரபிரதேச தொழில் முன்னேற்ற கழகம் மற்றும் பலர் (Girish Chandra Gupta v. U.P. Industrial Development Corporation Ltd. & Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

20.05.2011 தேதியிட்ட இழப்பீட்டு மனு (C.A) எண்:110/1997 மற்றும் 26.04.2012 தேதியிட்ட இழப்பீட்டு மனு (C.A) எண்:126/2008 ஆகியவைகளில் போட்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Competition Appellate Tribunal) வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

கிரிஷ் சந்தர குப்தா – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

உத்திரபிரதேச தொழில் முன்னேற்ற கழகம் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

மற்றும்

ஜேம்ஸ் குட்டி P.C. மற்றும் ஒருவர் – மேல்முறையீட்டாளர்கள்

**எதிர்**

டிரெட் ஸ்டோன் லிமிடெட் மற்றும் பலர் – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8920/2012 உடன் சிவில் மேல்முறையீட்டு எண்:8921/2012.

தீர்ப்பு தேதி : 11.12.2012.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளர்கள் C.A.No.110/1997 மற்றும் C.A.No.126/2008 ஆகிய இழப்பீடு கோரும் மனுக்களை ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வர்த்தக நடைமுறைகள் சட்டம், 1969 (MRTP Act), பிரிவு 12B-யின்கீழ் ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வர்த்தக நடைமுறைகள் ஆணையம் (MRTP Commission) தாக்கல் செய்தனர். மேற்படி ஆணையம் கலைக்கப்பட்டதன் காரணமாக இரண்டு மனுக்களும் போட்டி சட்டம், 2002, பிரிவு 66(3)-ன்படி போட்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்துக்கு மாற்றப்பட்டன. MRTP Act பிரிவு 10 அல்லது பிரிவு 36B-யின்கீழ் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் என்ற குற்றச்சாட்டுக்காக பதிலுரையாளர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் மேற்படி மனுக்களை அனுமதிக்கக் கூடாது என்று இரண்டு மனுக்களிலும் பதிலுரையாளர்கள் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்தனர்.

தீர்ப்பாயம், இதே பிரச்சனை C.A.No.108/2005 என்ற எண் உள்ள வழக்கில் ஏற்கனவே 29.03.2011 அன்று வெளியிட்ட ஆணையில் முடிவு செய்யப்பட்டதால் அதன் அடிப்படையில் CAs எண்கள்:110/1997 மற்றும் 126/2008 ஆகிய இரு மனுக்களிலும் 20.05.2011 மற்றும் 26.04.2012 ஆகிய தேதிகளில் வெளியிட்ட ஆணைகள் மூலம் தள்ளுபடி செய்தது. C.A.No.108/2005-ல் தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணை உச்ச நீதிமன்றம் *Saurabh Prakash v. DLF Universal Ltd.* என்ற வழக்கில் எடுத்த முடிவின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டது. தீர்ப்பாயத்தின் ஆணைகளால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் நடப்பு மேல்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டு மனுக்கள் ஏற்கப்பட்டன.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

போட்டி சட்டம், 2002, பிரிவுகள் 66(1) மற்றும் 66(3) (ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வர்த்தக நடைமுறைகள் சட்டம், 1969, பிரிவுகள் 10, 12B மற்றும் 36B-ஐ ரத்து செய்து ஏற்படுத்தப்பட்டது).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Info Electronics System Ltd. v. Sutran Corporation,*
   C.A.No.108 of 2005 decided on 29.03.2011. (Relied) [Para 3]
2. *Saurabh Prakash v. DLF Universal Ltd.,*
   I (2007) CPJ 4 (SC)=IX (2006) SLT 254. (Relied) [Para 3]
3. *M/s. Pennwalt (I) Ltd. & Anr. v. Monopolies and Restrictive Trade Practices Commission & Ors.,*
   74 (1998) DLT 422 (DB). (Relied) [Para 4]
4. *R.C. Sood and Co. (P) Ltd. & Ors. v. Monopolies and Restrictive Trade Practices Commission & Anr,*
   62 (1996) DLT 272. (Relied) [Para 6]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) ஒரு வழக்கில் நியாயமற்ற வர்த்தக நடைமுறை அல்லது கட்டுப்படுத்துகின்ற வர்த்தக நடைமுறை கையாளப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இல்லாதபோது MRTP ஆணையம், MRTP சட்டம், பிரிவு 12B-ன்கீழ் இழப்பீட்டிற்கான மனுவை அனுமதிக்கலாமா என்பதுதான் *Saurabh Prakash* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தின்முன் எழுப்பப்பட்ட பிரச்சனையாகும். ஒரு வழக்கில் நியாயமற்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற வர்த்தக நடைமுறை கையாளப்பட்டதின் காரணமாக, இழப்போ, சேதமோ ஏற்பட்டால் மட்டுமே MRTP ஆணையம் இழப்பீடு வழங்க முடியும் என்றும் ஒப்பந்தம் மீறுதல் காரணமாக இழப்பீடு கோரினால் அதை ஆணையம் முடிவுசெய்ய அதிகாரம் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. MRTP சட்டம், பிரிவு 10 அல்லது 36B-ன்கீழ் நடவடிக்கை இல்லாத

நிலையில் MRTP சட்டம், பிரிவு 12B–ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவை அனுமதிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு உண்டா என்பதை மேற்சொன்ன வழக்கில் பரிசீலிக்கவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஆ) *M/s. Pennwalt (I) Ltd. & Anr. v. Monopolies and Restrictive Trade Practices Commission & Ors.* என்ற வழக்கில் தில்லி உயர் நீதிமன்றத்தின் பிரிவு அமர்வு மன்றம் மற்றும் *R.C. Sood and Co. (P) Ltd. & Ors. v. Monopolies and Restrictive Trade Practices Commission & Anr* என்ற வழக்கில் தில்லி உயர் நீதிமன்றத்தின் ஒரு நபர் அமர்வு ஆகியோர் MRTP சட்டம், பிரிவு 10 அல்லது 36B-ன்கீழ் நடவடிக்கை இல்லாத நிலையில், பிரிவு 12B–ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவை அனுமதிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு உண்டு என்று தீர்ப்பளித்திருப்பதை மேல்முறையீட்டாளர் சுட்டிக்காட்டினார். இதை குறித்துக்கொண்ட உச்ச நீதிமன்றம், தில்லி உயர் நீதிமன்றத்தின் பிரிவு அமர்வு மன்றம் மற்றும் ஒரு நபர் அமர்வு ஆகியோர் MRTP சட்டம், பிரிவுகள் 10, 12B மற்றும் 36B ஆகியவற்றின் கூறுகளை சரிவர விளக்கியுள்ளார்கள் என்று முடிவெடுத்தது.

(இ) ஏகபோக அல்லது கட்டுப்படுத்தும் அல்லது நியாயமற்ற வர்த்தக நடைமுறையின் காரணமாக ஒரு நிறுவனமோ அல்லது தனி நபரோ, மத்திய அரசுக்கோ, மாநில அரசுக்கோ அல்லது ஏதேனும் தனி வர்த்தகருக்கோ அல்லது ஒரு வகுப்பைச் சார்ந்த வர்த்தகர்களுக்கோ அல்லது ஒரு நுகர்வோருக்கோ இழப்போ, சேதமோ ஏற்படுத்தினால் பாதிக்கப்பட்ட அரசோ, நிறுவனமோ, வர்த்தகரோ அல்லது நுகர்வோரோ MRTP ஆணையத்திற்கு முன்பாக தமக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய ஆணையிடவேண்டும் என்று மனு செய்து கொள்ளலாம் என்பது MRTP சட்டம், பிரிவு 12B உட்பிரிவு (1)–ஐ படித்துப் பார்க்கும்போது தெளிவாக உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேலும் MRTP சட்டம், பிரிவு 12B உட்பிரிவு (1)–ன்கீழ் ஏகபோக அல்லது கட்டுப்படுத்தும் அல்லது நியாயமற்ற வர்த்தக நடைமுறை பின்பற்றப்படுகின்றது என்று குற்றம்சாட்டி தாக்கல் செய்யப்படும் மனுவின் மீது விசாரணை மேற்கொள்ள MRTP சட்டம், பிரிவு 12 உட்பிரிவு (3)–ன்கீழ் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குற்றம் செய்த நிறுவனம் மற்றும் நபரிடமிருந்து எவ்வளவு தொகையை இழப்பீடாக வசூலிக்கவேண்டும் என்ற அதிகாரமும் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் MRTP சட்டம், பிரிவு 12B உட்பிரிவு (3)–ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் பிரிவுகள் 10 மற்றும் 36B ஆகியவற்றில் இருந்து வேறுபட்டவை மற்றும் தனித்துவம் கொண்டவை என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஈ) MRTP சட்டம், பிரிவு 12B–ல் மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 10 அல்லது 36B ஆகியவை குறித்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்றும் பிரிவுகள் 10 மற்றும் 36B ஆகியவற்றின் அடிப்படையில்தான் பிரிவு 12B–ன்கீழ் இழப்பீடு வழங்கவேண்டும் என்பது

நாடாளுமன்றத்தின் எண்ணமாக இருந்திருந்தால் பிரிவு 12B-ல் அதை தெளிவுபட கூறியிருப்பார்கள் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. மேலும் MRTP சட்டம், பிரிவு 10-திலோ அல்லது பிரிவு 36B-யிலோ பிரிவு 12B குறித்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்றும் பிரிவுகள் 10, 12B மற்றும் 36B ஆகியவை ஒன்றையொன்று சார்ந்தவையாக (interdependent) இருக்கவேண்டும் என்று நாடாளுமன்றம் நினைத்திருந்தால் அதுபற்றி MRTP சட்டம், பிரிவு 10-திலோ அல்லது பிரிவு 36B-யிலோ தெளிவுபடுத்தி இருப்பார்கள் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. அம்மாதிரி விளக்கம் ஏதும் இல்லாத நிலையில் பிரிவுகள் 10 மற்றும் 36B ஆகியவற்றின் கூறுகள் பிரிவு 12B-யோடு தொடர்பு கொண்டுள்ளது என்பதை காணாமல் இருக்கமுடியாது என்று போட்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் கூறியிருப்பது முற்றிலும் தவறு என்று உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) தீர்ப்பாயத்தின் 20.05.2011 மற்றும் 26.04.2012 தேதியிட்ட ஆணைகளை உச்ச நீதிமன்றம் தள்ளிவைத்தது. இரண்டு மேல்முறையீடுகளையும் ஏற்று ஆணை பிறப்பித்தது.

**8. ஆவணச் சான்றுகள் :**

I (2013) CPJ 9 (SC).

***

**2. பன்வர் கன்வர்** *(எதிர்)* **R.K.குப்தா மற்றும் ஒருவர்**

**(Bhanwar Kanwar v. R.K. Gupta & Anr.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் அசல் மனு எண்:234/1997-ல், 29.01.2009 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

பன்வர் கன்வர் - மேல்முறையீட்டாளர்

**எதிர்**

R.K.குப்தா மற்றும் ஒருவர் - பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:8660/2009.

தீர்ப்பு தேதி : 05.04.2013.

**4. வழக்கின் சுருக்கம் :**

1989 ஆம் ஆண்டு மே மாதத்தில் பிறந்த மேல்முறையீட்டாளரின் மகனான பிரஷாந்த் என்பவர் பிறந்த ஆறாவது மாதத்திலேயே கடும் ஜுரத்தின் காரணமாக வலிப்பினால் பாதிக்கப்பட்டார். ஜெய்ப்பூர் எஸ்.எம்.எஸ். மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியை சார்ந்த நரம்பியல் நிபுணர் டாக்டர் அசோக் பனகரியா மற்றும் டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS) ஆகியோர் அவருக்கு சிகிச்சை அளித்தனர். 08.08.1993 அன்று மேல்முறையீட்டாளர் பத்திரிக்கை ஒன்றில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தார். ஆயுர்வேத மருந்துகள் மூலம் வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதாகவும் அது 100 விழுக்காடு வெற்றியை தருவதாகவும் முதலாவது பதிலுரையாளர் விளம்பரம் கொடுத்திருந்தார். ரிஷிகேஷில் முதலாவது பதிலுரையாளர் நடத்தி வந்த நீரஜ் கிளினிக்குக்கு (இரண்டாவது பதிலுரையாளர்) மேல்முறையீட்டாளர் தனது மகனை 21.02.1994 அன்று அழைத்துச் சென்றார். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிகிச்சை நடந்தபோதிலும், குழந்தையின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஆனால் பதிலுரையாளர் ஆயுர்வேத மருத்துவம் மெதுவாக குணப்படுத்தும் தன்மையுடையது என்றும் சிறிது காலம் காத்திருக்கவேண்டிவரும் என்றும், மேலும் சிகிச்சை சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது என்றும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். இருப்பினும், குழந்தையின் உடல்நிலை மோசமானதால் மேல்முறையீட்டாளர், டாக்டர் அசோக் பனகரியாவை மீண்டும் 28.10.1996 அன்று சந்தித்தார். அவர் குழந்தை மீண்டும் சாதாரண நிலைக்கு வருவதற்கான வாய்ப்பே இல்லை என்று கூறினார். அந்த நேரத்தில் கருத்தரித்திருந்த மேல்முறையீட்டாளர், பிரஷாந்தின் உடல்நிலை குறித்த கவலையில் இருந்ததன் காரணமாக தனது கர்ப்பத்தை கலைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். மேலும், முதலாவது பதிலுரையாளர் அலோபதி மருந்துகளை பரிந்துரைக்கும் தகுதி பெறாமல் இருந்தாலும் அம்மருந்துகளை பரிந்துரைக்கிறார் என்றும், குழந்தைகளுக்கு ஒவ்வாத மருந்துகளை பரிந்துரைக்கிறார் என்றும், மருத்துவத்தில் அலட்சியம் மற்றும் கடமை தவறுதல் ஆகிய குற்றங்களுக்கு உள்ளாகக்கூடிய ஒரு போலி மருத்துவர் என்ற உண்மையை தெரிந்துகொண்டு, தேசிய ஆணையத்தை அணுகினார். அதில் கருக்கலைப்பு செய்யவேண்டி இருந்ததற்காக ரூ.10 இலட்சம் இழப்பீடும், மருத்துவ மற்றும் பயணச்செலவுகளை அடிக்கடி மேற்கொள்ளவேண்டி இருந்ததற்காக ரூ.10 இலட்சம் இழப்பீடும், ஆக மொத்தம் ரூ.20 இலட்சம் இழப்பீடாக கோரினார். தேசிய ஆணையம் 16.01.2003 அன்று மருந்துகளை தக்க பரிசோதனைக் கூடத்திற்கு ஆய்வுக்காக அனுப்புமாறு ஆணையிட்டது. ஆய்வறிக்கையிலிருந்து ஒரு மருந்தைத் தவிர மற்ற மருந்துகள் அலோபதி வகையைச் சார்ந்தவை என்பது தெரியவந்தது. எனவே, முதலாவது பதிலுரையாளர் நியாயமற்ற வியாபார நடைமுறையை பின்பற்றுகிறார் என்று தேசிய ஆணையம் கருதியது. ஆனால், உத்திரபிரதேச மாநில அரசின் மருத்துவக்கல்வித்துறை செயலர் 24.02.2003 அன்று வெளியிட்ட கடிதத்தின்படி உ.பி. இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம், 1939–ன்படி ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ முறைகளை பின்பற்றுகின்ற

மருத்துவர்களும், அலோபதி மருந்துகளை உபயோகிக்கலாம் என்று கூறப்பட்டிருப்பதால், முதலாவது பதிலுரையாளரின் மீது குற்றம்சாட்ட முடியாது என்று கூறியது. ஆணையம், முதலாவது பதிலுரையாளரை ரூ.5 இலட்சம் இழப்பீடு வழங்கும்படி ஆணையிட்டது. இதில் ரூ.2.50 இலட்சம் மேல்முறையீட்டாளருக்கும் எஞ்சிய ரூ.2.50 இலட்சம் தேசிய ஆணையத்தின் நுகர்வோர் சட்ட உதவி கணக்கிற்கும் செலுத்தவேண்டும் என்று ஆணையிட்டது. முதலாவது பதிலுரையாளர் தவறாக முறையிட்டிருக்கின்றார் என்றும் நியாயமற்ற வியாபார முறைகளை கையாளும் குற்றத்தைப் புரிந்திருக்கிறார் என்றும் கருத்து தெரிவித்த தேசிய ஆணையத்தின் முடிவை பதிலுரையாளர்கள் எதிர்க்கவில்லை. ஆனால் தேசிய ஆணையத்தின் முடிவினால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், அதிக இழப்பீடு கோரி நடப்பு மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீடு ஏற்கப்பட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 2(1) (g), (o), (r), 14(1)(c), (d) மற்றும் அதனோடு உள்ள நிபந்தனை, 14(1)(i), 18, 22(b) மற்றும் 23; இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம், 1956, பிரிவு 15(2)(b); இந்திய மருந்துகள் மத்திய கவுன்சல் சட்டம், 1970, பிரிவு 26 மற்றும் இந்திய மருந்துகள் சட்டம், 1939 (10/1939).

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

*Bhanwar Kanwar v. R.K. Gupta,* (2009) 2 CPJ 193 (NC). (Modified) [Para 1]

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) உச்ச நீதிமன்றத்தின் முன்பு இரண்டு எழுவினாக்கள் எழுப்பப்பட்டன. (i) முதலாவது பதிலுரையாளர் மருத்துவத்தொழிலை செய்யும் தகுதியுடையவரா? அவர் அலோபதி மருந்துகளை பரிந்துரைக்கலாமா? (ii) மேல்முறையீட்டாளருக்கு எவ்வளவு இழப்பீடு தரவேண்டும்?

(ஆ) முதலாவது எழுவினாவைப் பொறுத்தவரை, உ.பி. இந்திய மருத்துவ கவுன்சல் சட்டம், 1939 என்று ஒரு சட்டம் இருப்பதாக பதிலுரையாளர்கள் தங்களது கவனத்திற்கு கொண்டுவரவில்லை என்றும் ஆனால் உ.பி. இந்திய மருத்துவ சட்டம், 1939 என்று ஒரு சட்டம் உள்ளது என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. மேலும், இந்த வழக்கில் சம்பவமும், சிகிச்சையும் மேல்முறையீட்டாளர் கூறியபடி 1994-1997-க்குள் நடந்துள்ளன என்றும் நீதிமன்றம் குறித்துக்கொண்டது. ஆகவே, பதிலுரையாளர்கள் 24.02.2003 தேதியிட்ட கடிதத்தை தங்களுக்கு சாதகமாக எடுத்துக்காட்ட முடியாது என்றும் சம்பவம் நடந்த காலகட்டத்தில் அம்மாதிரி கடிதம் ஏதுமில்லை என்றும் நீதிமன்றம் கருதியது. மேலும், மருத்துவ கவுன்சிலிலோ அல்லது மாநில மருத்துவ பதிவேட்டிலோ தான் பதிவு செய்திருந்ததாக முதலாவது பதிலுரையாளர் தமது வாதத்தில் தெரிவிக்கவில்லை. அவர்

பதிவு எண்ணைக்கூட குறிப்பிடவில்லை. ஏதோ ஒரு தெளிவற்ற வாதத்தின் அடிப்படையில், தேசிய ஆணையம் முதலாவது பதிலுரையாளர் மருத்துவ தொழில் செய்வதற்கும் அலோபதி மருந்துகளை பரிந்துரைப்பதற்கும் தகுதியுடையவர் என்றும் முடிவெடுத்துள்ளதாக உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

(இ) இரண்டாவது எழுவினாவைப் பொறுத்தவரை, முதலாவது பதிலுரையாளர் நியாயமற்ற தொழில் புரிபவர் என்றும் வாய் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் பொய்யான வாக்குமூலங்களை கொடுத்தன் மூலம் அவர் ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெரியவருகிறது என்றும் தேசிய ஆணையம் முடிவு செய்ததை உச்ச நீதிமன்றம் குறித்துக்கொண்டது. அந்த முடிவையொட்டி, பதிலுரையாளர்களின் தவறான விளம்பரம், நியாயமற்ற தொழில் புரிதல் மற்றும் அலட்சியம் காரணமாக பிரஷாந்தும் மேல்முறையீட்டாளரும் உடலாலும் மனதாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று உச்ச நீதிமன்றமும் முடிவுசெய்தது. மேல்முறையீட்டாளரும் பிரஷாந்தும் கூடுதலாக இழப்பீடு பெறுவதற்கு தகுதியுடையவர்கள் என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. இழப்பீட்டுத் தொகையை 50 விழுக்காடு குறைத்து, அதை ஆணையத்தின் நுகர்வோர் சட்டவசதி கணக்கில் வைக்குமாறு தேசிய ஆணையம் எடுத்த முடிவிற்கு எந்த காரணமும் கொடுக்கப்படவில்லை என்பதையும் உச்ச நீதிமன்றம் கண்டறிந்தது.

(ஈ) ஆகவே, தேசிய ஆணையத்தின் உத்தரவில் அப்பகுதியை ஒதுக்கிவைத்த உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டாளருக்கு கொடுக்கவேண்டிய இழப்பீட்டுத் தொகையை ரூ.15 இலட்சமாக உயர்த்தியது. மேலும், இத்தொகையை மேல்முறையீட்டாளருக்கு மூன்றுமாத காலத்திற்குள் அளிக்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2013) 4 SCC 252; II (2013) CPJ 5 (SC); 2013(2) CPR 611 (SC).

***

### 3. டாட்டா இன்ஜினியரிங் மற்றும் லோகோமோட்டிவ் கம்பெனி லிமிடெட் *(எதிர்)* இயக்குநர் (ஆராய்ச்சி) தீபக் கன்னா மற்றும் பலர் சார்பாக

**(Tata Engineering and Locomotive Co. Ltd. v. Director (Research) for on and behalf of Deepak Khanna and Ors.)**

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வர்த்தக நடைமுறைகள் ஆணையம் 28.02.2006 அன்று நியாயமற்ற வர்த்தக வழக்கங்கள் விசாரணை எண்கள்: 86/99, 87/99 மற்றும் 90/99-ல் வழங்கிய ஆணையிலிருந்து.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

டாட்டா இன்ஜினியரிங் மற்றும் லோகோமோட்டிவ் கம்பெனி லிமிடெட் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

இயக்குநர் (ஆராய்ச்சி) தீபக் கன்னா மற்றும் பலர் சார்பாக – பதில் அளிப்பவர்கள்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:2069/2006.

தீர்ப்பு தேதி : 07.09.2015.

**4. வழக்கின் சுருக்கம் :**

மேல்முறையீட்டாளரின் நிறுவனம் மோட்டார் வாகனங்களை தயாரித்து விற்பனை செய்யும் ஒரு நிறுவனமாகும். ஆண்டிற்கு 60 ஆயிரம் கார்கள் உற்பத்தி செய்யக்கூடிய திறன்கொண்ட தொழிற்சாலையில் டாட்டா இன்டிகா கார்களை உற்பத்தி செய்து பிப்ரவரி 1999 முதல் விநியோகம் செய்து வந்தார்கள். வாகனங்களை பதிவு செய்யும் முன்பே எந்த நகரத்திலிருந்து பதிவு செய்யப்படுகிறதோ அதையொட்டி கார்களின் மாடல்களுக்கு ஏற்ப விலை மற்றும் வாங்குபவர் கடைப்பிடிக்கவேண்டிய வரையறைகள் விளக்கமாக கொடுக்கப்பட்டன. வண்டியை ஒப்படைக்கும் தேதியன்று நிலவும் வரிகள், கூடுதல் வரிகள், தீர்வை உட்பட அனைத்தும் விலையில் அடங்கும். முதல் 10,000 வாகனங்களை முறையாக பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே கணிணி மூலம் முன்னுரிமை அடிப்படையில், தரவரிசையாக விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எஞ்சியவர்களுக்கு பதிவு முடிந்த ஒருமாத காலத்திற்குள்ளாக அவர்களிடமிருந்து வாங்கிய தொகை வட்டியின்றி திருப்பி அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஒருமாத காலத்திற்குப்பிறகு தொகை திருப்பி அளிக்கப்பட்டால் ஆண்டுக்கு 10 விழுக்காடு வட்டி தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. பதிவு செய்யும் மனுவில் உட்கூறு எண் 7, சம்பந்தப்பட்ட நபர் அனைத்து விதிமுறைகளையும் கவனமாக படித்து அதனை ஒப்புக்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. விதிகளை படித்த பல நபர்கள் அவற்றை ஏற்று வாகனங்களை வாங்கினார்கள். ஆயினும், வாகனங்களை வாங்க எண்ணி இருந்ததாகவும் ஆனால் வைப்புத்தொகை மிகவும் அதிகமாக இருந்ததால் அந்த எண்ணத்தை கைவிட்டதாகவும் தெரிவித்த மூன்று நபர்கள், ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வியாபார நடைமுறைகள் ஆணையத்திடம் புகார் செய்தார்கள். வரி, கூடுதல் வரி, தீர்வை ஆகியவற்றை தவிர்த்து வாகனத்தின் அடிப்படை விலையை மட்டும் எடுத்துக்கொண்டால், நுகர்வோரிடம் கோரிய வைப்புத்தொகை அதைவிட அதிகமாக இருந்தது என்பதே அவர்களது வாதம். மேல்முறையீட்டாளர் அதிக தொகையை கோரியதன் மூலம் நியாயமற்ற வர்த்தக நடைமுறையை பின்பற்றுகிறார் என்று அவர்கள் புகாரில் தெரிவித்தனர். ஆணையம், இயக்குநர் (ஆராய்ச்சி)–யை விசாரணை செய்யுமாறு பணித்தது. அந்த மூன்று புகார் மனுக்களின் மீது அவர்

அளித்த பூர்வாங்க விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மூன்று வழக்குகளை பதிவு செய்தது. மேல்முறையீட்டாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி இருதரப்பினரையும் விசாரித்தப்பிறகு பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்ட உத்தரவை ஆணையம் வழங்கியது. அந்த உத்தரவில் மேல்முறையீட்டாளர் தான் பின்பற்றி வந்த நடைமுறையை நிறுத்திக்கொள்ளுமாறும் எதிர்காலத்தில் அம்மாதிரி செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டார். இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் நடப்பு மேல்முறையீட்டு மனுவை MRTP சட்டம், பிரிவு 55-ன்கீழ் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு மனு ஏற்கப்பட்டது.

### 5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :

ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வியாபார நடைமுறைகள் சட்டம், 1969, பிரிவுகள் 36A(1), 36D(1) மற்றும் 55.

### 6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :

1. *Rajasthan Housing Board v. Parvati Devi (Smt.),* III (2000) CPJ 9 (SC)=VII (2000) SLT 50. (Referred) [Para 7]
2. *M/s. Lakhanpal National Limited v. M.R.T.P. Commission and Another,* 38 (1989) DLT 310 (SC)=1989 (SLT SOFT) 483. (Relied) [Para 8]

### 7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :

"நியாயமற்ற வர்த்தக நடைமுறை" என்ன என்பது MRTP சட்டம், பிரிவு 36A-வில் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி பொருட்களின் விற்பனை, உபயோகம் அல்லது வினியோகம் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காகவோ அல்லது அளிக்கப்படும் சேவைகளை முன்னேற்றுவதற்காகவோ, நியாயமற்ற அல்லது ஏமாற்றத்தக்க நடைமுறைகளை பின்பற்றினால் அவை நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் என்று கருதப்படும். பின்வரும் நடைமுறைகள் அவற்றில் அடங்கும்: "எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ அல்லது பார்க்கும்படியான செயல்பாட்டினாலோ (i) பொருட்கள் குறிப்பிட்ட தரம், அளவு, மாதிரி, நிலை, பொருட்கூறு உடையவை என்று தவறுதலாக சித்தரிப்பது (ii) சேவைகள் குறிப்பிட்ட தரம், நிலை, திறம் உடையவை என்று தவறுதலாக சித்தரிப்பது (iii) xxx (iv) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு இல்லாத பரிந்துரைகள், அனுமதிகள், செயல்திறன், குணாதிசயங்கள், உதிரிபாகங்கள், பயன்கள் ஆகியவற்றை இருப்பதாக சித்தரிப்பது (v) xxx (vi) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவை அல்லது பலன் குறித்து பொய்யாக அல்லது தவறாக சித்தரிப்பது".

பூர்வாங்க விசாரணை அறிக்கை, விசாரணை நோட்டீஸ், ஆணையத்தின் உத்தரவு மற்றும் அதன் மீதான மேல்முறையீடு ஆகியவற்றை பரிசீலித்த உச்ச நீதிமன்றம் ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தும் வியாபார நடைமுறைகள் சட்டம், 1969, பிரிவு 36A(1)-ன்கீழ் உட்கூறுகள் (i), (ii), (iv) மற்றும் (vi)-ல் கூறப்பட்டுள்ள நான்கு நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில்

எதையும் பின்பற்றியதாக புகாரோ ஆதாரமோ இல்லை என்று கண்டறிந்தது. விசாரணை நோட்டீஸை ஆராய்ந்து பார்த்ததில் பூர்வாங்க விசாரணை அறிக்கையின் நகல் அளிக்கப்பட்டிருந்தாலும் இயக்குநர் (ஆராய்ச்சி) அவர்கள் மேல்முறையீட்டாளர், MRTP சட்டம், பிரிவு 36A(1)-ன்கீழ் உட்கூறுகள் (i), (ii), (iv) மற்றும் (vi)-ல் கூறப்பட்டுள்ள நியாயமற்ற நடைமுறைகளை பின்பற்றியுள்ளார் என்று முடிவு செய்துள்ளதாக ஆணையம் கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நோட்டீஸ்படி விசாரணை பின்வரும் இரு கேள்விகளுக்கு விடை காணவேண்டும். (அ) பதிலுரையாளர் மேற்கூறப்பட்ட நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில் ஈடுபட்டிருந்தாரா? (ஆ) நியாயமற்ற அந்த வர்த்தக நடைமுறைகள் பொதுநலனுக்கு முரணாக இருந்தனவா? அதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு எதிராக எழுப்பப்பட்ட தெளிவான புகார் என்ன என்பதை ஆணையம் மனதில் கொள்ளவில்லை என்று உச்ச நீதிமன்றம் கருதியது. மேலும், வாகனங்களை பதிவு செய்யும்போது தெரிவிக்கப்பட்ட விதிகளில் வட்டியுடன் தொகை திருப்பியளிக்கப்படும் என்று தெளிவாக கூறப்பட்டிருப்பதையும், அதை மேல்முறையீட்டாளர் பூர்வாங்க விசாரணையிலேயே சுட்டிக்காட்டி இருப்பதையும் ஆணையம் கவனிக்க தவறிவிட்டது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேல்முறையீட்டாளர் அடிப்படை விலைக்கு மேலாக கூடுதலாக பொதுமக்களிடம் கோரியிருக்கக்கூடாது என்றும், விற்பனை வரி மற்றும் உற்பத்தி வரிகள் ஆகியவற்றை தன்வசமே வைத்திருந்தது தவறு என்றும், ஆணையம் கருதியதால்தான் அம்மாதிரி ஒரு ஆணை பிறப்பித்ததாக உச்ச நீதிமன்றம் கருதியது. ஆணையத்தின் அம்மாதிரி முடிவு எது நியாயமானது என்று அகவுணர்வு சார்ந்ததாகும் என்றும், சட்டத்தின் பிரிவு 36A-ல் கூறப்பட்டுள்ள வரையறைக்கு பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. மேலும் சட்டத்தின் பிரிவு 36D(1)-ன்கீழ் ஆணை பிறப்பிக்க எந்த முகாந்திரமும் இல்லை என்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறை எதுவும் நிருப்பிக்கப்படவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது. மேல்முறையீட்டு மனு ஏற்கப்பட்டு ஆணையத்தின் தீர்ப்பு ஒதுக்கி வைக்கப்பட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

IV (2015) CPJ 6 (SC).

***

## 22. நுகர்வோர் மன்றத்தின்முன்பான செயல்முறைகள் வழக்குகளா?

**1. எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ்** *(எதிர்)* **கணேஷ் நரேன் ஷாபூ**

(Ethiopian Airlines v. Ganesh Narain Saboo)

**1. எந்த தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு :**

தேசிய நுகர்வோர் பாதுகாப்பு குறைதீர் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு எண்:190/1996-ல் 07.01.2004 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆணை.

**2. வழக்கிற்குட்பட்ட நபர்கள் :**

எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் – மேல்முறையீட்டாளர்

**எதிர்**

கணேஷ் நரேன் ஷாபூ – பதில் அளிப்பவர்

**3. வழக்கு எண் மற்றும் தீர்ப்பு தேதி :**

சிவில் மேல்முறையீட்டு எண்:7037/2004.

தீர்ப்பு தேதி : 09.08.2011 (மூன்று உறுப்பினர்கள் கொண்ட அமர்வு)

**4. வழக்கின் சுருக்கம் :**

பதிலுரையாளர், மேல்முறையீட்டாளரான எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திடம் எதிர்வினை சாயங்கள் (Reactive Dyes) கொண்ட சரக்குகளை டான்சானியா நாட்டிலுள்ள டார்எஸ்சலாம் நகரில் ஒப்படைப்பதற்காக பதிவு செய்திருந்தார். பதிலுரையாளரின் கூற்றுப்படி மிகவும் காலதாமதமாக சரக்கு போய்சேர்ந்ததால், சரக்கு கெட்டுப்போகும் சூழ்நிலை ஏற்பட்டது. பதிலுரையாளர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முன் புகார் செய்தார். உரிமையியல் நடைமுறை சட்டம், 1908 (CPC), பிரிவு 86-ன்படி புகார் ஏற்கத்தக்கதல்ல என்று மாநில ஆணையம் முடிவு செய்தது. ஆனால், தேசிய ஆணையம், நுகர்வோர் மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் வழக்குகள் அல்ல என்றும் நடப்பு மனுவில் உள்ள பிரச்சனை நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ன் பிரிவுகளின் கீழ் எடுத்துக்கொள்ளத்தக்கது ஆகையால் CPC பிரிவு 86 இதற்கு பொருந்தாது என்றும் முடிவு செய்தது. ஆகவே, மாநில ஆணையம் அளித்த உத்தரவை ஒத்திவைத்து சட்டப்படி விசாரித்து முடிவெடுக்குமாறு மாநில ஆணையத்திற்கு தேசிய ஆணையம் உத்தரவிட்டது. இந்த ஆணையால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். மத்திய அரசின் முன் அனுமதி பெறாமல் ஒரு வெளிநாட்டு அரசு அல்லது அதன் கருவி (instrumentality) மீது வழக்கு தொடரமுடியாது என்பது அவரது வாதம். மேலும், ஒரு சிவில் கோரிக்கை மீது ஒரு வெளிநாட்டு அரசோ அல்லது அதன் கருவியோ இறையாண்மை அடிப்படையில் விதிவிலக்கு கோரமுடியும் என்றும் அவர்

தெரிவித்தார். மேலும், உச்ச நீதிமன்றத்தின் முன்பு பின்வரும் இரு வினாக்கள் எழுப்பப்பட்டன. (1) நுகர்வோர் மன்றங்களின் நடைமுறைகள் வழக்குகளாக கருதப்படுமா? (2) மேல்முறையீட்டாளரான எத்தியோபியன் ஏர்லைன்ஸ்க்கு இறையாண்மை அடிப்படையில் விதிவிலக்கு அளிக்கமுடியுமா? இவ்வழக்கில், நுகர்வோர் மன்றத்தின் நடைமுறைகள் வழக்குகள்தான் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததோடு மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து, புகார் மனுவை விரைவாக விசாரித்து முடிவெடுக்குமாறு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**5. வழக்கு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அதன் பிரிவுகளும் :**

இந்திய அரசியலமைப்பு சட்டம், ஷரத்து 300; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் பிரிவுகள் 1, 3, 13, 18, 22 மற்றும் 23; உரிமையியல் நடைமுறை சட்டம், 1908, பிரிவு 86; ஆகாய மார்க்கமாக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் சட்டம், 1972, பிரிவுகள் 7, 3, 1 மற்றும் அட்டவணை 1 Rr. 1, 2, 18 மற்றும் 22; நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகள், 2005, விதிமுறை எண் 26; நுகர்வோர் பாதுகாப்பிற்கான ஐக்கிய நாடுகள் வழிகாட்டுதல்கள் 1, 5 மற்றும் 28; ஐக்கிய நாடுகள் நுகர்வோர் பாதுகாப்பு தீர்மான எண் 39/248.

**6. வழக்கின் எடுத்துக்காட்டுகள் :**

1. *Economic Transport Organization v. Charan Spg. Mills (P) Ltd.,* (2010) 4 SCC 114:(2010) 2 SCC (Civ) 42.
2. *EICM Exports Ltd. v. South Indian Corpn. (Agencies) Ltd.,* (2009) 14 SCC 412:(2009) 5 SCC (Civ) 389. (Overruled)
3. *Ghaziabad Zila Sahkari Bank Ltd. v. Labour Commissioner,* (2007) 11 SCC 756:(2008) 1 SCC (L&S) 90.
4. *Maruti Udyog Ltd. v. Ram Lal,* (2005) 2 SCC 638:2005 SCC (L&S) 308.
5. *Savita Garg v. National Heart Institute,* (2004) 8 SCC 56.
6. *State of Karnataka v. Vishwabharathi House Building Coop. Society,* (2003) 2 SCC 412.
7. *Solidaire India Ltd. v. Fairgrowth Financial Services Ltd.,* (2001) 3 SCC 71.
8. *Economic Transport Organization v. Dharwad District Khadi Gramudyog Sangh,* (2000) 5 SCC 78.
9. *Allahabad Bank v. Canara Bank,* (2000) 4 SCC 406.
10. *Patel Roadways Ltd. v. Birla Yamaha Ltd.,* (2000) 4 SCC 91.

11. *Kenya Airways v. Jinibai B. Kheshwala,* AIR 1998 Bom 287.

12. *Bhoruka Steel Ltd. v. Fairgrowth Financial Services Ltd.,* (1997) 89 Comp Cas 547 (Special Court).

13. *Veb Deutfracht Seereederei Rostock v. New Central Jute Mills Co. Ltd.,* (1994) 1 SCC 282.

14. *Maharashtra Tubes Ltd. v. State Industrial & Investment Corpn. of Maharashtra Ltd.,* (1993) 2 SCC 144.

15. *Ratan Lal Adukia v. Union of India,* (1989) 3 SCC 537.

16. *Deepak Wadhwa v. Aeroflot,* (1983) 24 DLT 1.

17. *Sarwan Singh v. Kasturi Lal,* (1977) 1 SCC 750.

18. *Trendtex Trading Corpn. v. Central Bank of Nigeria,* 1977 QB 529 : (1977) 2 WLR 356 : (1977) 1 All ER 881 (CA).

19. *German Democratic Republic v. Dynamic Industrial Undertaking Ltd.,* AIR 1972 Bom 27.

20. *Mirza Ali Akbar Kashani v. United Arab Republic,* AIR 1966 SC 230.

21. *Nawab Usmanali Khan v. Sagar Mal,* AIR 1965 SC 1798.

22. *Bhagwat Singh v. State of Rajasthan,* AIR 1964 SC 444.

23. *Rahimtoola v. Nizam of Hyderabad,* 1958 AC 379 : (1957) 3 WLR 884 : (1957) 3 All ER 441 (HL).

24. *Ram Narain v. Simla Banking & Industrial Co. Ltd.,* AIR 1956 SC 614.

25. *Patterson v. Standard Accident Insurance Co.,* 178 Mich 288 : 144 NW 491 (1913).

26. *Upshur County v. Rich,* 34 L Ed 196 : 135 US 467 (1889).

27. *Weston v. City Council of Charleston,* 7 L Ed 481, p 487 : 27 US 449 (1829).

**7. வழக்கில் எழுப்பப்பட்ட வாதங்களும் அவற்றின் முடிவுகளும் :**

(அ) பொதுவாக நீதிமன்றங்களிலும் நீதிமன்றங்கள் போன்ற அமைப்புகளிலும் பாரபட்சமின்றி நடுவர் முன்பு விசாரணை நடைபெறும்போது, பொதுவாக அது 'வழக்கு' என்றே கருதப்படுகிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. நுகர்வோர் மன்றங்களின் செயல்முறைகளும் இந்த வரையறைக்குள் அடங்கும். 'வழக்கு' என்ற சொல் ஆகாய மார்க்கமாக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் சட்டம், 1972 (Carriage by Air Act)-ல் வரையறை செய்யப்படவில்லை. மேலும், அந்த சொல்லுக்கு CPC-யில் என்ன பொருள் இருக்கிறதோ அதே பொருள் Carriage by Air Act-லும் உள்ளது என்றும்

தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக நடைமுறையில் உள்ள 'வழக்கு' என்ற சொல், ஒரு நபர், சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பெறுவதற்காக எடுக்கும் அனைத்து செயல்முறைகளுக்கும் பொருந்தும். இதன்படி 'வழக்கு' என்பதற்கான பொருளை, சொல்லகராதியில் இருந்து காணவேண்டும் என்றும் நீதிமன்றம் கருதியது. மேற்கண்ட வரையறைகளின்படி, நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களின் செயல்முறைகள் வழக்குகள் என்றே கருதப்படும் என்றும் இந்த மனுவில் எழுப்பப்பட்ட வினா *res integra* அல்ல என்றும் நுகர்வோர் மன்றங்களின் நடைமுறைகள் 'வழக்குகள்' என்ற வீச்சிற்குள் வருபவை என்றும் நீதிமன்றம் ஏற்கனவே தெளிவாக தீர்ப்பு அளித்திருக்கின்றது என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஆ) தேசிய ஆணையத்தின் செயல்முறைகள், சரக்குகள் சட்டத்தின்கீழ் 'வழக்குகள்' என்று கருதப்பட்டாலும், உரிமையியல் நடைமுறை சட்டத்தின் எந்தெந்த பிரிவுகள் நுகர்வோர் மன்றங்களின் செயல்முறைகளுக்கு பொருந்தும் என்பது நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ல் தெளிவாக்கப்பட்டிருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் கருதியது. அவற்றில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 13(4)-ம் அடங்கும். அப்பிரிவின்படி சிவில் கோர்ட்டுகளுக்கு உள்ள அதிகாரங்கள் மாவட்ட நுகர்வோர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. '*Expressio unius*' என்ற தத்துவத்தின்படி சட்டமன்றம் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகள் நுகர்வோர் மன்ற நடவடிக்கைகளுக்கு பொருந்தும் என்று கூறியிருப்பதால் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் மற்ற பிரிவுகளை சட்டமன்றம் அறிந்தே நுகர்வோர் மன்ற நடவடிக்கைகளுக்கு பொருந்தாது என்று ஒதுக்கிவைத்திருப்பதாக கருதவேண்டும். உரிமையியல் நடைமுறை சட்டத்தின் 86-வது பிரிவு நுகர்வோர் மன்றங்களுக்கு பொருந்தும் என்று நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் தெரிவிக்காததால், உரிமையியல் நடைமுறை சட்டத்தின் மேற்கண்ட பிரிவு நுகர்வோர் மன்றங்களுக்கு பொருந்தாது என்றே கருதவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருதியது.

(இ) உரிமையியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 86, நுகர்வோர் மன்றங்களின் நடவடிக்கைகளுக்கு பொருந்தும் என்று உரிமையியல் நடைமுறை சட்டம் கோடிட்டு காட்டவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. மாறாக, உரிமையியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 4-லில் கூறப்பட்டுள்ளவை யாதெனில், 'இந்த விதிகளுக்கு மாறாக குறிப்பிட்ட வரையறைகள் இல்லாதபட்சத்தில், எந்த தனிப்பட்ட சட்டத்தையோ அல்லது வேறு எந்த சட்டத்தில் தனிப்பட்ட நடைமுறையையோ சிவில் நடைமுறை சட்டத்தில் கூறப்பட்ட எதுவும் கட்டுப்படுத்தவோ பாதிக்கவோ செய்யாது'.

(ஈ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டமும் ஆகாய மார்க்கமாக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் சட்டமும் தனிப்பட்ட வகையைச்சார்ந்த சட்டங்கள் என்றும், இச்சட்டங்களின்கீழ் வருகின்ற வழக்குகளைப் பொருத்தவரை, அவை உரிமையியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 86

அவற்றிற்கு பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மற்றும் விமானமார்க்கமாக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் சட்டம் ஆகிய இரண்டுமே CPC–க்கு பல ஆண்டுகளுக்குப்பிறகே இயற்றப்பட்டவையாகும். மேலும், அவை குறிப்பிட்ட நோக்கத்திற்காக இயற்றப்பட்ட சட்டங்களாகும். ஆதலால், CPC–யின் பிரிவு 86 அவற்றிற்கு பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(உ) பிரிவு 2(1)–ன்படி, அரசு மற்றும் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட அரசு நிறுவனங்கள் ஏற்பாடு செய்கின்ற சரக்கு போக்குவரத்துகளுக்கு, ஆகாய மார்க்கமாக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் சட்டத்தின் (1972) விதிகள் பொருந்தும் என்று தெளிவாக கூறப்பட்டிருக்கிறது என உச்ச நீதிமன்றம் கருதியது. ஆகவே, மேற்படி சட்டத்தின்படி, எத்தியோபியன் ஏர்லைன்ஸ் மீது வழக்கு தொடர முடியும் என்பது தெளிவாகிறது என உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. வார்ஸா கூட்டமைப்பில் கையெழுத்திட்டதின் மூலம் எத்தியோபியா தனது ஆகாய நிறுவனம் இம்மாதிரி நிலுவையில் உள்ள வழக்குகளில் விதிவிலக்கு கோரும் உரிமையை விட்டுக்கொடுத்ததாகவே கருதவேண்டும். 1972 ஆம் ஆண்டு ஆகாய மார்க்கமாக சரக்குகள் ஏற்றிச் செல்லுதல் சட்டம் இயற்றியதன் மூலமும், வார்ஸா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலமும், இந்திய மற்றும் எத்தியோபிய மத்திய அரசுகள் இறையாண்மை அடிப்படையில் தங்களுக்கு இருந்த விதிவிலக்கு உரிமையை விட்டுக்கொடுத்ததாக கருதவேண்டும் என உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஊ) மேலும், சர்வதேச கொள்கைகளில் உள்ள கட்டுப்படுத்தப்பட்ட விதிவிலக்கு (restrictive immunity) மற்றும் இதர நாடுகளின் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில், எத்தியோபியன் ஏர்லைன்ஸின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இறையாண்மை அடிப்படையிலான விதிவிலக்கு இல்லை. அமெரிக்க, ஆங்கிலேய மற்றும் இந்திய வழக்குகளை ஆராய்ந்து பார்க்கையில், எத்தியோபியன் ஏர்லைன்ஸ் இந்தியாவில் மேற்கொள்ளும் ஒப்பந்தரீதியான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் கடமைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(எ) எத்தியோபியன் ஏர்லைன்ஸ்க்கு இந்த வழக்கில் இறையாண்மை அடிப்படையில் விதிவிலக்கு ஏதும் இல்லை. ஆதலால், மேல்முறையீட்டாளரான ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் மீது, இந்திய நீதிமன்றத்தில் வழக்கு தொடருவதற்கு மைய அரசின் முன் அனுமதி தேவையில்லை என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

(ஏ) மேலும், கட்டுப்படுத்தப்பட்ட விதிவிலக்கு (restrictive immunity) தொடர்பான சர்வதேச சட்ட விதிகளின்படி, அரசு நிறுவனங்களுக்கு வர்த்தக சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு விதிவிலக்கு இருக்க முடியாது *(jure gestionis)*. பல்வேறு நாடுகளுக்கிடையே வர்த்தகம் மற்றும் தொழில் தொடர்பாக நெருங்கிய உறவு உள்ள தற்போதைய சூழ்நிலையில் முன்பு இருந்த மாதிரி இறையாண்மை அடிப்படையில் முழு விதிவிலக்கு இருக்க வாய்ப்பில்லை.

பல்வேறு நாடுகளுடன் தொழில் மற்றும் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நாடுகள் சந்தை விதிகளின் அடிப்படையில் செயல்படவேண்டும். அரசு நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளித்தால் சட்டம் சீர்குலைந்து போகும். மேலும் சர்வதேச வர்த்தகம் மற்றும் தொழில் முழுவதுமாக நின்றுவிடுகின்ற சூழ்நிலை ஏற்படும் என்றும் உச்ச நீதிமன்றம் கருதியது.

(ஐ) மாநில ஆணையத்திற்கு வழக்கை விசாரிக்க ஆணை பிறப்பித்த தேசிய ஆணையத்தின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. வழக்கை விரைந்து விசாரித்து முடிவு செய்யுமாறு மாநில ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**8. ஆவணச் சான்றுகள் :**

(2011) 8 SCC 539; AIR 2011 SC 3495; IV (2011) CPJ 43 (SC).

***